2934

T-N-L-A-Debates

Official Report

Vol. 23 No. 3

25th April 1986.

C

D
V211,31 N86
N86·23·3
136479

வெளியீடு 19-12-1986] [Issued 19-12-1986

2934

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

809/87

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25, 1986 - தொகுதி 23 எண் 3
Friday, 25th April 1986 - Volume 23 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

V211,31 N86
N86·28·3
136479
சென்னை-600 008

# உள்ளடக்கம்.

25–4–1986

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள் :

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 490—531

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 531—591

2. தகவல் கோரல் : 551—554

(அ) பெரம்பலூர் ஒன்றிய அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் பள்ளி ஆசிரியர்களால் தண்டிக்கப்பெற்றுள்ளது. 551

(ஆ) புதுக்கோட்டை, காவேரி நூற்பாலையை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது. 552

(இ) ஜனநாயக முன்னணி மாதர் சங்கக் கோரிக்கைகள். 552

(ஈ) பேரவைத் தலைவருக்கு நீதிமன்றத்திலிருந்து வரும் சம்மன். 552—553

(உ) கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலை குறித்து. 554

3. கவன ஈர்ப்புகள் :

(அ) சென்னை, பேசின் பிரிட்ஜ் குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்து. 554—557

(ஆ) சென்னை மாநகராட்சி இடுகாடு-சுடுகாடுகளில் ஈமச் சடங்குக்கு வசூலிக்கப்பெறும் கட்டணம் குறித்து. 557—559

அறிக்கை அளித்தல் :

ப்பீட்டுக் குழு .. .. .. .. 559

ரவு-செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி). 560—732

(அ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். 563—730

(ஆ) கோரிக்கை எண். 25—சின்கோனா .. 560—730

(இ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை 561—731

டி. 2 எ 80—1

| | பக்கங்கள் |
|---|---|
| (ஈ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 562—731 |
| (உ) கோரிக்கை எண். 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 562—732 |
| மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. | 651—653 688—689 698—723 726—727 |
| திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா .. .. | 563—568 |
| திரு. கோ. பெருமாள் பிள்ளை .. .. | 568—575 |
| திரு. மு. இராமநாதன் .. .. | 575—588 |
| திருமதி பா. வளர்மதி .. .. | 589—596 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. | 596—603 |
| திரு. தி. அன்பழகன் .. .. .. | 603—611 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் .. .. | 611—623 |
| திரு. க. சோலைராசு .. .. .. | 623—034 |
| டாக்டர் தே. குமாரதாஸ் .. .. .. | 635—640 |
| திரு. குமரி அனந்தன் .. .. .. | 640—651 |
| திரு. எஸ். பாலசுப்பிரமணியன் .. .. | 653—657 |
| திரு. வை. பாலச்சந்திரன் .. .. .. | 657—670 |
| திரு. எஸ். இராசாராமன் .. .. | 672—678 |
| திரு. கே. உச்சி .. .. .. | 678—682 |
| திரு. சி. சுப்புராயர் .. .. .. .. | 682—688 |
| திரு. சீ. சிவப்பிரகாசம் .. .. .. | 689—693 |
| திரு. கே. கல்லன் .. .. .. .. | 694—698 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 732—738 |


# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

1986, ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

சித்திரை 12, அக்ஷய திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.''

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களுக்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்,

**மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி.**

552—(*வினா எண். 3674)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டத்தில், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Weste n Ghat Deyelopment) பணிகள் மேற்கொள்ள மத்திய அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளதா;

(ஆ) ஆம் எனில், கோரப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ் நாட்டில் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூ. 19.9 கோடி நிதியுதவி வழங்க மத்திய அரசு இசைவளித்துள்ளது. இத்திட்டம், நம் மாநிலத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் உட்பட ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர், அவினாசி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய வட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இந்த திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மாவட்ட அடிப்படையில் செய்யப்படுவதில்லை. மத்திய திட்டக் குழு, திட்டப் பணி வாரியாக செலவிற்கு ஒப்புதல் அளிக்கிறது.

[1986 ஏப்ரல் 25

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர் மலைப் பகுதியினுடைய மேம்பாட்டுத் திட்டம் என்பது எந்த அடிப்படையில் செயல்படுத்தப் படுகிறது ? மேம்பாடு செய்கிற வகையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற பணிகளின் வகைகள் என்ன ? இந்த மேற்குத் தொடர் பகுதியோடு சேர்ந்து இருக்கிற Silent Valley என்ற பகுதி கேரள அரசின் நடவடிக்கையால் அழிக்கப்படும் என்று அஞ்சி அது பற்றி தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. Silent Valley என்ற அந்தப் பகுதியைப் பாதுகாக்கிற திட்டமும் இதோடு இணைக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மேற்கு மலைத தொடர் மேம்பாட்டுத் திட்டம் மகாராட்டிரா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா, மத்திய நேரடி ஆட்சிப் பகுதியான கோவா ஆகிய மாநிலங்களில் உள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் செயல்படுத்தப்படுகிறது. இந்த மேற்கு மலைத் தொடர் பகுதியில் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துவது முக்கியமான திட்டமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், பெரியார், மதுரை, அண்ணா, காமராஜர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களில் மேற்கு தொடர் மலைப் பகுதிகளில் உள்ள 25 இடங்களில் இது செயல்படுத்தப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத் திலே மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர், அவினாசி, உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய வட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டச் செலவிற்கு திட்டக் குழுவினர் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் யானைக் கற்றாழை வளர்ப்பதன் மூலமாக மலை அடிவாரப் பகுதிகளை வளப் படுத்துவதற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத் திலே 1985–86 ஆம் ஆண்டிலே 17 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களிலே பிரிமுகடுகளை மேம்படுத்து வதற்கு 14,60,000 ரூபாயும், கோயம்புத்தூர் மாவட்டம் உள்பட மேற்குமலைத் தொடர் பகுதி மாவட்டங்களில் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக 35,25,000 ரூபாயும் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏரிகள் வெட்ட 14,08,000 ரூபாயும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் காய்கறிகள் நறுமணச் செடிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 1 இலட்ச ரூபாயும் ஆக 82 இலட்சத்து 18 ஆயிம் ரூபாய் 1985–86 ஆம் ஆண்டில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியாக மதிப்பீடு செய்யப் பட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கேரளாவைப் பற்றிக் கூறினார்கள் அதைப்பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி பேரட்டால் சொல்லலாம்.



1986 ஏப்ரல் 25]

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்திலே தமிழ் நாட்டிலே பல மாவட்டங்கள் வருகின்றன, அவற்றில் குறிப் பாக நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல கோவை மாவட்டத்திலே ஐந்தாறு விதமான திட்டங்கள் இருக் கின்றன. கோவை மாவட்டததில் நான்கு தாலுக்காக்களுககு மேலே வருகின்றன. இந்தத் திட்டத்திற்கு மொத்தமாக 19 கோடியே 90 இலட்சம் ரூபாய் என்று சொல்லப் படுகிறது. இது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ஒதுக்கப்படுகிறது. அப்படியிருந்தாலும் நமது மாநிலத்தில் பல மாவட்டங்களில் பரவலாக நடக்கும் இந்தத் திட்டத்திற்கு இந்த நிதி ரொம்ப ரொம்ப குறைவாக இருக்கும். ஆகவே, இங்கே உள்ள தேவைக் கேற்ப அதிகமான நிதியைத் தர வேண்டுமென்று நமது மாநில அரசு கேட்டது உண்டா? அல்லது அப்படி இதுவரைக்கும் கேட்க வில்லை என்றால், இது போதாது என்ற பிரச்னை மாவட்ட ஆட்சித் தலைவர், அதேமாதிரி வளர்ச்சி மன்றக் கழகங்களி லிருந்து கோரிக்கைகள் கூட இருக்கின்றன. ஆகவே இந்த நிதியை அதிகப் படுத்தும்படி மாநில அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில், 19 கோடியே 90 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டுக்கு மட்டும், இந்தத் திட்டப் பணிக்காக எல்லா மாவட்டங்களுக்கும் 4 கோடியே 11 இலட்சம் என்று வருகிறது. அதிலே கோவை மாவட்டத்தில் உள்ள வட்டம் பகுதிகளுக்கு 82 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கின்ற இந்தத் தொகை போதாது என்றுதான் அதற் கென்று அமைக்கப்பட்டுள்ள போர்டு—அந்தக் குழுவிலே நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம் ; திட்டக் குழுவிலே சொல்லி யிருக்கிறோம். இப்பொழுது இந்த அளவிற்குதான் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆனால், மேம்பாட்டுத் திட்டத் தின் மூலமாக அங்குள்ள வாழ்க்கையை வசதிப்படுத்த வேண்டி யிருக்கிறது ; அங்கிருக்கின்ற வளத்தையும் காப்பாற்ற வேண்டி யிருப்பதால் இது மிகமிகக் குறைவு ; ஐந்தாண்டுக் காலத்தில் 19 கோடி ரூபாய் என்பது தமிழகத்திற்கு—24 வட்டங்களுக்குப் போதுமானது அல்ல என்று வற்புறுத்தி வருகிறோம். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்ற கருத்து தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது.

[1986 ஏப்ரல் 25

## பரிசுச் சீட்டில் அச்சுப் பிழை

553.—(*வினா எண். 6244)— திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒரே சீட்டில் இரு வெவ்வேறு எண்கள் (அதாவது 270006 மற்றும் 270007) 2—6—1985 நாளைய குலுக்கல் சீட்டில் இருந்தது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒரே பரிசுச் சீட்டில் இரண்டு எண்கள் அச்சடிக்கப்பட்ட விவரம் ஆணையர், பரிசுச் சீட்டு, சென்னை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

(ஆ) மேற்கூறிய அச்சு பிழைக்கு ஈகிள் அச்சகம் (பி) லிட், சென்னை-6 அவர்களே பொறுப்பானதால் அவர்களை விளக்கம் கோரியதில், மேற்படி தவறு 20 பரிசுச்சீட்டுகளில் தவறு நிகழ்ந்ததாக சாத்திய கூறுகளை தெரிவித்ததால் அவ்வாறு அச்சடிக்கப்பட்ட 20 சீட்டுகளினுடைய மதிப்பான ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) மேற்படி சீட்டுகளின் அச்சுக்கூலியான 0.68 (அறுபத்தெட்டு காசுகள் மட்டும்) அபராத தொகையாக ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) ஆக மொத்தம் ரூ. 120–68 (ரூபாய் நூற்றி இருபது பைசா அறுபத்தெட்டு மட்டும்) ஈகிள் அச்சக நிர்வாக இயக்குநரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு செலான் எண். 44, 31—10—1985 அன்று பாரத வங்கி, சென்னை-6-ல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டது.

அது தவிர மேற்படி அச்சகத் தவறை கண்டுபிடிக்க தவறிய பிரிவு எழுத்தரும் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2—6—1985 ஆம் நாளைய குலுக்கல் சீட்டில் தமிழக அரசு வெளியிட்ட பரிசுச் சீட்டின் எண். 270006 என்றும், அதே சீட்டில் 270007 என்ற நம்பரும் ஒரே சீட்டில் இப்படி இரண்டு எண்கள் இருந்த விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி ஏற்பட்டு விட்ட தவறுக்காக அச்சகம் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோ அல்லது அவர்களுக்கு ஏதேனும் பைன் என்ற முறையில் அபராதம் செய்யும் ஏற்பாட்டையோ அரசு செய்திருக்கிறது என்பது ஒருபுறம் இருந்தாலும் இதுவொரு முக்கியமான பிரச்சினை ஆகும். அதாவது இலட்ச ரூபாய் பரிசு விழும்போது ஒரே எண்ணுள்ள சீட்டை இரண்டு பேர் வைத்திருந்தால் எப்படி இதை தீர்த்துக்கொள்வது என்ற சிக்கல் வருவதால் இதுபோன்ற ஒரு சிக்கல் வராத நிலையிலே மேலும்



1986 ஏப்ரல் 25]

இதுபோன்ற தவறு வராத நிலையிலே, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு அரசு என்ன புதிய நடவடிக்கையை எடுத்து இருக்கிறது? இதற்கு முன்பு ஏதேனும் இப்படிப்பட்ட இரட்டை எண் உள்ள சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலஇலட்சக்கணக்கான பரிசுச் சீட்டுக்கள் அச்சடிக்கின்ற நிலையில், எதிர்பாராத நிலையில் சிலபல தவறுகள் அச்சில் ஏற்றுகின்றபொழுது ஏற்படுவது உண்டு. அதை வேண்டுமென்றே அச்சகத்தாரும் மற்றவர்களும் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், அச்சுப் பிழை ஏற்படாதவாறு கண்காணிக்க வேண்டும். அப்படிப் பிழை ஏற்பட்டுவிட்டால், அச்சகத்திலே இருப்பவர்களே திருத்தியாக வேண்டும். தவிர, நம்முடைய அரசு அலுவலர்களும் அவற்றைச் சரிபார்த்து சீர்படுத்தவேண்டும் என்று வைத்திருக்கிறோம். அவர்களும் திருத்தத் தவறினால், அவர்களும் இந்தக் குற்றத்திற்கு உள்ளாகிறார்கள். மேற்படி தவறுகள் மேலும் நேராமல் இருக்க அதிக கவனம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று எச்சரிக்கப்படுகிறார்கள். அவர்களும் இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கான அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்வோம் என்று வாக்குறுதிகள் அளித்திருக்கிறார்கள். அச்சகத்தாரும், அச்சகத்தில் பணி புரியும் மற்ற அலுவலர்களும் பிற்காலத்தில் இத்தகைய தவறுகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், தவறுகள் நேரிட்டால், கடுமையான நடவடிக்கைகள் எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கப்படுகிறார்கள். இதற்கு முன்னால், இப்படிப்பட்ட ஒன்றிரண்டு தவறுகள் நடந்திருக்கக்கூடும். அது பற்றிய புள்ளி விவரம் தற்போது இல்லை. ஆனால், அந்தத் தவறுகள் அச்சடிக்கும் பொழுது ஏற்படும்பொழுது, அங்கே இருப்பவர்கள் திருத்த வேண்டும். அதற்குப் பிறகு, இதற்கென்று இங்கே இருக்கிற அலுவலர்கள் திருத்த வேண்டும். இவர்கள் திருத்தத் தவறினால், இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால், இந்த எண்களைப் பொறுத்தமட்டில், நானே குறிப்பிட்டது மாதிரி 20 சீட்டுகளில் இதுமாதிரி தவறு ஏற்பட்டது என்று கண்டுப் பிடிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் பரிசு விழுந்து, சிக்கல்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி விழுந்திருந்தால், அதைத் தனியாகக் கவனித்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் , தலைவர் அவர்களே, நல்ல வேளை, அதே எண்ணுக்குப் பரிசு விழாத காரணத்தாலே, அரசே சிக்கலிலேயிருந்து தப்பித்திருக்கிறது என்று

கருதுகிறேன். ஏற்கனவே, சில பரிசுகள் விழுந்து, நெம்பரையே திருத்தி, மோசடி செய்கின்ற அளவுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற நிலை ஏற்பட்டுவிட்டால், மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய சிக்கல் ஏற்படும். ஆகவே, அரசு இதுபற்றி ரொம்பவும் நுட்பமான உத்தரவை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சடிப்பதில் ஏற்படுகின்ற தவறுகளைப் பற்றி நாம் அந்த அச்சகத்தாருக்கு ஒருமுறை, இரண்டு முறை சொல்லியும் அவர்கள் கவனக் குறைவாக இருந்தால், பிறகு கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, அச்சகத்தையே மாற்றி, வேறொருவருக்குத் தர வேண்டிய அளவுக்குத்தான் ஏற்படுத்த வேண்டியிருக்கும். அந்த வகையிலேதான் எச்சரிக்கப்படுகிறார்கள். சில சமயங்களிலே, எண்களை திருத்தி விடுகிறார்கள். அப்படித் திருத்தப்படுகிறபோது, அதெல்லாம் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டு, எப்படியும் கண்டுபிடித்து விட முடிகிறது. அதற்கான இரசாயன பரிசோதனைகள், கருவிகள் எல்லாம் இருக்கின்றன. அந்த முறையில் வருகின்ற பொழுது உண்மையானவர் யார் என்றும் போலியானவர் யார் என்றும் கண்டு பிடிக்க முடிகிறது. அப்படிக் கண்டுபிடித்த பிறகு உண்மையானவருக்குப் பரிசு வழங்குகின்ற நிகழ்ச்சி, ஏற்கெனவே நடைபெற்றிருக்கிறது. அதிலே கண்ணும் கருத்துமாக அரசு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுப் பிழை காரணமாக ஒரே நெம்பர் இரண்டு சீட்டிலே இருக்கிறது. அந்தச் சீட்டுக்குப் பரிசு விழுந்தால் இரண்டு பேரில் யாருக்குப் பரிசு தரப்படுகிறது? அச்சுப் பிழையினால் ஏற்பட்ட தவறு பரிசுச் சீட்டை வாங்கியவர்கள் குற்றம் அல்ல என்பதால் அவர்கள் இருவருக்கும் பரிசுத் தொகை கொடுக்க அரசு ஆவண செய்யுமா? இரண்டு நெம்பர்கள் வருவதற்குக் காரணம், போலி லாட்டரி சீட்டு அடிப்பது என்று சொல்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு கும்பல் பிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இவை பற்றி அமைச்சருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி, போலிச் சீட்டாக இருக்குமானால், கண்டு பிடித்து விடலாம். அது திருத்தப்பட்டிருக்குமானால், அதைக் கண்டு பிடித்து விடலாம். அச்சுப் பிழையாக இருக்கும்போது, தவறுகளை அச்சகத்தாரும் மற்றவர்களும் ஒப்புக்கொள்கிற நிலைமையில் நாம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்படி அச்சுப் பிழை காரணமாக இரண்டு எண்கள் வந்து, இரண்டு பேருக்கும் பரிசு வழங்குகிற நிலைமைகள் வந்தால் என்ன செய்வது என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, நியாயமான ஒரு முடிவை அரசு மேற்கொள்ளும்.



**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது லாட்டரி பரிசு விழுந்த எண்ணைப் பெற்றவர்கள் அந்த பரிசினைப் பெறுவதற்கு கால வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? உதாரணமாக, 6 மாத காலம் கழித்துக் கூட அவர்கள் பரிசு விழுந்த சீட்டைக் காண்பித்தால் பரிசுப் பணம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கால நிர்ணயம் இருக்கிறது. எவ்வளவு காலம் என்ற விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

### வர்த்தக நிறுவனங்களின் பெயர் பலகைகள்.

**554—*(வினா எண். 8916)—திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா :

வர்த்தக நிறுவனங்களில் பெயர் பலகைகளில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கட்டாயமாக எழுத அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1948 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15-வது விதியில், தமிழிலேயே பெயர்ப்பலகைகள் எழுதப்பட வேண்டுமென்றும் பிற மொழிகளை உபயோகிக்கப்படுமிடத்து, அவைகள் தமிழ்ப்பெயருக்கு கீழே அமைதல் வேண்டுமென்றும் வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, பெயர்ப் பலகை தமிழிலே இருக்க வேண்டுமென்ற சட்ட நடைமுறையை யாரும் பின்பற்றவில்லை. தனியார் நிறுவனங்களானாலும், தொழிற்சாலைகளானாலும், வர்த்தக ரீதியில் செயல்படுகின்ற மற்ற நிறுவனங்களானாலும் எந்த நிறுவனத்திலும் இன்றைக்குக்கூட தமிழிலே பெயர்ப் பலகை வைக்காமல் ஆங்கிலத்தில் அல்லது வேறு மொழிகளில்தான் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டுவரப்படுமா? அல்லது இருக்கிற சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி, இப்படிப்பட்ட பெயர்ப் பலகைகளை மாற்றி தமிழில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி 1948 ஆம் ஆண்டிலேயே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனுடைய 15-வது விதியிலே தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழில் முதலாவது எழுதப்பட வேண்டும். அதற்குக் கீழே இரண்டாவது இடத்தில் ஆங்கில மொழியில் எழுதப்பட வேண்டும். பிற மொழிகளில் இடம்பெற வேண்டுமென்று விரும்பினால், மற்ற மொழிகள் தேவை இருக்குமானால் ஆங்கில பெயர்களுக்கு கீழே எழுதப்பட வேண்டும். மேலும் விதிகளிலே நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பெயர் முதலாவது இடத்தில் பெரிதாக எழுதப்பட வேண்டும்; மற்ற மொழிப் பெயர்களுக்கு ஒதுக்கப்படும் இடத்தைவிட அதிகமான இடத்தை ஒதுக்கியிருக்க வேண்டும். பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்களை எழுதும்போது சீர்திருத்த எழுத்துக்களில் எழுதப்பட வேண்டுமென்று அடுத்தடுத்து அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. 1978 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பின் 1979-ல் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்ப உணவகங்கள் விதித்துறை 42-பி-ல் திருத்த விதி சேர்க்கப்பட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதித்துறை 113-ல் அதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 1984 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதிலும் கட்டாயமாக இதை கடைபிடிக்க வேண்டுமென்று பத்திரிகைகளில் எல்லாம் இந்தச் சட்டம் விளம்பரப்படுத்தப்பட்டு, இந்தச் சட்டம் கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது; அந்த வகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை யாராவது கடைபிடிக்காமல் இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சியிலே நாம் இறங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று சில பல இடங்களில் கடைபிடிக்காமல் இருக்கிறார்கள். கடைபிடிக்காமல் இருக்கிறவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மே மாதம் 31-ந் தேதிக்குள் எல்லோரும் இந்த பெயர்ப் பலகைகளில் முதல் இடத்தில் பெரிய வடிவில் தமிழில் கட்டாயமாக எழுதவேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்; வற்புறுத்துவோம். அதன் பிறகு ஜூன் முதல் வாரம் நடவடிக்கை எடுக்கிற வாரமாக இருக்கும். இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும், மதுரையில் 4-வது தமிழ்ச்





சங்கத்தையும் உருவாக்கியிருக்கிற இந்த நேரத்தில ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற சில சொற்களையும் தமிழில் எழுத ஏற்பாடு செய்யலாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் 'ஏஜென்சி' என்று எழுதுவதற்குப் பதிலாக தமிழில் 'முகவர்' என்று எழுதலாம். இப்படிப்பட்ட தமிழ் சொற்களும் இடம்பெற இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படுமா? குறிப்பாக பெயர் மாற்றம் தமிழிலே இருக்க வேண்டுமென்று இருந்தாலும், இன்றைக்கும் விளம்பரப் பலகைகளில் அப்படிப் போடுவதில்லை, ஆகவே அப்படிப்பட்ட தனியார் விளம்பர நிறுவனங்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவை தமிழிலே எழுதப்பட வேண்டுமென்று நாம் சட்ட விதிகளிலே கூறியிருக்கிறோம். எல்லாவற்றையும் தூய தமிழிலே எழுதுவது ஒன்றும் எளிதானது அல்ல. அவர்கள் வைத்திருக்கிற பெயரை தமிழில் எழுத முடியாதபோது அப்படியே 'ட்ரான்ஸ்லிட்டரேஷன்' என்ற முறையில் தமிழ் எழுத்துக்களாக எழுத வேண்டும். ஆனால் ஏஜென்சி என்பதற்குப் பதிலாக முகவர் என்று எழுதுவது நல்லது. அதைத்தான் எழுத வேண்டுமென்று இப்போது நாம் வற்புறுத்த முடியாது. நாளடைவில் ஏஜென்சி என்பதை முகவர் என்று எழுதுகின்ற சூழ்நிலை வந்துவிடும். அரசு இயற்றியிருக்கிற சட்டத்தின்படி அரசு நிறுவனங்கள், மாநகராட்சி, நகராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட நிறுவனங்கள், மற்ற நிறுவனங்கள் ஆகிய எல்லாவற்றிலும் சட்டப்படி நிர்ணயிக்கிற பெயர்களைத்தான் பெயர்ப் பலகையில் போட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட பெயர் இல்லாமல் வேறு பெயர் இருக்குமானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 9—20)

**திரு. இரா. முத்தையா மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களே, வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப் பலகை பற்றிய ஆணையினைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். முதலாவதாகத் தமிழும் அடுத்து ஆங்கிலமும் பிறகு வேறு மொழிகளையும் வைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் மத்திய அரசு நிறுவனங்கள் முதலில் இந்தியையும் அடுத்து ஆங்கிலத்தையும், அதற்கடுத்து மூன்றாவதாகத் தமிழையும் அவர்களுடைய பெயர்ப் பலகையில் எழுதி வைக்கிற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு உடனடியாக அரசாங்கத்தின் மூலம் தாக்கீது அனுப்பி முதலாவதாகத் தமிழ் மொழியை எழுத வேண்டும் என்பது மட்டுமல்லாமல் இரு மொழிக்கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசின் கொள்

கைக்கேற்ப தமிழும் ஆங்கிலமும் இருந்தால் போதும் என்பது போன்ற உத்தரவுகள் இடபபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதலிடம் தமிழுக்குத்தான் என்பதை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இரயில்வே நிலையங்களில் எல்லாம் ஒரு காலத்தில் முதலில் இந்தியில் எழுதி பிறகு ஆங்கிலம் மற்ற மொழிகளில் எழுதினார்கள். அந்த நிலைமையை மாற்றி தமிழ்க மக்களின் ஒருமித்த கோரிக்கையை ஏற்று இப்போது எல்லா இடங்களிலும் முதல் மொழியாக தமிழையும், இரண்டாவதாக இந்தியையும், மூன்றாவதாக ஆங்கிலத்தையும் அதில் போட்டிருக்கிறார்கள். முதலிடம் தமிழுக்கு இருக்க வேண்டும் என்ற முறையை மத்திய அரசு கடைப்பிடித்து வருகிறது: அதே முறைதான் மத்திய அரசினுடைய நிறுவனங்களிலும் மற்றவைகளிலும் கடைப்பிடிக்கவேண்டும். அப்படி கடைப்பிடிக்கப்படாமல் இருந்தால் கடைப்பிடிக்கவேண்டுமென்று இந்த அரசின் மூலம் நாம் வற்புறுத்தலாம்.

**கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்.**

**555—***(வினா எண், 5023)—**திரு. த. பஷ்பராசு : திரு. வி. திரு. வி. தங்கவேலு: திரு. க. பாரமலை :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** (அ) தமிழ் நாட்டில் இதுவரை 5,166 கிராமங்களில், மொத்த 5,212 சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் தொலைக்காட்சி தெரியும் கிராமங்களில் இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

**திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாயிரத்து சொச்சம் கிராமங்களில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். ஆனால் அவ்வாறு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டிருக்கிற பல கிராமங்களில் அந்தப் படம் தெளிவாகத் தெரியவில்லை; சில கிராமங்



களில் சுத்தமாகவே படமே தெரியவில்லை. " பூஸ்டர் " என்ற கருவி பொருத்தப்படாததன் காரணத்தால்தான் அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே இனிமேலாவது தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகிறபோது அந்த பூஸ்டர் என்ற கருவியையும் சேர்த்து வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. பரிசீலிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுகிறது. இப்போது நடப்பது புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் ஆட்சி. இந்த ஆட்சிக் காலத்தில் செய்யப்படுகின்ற சாதனைகளைப் பற்றி பொதுமக்களுக்கு விளக்கும்போது சில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஏதோ அவர்களுடைய சொந்தப் பணத்திலிருந்து கொடுப்பது போல் விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் இந்தப் பெட்டி வழங்கப்படுகிறது என்பதைக் காட்டுகின்ற வகையில் புரட்சித்தலைவரின் படம் போட்டு, தமிழக அரசின் சின்னம் பொறித்து அதை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய படத்தை அதிலே போடவேண்டிய அவசியம் இல்லை. முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிதான் தமிழகத்தில் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. எனவே இதுபற்றி மறுபடியும் தொலைக்காட்சிப் பெட்டியில் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. பழனி :** பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் அமைக்கப்பட்டிருக்கிற அந்தத் தொலைக்காட்சி அமைப்பினுடைய ரேடியஸ் 25 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் என்ற வகையில் அந்த அளவுக்குத்தான் தெரியும் என்று அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் சென்னையிலிருந்து ஒளிபரப்பப்படுகிற அந்தக்காட்சி வடஆற்காடு மாவட்டம் முழுவதுமாக அனைத்துப் பகுதிகளுக்கும் தெரிகிறது. எனவே வடாற்காடு மாவட்டத்திலுள்ள அனைத்து பஞ்சாயத்துக்களிலும் இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைக்கக்கூடிய ஏற்பாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அறிவித்திருக்கிற வட்டத்திற்குள்ளாக சிலயிடங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளில் படம்

தெரியவில்லை என்று சொன்னார்கள். திரு. புஷ்பராசு அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அப்படியிருக்கும்போது அந்தப் பகுதிக்கு வெளிப்புறத்திலே கொண்டுபோய் பெட்டிகள் கொடுப்பது இப்போது சாத்தியம் இல்லை. ஏற்கனவே இருக்கிற இடத்தில் இன்னும் கொஞ்சம் பவர்புல்லாக தொலைக்காட்சியைத் தெரிவிக்கிற இயந்திரம் அமைக்கப்படுமானால் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைப்பதுபோல் விழுப்புரத்தில் வளவனூர் பேரூராட்சிக்கும், பின்தங்கிய பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா? அப்படி விரிவுபடுத்தப்படும் நேரத்தில் நிதி நிலை பற்றாக்குறையாக உள்ள பேரூராட்சிகளுக்கு அரசாங்கம் மானியத்தொகை கொடுத்து பின்தங்கிய பேரூராட்சிகளுக்கு உதவி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டிருக்கிற திட்டத்தைப் பற்றியதாகும். பேரூராட்சிகள் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன? ஊராட்சி மன்றங்கள் இருக்கிற இடங்களிலும் நகரத்திலிருந்து தொலை தூரத்தில் இருக்கிற அந்தக் கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் முன் உரிமை வழங்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிறுவனத்தார் ஒரு வட்டத்தைச் சொல்கிறார்கள். இருபது கிலோ மீட்டர் வட்டத்திற்கு தொலைக்காட்சி தெரியும் என்று சொல்கிறார்கள். அந்த இருபது கிலோ மீட்டர் வட்டத்திற்குள் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது அந்தக் கிராமத்தின் நிதிநிலை பற்றி ஆராய்ந்து அந்த நிதிநிலைக்கு ஏற்றவாறு இப்போது கொடுத்துக்கொண்டு வருகிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ரூ. 5000-லிருந்து ரூ. 7500 வரை ஆண்டு வருமானம் உள்ள கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றுக்கு ஊராட்சி மன்றம் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும், 75 சதவீதம் அரசாங்கம் கொடுக்கும். ரூ. 7500-லிருந்து ரூ. 20,000 வரை வருமானம் வரும் பஞ்சாயத்தாக இருந்தால் 50 சதவீதம் அரசாங்கம் மானியமாக கொடுக்கும்.



ரூ. 20,000-க்கு மேல்வருமானம் உள்ள ஊராட்சி மன்றங்களாக இருக்குமானால் அரசாங்கம் 25 சதவீதம் மானியம் கொடுக்கும் மீதியை அந்த ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் ஒன்பது, பத்து பஞ்சாயத்துகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதன் தொடர்பு நிலையம் ஏற்காட்டில் இருக்கிறது. எனவே அந்தப் பெட்டிகள் மூலம் படங்கள் பார்ப்பதற்கு சரியாகக் கிடைக்கவில்லையென்று புகார் சொல்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டால் தொலைக்காட்சியின் சக்தி குறைவாக இருப்பதால் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே ஏற்காடு நிலையத்தின் சக்தியை அதிகப்படுத்தினால், அதன் பவரை அதிகப்படுத்தினால் அரூர், ஊத்தங்கரை போன்றயிடங்களில் நன்கு பார்க்க வசதியாக இருக்கும். இப்போது பலயிடங்களில் சரியாகப் படங்கள் பார்க்க முடியவில்லை. எனவே அந்த நிலையத்தின் சக்தியை அதிகப்படுத்த, அதை விரிவுபடுத்த அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தின் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் என்றால் அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும், நமக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் சொல்லியிருக்கிற தொலை தூரத்திற்குத் தெரியும் என்ற நம்பிக்கையோடுதான் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஒருவேளை தெரியவில்லை என்று சொன்னால் பூஸ்டர் வைத்துப் பார்க்கலாம். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த முயற்சியும் சரியாக வரவில்லையென்றால் மத்திய அரசுக்கு இதைப்பற்றி எழுதலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

### திருச்சி பேருந்து நிலையம்.

556.—(*வினா எண் 5086)— திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி பஸ் நிலையம் பணி எப்போது முடியும்?

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(ஆ) முடிவடைந்த நிலையத்தில் என்ன வசதிகள் இருக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) திருச்சி பேருந்து நிலைய பணி நடப்பு 1985—86-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் முடிக்கப்படும்.

(ஆ) முழுவதும் கட்டி முடிக்கப்பட்ட பின், அப்பேருந்து நிலையம், 34 கடைகள், ஒரு உணவு விடுதி, 20 தங்கும் அறைகள் மற்றும் 17 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிறுத்தவும், பயணிகள் நிற்கவும் ஆகிய வசதிகள் கொண்டதாக இருக்கும்.

(முற்பகல் 9-30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்சிபேருந்து நிலையம் சென்னைக்கு வருகின்றவர்களுக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தால், அதிகமான நெருக்கடியுள்ள பேருந்து நிலையமாக இருக்கிறது. அங்கே கழிப்பறை வசதி ஒழுங்காக இல்லாத காரணத்தினால், பயணிகள் அதிகம் இன்னலுற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தில் கழிப்பறைகள் பற்றி குறிப்பிடவில்லை. அதைப்பற்றிய விவரம் ஏதாவது இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த வசதி செய்து தரப்படும்.

திரு. டி.ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த வசதி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால், அதற்கு திருத்திய மதிப்பீடு பெற்றுதான் அந்த வேலை மேற்கொள்ளப்படுமா? அல்லது இந்தத் திட்டத்திலேயே அதுவும் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மதிப்பீட்டில் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால், திருத்திய மதிப்பீடு பெற வேண்டுமென்றால், மீண்டும் அது பெறப்பட்டு, அந்த வசதி நிச்சயமாக செய்து தரப்படும் என்ற உறுதியை அளிக்கின்றேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு தமிழக அரசின் சாதனைகள், மற்றும் தமிழகத்திலுள்ள நல்ல திட்டங்களை யெல்லாம் அரசு அறிவிக்கின்றது. மற்றும் பல செய்திகளை மக்கள் கண்டு களிக்க வேண்டுமென்று அரசு தொலைக்காட்சி வசதிகளைச் செய்திருக்கிறது. இந்த தொலைக்காட்சி பெட்டிகளை ..........................

(குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அளவில்தான் உறுப்பினர் அவர்களிடம் விவரம் இருக்கிறது. அடுத்தகேள்வி

## தலை ஞாயிறு பேரூராட்சியில் சாலைப் பணிகள்.

557—(*வினா எண் 6296)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறின் நான்கு வீதிகளையும் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தலை ஞாயிறு பேரூராட்சியில் உள்ள நான்கு வீதிகளையும் தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலைஞாயிறின் நான்கு வீதிகளில் வடக்கு வீதி சாலையில் ஒரு பகுதியும், மேலவீதி சாலையும் நெடுஞ்சாலை துறையினரின் பராமரிப்பில் உள்ளது. நெடுஞ்சாலை துறையினரால் மேற்கண்ட இரண்டு சாலைகளும் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு விட்டன. தலைஞாயிறு பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள வடக்கு வீதி மற்றும் கீழ் வீதி ஆகியவற்றில் தார்ச்சாலை அமைக்கும் பணி ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. தெற்கு வீதியில் கப்பி பரப்பும் வேலை தற்போது முடிவடைந்து உள்ளது. தார் போடும் வேலை விரைவில் முடிவடைந்துவிடும்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சியில் தார்ச் சாலை ஒரு வீதியில்தான் போடப்பட்டிருக்கிறது. மற்ற வீதிகளில் போடப்பட்டிருப்பதாக தெரியவில்லை. இருந்தாலும், சென்ற ஆண்டு பெய்த மழையால் தலைஞாயிறு, வேதாரண்யம் பகுதிகளிலுள்ள கிராமச் சாலைகள் மிகவும் சீர் கேடடைந்து, இன்னும் சீர் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. ஏனென்றால், பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் நிதிநிலை பற்றாக் குறை இருக்கிறது. எனவே, உடனடியாக அரசு ஏதாவது நிதி உதவி செய்து, அந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தலைஞாயிறு பேரூராட்சியில் உள்ள நான்கு வீதிகளில் மூன்றிற்கு தார்ச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்ற தகவல் தரப்பட்டிருக்கின்றது. தெற்கு வீதிக்கு மட்டும் கப்பி பரப்பப்பட்டிருக்கின்றது என்றும், தார்ச் சாலை போடப்பட இருக்கின்றது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன்

அதிலே தவறு என்று சொன்னால், போய்ப் பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்ற கேள்விக்கு, தனிக் கேள்வி கேட்டால், விவரங்கள் சேகரித்து தரப்படும்.

## தமிழகத்தில் முந்திரி உற்பத்தி.

558—(*வினா எண் 2426)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வருடத்துக்கு சராசரி முந்திரிக்கொட்டை உற்பத்தி எவ்வளவு?

(இ) அரசு மூலம் விற்பனையில் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 12.29 இலட்சமும், 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 14.19 இலட்சமும் தோட்டக்கலைத் துறையால் செலவிடப்பட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் ஆண்டு சராசரி முந்திரிக்கொட்டை (பதப்படுத்தாதது) உற்பத்தி ஏறத் தாழ 8,400 மெட்ரிக் டன் ஆகும்.

(இ) அரசு மூலம் முந்திரி விற்பனை ஏதும் செய்யப்படுவதில்லை ஆகையால் இக்கேள்வி எழவில்லை.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு எவ்வளவு உதவித் தொகை அளித்துள்ளது? முந்திரி விலை தமிழகத்தில் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதன் விலையைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவை மத்திய, மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. முந்திரி விலையைப் பொறுத்தவரையில் நாம் கட்டுப்படுத்த இயலாது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாவட்டந்தோறும், மாடல் பண்ணை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலே செயல் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தோடு முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு 'நபாட்' உதவியோடு தென் ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

559—(*வினா எண் 3198)—திரு. எல்ல. இராமமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''முந்திரி வளர்ச்சிக் கழகம்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரியினுடைய விலையை நிர்ணயிப்பதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், எதிர் காலத்திலே யாவது இந்த முந்திரி வளர்ச்சிக் கழகம் அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது போன்ற ஒரு அமைப்பு கேரள மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்டு அதிலே வியாபார ரீதியிலே வெற்றி ஏற்படாததால், நிலைமையை சீர் தூக்கிப் பார்த்து, அந்நிறுவனத்தை மூடிவிட்டதாகத் தெரிகிறது. முந்திரியின் விலையைப் பொறுத்த அளவிலே வெளி நாட்டிலே நிலவக் கூடிய விலையைப் பொறுத்துத்தான், உள் நாட்டிலே முந்திரியின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே வளர்ச்சிக் கழகம் அமைப்பதால் பயன் இல்லை.

திரு. வி.பி. சிந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு தெரிந்த அளவுக்கு கேரளத்திலே உள்ள கழகம் இன்னும் மூடப்படவில்லை என்பதாக அறிகிறேன். அந்த கேஷுநட் கார்ப்பரேஷன் வந்ததற்குப் பிறகுதான், இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிற முந்திரியில் ஒரு கணிசமான அளவிற்கு அங்கே செல்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் அது இல்லை. ஆகவே தமிழகத்திலே ஒரு கேஷுநட் ( Cashewnut) கார்ப்பொரேஷனை அமைத்து, மத்திய அரசிடமிருந்து கோட்டா பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்களைப் பொறுத்தவரையில் கேரளத்திலே அந்த நிறுவனம் வியாபார ரீதியில் வெற்றி பெற இயலாத காரணத்தால் தான் மூடப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அந்தப் படிப்பினையைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, முந்திரியின் விலை நிர்ணயம் என்பது உள்நாட்டிலே செய்யப் படுவதில்லை. வெளிநாட்டிற்குத்தான் நாம் பெரும்பாலும் ஏற்றுமதி செய்கிறோம். ஆகவே வெளிநாட்டிலே நிலவக் கூடிய அந்த விலை நிர்ணயம் பொறுத்துத்தான் இங்கே விலை நிர்ணயம் செய்யக்கூடிய் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தான் அப்படிப் பட்ட ஒரு வளர்ச்சிக்கு கழகத்தால் பயன் இல்லை என்று அரசு கருதுகிறது.

குடிநீர் வடிகால் வாரியம்.

560—வினா எண். 4460—திரு. கி. வெங்கடாசலம் : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நான்கு வட்டாரங்களாக பிரித்து திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலைமையகமாகக் கொண்டு செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலூரைத் தலைமையகமாகக் கொண்ட வட்டாரத்திற்கு சென்னையிலேயே தலைமையகத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) : மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு தெற்கு மண்டலம் 15—9—1985 முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு மத்திய மண்டலமும், கோயம்புத் தூரை தலைமையகமாகக் கொண்டு மேற்குமண்டலமும், வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு வடக்கு மண்டலமும் 1986 ஏப்ரல் மாதம் முதல், செயல்பட குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பாடுகள் செய்துள்ளது. வேலூருக்குப் பதிலாக சென்னையை தலைமையகமாக ஏற்படுத்தும் கருத்து இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 4 வட்டாரங்களாகப் பிரிப்ப தனால் தற்போது என்னென்ன மாற்றங்கள், திட்டங்கள் வரப் போகின்றன ? அதனால் அரசுக்கு என்ன செலவு ஆகிறது ? மேலும் அப்படிப் பிரித்ததன் காரணமாக சென்னை தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்த அரசு ஊழியர்களை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக மதுரை, திருச்சி, வேலூர் போன்ற இடங் களுக்கு மாற்றப்படுவதன் காரணமாக பல தாய்மார்கள் தங்கள் கணவரை பிரிந்தும், குழந்தைகளைப் பிரிந்தும் துன்பத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப்போக்க அரசு நட வடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கும் பணிகள் சிறப்பான வகையிலே செய்யப் பட வேண்டுமானால், ஆட்சியின் அதிகாரங்கள், நிர்வாக அமைப்பு கள் பரவலாக்கப்படுவது தேவை என்ற வகையில்தான், முடிவு செய்து அந்த மாற்றம் செய்திருக்கிறோம். இதிலே எவ்வளவு செலவு ஆகிறது என்பதே பிரச்னை இல்லை. ஆனால் அதிலே பணியாற்றக்கூடிய அலுவலர்களுடைய குறைகளை நாம் மனி தாபிமானத்தோடு ஏற்றுத்தான், கடந்த ஆண்டே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுடைய விருப்பத்தை ஏற்றுத்தான், இந்த நேரத்திலே அதை செயல்படுத்துகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையகமாகச் செய்ததால் சேலம், தர்மபுரி மாவட்டத்து மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருப்பது அம்மக்களின் விருப்பத்திற்கு எதி ராக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த அடிப்படையிலும், வட ஆற்காடு , செங்கற்பட்டு மாவட் டங்கள் சென்னைக்கு அருகே இருப்பதால், போக்குரவத்து வசதி அதிகமாக இருக்கிற காரணத்தால், வேலூரில் உள்ள தலைமை யகத்தை சென்னைக்கு மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதனால் பாதிப்பு எதுவும் இல்லை. மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண். 6 மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க முன்னமேயே எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

புதுக்கோட்டை நகருக்குக் குடிநீர் வழங்குதல்.

(குறுகியகால வினா. எண். 6*வினா— எண். 9113)— திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகருக்கு, காவேரி உபரிநீரை குடி நீராக்க, தமிழக அரசு சுமார் 11.00 கோடி ரூபாய் அனுமதித் துள்ளது உண்மையா ?

[1986 ஏப்ரல் 25

(ஆ) இந்த திட்டத்திற்கு புதுக்கோட்டை நகராட்சி ஆய்வுத்தொகை எவ்வளவு செலுத்தியுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை. புதுக்கோட்டை நகருக்கும் மற்றும் சில வழியோர நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்குவதற்கான, கூட்டுக் குடிநீர்த்திட்டம் ஒன்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அத்திட்டத்திற்கான ஆய்வுத்தொகை எதுவும் நகராட்சியால் செலுத்தப்படவில்லை.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி குடிநீர் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டையைத் தவிர வேறு எந்த எந்த இடங்களுக்கு, அந்த திட்டத்தின் கீழ் பயன் கிடைக்கும். அந்த திட்டம் எப்போது முதல் செயல்படத் துவங்கும். திருச்சியில் உள்ள காவிரி நதியில் எந்த இடத்திலிருந்து அந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் ? குழாய் மூலமாகவா, அல்லது கால்வாய் மூலமாகவா, எந்த வகையில் இந்த திட்டம் செயல்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[முற்பகல் 9.40]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் புதுக்கோட்டை நகரம் மற்றும் பொன்னமராவதி, அன்னவாசல், கீரனூர் ஆகிய மூன்று பேரூராட்சிகளும் திருச்சி-புதுக்கோட்டை சாலையில் அமைந்துள்ள தொழில் பேட்டைகளும், அன்னவாசல், விராலிமலையில் அமைந்துள்ள தொழில் கூடங்களும் பயன்பெறும். முதலில் இந்தத் திட்டத்திற்கு 1,500 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது ரூ. 16.46 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான உத்தேச மதிப்பீடு ஒன்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றி விரிவான ஆய்வு இன்னும் செய்யப்படவில்லை.

**திரு. ஜே. முகம்மது கனி :** தலைவர் அவர்களே, வருகிற 25—5—1986 அன்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் புதுக்கோட்டைக்கு வருவதாக தெரிவித்து இருக்கிறார்கள். அன்றைய தினம் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, திட்டத்தின் துவக்க விழாவை வைத்து, விரைவில் திட்டம் செயல்படும் வகையில் செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ? எப்போது இந்தத் திட்டம் செயல்பட துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 25]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, உறுப்பினர் கனி அவர்களுக்கு நான் தெரிவிக்கிற பதில், திட்டம் இன்னும் கனியாகவில்லை. காயாகத்தான் இருக்கிறது. கனியும் வரையும் அவர் காத்திருக்க வேண்டும்.

**திரு. து. புஷ்பராசு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, குடிதண்ணீருக்காக புதுக்கோட்டைக்கு காவிரி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டம் மிகுந்த வறட்சியான மாவட்டமாகும். அந்த மாவட்டத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வருகிறபோது பாசனத்திற்கும் தண்ணீர் கொண்டு வருகிற அளவிற்கு திட்டத்தை தயார் செய்தால் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விமோசனம் பிறக்கும். ஆகவே அரசு புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்கும் காவிரித் தண்ணீர் பயன்படுத்துகிற அளவிற்கு திட்டத்தை தயாரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, புதியசிக்கலை கிளப்பி வரக்கூடிய குடிதண்ணீருக்கும் பாதகத்தை உருவாக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### கத்திவாக்கத்தில் இரயில்வே மேம்பாலம்.

561- (*வினா எண். 4064)—**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியில் உள்ள கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்ட சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** தலைநாயகர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டுகிற குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். அது மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். 1982 ஆம் ஆண்டில் கூட நம்முடைய அரசாங்கப் பேருந்து ஒன்றிற்கு பாதிப்பு ஏற்பட்டு ஆறு தொழிலாளர் நண்பர்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே அவசியமாக இருக்கிற அந்தப் பகுதிக்கு நம்முடைய நடுவண் அரசுக்கு நம்முடைய மாநில அரசு பாலம் கட்ட வேண்டுமென்று பரிந்துரை வழங்குவீர்களா? அந்தப் பகுதியில் பாலம் கட்டுகிற வாய்ப்பை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, எண்ணூர் ரெயில் நிலையத்திற்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு வாகன சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது, இப்போது அதிலே வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் எண் 8 என்ற கடவில் 150 லட்சம் ரூபாயில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கும் ஒப்புதல் தரப்பட்டு அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கிற நிலையில் இருக்கிறது. ஆகவே இதன்காரணமாக அதற்கு அருகிலேயிருக்கிற இதற்கு மேம்பாலம் கட்டுவது என்பது பிரச்னைக்குரிய காரியமாக இருக்கும். மத்திய அரசுக்கு நாம் எழுதினாலும் கூட அவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் பெருந்தகை குறிப்பிடுவது போல தொழிற்சாலையில் சுரங்கப் பாதை இருக்கிறதென்பது உண்மை. அதில் எல்லா தொழிலாளர்களும் செல்ல முடியாது. அங்கே கோத்தாரி, அசோக் லேலண்ட், எண்ணூர் அனல் மின்நிலையம், பாரி கம்பெனி போன்ற கம்பெனிகள் இருக்கின்றன. இவ்வளவு நிறுவனங்களின் தொழிலாளர்களும் அந்தப் பாதை வழியாகச் செல்ல முடியாது. குறிப்பிட்ட தொழிலாளர்கள் தான் அந்த வழியாகச் செல்ல முடியும். ஆகவே ஊதுகிற சங்கை ஊதிவைத்தால் அது நிச்சயமாக வெற்றிச் சங்காக இருக்குமென்ற நம்பிக்கையோடு தமிழக அரசு பரிந்துரை செய்தால் சிறப்பாக இருக்கும். அதைச் செய்வார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சங்கை ஊதுகின்ற போது தேவையில்லாமல் ஊதிக்கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் மத்திய அரசுக்கு வருமேயானால், தேவையான போது நாம் ஊதுகின்ற போது அதுபோன்றே நினைப்பார்கள். எனவே அந்த வித்தியாசம் வேண்டுமென்ற காரணத்தால் மிக அவசியமாக இருப்பதை நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். நமக்கிருக்கிற எண்ணமெல்லாம் நாம் எழுதுகிற அத்தனையும் மத்திய அரசில் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களானால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் 14, 15 மேம்பாலங்கள் கட்டவேண்டுமென்று நாம் பரிந்துரை செய்தால் ஆறு இடங்களுக்குத்தான் கட்டுவதற்கு ஒப்புதலை அவர்கள் தந்திருக்கிறார்கள். எனவே அந்த நிலையில் இவைகளையெல்லாம் கொஞ்சம் நிறுத்தி வைத்திருக்கிறோம், வேண்டாமென்ற எண்ணம் நமக்கில்லை. ஆனால் அந்த இயக்கத்தைச் சேர்ந்த திரு பாரதி அவர்களே வலியுறுத்துகிற காரணத்தால் அந்தப் பட்டியலில் நாம் இதையும் சேர்த்து வைக்கலாம்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரயில்வே மேம்பாலம் எந்த அடிப்படையில் கட்டப்படுகிறது. போக்குவரத்தினுடைய அடிப்



1986 ஏப்ரல் 25]

படையில் கட்டப்படுகிறதா ? அல்லது வருவாயின் அடிப்படையில் கட்டப்படுறதா ? அப்படி போக்குவரத்தின் அடிப்படையில் கட்டப்படுகிறது என்றால், தலைநகராக இருக்கின்ற வேலூர், திருப்பத்தூர் பகுதியில் அதிகமான நெரிசல் இருக்கிறதே, அதற்கு ஏன் கட்டவில்லை? திருவண்ணாமலை, திண்டிவனம் ரோட்டில் உள்ள ரயில்வே மேம்பாலத்தை ஏன் கட்டவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ரயில்வே போக்குவரத்தினுடைய அந்த பயணத்தை பொறுத்துத்தான் இது கட்டப்படுகிறது. அந்த ரயில்வே பாதையில் குறைந்த பட்சம் 50 ஆயிரம் முறைக்கு மேலே ஒரு ஆண்டுக்கு ரயில்கள் கடந்து செல்லுமானால் அந்த இடத்திலே கட்டவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் வைத்திருக்கிறது. எனவே அதிக பட்சமாக எந்த இடத்திலே அப்படி இருக்கிறதோ, அங்கே இருந்து ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக கட்டிக்கொண்டு வருகிறார்கள். எனவே இவைகள் எல்லாம் முறையான நேரத்திலே நிச்சயமாக வரும் என்று கருதுகிறேன்.

### அய்யம்பாளையம் தாண்டிக்குடி மலைச்சாலை.

562—(*வினா எண் 4684) **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையை விரிவுபடுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அத்தகைய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையில் ஒவ்வொரு ஆண்டும் விபத்துக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து, அவசர நடவடிக்கை எடுப்பதற்கு ஏதேனும் வழிவகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பாதைகளை எல்லாம் விரிவுபடுத்தவேண்டும், அதைச் சரியாக பராமரிக்கவேண்டும் என்பது அவசரமான காரியமாகத்தான் இருக்கிறது. எனவே இதில் மிக அவசரம் எது என்பதைப் பார்த்து ஒரு பட்டியலைப் போட்டு நாம் காரியங்களைத் தொடர்ந்து

செய்து கொண்டு வருகிறோம். இதைப் பொறுத்தவரையில் 3( கி. மீட்டர் உள்ளது இந்தச் சாலை. இதிலே ஏறக்குறைய 3.! மீட்டர் அகலத்திற்கு இந்தப் பாதை அமைந்திருக்கிறது. அதிலே வனத்துறையிடமிருந்து நாம் சில இடங்களைப் பெற வேண்டி யிருக்கிறது. ஏறக்குறைய 153 லட்சம் செலவாகும் என்று கணக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து, அந்த வேலை எடுத்து கொள்ளப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதற்கு நிதி ஏதேனும் ஒதுக்கப்பட்டு உள்ளதா ? அப்படி இல்லை என்றால், வரும் ஆண்டிலாவது நிதி ஒதுக்குவதற்கு அரசிற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதுவரையில் ஒதுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் உத்தேசத்தைப் பற்றி யோசிக்கப்படும்.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மலைச்சாலைகளில் வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில் ஹைவேஸ் துறையினர் ரோடுகளைப் போடுகிறார்கள். அப்படிப் போடுகின்ற இடங்களில் வனத்துறையைச் சேர்ந்தவர்கள் செக்-போஸ்ட் போட்டு அதைத் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் ஹைவேஸ்காரர்கள் டி. எப். ஓ. அவர்களிடம் இதற்கான பெர்மிஷன் வாங்கவேண்டும் என்றுசொல்கிறார்கள். குறிப்பாக தாளவாடி பகுதியில் உள்ள விவசாயிகள் அங்கே விளைகின்ற அந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல பெர்மிஷன் வாங்கவேண்டும் என்று சொல்கிற காரணத்தால், அவர்கள் மைசூர் சாம்ராஜுக்கு சென்று விடுகிறார்கள். கர்நாடக அரசு இதற்கு என்று எந்த பெர்மிஷனும் கேட்பதில்லை. ஆகவே இதில் தனிக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்படி மலைப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான ரோடுகளிலே இருக்கின்ற நெடுஞ்சாலைத்துறைக்கான பாதைகளில் எந்தவிதமான பெர்மிஷனும் வாங்கவேண்டியதில்லை என்பதற்கான அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாதை அமைப்பது, அதைப் பராமரிப்பது என்பதுதான் நெடுஞ்சாலைத் துறையினுடைய வேலை. இதிலே அதற்கு என்னென்ன பர்மிஷன் கொடுக்க வேண்டும், செக்-போஸ்ட் அதற்கு அமைக்கப் படவேண்டும் என்பதைப் பற்றி இந்தத் துறைக்குச் சம்பந்தம் இல்லை. அதைக் கேட்கவும் முடியாது. இது சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றி, சம்பந்தப்பட்ட துறைக்கு எழுதிக்கேட்டால் நிச்சயமாக அரசு இதிலே நியாயமான முடிவை எடுக்கும்.





## திருவனந்தபுரம் வரும் ரயில் வண்டிகளை கன்னியாகுமரிவரை நீட்டித்தல்.

563—(*வினா எண். 7606) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட மாநிலங்களிலிருந்து திருவனந்தபுரம் வந்து திரும்பிச் செல்லும் ரயில்கள் அனைத்தும் குமரிமுனை வரையிலும் வந்து செல்வதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : கல்கத்தா வழியாக பொங்கைகான்-திருவனந்தபுரம் மற்றும் பம்பாய் வழியாக அகமதாபாத்-திருவனந்தபுரம் துரித இரயில் வண்டிகளை கன்னியாகுமரி வரை நீட்டிக்கக் கோரி அதிகாரிகள் மட்டத்தில் முதலமைச்சரிடமிருந்தும் மத்திய அரசிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. நாகர்கோயில் கன்னியாகுமரியில் முடிவிடம் மற்றும் பராமரிப்பு வசதி குறைவு காரணமாக தற்போது இவை சாத்தியமில்லை என மைய அரசு அறிவித்துள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற பிப்ரவரி மாதத்தில் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், ஏற்கனவே கன்னியாகுமரியிலிருந்து Jayanthi Janatha, Howrah–Himmatnagar Express, Gauhathi Express and Kerala Express போன்ற நிறைய ரயில்கள் வந்து சென்று கொண்டு இருந்தன, அதை ரயில்வே நிர்வாகம் நிறுத்தி இருக்கிறது சரியல்ல என்பதையும் அதை மீண்டும் அங்கே இருந்து துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் அதைப் பராமரிக்கத் தேவையான வசதி இல்லை என்ற காரணத்தாலே மீண்டும் அந்த ரயில்களை அங்கே கொண்டு வர முடியாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அப்படி என்றால், அந்தப் பராமரிப்பு வசதிக்கான இட வசதிகளையும் மற்ற வசதிகளையும் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 26–10–1983 அன்று இந்தப் பிரச்சினை பற்றி மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அவர்கள் 10–4–1984-லே நமக்கு பதிலை எழுதியிருந்தார்கள். மீண்டும் முதலமைச்சர் மட்டத்திலே, நடவடிக்கை எடுக்க வேண்டும், பராமரிப்புக்கு உண்டான காரி

யம் செய்யப்பட வேண்டும், இடைப்பட்ட காலத்திலே, அந்த வேலை முடிகிற வரை, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப் பயணிகளுக்கு வசதிகளைச் செய்கின்ற வகையில், ஒதுக்கீடாகச் செய்து தர வேண்டும் என்ற ஏற்பாட்டைச் சொல்லி, அதிலே அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50.)

எதிர்காலத்திலே அவர்கள் அநேகமாக டெர்மினக்ஸுக்கும், பராமரிப்புக்கும் உண்டான வேலைகளை செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதிலே பல ரெயில்கள் அங்கே வந்து சென்றிருந்தன. அதற்கான வசதிகளும் அன்றைக்கு இருந்தன. ஆனால் ரெயில்வே டிவிஷனிலுள்ள அதிகாரிகளுக்குள்ளே இருக்கின்ற போட்டிகள் காரணமாகத்தான் இது அங்கே அளிக்கப்படவில்லை என்று பொது மக்களிடம் பேசப்படுகிறது. அப்படியென்றால் அதை மாற்றி, ஏற்கனவே அங்கே வந்து சென்றிருந்த பிரயாணிகளுக்கு வசதி செய்வதற்கு, அதுவும் குறிப்பாக கன்னியாகுமரியை ஒரு உலக சுற்றுலா ஸ்தலமாக மாற்றுவது என்று தமிழக அரசு முடிவு செய்து அதற்காக பல கோடி ரூபாய்களை இன்றைக்கு செலவு செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட தொடர் ரெயில் போக்குவரத்து இல்லையென்றால் அதனால் கடினமாக பாதிக்கப்படும் என்ற காரணத்தால், கன்னியாகுமரிக்கு ஏற்கனவே வந்து சென்றிருந்த ரெயில்களை ஏற்கனவே கன்னியாகுமரியிலிருந்து தொடங்கப்படும் என்று ரெயில்வே நிர்வாகம் அறிவிக்கப்பட்டு ரெயில்களும் அங்கிருந்து கிளம்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நிலைமை அங்கே இருக்குமேயானால் அது பற்றி தனியாக, அவர்களுடைய விளக்கமான கடிதத்தைத் தருவாரேயானால், அதையே அடிப்படையாக வைத்து, அந்தத் துறைக்கும், மத்திய அரசுக்கும் எழுதி அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவுக் கூடங்களுக்கு அருகில் காய்கறித் தோட்டம்.

192—(*வினா எண். 5106 (திரு. யு.பி. மாதையன்), திரு. ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் புறங்களில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்கு அருகாமையில் காய்கறித் தோட்டங்களை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : இல்லை.



டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு கூடங்களுக்கு அருகிலே இதுபோன்ற காய்கறித் தோட்டங்களை அமைத்தால் பிரஷ் வெஜிடெபிள்ஸ் கொடுப்பதற்கு இயலும் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக பிரஷ் வெஜிடெபில்ஸிலிருந்துதான் வைட்டமின் 'சி', பி காம்ப்ளக்ஸ், மினரல்ஸ் போன்ற சத்துக்களெல்லாம் கிடைக்கின்றன. ஆகவே இனிமேலாவது, இது போன்ற காய்கறித் தோட்டங்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான இடங்களில் பச்சைக் காய்கறிகள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. மேலும் சத்துணவுக் கூடங்களைச் சுற்றிலும் காய்கறித் தோட்டங்களை அமைப்பது என்பது எந்த அளவிற்கு லாபகரமாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் அப்படி அமைக்கப்படுகின்ற அந்தத் தோட்டங்களை பராமரிப்பதற்கு ஒரு காவலாளி நியமிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அவர்களுக்கெல்லாம் ஊதியம் கொடுக்கின்றபோது அந்த சத்துணவுக் கூடத்திற்கு மட்டும் அந்தக் காய்கறிகளைப் பயன்படுத்தலாம் என்ற நிலை வரும்போது லாபகரமாக இருக்காது என்று துறை கருதுகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான சத்துணவுக் கூடங்களிலே ஒரு வாரத்துக்கும் 10 நாட்களுக்கும் தேவையான காய்கறிகளை ஒட்டு மொத்தமாக வாங்கி வைத்து விடுகிறார்கள். அதனால் பல சத்துணவுக் கூடங்களிலே வாடி வதங்கிய காய்கறிகளும், ஏன் அழுகிய காய்கறிகளைக் கூட உணவிலே சேர்த்து சமைத்து, அதை குழந்தைகளுக்கு உணவாக வழங்குகிறார்கள். அதனால் அந்த குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கப்படுவதுடன் பெரும்பாலும் சத்தில்லாத காய்கறிகளை என்ற வகையிலே அவர்களுக்கு வழங்கி வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்கி புதிய காய்கறிகளை அந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வழங்குவதற்கும், இப்படி அழுகிய காய்கறிகளையும், வாடி வதங்கிய காய்கறிகளையும் சமைத்து வழங்குகின்ற அந்தக் காப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நாட்களுக்கு ஒரு முறை காய்கறிகளை வாங்குகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மிகைப் படுத்திச் சொல்வது போலத்

தெரிகிறது. நிச்சயமாக அந்த மாதிரி சூழ்நிலை எந்த சத்துணவு மையத்திலும் இல்லை. மேலும் இன்னொன்று, நல்ல காய்கறிகள் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் காய்கறி உற்பத்தியாளர் சங்கங்களை ஆங்காங்கே நிறுவி, அவைகள் மூலமாக காய்கறிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு தற்போது காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் காய்கறிகளை விநியோகித்து வருகிறார்கள். இதிலே சில இடங்களில், சில மாவட்டங்களில், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், அண்ணா மாவட்டத்தில், அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் காய்கறி வாங்க வேண்டாம் என்றும், போடக் கூடாது என்றும் சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். சில இடங்களிலே மதிய உணவுக்கான நேர்முக உதவியாளர்களே, வாங்க வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதைப் போலத்தான், இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களில் வாங்க வேண்டுமென்று சொல்கிற போதுதான் அவர்கள் நிச்சயமாக காய்கறிகளை வாங்குகிற நிலைமை உருவாகிறது. ஒரு வேளை கூட்டுறவு சங்கங்கள் விலை கூடுதலாகப் போட்டால் அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ மற்ற அதிகாரிகளுக்கோ கொடுக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாக உருவாக்கப்பட்டிருக்கிற கூட்டுறவு சங்கத்திடம் காய்கறி உற்பத்தியாளர் சங்கத்தில் வாங்க வேண்டியதில்லை என்று சொல்வதால், காய்கறி போடாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே எல்லோரும் கட்டாயம் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்க வேண்டுமென்றும் வாங்குகின்ற காய்கறிகளை முறையாக அவர்கள் போடுகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கும் குழு அமைத்திருந்தாலும் கூட பெரும்பாலும் குழுவிலே ஆண்கள் இருக்கிறார்கள், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றி ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற 7 பெண்களை நியமித்து தினசரி ஒரு பெண் அங்கே வந்து கண்காணிப்பதற்கு, ஒரு கண்காணிப்புக் குழு போடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல காய்கறிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை நாம் நியமித்து இருக்கிறோம். பெரும்பான்மையான இடங்களில் காய்கறிகள் முறையாகக்கிடைத்து வருகின்றன. சிலயிடங்களில் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற





பெயரில் காய்கறி விற்பனையாளர்கள் சிலர் அங்கே நுழைந்துவிட்டார்கள். அதனால் காய்கறிகள் தரம், மற்றும் விலை சில நேரங்களில் குறைகிறது. சில நேரங்களில் விலை ஏறுகிறது. ஆகவே, வெளிச்சந்தையில் கிடைப்பதை விட காய்கறிகளின் விலைகள் அதிகமாக இருக்கிறபோது தேவையான அளவுக்கு அந்த குழந்தைகளுக்கு காய்கறி போட முடியாத இடங்களில் வெளி இடங்களில் காய்கறிகள் வாங்கிக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது நேர்முக உதவியாளர் ஆணையிட்டு இருப்பார்கள். எல்லா இடங்களிலும் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து காய்கறிகளை வாங்கக்கூடாது என்று எந்த தாக்கீதோ எந்த உத்தரவையும் அரசு அனுப்பவில்லை அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் நியமிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சத்துணவுக் கூடங்களை கண்காணிக்க குழு.

193—(*வினா எண். 5403) திரு. சைதை சா. துரைசாமி, திரு. ந. இராமச்சந்திரான் : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சத்துணவுக் கூடங்களை கண்காணிக்க கண்காணிப்புக் குழுக்கள ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முறையாக செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் தற்போது உரிய அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றும், மைய அளவில் முக்கியமானவர்களைக் கொண்ட குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய வாரியாகவும் மாவட்ட வாரியாகவும் கண்காணிக்க குழுக்கள் அமைக்கலாமா என்பது பற்றி அரசு ஆலோசனை செய்து வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்களில் இடம் பெறுகின்ற நபர்கள் யார், யார் ? அரசு அமைத்து இருக்கின்ற கமிட்டிக்கு உள்ள அதிகாரம் என்ன ? இந்த குழுவுக்கு அதிகாரம் என்ன என்பதையும் ஏதாவது அதிகார வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலர் பள்ளி மையங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் நேரடி மேற்பார்வையிலும், பள்ளி மையங்கள் கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையிலும் இயங்கி வருகின்றன. வட்ட அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள பல்வேறு அலுவலகத்தை சேர்ந்த அலுவலர்களும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களும்,

[1986 ஏப்ரல் 25

வருவாய் ஆய்வாளர், துணை வடடாடசியர், வட்டாடசியர் ஆகியோரும் மையங்களை பார்வையிடுவதற்கு பணிக்கபபட்டு இருக்கிறார்கள். மையம் நல்ல முறையில் நடைபெற, இயங்க இவர்சள பொறுப்பாளர்கள் என்றும் இவர்கள் அடிக்கடி விரிவான ஆய்வை செய்யவும் அவர்கள் வற்புறுத்தப்பட்டு இருக்கிறார்கள். மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் மாதம் குறைந்தது 10 மையங்களை பார்வையிட்டுக் கொண்டு வருகிறார்கள், ஆகவே முறையாக மையங்கள் பார்வையிடுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈாண் வயிற்று கஞ்சிக்கு வழி இன்றி தவிக்கின்ற சாமானிய குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கின்ற இந்த திட்டத்தில் ஒன்றிய அளவில் ஒரு குழு அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? அந்தக் குழுவில் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெறுவார்களா? இவர்கள் வாரம் எத்தனை முறை ஒரு சத்துணவு மையத்தை சோதனை இடலாம்? சோதனை இடுகின்ற இந்த குழுவில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகார வரம்பு என்ன? அவர்களுக்கு ஒன்றிய பொறுப்பில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் எந்த அளவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்பனத எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களும், கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், மாவட்ட சமூக நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அதே போல் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் தற்போது இந்த மையங்களில் எல்லாம் பார்வையிட்டு அதற்குரிய நடவடிக்கையை எடுக்கிறார்கள். தவறு நடக்கின்ற இடங்களில் தவறுகளை சுட்டிக்காட்டி தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். ஒன்றிய வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் குழுக்கள் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த துறை செம்மையாக செயல்படுவதற்கும் இந்தத் துறையில் ஏதாவது தவறு நடக்குமானால் உடனடியாக அவர்கள் நேரடியாக தலையிட்டு அந்தத் தவறுகளை களைவதற்கும், தவறு செய்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் எல்லா அதிகாரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெற்றிருக்கிறார்கள்.



986 ஏப்ரல் 25]

(முற்பகல் 10-00)

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சத்துணவுக் கூடங்களைக் கண்காணிப்பதற்கு பஞ்
சாயத்து யூனியன் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலை
வர்களுக்கும், கல்வித்துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும்
அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கூடங்களுக்
குச் செல்கின்ற நேரத்தில், பொதுமக்களை சந்திக்கின்ற நேரத்
தில் பொதுமக்களும், அங்கிருக்கின்றவர்களும் சத்துணவுக் கூடங்
களில் தவறுகள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். சத்துண
வுக் கூடங்களைச் கண்காணிக்கின்ற நேரத்தில் சில தவறுகள்
அங்கே ஏற்பட்டிருக்கின்றன. அந்த அமைப்பாளரிடம் புகார்
செய்யும் நோட்டுப் புத்தகங்கள் இருக்கின்றன. அதில் நாங்கள்
எழுதிவிட்டு வந்தால், அதை மாவட்ட ஆட்சித் தலைவர்
சரியாக கவனிப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர் அங்கே
போய் பார்ப்பதற்கு அனுமதியிருக்கிறதா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
மக்களை சந்திக்கின்றபோது ஏதாவது தவறுகள் சத்துணவுக்
கூடங்களில் நடக்கிறது என்று சொன்னால், அதைப் பார்க்கலாம்.
தவறு இருக்கிறது என்று தெரிந்தால், அந்தத் தவறைக் குறிப்
பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது மாவட்ட
ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளருக்கோ எழுதலாம்.
ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களே நடவடிக்கை மேற்கொள்
வது என்று முற்பட்டால், அந்த மையத்தினுடைய அன்றாட
வேலைகளுக்குத் தடங்கல் ஏற்படும். எனவே, அதை யார் யார்
எப்படி எப்படி பார்வையிடலாம் என்று முன்பே அதற்குரிய
வரைமுறை வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

## கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கக் கடன்கள்.

564 —(*வினா எண். 3424) —திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி
சங்கத்தின் மூலமாக ரூபாய் 2,250 கடன் பெற்று விலைவாசி
உயர்வின் காரணமாக கட்டப்பட்ட வீடுகள் பாதியிலேயே நிறுத்
தப்பட்டுள்ளவர்களது வீடுகளை கட்டி முடிக்க கடன் தொகையை
உயர்த்தித் தரும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : ஆம்.

[1986 ஏப்ரல் 25

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டிற்கும் இதுவரையில் ரூ. 2,400 லோன் கொடுக்கப்பட்டு, பாதியிலே பணப் பற்றாக்குறை காரணமாக வீடு கட்டப்படாது தடைப்பட்டிருக்கிறது. இதை கவனத்திற்கொண்டு, கிட்டத்தட்ட ரூ. 10,000 வரை உயர்த்தித் தருகின்ற நோக்கம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ. 2,400 வீடு கட்டுவதற்குத் தருவதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது ரூ. 6,000 வரை தருகின்ற அளவில் திட்டம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற பணத்தைக் கொண்டு அவர்கள் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை, உதவிகளை அரசு தருகிறோம். ரூ. 10,000 ஆக உயர்த்துகின்ற எண்ணம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுக்கா கிராமியக் கூட்டுறவுச் சங்கத்திலும், மயிலாடுதுறை கோட்ட அளவிலான கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திலும் ரூ. 2,500 கொடுக்கப்பட்டு, அந்த ரூ. 2,500க்கு அக்ரீமெண்ட் ரிஜிஸ்ட்ரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பணப் பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் தடைப் பட்டிருக்கிறது. ரூ. 2,400 கொடுக்கப்பட்டது போக, மீதமுள்ள ரூ. 3,600க்கு அவர்களிடமிருந்து தேவையான அக்ரிமெண்ட் செய்துகொண்டு, அந்தத் தொகையை அரசு வழங்க, மாவட்டத்தில் எவ்வளவு வீடுகள் பாதிக்கப்பட்டு பாதியில் நின்று கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து, அந்த வீடுகளைக் கட்டுவதற்கு மீதிப் பணத்தைக் கொடுப்பதற்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இந்த அளவில் பாதியிலே நிற்கப்பட்ட வீடுகள் 1,546. இதற்காக ரூ. 24,64,400 ஒதுக்கப்பட்டதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊர்களுக்கு நிச்சயமாக உதவுகின்ற தன்மையோடு இந்த அரசு உதவும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 ஏப்ரல் 25]

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட கடன் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது சென்று கேட்டால், 'டாட்கோ' மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லி, பல வீடுகள் தென்னாற்காடு மாவட்டத்தில் பாதியிலே நிற்கின்றன. தீயினால் பாதிக்கப்பட்ட இஞ்சாநத்தம், படப்பை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு கடன் கொடுக்கப்படாததை இதுவரை அரசு பரிசீலிக்கவில்லை. ஆகவே தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக உடனடியாக வட்ட ஆட்சியர் மூலமாக உதவிசெய்கின்ற தன்மையோடு இப்போது நடந்து வருகிறது. வீட்டு வசதி சங்கம் மூலமாக, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொந்தமாக பட்டா அவர்களுக்கு இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற முறையில் அரசு உதவுகின்ற தன்மையில் ஈடுபடும்.

## திருச்சியில் இராணுவத்துக்குச் சொந்தமான நிலங்கள்.

565—(*வினா எண். 5136) திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி ஜங்ஷன் அருகே உள்ள ராணுவ இலாக்காவிற்கு சொந்தமான (Shooting range) பகுதியை தமிழக அரசிற்கு ராணுவ இலாக்கா அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திருச்சி நகரில் இப்பகுதியை வீட்டு வசதித் துறை ஏற்று வீடுகள் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, இன்றைய தினம் திருச்சி நகரம் இதயம் போன்ற பகுதியாக இருக்கிற காரணத்தினால் நகரத்தின் மத்தியில் இருக்கிற பகுதியாக அது இருப்பதால் துப்பாக்கிச் சுடுதல் போன்ற பயிற்சிகள் அங்கே நடத்தப்படுவதால் ஒரு முறை அங்கே துப்பாக்கிச் சூடு நடைபெற்று ஒருவர் பலியாகி மற்றும் பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். அந்தப்பயிற்சி ஆபத்தான இடத்தில்நடத்தப்படுவதால் வேறு இடத்தை அதற்காக மையப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு அந்த இடத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அமைச்சர்

அவர்கள் திருச்சி நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அது குறித்து அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, திருச்சி ஜங்ஷன் பகுதிக்கு வெகு அருகாமையில் இருக்கிற பொது மக்கள் அதிகமாகக் கூடுகிற இடத்தில் இந்த இடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பிற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழக அரசின் மூலமாக அந்த இடம் நகரத்தின் மையப் பகுதியில் இருக்கிற காரணத்தினால் அந்த இடம் வீட்டு வசதி வாரியத்திற்கும் மற்ற காரியங்களுக்கும் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வீட்டு வசதித் துறை இந்தியத் துணைக் கண்ட அமைச்சர்கள் மாநாட்டில் நான் கலந்துகொண்டபோது டெல்லியிலே அங்கே அப்போது இராணுவ அமைச்சராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களைச் சந்தித்து திருச்சிக்கு அந்த இடம் தேவை என்பதை மட்டுமல்ல தமிழகத்திலே ஒரு நல்ல நகரம் உருவாகிற அளவுக்கு 273 ஏக்கர் நிலம் அந்த இடத்தில் இருக்கிறது. அதற்கு மாற்று இடமாக 292.8 ஏக்கர் நிலம் தருவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் எனக்கு நினைவு இருக்கிறது, ஒரு முறை துப்பாக்கி சுடும்போது அங்கே ஒருவர் இறந்து விட்டதாக பத்திரிகையிலே பார்த்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே ஆபத்தான அந்தச் சூழ்நிலையில் அது அங்கே இருக்கக்கூடாது என்று அரசு மீண்டும் எடுத்துச் சொல்லும். மத்திய அரசு அதற்கு உதவும் என்று நம்புகிறேன்.

### தூத்துக்குடி மீன்வளத்துறைத் தொழிலாளர்கள்,

566—(*வினா எண். 3527) திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மீன் துறைக்கு சொந்தமான பி.எஸ். 2., பி.எஸ்.5., பி.எஸ்.6 ஆகிய மூன்று மீன்பிடி படகுகள் இப்பொழுது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன் : ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

733 * ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



திரு. எஸ். டேனியல் ராஜ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பி. எஸ். 2, பி. எஸ். 5, பி. எஸ். 6 ஆகிய 3 மீன்பிடி படகுகள் இப்போது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? அந்த 20 மீனவர்கள் குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர்கள் குழந்தைகளும் தாய்மார்களும் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான 3 படகுகளும் சுருக்கு வலை மீன்பிடிப்பிற்கு ஏற்றவை. காரணம் இவ்வகையான மீன் பிடிப்புக்கு ஏற்ற அளவுக்கு கிழக்குக் கடற்கரையில் வாய்ப்பாக இல்லை. எனவே மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வந்தது. அதில் பணியாற்றிய மீனவர்கள் பங்கு முறையில் மீன் பிடித்தார்கள். ஆகவே சரியான வருமானம் இல்லை, அவர்களும் மீன்பிடிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. படகுகளை மேற்குக் கடற்கரைக்கு எடுத்துச் சென்றதால் அவர்கள் தாங்களாகவே வேறு ஒரு படகில் பணிக்குச் சென்று விட்டார்கள். எனவே வேலை அளிக்கும் கேள்விக்கு இடம் இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புக் கொடுக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த மீனவர்களின் குடும்பங்கள் இன்றைக்குப் பசியாலும் பட்டினியாலும் வாடுவதால் அவர்களுக்கு மாற்று உதவிகள் செய்வதற்கு கடன் வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம்.ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்கிற வாய்ப்பு ஏதாவது இருந்து அதை அவர்கள் கோரிக்கையாகக் கேட்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

### மீனவர்களுக்கு அடையாள அட்டைகள்.

567—(*வினா எண். 5386)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

[1986 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட தகுதி வாய்ந்த மீனவ பயனாளர்களுக்கு அடையாள அட்டைகள் தற்போது வழங்கப்படுகின்றன. அதே போல் முதலாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி வாய்ந்த மீனவர் களுக்கு அடையாள அட்டைகள் வழங்க ஊரக வளர்ச்சித் துறை யில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(முற்பகல் 10-10)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு, அடையாள அட்டைகள் எந்த வகையான மீனவர் களுக்கு வழங்கப்படுகிறது ? இதனால் மீனவர்களுக்கு என்ன பயன் ? இராமேஸ்வரம் மீனவர்களுக்கு அடையாள அட்டை கள் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? கடலில் காணாமல் போனவர்களுக்கும், இறந்த வர்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மொத்தத் தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பென்ஷன் வழங்கும் திட்டமும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சொந்தமாகக் கட்டுமரமும், நாட்டுப் படகும் மற்றும் வலைகள் இல்லாத மீனவர்கள் மற் றைய மீனவர்களுடன் தினம் கூலிக்கு மீன்பிடி தொழில் செய்ய வேண்டும் ; ஒரு ஆண்டில் குறைந்த அளவில் ஆறு மாதங்கள் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். (அ) மீனவர்கள் சொந்தமாக வலைகள் வைத்திருக்க வேண்டும். (ஆ) மீன் பொறிகள் இல்லாமல் இருக்கலாம். சொந்தமாக வைத்திருக்கும் மற்றைய மீனவர்களிடம் பங்கு அடிப்படையில் மீன்பிடி தொழிலைச் செய்ய வேண்டும். மீனவர்கள் ஒரேயொரு கட்டு மரம், நாட்டுப் படகு வைத்திருக்க வேண்டும். வலையும், வலை இல்லாமலும் இருக்கலாம். ஒரு இயந்திரப் படகு சொந்தமாகக் கொண்ட மீனவர்கள் வலையும், வலை இல்லாமலும் இருக்கலாம். இவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது பற்றி இப் பொழுது பரிசீலித்து வருகிறோம். இந்த அடையாள அட்டை கள் வழங்குவதால் பலதரப்பட்ட மீனவர்களுக்கு வீடு ஒதுக்கீடு மற்றும் இயற்கைச் சேதத்தினால் ஏற்படும் நஷ்ட நிவாரணம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தவும், வறுமைக் கோட்டிற் குக் கீழே உள்ள மீனவர்களுக்குக் கடனிலும், உதவித் தொகை மூலம் நாட்டுப் படகு, கட்டுமரம் மற்றும் வலைகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தவும் உதவியாக இருக்கும். இங்கே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கீழ்க்கண்ட தகுதி யில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஆண்டு வரு மானம் 3,500 ரூபாய்க்குள் இருக்க வேண்டும் ; இவ்வட்டைகள் பெறுவதற்கு குடும்பத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொள்ளப் படும். இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை கடற்



1986 ஏப்ரல் 25]

படையினால் ஏற்படும் தீமைகளைத் தவிர்க்கும் பொருட்டு அடையாள அட்டைகள் உடனடியாக வழங்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே இதுவரையில் தமிழ்நாட்டில் எத்தனை மீனவர்கள் இருக்கிறார் கள் ? எத்தனை மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டிருக்கின்றன ? ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தின் அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத்திலுள்ள கரையோர மாவட்டங்களில் 402 மீனவக் கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் மக்கள் தொகை 4 இலட்சம். இதில் 1 இலட்சம் பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்த வரையில் இலட்சம் மீனவர்கள் இருப்ப தாகத் தெரிகிறது. இதில் 60 சதவீதம் மீனவர்கள் மட்டும் மீன்பிடித்து வருகிறார்கள். இவர்களுக்கு இப்பொழுது தான் இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே தான் கார்டுகள் வழங்கும் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். ஒட்டுமொத்தமாக மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

### கடல்நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தல்.

568—(*வினா எண். 6589)—திரு. கு. சுப்பராயன் : மாண்பு மிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் நீரை பாசனத்திற்கு பயன்படுத்துவது பற்றி ஆய்வு நடத்த ஒரு விஞ்ஞானிகள் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப் : இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று அறிவித் திருக்கிறார்கள். இன்றைக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக் காத மிகவும் நெருக்கடியான சூழ்நிலை ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகிறது. ஆகவே, தற்போது இல்லை என்று சொன்னாலும், இன்றைக்கு வெளிநாடுகளில் பார்க்கின்றபொழுது கடல் நீர் குடிநீராகவும், மற்றும் பாசனத்திற்காகவும் இன்னும் பல்வேறு இனங்களுக்காகவும் மாற்றப்பட்டு வருகிறது உலக நாடுகளில்,

[1986 ஏப்ரல் 25

அந்த அடிப்படையில் நமது நாட்டிலும் தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலேயாவது கடல் நீரை எந்த, எந்த இனங்களுக்குப் பயன்படுத்தலாம், நீர்ப்பாசனத்திற்கோ அல்லது குடிநீருக்காகவோ அல்லது மின்சாரத்திற்காகவோ மாற்றுகின்ற இந்த அடிப்படையில் விஞ்ஞானிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அது பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியபடி, பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும், குடிதண்ணீருக்காகவும் கடல் நீரைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், பாசனத்தைப் பொறுத்தமட்டிலும் தண்ணீர் அதிகமான அளவு தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஏற்கெனவே பாசன நிலத்திற்கும் கடலுக்கும் உயரத்தில் மாறுபாடு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த முறையில், கடல் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்றால், நீரேற்று இயந்திரங்கள் மூலமாக, தண்ணீரை மேலே கொண்டு சென்றால் தான் பயன்படுத்த முடியும். கடல் நீரைச் சுத்தப்படுத்தி, அதற்குப் பிறகு நீரேற்று இயந்திரங்கள் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்வதைவிட, பல புதிய திட்டங்களைத் தீட்டி, ஏற்கெனவே மேற்கு நோக்கி பாய்கின்ற, நதிநீர் அரபிக் கடலில் விழுந்து வீண் போகாமல், கிழக்குப் பக்கம் திருப்பி, தமிழகத்தை வளப்படுத்தக் கூடிய அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு இருப்பதால், அதைப் பரிசீலிப்பதற்கில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேமாத்தூர் அணைக்கு நீர்வரத்து

569—(*வினா எண். 7336)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு. பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் வட்டத்தில் மேமாத்தூர் அணைக்கு மேல் பாகத்தில் மணிமுத்தாறு, கோமதி, மாயூரா மற்றும் 10 அணைக்குமேல் கட்டப்பட்ட காரணத்தினால் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன !

மாண்புமிகு திருமா. . சை. மு. யூசுப் : **(அ) இல்லை.**

**(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.**



1986 ஏப்ரல் 25]

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பாசனத்திற்காக வேண்டி 100 ஆண்டுகளுக்கு முன்னே வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட மேமாத்தூர் அணை இன்று வரை எந்தவிதத்திலும் சீர் செய்யப்படவில்லை. அந்தப் பாசன அணைக்கு மேலே இதுவரை 10 அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே, கோமுகி, மயூரா, மணிமுத்தாறு ஆகிய 3 அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்குக் கீழே உள்ள விவசாய நிலங்கள் பூராவும் பாசன வசதியற்று, அவர்கள் நன்செய் பயிர் செய்வதா, புன்செய் பயிர் செய்வதா என்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த அமைச்சர் அவர்கள் அங்கே வலதுகரைக் கால்வாய் வழியாக சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து விடுவதாக உறுதி தந்தார்கள். அந்த உறுதி என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதனாலே, அதற்குக் கீழே உள்ள விவசாயிகளுக்கு நல்ல திட்டத்தை அமைத்துத் தரவேண்டும். இல்லையேல், எங்கள் தண்ணீரைத் தடுக்கக்கூடியவர்களைத் தடுத்து எங்களுக்குத் தண்ணீர் விடுவதற்கு உத்தரவிட வேண்டும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த மேமாத்தூர் அணைக்கட்டிற்கு கோமுகி, மயூரா, மணிமுத்தாறு, திருமுக்தா ஆகிய 4 ஆறுகளிலிருந்து மட்டுமல்லாமல், கல்ராயன் மலைப் பகுதியிலே வரக்கூடிய மழைத் தண்ணீரும் சேர்த்து, அந்த அணைக்கட்டிலே தேக்கப்பட்டு, பயன்பட்டு வருகிறது. இந்த அணைக்கட்டுக்கு மேல்புறத்திலே 10 அணைக்கட்டுகள் கட்டியிருப்பதால், இந்த அணைக்கட்டுக்குயரி பாசனப் பரப்பு பாதிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியிலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், இங்கேயும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்றால், ஏற்கெனவே, இந்த மேமாத்தூர் அணை கட்டிய பிறகு, அந்த அணைக்கட்டு நிரம்பி, மேற்கொண்டு, தண்ணீர் வீணாக, அடிக்கடி கடலுக்குப் போய்ச் சேருகிறது என்ற நிலையை உணர்ந்துதான் இந்தத் தண்ணீரை வீண்படுத்தாமல், பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்காக மேலும் அணைகள் கட்டப்பட்டன. அந்த அணைகள் கட்டிய பிறகும் கூட மேமாத்தூர் அணைக்கட்டுக்கு உரிய பாசனப் பரப்பு 5,600 ஏக்கர் என்று இருந்தாலும், 5,760 ஏக்கராக்கள் இந்த மேமாத்தூர் வாயிலாகப் பாசனப் பயனைப் பெற்றுக் கொண்டு வருகின்றன. அந்த வகையிலே பார்த்தால், இந்தக் கூடுதலான அணைகளைக் கட்டியதால், எந்தவிதமான பாதிப்பும் இல்லையென்பதை மிகத் தெளிவாக நாம் உணரலாம். அந்த வகையில், விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாமல் கூடுதலாக விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் வகையில்தான் இந்தத் திட்டங்களைத் தீட்டி அரசு செயல் படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற விவசாயிகளுக்குப் பலன் அளிப்பதற்கு திட்டம் தீட்டியதை நாங்கள் வரவேற்கிறோம், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கெனவே பலன்பெற்ற பாதிக்கப்பெற்ற விவசாயிகளுக்குச் செய்த பரிகாரம் என்ன? அந்தப் பகுதியிலே பல்லாண்டுக் காலமாக இருக்கிற அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கிவிட்டு, இப்பொழுது புதிதாக, சிலபேர்களுக்குப் பயன் அளிக்கிறோம் என்று சொன்னால், எந்த அளவுக்கு அவர்கள் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு மாற்று யோசனை என்ன ? எங்களுடைய நிலையை உணர்ந்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? ஒவ்வொரு அணை கட்டும்போதும், எங்களுக்கு வர வேண்டிய தண்ணீரைத் தடுக்கவில்லை, உபரியான தண்ணீரைத்தான் எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். உபரியான தண்ணீரைத்தான் தடுக்கிறோம் என்று சொல்லி, உண்மையாக வருகிற தண்ணீரைத் தடுக்கிறீர்கள் என்றால், அதற்காகத்தான் முன்பிருந்த அமைச்சர் அவர்கள் வலது கரை கால்வாய் கொண்டு வந்து சாத்தனூர் அணையிலிருந்து, தண்ணீர் கொண்டு வந்து விடுவதாக, உறுதி அளித்தார். ஆகவே இந்த 10 அணைக்கட்டுகளினால் பாதிக்கப்பட்டிருக்கிற தண்ணீர் வருவதற்கான வாய்ப்பு தாருங்கள். ஏதாவது செய்கிறோம் என்றுசொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, அணைக் கட்டுகள் என்று சொன்னால் மேட்டூர் அணை போன்று பெரிய அணைகளை கட்டிவிட்டார்கள் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. வீணாகப் போகின்ற தண்ணீரை தேக்கி வைத்து, பாசனத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறோம். தண்ணீரை தேக்கி வைத்து முறையாக அணையைத் திறந்து விடவில்லை, ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று விவசாயிகள் நன்மையைக் கருதி கேட்டால் அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எது நடைமுறைக்கு சாத்தியமோ அதை இந்த அரசு செய்யும். ஆனால் வீணாகப் போகிற தண்ணீரைப் பயன் படுத்தக் கூடாது என்பது ஆபத்தான வாதமாகும். ஒரு அணை கட்டி, தண்ணீரை முறையாகப் பயன்படுத்துவதற்கு முன்னால் பாசனப் பரப்பு, ஆயக்கட்டு கூடுகிற அளவு ஆகியவற்றைப்பற்றி இந்த அரசுக்கோ அல்லது துறைக்கோ தகவல் தெரிவிப்பதற்கு முன் யார், யார், எந்த எந்த அளவுக்கு, என்ன என்ன பயிர்களை போட்டு இதன் வாயிலாக தண்ணீர் பெறுகிறார்கள் என்று அடங்கல் எழுதுகிறார்கள். இந்த அடங்கல் முறை எல்லோருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அதன் அடிப்படையில் தான் தகவல் தரப்படுகிறது. இந்த மேமாத்தூர் அணைக் கட்டின் மூலம் ஏற்கெனவே 5,500 ஏக்கர் நிலம் பாசனம் பெற்றது. இப்போது 5,700 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அணைக்கு மேலே அணை கட்டப்பட்டதால் பாதிப்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். பாதிப்பு இருக்கிறது என்று கருதினால், தகுந்த ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிரூபித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



மாண்புமிகு பேரவைத்தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### நத்தம் தொகுதியில் புதிய அணைகள்.

1—வினா 1941—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் அஞ்சுகுழிப் பட்டியில் படுகைக்காடு அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—வினா 1943—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் கூவனூத்து கிராமம் குளக்காரன்பட்டியில் வசிக்கும் ஊர் பொதுமக்கள் சிறுமலையில் ஓர் அணை கட்டுவதற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### காட்டுப்பட்டி—சிலமுத்து நாயக்கனூர் சாலையில் புதிய பாலம்.

3—வினா 2248—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி கம்பளியம்பட்டி பஞ்சாயத்து, சிலமுத்து நாயக்கனூரில் காட்டுப்பட்டியிலிருந்து செல்லும் சாலை அருகில் உள்ள ஓடை மேல் பாலம் கட்ட அரசு முன் வருமா?

விடை —

தற்போது அத்தகைய திட்டம் ஏதும் இல்லை. சட்ட மன்றப் பேரவை வினாவில் குறிப்பிடும் பாலமானது காட்டுப் பட்டி—சீலமுத்துநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 0/2-ல் குறுக்கிடும் ஓடையில் கட்டப்பட வேண்டியதாகும். ஓடையின் நீர் வழிப்பாதையின் அகலம் 12 மீ. ஆகும். இவ்விடத்தில் தாம்போகி ஒன்று அமைக்க சுமார் 3 இலட்சம் செலவாகும். இப்பணி அரசு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. வரும் ஆண்டுகளில் பணியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அரசின் நிதி வசதிக்கேற்ப மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

நாரைகிணறு கிராமத்தில் பெரிய ஓடையின் குறுக்கே புதிய பாலம்.

4—வினா 2803—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் இராசிபுரம் வட்டம் நாரைகிணறு கிராமத்திலுள்ள நெடுஞ்சாலையில் உள்ள பெரிய ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட பாலம் அமைக்க வேண்டுமாயின் அத்திட்டத்திற்கு சுமார் ரூ 19 இலட்சங்கள் தேவைப்படும். அரசின் நிதிப் பற்றாக்குறையினால் உடனடியாக இப்பணிகள் எடுத்துச் செய்ய இயலாது. இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம் பெருகும்போதும் மற்றும் வேலையின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு மேற்படி பாலங்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்.

5—வினா 2971—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வீடில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1983–84, 1984–85 ஆகிய ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்ட நில அளவு எவ்வளவு? மாவட்ட வாரியாக.





(ஆ) இதற்கென நஷ்ட ஈடாக வழங்கத் தக்க தொகை, எவ்வளவு?

விடை—

விவர அறிக்கை ஒன்று * பேரவை முன் வைக்கப்படுகிறது.

சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான முன்னோடிப் பயிற்சி நிலையக் கட்டிடம்.

6—வினா 2999—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயுற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் முன்னோடி பயிற்சி நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான 1.50 ஏக்கர் நிலம் கேட்டுப் பெறலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்கண்ட இடம் பெறப்பட்டவுடன் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்படும்.

அரியலூர் அரசு சிமெண்ட் தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

7—வினா 3215—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் மொத்த தொழிலாளர் எத்தனை பேர்?

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறையிலுள்ள நடுவர் தீர்ப்புப்படி தொழிலாளர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில் அவற்றை வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

---

* 734ம் பக்கத்தில் இணைப்பு ... ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1986 ஏப்ரல் 2

விடை—

(அ) பணியாளர்கள்—171, தொழிலாளர்கள்—757.

(ஆ) ஆம், வழங்கப்படுகிறது.

(இ) மேல் நடவடிக்கை எடுப்பது பற்றி கேள்வி எழவில்லை.

மதுரையில் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

8—வினா 3307—திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மதுரையில் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாமல்லபுரத்திலுள்ள உள்ளூர் வழிகாட்டிகள்.

9—வினா 3334—திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் உள்ள உள்ளூர் வழிகாட்டிகள், பயணிகளுக்கு சிற்பங்களைப் பற்றி விளக்கிக்கூறும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

விடை—

(அ) மாமல்லபுரத்தில் உள்ள உள்ளூர் வழிகாட்டிகள் பயணிகளுக்கு சிற்பங்களைப் பற்றி விளக்கிக் கூற அனுமதி மறுக்கப்படவில்லை. ஆனால் பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**(ஆ)** கேள்விக்கிடமில்லை.



1986 ஏப்ரல் 25[

பூம்புகாரில் புயலால் பாதிக்கப்பட்ட மீனவரு. . நஷ்டஈடு

10—வினா 3810—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 புயலில் பூம்புகார் மீனவருக்குச் சொந்தமான சேதமடைந்த கட்டு மர வலைக்கு இன்னும் நஷ்ட ஈடு வழங்கப்படாததன் காரணம் என்ன?

(ஆ) எப்போது வழங்கப்படும் ?

விடை—

(அ) 1984 புயலில் பூம்புகார் மீனவருக்குச் சொந்தமான சேதமடைந்த கட்டுமரம் மற்றும் வலைகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | மீன்பிடி சாதனங்களை இழந்த மீனவரின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட நிவாரணம் பற்றிய விவரம். (ரூபாய்) | வழங்கப் பட்ட நாள். |
|---|---|---|---|---|
| கட்டுமரம் | .. | 43 | 15,800 | 10—8—85 |
| மசூலா படகு | .. | 3 | 2,200 | 10—8—85 |
| வலை | .. | 15 | .. | .. |
| மொத்தம் | .. | 61 | 18,000 | |

பூம்புகார் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 61 மீனவரின் கட்டு மரம் பாதிக்கப்பட்ட 43 மீனவருக்கும், மசூலா படகு பாதிக்கப்பட்ட 3 மீனவருக்குமாக மொத்தம் 46 மீனவருக்கும் நிவாரணம் முற்றிலுமாக காசோலை மூலம் மீன் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள வலை இழந்த 15 மீனவருக்கு பொருளாக நிவாரணம் வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மீன் துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

1986 ஏப்ரல் 25

### கோவில்பட்டியில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள்.

11—வினா 4101—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரத்தில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் குடியிருப்புகள் கட்ட ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி கதிரேசன் மலைக்கு அருகிலும் மற்றும் புதுக்கிராமம் சாலை அருகிலும் நிலம் ஆர்ஜிதம் செய்ய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும், பல்வேறு வீட்டுவசதித் திட்டங்கள் தேவைக்கேற்ப அமுல்படுத்தப்படும்.

### காயாமொழி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம்.

12—வினா 4148—திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி காயாமொழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது பணிகள் துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) எழவில்லை.

### கீழ் அணையை சுற்றுலா மையமாக்கல்.

13—வினா 4225—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் அணைக்கரை என்று அழைக்கப்படும் கீழ் அணையை (Lower Anicut) சுற்றுலா மையமாக ஆக்க அரசுக்குத் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படும்?



1986 ஏப்ரல் 25]

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனை.

14—வினா 4244—திரு. க. பாரமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு என்ன?

(ஆ) தற்சமயம் வழங்கப்படும் தண்ணீரின் அளவு என்ன?

(இ) தேவைப்படுகின்ற தண்ணீரின் முழு அளவையும் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஒரு நாளைக்கு சுமார் 15,00,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.

(ஆ) சுமார் 3,85,000 முதல் 4,00,000 லிட்டர் வரை வழங்கப்படுகிறது.

(இ) இரண்டு குழாய் கிணறுகளுக்கு மோட்டார் பொருத்த ரூ.1 இலட்சமும், கடினமான பூமித் தண்ணீரிலிருந்து தேவையான நல்ல தண்ணீரை பிரித்தெடுப்பதற்கு தனிக்குழாய்கள் அமைக்க ரூ. 30,000மும், மதுரை நகராட்சியிலிருந்து தண்ணீர் பெறுவதற்காக தனிக்குழாய்கள் அமைக்க ரூ. 24,000மும் மதுரைக்கு அருகிலுள்ள விரகனூர் மற்றும் ஐராவதி நல்லூரிலிருந்து வைகை ஆற்றுத் தண்ணீரை கொண்டு வருவதற்கு ரூ. 18 இலட்சமும் செலவழிக்க அரசு 1985 ஆம் ஆண்டில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டங்களை ஓராண்டில் முடித்திடவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறையுடன் மருத்துவமனையின் முதல்வர் தொடர்பு கொண்டுள்ளார்.

15—வினா 4246—திரு. க. பாரமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனையில் மொத்தம் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(ஆ) அதில் ஏ, பி, சி, வகுப்புகளில் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(இ) ஏ, பி வகுப்புகளில் உள்ள படுக்கைகளை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) 1,494 படுக்கைகள் உள்ளன.

(ஆ) ஏ. வகுப்பு—7.

பி. வகுப்பு—29.

சி. வகுப்பு—60.

(இ) இல்லை.

16—வினா 4248—திரு. க. பாரமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மதுரை இராஜாஜி மருத்துவமன்ன வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் நர்ஸ் குவாட்டர்ஸ் அருகில் 1982 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆழ்குழாய்கிணறு பயன்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

விடை—

மதுரை இராஜாஜி மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் செவிலியர் விடுதிக்கு அருகாமையில் 1982 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியாளரால் ஒதுக்கப்பட்ட நிதியின் உதவியோடு ஒரு புதிய ஆழ்குழாய் கிணறு வெட்டப்பட்டது. இக்குழாயை நிறுவுவதற்கும் அதற்குரிய இணைப்பு குழாய்களை போடுவதற்கும் 1985-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆழ்குழாய் கிணறு சம்பந்தமான வேலைகள் முடிக்கப்பட்டு மேற்கண்ட குழாய் கிணறு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### உசிலம்பட்டி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடங்கள்.

17—வினா 4394—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டவும் அறுவை சிகிச்சைப்பிரிவு ஏற்படுத்தவும் அரசிடம் திட்டமேதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில், செய்யப்பட உள்ளது ?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### சென்னையில் மீன்வகை உணவகங்கள்.

18—வினா 4419—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மீன்வளத்துறை மூலமாக மீன்வகை உணவகங்கள் நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

சென்னையில் மீன்வளத்துறை அல்லது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மீன்வகை உணவகங்கள் (Restaurants) நடத்தும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை.

### உடையார்பாளையம் நகரை சுற்றுலா மையமாக்கல்.

19—வினா 4503—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் நகரை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

தற்போதைக்கு இல்லை.

### திண்டுக்கல்லில் சுற்றுலா விடுதி.

20—வினா 4585—திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை— இல்லை.

### நாகை வட்டத்தில் இறவைப் பாசனத் திட்டம்.

21—வினா 4901—திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தஞ்சை மாவட்டம், நாகை வட்டம், திருப்பூண்டி, வேளாங்கண்ணி ஆகிய இரு இடங்களிலும் உள்ள நீரேற்று பாசன திட்டத்தின் கீழ் உரிய பராமரிப்பு செய்வது பற்றிய கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருப்பூண்டி இறவைப்பாசன திட்டத்திலுள்ள குறைபாடுகளை பற்றிய கோரிக்கை மட்டுமே அரசுக்கு வந்துள்ளது அக்குறைபாடுகளை வரும் கோடைகாலத்தில் நிவர்த்திக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மின் தடத்திலிருந்து நூறு அடிக்குள் உள்ள விவசாயக் கிணறுகள்.**

22—வினா 4928—திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1984–85 ஆம் ஆண்டில் மின்வழி தடத்தில் இருந்து நூறு அடிக்குள் உள்ள விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு மாநிலம் முழுவதும் எத்தனை கொடுக்கப்பட்டது ?

விடை—

37,891 கிணறுகளுக்கு வழித்தடத்திற்கருகிலுள்ள மின் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சேலம் மாவட்டத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்.**

23—வினா 5180—திரு. செ. செம்மலை : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் கூஷாண்டியூர் கீரைக்காரனூர் பகுதி மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

விடை—இல்லை.

*Cases under payment of Subsistence Allowance Act.*

24—வினா 5199—திருவாளர்கள் வி.பி. சிந்தன் ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



The number of cases under the Payment of Subsistence Allowance Act, 1981 pending over six months before the Authorities under the Act and the number of prosecutions launched under that act so far?

விடை—

There are 43 cases pending over six months with the officers, Prosecutions have been launched in four cases and three cases have been ended.

அதிகாரிகளிடம் ஆறு மாதங்களுக்கு மேலாக 43 வழக்குகள் நிலுவையிலுள்ளன. இதுவரை 4 வழக்குகள் தொடரப்பட்டு (Prosecutions) 3 வழக்குகள் முடிவுற்றுள்ளன.

**வடலூரில் சுற்றுலா விடுதி.**

25—வினா 5252—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் மூலம் பயணிகள் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**நெய்வேலியில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

26—வினா 5255—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**தென்னாற்காடு மாவட்டத்தில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

27—வினா 5257—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் எங்கெங்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன?

விடை—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ''தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை வீட்டுவசதி திட்டத்தின் கீழ்'' குண்டு சாலையில் 108 குடியிருப்புகளும் மற்றும் சிதம்பரத்தில் 18 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன.

**சென்னையில் நடைபெற்ற கைத்தறி கண்காட்சியில் விற்பனை.**

28—**வினா 5312—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதம் நடந்த கைத்தறி கண்காட்சியில் எவ்வளவு ரூபாய்க்கு கைத்தறி துணிகள் விற்பனை ஆயின?

விடை—

சென்னையில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதம் (25—4—1985 முதல் 9—5—1985 வரை) நடந்த கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 3,066.84 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகள் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாலும் ரூ. 980.24 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகள் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தாலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**பவானிசாகர் அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்குதல்.**

29—**வினா 5318—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மீன்பிடித் துறைமுகங்கள்.**

30—**வினா 5411—திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் கட்டப்பட்டுள்ளன?



(ஆ) வரும் ஆண்டில் புதியதாக மீன்பிடித் துறைமுகம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் இறங்கு தளங்கள் **அமைக்கப்பட்டுள்ளன—**

| ஊர். | மாவட்டம். |
|---|---|
| (1) சென்னை | சென்னை |
| (2) தூத்துக்குடி | திருநெல்வேலி |
| (3) கடலூர் | தென்னாற்காடு |
| (4) நாகப்பட்டினம் | தஞ்சாவூர். |
| (5) மல்லிப்பட்டினம்(ஜெட்டி) | தஞ்சாவூர். |
| (6) மண்டபம் | இராமநாதபுரம். |
| (7) இராமேஸ்வரம் | இராமநாதபுரம் |
| (8) கோடியக்கரை | தஞ்சாவூர். |

கீழ்க்காணும் இடங்களில், மீன்பிடித் துறைமுகங்கள் அரசின் செலவின ஒப்பளிப்பு பெறப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன:—

| பெயர். | மாவட்டம். |
|---|---|
| (1) சின்னமுட்டம் | கன்னியாகுமரி |
| (2) வாலிநோக்கம் | இராமநாதபுரம் |
| (3) தொண்டி | இராமநாதபுரம் |
| (4) பழையாறு | தஞ்சாவூர் |
| (5) கோட்டைப்பட்டிணம் | புதுக்கோட்டை |

(ஆ) கீழ்க்காணும் இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அல்லது படகுகளுக்கான சிறிய அளவில் தங்குதளங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை மீன்துறை தற்போது ஆராய்ந்து வருகிறது;—

| பெயர் | மாவட்டம். |
|---|---|
| (1) குளச்சல் | கன்னியாகுமரி |
| (2) மணப்பாடு | திருநெல்வேலி |
| (3) வீரபாண்டியன் பட்டிணம். | திருநெல்வேலி |
| (4) தேங்காய்ப்பட்டிணம் | கன்னியாகுமரி |
| (5) மூக்கையூர் | இராமநாதபுரம் |
| (6) பரங்கிப்பேட்டை | தென்னாற்காடு |
| (7) பாம்பன் | இராமநாதபுரம் |
| (8) கீழவைப்பார் | திருநெல்வேலி |
| (9) மகாபலிபுரம் | செங்கற்பட்டு |

**(சிறிய இறங்கு துறை).**

## தோட்டக்கலைத் துறை தலைமையகம்.

31—வினா 5460—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தோட்டக் கலைத் துறை தலைமையகத்தை சென்னைக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா—

விடை—

தோட்டக்கலைத் துறை தலைமையகத்தை சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

## தஞ்சையில் இளைஞர் விடுதி.

32—வினா 5591—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் சுற்றுலாத் துறை மூலம் 'இளைஞர் விடுதி' கட்ட செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூரில் சுற்றுலாத் துறை மூலம் இளைஞர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. இருப்பினும் மத்திய அரசு நிதி உதவியில் அங்கு ஒரு விடுதி (யாத்ரிகா) கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்உள்ளது.

## நீலகிரி மாவட்டத்தில் காய்கறி விதைகள் வழங்கல்.

33—வினா 5721—திரு. கே. உச்சி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்ட காய்கறி விவசாயிகளுக்குப் போதுமான அளவு விதைகள் கிடைக்கப் பெற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இது தவிரவும், இமாசல பிரதேசம் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்குகளில் 'செப்டம்பர்' இரக முட்டைக்கோசு, 'சினோ' இரக காரட் 'கிபோ ஜயன்ட்' இரக காலி பிளவர் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு, இம் மாவட்டத்தில் விநியோகிக்கப்படுகின்றன.



மேலும் ஆண்டுதோறும், 8,500 மெ.டன். அளவில் நீலகிரி மாவட்டத்தில் பல்வகை காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. குன்னூரில் உள்ள செடி மற்றும் விதை உற்பத்தி மையம், மற்றும் நஞ்ச நாடு என்ற இடத்தில் உள்ள பல பயிர் பரிசோதனை நிலையம் ஆகிய பண்ணைகளில், சுமார் 2 மெ. டன் பீன்ஸ் விதைகள் மற்றும் 500 கிலோ முள்ளங்கி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில், விதை உற்பத்தி செய்ய இயலாத குளிர் பருவ காய்கறிகளின் விதைகள் இமாசலப் பிரதேசம், காஷ்மீர் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் 525 கிலோ அளவில் முட்டைக்கோசு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன. இது நீங்கலாக, தேசிய விதை வாரியத்திலிருந்து 5 மெ. டன் அளவில் பட்டாணி விதைகள் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

## திருப்பூர் நகராட்சியில் எழுத்தர் மற்றும் தட்டச்சர் காலி இடங்கள்.

34—வினா 5855—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் எழுத்தர் மற்றும் தட்டச்சர்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ள இடங்கள் எத்தனை?

(ஆ) அவைகள் எப்போது நிரப்பப்படும்?

விடை—

(அ) திருப்பூர் நகராட்சியில் எழுத்தர் மற்றும் தட்டச்சர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக எதுவும் இல்லை. விடுப்பு காரணமாக தற்காலிகமாக ஏற்படும் காலியிடங்களை அவ்வப்போது நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

## திருப்பூர் மாவட்ட மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு வங்கி.

35—வினா 5857—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்ட மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

திருப்பூர் அரசினர் மருத்துவமனையில் ஒரு இரத்த சேமிப்பு வங்கி இயங்கிக் கொண்டிருக்கிறது.

[1986 ஏப்ரல் 25

பொன்னரியாறு அணைக்கட்டுப்பகுதியில் சுற்றுலா விடுதி.

36—வினா 5954—திரு. க. சோலைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதியில் உள்ள பொன்னரியாறு டேமில் சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்டும் உத்தேசம் உண்டா?

விடை—இல்லை.

தமிழ்நாட்டில் ஏரி குளங்களில் மீன் பிடிப்பதற்கு உரிமம் வழங்கப் பெற்றோர்.

37—வினா 5994—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஏரி, குளங்களில் மீன் பிடிப்பதற்கு உரிமம் 1985 மார்ச் முடிய எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

தமிழ்நாட்டில், ஏரி குளங்களில் மீன் பிடிப்பதற்கு 1984—85இல் மார்ச் முடிய 7,784 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குற்றாலத்தில் துயிலகக்கூடம் கட்டும்பணி.

38—வினா 6037—திரு. டி.ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்தில் சுற்றுலாத்துறை மூலமாக (Dormitory) வசதியுடன் ஹோட்டல் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் ஆ) : குற்றாலத்தில் ரூ. 7.97 இலட்சம் செலவில் துயிலகக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் கட்டிடப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1986 ஏப்ரல் 25]

சென்னையில் மத்திய நிலத்தடி நீர்வாரியத்திற்கு இடம் ஒதுக்குதல்.

39—வினா 6397—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மத்திய நிலத்தடி நீர்வாரியம் அமைக்க தமிழக அரசு இடம் ஒதுக்கித் தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவ்வலுவலகம் எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மத்திய நிலத்தடி நீர் வாரியத்திற்கு அலுவலக உபயோகத்திற்கு இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

பிளவக்கல் அணையில் உல்லாசப் படகுகள் விடல்.

40—வினா 6443—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிளவக்கல் அணையில் சுற்றுலாத் துறை மூலமாக உல்லாசப்படகு விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—இல்லை.

கோடியக்காட்டில் மான்களுக்கு தண்ணீர் வசதி.

41—வினா 6457—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

தஞ்சை மாவட்டம் கோடியக்காட்டில் மான்களுக்காக கட்டப்பட்டுள்ள தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு லாரிகளைக் கொண்டு வெளியிடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து தொட்டிகளில் நிரப்பப்பட்டது. இவ்வாறு தேவைப்படும் பொழுதெல்லாம் தண்ணீர் நிரப்பப்படுகிறது. மேலும், மிருகங்களுக்கு, குறிப்பாக மான்களுக்குத் தேவைப்பட்ட அளவிற்குத் தண்ணீர் வசதி செய்து தரப்படுகிறது.

குமரி மாவட்டத்தில் ரப்பர் பயிரீட்டில் அரசுக்கு கிடைத்த லாபம்.

42—வினா 6520—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ரப்பர் பயிரீட்டின் மூலம் 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

(ஆ) குமரி மாவட்டத்தில் எத்தனை ஹெக்டேர் நிலப் அரசு ரப்பர் தோட்டம் உள்ளது ?

விடை—

(அ) 1983–84 ஆம் ஆண்டில் கிடைத்த லாபம் ரூ. 169.45 இலட்சம். 1984–85 ஆம் ஆண்டில் கணக்கு சட்டரீதியான கணக்கு தணிக்கையாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் முற்றுப் பெறவில்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டங்கள் 4,800 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ளன.

கோவை சுற்றுலா விடுதியை விரிவுபடுத்தல்.

43—வினா 6639—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரிலுள்ள, சுற்றுலா வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள விடுதியை மேலும் விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மலைப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள்.

44—வினா 6665—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மலைப் பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



சென்னையில் நடமாடும் பால் விநியோக வாகனங்கள் மூலம் பால் விநியோகம்.

45—வினா 6683—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பால்வள நிறுவனம் சென்னையில் நடமாடும் பால் விநியோக வாகனங்களின் மூலம் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் பால் விநியோகம் செய்ய திட்டம் வகுத்துள்ளதா ?

விடை—இல்லை.

சேதுபதி வாழ்ந்த அரண்மனையில் ஒலி, ஒளி காட்சி அமைத்தல்.

46—வினா 6750—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் சேதுபதி வாழ்ந்த அரண்மனைக்குள் இருக்கும் '' சங்கரவிங்க விலாஸ் '' என்ற சிறப்பு வாய்ந்த இடத்தில் ஒலி, ஒளி காட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—இல்லை.

பறிமுதல் செய்யப்பட்ட போலி ரேசன் கார்டுகள்.

47—வினா 6777—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ள போலி ரேஷன் கார்டுகள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

தமிழ்நாட்டில் 30—9—1985 வரை கீழ்க்கண்டவாறு போலி ரேஷன் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1980 .. .. .. | 1,06,523 |
| 1981 .. .. | 4,66,891 |
| 1982 .. .. .. | 6,129 |
| 1983 .. .. .. | 9,191 |
| 1984 .. .. .. | 41,642 |
| 1985 (30—9—1985 வரை) .. .. .. | 22,815 |

[1986 ஏப்ரல் 25

தஞ்சையில் விமான நிலையம் அமைத்தல்.

48—வினா 6862—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை. இக்கேள்விக்கு இடமில்லை.

வால்பாறையை சுற்றுலா மையமாக்குதல்.

49—வினா 6970—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையை சுற்றுலா மையமாக மாற்ற அரசிடம் ஏதாவது செயல் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல் படுத்தப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி மலை முதல் கட்டமாக "மாவட்ட உலாத்தலமாக" அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இரண்டாம் கட்டமாக, வால் பாறையை அபிவிருத்தி செய்யலாமா என்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

முசிறி நச்சலூர் வழித்தடத்தில் அதிகப் பேருந்துகள் விடல்.

50—வினா 6999—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறியில் இருந்து குளித்தலை, பேட்டைவாய்த்தலை வழியாக நச்சலூருக்கு விடப்பட்டுள்ளப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?



1986 ஏப்ரல் 25]

விடை—(அ) தற்சமயம் மேற்படி வழித்தடத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

குறிப்பு : [ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பெரம்பலூர் ஒன்றிய அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் பள்ளி ஆசிரியர்களால் தண்டிக்கப் பெற்றுள்ளது.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் பெரம்பலூர் ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப்பள்ளியில் 11-வது வகுப்பில் படித்து வந்த மணி என்பவருடைய மகன் தமிழ்ச்செல்வன் என்ற மாணவனை பள்ளி தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர் களும் மூங்கில் தடியாலும் காலணியாலும் தாக்கி, தனி அறையில் பூட்டி வைத்து, அடித்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். அந்த மாணவன் ஒரு உயர் ஜாதி பெண்ணை காதலித்தான் என்பதற் காக 22-3-86, 23-3-86 மற்றும் 24-3-86 ஆகிய நாட்களில் தனி அறையில் பூட்டி வைத்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக பலத்த காயமடைந்த அந்த மாணவன் அவனுடைய பெற்றோரால் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, சிகிச்சை செய்யப்பட்டு, குளுக்கோஸ் எல்லாம் ஏற்றப் பட்டு, இந்த நிலையில் அந்த மாணவன் திடீரென்று இறந்து விட்டான்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி கேட்டீர்கள், அனுமதி அளித்து, அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள், இதற்கு மேல் வேண்டாம்.

*திரு. டி.ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே அரசாங்கத் தரப்பிலிருந்து அதற்கு பதில் வரவில்லையே; ஒரு அரிசன மாணவன் இறந்திருக்கிறான். அதற்கு என்ன பதில் என்பதைச் சொல்ல வேண்டாமா?

MR SPEAKER: The hon. Member cannot compel me to get an answer. I have given an opportunity to the Member.

[1986 ஏப்ரல் 25

(ஆ) புதுக்கோட்டை காவேரி நூற்பாலையை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது.

திரு. ஜே. முகம்மதுகனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி நூற்பாலையை வருகிற 30–4–86 அன்று மூடப்போவதாகத் தெரிகிறது. காவேரி நூற்பாலையை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்து நடத்தி, அங்கே பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இந்த அரசு தொடர்ந்து வேலை கொடுக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

(இ) ஜனநாயக முன்னணி மாதர் சங்கக் கோரிக்கைகள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நேற்றைய தினம் ஜனநாயக முன்னணி மாதர் சங்கத்தைச் சேர்ந்த 250 க்கு மேற்பட்ட பெண்கள் தங்களுடைய கோரிக்கையை வைத்து இந்த அரசிடம் முறையிட கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்தார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை பற்றி இன்று காலையில் என்னுடைய அறையிலே கேட்கப்பட்டு, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் கேட்டார்கள். அப்போது அவை முன்னவர் அவர்களும் இருந்தார்கள். இது மறுக்கப்பட்டு விட்டது. மீண்டும் இங்கே எழுப்ப வேண்டியதில்லை. வேண்டுமானால் போலீஸ் மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொரு இன்சிடன்டாக இங்கே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் தெரிவித்துக் கொண்டிருக்க முடியாது.

இன்றைக்கு காலையிலேயே நீங்கள் கேட்டீர்கள், திரு ஹேமச்சந்திரன் அவர்களும் கேட்டார்கள். அப்போது அவை முன்னவர் அவர்களும் என்னுடைய அறையிலேயே இருந்தார்கள். எனவே அப்போதே வேண்டாம் என்று சொல்லி மறுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) இது பற்றி மேலும் பேச வேண்டுமானால் என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசிக் கொள்ளலாம். நீங்கள் கேட்பது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது என்று அப்போதே சொல்லி விட்டேன். எனவே மீண்டும் அதை அவையிலே எழுப்ப மாட்டீர்கள் என்று எண்ணினேன். இப்போது நீங்கள் அதையே இங்கே எழுப்ப முயல்வது அவசியமில்லை.

ஈ. பேரவைத் தலைவருக்கு நீதி மன்றத்திலிருந்து வரும் சம்மன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, சபாநாயகர் என்ற முறையில் தாங்கள் சிறப்பாக அறிவீர்கள், சட்டசபையினுடைய ப்ரசிஜரை, சட்டசபையினுடைய ப்ரசீஜர்



1986 ஏப்ரல் 25] [திரு. அ. ரகுமான்கான்]

விதிமுறைகள், ரூல்ஸ் ஆகியவற்றில் பிரச்சினைகள் ஏற்படுமேயானால் தாராளமாக ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம் என்று இருக்கிறது. 32-வது பக்கத்தில் 92-வது விதியின் படி

'A member, while speaking must not—

(i) give is opinion about or refer to any matter on which a judicial decision is pending.

(vii) reflect upon the conduct of President or any Governor or any Court of Justice or use the Governor's or President's name for the purpose of influencing a debate

என்று இருக்கிறது. ஆகவே கவர்னருடைய காண்டக்ட் பற்றி இங்கே பேசக் கூடாது என்று நேற்றே எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். இது மிக முக்கியமான பிரச்சினை, எனவே தயவு செய்து கேட்க வேண்டும். conduct of any Court of Justice பற்றியும் இங்கே பேசக்கூடாது. சபைக் குறிப்பில் அது பற்றிய விளக்கங்கள் இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போகவில்லை. தங்கள் சம்பந்தமான அந்த வழக்கு குறித்து நான் பேசவில்லை. அது சப்ஜீடிஸ் என்பதை நான் அறிவேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது ஒன்றுதான். நீதிமன்றம் இது சம்பந்தமாக ஏதாவது சம்மன் கொடுத்தால் அவையின் நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதை நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டராகவே கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் இதைக் கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேன். செய்தித் தாளில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பொதுவாக ஒரு ஐயப்பாட்டை எழுப்பிஇருக்கிறார்கள். எனவே பொதுவாக அந்த ஐயப்பாட்டுக்குப் பதில் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பத்திரிகைச் செய்தி அல்ல. ரிட் நம்பரையே நான் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக நம்முடைய அவையிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகிற ஒரு வரைமுறையைச் சொல்கிறேன். நீதிமன்றத்திலேயிருந்து ஏதாவது இங்கே சம்மன் வருமேயானால் அதை ஏற்றுக் கொள்வது கிடையாது. வாங்குவது கிடையாது

(உ) கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலை குறித்து

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். நாங்கள் அதைப் பாராட்டுகிறோம். நேற்றைய தினம் தமிழகத்தினுடைய விவசாயிகள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்கும் ஒரு வரையறையை வைத்துக் கொள்ள வேண்டும். நேற்று அரை மணி நேரம் இதைப்பற்றி எழுப்பி இருக்கிறோம். தமிழ்நாட்டில் 5 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நினைத்துக் கொள்ள வேண்டும். இங்கேயுள்ள கரும்பு விவசாயிகளை மட்டும் நினைக்கிறீர்கள். இந்திய விவசாயிகளையும் மனதில் வையுங்கள். அரை மணி நேரம் பேசியாகிவிட்டது. இந்த அவையில் நீங்கள் மூத்த உறுப்பினர். எனவே தயவு செய்து அமர வேண்டும்.

(முற்பகல் 10-30)

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்லுகிறேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமுமே முதலமைச்சருடைய கவனத்திற்குப் போகிறது. அதனால் தனியாக தெரிவிக்க வேண்டாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : அவர்களே அனுமதி கொடுக்கிறார்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பேச நான்தான் அனுமதி கொடுக்க வேண்டும். உட்காருங்கள்.

## 3. கவன ஈர்ப்புகள்

(அ) சென்னை பேசின் பிரிட்ஜ் குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன் மா. மணிமாறன், பரிதி இளம் வழுதி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "20-3-1986 அன்று சென்னை, பேசின் பிரிட்ஜ் அருகேயுள்ள சிவராஜபுரம், சுந்தராபுரம் ஆகிய குடிசைப் பகுதிகளில்





ஏற்பட்ட தீ விபத்தால் ஏராளமான குடிசைகள் எரிந்து போனதுடன், சுமார் 162 குடும்பங்கள் பாதிக்கப்பட்டும், ஒருவர் தீ காயங்களுடன் கவலைக்கிடமாகவும் உள்ளதால் அப் பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை, கோட்டை-தண்டையார்பேட்டை வட்டாரத்தைச் சார்ந்த புளியந்தோப்பு பகுதியில் உள்ள சிவராஜபுரம் என்ற இடத்தில் 20—3—1986 அன்று மாலை 4–15 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. இத் தீ விபத்தில் 38 குடிசைகள் பாதிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட குடிசைகளில் 162 குடும்பங்கள் வசித்து வந்தன. இந்தத் தீ விபத்தில் சிவராஜபுரம் 2-வது வார்ட் 3-வது தெரு கதவு எண் 4 இல் வசித்து வந்த திரு செல்லன், த/பெ. வேதாசலம் (வயது 80) தீக்காயமுற்று சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்று (20—3—1986) இரவு காலமானார். இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரண உதவிகளை வழங்கிட சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதிக்கப்பட்டோருக்கு 25—3—1986 அன்று மாண்புமிகு அமைச்சர் (சமூக நலத் துறை) அவர்கள் முன்னிலையில் நிவாரணத் தொகை, அரிசி, துணி ஆகியவைகள் வழங்கப்பட்டன.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 38 என்றும், குடிசைகள் 162 என்றும் சொன்னார்கள். இப்படி பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டதா? அவர்களுக்கு அளிக்கப்பட்ட அந்த நிவாரணத் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட 162 குடிசைகளுக்கும் 11,400 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த தீ விபத்தில் உயிர் இழந்தவருடைய குடும்பத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அடிக்கடி தீ பிடித்துக் கொண்டேயிருக்கிறது. குடிசைகளில் தீ பிடிக்காமல் இருப்பதற்கு நல்ல வழி வகைகள் இருக்

இன்றன. எப்படி என்றால் தென்னங்கீற்று வேயப்பட்ட குடிசைகளில் தற்போது ஒருவித இரசாயனத்தை, இரசாயனக் கலவையை பூசி வைத்தால் தீ பிடிக்காது என்றும் அந்த கீற்றுகள் நீண்ட நாள் அழியாது என்றும் கூறப்படுகிறது. அந்த இரசாயனக் கலவையை வாங்கி எங்கெங்கே தென்னங்கீற்று குடிசைப் பகுதிகள் இருக்கின்றனவோ, அங்கே அனைவருக்கும் இலவசமாக வழங்கி அதைப் பூசித்தர அரசு ஏற்பாடு செய்யுமா? அது மட்டும் அல்லாமல் குடிசைகள் தீ பிடித்தால் தீ பிடித்து எரிந்து முடித்த பிறகுதான் அங்கே தீ அணைப்பு வண்டிகள் வருகின்றனவே. ஆகவே எங்கெங்கே குடிசைகள் இருக்கின்றனவோ அங்கெங்கேயெல்லாம் தீ அணைப்பு நிலையம் வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தீ பிடிக்காது தடுப்பதற்கு இரசாயனக் கலவையை, ஒரு பொருளை உபயோகிக்கலாம் என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆனால் அந்த இரசாயனப் பொருளின் விலை என்ன? அது கீற்றுகளை விட விலை அதிகமாக இருக்கிறதா இல்லையா அல்லது ஓடுகளை விட அதிகமாகப் போய்விடுமா அல்லது குறையுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் செய்ய வேண்டிய ஒன்று. அப்படியே செய்தாலும் கூட, அது இலவசமாக அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். இலவசமாக கொடுப்பதற்கு நிதி ஆதாரம் இடம் தராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குடிசைப் பகுதி ஒவ்வொன்றிற்கும் தீயணைப்பு நிலையம் வைக்கவேண்டும் என்பது இயலாதது. பரவலாக, தீ அணைப்பு நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி வருகிறோம். 5, 10 நிமிடங்களுக்குள் தீ பிடித்த இடத்திற்கு வந்து சேருகின்ற அளவிற்கு பல்வேறு நவீன கருவி முறைகளையும், தொலைபேசி இணைப்பையும் கொடுத்து ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே குடிசை பகுதியில் தீ பிடித்து, அந்தச் செய்தி போய் அந்த வண்டிகள் வந்து சேருவதற்குள் குறிப்பிட்ட பகுதிகள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு விடுகின்றன. ஆகவே விரைவுபடுத்துகிற அளவிற்கு எவ்வளவு விரைவுபடுத்த வேண்டுமோ அவ்வளவு விரைவுபடுத்துவதற்கு சென்னையின் பல்வேறு பகுதிகளில் பகுதி பகுதியாகப் பிரித்து தீயணைப்பு நிலையங்கள் ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இறந்த காலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களின் கணக்கையெல்லாம் எடுத்துப்பார்த்து அதற்கேற்ப நிறைய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிலையங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, இப்படி குடிசைப் பகுதிகளில் தீப்பிடிக்கிற காரணத்தாலே ஏற்கனவே அந்தப் பகுதிகளின் அருகில் தீயணைப்புப் படையை வைத்து இருந்தார்கள்.



அது இப்போது எடுக்கப்பட்டு விட்டது. ஆகவே அதைச் சுற்றிலும் ஏராளமான குடிசைகள் இருப்பதால் மறுபடியும் அந்தத் தீயணைப்புப் படையை அங்கே வைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படி ஏற்கனவே ஏராளமாக குடிசைகள் இருந்து தீயணைப்பு நிலையமும் இருந்து அது எடுக்கப்பட்டிருந்தால் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்தின் அடிப்படையில் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**(ஆ) சென்னை மாநகராட்சி இடுகாடு—சுடுகாடுகளில் ஈமச்சடங்குக்கு வசூலிக்கப்பெறும் கட்டணம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், அ. ரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ''சென்னை மாநகராட்சி அதன் பொறுப்பிலுள்ள மயானங்களில் ஈமச்சடங்கு நடத்துவதற்கான கட்டணத்தை மிக அதிகமாக உயர்த்தியுள்ளதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் பிணங்களை எரிப்பதற்கும், புதைப்பதற்கும் மாநகராட்சியால் 1981 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டு 9—2—1986 வரை வசூலிக்கப்பட்ட கட்டண விகிதங்களும், மாநகராட்சி தீர்மானம் எண் 1205/85 நாள் 25—11—1985ன் படி 9—2—1986 முதல் அமுல் செய்யப்பட்டுள்ள திருத்திய கட்டணம் விகிதமும் பின்வருமாறு :—

| | பழைய கட்டண விகிதம். | திருத்திய கட்டண விகிதம். |
|---|---|---|
| 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் எரிப்பதற்கு .. .. | ரூ. 100 | ரூ. 185 |
| 12 வயதிற்கு குறைந்தவர்கள் எரிப்பதற்கு .. .. | 60 | ºº0 |

| | பழைய கட்டண விகிதம். | திருத்திய கட்டண விகிதம். |
|---|---|---|
| 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் புதைப்பதற்கு .. | 15 | 30 |
| 12 வயதிற்கு குறைந்தவர்கள் புதைப்பதற்கு .. | 10 | 20 |

மேற்படி திருத்திய கட்டணத்திலிருந்து, எரிப்பதற்காக ரூ. 10-ம் புதைப்பதற்காக ரூ. 5-ம் தான் சுடுகாடு இடுகாடுகளில் துப்புரவு பணி கட்டணமாக சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தப் படுகிறது. மீதம் உள்ள தொகை எரிபொருள் வாங்க சுடுகாடு இடுகாடு பணியாளர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது.

2. கடந்த நான்கு ஆண்டுகளில் எரிக்க பயன்படுத்தப்படும் விறகு, வறட்டி, மண்ணெண்ணெய் மற்றும் இப்பொருள் களை கொண்டுவர ஆகும் வாகனச் செலவு ஆகியவை மிக அதிக அளவில் உயர்ந்து விட்டபடியால் மேற்கூறியவாறு கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் 12 வயதிற்கு மேற்பட்டவர்களைப் புதைப் பதற்கு ரூ. 15 என்று இருந்ததை ரூ. 30 ஆக உயர்த்தப்பட் டிருக்கிறது. அதைப்போல 12 வயதிற்கு குறைந்தவர்களைப் புதைப்பதற்கு ரூ. 10 என்று இருந்த கட்டணத்தை ரூ. 20 ஆக வும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போல எரிப்பதற்கு ரூ. 100ஆக இருந்த கட்டணம் ரூ. 185 ஆக உயர்த்தியிருக்கிறார் கள். இப்படி கிட்டத்தட்ட 100 சதவீதம் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கிற இந்த நிலையில் சென்னை நகரத்தில் வசதியுள்ளவர்களைப் பொறுத்தவரையில் பிரச்னையில்லை. ஆனால் சென்னை நகரில் வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர் கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தெருக்களில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மயானங்களுக்கு செல்லக் கூடிய நேரத்தில் இந்த 100 சதவீத கட்டண உயர்வால் நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே வறுமைக்கோட் டிற்கு கீழே இருப்பவர்களை பாதுகாக்கக்கூடிய முறையிலே இந்தக் கட்டணத்தைக் குறைத்து வேண்டுமானால் 10 சதவீதம் அல்லது 5 சதவீதம் மட்டும் அதனை உயர்த்துகிற நடவடிக் கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் இதுபற்றி கேள்வி கேட்டு அதற்கு விரிவாக பதில் அளித்திருக்கிறேன். ஏற்பட்டிருக்கிற விலைவாசி





உயர்வில் வண்டி வாகனங்களின் கூலி உயர்வு போன்றவைகள்தான் இந்த கட்டண உயர்விற்கு காரணம். வேறு எதுவுமில்லை. மாநகராட்சியின் வருமானத்தை எதிர்பார்த்து இதை உயர்த்த வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, செத்தவர் களைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கும் உள்ள கட்டணம் உயர்த் தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ஹேமச்சந்திரன் சொன்ன தைப் போல தமிழகத்தில்தான் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகம். இரண்டாவது மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அவ்வப்போது உயர்த்துகிற வரி விதிப்புகள் இருக்கின்றன. ஆகவே உயிரோடு இருக்கிற போதுதான் இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கிறதே, செத்து சுடுகாட்டிற்குப் போனாலாவது நிம்மதியாக இருக்கலாமென்று போனால் அங்கேயும் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே அரசிடமிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஆந்திரா முதலமைச்சர் என். டி. ஆர். அவர்கள் இலவச மொட்டை கொண்டு வந்ததைப் போல, நம்முடைய முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததைப் போல இலவசமாக எரிக்கிற, புதைக்கிற திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றுகிற வெட்டியான் போன்றவர்களுக் கெல்லாம் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. விறகு, எண்ணெய் இவைகள் எல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் இலவசமாக கிடைக்கிற நேரத்தில் இதையும் இலவசமாகச் செய்யலாம்.

## 4. அறிக்கை அளித்தல்.

### மதிப்பீட்டுக் குழு.

திரு. இரா. முத்தையா : தலைவர் அவர்களே, சாலைகளும் பாலங்களும் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கையை (எட்டாவது சட்ட மன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(முற்பகல் 10–40)

5. வரவு செலவுத் திட்டம் 1986-87, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள கோயில்களை சீர்படுத்தியும் சென்னை போன்ற நகரங்களில் கோவிலை ஒட்டியது போல் திருமணக்கூடங்கள் கட்டித் தரவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,92,21,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,92,21,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

ஆ. கோரிக்கை எண். 25—சின்கோனா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,88,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".



600 008

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, சின்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதை குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,88,27,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,88,27,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,88,27,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

(இ) கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,98,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,98,49,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,98,49,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

[1986 ஏப்ரல் 25

(ஈ) கோரிக்கை எண். 47.

செய்தி, சுற்றுலா திரைப்பட தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,07,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ".

திரு. ஜெ. ராஜாபாபு : தலைவர் அவர்களே, போளூர் தொகுதி ஜமுனாமாத்தூரில் சுற்றுலா மையம் அமைத்தல் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 47-ன் செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,07,72,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, எல்லா அரசியல் கட்சிக்காரர்கள் அவரவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளை மற்றும் அரசியல் விமர்சனங்கள் செய்யும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் காண்பிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,07,72,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் ".

(உ)கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,16,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,16,12,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".



1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், வனத்துறை ஆகிய இந்தத் துறைகளின் மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் *அரசின் சார்பிலே இந்த அவையில் அச்சடிக்கப்பெற்று வைக்கப்பெற்று இருக்கின்றன. அவைகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவை ஏடுகளில் பதிவு செய்து, அதை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். இறுதியாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்டதற்குப் பிறகு, ஏதாவது விளக்கம் அளிக்க வேண்டிய செய்திகள் இருந்தால், நான் பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத்துறை பற்றிய இந்தக் குறிப்பில் ஒரு சிறிய திருத்தத்தையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். பக்கம் 29-ல், பத்தி 14, உட்பகுதி 4-ல், 1,430 கிலோ மீட்டர் என்று இருப்பதை 610 கிலோ மீட்டர் என்றும், மரக்கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு அளித்தல்—302.5 இலட்சம் என்று இருப்பதை 287 இலட்சம் என்றும் திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். பத்தி 14, உட்பகுதி 6-ல் மரக்கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு அளித்தல்—28.70 மில்லியன் என்று இருப்பதை 287 இலட்சம் என்று திருத்திக் கொள்ளவும்.

பொழுது போக்குக் காடுகள்—2.40 மில்லியன் என்று இருப்பதை 24 இலட்சம் என்று திருத்திக் கொள்ளவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின், இந்து சமய அறநிலையத்துறை, செய்தித் துறை, காட்டு வளத்துறை, செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் துறை, காட்டு இலாக்கா போன்ற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்து அறநிலையத் துறையை எடுத்துக் கொண்டால் ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால் most exploited and misused department என்று சொல்ல வேண்டும்.

---

* 735, 770, 787, 847. 862-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V VI, VIIஆக அச்சிடப் பெற்றுள்ளன.

இன்றைக்கு இருக்கின்ற துறைகளிலே அதிகமாகச் சுரண்டப்படுகிற, அதிகமாக துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்ற துறை, இந்து அறநிலையத் துறை. 1959-லே சட்டம் கொண்டு வந்தாலும்கூட அந்தச் சட்டத்திலே அனைத்து திருக்கோயில்களும், அனைத்து அறக் கட்டளைகளும் இந்த அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரவில்லை. இன்றைக்கும் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே நடத்தப்படாமல் இருக்கின்ற கோயில்கள் இந்த தமிழகத்திலே, எல்லா கிராமங்களிலும் இருக்கின்றன. இன்றைக்குப் பெரிய கோயில்களை, கோயில்களுக்குச் சொத்து இருப்பதைத்தான் அரசாங்கம் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டிருக்கிறது. கிராமங்களிலே, ஏன் நகரங்களிலே கூட அன்றாடம் பூஜை செய்ய முடியாமல், சொத்து இருந்தும் கூட அதற்கு திருவிழாக்கள் நடத்த முடியாமல், நல்ல முறையிலே பாதுகாக்க முடியாமல் இருக்கின்ற, அவற்றினுடைய சிகரங்கள் இன்று கீழே விழுந்து மண்ணோடு மண்ணாகி இருக்கின்ற திருக்கோயில்கள் கூட அதிகமாக இருக்கின்றன. 100 ஏக்கர்களுக்கு நிலம் இருக்கின்ற கோயில்கள் கூட எந்தெந்த நேரத்திலே அவற்றுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமோ, எந்தெந்த நேரத்திலே புதுப்பிக்கப்பட வேண்டுமோ, அவைகள் செய்யப்படாததோடு ஆண்டு தோறும் வெள்ளையடிக்கின்ற பணிகூட சரிவர நடைபெறுவதில்லை. இன்றைக்கு நான் சொல்வதெல்லாம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கோயில்களும் இந்த அறநிலையத் துறையின் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அந்தத் திருக்கோயில்களுக்கு சொத்து இருந்தாலும், சொத்து இல்லாவிட்டாலும், அந்தக் கோயில்களை— கிராமங்களில் இருக்கின்ற கோயில்களைக் கூட— அதனுடைய புனிதத் தன்மையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. எனவே அனைத்துக் கோயில்களும் விடுபட்டு போகாமல், கிராம தேவதைக் கோயில்களானாலும், இந்த அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும்.

இன்றைக்குப் பெரிய, வருமானம் இருக்கக்கூடிய கோயில்கள் கூட, அந்தக் கோயில்களுக்கு வரும் யாத்திரிகர்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலைமை இல்லை. என்னுடைய தொகுதியிலே நல்ல வருமானம் வரக்கூடிய அருள்மிகு கருமாரி அம்மன் திருக்கோயில் இருக்கிறது. அந்தக் கோயில்களுக்கு வருகின்ற யாத்திரிகர்கள் முறையாக செல்வதற்கு கட்டிடங்கள் கட்டி அதன் மூலமாக யாத்திரிகர்களை விட வேண்டுமென்று நான் போன வருடம் இதே மானியக் கோரிக்கையிலே கேட்டு இருந்தேன். அதற்குத் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. திருவிழா நேரங்களில் அங்கே வருகின்ற யாத்திரிகர்கள், அங்கே அவர்கள் முறையாக உள்ளே செல்லக்கூடிய தன்மை இல்லாமல் இருக்கிறது.





(முற்பகல் 10—50)

அது மட்டும் அல்ல, அங்கே வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறது. திருவேற்காடு நகரியம் ஒரு சிறிய பேரூராட்சி நகரியம். அந்த நகரியத்தின் நிதிநிலைமை குறைவு. ஆனால் இந்த யாத்திரிகர்களிடமிருந்து வருமானம் வருகின்ற நிலையில் அந்த கோயிலுக்கு வருகின்ற வாகனங்களை நல்ல முறையில் நிறுத்துவதற்கு—காரை நிறுத்துவதற்கு, சைக்கிள் போன்ற வாகனங்களை நிறுத்துவதற்கு—ஸ்டாண்டு இல்லை. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ளுவது எல்லாம் இந்த திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலுக்கு வருகின்ற வாகனங்களுக்கு-காரை நிறுத்துவதற்கு, சைக்கிள் போன்ற வாகனங்களை நிறுத்துவதற்கு—ஸ்டாண்டுகளை திருக்கோவில் செய்து தர வேண்டும் என்று இன்றைக்கு கேட்டுக் கொள்கிறேன். அதை இன்றைக்கு நகரியம் செய்யட்டும் என்று விட்டு விட்டு இருக்கிறார்கள். அதை உடனடியாக செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல, அங்கே ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. கார்கள் செல்லுவதற்கு கூட இடம் இல்லாத அளவுக்கு அங்கே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அங்கே நகரியத்தின், கடைகள் அல்லாமல், திருக்கோவில் கடைகள் அல்லாமல் தனியார்களும் சுரண்டக் கூடிய அளவுக்கு நிறைய கடைகள் இருக்கின்றன. அந்த தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். அங்கே பூசை சாமான்களை விற்பதற்கு திருக்கோவில் சார்பாக அல்லது நகரியம் சார்பாக சிறு கடைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு என்னுடைய பூவிருந்தவல்லியில் வரதராஜ பெருமாள் கோவில் இருக்கிறது. அதனுடைய திருக்குளத்தில்—நான் ஏற்கனவே சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது பேசும் போது சொல்லியிருக்கிறேன்—அது ஒரு தனி நபர் ஆதிக்கத்தில் இருக்கிறது. அவர் நாளுக்கு நாள் அதிகமாக ஆக்கிரமிப்புகளை செய்துகொண்டு இருக்கிறாரே தவிர அவர் மீது வழக்குப் போடுவதாக சொன்னார்கள். வழக்கு போட்டு அவருடைய ஆக்கிரமிப்புகளை—உடனடியாக அந்த கோரிக்கையை ஏற்று—அந்த திருக்குளத்தில் இருப்பவரை அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த திருக்கோவில்களில் சுரண்டப்படுகின்றன, துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்று சொன்னேன். இந்த திருக்கோவில்களிலிருந்து இன்றைக்கு அதிகாரிகளாலும் சுரண்டப்படுகின்றன. அது ஓரளவுக்கு குறைதான்.

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1986 ஏப்ரல் 25

இன்றைக்கு பரம்பரை பெற்றுள்ள கோவில்களில் அதிகமாக சுரண்டப்படுகின்ற நிலையை நாம் பார்க்கிறோம். அங்கே இருக்கின்ற திருக் கோவில்களில் இருக்கின்ற சொத்துக்கள், நிலங்கள் அனைத்தும் அங்கே இருப்பவர்களால் டிரஸ் பாஸ் செய்யப்பட்டு தர்ம கர்த்தா அவர்களால் அறநிலையத் துறை அனுமதி இல்லாமல் விற்கப்பட்டு பல இடங்களில் கட்டிடங்கள் கட்டி தனி நபர்கள் பெரும் பகுதியில் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த பரம்பரை முறையை ஒழிப்பதற்கு சட்டம் கொண்டு வர அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியில், என்னுடைய மாவட்டத்தில் பல பெரிய திருக் கோவில்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் திருநின்றவூர் கிராமத்தில் பக்தவத்சல பெருமாள் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு 200, 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. திருமழிசை கிராமத்தில் உள்ள பழமை பெற்ற ஜெகந்நாத பெருமாள் திருக் கோவில் இருக்கிறது. அதே போல் பூவிருந்தவல்லியில் திருக்கத்தியினுடைய வரதராஜ பெருமாள் கோவில் இருக்கிறது. திருவேற்காட்டில் வேத சன்னீஸ்வரர் திருக்கோவில் இருக்கிறது. திருநின்றவூரில் பிரஜா ஈஸ்வரர் திருக்கோவில் இருக்கிறது. இந்த கோவிலில் இருக்கின்ற தர்ம கர்த்தா—அது ஒரு ''டெம்பிள் ஸ்கீம்'' என்று சொல்லுவார்கள். கோயம்புத்தூரில் இருக்கிறார். 20, 30 வருடம் ஆகிறது. அவர் இன்று வரை அந்த கோவிலை வந்து பார்த்தது இல்லை. அந்தக் கோவிலுக்கு 29 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த சொத்துக்களுக்கு ஆளே இல்லை. 10 ஆண்டுகளாக அந்த கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று பக்தர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற அறங்காவலர் அவர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை. என்னுடைய வேண்டுகோள் எல்லாம் இந்த கும்பாபிஷேகம் செய்கின்ற வேலையை அறநிலையத் துறையே ஏற்றுக் கொண்டு அங்கே இருக்கின்ற பாடல் பெற்ற கோவிலுக்கு இந்த கும்பாபிஷேகத்தை செய்யும் பணியை அறநிலையத் துறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என் தொகுதியில் உள்ள பூவிருந்தவல்லி கிராமத்தில் உள்ள பெருமாள் கோவிலில் உள்ள சிலைகள் திருடு போய் 2 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இதுவரையில் அந்த மூலஸ்தான சிலைகள் இல்லை. ஆகவே அங்கே பூஜைகள் நடத்த முடியவில்லை. அந்த சிலைகளைக் கண்டுபிடித்து கொடுப்பதற்கு காவல் துறை அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்ல நான் ஆசைப் படுகிறேன்.

இது குறித்த ஒரு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,



1986 ஏப்ரல் 25] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

இதுமட்டுமல்லாமல், இன்றும் நகரங்களிலே வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடைகள் இருக்கின்றன. கோவில் நிலங்களை டிரஸ்பாஸ் செய்து, ஆக்கிரமிப்பை செய்து அங்கே வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள வீட்டு மனைகளை ஆக்கிரமிப்பு செய்து கொண்டவர்கள், அந்த வீட்டு மனைகளை குறைந்த வாடகைக்கு எடுத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம், ஒன்று அவர்களுக்கு வாடகையை உயர்த்தி சரியான முறையில் வசூல் செய்ய வேண்டும். இல்லையென்றால் அந்த வீட்டு மனைகளை அறநிலையத் துறையே ஏலத்திலோ, அல்லது யார் யார் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு விற்பனை செய்வதற்கோ முன் வர வேண்டும்.

இன்றைக்குக் கிராமப் பகுதிகளில் இந்த திருக்கோவிலுக்குப் பக்கத்திலே வீடு இல்லாமல் மக்கள் இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மத்திய தர ஏழை மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் இல்லாமல் தெருக்களில் கூட சிறிய குடிசைகள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். பூவிருந்தவல்லி நகரியத்திலே பல தெருக்களிலே இப்படிப்பட்ட குடிசைகள் இருக்கின்றன. வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில், அதைச் சுற்றிலும் வீடுகள் இருக்கின்ற நிலைமையைப் போக்க, அந்தக் கோவிலுக்கு அருகாமையில் இருக்கின்ற, நிலங்களை ஏழைகளுக்கு அறநிலையத் துறை இன்றைக்கு விற்பனை செய்தால் கூட, அதை வாங்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே அதை விற்பனை செய்ய வேண்டும்.

விவசாய நிலங்கள் இருக்கின்றன. குத்தகை வருவதே இல்லை. விவசாய நிலங்கள், எங்கள் பகுதியிலே அனைத்து ஆலயங்களுக்கும் 100 ஏக்கருக்கு மேல் நிலங்கள் இருக்கின்றன. அந்த கோயில்களைப் பார்த்தோமேயானால், ஏழை கோயில்களே நாட்டிலே இல்லை என்ற அளவிற்கு காட்சியளிக்கின்றன. ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்தக் கோவில்களில் குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து குத்தகையை, வசூல் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி வசூல் செய்ய முடியா விட்டால் அந்த நிலங்களை குத்தகைதாரர்களுக்குத் தவணை முறையில் விற்பனை செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து, விவசாயத்துறை மூலமாகவோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ, கடன் கொடுத்து அந்த நிலங்களை குத்தகைதாரர்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டிய அந்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவர வேண்டும். அப்படி வந்தால் தான் இந்த நிலங்கள் எல்லாம் சரியாகப் பராமரிக்கப்படும். அல்லது அந்தந்த குத்தகைதாரர்களுக்கு விற்கப்பட்டால்தான், அங்கே திருக்கோயில் வருமானத்தை வைத்து, திருக்கோயிலை நடத்த முடியும்.

மடங்கள் இருக்கின்றன. அறக்கட்டளைகள் நம் கட்டுப்பாட்டிற்குள் வராமல் இருக்கின்றன. இந்து அறநிலையச் சட்டத்தில் அதற்குரிய திருத்தம் கொண்டுவந்து, இன்றைக்கு சமுதாய மாறுதல் என்ற முறையில், சமூகப் புரட்சியை உருவாக்க முடியும். எனவே, இந்து அறநிலையச் சட்டத்தை வெகுவாக மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில், என் பகுதியில் செம்பரம்பாக்கம் ஏரியிருக்கிறது. அங்கே ஒரு சுற்றுலா மையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே பெரிய ஏரி இருக்கிற காரணத்தால், அதை நல்ல முறையிலே ஒரு சுற்றுலா மையமாக அமைக்க வேண்டும். அது சென்னை மாநகருக்கு வெகு அருகாமையில் இருக்கிறது. இங்கே வருகின்ற வெளிநாட்டுப் பயணிகளும், ஏன். உள் நாட்டுப் பயணிகளும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு இது வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு, நன்றிகூறி முடிக்கிறேன், ஜெய்ஹிந்த் !

**திரு. கோ. பெருமாள் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இந்து அறநிலையத் துறை, செய்தித் துறை, மற்றும் வனத்துறை இவைகளின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பினை நல்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11—00)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்குத் தமிழகத்தைச் சீரும் சிறப்புமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிற இந்தக் கால கட்டத்தில் இந்து அறநிலையத் துறை என்பது மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்களுடைய கையில் ஒப்படைக்கப்பட்டு ஒரு மறுமலர்ச்சியை இன்றைக்கு தமிழகத்திலே அது உருவாக்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியொரு மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தாலும் இந்த அரசு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுடைய தனிப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படாத அளவுக்கு அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் சமமாக்கி மதிக்கப்படுகிற நிலையில் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற அரசாக இருக்கிறது இந்த அரசு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஆலய ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. வருங்கால வைப்பு நிதித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு





ஆயுள்காப்பீட்டுக் கழக நிதியின் மூலமாக அறநிலையத் துறைக் கோயில்களிலே பணியாற்றுகிறவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இந்து மக்களின் ஆலய வழிபாட்டில் சிறப்பான மாறுதல்களை செய்தது மட்டுமல்லாமல் ஆலயங்கள் வழிபாட்டிற்கான இடங்கள் என்ற நிலை மாறி அவை பள்ளிக்கூடங்களாகவும், சமூக நலக் கூடங்களாகவும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளிவீசுகின்ற கூடங்களாகவும் மாறிக்கொண்டு வருகிற சூழ்நிலையை இந்த மானியக் கோரிக்கைக் குறிப்பைப் படிக்கின்ற போது நாம் காண முடிகிறது.

குறிப்பாக, பழனியாண்டவர் கோயில் மூலமாக கிட்டத்தட்ட 15 சமுதாய நலக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த மானியக் கோரிக்கை குறிப்புகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அந்த 16 சமூகக் கூடங்கள் மூலமாக ஏழை எளிய மக்கள், கைவிடப்பட்ட அனாதைக் குழந்தைகள் அங்கே அன்பகங்கள் என்ற பெயரால் காப்பாற்றப்பட்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, 2, 3 பாலிடெக்னிக்குகள், கல்லூரிகள் போன்றவை அந்தக் கோயில் அறநிலையத் துறையால் நடத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறபோது ஒரு காலத்திலே இந்து அறநிலையங்கள் சாமி கும்பிடுவதற்கு மட்டுந்தான் என்று இருந்த நிலை மாறி இன்றைக்கு அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் பயன்பெறுகின்ற முறையிலே மாற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை பழனிக்கோயிலோடு மட்டும் நிறுத்தி விடாமல் பக்கத்திலே இருக்கிற திருச்செந்தூர் கோயிலுக்கும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே அதிக வருமானத்தைக் கொண்ட இரண்டாவது கோயிலாக விளங்கிக்கொண்டிருப்பது திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோயிலாகும். அதை மனதிலே கொண்டு அங்கேயும் பள்ளிகள், மருத்துவக் கல்லூரியோ பொறியியல் கல்லூரியோ உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் குமரி மாவட்டத்திலே ஆலயத்தின் மூலமாக ஒரே ஒரு கல்லூரிதான் நடத்தப்படுகிறது. குமரி மாவட்டத்திலே நடத்தப்படுகிற அந்தக் கல்லூரியிலே குறிப்பாக பெண்கள் மட்டுந்தான் படிப்பதற்கு வசதி இருந்து வருகிறது என்பதை மனதிலே கொண்டு அறநிலையத்துறை மூலமாக குமரி மாவட்டத்திலே ஆண்களும் பயில்வதற்கு ஏற்றவகையிலே ஒரு கல்லூரியும் ஒரு மருத்துவக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ நிறுவித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் குமரி மாவட்டத்திலே அரசுத் துறையால் நடத்தப்படுகிற கல்லூரி ஒன்று கூட இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி அதையும் மனதிலே கொண்டு அங்கே பெருவாரியான படித்த மக்கள் வாழ்கின்ற பகுதியாக அந்த மாவட்டம் இருப்பதால் குமரி மாவட்டத்திலே அறநிலையத் துறையின் மூலமாக கல்லூரியை. அன்பகங்களை ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகிற விதத்திலே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மானியக் கோரிக்கையைப் படிக்கின்ற நேரத்தில், நீதிபதி மகராஜன், கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர்களது பரிந்துரைகளை ஏற்று, கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்றுவதற்கு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் உரிமை உண்டு என்ற நிலையை மாற்றி ஜாதிப் பாகுபாடு இன்றி, எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களும் அந்த அறநிலையத் துறையிலே இணைந்து பணியாற்ற ஒரு வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதனைப் பார்க்கிறபொழுது மிகவும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம், குறிப்பிட்ட சமுதாயத்தினருக்குத்தான் அது சொந்தம் என்றநிலை இருந்துவந்தது என்பதை இந்த நாடு அறியும். அதை மாற்றி இன்று ஆதிதிராவிட வகுப்பு மகனாக இருந்தாலும் அவனும் கோயில் அர்ச்சகராகப் பணியாற்றுகின்ற ஒரு நிலையை இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் இந்தத் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மறுமலர்ச்சியானது, இந்தத் தமிழ் மண்ணிலே ஜாதி வேறுபாட்டை அடியோடு அறுத்துக் களைவதற்கு உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற நிலையை உருவாக்கி, ஆதிதிராவிடர் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஏழை இந்துக்களுக்குத் திருமணம் செய்விக்கின்ற முறையில், திருமணம் ஒவ்வொன்றிற்கும் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து, இது வரையில் கிட்டத்தட்ட பத்து இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்து 1,245 திருமணங்கள் இந்த அரசால் நடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பார்க்கின்ற நேரத்தில், இன்றைக்கிருக்கின்ற சமுதாய அமைப்பிலே உள்ள வரதட்சிணைக் கொடுமைக்கு அடிக்கப்படுகின்ற சாவு மணியின் முதல் ஒலியாக இந்த ஒலி இருந்து கொண்டு இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் திட்டத்தின் மூலமாகப் புரட்சித் தலைவரவர்கள் இந்தச் சமுதார்யத்திலே இருக்கின்ற வரதட்சிணைக் கொடுமையை மாற்றுவதற்கு முன்னோடியாக விளங்குவதைப் பார்த்து, பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





இந்த நேரத்திலே, இந்த மானியக் கோரிக்கையிலே, திருச்சிக்குப் பக்கத்தில் இருக்கின்ற ஸ்ரீரங்கத்தில் கிட்டத்தட்ட ஒன்றே கால் கோடி ரூபாய் செலவில் இராஜகோபுரம் கட்டும் பணி முடிவடைந்திருப்பதாகத் தெளிவாகக் கூறுகிறது. அதைப்போன்றே, தென்காசியில் காசி விஸ்வநாதசுவாமி கோயிலில் 90 இலட்சம் ரூபாயில் இராஜகோபுரம் கட்டும் பணி தொடங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வது, இந்திய மக்கள் அனைவருக்கும் புண்ணியத் தலமாக விளங்குகின்ற எங்கள் குமரி மாவட்டத்தில் குமரிமுனையில் அமர்ந்திருக்கும் அன்னை பகவதி கோயிலுக்கு நீங்கள் இராஜகோபுரம் எழுப்பித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மன்றாடி உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று, குமரி மாவட்டத் திருக்கோயில்களிலே இருக்கின்ற குளங்கள், குறிப்பாக சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில், மருதூர் சுப்பிரமணியசுவாமி கோயில், கன்னியாகுமரியிலே உள்ள பகவதி அம்மன் கோயில் ஆகிய கோயில்களில் உள்ள குளங்கள் இன்றைக்கு மோசமான நிலையில் இருக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்தக் குளங்களில் தூர் வாங்கி, செம்மையான முறையில் செப்பனிட்டுத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தி, சுற்றுலாவைப் பொறுத்தவரையில் உள்ள இந்த மானியக் கோரிக்கை குமரி மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், முஸ்லீம் மக்களின் மனம் இன்பப்படும் விதத்திலே கிட்டத்தட்ட 4.10 இலட்சம் ரூபாய் செலவில் செய்குத்தம்பி பாவலருக்கு மணி மண்டபம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லத்தை நினைவகமாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மானியக் கோரிக்கை தெளிவாகக் காட்டுகிறது. குமரி முனையிலே அமைந்திருக்கின்ற காந்தி மண்டபத்தைப் புதுப்பிக்கின்ற பணியை இந்த அரசு ஏற்றிருக்கிறது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இந்த நேரத்தில் நான் வேறொன்றையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவரவர்களின் அரசு பரிந்துரை செய்ததன் மூலமாக இரண்டாண்டுகளுக்கு முன்னால் நாகர்கோயிலில் ஒரு வானொலி நிலையம் உருவாக்கித் தரப்பட்டது. இதைப்போல இரண்டாண்டுகளுக்குள்ளாக ஒரு தொலைக்காட்சி நிலையத்தை அங்கே நிறுவுவதற்காக மாநில அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, அந்தப் பரிந்துரையை மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கோ. பெருமாள் பிள்ளை] [1986 ஏப்ரல் 25

(முற்பகல் 11—10.)

அந்தக் கோரிக்கையினை ஏற்று, மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று, குறைந்த சக்தித் தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்களைத் தர்மபுரி, நாகர்கோவில், கடலூர் ஆகிய இடங்களிலும், உயர்சக்தி தொலைக் காட்சி நிலையம் ஒன்றை இரமேசுவரத்திலும் அமைக்கவும், ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட இரண்டாவது அலை வசதியை சென்னைத் தொலைக் காட்சி நிலையத்துக்கு அளிக்கவும் தக்க திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு இணைத்துள்ளது. என்று மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இந்த மானியக் கோரிக்கை விளக்கத்திலே ஆபாசத் திரைப்படங்கள் வெளியிடுவதைத் தடை செய்வதற்கும் ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடை செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள், சட்டங்கள் உருவாக்கப்படும் என்று தெளிவாகச் சுட்டிக் காட்டியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், ஒன்றை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இளைய சமுதாயம் திசை திருப்பி அனுப்பப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருகாலத்திலே திரைப்படங்கள், மக்களுக்கு நல்லவற்றைப் புகட்டி வந்த காலம் மாறி இன்றைக்குத் திரைப்படங்கள் மக்களைத் திசை திருப்புகின்ற விதத்திலே நியாயங்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில், தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கின்ற ஒரு சூழ்நிலையை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே ஒட்டப்படுகின்ற சுவரொட்டிகளை நீங்கள் பார்ப்பீர்களானால், சென்னையிலே நாங்கள் பல சுவரொட்டிகளைப் பார்க்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது, குறிப்பாக ஒன்றை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்திலே திரையிடப்படுகின்ற மலையாளப் படங்கள் தமிழ் மாநிலத்திலே வெளியிடப்படுகின்ற நேரத்திலே, அந்தத் திரைப்படங்களுடைய பெயர்கள் மாற்றப்படுகிற நேரத்திலே, எப்படி மாற்றப் படுகின்றது என்று தெரியுமா? நான் ஒன்றிரண்டு படங்களை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மலையாளப் படத்தினுடைய பெயர் நீயா, நானா? அந்த மலையாளப் படப் பெயர் தமிழிலே வெளியிடப்படும் போது, 'Hunting Rape' என்று போடப்படுகிறது. மலையாளப் படத்தினுடைய தலைப்பிற்கும் இங்கே தரப்பட்டிருக்கிற



1986 ஏப்ரல் 25] [திரு. கோ. பெருமாள் பிள்ளை]

தலைப்பிற்கும் மாறுபட்ட தன்மை இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அதிலே, மிகவும் அருவருக்கத்தக்க விதத்திலே 'Hunting Rape' என்று இழிவான பெயர் வைக்கப்பட்டிக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று, 'இனி யாத்ரா' என்ற மலையாளப் படம். 'இப்பொழுது பயணம் தொடங்குகிறது' என்பதை 'Sex in midnight' என்று மாற்றியுள்ளார்கள். இந்த' இனி யாத்ரா' என்ற பெயருக்கும், 'Sex in midnight' என்ற பெயருக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறது? இந்தப் பெயர் அந்த உண்மையான பெயரோடு கொஞ்சமாவது பொருந்தி வருகிறதா என்பதைத் தமிழக அரசு ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற சுவரொட்டிகளை ஒட்டி, மக்களை, குறிப்பாக, இளைஞர்களைத் திசை திருப்புகின்ற பாங்கினை, இதுபோன்ற செயல்களைச் செய்கிறவர்கள் மீது இந்த அரசு தயங்காமல் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, சுற்றுலாத் துறையை எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே, இன்றைக்குச் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக இந்த அரசு பெருவாரியான தொகையினை ஒதுக்கியிருக்கிறது. கடந்த கூட்டத்திலே பேசுகின்ற நேரத்திலேயே நான் குமரி முனையை அகில உலக சுற்றுலா மையமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன். அந்தக் கோரிக்கையை மீண்டும் நான் இந்த மன்றத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வலியுறுத்துகின்ற நேரத்தில், குமரி மாவட்டத்திலேயிருக்கிற கன்னியாகுமரி முனைக்கு தினந்தோறும் 10,000-க்கு மேற்பட்ட மக்கள் வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அப்படி வருகின்ற மக்களுக்குக் கிட்டத்தட்ட 25 நாட்களாகத் தண்ணீர் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குமரி முனையினுடைய தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு இந்தக் கருணை அரசு ரூ. 3 இலட்சம் அனுமதி தந்திருக்கிறது. அது இந்த மானியக் கோரிக்கை விளக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் இந்தத் தொகை போதாத காரணத்தால் குமரி முனையில் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு ஒரு

கூட்டுக்குடிநீர் திட்டத்தை இந்த அரசு உருவாக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்கள் பெரும்பாலும் மீனவர்கள். கடந்த 25 நாட்களாக அந்த மீனவ மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத பிரச்சினை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் நீண்டதூரம் நடந்துசென்று தண்ணீர் பெறுகின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. அவர்கள் பக்கத்திலே கிணறுகள் எதுவும் தோண்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் அது கடற்கரை பகுதியாக இருப்பதால் அங்கே கிணறு தோண்டினாலும் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. ஆகவே, அவர்கள் சொந்தமாக கிணறு தோண்டுகின்ற சூழ்நிலையும் இல்லை.

நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. நாகர்கோவில் நகரத்திற்கு முக்கூடலில் இருந்து தண்ணீர் வருகிறது. அங்கிருந்து வருகின்ற தண்ணீர் நாகர்கோவில் நகர மக்களுக்கே போதாமல் இருக்கின்ற காரணத்தால், நாகர்கோவிலிலிருந்து 4 நாட்களுக்கு ஒருமுறைதான் கன்னியாகுமரிக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மிகக் குறைந்த அளவு தண்ணீரே கன்னியாகுமரிக்கு வழங்கப்படுவதால் மேட்டுப் பகுதியில் இருக்கிற வீடுகளுக்கு 25 நாட்களாக தண்ணீர் கிடைக்கவில்லை. இந்நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லதொரு கூட்டுக்குடிநீர் திட்டத்தை நிறைவேற்றி, குமரி மக்களுடைய துயரைத் துடைக்க வேண்டும். துயர்துடைக்கப் பிறந்த தலைவர் நிச்சயமாக அந்த மக்கள் துயரைத் துடைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இதை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு குமரி மாவட்டம் என்றால் மாதம் மும்மாரி பொழிகின்ற மாவட்டம் என்று இருந்த நிலை மாறி இன்றைக்கு ஆண்டுக்கு மும்மாரி பொழிகிறதா என்று பார்த்தால்கூட இல்லை என்று சொல்லகூடிய அளவுக்கு ஆகியிருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு என்ன காரணம் என்றால், பெரிய காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் இரப்பர் மரங்கள் நடப்படுவதால் மழை பெய்யாமல், மிகவும் குறைந்துவிட்டது என்று குமரி மாவட்ட மக்கள் கருதுகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அங்கே இருக்கிற காடுகளை இனிமேலாவது அழிக்காமல், இருக்கிற காட்டுப் பகுதிகளை அப்படியே கட்டிக்காத்து, காப்பாற்ற



வேண்டுமென்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வி. அவர்களையும் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகள் மீதான என்னுடைய விவாதத்தை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் சம்பந்தப்பட்ட 1986–87 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்தைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய கருத்துக்களைச் சொல்லத் தொடங்குவதற்கு முன்பாக, திறமைக்கு சான்று பெற்ற அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஆலயப் பணியாளர்கள் என்ற ஒரு பிரிவினர், பிற ஆலய ஊழியர்களைப் போல் சம்பளம் பெற வாய்ப்பற்ற நிலையில், வாய் இல்லாப் பூச்சிகளாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கிற அந்த ஆலயப் பணியாளர்களுடைய பிரச்சினையை பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆலயங்களிலிருந்து, 2 சதவீதம் முதல் 7 சதவீதம் வரையில், சகாயத் தொகை வரி போடுவது என்று நிர்ணயம் செய்து, வசூல் செய்து, பிற அறநிலையத் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கப்படுவதைப் போன்று இந்த ஆலயப் பணியாளர்களுக்கும் வழங்குகின்ற ஒரு ஏற்பாட்டை தற்போது நீங்கள் தந்திருக்கிற கொள்கைப் குறிப்பின் அடிப்படையில், 40 சதவீதம் என்ற நிபந்தனை காரணமாக, அரசாங்கம் அளித்திருக்கிற அகவிலைப் படி அல்லது குறைந்த பட்ச சம்பளம் வழங்குகிற நிலையை எட்ட முடியவில்லை என்பதையும் பல மாதங்கள் அவர்கள் சம்பளம் பெற முடியவில்லை என்பதையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எக்சிகியூட்டிவ் ஆபிசர்ஸ் சம்பளம் பெறும் வாய்ப்பில் தடை இல்லை. ஆனால் ஆலயப் பணியாளர்கள், நீங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையில், அந்த ஆலயத்திற்கு எப்போது வருமானம் வருகிறதோ, அப்போதுதான் சம்பளம் பெறும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு சம்பளம் ஒழுங்காக வழங்க, ஒரு பொது ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஜெனரல் பூல் என்ற அடிப்படையில், உருவாக்கி, நீங்கள் இப்போது 2 சதவீதம் முதல் 7 சதவீதம் வரையில் அல்லது 10 சதவீதம் வரையில் வசூல் செய்வதை

அதிலே இணைத்து, அந்த பொது நிதியிலிருந்து ஆலயப் பணியாளர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

ஒருவேளை அதிலே சிக்கல் இருக்குமேயானால் ஆலய ஊழியர்கள் ஊதிய நிதி என்று கமிஷனருடைய கண்ட்ரோலிலே ஒரு பொது நிதியை ஏற்படுத்தி, தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லா ஆலயங்களிலிருந்தும் 40 பெர்சன்ட் வருமானத்தைப் பெற்று அப்படி ஒரு நிதியை ஏற்படுத்தி எல்லா ஆலயப் பணியாளர்களுக்கும் தட்டில்லாமல் சம்பளம் கொடுக்க ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பரம்பரை தர்மகர்த்தாக்கள்—இது அரசின் கொள்கைப் பிரச்சினை, இருந்த போதிலும்—பரம்பரை தர்மகர்த்தாக்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டம் பாலப்பட்டி மன்னார் பாளையம் அருள்மிகு மாரியம்மன் கோயிலில் 1936 ஆம் ஆண்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட சிலர் திருவிழா கொண்டாடுவதற்காகப் பாத்தியதை பெற்றிருக்கிறார்கள். அண்மையிலே அங்கே திருவிழா நடந்து முடிந்துவிட்டது. அந்தத் திருவிழாவை நடத்துவதில் பூசல் ஏற்பட்டு, ஒரு கோஷ்டியினர் சம்பந்தப்பட்ட அறநிலையத் துறை அதிகாரிகளை நாடிய போது அந்த அறநிலையத் துறை அதிகாரிகள் சட்ட விரோதமாக திருவிழா கொண்டாட முடியாது என்று அறிக்கை தந்து இருக்கிறார்கள். அதன் பின்னர் பெரிய இடத்தின் தலையீடு காரணமாக—அது யார் என்று தெரியவில்லை. அந்த விவரத்தை அமைச்சரிடத்திலே கொடுக்கலாம் என்று இருக்கிறேன்—மீண்டும் திருவிழா நடத்துவதற்கு அதாவது ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டு இருக்கிறது. அது இன்றைக்கு வழக்கு மன்றத்திற்குச் சென்று தடையாணை பிறப்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இது போன்ற காரியங்களுக்கு எப்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதி தந்தார்கள்? முன்னுக்குப் பின் முரணாக எப்படி உத்தரவைக் கொடுத்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

திருக்கோயில்கள் என்று பெருமை பட்டுக் கொள்ளக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் வேதனையோடு தெருக் கோயில்கள் பற்றியும் நான் ஒரு வார்த்தை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. பக்தர்களின் மனதைப் புண் படுத்த வேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. நாடு முழுவதும் எந்தத் தெருவைப் பார்த்தாலும் கோயில்கள், நடை பாதையில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் கோயில்களின் போக்கைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் 50 வருஷ காலத்தில், எந்த ரோட்டிலும், வண்டி வாகனங்கள் போக





முடியாத நிலைமை ஏற்படும். எந்த நடை பாதையிலும் யாரும் நடக்கக் கூட முடியாத அளவுக்கு இன்றைக்குத் திடீர் கோயில்களும், திடீர் பக்தர்களும் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சரிடத்திலே ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பல பிரச்சினைகளுக்காக நீங்கள் தெய்வீகப் பேரவையைச் சேர்ந்தவர்களையும், ஆத்திகத்திலே நம்பிக்கையுள்ளவர்களையும் கொண்ட குழுவை அமைக்கிறீர்கள். எனவே ஒரு குழுவை அமைத்தாவது விசாரித்து அறநிலையத் துறையின் சார்பாக 10 ஏக்கர் பூமியை ஒவ்வொரு மாவட்டத்திலும், வாங்கி, இந்த முனிசிபல் ரோடுகளிலும், சந்துகளிலும், தெருக்களிலும், மூலையிலும் உற்பத்தியாகக் கூடிய கோயில்களை எல்லாம் அங்கே கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடத்தி இந்தத் தெருக் கோயில்கள் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று மிகுந்த பணிவோடு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்களின் குறிப்பிலே சமபந்தி போசனம் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை நான் பார்த்தேன். தந்தை பெரியார் அவர்கள் 1925 ஆம் ஆண்டு அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்பு சமபந்தி போசனம் என்ற அந்தக் கொள்கையை வலியுறுத்தித்தான் ஒரு போராட்டம் நடத்தினார்கள். அது பற்றி பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அவருக்கு வேண்டிய பகுதிதான் அது. சேரன்மாதேவியில் குருகுலப் போராட்டத்தை தந்தை பெரியார் அவர்கள், இந்த சமபந்திப் போசனத்தை வேண்டித்தான் நடத்தினார். ஆனால் அன்றைக்கு தந்தை பெரியாருடைய கருத்துக்களை நாடு ஏற்கவில்லை. பதிலாக வசவுதான் கிடைத்தது. ஆனால் இந்த மன்றத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டுக்கு ஒரு முறை ஆலயத்தில் சம பந்திப் போசனம் என்று சொல்லி முதலமைச்சர் அவர்களோ, வேறு அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ உட்கார்ந்து சம பந்தியில் சாப்பிடுவதால் மட்டும் பிரச்சினை தீராது. உள்ளத்தில் மாறுதல் வேண்டும். எண்ணத்தில், சிந்தனையில், செயலில் ஒரு மாறுதல் வேண்டுமே தவிர வெறும் வேதாந்தம் உதவாது........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளத்து மாறுதலை உருவாக்குவதற்காகத் தானே இந்த சம பந்தி போசனம் என்பது. அது இதற்குப் பயன்படும் என்ற வகையில் தானே கடைப் பிடிக்கப்படுகிறது. ஆகவே இது அதற்குத் துணை புரிகிறது என்ற வகையில் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசரப் பட வேண்டாம் நான் பின்னால் வருகிறேன், இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசினுடைய இராணுவ அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், வடக்கே சம்பூர்ணானந்த் சிலையைத் திறந்து வைத்துச் சென்றதற்குப் பிறகு அந்தச் சிலையைத் தாழ்த்தப்பட்டவர் திறந்து வைத்து விட்டார் என்ற காரணத்தினால் கங்கா ஜலத்தைக் கொண்டு வந்து புண்ணியாஜனம் நடத்தக் கூடிய மனோ பாவம் இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தால், சட்டப் பாதுகாப்பு தந்தாலொழிய ..................(கூச்சல், குழப்பம்) இது நடந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். நான் பார்க்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். திரு. ராமநாதன் மன்னிப்புக் கேட்க வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேங்கடரமணன் அப்படியெல்லாம் பேசக் கூடாது. உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்) உறுப்பினர் இப்படி ஒருவரோடொருவர் நேரிடையாக கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடாது. உட்காருங்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசியதிலே நாங்கள் குற்றம் சொல்லவில்லை. மத்தியிலே வீற்றிருக்கிறவர்கள் என்று சொல்வது இப்போது ஆண்டு கொண்டிருப்பவர்களைக் குறிப்பிடுவது போல் இருக்கிறது. ஆகவே அதைத்தான் நீக்க வேண்டுகிறோம்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, மத்தியிலே என்று நான் சொன்னது மத்திய சர்க்கார் என்ற அர்த்தத்தில் நான் குறிப்பிடவில்லை. மத்தியிலே—இடையிலே என்று பொருள்பட சொன்னேன். அந்த விழா நடந்து முடிந்துவிட்ட பிறகு, மத்திய அமைச்சரவையிலே இராணுவ அமைச்சராக இருந்த மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்கள் அப்புறம் சென்ற பிறகு, இடையிலே அந்த விழாவினை நடத்தும் பொறுப்பிலே இருந்தவர்கள், அவர் தாழ்த்தப்பட்டவர் என்ற முறையிலே, அமைச்சரை இழிவு படுத்துகின்ற முறையில், அவர் சூத்திரன்—அவர் திறந்துவிட்டாரே சிலையை என்று, அதனால் தீட்டுப் பட்டு விட்டது என்று, கங்கா ஜலம் கொண்டு வந்து புண்ணியாஜலம் செய்கின்ற நிலை இந்த நாட்டிலே இருக்குமானால், எப்படி இந்த நாட்டிலே எல்லோரும் சமத்துவம் என்று பேசக் கூடிய சொல்லுக்கு பொறுப்பு வரும் என்பதுதான் என்னுடைய கேள்வி. (கூச்சல், குழப்பம்)



திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, அவர் முதலிலே மத்தியிலே இருப்பவர்கள் என்று சொன்னதை எடுத்துவிட்டு, இதை அப்படியே வைத்துவிடுங்கள்......

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப் பட்டவர்கள் என்று சொல்வதே இழிவு என்று கருதும் வேளையில் அவர் சூத்திரன் என்று வேறு சொல்லுகிறாரே, அது சரியா?

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, சூத்திரன் என்று சொல்லக்கூடாது. அது தப்பு. வேண்டுமானால் நாவலரைக் கேளுங்கள்....(குறுக்கீடு) இவர் சொல்லவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் மத்தியிலே இருப்பவர்களைப் பற்றி சொல்லவில்லை என்று சொல்லி விட்டார். அதனால் பிரச்னை இல்லை, விடுங்கள்.

அடுத்து, சூத்திரன் என்று அவரே சொல்லவில்லை, யாரோ சொன்னதாக குறிப்பிடுகிறார். அவ்வளவுதான். எல்லோரும் உட்காருங்கள். இராமநாதன் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, இது எல்லாம் பிரச்னையை திசைத் திருப்ப பேசப்படுகிறதே தவிர வேறு அல்ல. அந்த எண்ணத்தோடு பாபுஜியின் அந்தச் செயலைக் கண்டிக்கிற கூட்டம் இந்தியாவில் இருக்கிறது. அப்படிப் பட்ட மனம் படைத்தவர்களுக்கு மத்தியில் சமத்துவம் எப்படி வரும், எப்படி சமபந்தி போஜனம் வெற்றி பெறும் என்ற கேள்வியைத்தான் இந்த மன்றத்திலே நான் அமைச்சரின் முன்பு வைத்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (கரவொலி)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படியானால், சமுதாயத்தில் மாற்றம் வரவே வராது என்ற முடிவிற்கு மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் வந்துவிட்டார்களா ? வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. தீண்டாமைக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். அந்த விருப்பத்திற்கிணங்கதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசு சமபந்தி போஜனத்திற்கு ஆங்காங்கே ஏற்பாடு செய்கிறது. (கரவொலி) அப்படிப்பட்ட ஒரு நிலை வர வேண்டும். எல்லோரும் சமத்துவம் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மன மாற்றத்திற்கு அது பயன் படும் என்றுதான் எதிர்பார்க்க வேண்டுமே தவிர அப்படி வரவே வராது என்று பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவதால் சமுதாய மாறுதல் ஏற்பட்டு விடாது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்றுப் பொறுக்க வேண்டும். ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, முழுவதையும் கேட்டுவிட்டு பிறகு அவர் சொல்லலாம். என்னுடைய கருத்து ஜாதி பாகுபாடு அற்ற ஆகம பயிற்சிப் பள்ளி என்று கொள்கை குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறதே, அதன் கீழ், 'திருக் கோயில் அர்ச்சகராக பயிற்சி பெற விரும்புகிறவர்கட்கு சாதி பாகுபாடின்றி பயிற்சி அளிக்க 1983-ல் கொள்கை அளவில் அரசு முடிவெடுத்துள்ளது' என்று பக்கம் 31-லே சொல்லி யிருக்கிறார்களே, ஆனால் ஜாதி பாகுபாடற்று தகுதி அடிப் படையில் அனைத்து ஜாதியைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சட்டம் இயற்றப்பட்டபோது, இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டத்திலேயே அதற்கான மாறுதல் ஏற்படுத்தினால் ஒழிய, அந்தச் சட்டம் வெற்றி பெற வாய்ப்பு இருக்காது என்று கூறப்பட்டு, அது குப்பைக் கூடையில் போடப்பட்டது.

அதனால் இந்த அறிக்கையில் நீதிபதி மகராஜன் தலைமை யில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது என்றும் அந்த வல்லுநர் குழு சனவரி 1982-ல் தனது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த வல்லு நர் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்கும், அந்தக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தினால் அதில் வெற்றி வாய்ப்புக்கு வழி உண்டா என்று ஆராயவும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுடைய தலைமையில் 14 நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த 14 நபர்கள் கொண்ட குழு வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து ஒரு ஆகமப் பயிற்சிப் பள்ளியை பழனியில் அரசு நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகவே என்னுடைய கேள்வி என்பது, அமைச்சரிடத் திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்பது வேறு. ஆனால் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் சொன்ன தகவல்கள், கருத்துக்கள் பற்றி என்றைக்கும் நமக்குள்ளே மாறுபாடு வராது. அந்தப் பாரம்பரியத்தில் நாம் வந்திருக் கிறோம். ஒருவேளை காலம் நம்மை பிரித்திருக்கலாமே தவிர கருத்துக்களால் பிரியவில்லை. அப்படி பிரியும் போது பேதங்கள் ஏற்படுவதை பின்னாலே பேசிக்கொள்ளலாம்.

(முற்பகல் 11—30)

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவது, 1730-க்கும் 1780-க்கும் இடையே திருமலைநாயக்கன் மன்னன் மாறவர்மன் காலத்தில் திவானாக இருந்த இராமப்பையர் என்பவர் **பழனியம்**



பதிக்கு வந்திருக்கிறார் என்பது வரலாற்று குறிப்பு. அதுவரையில் தமிழில் போகர் வழிவந்தவர்கள் பழனியில் பண்டார பூசையைத்தான் நடத்தியிருக்கிறார்கள். இராமப் பையர் வந்து ஆகம பூசை இல்லையா என்று கேட்டு, கொடு முடியில் இருக்கிற சரஸ்வதி அய்யர், கணபதி அய்யர் என்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களை குதிரை வீரர்கள் மூலம் தூக்குப் பல்லக்கில் அழைத்து வந்து ஆகம பூசையை அங்கே துவக்கி வைத்தார்கள். இதை பழனியம்பதியில் வரலாறு சொல்கிறது. அமைச்சர் அவர்கள் இதை நன்றாக அறிவார்கள். எதற்காக சொல்கிறேன் என்றால் இப்போது பூசாரிகளாக வரக்கூடியவர்கள் கருவறைக்குள்ளே செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? கருவறைக்குள்ளே சென்று அவர்கள் வழிபாடு நடத்துகிற வாய்ப்பு இப்போது நீங்கள் சொல்கிற ஏற்பாட்டின் அடிப்படையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, அதற்கு முன்பு பண்டார சன்னதிகளை தூக்கி வந்ததாகச் சொல் கிறார்கள். இப்போது அரசியல் தலைவர்களே பண்டார சன்னதிகளாக நடித்துக் கொண்டிருக்கிறார்களே, அதுபற்றி அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நல்ல கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். வலிமை யான அரசாங்கத்திலே அவர் இருக்கிறார். பண்டார சன்னதி முறையை ஒழிக்கிற சட்டம் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வர்ணாசிரம தர்மம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் இதிலே இருக்கிற அடிப்படை. ஆகவே இந்த ஜாதி வேறுபாட்டைப் போக்க வேண்டுமென்ற முறையில் தான் கர்ணபரம்பரையாக சில இருந்து வருகின்றன.

''கட்டை இருக்கையில் சிதம்பரம் போய் நான்
காணவேண்டும் ஐய
மனதொக்கும் வாயொக்கும் நாவால்
ஒருதரம் போய் வாவென்று சொல் ஐய !

என்று சொல்லி, பண்ணையாரிடத்திலே கண்ணீர் விட்டு நந்தன் தில்லைக்கு வந்து எம்பெருமான் நடன கோலத்தை பார்க்க முடியாமல், அம்பலத்திற்கு வெளியே நின்றான்; உள்ளே போக முடியாமல்,

''என்னப்பன் அல்லவா! என்தாயும் அல்லவா !
பொன்னப்பன் அல்லவா, பொன்னம்பலத்தவா !
உன் திருநடன கோலத்தை காண முடியாமல்
நந்தி மறைத்திருக்கிறது''

என்று கேட்ட போது, எம்பெருமான் சிவபெருமான் ஈ எறும்பிலிருந்து 84 ஆயிரம் கோடி ஜீவராசிகளையும் கர்ப்ப கிரகத்தில் வைத்து ரட்சிக்கிற எம்பெருமான் நந்தியை நகர்த்தினானே தவிர நந்தனை உள்ளே அழைக்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, உறுப்பினர் இராமநாதன் அவர்களின் பேச்சு சுவையாகத்தான் இருக்கிறது. அதுபற்றி நான் குற்றம் சொல்லவில்லை. இது அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் வருகிற பேச்சா அல்லது சமுதாய சீர்திருத்த மாநாட்டில் சிறப்புச் சொற்பொழி வாக ஆற்றவேண்டியதையெல்லாம் இங்கே பேசுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் விவசாய இலாக்கா அமைச்சரா ? அல்லது குறுக்கீட்டுத் துறை அமைச்சரா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தவறு எங்கேயிருந்தாலும் குறுக்கிடுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

**திரு. மு. இராமநாதன் :** தலைவர் அவர்களே, குறுக்கிட்டு விளக்கம் பெறுவதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அமைச்சர் அவர்கள் விரும்புகிறபடி அறநிலையத்துறை என்று ஏற்றுக்கொண்டாலும் சரி, சமுதாய சீர்திருத்தம் என்று ஏற்றுக் கொண்டாலும் சரி, இதையெல்லாம் சொல்லித்தான் நாம் இரண்டு பேரும் இரண்டு லைனாக உட்கார்ந்திருக்கிறோம். அதை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே நம்முடைய எண்ணம், நம்முடைய குறிக்கோள் பொறுத்த வரையில் சமுதாயத்தில் சமத்துவம் வரவேண்டும் என்பதுதான். அதற் காக கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் ஆலயத் திற்கு தர்மகர்த்தா ஐந்து பேர் என்று போடுகிறபோது எந்த நந்தன் ஆலயத்திற்கு வெளியே நின்று கண்ணீர் விட்டானோ அந்த நந்தன் பரம்பரையில் வந்த ஒருவர் தர்மகர்த்தா ஆக வேண்டுமென்று சட்டம் போட்ட ஆட்சி கழகத் தலைவர் கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சி என்பதைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** தலைநாயகர் அவர்களே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆள்கிறபோதுகூட ஒவ் வொரு திருக்கோவிலிலும் அரிசனத் தோழர்களை அறங்காவல ராக போட்டிருக்கிறார்கள். கலைஞர் ஆட்சியில் மட்டும் போடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்தை திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இந்த இழுக்கு எல்லாம் போக்குவதற்காக ஆட்சிக்கு வந்தவுடனே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வந்த ஒருவரை அறநிலையத் துறை அமைச்சராக ஆக்கி, யார் ஆலயத்திற்குள்ளே செல்லக் கூடாது, தண்ணீர் கொண்டு வந்தால் 100 அடிக்கு அப்பால் நிற்கவேண்டுமென்று சொன்னவர்கள் அவரை பூர்ண கும்பம் வைத்து, மரியாதை செய்து கோவிலுக்குள்ளே அழைத்துச் செல்கிற அளவிற்கு புரட்சி செய்த நாடு இந்த நாடு. இப் பொழுதும் சீர்திருத்தம் நடந்துகொண்டுதான் வருகிறது, மாறிக் கொண்டு தான் வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அரிசனத் துறைக்கு அமைச்சராக, அரிசன பெருமகனார் ஒருவரை ஆக்கியதாகச் சொன்னார்கள். வாழ்த்துகிறோம். பாராட்டு கிறோம். ஆனால் அந்த பெருமகனாருடைய கடைசி காலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்த ஆட்சி புரட்சித் தலைவர் ஆட்சிதான் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக மொத்தத்தில் நான் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு கவனப்படுத்த விரும்புவது, உண்மையான சமத்துவம் நாட்டில் வரவேண்டும் என்றால், அர்ச்சகராக சகல சாதியைச் சேர்ந்தவர்கள், தகுதி உடையவர்கள் எல்லோரும் ஆகலாம் என்பதற்காக, அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் பட்டாலொழிய, வேறு வழியில்லை. வெறும் உதட்டளவில் பேசுவதால் சமத்துவம் வந்துவிடாது. உள்ளத்தில் இருந்து அதைப பேசவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன் (மணி படிக்கப்பட்டது) (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு உறுப்பினருக்கு இன்னொரு உறுப்பினர் சப்போர்ட் பண்ணவேண்டாம்.

**திரு. மு. இராமநாதன் :** தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனையை அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். 1985-86 ஆம் ஆண்டினுடைய தணிக்கை ரிப்போர்ட் இங்கே வைக்கப்பட்டது. செய்தி, சுற்றுலாத்துறையில் வசூல் செய்யப்படாத வருவாய் என்ற தலைப்பிலே, 31-3-1981 ஆம் ஆண்டு உள்ள கணக்கின்படி 92.65 லட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட வேண்டிய பாக்கி என்றும், 1983 ஜூனில் உள்ள கணக்கின்படி, வசூல் செய்யப்படவேண்டிய தொகை 87.02 லட்சம் என்றும், 1985 ஜூலையில் உள்ள கணக்கின்படி 131.11 லட்சம் பாக்கி என்றும், இந்த 131.11 லட்சத்தில் 125.2 லட்சம் ரூபாய் தமிழக அரசு அச்சகம் சம்பந்தப் பட்டது என்றும், மற்றவை பிற துறைகளில் இருந்து 3.49 லட்சம் பாக்கி என்றும் குறிப்பிடப்பட்டு இருப்பதை நான்

அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வசூலிக்கப்படாத வருவாய் குறித்து தணிக்கை செய்ய பொதுக் கணக்குக் குழு கோரிய விவரங்களை, முழுமையாக பல துறையைச் சார்ந்தவர்கள் அளிக்காதது போல், தணிக்கை செய்ய, 1981-82-ல் வணிக வரி மற்றும் அறநிலையத் துறையால் அளிக்கப்படவில்லை என்று குழு குறைபட்டு உள்ளதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில், 1981 ஆம் ஆண்டு மார்ச் முடிய வசூல் செய்யப்படாத ரூ. 291.49 லட்சம் என்றும், கடந்த 4 ஆண்டுகளில் 20 சதவீதம்தான் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும் இதனால் 1 கோடி ரூபாய் இன்னும் வசூல் செய்யப்படவில்லை என்றும்...

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கேளிக்கை வரியின் மீது இப்போது மானியக் கோரிக்கை வைக்கப் படவில்லை. துறையே வேறு.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, பொதுவாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டவர்கள் என்ற முறையிலே....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். அது வணிக வரித்துறை அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கிறது. இந்த இரண்டு துறைக்கும் சேர்ந்து பொதுவாக Commercial Taxes and Hindu Religious Endowments என்றிருக்கிறது. இரண்டுக்கும் ஒரே துறை. ஒரே செயலாளர்தான் இருக்கிறாரே தவிர, இரண்டுக்கும் இரண்டு அமைச்சர்கள். வணிக வரித் துறையும், கேளிக்கை வரியும் வணிக வரித்துறை அமைச்சரிடத்திலே இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறைக்கு அமைச்சரா, அல்லது குறுக்கீட்டுத் துறைக்கு அமைச்சரா என்று அடிக்கடி குறுக்கிட்டுக்கொண்டு இருக்கிற திரு. இரகுமான்கான் அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே, இப்போது கூட ஒரு வரம்பை மீறி, சட்டத்தை மீறி, விதியை மீறி, இங்கே, எந்தத் துறையின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறதோ, அதையெல்லாம் விட்டுவிட்டு, ஏற்கனவே நடந்து முடிந்த வணிக வரித் துறையில், அதன் தொடர்பாக விவாதத்தை வைத்து, இங்கே '' கலெக்ட்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி '' என்று அவர் படித்து இருக்கின்ற சட்டத்தின் மீது, இங்கே முறை தவறி சொல்லிக் கொண்டு இருக்கிறார். அது தேவையற்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. அடிக்கடி குறுக்கிடுவதாலேதான் இந்த மாதிரி வந்துவிடுகிறது. ஒவ்வொன்றுக்கும் நீங்கள் குறுக்கிட்டுக்





கொண்டு இருப்பதால்தான் இப்படி வந்துவிடுகிறது. எனவே ஒவ்வொன்றுக்கும் நீங்கள் எழுந்து சொல்ல வேண்டாம். உங்கள் கட்சி உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் பேசுகிறார். அவர்கள் சொல்வார்கள்.

*திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி விளம்பரத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருக்க வேண்டும் என்று நான் பொறுப் புணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசினுடைய கொள்கைகள், அறிவிப்புகள், திட்டங்கள், பணிகள் மற்றும் இன்ன பிறவை பற்றிய விளம்பரங்களை நீங்கள் கொடுக்கும்போது, எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 11-40)

மக்கள் மத்தியிலே பல நாளிதழ்கள் இருப்பதுபோல ** ** ஒரு பெரும்பகுதி மக்கள் படிக்கின்றபோது (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்குறிப்பில் இருந்து அவைகளை நீக்கிட உத்தரவிடுகிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட பத்திரிகைக்கு மட்டும் விளம்பரம் கொடுக்கக்கூடாது என்ற விதியை பாகுபாடான, விருப்பு வெறுப்பான ஒரு நடைமுறை இந்த அரசிலே இருப்பது முறைதானா ? அவர்கள் சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் செல்லக்கூடிய ஒரு நிலையை அனுமதிக்கலாமா என்பதையும், இதில் விருப்பு வெறுப்பற்ற தன்மை அரசுக்கு இருக்கவேண்டுமென்பதையும் நான் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நீக்கியதினுடைய அர்த்தம் என்ன ? (குறுக்கீடு) நான் அந்த உறுப்பினரோடு பேசும்போது, நீங்கள் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, பொதுவாக விருப்பு வெறுப்பற்ற முறையிலே அரசு விளம்பரம் கொடுக்க வேண்டுமென்பதையாவது நெஞ்சில் நிறுத்த வேண்டும் என்று நீதியின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, மாண்புமிகு இராமநாதன் அவர்கள்
மிகுந்த உணர்ச்சியோடும், மிகுந்த இலக்கிய ஆதாரங்களோடும்
பேசுகின்ற நேரத்தில் குறுக்கிட வேண்டாம் என்று தான் நான்
அமைதியாக இருந்தேன். ஆனால் இப்போது நெஞ்சுக்கு நீதியை
தொட்டுப் பார்த்து, நீதி செலுத்த வேண்டும் விளம்பரம் தரு
வதிலே என்று தெரிவிக்கிறார்கள். அவர்களுடைய கட்சி இங்கே
7 ஆண்டுக் காலம், ஆட்சி செய்தபோது முதலமைச்சராக இருந்த
டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் காலத்திலேயும், அதற்கு
முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயும்,
இன்றைக்கு இருக்கின்ற அவர்களுடைய தலைவர், முன்னாள்
முதலமைச்சர் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அந்தக் காலத்
திலே எப்படி நீங்கள் விளம்பரம் எல்லாம் தந்தீர்கள் ; இங்கே
அப்படி கேள்விகள் வைக்கப்பட்ட போது என்ன பதில் அளித்
தீர்கள் என்பதை எல்லாம் நான் எடுத்து வைத்திருக்கிறேன்.
நான் இறுதியாகச் சொல்லலாம் என்று இருந்தேன். நான் உங்
களுக்கு நினைவு படுத்துகிறேன். அந்த நெஞ்சுக்கு நீதியினுடைய
அந்தத் தத்துவம் முன்னாலே நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள்
என்பதை நினைவு படுத்திக் கொண்டு பேசினால் நல்லது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களும் சரி, அறநிலையத்
துறை அமைச்சர் அவர்களும் சரி, 1951 ஆம் ஆண்டிலிருந்து,
பொது வாழ்க்கையில் ஈடுபட்டதிலிருந்து எனக்கு அறிமுகமான
வர்கள். நாம் எல்லோரும் போற்றத் தகுந்த நிலையிலேதான்
உங்களை வைத்திருக்கிறோம். அதிலே ஒன்றும் உங்களுக்கு மாறு
பட்ட நெஞ்சு இருக்க முடியாது. ஆனால். நான் இங்கே மன்றத்
திலே தெரிந்துகொள்ள விரும்புவது, நாங்கள் அந்தக் காலத்
திலே பாரபட்சம் காட்டுகிறோம் என்று குற்றம் சாட்டித்தான்
நீங்கள் வந்தீர்கள். பிறகு எங்களைப் பின்பற்ற வேண்டிய
அவசியம் உங்களுக்கு இல்லை. பொன் மனம் படைத்தவர்கள்
நீங்கள்; நடுநிலை மாறாமல் இருக்க வேண்டுமென்ற ஆசையைத்
தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல, (குறுக்
கீடு).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, அடிக்கடி குறுக்கிட வேண்டிய அவசியம் நேரிடு
வதற்கு நான் வருந்துகிறேன். நான் இறுதியாக பதில் அளிக்கிற
போது மாண்புமிகு இராமநாதன் அவர்களுடைய பேச்சுக்கே
நீண்ட நேரம் பதில் அளிக்க வேண்டிய அவசியம் நேரிட்டுவிடக்
கூடாது என்பதற்காக, அடிக்கடி அவர்களுக்கு பதில் சொல்லி
விட்டால் வசதியாக இருக்கும். இதை நான் எடுத்துக் காட்டுகிற
போது, நாங்கள் தான் தவறு செய்து விட்டோம், அந்தத்
தவறை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள்.
அதை தவறு என்று அவர்கள் ஒத்துக் கொண்டதற்கு நான்





நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள், இதை வாதத
துக்கு என்று மாற்றக் கூடும். ஏனென்றால் வாதம் செய்வதிலே
சாமார்த்தியசாலிகள். வாதத்தினாலேயே இந்த நாட்டிலே
எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு விடலாம் என்று எண்ணு
கிறவர்கள்; நம்பிக் கொண்டிருக்கிறவர்கள். அந்த
வாதத்திலேயே வெல்ல முடியாது. அது வேறு விஷயம். ஆனால்
இங்கே சற்று முன் பேசுகிறபோது எங்கள் காலத்தில் தானே
நம்முடைய ஆதி திராவிட மக்களை அறநிலையத் துறையில்
அறங் காவலர்களாக நியமிக்க இங்கே சட்டமே கொண்டு
வந்தோம். எங்கள் காலத்தில் தானே எல்லோரையும் அர்ச்ச
கர்களாக ஆக்கலாம் என்று சட்டம் கொண்டு வந்தோம், அது
உச்ச நீதிமன்றத்திலே தோற்கடிக்கப்பட்டது என்று சொல்கிற
நேரத்தில் அன்றைக்கு செய்த காரியத்தை நீங்கள் எடுத்துக்
காட்டுவதற்கு உரிமை இருக்கிற நேரத்தில் அன்றைக்கு நீங்கள்
விளம்பரத் துறையிலேயும், செய்தித் துறையிலேயும் என்ன
செய்தீர்கள்? எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதை நினைவு
படுத்திக் கொண்டு, நாங்கள் அப்படி அன்றைக்குச் செய்தோம்.
அது தவறு. அந்தத் தவறை இப்போது இருக்கிற புரட்சித்
தலைவர் செய்ய வேண்டாம் என்று நீங்கள் கேட்டுக் கொண்
டால், நினைவுபடுத்தினால், அது நெஞ்சுக்கு நீதி தருவதாக
இருக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வாதத்துக்கு வாதம் நான் பேச விரும்பவில்லை.
அமைச்சர் அவர்கள் இடத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்பு
வது, நீங்கள் குறிப்பிட்ட காரணத்தினாலேதான், நீங்கள்
தவறு செய்தீர்கள், ஆதாரம் இருக்கிறது என்று சொன்னீர்கள்.
அந்தத் தவறு இந்த அரசின் மீது படிய வேண்டாம் என்பதுதான்
நோக்கமே தவிர வேறு அல்ல.

இன்னொன்று. ஆண்டில் 9 மாதம் தமிழ்ப் படம் ஓட்டுவதற்கு
சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்பது கொள்கைக் குறிப்
பிலே இருக்கிறது. ஆனால் இந்த கொள்கைக் குறிப்பின்படி அல்
லது சட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் வரு
டத்திற்கு 9 மாதங்கள் தமிழ்ப் படம் காட்டப்படுகிறதா என்பதை
கண்காணிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.
இப்போது அதை மீறி இந்திப் படங்களையும், ஆங்கிலப் படங்
களையும் காட்டுகிற திரையரங்குகளின் மீது என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து கலைவாணர் அரங்கம், சிறுவர் அரங்கம், பாலர்
அரங்கம் என்ற நிலையில் சலுகைக் கட்டணத்தில் இளைய தலை
முறையினர் பயனடைய வேண்டுமென்று உருவாக்கப்பட்ட
ஒன்று. ஆனால் இன்றைக்கு அதில் கட்டண விகிதம் மற்ற

திரையரங்குகளில் உள்ளது போலவே உயர்த்தியும், அதில் "ஏ" சர்ட்டிபிகேட் வாங்கிய படங்கள் ஓடக் கூடிய நிலையை ஏற்படுத்தியிருப்பதையும் அருள் கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் நிறுத்தி அவற்றை எல்லாம் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. சுற்றுலாத் துறை பொருட்காட்சியைப் பொறுத்த வரையில் அகில இந்திய அளவில் டெல்லியில் நடக்கும் பொருட்காட்சிக்கு ஈடாக சென்னையில் பொருட்காட்சி நடந்து சாதனை புரிந்திருக்கிறது என்றும், 27 இலட்ச ரூபாய் சென்னையில் மட்டும் நிகர இலாபம் வந்திருக்கிறது என்றும், நிரந்தர பொருட்காட்சி சென்னையில் உருவாக்க இடம் தேடப்படுகிறது என்றும், 1978-லிருந்து இதுவரை 30 பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன என்றும், மொத்த வருமானம் 405.49 இலட்சத்தில் பொறியியல் பணி, மின்சாரம், கலை நிகழ்ச்சி ஆகியவைகளுக்கு 197.07 இலட்சம் என்றும், அடுத்து அரசுத் துறையைச் சார்ந்த பல நிறுவனங்கள் செலவு செய்த தொகை 94.12 இலட்சம் என்றும், நிகர வருமானம் 114.30 இலட்ச ரூபாய் என்றும், அதே போல் பொருட்காட்சியின் மூலம் சென்னையில் மட்டும் நிகர இலாபம் 27 இலட்ச ரூபாய் என்றும் பொத்தாம் பொதுவாக சொல்லப்பட்டு இருக்கிறதே அல்லாமல் இன்ன இன்ன வகையில் இன்ன இன்ன வரவு, இன்ன இன்ன வகையில் இன்ன இன்ன செலவு என்ற கணக்கைத் தருவதில் இந்த அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக கோவையைப் பொறுத்தவரையில் (மணியடிக்கப் பெற்றது). என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் சொல்லி விட்டு முடித்து விடுகிறேன். மாவட்டம்தோறும் சுற்றுலா மையம் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று இங்கே குறிப்பில் இருக்கிறது. பல காலம் இந்த அரசின் கவனத்துக்கு கொண்டு வந்து உள்ள சிறுவாணி மலையின் மடியில் உள்ள கோவை குற்றாலத்தில் சுற்றுலா மையத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிதம்பரம் பூங்கா வளாகத்தில் கலைவாணர் அரங்கம் போல் ஒரு திரையரங்கத்தை உங்கள் துறை சார்பாக கட்டித் தர வேண்டும் என்றும், பொள்ளாச்சி ஆளியாறு பகுதியை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இராமநாதன் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் அவசரப்படக் கூடாது, பொறுத்து அருள வேண்டும் என்று கேட்டதற்கு நன்றி தெரிவித்து நான் உட்கார்ந்து இருக்கிறேன். சமபந்தி உணவு





தீண்டாமைக் கொடுமையை மாற்றுகின்ற மன மாற்றத்திற்கு பயன்படுமா? பயன்படாதா என்று நான் கேட்டதற்கு அவர் அதற்கு பதில் சொல்லவில்லை. இந்த கீரியையும் பாம்பையும் சண்டை போட வைத்து ..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் அவருக்கு டைம் கொடுக்கவில்லை.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில்....

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள அறநிலையத்துறை, சுற்றுலாத் துறை, வனத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பல நூற்றுக்கணக்கான திருக்கோவில்களுக்கு திருப்பணி செய்ய முடியாத நிலையில் இருந்த கோவில்களுக்கு எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் இப்படி நின்று கொண்டிருப்பது முறை அல்ல, மரபு அல்ல, இப்படி குறுக்கிடுவது நல்லது அல்ல. திருமதி பா. வளர்மதி தொடர்ந்து பேசுங்கள்.

திருமதி பா. வளர்மதி : பல நூற்றுக்கணக்கான திருக்கோவில்களில் திருப்பணி செய்ய முடியாத ஆலயங்களில் எல்லாம் திருப்பணிகளையும், குடமுழுக்கையும் நடத்தி முடித்து பல திருக்கோவில்களை இன்றைக்கு நாட்டு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வைத்து இருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11–50)

நம்முடைய ஆலயங்கள் இன்றைக்கு வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல், மக்களின் சமுதாய பொருளாதார, கலை, கல்வி, கலாச்சாரம் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் பண்டைய காலம் முதல் இன்றைக்கு வரை செயல்பட்டுவந்திருக்கிறது. அந்த வகையில் இன்றைக்கு ஆலய நிர்வாகங்கள், இறை வழிபாட்டோடு நிறுத்திக் கொள்ளாமல், பொதுவான சேவைகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு சமபந்தி விருந்து, சிறப்பு வழிபாடு, ஏழைகளுக்குத்

திருமணங்கள் நடத்தி வைத்தல் போன்ற சமுதாயப் பணி
களில் ஆர்வம் காட்டி வருவதை நான் இந்த சமயத்தில் புரட்சித்
தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ்
34,000-க்கும் மேற்பட்ட அறநிலையங்களும், அவற்றில் 32,000-க்
கும் மேற்பட்ட திருக்கோயில்களும் உள்ளதாகக் கொள்கை விளக்க
குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கோயில்கள் மூலம்
அறநிலையத் துறைக்குச் சொந்தமான 5.25 இலட்சம் ஏக்கர்
நிலங்களிலிருந்து வர வேண்டிய குத்தகை பாக்கி ரூ. 35 கோடி
என்பதை அறியும்போது மிகுந்த அதிர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது.
' சிவன் சொத்து குல நாசம் ' என்பார்கள். ஆனால் அதைப்
பற்றி கவலைப்படாமல், சட்டங்களின் சந்து பொந்துகளில்
நுழைந்து கொண்டு, பலர் தப்பித்து வருவது இன்றைக்கு வேத
னைப் படக்கூடிய ஒன்றாக இருந்துவருகிறது. அப்படிப்
பட்டவர்களிடமிருந்து நிலங்களை உடனடியாக கையகப்
படுத்துவதற்கும், குத்தகை பாக்கியான அவர்களின் மற்ற
சொத்துக்களின் மீது வழக்கு தொடர்ந்து இழப்பீடு பெறுவதற்
கும் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்வதற்கு விரும்புகிறேன். பொதுச்
சொத்துக்களை நீண்டகாலக் குத்தகையாக, 99 வருடங்கள்
குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, ஒரு சில நூறு ரூபாய்களுக்கு
மட்டும் குத்தகையாக எடுத்து ஏமாற்றி வருவது இன்றைக்கு
வாடிக்கையான நிலைமையாகப் போயிருக்கிறது. பல ஆயிரக்
கணக்கான சதுர அடிகள் கொண்ட மனைகளை, சில நூறு
ரூபாய்களுக்குக் குத்தகை விடுவது என்பது எந்த வகையிலும்
ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். தங்களுக்கு வேண்டிய
வர்கள் என்ற காரணத்தினால், தவறான முறையில், தவறான
வழியில் செயல்பட்டு, அந்தச் சலுகைகளை, எப்போதோ
செய்யப்பட்ட ஒப்பந்தங்களை தயவுசெய்து நிறுத்தி வைக்க
வேண்டும். இல்லையேல், ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்
டும் என்று நான் இந்த நேரத்தில் அமைச்சரவர்களைக்
கேட்டுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டின் ஒரு மாநிலத்தின் வருவாயைப் பொறுத்த
மட்டில், சுற்றுலாத் துறை என்பது ஒரு மிகப் பெரிய பங்
கினை வகித்து வருகிறது. மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சி
யிலே மத்திய அரசு அக்கறையும், ஈடுபாடும் காட்டுவது மிகவும்
அத்தியாவசியமாகும்.

அதைப்போலவே திட்ட ஒதுக்கீட்டிலே மாநில அரசுக்குப்
போதிய உதவி செய்ய வேண்டும். ஆனால் மத்திய அரசு
செய்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்று
தான் இந்த நேரத்தில் சொல்லமுடியும். ஐந்தாவது ஐந்தாண்டு
திட்டக்காலத்தில், சுற்றுலாத் துறைக்கு என்று மத்திய அரசு
ஒதுக்கிய தொகை ரூ. 1,120 கோடி ; இதில் தமிழகத்திற்குக்



கிடைத்தது வெறும் ரூ. 7 கோடி மட்டும்தான். ஆறாவது
ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மத்திய அரசு ஒதுக்கிய
தொகை ரூ. 3,150 கோடி. இதில் தமிழகத்தின் பங்கு வெறும்
ரூ. 8 கோடி மட்டும்தான்.

அதுமட்டுமல்லாமல், குற்றாலத்திற்குப் பக்கத்திலே
கோதையாறு என்ற இடத்திலே விமானத் தளம் அமைக்க
வேண்டுமென்று மத்திய அரசிடம் பலமுறை கேட்டிருக்கிறோம்.
ஆனால் இதுவரை சரியான பதில் இல்லை. ஐரோப்பாவி
லிருந்து விமானத்தில் வருகின்றவர்கள், சென்னை
விமான நிலையத்தில் இறங்க அனுமதி கொடுக்க வேண்டும்.
இதன் மூலம் அன்னியச் செலாவணி நமக்கு அதிகமாகக்
கிடைக்கும் என்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். அதற்கு
அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குப் பதி
லாக திருவனந்தபுரம், கோவாவிற்கு அனுமதி தரப்பட்டிருக்
கிறது.

ரூ. 20 கோடி செலவில் இராமேஸ்வரத்தில் சுற்றுலா வர
வேற்பு மையம் ஒன்றினை நிறுவுவதற்கு மத்திய அரசிடம்
கேட்டிருந்தோம். பல முறை கோரிக்கைகள் விடுத்தும், தற்
போது தான் ஒப்புக் கொண்டிருப்பதை நான் இந்த சமயத்
தில் பாராட்டக் கடமை பட்டிருக்கிறேன்.

சுற்றுலாத் துறையில், சிறப்பு வாய்ந்த உள்ளூர்ப் பகுதி
களை மேம்படுத்த புரட்சித் தலைவர் அரசு காட்டி வருகின்ற
அக்கறையை நாம் இந்த சமயத்தில் பாராட்டியாக வேண்டும்.
என்னுடைய கன்னி உரையிலே கூட, என்னுடைய தொகுதியான
மைலாப்பூரிலே இருக்கின்ற திருவள்ளுவர் கோவிலை சுற்றுலா
மையமாக அமைக்க வேண்டுமென்று சொன்னபோது, மாண்பு
மிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதி
அவர்கள் பேசுகின்றபோது, சுற்றுலா மையமாக அமைக்க
வேண்டுமென்றால், அங்கே பல நூற்றுக்கணக்கான ஏழை
எளிய மக்களை காலி செய்துதான், சுற்றுலா மையம் உரு
வாகும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் மூலமாக தெரிவித்துக்
கொள்ள விரும்புவது அந்த ஏழைகள் குடிசை போட்டுள்ள
வர்கள் என்றால் எப்படி இந்தச் சென்னை மாநகரிலே ஒரு
வள்ளுவர் கோட்டம் வந்து இருக்கமுடியும்? வள்ளுவர் கோட்
டம் ஒரு காலத்திலே பார்க்கிற போது அந்தப் பகுதி முழுவதும்
குடிசைப் பகுதிகளாக இருந்தவை தான். எப்படி அந்த
இடத்தை வள்ளுவர் கோட்டத்திற்கு ஒதுக்கித் தந்து சிறப்பான
முறையில் அதை அமைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கினார்
கள் என்பதை நான் இந்த நேரத்திலே கேள்வியாகக் கேட்க
விரும்புகிறேன். அப்படி சுற்றுலா மையம் அமைகிற போது

அங்கே இருக்கிற ஏழை மக்கள் தங்குவதற்கு மாற்று ஏற்பாட்டை பல பகுதிகளுக்குச் செய்து தருகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக ஒரு ஏற்பாட்டைச் செய்து தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

இரண்டாவதாக நான் தெரிவித்துக் கொள்கிற கோரிக்கை ஒரு காலத்தில் வெளிநாட்டினர் தமிழகத்திற்கு வருகிறபோது கூடி மகிழ்ந்த கடற்கரைதான் எலியட் கடற்கரை. அதை மேம் படுத்துவதற்காக ஒரு குழு அதிகாரிகளால் அமைக்கப்பட்டது. அந்தக் குழு மாதம் ஒரு முறை கூடிக் கலைகிறதே தவிர சரி யான நிதி யாதாரங்கள் இல்லாத காரணத்தினால் அதை மேம் படுத்த இயலவில்லை. நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், அதை விரிவு படுத்துகிற சுற்றுலா மையமாக்குகிற திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அடையாற்றின் கரையோர மரங்களிலே பல நாட்டுப் பறவைகள் வந்து தங்கிக் கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப் பறவைகள் வந்து தங்குகிற காரணத்தினால் அங்கே ஒரு பறவைகள் சரணாலயத்தை அமைக்க வேண்டும் என்று நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

மதுரையில் உள்ள மடாலயத்தைப் பற்றித் தங்கள் மூல மாக நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மடாதிபதி என்று சொன்னால் தமிழ் வளர்ச்சிக்காகவும் சமூகத் தொண்டிற்காகவும் ஆன்மீகப் பணி களுக்காகவும் தொடங்கப்பட்டவை தான் மடாலயப் பணிகள். தமிழ் வளர்ந்து இருக்கிற மதுரையில் உள்ள அந்த மடாதிபதி அந்த மடாலயம் அமைக்கப்பட்ட பணியை விட்டுவிட்டு ஒரு குறிப்பிட்ட சிலபேர்களுக்கு வால் பிடித்துக் கொண்டு போவது பற்றிச் செய்திகள் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த மடாதிபதி நியமனத் திலும் ஏதோ உள் விவகாரம் இருப்பதாகப் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. அமைச்சர் அவர்கள் அந்த முறை கேட்டை விசாரிப்பதற்காக விசாரணைக் குழு அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தான் பல்வேறு ஆலயங்களின் அருமையும் பெருமையும் வெளிப் பட ஆரம்பித்திருக்கிறது. சென்னையிலிருந்து மாமல்ல





புரம் செல்கின்ற வகையில் ஒரு உல்லாசப் படகு கடல் யாக விடவேண்டுமென்று நான் தங்கள் மூலமாக மா மிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான மயிலாப்பூர் தொகுதி ஆலயங்களுக்குச் சொந்தமான பல இடங்கள் இருக்கின் பச்சையம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் உ அதைக் குறிப்பிட்ட சிலர் ஆக்கிரமித்துக்கொண்டு ஏழை எ மக்களைக் குடிவைத்து வாடகை என்ற பெயரால் அவர்க கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆக்கிர துக் கொண்டிருப்பவர்களை அகற்றிவிட்டு அந்த இடங்க யெல்லாம் தயவு செய்து குடிசை மாற்று வாரியத்தி ஒப்படைத்து அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டும் அல் அவர்களுக்கு மாடிவீடுகளை அங்கே கட்டுடித்தரவேண்டுமெ நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் செ கிறேன்.

திருவண்ணாமலைக் கோயிலுக்குச் சொந்தமான இடங் என்னுடைய தொகுதியான மயிலாப்பூரில் இருக்கின் அங்கே அருணாசலபுரம் பகுதியிலே 300 ஏக்கர் நிலம் இ கிறது. அங்கே 30 வருடகாலமாக பொதுமக்கள் வாழ் கொண்டிருக்கிறார்கள், அதிலே சில பணக்காரர்கள் அதிகம இடங்களை அங்கே வளைத்துப்போட்டுக் கொண்டு அ இடங்கள் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அவர்களை அங் யிருந்து காலிசெய்ய வைத்து அந்த இடத்தை குடிசை மா வாரியத்திலே ஒப்படைத்து அவர்களுக்கு—ஏழை மக்களுக்கு பட்டா வழங்கவேண்டும், என்று நான் அமைச்சர் அவர்கள கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

வனத் துறையைப் பொறுத்தவரையிலும் சந்தன ம களை வளர்ப்பதிலும் சந்தன எண்ணெய் உற்பத்தி செ வதிலும் தமிழகம் குறிப்பிடத் தக்க இடத்தை வகித்து வ கிறது. ஆனால் 1978 ஆம் ஆண்டு முதல் சந்தன மரங்க ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிற இதனால் மாநில அரசுக்கும் வருவாய் குறைந்திருக்கிறது; ம திய அரசுக்கும் அன்னியச் செலாவணி குறைந்திருக்கிற ஆகவே சந்தன மர ஏற்றுமதிக்கு இருக்கின்ற தடை நீக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய தமிழக அர வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கோரிக்கை யாக வைப்பதற்கு விரும்புகிறேன்.

இன்னொன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோடியக் கரை, முண்டந்துறை வன விலங்கு சரணாலயங்களை அதிகமான மக்கள் பார்க்கின்ற விதத்தில் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார் குடா கடலின் நீர் உயிரினப் பூங்கா அமைக்கின்ற திட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டத்திற்கு மிகவும் சிறப்பான இடமாக இருக்கக்கூடிய, நம்முடைய கையை விட்டுப் போய் இருக்கின்ற கச்சத் தீவுதான். மத்திய அரசோடு பேசி, தேவைப்பட்டால் நாம் அனைவரும் கலந்து பேசி —இல்லையென்றால் போராடியாவது இந்தக் கச்சத் தீவைத் திரும்பப்பெற்று இந்த உயிரினப் பூங்காவை அங்கே அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் நம்முடைய உரிமையும் நிலைநாட்டப்படும்; அங்கே உயிரினப் பூங்காவும் ஏற்படுவதற்கான வழிவகையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலயங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்திற்கு ஐயாயிரப் ரூபாய் தரும் திட்டம் ஒன்று உள்ளது. இந்த ஐயாயிரம் ரூபாய் என்பது நிச்சயமாகப் போதாத ஒன்றுதான். எனவே, அந்த ஐயாயிரம் ரூபாயை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களை இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான மயிலாப்பூரில் உள்ள காரணீஸ்வரர் திருக்கோயிலைப் பராமரிப்பதற்குச் சரியான, போதுமான வருமானம் இல்லாமல் இருந்தது. அதுபற்றி அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களிடத்தில் பலமுறை சொல்லியும், அமைச்சரவர்களிடத்தில் தெரிவித்தும் வந்ததன் காரணமாக நலிந்த கோயில்களை வளப்படுத்தும் திட்டத்தின் கீழ் காரணீஸ்வரர் கோயிலை ஏற்றுக்கொண்ட காரணத்திற்காக நான் இந்தச் சமயத்தில் இந்தத் துறைக்கும், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்களை இழிவுப்படுத்துகின்ற விதத்தில் சில ஆபாச சுவரொட்டிகள் சென்னை மாநகரத்தின் முக்கியமான பகுதியாக இருக்கின்ற அண்ணா சாலையில் சரியான அளவில் இல்லாத அளவிற்கு ஒட்டப்பட்டிருக்கின்றன. தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். பெண்களை இழிவுபடுத்துகின்ற அந்தச் சுவரொட்டிகளை தயவு செய்து அகற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





சென்சார் போர்டு என்று வைத்திருக்கிறார்கள். அந்த சென்சார் போர்டு மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது. இங்கேயிருந்து சில திரைப்படங்கள் அங்கே போகின்ற பொழுது, சென்சார் போர்டு சென்சார் செய்கிறது என்றாலும் கூட, அவர்களுக்குத் தெரியாமலேயே சில ஆபாசக் காட்சிகள் இருந்து விடுகின்றன. தமிழ்நாட்டினுடைய பண்புக்கு ஒத்து வராத சில காட்சிகள் இடம் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் எடுக்கப்படும் படங்களை சென்சார் செய்யும் அந்த உரிமையைத் தமிழ்நாடு அரசாங்கத்திற்கே தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நம்முடைய தமிழக அரசு வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதற்கு விரும்புகிறேன். ஏனென்றால், பெண்களை இழிவுபடுத்தக்கூடிய சுவரொட்டிகளைப் பார்க்கின்ற பொழுது, ஏதோ அரசாங்கம்தான் தவறு செய்கிறது என்ற முறையில் சில தாய்மார்கள் தவறான எண்ணத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்கான திரைப்படங்களை எடுக்கின்றபொழுது அதற்கு அதிகமான முன்னுரிமை தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

'' தமிழரசு '' என்ற பத்திரிகையை அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகைகள் குறிப்பிட்ட சில அதிகாரிகளுக்குச் செல்கின்றன; இன்னும், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அமைச்சர்கள், சில அரசு அலுவலர்கள் ஆகியவர்களுக்கு மட்டுமே போகின்றன. இந்தத் தமிழரசு பத்திரிகையில் அரசு செய்திகள் வருகின்றன ; அரசாங்கம் நடத்துகின்ற விழாக்கள், புரட்சித் தலைவரவர்களின் அரசு செய்கின்ற நல்ல காரியங்கள் ஆகியவைகள் பற்றி சரியான முறையில் இடம் பெறுகின்ற பத்திரிகை அந்தத் தமிழரசு பத்திரிகைதான். ஆனால் அந்தப் பத்திரிகை ஏழை எளிய மக்களுக்குப் போகின்ற அளவிற்கு, அவர்களுக்கு தமிழரசு என்ற பத்திரிகை நடைபெறுகிறது என்று விளம்பரப் படுத்தாத காரணத்தால் இப்படிப்பட்ட பத்திரிகை நடத்துவதே அவர்களுக்குத் தெரியாமல் போகிறது. ஆகவே, நான் தங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்தத் தமிழரசு பத்திரிகையை கிராமப்புறங்களிலே உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை மக்களும் படித்துப் புரிந்து, தெரிந்து கொள்ளும் அளவிற்கு அந்தப் புத்தகத்தை விற்பனைச் செய்ய வேண்டும் அல்லது கிராமங்களில் உள்ள அலுவலங்களுக்காவது அனுப்பி அதற்கென்று ஒரு முக்கியத்துவத்தைத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி பா. வளர்மதி] [1986 எப்ரல் 25

இன்னொன்று, அரசு அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும் என்பார்கள். ஆலயத்தில் பணியாற்றுபவர்கள் அரசுப் பணியாளர்களாகத் தங்களையும் ஆக்க வேண்டும்மென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து கேட்டு வருகின்றார்கள். அன்றே கேட்க வேண்டிய அரசு கேட்கவில்லை. ஆனால், இன்று நின்று கேட்கின்ற தெய்வம் போல் விளங்குகின்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களது குறையைப் போக்கி, அரசுப் பணியாளர்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. ஆலயத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற பொழுது, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் கோயிலுக்குப் போகிறார்கள். ஆனால், திருவிழாவை, திருக்கோயிலுக்கு உள்ளே சென்று அல்லது சரியான முறையிலே பார்க்க முடியவில்லை. ஆகவே, வெளிநாட்டவர்கள் வந்தால், ஆலயத் திருவிழாக்களை ஆலயங்களுடைய அருமை, பெருமைகளை, வீடியோ திரைப் படங்கள் மூலம் எடுத்து, அவர்களுக்குப் போட்டுக் காட்டக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று, இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், பொது மக்கள் கூடுகின்ற முக்கியமான இடங்களிலே தொலைக் காட்சிப் பெட்டிகளின் மூலமாக, அல்லது விளம்பரபோர்டுகளின் மூலமாக தமிழ்நாட்டிலே இருக்கிற முக்கிய கோயில்களின் அருமை பெருமைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலே, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்காக தந்துள்ள மானியக் கோரிக்கையில் அரசு ரப்பர் தோட்டங்களைப் பற்றிச் சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசு ரப்பர் கழகத்தை அமைத்ததை நிச்சயமாக நாங்கள் வரவேற்கிறோம். அமைச்சர் அவர்களுக்கும் அது நன்கு தெரியும். தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் தான் அமைச்சர் அவர்கள் அந்தக் கழகத்தை ஏற்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார் என்பதையும் நாங்கள் நன்கு அறிவோம். ஆனால் இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குறிப்பிலே 2,532 தொழிலாளர்கள் வேலை செய்வதாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஏறத்தாழ 3,000-க்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வசதிக்காக ரூ. 27.8 இலட்சம் செலவு செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நேரத்திலே, பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஏறத்தாழ 600 தொழிலாளிகளுக்கு நிரந்தரத் தொழி



1986 எப்ரல் 25] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

லாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய மருத்துவ வசதிகளோ அல்லது ப்ரடொக்ஷன் க்ளோத்ஸ்—அவர்களை பாதுகாத்துக்கொள்வதற்குக் கொடுக்கக்கூடிய வஸ்திரங்களோ கொடுக்கப்படவில்லை. அதே போன்று, அவர்களில் பலருக்கு அவதி சம்பளம் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலை நிச்சயமாகப் போக்கப்பட வேண்டும்.

அதற்கு மேலே, அங்கு பல தோட்டங்களிலே, பல தொழிலாளர்கள், 10 ஆண்டுகளாக வேலை செய்வதற்குப் பிறகுகூட நிரந்தரப்படுத்தப்படாத நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கீரிப்பாறை பாக்டரியிலே, 10 ஆண்டுகள் சர்வீஸ் செய்த 17 தொழிலாளிகள் நிரந்தரப்படுத்தப்படுவதற்கு தகுதி உடையவர்கள் என்று அந்த நிர்வாகம்கூட ஏற்றுக் கொண்டது ஆனால், அவர்களுக்கு இன்று வேலைகூட மறுக்கப்பட்டிருக்கிறது. சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்ற நேரத்திலே, அந்தத் தொழிலாளர்கள் அவர்களை நேரடியாகச் சந்தித்து அந்தக் குறைபாடுகள் பற்றியெல்லாம் பேசினார்கள். ஆனால், இன்னும் அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படவில்லை.

(பிற்பகல் 12-10)

அது மட்டுமல்ல, அங்கேயிருக்கக்கூடிய நிர்வாகம் இன்று அந்தத் தொழிலாளர்களைப் பழி வாங்கக்கூடிய நிலையில் நடந்து கொண்டிருக்கிறது. வேலையிருந்துங்கூட, அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அதை எதிர்த்து அவர்கள் சத்தியாக்கிரகம் இருந்த நேரத்திலே, காவல் துறையினைப் பயன்படுத்தி, அது வனத் துறைக்கு உரிய இடம், அங்கே சத்தியாக்கிரகம் இருக்கக் கூடாது என்று அடித்து விரட்ட முயற்சித்தார்கள். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சி காரணமாக அந்தத் தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட அந்த ஸ்தாபனத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது நிச்சயமாக அழகல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு தொழில்கள் வளரவேண்டுமென்று சொல்லும் போது தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களும் மனிதர்கள்தான் என்ற முறையில் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், அவர்களுடைய வசதிகள் நல்லமுறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்த முறையிலே அங்கே இருக்கிற நிர்வாகம் நடந்து கொள்ளவில்லை. தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஒரு சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. குத்தியால் இரப்பர் தோட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒன்றை

இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட ஒரு புகாரை 3-1-1986-ல் கொடுத்திருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் எனக்கு பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே விசாரணை நடத்தப்பட்டது. 20-3-1980 அன்று எனக்கு அரசு ஆணையர் மற்றும் செயலர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். பழுதடைந்ததன் காரணமாக வாகனம் கொடுக்க முடியவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஸ்ரீலங்காவிலிருந்து வந்து, அந்தத் தோட்டத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் கொத்தடிமைகள் போல நடத்தப்படுகிறார்கள். ஒரு ரேஞ்சர் அந்த அளவுக்கு அவர்களை மிரட்டுகிறார். நானே நேரில் அதைப் பார்த்தேன், ஒரு பெண்மணி சுகவீனமாகி, மருத்துவமனைக்குச் செல்ல வாகன வசதி கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, நானும் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார் என்றுகூட பார்க்காமல், வாகன வசதி செய்து கொடுக்காமல், உதாசீனப்படுத்தினார்கள். அதன்பேரில் தொழிலாளர்கள் தகராறு பண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டு, இன்னொரு ரேஞ்சர் தலையிட்டு, வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட போக்கு வன இலாகா அதிகாரிகளிடத்தில் இருக்கிறது. அவர்கள் மாடுகளை எப்படி நடத்துவார்களோ அதைப்போன்று மனிதர்களை நடத்தக்கூடிய போக்கு இருக்கிறது. இந்தப் போக்கை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஸ்ரீலங்காவிலிருந்து வந்து வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வர போக்குவரத்து வசதி ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அதற்காக போராட்டம் நடத்தக்கூடிய சூழ்நிலைகூட ஏற்பட்டது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே போக்குவரத்திற்காக கொடுக்கப்பட்ட பணம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் கொடுப்பதற்கு 'பிளான்டேஷன் லேபர் அட்வைசரி கமிட்டியில்' கூட விவாதிக்கப்பட்டது. தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கூட அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினார். ஆனால் இன்னும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஒரு சில வருஷங்களுக்கு முன்னால் இந்தக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு அட்வைசரி கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். தொழிலாளர்களுக்கு பிரதிநித்துவம் கொடுக்கக்கூடிய முறையில் அந்த அட்வைசரி கமிட்டியை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட பிரச்சினை





களுக்கு தீர்வு காண முடியும். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி இந்த சட்டப்பேரவையில் பேசக்கூடிய நிலைமையும் தவிர்க்கப்பட்டுவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனியார் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பிரச்சினை ஒரு நீண்ட போராட்டத்திற்குப் பின்னால் தொழில் நீதிமன்றத்திற்கு விட்டு ஓரளவுக்கு முடிந்திருக்கிறது. 24-2-1986 முதல் நீதிமன்ற விசாரணைக்கு கொண்டுவந்துவிட்டார்கள். ஆனால் தமிழக அரசு ரப்பர் கழகத்தில் இந்தப் பிரச்சனைக்கு தனியாருக்கு ஆதரவாக இருப்பது துரதிர்ஷ்டமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1-2-1986 முதல் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் 9-ஏ நோட்டீஸ் கொடுத்து, தனியார் நிறுவனங்களில் எதை விரும்புவார்களோ அதை அமுல்படுத்த இன்றைக்கு அங்கிருக்கிற மானேஜிங் டைரக்டர் முடிவெடுத்திருக்கிறார். நானும் அது சம்பந்தமாக கடிதம் எழுதியிருக்கிறேன். இன்றைக்கு தனியார் நிறுவனத்தில் 8 கிலோ பால் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகின்றபோது அரசு இரப்பர் கழகத்தில் $9\frac{3}{4}$ (ஒன்பதே முக்கால்) கிலோ பால் எடுத்து கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைக்கூட அழைத்துப் பேசுவதற்கு தயாராக இல்லாத நிலையில், நிர்வாகத்தின் விருப்பப்படியே 9-ஏ நோட்டீஸ் கொடுத்து, அமுல்படுத்த முயற்சி செய்து நிச்சயமாக தமிழக அரசு எந்த நோக்கத்திற்காக இந்தக் கழகத்தை அமைத்திருக்கிறதோ அந்த நோக்கத்திற்கு ஏற்றதாக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் தலையிட வேண்டும். இன்று தொழிலாளர்களுக்கு விரோதமான முறையில் அந்த நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சின்கோனா தோட்டத்தைப் பொறுத்தவரையில் 12 ரூபாய் 65 காசுதான் டீ.ஏ. உட்பட அவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய முறையில் அதே ஊதியத்தை இந்த சின்கோனா தோட்டத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். அந்தத் தோட்டத்திலே வேலை செய்யக்கூடியவர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை. அதுபற்றிக் கேட்டால் போனஸ் சட்டத்தில் அது வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடும். நான் இங்கே ஒரு கணக்கினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலத்திலே இருக்கின்ற பாலிசி நோட்டினுடைய 11-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதை நான் சொல்கிறேன்.

'The estimate for 1986–87 will show al oss of Rs. 35.02 lakhs (estimated) after meeting the interest charges of Rs. 150.00 lakhs.' என்ற முறையில் அதாவது இன்றைய மூலதனத்தைவிட அதிகமான அளவுக்கு இலாபம் ஈட்டிக் கொடுக்கக்கூடிய முறையில் சென்றிருக்கிறது. இதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அது அரசுத் துறையாக இருந்தாலும் அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நஷ்டம் ஏற்பட்டாலும்கூட குறைந்த பட்சம் போனஸ் கிடைக்க உரிமை உண்டு. எனவே இது போனஸ் சட்டத்தினுடைய பிரச்சினைக்குள்ளே வராது என்றாலும் நான் பணிவோடு ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஒரு மாதச் சம்பளத்தை எக்ஸ்கிரேஷியாவாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேயிலைத் தோட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அந்தத் தொழில் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. அது இன்றைக்கு இலாபம் ஈட்டிக் கொடுக்கிறது. தனியார் தோட்டங்களில் கொடுக்கப்படுகின்ற ஊதியத்தைவிட இரண்டு ரூபாய் குறைவாகத்தான் இந்தத் தோட்டங்களில் பணிபுரிகிற ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. போனசும் மினிமம் போனஸ்தான் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் கவனிப்பதில்லை. அதிலே பல அதிகாரிகள் இன்று ஃபராஸ்ட் இலாக்காவிலே இருந்து டெப்புடேஷனிலே வந்திருப்பவர்கள். அவர்கள் அந்தக் கண்ணோட்டத்தில் தான் இந்தத் தொழிலாளர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாடல் ஸ்டேண்டிங் ஆர்டரிலே உள்ள விதியைக் கூட நடைமுறைப் படுத்தாத நிலைமை இருக்கிறது. மேனேஜ்மென்டைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு விதிக்குள் இருந்து தொழிலாளர்களை நடத்தவேண்டும். மாடல் ஸ்டாண்டிங் ஆர்டர் கூட இன்றைக்கு கடைப்பிடிக்கவில்லை. இது சட்டவிரோதமான செயல் என்று தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பழி வாங்குகின்ற நடவடிக்கைகளை நிர்வாகம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அது சரியல்ல. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற பாலிசி நோட்டிலே வனத்தைப் பாதுகாப்பதற்கான சில நடவடிக்கைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். வனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. ஆனால் தமிழகத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் களியல் கிராமத்தில் மருதம்பாறை அரசு ரப்பர் தோட்டத்தில் அருகே சர்வே செய்யப்படாத வெள்ளரிக்கனி என்ற 100 ஏக்கர் வனம் இருக்கிறது. அந்த வனத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு





முன்னாள் எம்.எல்.ஏ.வினுடைய மாமனார் பெயரில் பட்டா செய்து கொடுக்க மதுரையிலிருக்கின்ற செட்டில்மென்ட் அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்புதலுக்காக அது குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். நான் செக்ஷன் 93-ன் அடிப்படையில் நோட்டீஸ் கொடுத்து விட்டுத்தான் பேசுகிறேன். அவர்கள் இன்று அவையில் இல்லாததன் காரணத்தால்தான் நான் அவர்களுடைய பெயரைச் சொல்லவில்லை. அவர்களுடைய மாமனார் பெயரில் பட்டா செய்து கொடுப்பதற்காக மதுரையிலே உள்ள செட்டில்மென்ட் ஆபிஸிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு அது ஒப்புதலுக்காக குமரி மாவட்ட ஆட்சித்தலைவலர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இது சரியல்ல என்று நான் பேசி இருக்கிறேன். எனவே இது தானாக நடந்த ஒரு செயல் அல்ல. வன இலாக்காவின் அதிகாரிகளுடைய உதவியோடு 1983 ஆம் வருஷத்திலே அந்த பகுதியிலே குடியிருந்த காணிப் பிரிவைச் சேர்ந்த மலைவாழ் மக்களை அடித்து விரட்டியிருக்கிறார்கள் அந்த இடத்திலிருந்து. 1983-வது வருடத்திலே அந்த மலைவாழ் மக்கள் அடித்து விரட்டப்பட்டதற்குப் பிறகு, அவர் அந்த இடத்தை தம் கையிலே வைத்துக்கொண்டு, அதற்கு பட்டா தர வேண்டும் என்று, உரிய நடவடிக்கைகளை எடுத்தார். இன்று அதற்கு பட்டா வழங்குகின்ற முறையிலே நிலைமைகள் வந்திருக்கின்றன. 1983-வது வருடத்திலே மாண்புமிகு வனத்துறை அமைச்சருடைய கவனத்திற்கு அன்றைய விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. மணி அவர்கள் இதை பல முறை சொல்லியிருக்கிறார்கள். இப்படி மலைவாழ் மக்களை அந்தப் பகுதியிலே இருந்து விரட்டியடிக்கக்கூடிய முறையில் வன இலாகா அதிகாரிகள் தொந்திரவு கொடுத்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்தப் பகுதியில் இருந்து அடித்து விரட்டுவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள் என்று பலமுறை சுட்டிக்காட்டி பேசியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் அதை எதற்காக சுட்டிக் காட்டுகிறேன் என்றால் வன இலாகா பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை நாம எல்லோரும் விரும்புகிறோம். அதிலே மாற்று கருத்து கிடையாது.

(பிற்பகல் 12-20)

அதனாலேயே வனப்பகுதியில் குடியிருக்கும் ஆதித்திராவிட மக்கள் அல்லது மலைவாழ் மக்களுக்கு குடிதண்ணீர் வசதிக்காக வேண்டி அங்கே ஒரு கிணறு தோண்டுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. அதேபோல மின்சார வசதிக்கு ஏற்பாடு செய்வதற்கோ போர்வெல் போடுவதற்கோ கூட அனுமதிக்கப்படுவதில்லை. ரோடுகள் போடுவதற்குக் கூட அனுமதிக்கப்

படுவதில்லை. ஆனால் அதே வன இலாகா இன்று இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கிறது என்பதை சுட்டிக் காட்டத்தான் இந்த நேரத்திலே நான் அதைச் சொன்னேன்.

இன்று வன இலாகாவைப் பொறுத்த அளவிலே அது பாது காக்கப்பட வேண்டும் என்பதைப் பொறுத்த அளவிலே மாற்று கருத்து இல்லை. அதே நேரத்தில் இன்று வசதி உள்ளவர்களுக் காக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் செய்யப்படுவது சரி யல்ல.

இன்று இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அறநிலையத் துறையைப் பொறுத்த அளவிலே அதிக மான அளவிலே ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஒரு ஆலயத்தினுடைய வருவாயை வைத்துக் கொண்டு, அங்கே கிடைக்கக்கூடிய வருவாயை வைத்துக் கெண்டு, அதன் அடிப்படையில்தான், அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் அல்லது கொடுக்க முடியும் என்ற கொள்கை இருப்பது சரியல்ல. இன்று ஆணை யாளருக்கு ஜெனரல் நலநிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) அந்த நிதியிலிருந்து அந்த ஊழியர் களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே ஆலய ஊழியர்களின் ஊதியப் பிரச்னை நீண்டகாலமாக முடிவு செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு ரிடையர்மெண்ட் பெனிபிட் கூட இல்லாத நிலை இருந்து கொண்டிருக் கிறது. இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது இன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற கோவில்கள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் திருத்தி அமைப்பதற்கு மைய அரசும், மாநில அரசும், என்னென்ன நட வடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சமீபத்திலே டெல்லியிலே நடந்த தேசீய மகாநாட்டிலே கூட கோவில்களை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பது பற்றி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சட்டம் வந்திருக்கிறது. இன்று தமிழகத்தில் உள்ள பல கோவில்களில் ஆயுத பயிற்சி நடந்துக் கொண்டிருக்கிறது. அப்படி கோவில் வளாகத்திற் குள்ளேயே ஆயுத பயிற்சியை மேற்கொள்ளும் அந்த நட வடிக்கையை நிச்சயமாக அரசு அனுமதிக்கக்கூடாது. தடுக்க வேண்டும். இல்லையென்றால் எப்படி அது பஞ்சாபிலே மிகப் பெரிய கலவரத்தை ஏற்படுத்தியதோ, அது போன்று இங்கேயும் ஏற்படுத்திவிடும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்பு வது அறநிலையத் துறையைச் சார்ந்த நிலங்களில் பல இன்று குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. குத்தகைக்கு வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாய மக்கள், 7 ஆண்டுக்கால மாக வறட்சியுற்ற காரணத்தால் விளைச்சல் அற்று, குத்தகையை கொடுக்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்கே அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும், அதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, அங்குள்ள இந்தத்துறை எம்பிளாயீசுக்கு புரொமோஷன் கொடுப்பதற்கான ஆப்பர்சூனிட்டி இல்லை. அதை ஏற்படுத்த வேண்டும். அதேபோல டெபுடி கமிஷனர் அந்தஸ்திலே ஒரு அதிகாரி நியமனம் செய்யப்பட வேண்டும். தகுதியும், அவசியமும் இருந்தும் டெபுடி கமிஷனர் போஸ்ட் நியமனம் செய்யப்படவில்லை. அதை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு.. (மணியடிக்கப் பெற்றது).

**திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்து சமய அறக்கட்டளைகள், காட்டு வனத்துறை, சின்கோனா, செய்தி சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் ஆகிய மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்பு கிறேன்.

அறநிலையத் துறை புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நிர்வாகத்தின் கீழ் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நல்லவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நடுநிலையாளர்கள் வரவேற்றுக் கொண்டு இருக்கிறார்கள். சமயபற்று உடையோர் புகழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் சிலருக்கு மட்டும்தான் அதை பாராட்டுவதற்கு மனம் இல்லை என்பதை நாம் ஒத்துக் கொண்டேயாக வேண்டும். இன்றைக்கு தமிழக அரசு கோவில்களுடைய நிர்வாகத்தை சீர்படுத்தி, செம்மைப் படுத்தி, கோவில்களுடைய வருமானத்தையும், உண்டியல் வரு மானத்தையும் அதிகப்படுத்தி அறநிலையத் துறைக்கு அரும் பணி ஆற்றி வருகிறது. புரட்சித் தலைவர் அரசு எண்ணற்ற பல திட்டங்களை ஆற்றுவதோடு ஆலயங்கள்தோறும் தங்கத் தேர்கள் அமைப்பதும், ஆலய விக்கிரகங்கள், நகைகளைப் பாது காப்பதும், ஆலயங்களைப் புதுப்பிப்பதும் போன்ற பல அருமையான திட்டங்களை செய்து வருகிறது. அதுமட்டு மல்லாமல் ஏழு கோடி ரூபாய் திட்டமென்ற மகத்தான ஆலய மேம்பாடுத் திட்டத்தை இன்றைக்கு அறிவித்து நடத்தி வரு வது இந்த அரசினுடைய சிறப்பிற்கு பெருமை சேர்க்கிற அளவிலே இருக்கிறது.

இந்து சமய அறநிலையத் துறை ஆலயங்களுக்கு புதியதொரு சகாப்தத்தை புரட்சித் தலைவர் ஆட்சி செய்து கொண்டு வருகிறது. 1977 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருக்கிற அத்தனை கோவில்களுடைய வருமானத்தில் மிச்சப்படுத்தப்பட்ட தொகை $4\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகும். ஆனால் இன்றைக்கு இந்த அரசு சிறப்பான செம்மையான நிர்வாகத்தின் மூலமாக 20 கோடி ரூபாய்க்கு அதிகமாக தொகையை மிச்சப்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் இந்தத் துறையின் சாதனைக்கு அது ஒரு எடுத்துக்காட்டாகும்.

சிறப்பிற்குரிய பல காரியங்களை துறை செய்து வந்தாலும், அரசு நிர்வாகப் பொறுப்பில் இல்லாத பல ஆலயங்களில் சமயத் துறை என்ற பெயரால் பொறுப்பிலே இருப்பவர்கள் செய்கிற தவறுகளை அரசு கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையென்ற காரணத்தால் ஒரு சிலவற்றை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். நம்முடைய முன்னோர்கள் பொதுமக்களுடைய நன்மைக்காகவும், அறவழிக்காகவும் விட்டுச் சென்ற பல சொத்துக்களை சிலர் தர்மகர்த்தாக்கள் என்ற பெயரில், ஆதீனங்கள் என்ற முறையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய சொந்த சுகபோகங்களுக்காக அப்படிப்பட்ட சொத்துக்களை அவர்கள் அனுபவித்து வருவதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். 20 ஆம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கிறதா என்று ஆச்சரியப்படுகிற அளவிற்கு பல இடங்களில் இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

பொதுமக்கள் பக்தியின் பெயரால் பொருள்களைத் தருகிறபோது அதனை தன் சுயநலத்திற்காக பயன்படுத்துகிற நிலைமையை நாம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறநிலையத் துறையைச் சேர்ந்த மடங்களை இன்றைக்கு தனியார் அனுபவித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதை அரசு உன்னிப்பாக கவனித்து அதற்கான நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல ஆலயங்கள் பரம்பரை அறங்காவலர்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 84 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற கோவில்களுக்குச் சொந்தமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், விலை மதிப்பற்ற சொத்துக்களும், கட்டடங்களும் இந்த பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பில் இருக்கின்றன. அவை எப்படி பராமரிக்கப்படுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.





அறநிலையத்துறை சட்டப்படி கணக்குகளை அவர்கள் அறநிலையத்துறையின் பெயருக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான நிலைமையை நிர்வாகத்திற்கு அவர்கள் தெரிவிப்பதில்லை. பரம்பரை அறங்காவலர்கள் உள்ள கோவில்களுக்கு நம்முடைய அரசு நிர்வாக அலுவலர்களை நியமிக்கிற போது ஒருசில சொத்துக்களுக்கு அதிபதியாக இருக்கிற அந்த தர்மகர்த்தாக்களும், ஆதீனங்களும் நீதி மன்றங்களுக்குச் சென்று தடை வாங்கிவிடுவதன் காரணமாக அரசு நிர்வாக அலுவலர்களை நியமிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட ஆலயங்களில் சொத்துக்களையும், வருமானங்களையும் தனிப்பட்டவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதால், கோவில்களுக்கு திருப்பணிகளை செம்மையாக செய்ய முடியவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக இருந்து வருகிறது. அரசு அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தி, கண்காணிக்கக் கூடாது என்றுகூட இன்றைக்கு சொல்கிறார்கள். இப்படி அரசியல் சட்டத்திலே ஏற்பட்டிருக்கிற இடையூறுகளை போக்குகிற அளவிற்கு தமிழக அரசு சட்ட திருத்தங்களைக் கொண்டு வந்தது. இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட சொன்னார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதற்காக ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியது. அந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிற போது மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுதான் அறிமுகப்படுத்தி சட்டத்தை நிறைவேற்றியது. ஆனால் இதுவரையில் மத்திய அரசின் அனுமதி அதற்குக் கிடைக்காமல் இருக்கிறது. அப்படி அந்த அனுமதியை பெற்றால் தனிப்பட்டவர்கள், ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பவர்கள் போன்றவர்களை தடுக்கிற நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரம்பரை அறங்காவலர்களுடைய ஆலயங்களில், தனியார் மடங்களில், கோவில் நிர்வாகம் சம்பந்தமாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கனவே மத்திய அரசு சி.பி. இராமசாமி அய்யர் அவர்கள் தலைமையில் குழு அமைத்து, அந்தக் குழு இவற்றை பரிசீலனை செய்து, பரிந்துரைகூட வழங்கியிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

ஆதீனகர்த்தர்கள் அல்லது பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பிலே இருக்கிற ஆலயங்களையும், அதற்கான சொத்துக்களை எல்லாம் அரசினுடைய நிர்வாகங்களுக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர்கள் தெளிவாக தன்னுடைய பரிந்துரையில் வலியுறுத்தி இருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு நல்ல முடிவு கட்டவேண்டும் என்று சொன்னால், அரசு துணிந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதற்கு மத்திய அரசு நமக்கு அனுமதி தந்தாக வேண்டும்.

ஆந்திர மாநிலத்தில் இப்படி மகந்துகள் அங்கே தனிப்பட்ட முறையில் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் கருதி, ஆந்திர அரசு சட்டத்தைப் போட்டு, திருப்பதியிலே இன்றைக்கு அந்த நிர்வாகத்தை எடுத்து நடத்திக் கொண்டு இருக்கிறது. அதைப்போலவே புகழ் பெற்ற காசி விஸ்வநாதர் ஆலயத்தைப் பொறுத்தவரையில், அங்கே உள்ள உத்திரப்பிரதேச அரசு சட்டத் திருத்தத்தைப்போட்டு, அந்த நிர்வாகத்தை எடுத்துச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை இன்றைக்கு தமிழகத்திலே கொண்டு வந்தால் மடாதிபதிகள், ஆதீனகர்த்தர்கள், பரம்பரை அறங் காவலர்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டுவதற்கு, இது ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு சமத்துவ சமுதாயத்தை, சமயத்துறையில் அமைப்பதற்கு பாடுபட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் இந்தத் துறையில் ஒருசில ஆதீனங்கள் எவ்வளவு அகம்பாவத் தோடு நடந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் மிக நன்றாக அறிவார்கள். சமயத் துறையிலிருப்பவர்கள் இன்றைக்கு சந்தர்ப்பவாதிகளாக உருவாகிக்கொண்டு இருக்கிறார்கள். ஆன்மீக நெறியை போதிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்கள் அரசியல்வாதிகளாக மாறி, இன்றைக்கு ஆன்மீக நெறிக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். சத்தியத்தை, சமய நெறியை ஆயுதமாக வைத்து சமய நெறியைப் பரப்ப வேண்டியவர்கள், துப்பாக்கியைக் காட்டுகிற வேடிக்கை மனிதர்களாக, கோமாளித்தனமாக, இன்றைக்கு சமயத் துறையை இழிவுபடுத்திக் கொண்டு வருவதை, பொதுமக்கள் உணர்கின்ற அளவிற்கு மக்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப் பட்டவர்கள் இன்றைக்கு ஆன்மீகத் துறைக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட தனிப்பட்டவர்கள் செய் கின்ற அட்டூழியங்களுக்கும், அவர்கள் அனுபவிக்கின்ற அந்த ராஜபோக வாழ்க்கைக்கும், ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சமயத்துறையில் இன்றைக்கு எப்படி அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறதோ, அதேபோல் வனத்துறை யிலேயும் இன்றைக்கு தமிழக அரசு சிறப்பாக நல்ல நிர்வாகத்தை நடத்திக்கொண்டு இருக்கிறது. காடுகள் என்பது இந்த நாட்டி னுடைய பொருளாதாரத்திலே, மக்களுடைய நல்வாழ்விலே மிக முக்கியமான ஒரு பங்கை வகித்துக்கொண்டு இருக்கிறது. நாட்டினுடைய நீர் வளம், நில வளம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் வன வளம் நன்றாக அமைந்தாக வேண்டும். ஆகவே இன்றைக்கு தமிழக அரசு மிகச் சிறப்பாக செய்துகொண்டு இருக்கிறது.





1986–87 ஆம் ஆண்டுகளில் காடுகள் மூலம் எதிர்பார்க் கின்ற வருவாய் 27.73 கோடி இருக்கும் என்று சொல்லப்படு கிறது. இந்த வருவாயில் பெரும்பான்மையான வருவாய், சந்தனமரத்திலே இருந்து கிடைக்கிறது. ஆனால் சில ஆண்டுக் காலமாக அந்த வருமானம் நமக்கு குறைக்கப்பட்டு இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு சந்தன மர ஏற்றுமதிக்குத் தடை விதித்ததன் காரணமாக இன்றைக்கு அதனுடைய விலை குறைக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு அளிக்கப்பட்டு இருக்கிற மானியப் புத்தகத்தில், 1977 ஆம் ஆண்டு எந்த விலைக்கு சந்தனக் கட்டைகள் ஏலம் போனது என்பதையும், அதற்குப் பிறகு எந்த அளவிற்கு குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இங்கே தெளிவாகச் சொல்லியிருக் கிறார்கள். மத்திய அரசு தடை விதித்ததற்கு முன்பாக ஒரு டன் ஏறக்குறைய 57 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ஏலம் போனது. ஆனால் தடை விதித்த பிறகு, 1977 ஆம் ஆண்டிலே யிருந்து எவ்வளவு வருவாயை அது ஈட்டித் தந்ததோ, அது மிகவும் குறைக்கப்படுகின்ற அளவிற்கு, ஒரு டன்னுக்கு 17 ஆயிரம் அல்லது 18 ஆயிரம் அளவிற்கு இன்றைக்கு குறைக்கப் பட்டு இருக்கிறது என்று சொன்னால், எவ்வளவு வருவாய் இழப்பை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது, வனத்துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் தடையை நீக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தடை விதித்ததற்குக் காரணம் சொல்கிறார்கள். நம்முடைய உள் நாட்டில் உள்ள கர்நாடக மாநிலம் அல்லது உத்திரப் பிர தேச மாநிலத்தில் இருப்பவர்கள் இந்தச் சந்தனக் கட்டையைப் பெறவேண்டும் என்பதற்காக, தமிழகத்திலே இருந்து மற்ற மாநிலங்களிலேயிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று ஒரு காரணம் சொல்லப்படுகிறது. கர்நாடக மாநிலமாக இருந்தாலும், அல்லது தனியாராக இருந்தாலும், சந்தனக் கட்டையை குறைந்த விலைக்கு நம்மிடமிருந்து பெற்று, அதிகமான எண்ணெய்யை அதிலேயிருந்து உற்பத்தி செய்து, அதிக விலைக்கு அதை விற்று, இன்றைக்கு லாபத்தைப் பெற் றுக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழக அரசு மூலம், வனத்துறையின் மூலம் விற்கப்படுகின்ற இந்தக் கட்டையை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, மற்ற மாநிலங்கள் அதிகமான லாபத்தைப் பெறுகின்ற சூழ்நிலையை மாற்ற வேண்டும் என் பதை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு காடுகளில் சந்தன மரங்கள் பதப்படுத்தப்படுகின்றன. 3 அல்லது 2 ஆண்டுக்கு ஒரு சந்தன மரம் பிடுங்கப்பட்டு அங்கே போடப்படுகிறது. அது உடனே பதப்படுத்தப்பட, அந்த சந்தன மரத்தை சந்தன கிடங்குகளுக்கு எடுத்து வரவேண்டும் ஆனால் இன்றைக்கு எங்களுடைய வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலைப்பகுதியில்,

சந்தனக் கட்டைகளை சேர்த்து வைக்க அந்தக் காட்டுப் பகுதியிலே இப்படிப்பட்ட மரங்களை போட்டு வைப்பதால் பல நேரங்களில் அங்கே திருடு போகின்றது. ஆகவே, இந்தத் திருட்டை குறைக்க வேண்டுமென்று சொன்னால், சந்தனக் கட்டைகளை உடனடியாக சந்தன நிலையத்துக்கு கொண்டு வர வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை உருவாகுகிறபோது விலை மதிப்பற்ற சந்தனத்தையும் காப்பாற்றுவதற்கும், அதன் மூலம் பெரிய வருமானத்தைப் பெறுவதற்கும் அது உறுதுணையாக இருக்கும். அதே நேரத்தில் சந்தனக் கட்டை திருட்டைப் போக்க எவ்வளவோ முயற்சிகளை வனத்துறையைச் சேர்ந்தவர்கள் எடுத்து அவைகளைத் தடுத்துவந்தாலும் கூட பல இடங்களில் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்த வன பாதுகாப்புப் பிரிவினருக்கு தகுந்த ஆயுதங்கள் இல்லை. குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் ஒரு பகுதியிலே பணி புரிகின்ற அந்தப் பிரிவினருக்கு துப்பாக்கியே கிடையாது. சந்தனக் கட்டையைத் திருடுபவர்கள் பெரிய கொடுமையான செயல்களிலே ஈடுபடுபவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் வன பாதுகாவலர்களுக்கு எப்படிப்பட்ட தீங்கினையெல்லாம் இழைத்திருக்கிறார்கள் என்ற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளை யெல்லாம் மாற்ற வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு சற்று அதிகமான அதிகாரத்தை வழங்க வேண்டும். துப்பாக்கி போன்ற ஆயுதங்களை வழங்க வேண்டும். அதைப்போல ஒயர்லெஸ், வாக்கிடாக்கி போன்ற கருவிகளையும் அவர்களுக்கு நீங்கள் வழங்குவீர்களேயானால் இப்படிப்பட்ட சந்தனக் கட்டை திருட்டை தடுப்பதற்கு அது ஏற்றதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல சந்தன எண்ணெய் தொழிற்சாலை பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சந்தன எண்ணெய் தொழிற்சாலை என்னுடைய தொகுதியிலே அமைக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 90 லட்ச ரூபாய் அளவிற்கு அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சந்தனத் தொழிற்சாலையில் வருடத்துக்கு 400 டன் சந்தனக் கட்டைகள் பெறப்பட்டு அங்கே சந்தன எண்ணெயாக உற்பத்தி செய்யப்படுகிறது. சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்றபோது அரசுக்கு லாபம் கிடைக்கிறது. அதே நேரத்திலே அங்கே சந்தன மரத்தூள் தொழிற்சாலையை மேலும் விரிவுபடுத்துகின்ற அளவுக்கு அரசு நிதியினை ஒதுக்கி இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் சந்தன சோப்பு, சந்தன ஊதுபத்தி போன்ற பொருள்களைத் தயாரிக்கச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.





அதே நேரத்திலே இன்னொரு பணிவான வேண்டுகோளை இங்கே நான் எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு பகுதியிலே தொழிற்சாலை புதிதாக அமைக்கப்படுகிறது என்று சொன்னால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை தரப்பட வேண்டும். இந்தத் தொழிற் சாலையைப் பொறுத்த வரையில் டெக்னிகல் போஸ்டை பொறுத்த வரையில் அவர்கள் எந்தப் பகுதியிலிருந்து வந்து செய்தாலும் எங்களுக்கு கவலையில்லை. ஆனால் தினக்கூலி என்று சொல்லப்படுகின்றவர்களுக்குக் கூட அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே இருப்பவர்களுக்கு வேலை கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது அங்கே அந்த தொழிற்சாலையை விரிவுப்படுத்துகின்ற போது அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலை அமைந்திருக்கின்ற பகுதியிலே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரப்பட வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் இன்றைக்கு அதைப் பராமரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அதிலே இருக்கின்ற அதிகாரிகள் 'டான்சி' யிலே இருந்து வந்த ஒருவரும் வனத் துறையைச் சார்ந்தவர்களும் அதை நிருவகித்து கொண்டிருக்கிறார்கள். விலைமதிப்பற்ற சந்தன எண்ணெயை உருவாக்குகின்ற தொழிற்சாலை விலைமதிப்பற்ற சந்தனக் கட்டைகளைக்கொண்டு உருவாக்கப்படுகின்ற அந்தப் பொருள்களை பாதுகாப்பதற்கு இன்னும் சற்று கடுமையான அளவீற்கு மேலும் பல அதிகாரிகளை அதிகப்படுத்தி பொறுப்பானவர்களை நியமித்து அதை நிருவகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இருக்கின்ற அதிகாரிகள் தவறு செய்கின்ற போது அவர்களைக் கடுமையாக தண்டிக்கின்ற ஒரு நிலமையை ஏற்படுத்திக் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கே டான்சி மூலம் அனுப்பப்பட்ட ஒரு அதிகாரி பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறார். வனத்துறையைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற அந்தத் தொழிற்சாலையை தனிப்பட்ட 'டான்சி' யிலே இருந்து வந்த ஒரு அதிகாரி அதை நிருவகிப்பது சரியா என்பதை தயவு செய்து எண்ணிப் பார்த்து அதிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல இன்றைக்கு சுற்றுலாத்துறையைப் பொறுத்த வரையில் தழிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஏலகிரி மலையை ''ஏழைகளுடைய ஊட்டி'' என்று சொல்வார்கள். அங்கே சுற்றுலா பயணிகள் அதிக அளவிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். சுற்றுலா பயணிகளைக் கவருகின்ற அளவுக்கு பல மேம்பாட்டு திட்டங்களை

அங்கு அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இளைஞர்கள் விடுதியாக இருந்தாலும் அல்லது உணவு விடுதியாக இருந்தாலும் சுற்றுலாத் துறை மூலமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் ஒன்றையும் ஏலகிரி மலைப் பகுதியிலே நீங்கள் அமைத்துத் தருவீர்களே யானால் வட ஆற்காடு மாவட்டம் தருமபுரி மாவட்டத்திற்கு அது மிக பயனாக இருக்கும். இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்திலே தொலை காட்சி நிலையம் வேலூர் பகுதியிலே அமைந்திருந்தாலும் 20 கிலோ மீட்டருக்கு உள்ளாகத்தான் தெரிகின்ற காரணத்தினால் ஏலகிரிமலையிலே நீங்கள் அமைத்து தருவீர்களேயானால் வட ஆற்காடு மாவட்டமும் தருமபுரி மாவட்டமும் முழுமையாக இதனால் பயன்பெறும் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு பொருட்காட்சியைப் பற்றி சொன்னார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசைப் பொறுத்த வரையில் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த சுற்றுலாத்துறை மூலம் நடத்தப்படுகின்ற பொருட் காட்சிகள் எந்த அளவிற்கு மக்களுடைய மனங்களை கவருகின்ற வகையிலே நடைபெற்று வருகிறது என்பதையும் அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தருகிறது என்பதையும் நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். ஒரு காலத்தில் பொருட்காட்சி என்று சொன்னால் சூதாட்டக் களமாகவும் மற்ற களியாட்டங்களுக்கு இடமாகவும் இருந்தது என்பதை மாற்றி இன்றைக்கு தொழில் வளத்தை காட்டுகின்ற அளவுக்கு மக்கள் அதிலே பயன்பெறுகின்ற அளவுக்கு அரசிற்கு வருவாய் ஈட்டி' மக்களுடைய மனம் நிறைவு பெருகின்ற அளவிறகு நடத்தப்படுபட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்டத்

(பிற்பகல் 12—40)

தினுடைய தலைமையிடமாக இருந்தாலும் அல்லது மாநிலத்தின் தலைமையிடமாக இருக்கின்ற சென்னையாக இருந்தாலும் நிரந்தரமாக பொருட்காட்சியை நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கடைசியாக அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் கோயில்களில் இருக்கின்ற சிலைகளை திருடுகின்ற போது அதை தடுப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் சிலை திருடுகின்றவர்களை தண்டிப்பதற்கு சட்டத்தில் அதிகமான அளவுக்கு கடுமையான தண்டனை தரப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. நான் சில நாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். சில ஆண்டுகளுக்கு முன்பு 46 சிலைகளைத் திருடிய ஒருவருக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது, என்ற செய்தியைப் பார்த்தேன்,



ஆகவே கோயில்களில் சிலையை திருடுபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் பாது காப்புச் சட்டத்தின் படி அப்படிப்பட்டவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் தமிழக அரசு எதைப்போற்றி பாதுகாத்துக் கொண்டு வருகிறதோ அந்த சமயத்துறைக்கு நல்லதை செய்கின்ற வகையிலும் தமிழகத்தினுடைய கலைத் துறையை கட்டிக் காக்கின்ற வகையிலும் அமையும் என்பதை சொல்லி இன்றைக்கு இந்தத் துறை மக்கள் மனத்தை கவர்கின்ற துறையாகவும் இந்த அரசுக்கு பெருமை சேர்க்கின்ற துறையாகவும் இருந்து கொண்டு இருக்கிறது என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே ''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்'' என்ற வள்ளுவர் வாக்குடன் இன்றைக்கு இந்த இந்து அறநிலையத் துறையிலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லி அமையலாம் என நான் கருதுகிறேன். இந்த உரையை துவக்குகின்ற நேரத்திலே இந்தியாவிலேயே தனி சிறப்புப்பெற்ற— அன்னியர் ஆதிக்கத்தின் போது, வெள்ளையர்கள் இந்த நாட்டில் படை எடுக்கும் வரை வேறு எந்த ஒரு சக்தியாலும் அடிமைப் படுத்தப் படாத தென் பாண்டிய நாட்டினுடைய தலைநகரமாக விளங்கிய தென்காசியிலே பராக்கிரம பாண்டியன் அவர்களால் 400 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அரும்பெரும் ஆலயத்தினுடைய கோபுரம் தீ பிடிக்கும் என்ற ஐயம் எழுந்த போது அந்த ஆலயத்திற்கு பின்னால் வருகின்றவர்கள் சீர்படுத்தி தர வேண்டும் என்ற எண்ணத்திலே ''யாராயினும் இந்த தென்காசி மேவும் பொன் ஆலயத்து வாராதோ குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்து அதனை ஒழித்து நேராகவே புறப்பார் தன்னை பாராமலேயே அறியப் பணித்தேன் பராக்கிரம பாண்டியனே'' என்ற பொருளில் மிகச் சிறந்த முறையில் தன்னடக்கத்தோடு, அவை அடக்கத்தோடு அந்த மாமன்னன் எழுதி வைத்த அந்த கனவை நனவாக்குகின்ற வகையில் இன்றைக்கு 90 லட்சம் ரூபாய் செலவில் அந்த கோபுரத்தை கட்ட முனைந்து இருக்கின்ற இந்த தமிழக அரசுக்கும் அதற்கான ஏற்பாட்டைச் செய்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதை முன் நின்று நடத்துகின்ற எங்களுடைய அன்புக்கு உரிய தினத்தந்தி அதிபர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும் எங்களுடைய நல்வாழ்த்தை தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த பாலிசி நோட்டில் அந்த கோபுரத்தில் முதல் நிலை கட்டப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும் கூட உண்மையில் 2-வது நிலை கட்டி முடிக்கப்பட்டு, இன்றைக்கு 3-வது நிலை தொடங்கியிருக்கிறது.

இந்த நல்ல நிலையில் 10 லட்சம் ரூபாய் இன்றைக்கு திருச்செந்தூர் கோவிலும், 3 லட்சம் ரூபாய் தமிழக அரசின் சார்பிலும் தந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியை கூற விரும்புகிறேன். வேண்டிய தொகைகளை மிகப் பெரிய கோயில்களான மயிலை கபாலி கோவிலில் இருந்தும், பழனி, மதுரை, திருத்தணி, திருப்பரங்குன்றம், போன்ற பெரிய கோவில்களிலிருந்தும் விரைவாக நிதி உதவியைபெற்று அந்த கோபுரத்தை நீங்கள் விரைவாக முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்ற இந்த பாலிசி நோட்டில் பணியாளர்களை இடம் மாற்றம் செய்வதாக ஒரு குறிப்பு இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்றைக்கு கோவில் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுப்பது சம்பந்தமாக பல கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. அவ்வாறு சொல்லுகின்ற போது ஒரு கோடி ரூபாய்க்கு அதிலே நாங்கள் ஒரு திட்டத்தை வைத்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு கோடி ரூபாய் மிகக் குறைவான தொகையாக இருப்பதால் அதை நீங்கள் 5கோடி ரூபாயாக அதிகரிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதற்கு இரண்டு உதாரணங்கள் மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பல திருக்கோவில்களில் பணியாளர்களுக்கு போதுமான சம்பளம் வழங்கப்படவிலலை என்பதில் யாருக்கும் மாற்று கருத்து இருக்கமுடியாது. இருந்தாலும் கூட இன்றைக்கு தென்காசியில் இருக்கக் கூடிய ஒரு ஓய்வு பெற்ற பணியாளரைப் பற்றி மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1967-ல் பணியில் சேர்ந்து, 1982-ல் பணியிலிருந்து ஓய்வு பெற்று, 1985-ல் அகாலமரணம் அடைந்த அவருடைய கிராட்டிவிட்டி, பென்ஷன் தொகைகள் இன்று வரைக்கும் தரப்படவில்லை. அதைப்பற்றி முழு விவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன. அவருடைய பெயர் சொக்கநாதர். அவருடைய பணங்கள் அவர் காலமாகியும்கூட தரப்படவில்லை. நிதிநிலை இல்லாத கோயில், பணம்தர வசதியில்லை என்றால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால் பணவசதி படைத்த தென்காசிக் கோயிலில், இப்படிப் பணம் வழங்குவது இல்லை என்பது வேதனைக்குரிய ஒரு செய்தியாக இருக்கிறது.

அம்பை அருள்மிகு கிருஷ்ணசாமி திருக்கோயில், பிரம்மதேசம் ஆலயத்தில் கிட்டத்தட்ட ரூ. 8,000 பாக்கியாக ஒரு தனி நபர்க்கு வைத்திருக்கிறார்கள் என்ற தகவலை தந்திருக்கிறார்கள். பணங்களை ஒழுங்காகக் கொடுக்க வேண்டுமென்பதற்குக் காரணம் செய்கின்ற வேலைக்கு சமமாக கூலிபோய்ச் சேரவேண்டும்.

கோடிக்கணக்கான, இலட்சக்கணக்கான விலை மதிப்புள்ள விக்கிரகங்களும், நகைகளும் இருந்தாலும்—கையில் வெண்ணெய வைத்துக்கொண்டு நெய்க்காக அலைவது போல—அந்த



அளவிற்கு சொத்துக்கள் இருந்தாலும் நேர்மையாக அந்த கோயில்களில் உழைத்துக்கொண்டிருக்கின்ற ஊழியர்களுக்கு ஒழுங்காக பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. அவர்களுக்கு சரிவர ஊதியம் ஒழுங்காக கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் அரசிற்கு இருக்கிறது. ஆயினும் அவர்களுக்கு சம்பளப் பட்டுவாடா சரிவர ஒழுங்காகச் செய்யப்படாததால், அதை ஒழுங்காகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்கின்றபோது, ஒரு பக்கத்திலே வேலை செய்பவர்கள் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்றொரு பக்கத்திலே கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, பல கோடிக்கணக்கான குத்தகை பாக்கிகளை வைத்துக்கொண்டிருக்கின்ற அவலநிலை நம் கண்முன்னால் நிற்கிறது. இதைப்பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன.

குத்தகையைப் பொறுத்தவரையில், இங்கே சொல்வது சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். இன்றைக்கும் திருக்கோயில்களில் குத்தகை வசூல் சரிவர செய்யப்படுவதில்லை. உதாரணமாக செருப்பை வைப்பதற்கு பல பேர் குத்தகை எடுக்கிறார்கள். 10 பைசாவிற்கு செருபபைப் பாதுகாத்து கொண்டிருக்கிறோம். நீங்கள் கோயிலுக்குச் சென்று வாருங்கள் என்று அந்தக் கோயிலில் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் கோவிலுக்கு வருமானம் வருகிறது. அதிக வருமானம் வரக்கூடிய அளவில் மதுரை, திருச்செந்தூர் போன்ற கோயில்கள் இருக்கின்றன. 10 பைசா என்பதை 25 பைசா என்று வைத்து கட்டாய வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு சரியான கணக்கைச் சொல்கிறேன். தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள். மதுரையில் ஒரு நுழைவாயிலில் ஒரு நாளைக்கு 5,000 நபர்கள் போகிறார்கள் என்று கணக்கு எடுத்துக்கொண்டால், 15 பைசா வீதத்தில் ஒரு நாளைக்கு ரூ. 750-ம் ஒரு மாதத்திற்கு ரூ. 22,500ம் ஒரு வருடத்திற்கு ரூ. 2,70,000 வரை வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். இதே அளவில் நான்கு நுழைவாயில்களின் வருமானத்தை எடுத்துக்கொண்டால் ரூ. 10,80,000 வருமானம் வருகிறது. இந்த 15 பைசா வீதம் ஒரு ஆண்டுக்கு ரு. 10 இலட்சம் வருமானம். இவ்வாறு பல திருக்கோயில்களில் நடந்துகொண்டிருக்கிறது. இது கோயில் நிர்வாகத்திற்கு தெரியாமல் இருக்கிறதா? இவ்வாறு கோயிலிலுள்ள இடைத்தரகர்கள் எல்லாம் பணத்தை இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல மதுரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும் இந்த நிலைமை இருந்தது. இவ்வாறு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நடந்து கொண்டிருந்ததை அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியதற்குப் பின்பு, அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து, அதன் பயனாக இன்றைக்கு 1—1—86 லிருந்து அந்த அவல நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமே, பணத்தை வசூல் செய்து

கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல ஏலம் எடுக்கும் விஷயத்திலும் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று குத்தகை நிலங்களை, லாங்லீஸ், என்று எடுத்துக்கொண்டு 99,100,150 வருடங்கள் என்று சொல்லி எடுத்துக்கொண்டு பல கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களை, 10 ரூ. 15 ரூ. என்று அதை வைத்து, ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான ரூபாய்களை, சில தனி நபர்கள் இன்றைக்கு அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான தனி நடவடிக்கை எடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப்பதில் அளிக்கும்போது சொன்னார்கள். கொள்கை விளக்கக் குறிப்பில் சொலலியிருக்கிறார்கள். மிக விரைவாக இதிலே நடவடிக்கை எடுத்து, டெனன்சி ஆக்டிலிருந்து குத்தகை நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இங்கே ஆணித்தரமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில் என்ற பத்திரிகை சிறப்பாக வந்துகொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் வந்துகொண்டிருக்கிறது. ஆனால் வருவது முறையாக வருகின்றதா என்பது தெரியவில்லை. அந்தமாதிரியான பத்திரிகைகளை தாலுக்கா அளவில் இருக்கின்ற வாசகசாலைகளுக்கு அனுப்பினால் கூட, அதை மக்கள் படிக்க வாய்ப்பு ஏற்படும். அதில் பயனுள்ள கட்டுரைகள் வருகின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–50)

ஆகவே அதனுடைய பலன் மக்களுக்கும் சென்றடைவதற்காக அவற்றை மாவட்ட அளவிலே தாலுகா அளவிலே உள்ள எல்லா அரசு பொது நூலகங்களிலும் அனுப்புவதற்கு அரசு ஆணையிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோயில்களைப்பற்றிய திரைப்படங்களை எடுக்கலாம் என்று நேற்றைக்கு விவாதங்கள் எல்லாம் இங்கே நடந்தன. ஒரு கருத்தை நான் சொல்லவிரும்புகிறேன். தொலைக்காட்சியிலே ஸ்பான்ஸர்டு புரகிராம்ஸ் என்று பலவிதமாக வருகின்றன. தமிழகத்திலே இருக்கிற திருக்கோயில்களை எல்லாம் படங்களாக எடுத்துத் தமிழ்நாட்டிலே பல முதலாளிகள் மூலமாக, விளம்பரம் செய்யக்கூடியவர்கள் மூலமாக, அவர்களோடு கூட்டாக நீங்கள் அதுபோன்ற ஸ்பான்ஸர்டு புரகிராம்களை ஏற்படுத்துவீர்களானால் தமிழகத்தின் கோயில்களுக்கு இந்தியா



பூராவும் நல்ல விளம்பரம் கிடைப்பதோடு நீங்களே சுற்றுலாத் துறை அமைச்சராகவும் இருக்கிறீர்கள் என்பதால் தமிழகத்தைப்பற்றி வெளி மாநிலங்களிலே சிறப்பாகத் தெரிவதற்கும் தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கும் சிறப்பாக அது அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சுற்றுலாத் துறைக்கு 25 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் நமக்கு மானியம் கொடுக்கிற நிலையில் நாம் 25 லட்சம் மட்டும்தான் ஒதுக்கியிருப்பது என்பது மிகக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பொருட்காட்சி என்று சொல்லி அதிலே லாபம் வந்திருக்கிறது என்ற ஒரு கருத்து இருந்தாலும்கூட, இந்த சுற்றுலாப் பொருட்காட்சிக்குச் செலவிடுகின்ற செலவினங்கள் பல துறைகளின் கீழ் செலவிடப்படுகின்ற காரணத்தால் உண்மையாக அந்த சுற்றுலாப் பொருட்காட்சிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது என்ற உண்மை மறைக்கப் படுகிறது என்ற பரவலான கருத்து இருக்கிறது. பணம் தனித்தனித் துறையிடமிருந்து செலவிட்டாலும் சரி, சென்னை மாநகராட்சி செலவிட்டாலும் சரி, பலவிதமான அளவிலே பணம் செலவழிக்கப்பட்டாலும் அவைகள் எல்லாம் அந்த அந்தத் துறைகளின் கணக்கில் சேர்க்கப்பட்டு லாபத்தை மட்டும் சுற்றுலாத் துறை எடுத்துக்கொள்கிறது என்ற கருத்து இருக்கிற காரணத்தினாலே சுற்றுலாத் துறையின் உண்மையானகணக்கை இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் வழங்கி, உண்மையாகவே அதிலே லாபம் வருகிறதா இல்லையா என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் நிறையச் செய்திகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலாத் துறையில் அவர் ஒரு புதிய கோணத்திலே ஒரு தகவலைத் தெரிவித்து இருக்கிறார். அதிலே ஒரு விளக்கத்தை இப்போதே கொடுத்துவிட்டால் மற்றவர்களுக்கும் அது உதவியாக இருக்கும், இல்லையென்றால் நான் விடையளிக்கிறபோது அந்தப் பொருளை விட்டுவிடக்கூடும். அரசைச் சார்ந்த துறைகள் தங்களுடைய துறைகளின் பணிகளை விளக்குவதற்காக அரசிடமிருந்து அனுமதி பெற்று 30 ஆயிரம் ரூபாய் 40 ஆயிரம் ரூபாய் செலவில் தங்கள் தங்கள் அரங்கங்களை அமைக்கிறார்கள். அதற்கும் இந்தப் பொருட்காட்சி நடத்துகின்ற சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கும் சம்பந்தம் இல்லை. அரசுத் துறை என்பது வேறு, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பது வேறு. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இப்படிப் பொருட்காட்சி நடத்துகிறபோது அந்தப் பொருட்காட்சியிலே மிகக் குறைந்த கட்டணத்தை விதித்து அவர்களுக்கு இலவசமாக இடங்களையும் தந்து அரசினுடைய

துறைகள் தங்களுடைய பணிகளை மக்களிடத்திலே விளம்பரப் படுத்துவதற்காக அவை செலவிடுகின்றன. இதற்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கும் தொடர்பே இல்லை.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தருகிற கணக்கு என்பது தாங்கள் செய்கிற செலவு எவ்வளவு, அதிலே வருகிற வருமானம் எவ்வளவு, வருகிற நிகர இலாபம் எவ்வளவு என்பது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, இந்த பொருட்காட்சியின் மூலமாக கண்டிப்பாக லாபம். சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற அளவுக்கு எனக்கும் இருக்கிறது என்ற காரணத்தினாலே எனக்குத் தரப்பட்ட தகவலின் அடிப்படையில், புக் அட்ஜஸ்ட்மென்ட் என்று சொல்வார்கள், சில செலவுகளைச் செய்தாலும்கூட அவை செய்யப்படுகிற முறைகள் இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியாக இருந்தாலும், செய்கிறவர்களுடைய பெயர்கள் சில பெயர்களிலே மாற்றப்படுகிற காரணத்தினாலும் இதுபோன்ற லாபங்கள் கணக்கில் காட்டப்படுகிறது என்ற தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது. என்னைவிட அதிகமான விவரங்கள் அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கும் என்ற காரணத்தினால் தவறாக இருந்தால் அதைச் சுட்டிக்காட்டினால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் நான் அந்தக் கருத்தை இந்த மாமன்றத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவரம் தெரிந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினரைத் தவறான திசையிலே திருப்பவேண்டுமென்பதற்காகத்தான் இந்த விவரம் தெரிந்த சிலர் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் இடையிலே குறுக்கிட்டு விளக்கிவிட்டேன். ஏனென்றால் நல்லவர்கள் மனதிலே அந்தக் கறைபடிந்த உணர்வுகள் தோன்றிவிடக் கூடாதே என்றுதான் கறைபடிந்த உள்ளங்களிலே கறைபடிந்த உணர்வு சேர்ந்துகொண்டே இருக்கும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆகவே உங்களைத் தேர்ந்தெடுத்து இந்த விவரம் தெரிந்தவர்கள் தவறான தகவலை உங்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான் நான் விளக்க விரும்பினேன். ஒரு அரசாங்கம் தன்னுடைய பல பணிகளை பத்திரிகைகளிலே விளம்பரம் செய்கிறது, பல கோடிக் கணக்கான ரூபாய்களை நாம் விளம்பரத்தின் மூலம் செலவிடுகிறோம், அரசினுடைய பணிகளை விளக்குவதற்காக, அதைப்போல் இந்தப் பொருட்காட்சி என்கின்ற அந்தத் துறையைப் பயன்படுத்தி அரசுத் துறைகள் தங்களுடைய பணிகளை தங்கள் செலவிலே செய்கின்றன. ஆகவே, அந்த விவரத்தைத்தான் அந்த நண்பர் இந்த அரசுத் துறையிலே செலவிடும் பணம் என்பது, இந்தப் பொருட்



காட்சியை நடத்துகிற சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வியாபார அடிப்படையில் தொடங்கப்பட்ட அந்தத்துறை வேறு என்பதையும் அவர் வெகு தெளிவாகத் தெரிந்துகொண்டு தான், தவறான தகவலை, நல்ல சட்டமன்ற உறுப்பினரிடத்தில் சொல்லி, நல்ல வாதம் செய்கின்ற திறமை உள்ள சட்டமன்ற உறுப்பினரிடத்திலே சொல்லி, நல்ல வெண்மையான, தூய்மை நிறைந்த அந்தத் துறையில் ஒரு சிறிய கரும்புள்ளியை ஏற்படுத்தலாமா என்று முயற்சிக்கிறார்கள். அதற்கு நீங்கள் பலியாகி விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தை நான் சொல்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பாராட்டிற்கு அவைத் தலைவர் அவர்களின் மூலமாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் இப்படிப் பாராட்டிவிட்ட காரணத்தினால், ஒரு ஆலோசனையைச் சொல்ல வேண்டிய சரித்திரக் கட்டாயத்திற்கு என்னை நீங்கள் தள்ளிவிட்ட காரணத்தினால் நான் இந்த ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குச் சுற்றுலாத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீது பேசிக் கொண்டிருக்கிறோம்; பொருட்காட்சியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

பொருட்காட்சியைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு மத்திய அரசாங்கம் Trade Fair Authority என்று சொல்லி, இந்த பொருட்காட்சிக்காக என்று தனியானதொரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசிலே இன்றைக்கு நாம் சுற்றுலாத் துறையின் மூலமாகப் பொருட்காட்சியை நடத்தினாலும்கூட, பலயிடங்களிலே மாவட்ட அளவிலேயும் சரி, வேறு இடங்களிலேயும் சரி, குற்றலாத்திலே என்று வேண்டுமென்றாலும் உதாரணத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள், நாம் பொருட்காட்சிகளை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இருக்கிறோம். இப்படித் தனித்தனியாகப் பொருட்காட்சியை நடத்துகின்றபோது மிகுந்த பொருட் செலவு ஏற்படுகின்றது. நம்முடைய சுற்றுலாப் பொருட் காட்சியைப் பொறுத்தவரையிலேயும்கூட, ஒவ்வொரு முறையும் தகரங்களை வைத்து அடைப்புகளைச் செய்து விடுகிறார்கள். எங்களுடைய பகுதி போன்ற இடங்களிலே இப்படி அடைப்பது, பந்தல் போடுவது என்பதற்கே கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் ரூபாய், அடைப்புக்கே செலவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது போன்ற மறைப்புகள், லைட்டுகள், அலங்காரப் பொருட்கள், ஜோடனைகள், ஒலி பெருக்கிகள் என்று இதற்காக துறைகளெல்லாம் தனியாக இருந்தால், தமிழகத்திலே Trade Fair Authority என்று வைத்திருந்தால், தமிழ்நாட்டிலே நடத்தப்படும் அனைத்து சுற்றுலாப் பொருட் காட்சிகளிலேயும் இந்தச் சுற்றுலா அமைப்பின் மூலமாக, பொருட்காட்சி அமைப்பின் மூலமாகச் செயல்பட்டால்,

அதற்கு இதுபோன்ற ஒரு துறை இருந்து செயல்பட்டால் இப்படி நல்ல மனது உடையவர்களிடத்திலே கள்ள மனது உடையவர்கள் கொடுத்தார்களோ என்ற அச்சம் வராமலே சிறப்பாக அமையக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதால் தமிழகத்திலே Trade Fair Authority என்ற ஒன்றை நீங்கள் ஏற்படுத்துவீர்களேயானால் அது தமிழ் நாட்டினுடைய பொருட்களைப்பற்றி வெளி மாநிலங்களுக்கும் சரி, வெளிநாடுகளுக்கும் சரி, விளம்பரப்படுத்துவதற்கு சிறப்பான முறையாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களுக்கு மகிழ்ச்சி தருகின்ற செய்தியை இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். இன்றைக்கு மானியக் கோரிக்கை நடந்து கொண்டிருக்கின்ற துறைகள் இரண்டு. செய்தித் துறை, சுற்றுலாத் துறை. தமிழகத்திலே மாவட்டங்களிலே நடைபெறுகின்ற பொருட்காட்சிகளை நடத்துவது செய்தித் துறை. சென்னை நகரத்திலே நடத்தும் அந்தப் பொருட்காட்சியை நடத்துவது சுற்றுலா வளர்ச்சிக் கழகம். மாவட்டத் தலைநகரங்களிலே நடத்துவது அரசினுடைய ஒரு துறைதான். அகில இந்தியாவிலேயும் செய்தித் துறை என்பது செலவழிப்பதற்காக இருக்கின்ற ஒரு துறையே தவிர, பணம் திரட்டுவதற்காக அல்ல. மத்திய அரசிலேயும் சரி, மாநில அரசுகளிலேயும் சரி, இந்தச் செய்தித் துறை என்பது பணம் திரட்டியதாக வரலாறு கிடையாது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசிலேதான், செய்தித் துறை என்பது பொருட்காட்சிகளை மாநிலம் முழுவதும் நடத்தி இன்றைக்கு, கடந்த ஏழாண்டு காலத்தில், எல்லாச் செலவினங்களும் போக, நீங்கள் இங்கே ஒரு சந்தேகத்தை எழுப்பினீர்களே, அரசுத் துறைகள் இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் அரங்கங்கள் அமைப்பதற்காக எவ்வளவு ரூபாய் செலவிட்டன என்றும், அவைகள் இந்தக் கணக்கில் கொண்டு வரப்படுகிறதா என்றும், அப்படிக் கொண்டு வரப்பட்டால் முப்பது இலட்சம் ரூபாய் இலாபம் என்பது போலியான கணக்குகளாகத்தானே இருக்கும் என்பது போன்ற சந்தேகங்களையெல்லாம் எழுப்பினார்களே, அப்படிப்பட்ட வாதத்தை ஏற்றுக்கொண்டு தான்—இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசுத் துறை நடத்துகின்ற பொருட்காட்சியில் மற்ற அரசுத் துறைகள் அரங்குகள் அமைக்க எவ்வளவு செலவழிக்கிறதோ அதையெல்லாம் கழித்து, மற்ற செலவுகளையெல்லாம் கூடக் கழித்து, அரசுக்கு ஒரு காசு கூடச் செலவு இல்லாமல்—கணக்கு எனக்கு நன்றாக வரும்—பொருட்காட்சியில் நிகர வருமானம் சுமார் ஒன்றேகால் கோடி ரூபாயை இந்தச் செய்தித் துறை திரட்டிக் காட்டியிருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எனக்கு



கணக்கு கொஞ்சம் நன்றாக வரும், அதனால்தான் என்னை அமைச்சர் என்று சொல்வதைவிட எதிர்க்கட்சியினர்கூட கணக்குப்பிள்ளை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக்கொள்கின்ற காரணத்தினால்தான் பெரியார் தொண்டனாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய பொருட்காட்சி பற்றிய அந்தக் கணக்கையும் சொல்லிவிடுகிறேன். 30 இலட்சம் ரூபாய்களை இலாபமாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரட்டியிருக்கிறது என்றால், அரசாங்கம் துறைகள் ஏறக்குறைய 27 இலட்சம் ரூபாய்களைச் செலவழித்திருக்கின்றன. அப்படியும் மீறிப்பார்த்தால்கூட 3 இலட்சம் ரூபாய் இலாபம்தான் வருகிறது. இந்தப் பொருட்காட்சியை நடத்திக் கொண்டிருப்பதிலே செய்தித் துறைக்கு மிகப் பெரிய தொந்தரவுகள், ஆட்பலம் இல்லாத சூழ்நிலை ஆகியவைகளையும் கவனத்தில் கொணடுதான் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப்போல மாநகரத்திலேயும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்தப் பொருட்காட்சியை நடத்துவதில் கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

(பிற்பகல் 1–00)

அதைப் போல, இங்கே மாநகரத்திலே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகின்ற இந்தப் பொருட்காட்சிக்கும் ஆண்டு முழுவதற்கும் அவர்கள் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. பல பேர்களுடைய கண்களை உறுத்திக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், பல பேர்களுடைய பார்வையிலே படுகின்ற அளவு, புரட்சித் தலைவருடைய மிக உயர்ந்த உருவத்தை அங்கே வைத்திருக்கிற காரணத்தாலே, பல பேர்களுக்குத் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தப் பொருட்காட்சிகளை நடத்துவதற்கு என்று ஒரு தனி அமைப்பை, தன்னாட்சி பெற்ற ஒரு நிறுவனத்தை State Trade Fair Authority என்று அமைக்கலாமா என்பதைப் பற்றியும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வருடைய ஒப்புதலுக்காக இந்தத் துறை அனுப்ப இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைத்தான் நான் வலியுறுத்திக் கொண்டிருந்தேன். அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அந்தத் திட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குச் சுற்றுலாவைப பற்றிப் பேசிக்கொண்டிருக்கும போது, இந்தச் சுற்றுலாவை நாம் உற்று நோக்கினால், பல விதங்களிலே, நம்முடைய முன்னேற்றங்களுக்கு ஜப்பானை நாம் மாதிரியாக வைத்திருக்கிறோம். ஜப்பானிலே சுற்றுலா வளர்ச்சியைப் பற்றி பேசுகின்றபொழுது அவர்கள் வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற யாத்ரீகர்களைவிட உள் நாட்டிலே இருக்கிற யாத்ரீகர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்தக் காரணத்தாலே தான், உள்நாட்டு யாத்ரீகர்களுக்குச் செய்து கொடுத்த அந்த வசதிகள் தான் வெளிநாடடு யாத்ரீகர்களுக்கும் சிறப்பாக அமைந்தது. இங்கே நாம் ஆரம்ப கட்டத்திலே 5 ஸ்டார் ஓட்டல்களைக் கட்டுவதிலே, ஸ்டார் ஓட்டல்களைக் கட்டுவதிலே பணம் செலவழிப்பதிலே இருந்ததன் காரணமாக, உள்நாட்டு சுற்றுலா சிறப்பிடம் பெறவில்லை. ஆனால், ஜப்பானிலே உள்நாட்டு சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக, சுற்றுலா முதலிடம் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். அந்த அளவிலே, இன்றைக்குத் தமிழக அரசு உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சியைப் பற்றி ஏற்கனவே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குச் சிறப்பான முக்கியத்துவமும், முதலிடமும் கொடுத்து, உள்நாடடு சுற்றுலா வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும்போது .......... (மணியடிக்கப்பெற்றது). ஆகவே, இன்றைக்கு உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சியைப் பற்றிப் பேசுகின்றபொழுது, "Vayudoot Service" என்பதைப் பற்றி இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. இன்றைக்கு, தமிழகத்திலே கயத்தாறு, சேலம், உச்சிப்புளி, மற்றும் இராமேஸ்வரத்திலே வல்லம், தஞ்சாவூர் என்ற இடங்களிலே, இந்த 'Vayudoot Se vice' வேண்டுமென்று நாம் கோரிக்கைகளை வைத்திருக்கிறோம. சமீபத்திலே, கயத்தாறிலே இருக்கக்கூடிய அந்த விமான தளத்தை நான் நேரிலே சென்று பார்த்தேன். கிட்டத்தட்ட, ஆசியாவிலே இரண்டாவது பெரிய தளம் என்று சொல்கின்ற அளவிலே, 6,500 அடி நீளத்திற்கு, கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ மைல் நீளத்திற்கு அந்தத் தளம் அமைந்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசிலே நாம் வற்புறுத்தி, கண்டிப்பாக, அந்த 'Vayudoot Service'ஐ, பெற்றுத்தந்தால், கட்டிடங்கள் மட்டும் கட்டினால் நாளைக்கே விமானம் விடக்கூடிய சிறப்பான நிலையிலேதான் அது இருக்கிறது என்பதை சொலிக் கொள்கிறேன்.

உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக்காக காஞ்சிபுரத்திலே யாத்ரீகர்களுக்கு வாசஸ்தலம் மைய அரசு உதவியிலே கட்டப்படுவதைப் போன்று, குற்றாலத்திலும், ஒன்றைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திலே, குற்றாலம், மணிமுத்தாறு அருவி, திர்பரப்பு, உலக்கை அருவி, ஐயனார் அருவி, சுருளி அருவி, திருமூர்த்தி அருவி, குரங்கு அருவி





போன்ற பல அருவிகளையும் நீங்கள் முன்னேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும். இந்த மேற்கு மலை மேம்பாடு திட்டத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், உள்நாட்டு சுற்றுலா என்று சொல்லும்போது, சென்னையிலே ஒரு ஜனதா ஓட்டல் இல்லையென்ற குறை உண்டு. வாய்ப்பிருந்தால் அதை நம்முடைய சட்ட மன்ற மானியத்திலே சொல்லலாம் என்று இருக்கிறேன். இருந்தாலும், சுற்றுலா வளர்ச்சித் துறையின் அமைச்சரும் அதை கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்குச் சென்னையிலே இருக்கிற எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் வசதிகள் குறைவாக இருப்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதை நீங்கள் பெற்று, அதை ஒரு ஜனதா ஓட்டலாக மாற்றிவிடடு, எம். எல்.ஏக்களுக்கு வேறு ஒரு வசதி செய்து கொடுத்தால் உங்களுக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திருநெல்வேலி யூத் ஹாஸ்டல் போல, சென்னையிலே, சிறப்பாக மிடில் கிளாஸ் பீப்பில் தங்குவதற்காக, சாதாரணமானவர்கள் தங்குவதற்காக, ஜனதா டைப்பிலே எங்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும். குற்றாலத்திலே எங்களுக்கு மினி டிரெயின் ஏற்படுத்தித் தருவதோடு, இந்த வசதிகளைப்பற்றி பேசும் பொழுது, இன்றைக்குச் சுற்றுலா வளர்ச்சிக்காக.........

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** காங்கிரஸ் உறுப்பினர் ஜனதாவை இவ்வளவு ஆதரிப்பது ஏன் என்று தெரியவில்லை.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** ஜனதா என்பது மக்கள் கட்சி என்பதால் ஆதரிக்கிறார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** நேரமில்லை. ஆகவே, இந்த ஃபன்னுக்கெல்லாம் நேரப் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல்களைப் பற்றி பேசும்பொழுது மீண்டும் அமைச்சரிடத்திலேயிருந்து விளக்கம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் கேட்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே, வெளிநாட்டிலே இருக்கக்கூடிய தனியார்களுடைய துணையோடு 3 ஓட்டல்கள் கட்டப்படும் என்று அறிவிக்கின்ற நேரத்திலே, அவர்கள் யார் என்றும், அவர்கள் போடுகின்ற முதல் என்ன என்றும் அவர்களோடு இணைந்து தொழில் நடத்துகின்றவர்கள் யார் என்றும் அரசு உதவி எவ்வளவு என்றும், நிலங்கள் எவ்வளவு வழங்கப்படுகின்றன என்றும், மத்திய அரசும், ஆர்.பி.ஐ.யும் அதற்கு

அனுமதி வழங்கிவிட்டனவா என்றும் தகவல்கள் இதுவரை தரப்படவில்லை, அந்தக் காரணத்தாலே அதுபற்றி பல்வேறு கருத்துக்களும், மாற்று அபிப்பிராயங்களும், சந்தேகங்களும் எழுந்திருக்கின்ற சூழ்நிலையில் Ceasers wife must be above suspicion என்ற கருத்தின் அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 'நான்-ரெசிடென்சியல் இன்வெஸ்ட்மென்ட்' என்கிற திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட இருக்கிற ஓட்டல்களைப் பற்றிய முழு விவரங்களையும் இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போன்று, இன்றைக்கு தனியார் கம்பெனி ஒன்று குழந்தைகளுக்காக சென்னையில் 'அம்யூஸ்மென்ட் பார்க்' ஒன்று அமைக்கவிருந்ததாகவும் அரசிலிருந்து சரியான முகாந்திரம் கிடைக்காத காரணத்தால் இன்றைக்கு அது ஆந்திராவிலுள்ள ஹைதராபாத்துக்குச் சென்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இருந்தபோதிலும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அதைப் போன்ற அம்யூஸ்மென்ட் பார்க் ஒன்றை தமிழக அரசு சென்னையில் ஏற்படுத்த இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை நீங்கள் 'அப்பூ கர்' என்று டெல்லியிலே சிறப்பாகச் செயல்பட்டு வருவதைப் போன்று சென்னையிலே விரைவிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனா பற்றி சொல்லும்போது, இந்த பாலிசி நோட்டில் பக்கம் 3-ல் சொல்லியிருப்பதை நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். அதிலே எவ்வளவு கிலோ உற்பத்தி செய்யப்பட்டது என்றும் எவ்வளவு வருமானம் வந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டு கணக்கையும் சொல்லி வருகிறபோது, 1984--85-ஆம் ஆண்டில் 'ஆக்சுவல்' என்று சொல்லி உள்நாட்டுக்கு (இன்டர்னல்) 757 கிலோ உற்பத்தி செய்யப்பட்டு அதிலிருந்து 5.79 இலட்சம் வருமானம் வந்ததாகவும் அதே நேரத்தில் வெளிநாட்டுக்கு 6,000 கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் அந்த வருமானம் வெறும் 48,000 ரூபாய் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழே 1986—87-ஆம் ஆண்டில் பார்க்கும்போது 3,000 கிலோவுக்கு 24 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. இது அச்சுப் பிழையா அல்லது வருமானம் குறைந்துவிட்டதா? வருமானம் குறைந்திருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காட்டு மானியம் பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் வன இலாகா அதிகாரியின் அலுவலகம் செங்கோட்டையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னாலும்



கூட இன்று வரையில் மாவட்ட வன இலாகா அதிகாரி வீட்டிற்கு தொலைபேசி வசதி செய்துதரப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொடைக்கானலுக்குப் போகிறவர்களுக்கு ரோட்டிலே மோட்டல் ஒன்று வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வேண்டுகோள் வைத்திருக்கிறார். அதைப் போன்று பழநி கோவிலில் பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரு கருத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லை. அடுத்த உறுப்பினரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள். இப்போது உட்காருங்கள்.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, வனத்துறை, செய்தி சுற்றுலா, திரைப் படத்தொழில் நுட்பவியல் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டினுடைய திருக்கோவில்கள் தொன்மையான நம்முடைய கலாச்சாரத்தையும், நம்முடைய பண்பாடுகளையும், நம்முடைய நாகரிகத்தையும் எடுத்துக் காட்டுகின்ற கலங்கரை விளக்காக, காலக் கண்ணாடியாக இன்றைக்கு விளங்குகின்றன. இந்தத் திருக்கோவில்களுடைய பெருமைகளைப் பேணிக் காக்கின்ற அளவிலேயும் பக்தகோடிகளுடைய மனம் கோணாதபடியும் திருக்கோவில்களுடைய செயல்முறைகளை நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற முறையிலேயும் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்ற வகையிலே முதலிலே நான் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு நம்மை எல்லாம் ஆளாக்கிய இந்நாட்டு இங்கர்சால், தென்னாட்டு பெர்னாட்ஷா என்று சொல்லப்படுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை தன்னுடைய கருத்தை கூறுகின்றபோது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பிக்கிறேன் என்று சொன்னால் நான் தமிழ் நாட்டின் முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்கோ அல்லது என்னுடைய அன்புத் தம்பிகள் அமைச்சராக வரவேண்டும் என்பதற்கோ அல்ல. தமிழ்

[திரு. க. சோலைராசு] [1986 ஏப்ரல் 25

நாட்டினுடைய கலாச்சாரத்தையும் தமிழ்நாட்டினுடைய பண்பாடுகளையும் தமிழ்நாட்டினுடைய நாகரிகத்தையும் கட்டிக் காப்பதற்கு ஒரு ஆட்சி வரவேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு அந்த உணர்வைப் படைத்திருக்கிற நான் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்திருக்கிறேன் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அப்படி அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்திற்கு ஏற்ப தமிழ்நாட்டில் கலாச்சாரத்தையும் பண்பாடுகளையும், நாகரிகத்தையும் பேணிக் காக்கின்ற அளவிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செம்மையாக இன்றைக்கு இந்தத் துறையை நிர்வகித்து வருகிறார்கள் என்பதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1—10)

திருக்கோயில் என்று சொன்னாலே அது பூஜை நடக்கிற இடம், புனஸ்காரம் நடக்கிற இடம் என்றிருந்த நிலைமையை மாற்றி அறநிலையத் துறையிலே இருந்து வருகின்ற வருமானத்தை வைத்து தெய்வத்தை நம்புகிறவர்களுக்கும், நம்பாதவர்களுக்கும் கூட நேசம் கரம் நீட்டி இந்தத் துறையிலே இருந்து வருகிற வருமானத்திலிருந்து கல்லூரிகள், திருமண மண்டபங்கள், வேத ஆகமப் பாடசாலைகள், இசைக் கல்லூரிகள் போன்றவற்றைக் கட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஆதி திராவிட மக்களுக்கும், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் திருமண வசதி போன்றவற்றை எல்லாம் இந்தத் துறை செய்து ஒரு சிறப்பினை ஏற்படுத்தியிருப்பதை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். அறநிலையத் துறையைப் பொறுத்தமட்டில் 5.27 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அவ்வளவு வளம்மிக்க அந்த இடத்திற்கு 1394-லேயிருந்து இதுவரையில் தரப்பட வேண்டிய குத்தகை பாக்கி 32.25 கோடி ரூபாய் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதன் காரணத்தால் அந்தக் கோவில்களில் நடைபெற வேண்டிய பூஜை நடைபெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே பணிபுரிகிற ஊழியர்களுக்கும் நிறைவான சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சகோதரர் கோவை திரு. இராமநாதன் அவர்களும், மற்றவர்களும் ஆலய ஊழியர்களுக்கு முறையான சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ஒருபுறம் கோவிலிலே விளக்கு எரியவில்லை; அதிலே இருக்கின்ற ஊழியர்களின் குடும்பங்களிலே அடுப்பு எரியவில்லை. மறுபுறம் [illegible] போது அந்தக் கோயில் நிலங்களை வைத்துக் குத்தகை நடத்திக் கொண்டிருப்பவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு சுகபோக



1986 ஏப்ரல் 25] [திரு க. சோலைராசு]

வாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குத்தகை பாக்கி வைத்திருக்கிறார்கள். கேட்டால் வறட்சி என்கிறார்கள். 1394-லே இருந்து இன்றைக்கு வரையில் வறட்சி இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1394 முதல் இன்றைக்கு வரையில் இருக்கின்ற குத்தகை பாக்கி கணக்கில் அடங்காமல் இருக்கிறது. எனவே கோயில் சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமென்றால்—கோயில் வருமானத்தை வைத்து பல்வேறு சமூகநலப் பணிகளை எல்லாம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால்—கோயில்களுக்குரிய அந்தக் குத்தகை நிலங்களை எல்லாம் கோயில்கள் எடுத்துக் கொள்வதற்குரிய வகையில் அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றும் அதுபற்றி அமைச்சரவர்கள் பரிசீலனை பண்ண வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே திரு. ராமநாதன் அவர்கள் பேசும் போது தந்தை பெரியார் அவர்கள் காலத்திலே சேரன்மாதேவியிலே சம பந்திப் போசனம் நடத்தப்பட்டது என்று சொன்னார்கள். அதை எல்லாம் உணர்ந்துதான் இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் நாம் சமபந்திப் போசனம் நடத்திக் கொண்டிருக்கிறோம். தத்துவத்தைப் பேசியதால் மட்டும் சமதர்மம் வந்து விடாது என்று சொன்னார்கள். அவர் சார்ந்திருக்கின்ற இயக்கம் தமிழ்நாட்டை ஆண்ட 7 ஆண்டுக் காலத்தில் இதுபோன்ற நன்மைகள் செய்யப்படவில்லை. இன்னொரு தத்துவத்தையும் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களோடு சம்பந்தம் புரிந்துக் கொண்டால் மட்டுமே அந்தச் சமுதாயம் வளர்ந்துவிடும் என்ற தவறான ஒரு தத்துவத்தைச் சொன்னார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்லல் பட்டு திருமணம் புரிய முடியாத நிலைமையில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையைப் போக்க வேண்டுமென்றும், வாட்டத்தை நீக்க வேண்டுமென்றும் இன்றைக்கு அறநிலையத்துறையிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துக் கொண்டு அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கிற ஒரு நிலைமையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் எல்லாம் குத்தகை பாக்கியைத் தடை செய்ய வேண்டுமென்றும், உழைப்பவர்களுக்கு நிலத்தை உரிமையாக்க வேண்டுமென்றும் சொல்வார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறநிலையத் துறையின் சார்பிலே நான் பேசியபோது குறை சொன்ன கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைப் பார்த்து ஒன்று கேட்டேன். மேற்கு வங்காளத்திலே கங்கா சாகர் திருவிழா நடைபெறுகிறபோது அந்தப் பகுதியிலே வருகிற பிச்சைக்காரர்களுக்கும் கூட வரி போடப்படுகின்றது என்றும் அப்படிப்பட்ட நிலைமை மேற்கு வங்கத்திலே இருக்கிறது என்றும் நான் பேசினேன்.

ஆனால் தமிழகத்திலே இந்த அறநிலையத் துறை சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பது மட்டுமல்லாமல், செம்மையாகப் பல்வேறு நன்மைகளையும் செய்துக் கொண்டு வருகிறது. அன்றைக்குக் கங்கா சாகர் திருவிழாவிலே பிச்சைக்காரர்களுக்குக் கூட வரி போடப்படுகிறது என்று மேற்கு வங்காள அரசைப் பற்றிக் குறை கூறியபோது அன்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ரமணி போன்றவர்கள் எல்லாம் கூடச் சொன்னார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர் சகோதர அரசைப் பற்றிக் குறை சொல்கிறார்கள்; அதை அவர்களால் நிரூபிக்க முடியுமா என்றெல்லாம் கேட்டார்கள். உழைக்கும் மக்களுக்காகப் போராடுகிறோம், பாடுபடுகிறோம் என்று சொல்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியிலே நடைபெறுகிற இந்த முறைகேடுகளைப் பற்றி சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடத்திலே நான் அன்றைக்கே அந்த ஆதாரங்களைக் காட்டியிருக்கிறேன். அன்றையிலிருந்து இன்று வரையில் அந்த இயக்கத்தின் சார்பிலே அதுபற்றிய கேள்வி எழுப்பப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலையத் துறையினைப் பொறுத்தவரையில் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கோயிலிலே இருந்து வருகிற வருமானங்களை எல்லாம் கொள்ளை அடித்துச் சாப்பிட்டுக்கொண்டு அந்தக் கோயில்களுக்கு வரக்கூடிய யாத்ரீகர்களுக்குக் கூட செய்து கொடுக்க வேண்டிய பல்வேறு சலுகைகளைச் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கக்கூடிய ஆலயங்களிலே எல்லாம் கூடுதலாக அரசு அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் என்றும், அவ்வாறு பரம்பரை அறங்காவலர்கள் இருக்கக்கூடிய அந்தக் கோயில்களிலே அரசினுடைய செயல் அலுவலர்களை அனுப்பி தனிப்பட்ட முறையில் அடிக்கடி ஆய்வு செய்வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பில் இருக்கிற கோயில்களிலே இருக்கிற நகைகளையும், மற்றவைகளையும், சொத்துக்களையும் வங்கிகளிலே கணக்கு வைக்க வேண்டும் என்ற வகையில் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செய்தி திரைப்படத் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். செய்தி திரைப்படத்தைப் பற்றி சொல்வதற்கு முன்னாலே எனக்கு ஒரு கருத்து நினைவுக்கு வருகிறது. தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மன்னிக்க வேண்டும் டாக்டர் என்று அழைப்பதை அவரே விரும்பவில்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள். காரணம், இளமையிலே பட்டது முதுமையிலே தெரியும் என்பது போல, அவருடைய இளமையிலே எங்களுடைய மாணவர் சகோதரரின், உதயகுமார் அவர்களுடைய





இரத்த வெள்ளத்திலே நீந்திச் சென்று பெற்ற டாக்டர் பட்டம் வேண்டாம் என்று சொல்ல ஞானம் வந்ததற்கு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கலைஞர் அவர்கள் சொல்லுகிறார்கள், திரை அரங்குகள் எல்லாம் கிராமப் புறங்களிலே இருக்கிற டூரிங் தியேட்டர்கள் எல்லாம்.......

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு துறையினுடைய மானியத்தின் மீது பேசுகின்றவர்கள் மானியத்தை பற்றி பேசுவதை விட்டு விட்டு, யாரோ ஒருவரின் ரத்த வெள்ளத்திலே முன்னாள் முதல்வர் நீந்தினார் என்று சொன்னால், பலருடைய ரத்த வெள்ளத்திலே நீந்தியவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். ஆகவே இந்த அவையை திசை திருப்புகின்ற முறையில் இப்படிப்பட்ட பேச்சுகள் சரியல்ல என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இதற்கு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டுமா? நீங்கள் பேசும்போது சொல்லியிருக்கலாம்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் இராமநாதன் அவர்கள் பேசிய போது நான் கூட கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் எந்த திசையிலே அவருடைய பேச்சை பேசினார் என்பதையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

திரைப்படத் துறையைப் பற்றிச் சொல்ல வருகிற நேரத்தில், கிராமப்புறங்களிலே இருக்கிற டூரிங் தியேட்டர்களை தேவாலயமாக நாட்டுப்புற மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற கருத்தை முன்னாள் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான் முன்னாள் முதல்வர் அவர்களின் மீது மரியாதைவைத்து இருக்கிற காரணத்தாலே, டாக்டர் கலைஞர் என்று சொல்ல வந்தேன். அப்படிச் சொல்லுகிற நேரத்திலே, அவராகவே அவருடைய திருவாயினாலே மலர்ந்து அருளியிருக்கிறார்கள். டாக்டர் என்று தன்னை அழைக்க வேண்டாம் என்று. அண்ணன் இராமநாதன் அவர்கள் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன், டாக்டர் என்ற பட்டத்தை விட தலைவர், கலைஞர் என்ற பட்டம்தான் அவருக்கு விருப்பமானது என்ற காரணத்தாலே டாக்டர் என்று வந்து விட்டால், தலைவர் என்று போடமாட்டார்களோ என்ற எண்ணத்தால் மாற்றினாரோ என்னவோ எனக்குத் தெரியாது.

திரு. மு. இராமநாதன் : கலைஞரா, டாக்டரா என்று தீர்மானிக்க வேண்டியது நாங்கள், நீங்கள் இல்லை.

திரு. க. சோலைராசு : எனவே, எந்த வகையிலும் திசை திருப்ப வேண்டிய நோக்கம் எங்களுக்கு இல்லை என்று தெரிவித்துக் கொண்டு, கலைஞர் அவர்கள் டூரிங் திரையரங்குகளை தேவாலயம் என்று சொன்னார்களே, உண்மையிலேயே கலைஞருடைய கருத்துக்களிலே 100க்கு 100 முரண்படுகின்ற என்னைப் போன்ற இளைஞர்கள் இந்த ஒரு கருத்தை மட்டும் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் பல வகையான கருத்துக்களிலேயும் கலைஞருடைய கருத்துக்களோடு முரண்பட்டாலும் கூட, டூரிங் திரை அரங்குகளை தேவாலயமாக கிராமப்புறத்து மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்னைப் போன்ற இளைஞர்கள் எல்லாம், தள்ளாத வயதிலும் மற்றவர்கள் தள்ளாத கருத்துக்களை தந்த தந்தை பெரியாருடைய வாழ்க்கையை நாங்கள் பார்த்தது கிடையாது. இந்நாட்டு இங்கர்சா, தென்னாட்டு பெர்னாட்ஷா என்று சொல்லப்பட்டு வந்த பேரறிஞர் அண்ணாவினுடைய கருத்துக்களைக் கேட்கின்ற வயதிலும், பக்குவத்திலும் நாங்கள் இல்லை. இளமைக் காலத்திலே இருந்தோம்.

ஆனால், தந்தை பெரியாருடைய கருத்துக்களையும், பேரறிஞர் அண்ணாவினுடைய கருத்துக்களையும் திரைப்படங்கள் மூலம் சொன்ன புரட்சித் தலைவர் அவர்களின் திரைப்படங்களை, அந்த டூரிங் தியேட்டர் மூலம் பார்த்துத்தான், என்னைப் போன்றவர்கள் அரசியலுக்கே வந்தோம் என்று சொல்லி, அந்த திரைப்படத் தொழில் இன்றைக்கு நசிந்துப்போகக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், முதலிலே இருந்ததைவிட புரட்சித் தலைவர் அவர்களின் பொன் ஆட்சி இந்த தமிழ் மண்ணிலே தோன்றியதற்குப் பிறகுதான், திரைப்படத்துறையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த காம்பவுண்டிங் டாக்ஸ்க்கு மேலாக 10 சதவீதம் உயர்த்தி இருப்பதன் காரணத்தாலே, திரைப்படத் தொழில் நலிவு அடைகின்ற ஒரு நிலைக்கு வந்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அதற்காக பரிந்துரைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, மற்றொன்றைக் கூட இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

கலைஞர் அவர்கள் ஒரு திரைப்படத்திலே வசனம் எழுதியிருக்கிறார்கள். " ஓடுகிறாள், ஓடுகிறாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடுகிறாள் " என்று எழுதினார்கள். அப்படி ஓடுகிறாள் ஓடுகிறாள் என்று எழுதியிருப்பதைப் போலவே, அந்த வசனம் அவர்களுடைய வாழ்க்கையிலும் நடைபெறுகின்ற தன்மையிலே, புரட்சித் தலைவருடைய எங்கள் தங்கம் திரைப்படம்தான் அன்றைக்கு அவருடைய வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அன்றைக்கு எங்கள் தங்கம் என்ற திரைப்படத்தின் மூலம் வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொண்டவர்கள், இன்றைக்கு அதே திரைப்படத் தொழிலில் காகித ஓடம் விட்டுக்





கொண்டு கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப் பற்றி மனம்போனபடி புழுதி வாரி தூற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம் அந்தத் திரைப்படத் துறையிலே இருக்கிற ஒரு சில பிரச்னைகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு, அதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வாள் எடுத்து வீசி வாலிப உள்ளங்களை ஆட் கொண்ட புரட்சித் தலைவரின் திரைப்படங்கள் அன்றைக்கு சரித்திர ஏட்டிலே வெற்றி வாகை சூடியிருக்கிற நிலைமையிலே..............

திரு. [illegible]. இராமநாதன்: உறுப்பினர் மிக வேகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சொல்கிறேன். ஓடுகிறாள் ஓடுகிறாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடுகிறாள் என்ற வசனம் புரட்சித் தலைவரின் படத்தில் அல்ல ; நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் படத்தில்தான்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரும் அப்படிச் சொல்லவில்லை.

(பிற்பகல் 1—20)

திரு. க. சோலைராசு: துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது கலைஞருடைய வசனம் என்றுதான் சொன்னேனே தவிர, புரட்சித் தலைவர் நடித்த படத்தில் என்று சொல்லவில்லை. சிந்தனை தடுமாறி இருக்கிற அவர், நல்ல முறையில் குறுக்கிட்டுப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாளெடுத்து வீசி வாலிப உள்ளங்களைக்கவர்ந்த புரட்சி தலைவர் அவர்களின் வரலாற்று வீர சம்பவங்களையெல்லாம் கொண்ட திரைப்படங்களைப் போன்ற சரித்திரப் படங்கள் இப்போது வெளிவருவது குறைவாக இருக்கின்றன. எனவே வரலாற்று உணர்வு மிக்க அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க திரைப்படங்களை எடுக்கக்கூடிய பட உரிமையாளர்களுக்கு அரசு வட்டியில்லாத முறையில் கடன் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நடிகர்களுக்கு கலைமாமணிப் பட்டங்கள் கொடுக்கிறார்கள். சண்டைக் கலைஞர்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் இந்தப் பட்டம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இசை நாடக கலைஞர்களைப் பொறுத்த வரையில் இருவருக்கு மட்டும் பரிசு தருகிறார்கள். வயது முதிர்ந்து அவர்களுக்கு கொடுப்பதால் பயனளிப்பதாக இல்லை. எனவே,

இன்றைக்கு நாடகத் துறையில் தோன்றிக் கொண்டிருக்கிற இளைஞர்களுக்கும் இந்த கலைமாமணிப் பட்டம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாடக மேடையில் தோன்றுகிறவர்களுக்குப் பின்னணி குரல் கிடையாது, டப்பிங் கிடையாது. உணர்ச்சி பூர்வமாக மேடையில் நடிக்கக்கூடிய அவர்களுக்கு வருடத்தில் ஆறு மாதம் தான் வாழ்க்கை இருக்கிறது. மீதி ஆறு மாதம் அவர்கள் சம்பாதித்த பொருளை வைத்துத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 16 எம். எம். திரைப்படங்கள் ஒரே நேரத்தில் இருவரை பாதிக்கின்றன. ஒன்று திரையரங்கு உரிமையாளர்கள் மற்றொன்று நாடக கலைஞர்கள். எனவே, அதனை ரத்து செய்வதற்கு நடவடிக்கையெடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் தென்னகத்தின் சாளரமாக விளங்கும் தமிழ் நாடு, வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டுப் பாரம்பரியமும் கொண்டது. புகழ் மிக்க சுற்றுலாத் தலங்கள் பல இங்கு உண்டு. கலை நலமும், அருட் சிறப்பும் கொண்ட கோயில்களும், பழங்காலச் சின்னங்களும், பல நூற்றாண்டுகளாக நிமிர்ந்து நிற்கின்றன. இவைகளின் பெருமைகளை விளக்கி திரைப்படம் எடுக்க அறிவிப்பு வெளியிட்டிருக்கிற அமைச்சர் அவர்களுககு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில் இளைஞர் இல்லம் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் சுற்றுலா அலுவலகக் கட்டடம் ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருச்சி மலைக்கோட்டையில் ஒளி விளக்குகள் அமைக்கும் திட்டம் ரூபாய் 10 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட உள்ளது. இவைகளை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் வளர்த்த கரிகால்சோழன் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஒளி-ஒலி காட்சியை திருச்சியில் நடத்துவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாடு ஓட்டலில் பணியாற்றுபவர்களுக்கு சம்பளம் குறைவு என்ற எண்ணம் இருந்தது. அதைப் போக்குகிற அளவில் 1—7—1985முதல் ஊதியஉயர்வு கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இலாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஊக்க போனஸ் கணக்கிடும் முறையை மாற்றி மொத்த விற்பனையில் ஊக்க போனஸ் அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





சுற்றுலாத் துறையில் எதிர்காலத் திட்டங்கள் என்கிற முறையில் 10 திட்டங்களை அரசு தீட்டியிருக்கிறது. அதிலே தமிழ் இலக்கிய வரலாற்றுச் சிறப்புக்களை சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துக் காட்ட புதிய முயற்சிகள் ; யோகா, தியானம் போன்ற புதிய முயற்சிகளை ஓட்டல்களில் தங்குவோர்க்குஅறிமுகம் செய்து வைத்தல்; ஆகியவைகளை நான் பாராட்டுகிறேன். இவைகளை அறிமுகப்படுத்துகிற நேரத்தில் தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மல்யுத்தம், மர்மக் கலைகள், சிலம்பம் போன்றவைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தமிழர்களின் கலாச்சாரம் எங்கும் பரவும். வீர விளையாட்டுகளைக் கற்றிருப்பவர்களுக்கு வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் என்று சொல்லி அதை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு எந்த அரசும் உதவிக்கரம் நீட்டாத நிலையில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பத்திரிகை சகோதரர்கள் ஓய்வு பெறுகிற போது அவர்களுக்கு 250 ரூபாய் ஓய்வூதியமாக தருகிற நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறது. 250 ரூபாய் என்பது சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மிகவும் குறைவாக வருகிறது. அதை அதிகப்படுத்த வேண்டும். விளம்பரத்திற்கு பத்திரிகைகளை நாடி ஓடிக்கொண்டிருந்தவர்கள், காலையிலும் மாலையிலும் பத்திரிகைகளை வைத்துக்கொண்டிருந்தவர்கள்கூட அவர்கள் ஆட்சியில் பத்திரிகை நண்பர்களை கைவிட்டார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிதான் இந்தச் சலுகையைத் தந்துள்ளது. அமைச்சர் அவர்களை அதற்காகப் பாராட்டி இறுதியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு கோட்டையில் ஒரு சட்டத்தைப் போடுகிறோம் என்றால் அந்தச் சட்டம் குக்கிராமத்திலும் போய் சேர வேண்டும் என்கிற அடிப்படையில் செய்தி விளம்பரத் துறை .செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செய்தித் துறையைப் பொறுத்தவரையில் அரசுக்கு லாபத்தைக் கொடுக்கிற முறையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் செய்தித் துறை இப்படி செயல்படுகிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. இருந்தாலும் செய்தித் துறைக்கும் மக்களுக்கும் இடையே ஒரு இணக்கமான சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய அரசு பல்வேறு சட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறது விவசாயிகளின் நிலத்தின் நடுவே ஓடை போகிறதென்றால் தாசில்தாருக்கு மனு கொடுக்கிறார்கள். தாசில்தார் அந்த ஓடையை ஓரமாக போட்டு வயலைசெம்மைப்படுத்துகிறவகையில் காரியத்தைச் செய்கிறார். அதே போல் ஒருவரின் நிலத்திலிருந்து அடுத்தவரின் நிலத்திற்கு தண்ணீர் போக வில்லை யென்றால் குறுக்கே அடுத்தவரின் நிலம் வருகிறதென்றால் அங்கே விவகாரம், வம்பு வழக்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன

இதற்காக 19-டி என்ற சட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறது. அடுத்தவரின் நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்கிறபோது இடையில் இருப்பவர் அப்ஜெக்ஷன் செய்தால், அது தன்னு னுடைய நிலத்திற்கு அருகிலேயே இருக்கிற, அரசாங்க நிலத் திலே அந்தக் குழாய்களைக் கொண்டு செல்லலாம், அதற்கு வருடத்திற்கு இரண்டே இரண்டு ரூபாய் மட்டும் கொடுத்தால் போதும் என்ற சட்டம் எல்லாம் இருக்கிறது. ஆகவே சட்டங்கள் எல்லாம் இருந்தாலும் கூட, அங்கே உள்ள விவசாயி களுக்குத் தெரியவில்லை. அப்படி தெரியாத காரணத்தாலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான நிலங்கள் வறட்சியாலே பாதிக்கப்பட்டு அந்த விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அரசினுடைய நல்ல திட்டங்களை எல்லாம், இங்கே கோட்டையிலே போடுகிற திட்டங்களை எல்லாம் மக்களுக்குத் தெரிவிக்கிற வகையில், இந்தப் பிரச்சி னைகளை எல்லாம் மக்களுக்குச் சொல்கிற வகையில், செய்தித் துறை இவைகளைவைத்து ஒரு விளம்பரப் படமாக எடுத்து, குக்கிராமங்களுக்கு போட்டுக் காட்ட வேண்டும்.

உதாரணமாக இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று உணர்வு பூர்வமான வகையில் இன்றைக்கு புரட்சித் தலைவர்களுடைய அரசு பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது. அப்படி பாடுபட்டாலும் கூட, இந்தப் பிரசசினை குறித்து மக்கள் மத்தியிலே சிலர் அரசியல் லாபம் கருதி, இதை திசை திருப்பிக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய முன் னாள் முதல்வர் அவர்கள் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருநத போது, இங்கையில் இன்னல் தீரவில்லை, அங்குதமிழர்கள் சாகடிக்கப்படுகிறார்கள், சகோதரிகள் கற்பழிக்கப்படு கிறார்கள், எனவே, இந்தப் பிரச்சினை தீர்வதற்காக என் னுடைய சட்டமன்ற உறுப்பினர்பதவியைநான் ராஜினாமா செய் கிறேன் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு மேலைவையினுடைய எதிர்க்கட்சித் தலைவராக் அமர்ந்து கொண்டு இருக்கிற சூழ் நிலை இருந்து கொண்டு இருக்கிறது. அரசியல் லாபத்திற் காக அப்படிச் செய்தாலும் கூட, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இலங்கைப் தமிழர்கள் பிரச்சினைக்காக என்ன என்ன நட வடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதைப் பற்றி கிராம மக்களுக்கு தெரிவிப்பதற்காக ஒரு திரைப்படம் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

இறுதியாக வனத்துறையைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லி விடை பெறுகிறேன். கொடைக்கானலிலே இன்றைக்கு 5, 6 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து அவர்கள் அல்லல் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே பணியாற்றியஒரு அதிகாரிக்கு மக்கள் அங்கே கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்று யாரோ ஒருவர் போலியான தகவலை தவறான தகவலை கொடுத்து, அதன் காரணமாக, அந்த அதிகாரி,



நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இங்கே கொத்தடிமைகள் என்று சொல்லி, தற்போது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக நல்லஇதயம் படைத்த தனியார் முதலாளிகள் கூடஇன்றைக்கு கொடைக்கானலிலேஇருக்கிற அந்தஎஸ்டேட்டுகளில் வேலை பார்த்தவர்களை விலக்கிவிட்டார்கள். அதனுடைய விளைவாக அந்த அதிகாரி செய்த தவறினால், இன்றைக்கு ஏறக்குறைய 5 ஆயிரம் குடி மக்கள் வேலையில் இருந்து நீக்கப் பட்டு வேதனைப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சென்ற புதன் கிழமை அன்று, அண்ணா மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற திண்டுக்கல்லில் ஊர்வலமாக வந்து, ஏறக்குறைய 2 ஆயிரம் பேர்கள் தி.மு.க., நீங்கலாக அத்தனை இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் ஊர்வலமாக வந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம், நாங்கள் எல்லாம் சிறப்பாக சலுகைகளைப் பெற்றுக் கொண்டு இருக்கிறோம். நீங்கள் எங்களுக்கு வாழ வழி செய்து கொடுங்கள், நாங்கள் வேலை பார்த்த முதலாளி களிடம் இருந்து எங்களுக்கு வேலையை வாங்கிக் கொடுங்கள் என்றும், அதிகாரி செய்த தவறினால், எங்கள் அத்தனை பேர் களையும் வேலையில் இருந்து நீக்கி விட்டார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, திண்டுக்கல் நகரம் முழுவதும் அவர்கள் ஊர்வலமாக வந்து, கோஷம் போட்டு, அவர்கள் அந்த மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே கொடைக்கானல் பகுதியில் இருக்கிற அந்தத் தோட்டத் தொழி லாளர்களுக்கு வேலை கொடுக்கிற வண்ணம், அவர்களுக்கு வாழ்வு கொடுக்கிறவண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறைன்.

அடுத்து தொலைக் காட்சியைப் பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். தொலைக் காட்சிப் பெட்டிகள் என் னுடைய தொகுதியில் 80 பஞ்சாயத்துயூனியன்களில் இருக்கின்றன. அதிலே ஏறக்குறைய 35 ஊராட்சி மன்றத்திலே தொலைக் காட்சி பெட்டிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே காட்டப்படுகின்ற நிகழ்ச்சிகள் அத்தனையும் இந்தியிலேதான் ஒளி பரப்பப்படுகின்றது. இந்த நிலையில் மொழி புரியாத நிலையில், பாஷை புரியாத நிலையில் அந்தப் படங்களும் செய்தி களும் வருகிற காரணத்தால்,மக்கள் பார்ப்பதற்கு அந்த தொலை காட்சிப் பெட்டிகளை வழங்கினாலும் கூட, அவர்கள் இதனால் எந்தவிதமான பலனும், பயனும் அடையமுடியாத நிலையில் இருக்கிறது. எனவே தொலைக் காட்சி நிலையங்களிலே தமிழ் திரைப்படங்களையும், தமிழ்ச் செய்திகளையும், அதிகமாகக் காட்ட வேண்டும் என்ற வகையில் நம்முடைய மாநில அரசு மையப் பேரரசுக்கு வேண்டுகோள் விட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லை என்றால், இந்த தொலைக்காட்சி, மக்களுக்கு பயன்தராத, ஒரு தொல்லைக் காட்சியாகத்தான் இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து வீடியோவைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே வீடியோக்களை காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு திரைப்படம் வெளிவருகிறது என்று சொன்னால், அந்தத் திரைப்படம் திரையரங்குகளில் வெளியிடுவதற்கு முன்பாகவே, அது வீடியோக்களில் வந்து விடுகிறது. அப்படி வீடியோக்களில் வருகிற காரணத்தால், லட்சக் கணக்கான ரூபாய்களை முதலீடாகப்போட்டு எடுக்கப்பட்டு வருகின்ற திரைப்படங்கள் எல்லாம் வியாபார ரீதியில் வெற்றி பெற முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. காரணம் இந்த வீடியோக்கள் என்பது சாதாரணமாக டீ கடைகளிலும், பேருந்து நிலையங்களிலும் இன்னும் பல்வேறு இடங்களிலும் போட்டுக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படி இருப்பதினால் திரைப்படத் தொழில் நசிந்து போகக்கூடிய அபாயம் இருக்கிறது.

(பிற்பகல் 1-30).

அத்தோடு மட்டுமல்லாமல், பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிற சில சுயநலவாதிகள், மேலை நாடுகளிலிருந்தும், மற்ற வெளியிலிருந்தும் வருகிற திரைப்படங்களில் இருந்தும் சில ஆபாசமான காட்சிகளையெல்லாம் வெட்டி எடுத்து வந்து அதிலே புகுத்துகிற காரணத்தினாலே இன்றைக்கு தமிழர்களுடைய கலாச்சாரம், பண்பாடு அழிந்து விடக் கூடிய சூழ்நிலையெல்லாம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த செய்தி அறநிலையத்துறை, வனத் துறை சம்பந்தமான மானிய கோரிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

கோரிக்கை எண் 25— சின்கோனா.

கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை.

கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச்செலவு.





டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 12—இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், கோரிக்கை எண் 25—சின்கோனா, கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை, கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல, கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற வாய்ப்பினை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு முதலாவதாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற இந்துக் கோவில்களைப் பராமரிக்கிற நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் சில பகுதிகளில் அவைகள் சரியாக செயல்பட்டாலும் சில பகுதிகளில் அவைகள் ஒழுங்காகச் செயல்படாமல் இருக்கிற குறையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு பகுதியில் இருக்கிற ஆதி கேசவப்பெருமாள் கோவில் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்ற பெருங்குறை அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே ஆண்டு தோறும் நடைபெறுகிற திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெறாமல் இருக்கிற குறையை அந்தப் பகுதி மக்கள் பெருங்குறையாகக் கருதுகிறார்கள். எனவே அந்தக் குறைகளைக் களைகிற விதத்தில் ஆக்கபூர்வமான பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவில் பணியாளர்கள் எல்லோரையும் அரசு ஊழியர்களாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கை கோவில் பணியாளர்களிடமிருந்து வருவதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களாகிய என்னைப் போன்றவர்களும் அரசாங்கத்திடம் அப்படிப்பட்ட கோரிக்கையை பல காலமாக முன்வைத்திருக்கிறோம் எனவே அரசாங்கம் அதைப் பரிசீலித்து கோவில் பணியாளர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருக்கோவில்களில் உள்ள சகல அதிகாரிகளுக்கும் சம்பளம் மாதா மாதம் இலாக்காவிலிருந்து கொடுக்கப்பட்டு பின்னர் அந்தத் திருக்கோவில்களிலிருந்து திரும்ப அதை எடுத்துக் கொள்கிறார்கள். எடுத்து இலாக்காவிற்குக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அங்கே பணிபுரியும் பணியாளர்களுக்கு திருக்கோவில்களில் பணம் இருந்தாலும் மாதாமாதம் சம்பளம் கிடைக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை. எனவே அந்தப் பணியாளர்களுக்குசம்பளத்தை இலாக்காவிலிருந்து முதலாவதாக கொடுப்பார்களானால் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாடிக் கொண்டிருக்கிற அந்தப் பணியாளர்கள் சோதனையில்லாமல் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே அதைத் கருத்தில்கொண்டு, கோவில் பணியாளர்களுக்கு உரிய சம்பளத்தை அதிகப்படுத்தி மாதாமாதம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். • கன்னியா

குமரி மாவட்டத்தில் ஒரு டெப்டி கமிஷனரை நியமித்து அவர்களின்கீழ் குமரி மாவட்டத்திலுள்ள கோவில்களின் நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்தில் நிறையக் கோவில்கள் அறநிலையத் துறைக்கு உட்படாத விதத்தில் இருக்கின்றன. சிறு சிறு கோவில்கள் அப்படி அமைந்திருக்கின்றன. அந்தக் கோவில்களுக்குத் தேவையான பணம் இல்லாத காரணத்தால அங்கு திருவிழாக்கள சிறப்பாக நடைபெறாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கோவில்களுக்கு பொருள் உதவியை அரசு வழங்கி அந்தக் கோவில்களில் சிறப்பாக நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சுற்றுலா. சுற்றுலா என்று பார்க்கிறபோது உலகச் சுற்றுலாமையமாக இன்றையதினம் கன்னியாகுமரி மாவட்டம் விளங்கிவருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் முதல் சுற்றுலா மையமாக மாறுகிற நேரத்தில், உலக நாடுகளிலிருந்து பலதரப்பட்ட மக்கள் அங்கு வந்துசெல்கிற சூழ்நிலையில் அங்கு அவர்கள் வந்துபோவதற்கு வசதியாக விமான நிலையம் ஒன்றை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைத்துத்தந்திடவேண்டும், இதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெடுந்தூர ரெயில்கள் சென்று கொண்டிருந்தன. திடீரென்று திருவனந்தபுரம் பகுதிக்கு கனெக்ஷன் ஒன்றுதான் கொடுக்கும் சூழ்நிலை இன்றிருக்கிறது. அப்படி வரும்போது சுற்றுலாப்பயணிகளுக்கு மிகவும் இடைஞ்சலாகவும் குமரி மாவட்டத்தின் வளர்ச்சி கொஞ்சம் பாதிக்கக்கூடியவிதத்திலும் இருப்பதால் அந்தச் சிக்கலை மத்திய அரசிடம் அரசாங்கம் சுட்டிக்காட்டி எல்லா டிரெயின்களும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்துசெல்கிற சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குமரி மாவட்டத்தில் திப்பரப்பு, உலக்கருவி என்னும் நீர்வீழ்ச்சிகளில் எல்லா மாதங்களிலும் தண்ணீர் வந்த வண்ணம் இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளை சுற்றுலா மையமாக ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்காலத்தில் அரசர்கள் சுகவாசஸ்தலமாக தேர்ந்தெடுத்து குமரி மாவட்டத்தில் முத்துக்குளிவயலை அப்போது வைத்திருந் தார்கள். இப்போதுஅந்தப்பகுதி சரியாக பராமரிக்கப்படாததால் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, இந்த முத்துக்குளிவயலை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கித்தர வேண்டு மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், முட்டம் கடற்கரை, சங்குத் துறை ஆகிய பகுதிகள அழகான கடற்கரைப் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளை சுற்றுலா மையமாக ஆக்க அமைச்சரவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பழங்கால அரண்மனையான பத்மநாபபுரம் பகுதியிலஅரண்மனை பக்கம் மருந்து கோட்டை, மயிலாடும் கோட்டை ஆகியவை புராதன சின்னங்களாகும். அவற்றைப் பாதுகாக்க வேண்டும். அவை பாதுகாக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அதன் காரணமாக, அந்தக் கோட்டைப் பகுதியிலே உள்ளவர்கள் அதை ஆக்கிரமித்துக் கொள்வதற்காக பட்டா போட்டு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு, இந்த பத்மநாபபுரம் கோட்டைக்கு உட்பட்ட பகுதியில அமைந்திருக்கின்ற மருந்துகோட்டை, மயிலாடும்கோட்டை ஆகிய இரண்டு பகுதிகளையும் யாரும் அரசை ஏமாற்றாத முறையில் பட்டா போட்டு விற்றுவிடாமல் பாதுகாத்து, அந்தப் புராதன பகுதிகளை பாதுகாத்துத் தருப்படி கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அப்பர் கோதையாறு பகுதியை சுற்றுலா மையமாக்க வேண்டும். அது மிகவும் நல்ல பகுதி. அதுமட்டுமல்ல. அப்பர் கோதையாறுக்கு கன்னியாகுமரியிலிருந்து கீரிப்பாறை, பாலமோர் வழியாக நல்ல சாலை வசதி இருந்து வந்தது. அதை இப்போது தனியார் கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்போது அப்பர் கோதையாறுக்குச் செல்ல வேண்டுமென்றால், கிட்டத் தட்ட 60, 70 கிலோ மீட்டர் நாகர்கோவிலிலிருந்து, கல்லிடைக் குறிச்சி வழியாக, நெல்லை மாவட்டத்திற்கு வந்து, அம்பாசமுத்திரம் வழியாக அப்பர் கோதையாறுக்குச் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 70 கிலோமீட்டர் இது சுற்று வழியாகும். எனவே, இதை கவனத்தில் கொண்டு முன்னாள் இருந்த சாலைக்கு சுமார் 5, 6 இலட்சம் ரூபாய் செலவாகும், அதை செலவு செய்து நாகர் கோவிலிலிருந்து அப்பர் கோதையாறுக்குச் செல்ல சாலை அமைத்துக்கொடுத்தால் அது நல்ல சாலையாக அமையும். அப்படிச் செய்தால், தனியார் ஆக்கிரமித்துள்ள சாலையை அரசு சாலையாக அமைக்கின்ற வாய்ப்பு ஏற்படும். அதை கருத்திற்கொண்டு, அந்தச் சாலையை எடுத்து, அதைச் சுற்றுலா மையமாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தமிழகத்தில் பள்ளிகளில் பயில்கின்ற ஏழை எளிய குழந்தைகள், அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மிகப் புராதன நினைவுச் சின்னங்களை சென்று பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை கவனத்தில்கொண்டு ஏழை எளிய மக்களை ஆண்டுதோறும் அரசே இலவசமாக அழைத்துச்செல்லும் ஒரு திட்டத்தை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா மையங்களில் வாடகைப் பேருந்துகள், சுற்றுலா வாடகைக் கார்கள் இல்லை. எனவே, இதையும் கவனத்தில்கொண்டு, அந்தப் பகுதிகளில் புதிதாக வாடகைப் பேருந்துகள், சுற்றுலா வாடகைக் கார்கள் வசதியை ஏற்படுத்தித் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி கோதையாறு ஆகிய பகுதிகளையும் சுற்றுலா மையங்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வனத்துறையை எடுத்துக்கொண்டால், வனத் துறையைப் பொறுத்த மட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சரியான முறையில், ஒழுங்காகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. குமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் கழகத்தில் 4785.7 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிடப்பட்டு, அந்த ரப்பர் மூலம் 19,62,032 கிலோ இரண்டு ஆண்டுகளில், அதாவது 1—10—1984 முதல் ஜனவரி 1986 வரைக்குப் 4.04 கோடி ரூபாய்க்கு ரப்பர் விற்றதன் மூலம் வருமானம் வந்திருப்பதாக இங்கே குறிப்பு இருக்கிறது.

(மாலை 4—40)

இது மிக மிக குறைவான ஒரு வருமானம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக உலகத்தில் இன்றைக்கு கிடைக்கின்ற ரப்பர்களிலே மிகவும் தரம் உயர்ந்த ரப்பர் ஆக விளங்குவது இந்த குமரி மாவட்டத்தில் எடுக்கப்படுகின்ற ரப்பர் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஏக்கர் ரப்பர் வைத்து இருந்தால் கூட மிகவும் சீரோடும் சிறப்பாகவும் அதை வளர்ந்து சிறந்த ஒரு செல்வமாக அதைப் போற்றி வருவதை அந்தப் பகுதியில் காண்கிறோம். இந்த அரசு கழகம் ரப்பர் எஸ்டேட்டை ஒழுங்காக பராமரித்து இருக்குமானால் இன்னும் பல கோடி ரூபாய் அரசுக்கு நிகர லாபமாக வந்திருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் அங்கே தொழிலாளர்களை மிகவும் பழி வாங்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் அதை கண்டுபிடிக்கிற நேரத்தில் அதிகாரிகள் தப்புவதற்காக அங்குள்ள தொழிலாளர்கள் மேல்பழி போடுகின்ற சூழ்நிலை அடுத்து, அடுத்து நடக்கிற துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவற்றை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் இங்கே தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பதற்கு போக்குவரத்து வசதி இல்லை. அது சம்பந்தமாக அங்கே வேலைநிறுத்தம் நடைபெற்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதால் அங்கே உள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வேண்டிய—அவர்கள் வெளியில் சென்று படிக்கவேண்டியிருப்பதால், போக்குவரத்து வசதியை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அங்கே அதிகாரிகளின் வேலைநிறுத்தம் ஒன்று 19—2—1986 அன்று நடந்தது. அந்த நேரத்தில் அங்கே ரப்பர் கழகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முன் வந்து வேலை செய்து அரசுக்கு லாபத்தை ஈட்டித் தர முன் வந்தார்கள். ஆனால் அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கும்போது தொழிலாளர்கள் எப்படி வேலைக்கு செல்லலாம் என்று கருதி அன்று 19—2—1986-ல் வேலை செய்த தொழிலாளர்களுக்கு இதுவரைக்கும் சம்பளம் கொடுக்காத ஒரு குறை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு 19—2—1986-ல் வேலைக்குச் சென்று அரசுக்கு லாபம் ஈட்டித் தந்த தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல் மிக அதிகமாக ரப்பர் மரங்கள் பட்டுபோய் இருப்பது அங்கே காணப்படுகிறது. இவற்றிற்கு என்ன காரணம் என்று விசாரித்தபோது என்ன சொல்லுகிறார்கள் என்றால் நம்முடைய கழகம் கேரளாவில் உள்ள ரப்பர் போர்டோடு தொடர்பு கொண்டு அவர்களின் அறிவுரையின் படி பயிரிட்டு, மருந்து இட்டு, உரம் இட்டு செய்யவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கேரளாவில் உள்ள ரப்பர் போர்டில் இருப்பவர்கள் சொல்லுகின்ற அறிவுரைகளை இவர்கள் கேட்காமல் கேர் பண்ணாமல் லாபம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செய்வதால் அவர்களுடைய அறிவுரைகளை ஏற்காத காரணத்தால் இப்படி ரப்பர் மரங்கள் பட்டுப்போகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே இவற்றை கவனித்து அவர்களுடைய அறிவுரையைக் கேட்டு நம்முடைய கழகத்திற்கு நல்ல வருமானத்தைத் தேடித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சுமார் 10 வருடம், 15 வருடம் சி.எல். ஆக பணி புரிந்தும் இன்னும் நிரந்தரம் செய்யாமல் நிறைய தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் அங்கேயே அவர்கள் குவார்ட்டர்ஸில் தங்கி வேலைக்கு வருபவர்கள் அல்ல. சுமார் 5, 10 மைல் தூரத்திலிருந்து 2 ரூபாய், 3 ரூபாய் செலவு செய்து

வேலைக்கு வருபவர்கள். அப்படி வேலைக்கு வருகிற அந்த சி. எல். தொழிலாளர்கள் அன்று வேலை இல்லை என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு 2 நாள் 3 நாள் மிஞ்சினால் 5 நாளைக்குதான் வேலை கிடைக்கிறது. இந்த சூழ்நிலையில் அவர்கள் எப்படி வாழ முடியும். ஆகவே அப்படி சி. எல். ஆக பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் ப்ளாண்டேஷன் அமைப்பதற்கான ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அங்கே பயிரிடப்படாமல், நல்ல மண்வளம் கொண்டு அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் ரப்பர் ப்ளாண்டேஷன் ஆரம்பிக்கப்பட எந்தவிதமான பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்ற குறை இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் ரப்பர் ப்ளாண்டேஷன் பயிரிடுவோமானால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். எனவே அந்தப் பகுதியில் ரப்பர் ப்ளாண்டேஷன் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இன்னும் அதிகமான அளவில் அந்தந்தப் பகுதியில் சிறு சிறு குன்றுகளாக இருந்தாலும், அந்தப் பகுதியில் மரங்களை வளர்ப்போமானால், இன்னும் அதிக வருமானம் அரசுக்குக் கிட்டும் என்ற சூழ்நிலை ஏற்படும். எனவே இதையெல்லாம் கருத்நில்கொண்டு, அந்தப் பகுதியிலே சும்மா இருக்கின்ற இடங்களில் சமூகக் காடுகளை அமைத்து, அவற்றை வளம் கொழிக்கும் பூமியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய கோரிக்கைகளை நீங்கள் கவனத்திற் கொண்டு, எங்களுடைய மாவட்டம், ஒரு ஒதுக்குப்புறமாக இருந்தாலும், வளம் கொடுக்கக்கூடிய மாவட்டமாக இருப்பதால், அதைப் பயன்படுத்தி, அரசுக்கு வருமானத்தை ஈட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசுக்கு வருமானம் வரும் விதத்திலும், அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற விதத்திலும் திட்டங்களைத் தீட்டித் தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளை தொடர்பாகவும், செய்தி மற்றும் வனத்துறை தொடர்பாகவும், சில செய்திகளை காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் வைக்க விரும்புகிறேன்.



முதலிலே அறநிலையத்துறையை எடுத்து நடத்திக்கொண்டிருக்கின்ற அமைச்சர் பெருமகனார் மிகச் சிறப்பான பணிகளைச் செய்து கொண்டிருப்பவர் என்பதையும், அவர் செய்து கொண்டிருப்பதற்கு அடையாளமாக இந்தக் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் காண்கிறேன். அவருக்கு என்னுடைய பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில் நிலங்களைப் பிறரிடமிருந்து எடுத்து கோவில் நிர்வாகத்திற்குள்ளே கொண்டு வரப்பட்டிருப்பதும், பல்வேறு இடங்களில் குறைந்த வாடகையில் இருந்ததை அதிகப்படுத்தி, அதன்மூலம் அதிக வருவாயை இந்தக் கோவில்களுக்குத் தேடிக்கொண்டதும், அதைப் போலவே பூசை செய்வதற்கும்கூட வசதி இல்லாது இருக்கின்ற கோவில்களுக்கு, வசதியிருக்கின்ற கோவில்களிலிருந்து உதவி செய்வதும் மிகவும் பாரட்டுக்குரியது. அப்படி உதவி செய்யப்பட வேண்டிய ஒரு கோவிலாக குரும்பூர் ஆதிநாராயணசாமி கோவில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே திருச்செந்தூர் கோவிலிலிருந்து ரூ. 50,000-க்கும் மேலே இந்தக் கோவில் திருப்பணிக்குக் கொடுத்து, தக்கார் அவர்களும் மற்றவர்களும் ஒத்துக்கொண்டு தந்திருக்கிறார்கள். அரசாங்கம் அதை விரைவுபடுத்திவிட்டது என்று சொன்னால், அந்தக் கோவில் திருப்பணிகள் செம்மையாக நடைபெறும் என்பதில் சம்பந்தப்பட்ட அனைவரும் மிகுந்த வேண்டுகோளோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அதனை செய்து தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பில் நமது கலைகள், நமது சிலைகள் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய சிலைகளுடைய பாதுகாப்பு பற்றி சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவோ பாதுகாப்பு தந்தாலும்கூட, திருட்டுத்தனமாக சிலைகளையெல்லாம் வெளியே கொண்டு போய் சேர்ப்பது என்பது எப்படியோ நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்று. ''சென்றிடுவீர் எட்டு திக்கும், கலைச் செல்வங்கள் யாவையும் இங்கு கொணர்ந்து சேர்ப்பீர்'' என்பதைத் தவறாகப் புரிந்துக் கொண்டுதானோ என்னவோ, இங்கு இருக்கின்ற கலைச் செல்வங்களையெல்லாம் வேறு எங்கோ கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது தடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, அமைச்சரவர்கள், பாதுகாப்புப் பெட்டகங்களையெல்லாம், பாதுகாப்பு அறைகளையெல்லாம் நமது இலாக்கா மூலமாக அதற்கான ஏற்பாடு செய்வது பாராட்டுக்குரியது.

[திரு. குமரி அனந்தன்] [1986 ஏப்ரல் 25

(மாலை 4—50)

அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தபோது. அங்கே இந்திய அரசாங்கத்தின் சார்பில் நடைபெற்ற விழாவிற்கு சென்றேன். அங்கே நமது கலைச் செல்வங்களையெல்லாம் கொண்டுவந்து காட்டினார்கள், வெளிநாட்டுக்காரர்கள் பார்க்கவேண்டுமென்று, அரசாங்கத்தின் சார்பாக வைக்கப் பட்டிருக்கின்ற கலைச் செல்வங்களை யெல்லாம் பார்த்து விட்டு, ':மிச்சிகன் ஆர்ட் 'மியூசியம்' என்ற இடத்தில் இருக்கின்ற தனியார் வைத்திருக்கின்ற, அமெரிக்கர்கள் வைத்திருக்கின்ற ஒரு கண்காட்சியினை காணச் சென்ற போது, நமது இந்திய அரசாங்கம், தமிழக அரசாங்கத் தினுடையஒத்துழைப்போடுவைத்திருக்கின்றஅந்தக்காட்சியில்இருக் கின்ற சிலைகளைவிட எவ்வளவோ பிரம்மாண்டமான சிலைகள், அற்புதமான சிலைகள், இங்கே நம் அரசாங்கம் வைத்திருக் கிற காட்சியிலே காணப்படாத சிலைகள் எல்லாம் இருக் கின்றன. அது (Private C llections) என்ற பெயரால் இருந்துகொண்டிருக்கின்றது. அந்தச் சிலைகள் எப்படிப் போயின என்று நமக்குத் தெரியாது. அதிலே ஒரு சிலையிலே எழுதி வைத்திருக்கிறார்கள். It seems to be Tirugnana Sambandar இது திருஞானசம்பந்தர் போல் கருதப்படுகிறது என்று சொல்லி ஒரு சிலையிலே எழுதி வைத்திருக்கிறார்கள். நான் பார்த்தபோது அது திருஞானசம்பந்தர் சிலையே தான். ஆகவே அப்படிப் பெரிய பெரிய சிலைகள் எல்லாம் அங்கே போய் இருக்கின்றன. அவை எப்படிப் போயின என்பது நமக்குத் தெரிய வாய்ப்பில்லை. அன்னியர்கள் ஆண்டு கொண் டிருந்த நேரத்திலே போய் இருக்கலாம். இப்போதுகூட பல திருட்டுத்தனமாக போய் இருக்கலாம். நான் விடுக்கிற வேண்டு கோள் என்னவென்றால் எக்ஸ்பெர்ட் கமிட்டி போல் ஒரு நிபுணர் குழுவைப் போட்டு உலகெங்கும் அனுப்பி சிலைகள் எங்கெங்கே சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. யார் மூலம் சேர்த்து வைக்கப்பட்டிருந்தாலும் சரி அவைகளினுடைய தகவல்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பு எடுத்துக் கொண்டு வருவதற்கு நிபுணர் குழுவை அமைச்சர் பெருமகனார் அனுப்பினால் நன்றாக இருக்கும். ஏனென்றால் ஆட்சிப் பொறுப்பு அன்னியர்களிடம் இருந்த நேரத்திலே நம்முடைய கலைச் செல்வங்கள் நிறைய வெளியே சென்றுவிட்டன. இப் போதுகூட சில ஏடுகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஐந்திறன் என்ற அருமையான நூலை வெளியிட்டது உலக தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்ட நாளிலே நாம் செய்த உருப்படி யான காரியங்களிலே ஒன்றாகும். ஐந்திறனை நாம் படிக்கப் படிக்க ஐந்திறன் என்று சொல்கிற பஞ்சபூதங்களால் ஆன இந்த உலகத்திலே தமிழன் செய்யக்கூடாதது எதுவும் இல்லையென்று காட்டுகிற அளவுக்கு மயன் வழி வகுத்து வைத்திருக்கிறார்.



1986 ஏப்ரல் 25] [திரு. குமரி அனந்தன்]

அதிலே ஏறத்தாழ 10 லட்சம் பாக்களிலே 2 லட்சம் பாக்களை தமிழ்நாடு அரசாங்கம் நாடாவிலே பதிவு செய்திருப்பதை நான் உண்மையிலேயே போற்றுகிறேன். பாராட்டுகிறேன். மீதியிருக்கிற 7 லட்சம் பாக்களையும் நாடாவிலே பதிவு செய்ய வேண்டும். உலகத்திலே ஒப்பற்ற விஞ்ஞானத்தையும் மெய் ஞானத்தையும் தருகிற நூலாக மயன் வழி இருந்துகொண் டிருக்கிறது. ஆகவே அறநிலையத் துறையிலிருந்து அதற்கு எந்த எந்த அளவுக்கு ஊக்கம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

ஏனென்றால் சூரிய ஒளி மூலம் (Solar Energy) வளவன் ஏவா வான ஊர்தி என்ற சொல் அதிலே வருகிறது. அதாவது (Without any pilot ) என்று சொல்கிறோம் அல்லவா? (Unmanned) அந்த மாதிரி மனிதர் யாரும் உட்காராமலேயே வளவன் ஏவா வான ஊர்தி எதிலிருந்து, கதிரொளியாலே Solar Energy யாலே அப்படி அனுப்ப முடியும் என்று சொல்கிற குறிப்புகூட அதிலே வருகிறது என் பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே மிகச் சிறந்த முறை யிலே இருந்த தமிழன் கலைகள் எல்லாம் கோயில்களிலே வெளிக்காட்டப்பட்டு இருக்கின்றன. நான் இதை ஏன் குறிப்பிடு கிறேன் என்றால் விக்கிரவாண்டிக்குப் பக்கத்திலே இருக்கிற சின்னஞ்சிறு ஊரிலே இருக்கிற ஒரு மூர்த்தியின் பாதத்தில் குறிப்பிட்ட நாளில் சூரிய ஒளி விழுகிறது. விழா தொடங்குகிற போது அந்த சூரிய ஒளி பெருகிக்கொண்டே வருகிறது. அந்த விழாவினுடைய இறுதி நாளிலே அந்த மூர்த்தியினுடைய முழு உருவத்தையும் சூரிய ஒளி தொடுகிறது. அந்த அளவுக்கு விஞ்ஞான ரீதியிலே விக்கிரவாண்டிக்குப் பக்கத்திலே ஒரு சிறிய ஊரிலே அந்தக் கோயில் இருக்கிறது.

இன்று நீங்கள் கன்னியாகுமரியிலே பார்த்தால் அண்ணல் காந்தி மகான் அஸ்தி வைக்கப்பட்டிருக்கிற இடத்திலே மட்டும் அக்டோபர் 2 ஆம் தேதி சூரிய ஒளிபடும். இன்றைய தினம் நாம் சாதித்த விஞ்ஞானத்திலே அது ஒன்று. ஆனால் பன்னெடுங்காலத்திற்கு முன்னாலே பைந்தமிழன் எந்த அளவுக்கு விஞ்ஞானத்திலே உயர்ந்திருக்கிறான் என்று சொன்னால் அந்தக் கோயிலிலே சூரிய ஒளி கொஞ்சம் கொஞ்சமாக பாதாதி கேசம் என்று சொல்வதைப் போல் சூரியனே வணங்குகிற அளவுக்கு அந்த ஒளி வணக்கத்தைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழன் ஒரு காலத்திலே விஞ்ஞானத்தில் முன்னேறியிருப்பதால் அவைகளையெல்லாம் வெளிநாட்டிலே இருந்து வருகிற சுற்று லாப் பயணிகளுக்கு நாம் போதுமான அளவுக்குச் சொல்ல வில்லையோ என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் வெளி நாடுகளிலே என்ன செய்கிறார்கள் என்றால் நான் வேட்டிகன் சர்ச்சைப் பார்த்தபோது அங்கே ஒரு அருமையான குறிப்பை வைத்திருக்கிறார்கள். போப்பாண்டவர் பெருமகனார் இங்கே

வந்துவிட்டுச் சென்றாரே அவர் இருக்கின்ற வேட்டிகன் சர்ச்சைப் பார்க்கிற நேரத்திலே எவ்வளவு பெரிய அளவுக்கு எவ்வளவு பிரம்மாண்டமான அளவுக்கு எவ்வளவு வியக்கத்தக்க அளவுக்கு விம்மிதத்தோடு பெருமிதத்தோடு அது நின்றுகொண்டிருக்கிறது என்பதை காட்டுவதற்காக அங்கே என்ன செய்திருக்கிறார்கள் என்றால் அந்த சர்ச்சினுடைய நடுப்பகுதியிலே ஒவ்வொரு கோடாகப் போட்டு நியூயார்க் சர்ச்சின் நீளம் அகலம் இவ்வளவு தான், இஸ்டான்புல் சர்ச்சின் நீளம் அகலம் இவ்வளவு தான் நார்தர்டாம் சர்ச்சினுடைய நீளம் அகலம் இவ்வளவுதான் பிளாரன்ஸ் சர்ச்சினுடைய நீளம் அகலம் இவ்வளவுதான் லண்டனிலுள்ள செயின்ட் பால் சர்ச்சினுடைய நீளம் அகலம் இவ்வளவுதான் அதைவிட இந்த சர்ச்சினுடைய நீளமும் அகலமும் இன்னும் கிடக்கிறது பார்த்தீர்களா ? இவ்வளவு பரந்த விரிந்த தேவாலயம் என்பதை அதிலே காட்டுகிறார்கள்.

உலகத்திலே மிகவும் நீளமான காரிடார் என்று சொல்லப்படுகிற பிரகாரம் ராமேஸ்வரம் கோயிலில் தான் இருக்கிறது. வேட்டிகன் சர்ச்தான் உலகத்திலே அத்தனை சர்ச்சுகளையும் விடவும் பெரிது என்று சொல்வதைப் போல் நாமும் உலகத்திலே இருக்கிற எல்லாக் கோயில்களையும் விட இங்கே இருக்கிற பிரகாரம் தான் நீளமானது, சிறப்பானது என்று சொல்வதற்குரிய வழிவகைகளை நாம் கண்டாக வேண்டும். பெரிய பெரிய பொக்கிஷங்களை வைத்துக்கொண்டு இருக்கிற சர்ச்சுகள் இருந்தாலும் temples என்று அழைக்கப்படுகிற பழங்காலத்திலே எழுப்பப்பட்டது. அங்கேயெல்லாம் நம் தொலைபேசி போல் ஒரு கருவி வைக்கப்பட்டு அதிலே காசைப் போட்டு சுழற்றினால் அந்தக் கோயிலினுடைய வரலாறு சொல்லப்படுகிறது வீடியோவிலேயும் படமும் வந்துகொண்டிருக்கிறது. அதைப் போல் நம் கோயில்களிலே வைப்போமானால் மீனாட்சியம்மன் கோயிலில் வைத்தால் வெளிநாட்டினர் அவர்களுடைய மொழியிலேயே கேட்டுவிட்டுப் போவதற்கும் பார்த்துவிட்டுப் போவதற்கும் வாய்ப்பு இருக்கும். சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வருவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். கன்னியாகுமரியிலே காமராஜ் பூங்கா ஒன்றை ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், விமான நிலையம் வேண்டுமென்றும், அங்கே வியூயிங் டவர் என்று சொல்லப்படுகின்ற சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கும்—அதிலே ஏறிப் பார்த்தால் எல்லா இடங்களும் தெரியும். அது வேண்டுமென்றும் இரயில் நிலையம் வேண்டுமென்றும் வானொலி நிலையம் வேண்டுமென்றும் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற பொழுது வலியுறுத்திக் கேட்டேன். அன்று கேட்டதில் வானொலி நிலையம்தான் வந்திருக்கிறது. இரயில் நிலையமும் வந்திருக்கிறதே தவிர அந்த வியூயிங் டவர் வரவில்லை. காமராஜ் பூங்கா வரவில்லை. அவரது அஸ்தியைத் தனியாகவும்





வைத்திருக்கிறோம். காந்தி மகான் மண்டபம் இருக்கின்ற இடத்தில் வைக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அவருடைய அடியைப் பின்பற்றி நடந்தவர் என்ற காரணத்திற்காக அங்கேயும் வைத்திருக்கிறோம்; தனியாகவும் வைத்தோம். அப்படி வைத்தபொழுது ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்தோம். காமராஜ் பூங்கா என்ற ஒரு பூங்காவை அந்த இடத்தில் அமைத்துத் தர வேண்டும் என்று அந்த முடிவை எடுத்தோம்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபொழுது திரு. நீலகண்டன் அவர்களை வைத்து '' குமரிக் கண்டம் ''. என்ற படத்தை எடுத்தார்கள். அந்தப் படத்தை அந்த இடத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குப் போட்டுக் காட்டவேண்டும் அல்லது அது சம்பந்தமான வேறு விவரங்களைச் சொல்ல வேண்டும். இதற்குத் தெற்கேதான் மேல் தெங்குநாடு, கீழ் தெங்குநாடு இருந்தது ; லெமோரியா கண்டம் இங்கேதான் இருந்தது. முதல் தமிழ்ச் சங்கம் அங்கேதான் இருந்தது என்று குறிப்பிடுகின்ற பெரிய பொருட்காட்சியைக் கன்னியாகுமரியிலே நீங்கள் வைத்து, —குறிப்பாக கடற்கரையிலே காமராஜ் நினைவுச் சின்னம் இருக்கின்ற இடத்தில் அப்படிப்பட்ட ஒன்றை ஏற்பாடு செய்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதைப்போல, இங்கே இன்று காலையிலேயிருந்து பேசிய பெருமக்கள் மிக அற்புதமான செய்திகளையெல்லாம் சொன்ன பொழுது, நான் குறுக்கிட்டுப் பேசவில்லை. அவைகளை மனத்தில் குறித்து வைத்துக்கொண்டு இருந்தேன். என்ன காரணம் என்றால், இந்த சமபந்தி போஜனம் என்பதிலே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சமபந்தி போஜனம் என்ற வகையிலே, ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே வைகுண்டபதி என்று அழைக்கப்படுகின்ற நாராயணன் என்பவர் துவையல் சாப்பாடு என்று சொல்லப்படும் வகையில் ஒரு சாப்பாட்டைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். துவையல் சாப்பாடு என்று சொன்னால், தேங்காய், மிளகாய் போன்றவைகளையெல்லாம் அரைத்து, வெறும் துவையல் தவிர வேறு எதுவும் வைக்காமல் ஏழையாக இருந்தாலும், பணக்காரராக இருந்தாலும் அவர்களெல்லாம் ஒருமித்த சமபந்தி போஜனத்திலே சாப்பிட வேண்டுமென்று சொல்லுகின்ற துவையல் சாப்பாடு என்று சொல்லப்படும் சாப்பாட்டைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே சமபந்தி போஜனம் என்ற முறையில் அங்கே நடந்தது என்று குறிப்புகள் இருக்கின்றன; ஏடுகள் இருக்கின்றன. ஆகவே, நம் மக்கள் எல்லோரும் ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' என்பதனை, தொன்னெடுங் காலத்திலேயிருந்தே பின்பற்றி வந்திருக்கிறார்கள். ஏன்?

காலையிலே கோலம் போடுவதிலேகூட அரிசி மாவை இட்டுக்
கோலம் போடுகின்ற காரணத்தினாலே, சின்னஞ்சிறிய சிற்
றெறும்புகளுக்கு உணவு கொடுத்து விட்டுத்தான் தன்னுடைய
வீட்டிலே இருப்பவர்களுக்கு உணவு கொடுப்பது என்பது தாய்ப்
பாரம்பரிய வழக்கம் என்ற வகையிலே தமிழர்களிலே யார்
இதை முதலிலே கொண்டு வந்தார்கள் என்பதை விட, இது
இருந்தது, இன்றைக்கு இருக்கிறதா, இனிமேலும் செழிப்பாக
வளர்க்க வேண்டும் என்று சிந்திப்பதற்குக் கோயில்களில் நிர்வாகி
களாக வருபவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்த
வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல அங்கே முக்கியமாக நமது ஆலயங்களைப்
பற்றிய செய்திகள் பல இருக்கின்றன. ஏற்கனவே நமது அர
சாங்கம் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆலயங்கள்—குறிப்பாக
இந்த ஆலய வழிபாடு, தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே
அர்ச்சகர் நியமன முறை இவைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்
வதற்கு என்று ஜஸ்டிஸ் மகராஜன் தலைமையிலே ஒரு வல்லுநர்
குழுவைப் போட்டது. ஜஸ்டிஸ் மகராஜன் தமிழ் இலக்கியம்,
பிரெஞ்சு இலக்கியம், ஆங்கில இலக்கியம் ஆகிய இவைகளிலே
கரைகண்டவராக இருந்தார்கள். இன்னும் சொல்லப் போனால்
டி.கே.சி. யினுடைய அடுத்த நிலையிலேயிருந்து தமிழர்களுக்குத்
தமிழ்ச் சுவையை வாரி வாரி எடுத்து வழங்கிய வள்ளலாக
இருந்தவர். அவர் தன்னுடைய குறிப்பிலே பல செய்திகளை
யும் தருகிறார். தமிழ்நாட்டில் இருக்கின்ற கோயில்களில் ஆகம
விதிப்படி கட்டியிருப்பவை எவை எவை, ஆகம விதிப்படி கட்
டாமல் இருந்தாலும்கூட நாம் ஏற்றுக் கொண்டவை எவை எவை?
—உதாரணத்திற்காக அவர் சொல்கிறார், சிவா-விஷ்ணு கோயில்
என்று ஆகமத்திலே எங்கும் கிடையாது; ஆனாலும் கட்டப்பட்
டிருக்கிறது; நாம் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம்; அஷ்டலட்சுமி
கோயில் என்று ஒரு இலட்சுமிக்கு மேலே ஒரு இலட்சுமி அடுக்கி
அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகமப்படி அப்படிக் கட்டக்
கூடாது. ஆனாலும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இன்று
பிரம்மச்சாரியாக இருக்கின்றவர்களோ மனைவியை இழந்தவர்
களோ அர்ச்சகராக இருக்கக் கூடாது—இருக்கிறார்கள்; ஆனா
லும் நடைமுறையிலே அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.
ஆக, ஆகம விதிப்படியும் சில நடக்கின்றன; ஆகம விதிப்படி
இல்லாமலும் நடந்து கொண்டு இருக்கின்றன என்பதற்குப் பல
சான்றுகளை அவர்கள் தந்து கொண்டு போகிறார்கள்.

இன்று நமக்கு ''ஆடல்வல்லான்'' என்று சொல்லப்பட்டிருக்
கின்ற ஆதி கோயில் இருக்கிறதே, ''தென்னாடுடைய சிவனே
போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி; என்று சிவன்
தெற்கு இருக்கின்ற மக்களினுடைய தலைவன் என்பதற்காக,
அவனை வடிக்கின்ற நோத்திலேயெல்லாம் தெற்கே பார்த்தே
வடிப்பார்கள். அவர் விண்ணைப் பார்த்துக் கொண்டு இருப்
பதைப் போலவே கண்ணையும் வைத்துக் கொண்டிருப்பார்.





அவரை ஒரு கல்லில்கூட வடிக்க மாட்டார்கள். பஞ்ச லோகத்
திலேதான் வடிப்பார்கள். ஏனென்றால், பஞ்ச லோகமும் அவர்
ஆடிக்காட்டுகிறார் என்ற ஒருதத்துவத்தின் ரீதியாக, அப்படிபட்ட
நடராஜர் என்று சொல்லுகின்ற ஆடல்வல்லான் இருந்து கொண்
டிருக்கின்ற அந்தக் கோயிலிலே, இதைக்கூட திரு. வீரபத்திரன்
அவர்கள் மிக அதிகமான படிகை வைத்திருக்கிறார். அந்த
ஆடல்வல்லான் கோயிலிலே நடைபெறுகிற பூஜைகூட இன்று
மகுட ஆகமப்படி நடைபெற வேண்டும்; அது அப்படி நடை
பெறவில்லை என்று அவர் சொல்கிறார். மகுட ஆகமப்படி
நடைபெற வேண்டிய இந்தக் கோயில்—ஏனென்றால் இங்கே
இசையும் நாட்டியமும் கலந்த திருவுருவமாக இருக்கின்ற கார
ணத்தினால். அப்படி நடைபெறவில்லை. ஆனாலும் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றது என்றெல்லாம் பல செய்திகளை
அவர் சொல்லி, ஆக தமிழ்நாட்டிலே ஆகமப்படியும் சில காரி
யங்கள் நடைபெறுகின்றன; ஆகமத்திற்குப் புறம்பாகவும் நடை
பெறுகின்றன. இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்
தில், தமிழிலே வழிபாடு வருவதிலே தடை என்ன என்று மிக
அழகாக அவர் கேட்டிருக்கிறார்.

(மாலை 5–00)

அர்ச்சகர்களை நியமிப்பதைப் பொறுத்தவரையில், எந்த
இனத்தவராக இருந்தாலும், எந்தக் குலம் அவர் என்று பார்க்
காமல், எந்த ஜாதி அவர் என்று பார்க்காமல், அவருடைய
பிறப்பை வைத்துப் பார்க்காமல், அவர் இந்துவாக இருந்தால்
போதும் என்று சொல்கின்ற ஒரே ஒரு நிபந்தனையோடு அவர்
5 ஆண்டுக்காலம் படிப்பாரானால் அவரை அர்ச்சகராக ஆக்க
லாம் என்று சொல்கின்ற ஒரு நெறிமுறையை அதிலேயே வகுத்துத்
தந்திருக்கிறார். வகுத்துத் தந்ததோடு மட்டுமல்ல, அதிலேயே
தமிழிலே வழிபாடு நடத்த வேண்டுமென்பதற்காக மிகச் சிறப்
பான கருத்துக்களை எல்லாம் எடுத்துரைக்கிறார்.

நக்கீரரே எப்படித் தமிழிலே வழிபாடு செய்தார்?
யானறிந்த வகையில் ஏற்றி என்று அவர் பேசியிருக்கிறார். என்
னுடைய தமிழ்மொழியிலே நான் அறிந்த அளவு நான் ஏற்றிப்
போற்றுகிறேன இறைவா என்று அவர் சொல்லுகிறார் தமிழிலே
வழிபாடு இருந்தது. பழமுதிர்ச் சோலையிலே ஒரு குறத்தி
வழிபாடு செய்தாள். பழக்கத்தில் இருந்த தமிழிலே வழிபாடு
செய்தார். அதை இறைவன் மனமுவந்து ஏற்றுக் கொண்டான்
அதைப் போலத்தான் தமிழால் பல அற்புதங்கள் வந்திருக்கின்
றன. இத்தனை வந்ததற்குப் பிறகும் ஏன் தமிழ் வழிபாடு
கூடாது? தமிழ் வழிபாடு உடனேயே வேண்டும். தமிழ் வழிபாடு
ஆகமத்திற்கு விரோதமானது அல்ல, தமிழிலே வழிபாடு கொண்டு
வருவதிலே சிரமமே இல்லை என்று மிக ஆணித்தரமாக எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அதிலே அவர் சொல்கின்றபொழுது
மிகச் சிறப்பாக சொல்லப்பட்டது என்னவென்றால், தமிழ்

நாட்டில் இருக்கிற கோவில்களுடைய சிறப்புக்களை எல்லாம்
பாடல் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றா என்று கேட்பது தான்
பெருமையாக இருக்கிறது. அதை அப்பர் பாடினாரா? அதை
சுந்தரர் பாடினாரா? அதை சம்பந்தர் பாடினாரா? அதை மாணிக்
கவாசகர் பாடினாரா? தமிழில் தானே பாடினார்கள். தமிழில்
பாடப் பெற்றால் தான் ஒரு கோவில் சிறப்புடையது என்று
சொன்னால், உள்ளே வழிபாட்டிற்குக்கூட தமிழில் இல்லை என்று
இருக்கக் கூடாது. இன்று தமிழிலே வழிபாடு நடக்கிறது.
ஆனால், தமிழிலும் செய்யப்படும் என்பதற்குப் பதிலாக தமிழி
லேதான் வழிபாடு செய்யப்படும், கேட்டால் வட மொழியிலும்
செய்யப்படும் என்று இருக்க வேண்டும். ஏனென்றால், வட
மொழிக்கு நாம் யாரும் விரோதிகள் அல்ல. வடமொழி என்று
சொல்வது கூட, தமிழர்கள் ஒரு காலத்திலே தங்களுடைய
திறமையால் இயற்றிக் கொண்ட ஒரு மொழி என்று சொல்கின்ற
ஒரு கருத்து இப்பொழுது வந்திருக்கிறது. ஆனால், எல்லா பாமர
மக்களும்—ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் எழுதுகிறார்கள்—
ஒன்று அந்த மதத்தில் இருக்கிற சில தத்துவங்களை, அந்த
இறைவனுடைய பேரருளைப் பெற வேண்டுமென்று விரும்புகிற
ஏழை, எளிய மக்கள், பெற முடியாமல் போனதற்குக் காரணம்,
புரியாத மொழியிலே, சமயச் சடங்குகள் நடப்பதுதான் என்று
சொல்கிறேன். எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் பெரு
மகனாரைக் கேட்டுக் கொள்கிறேன், ஜஸ்டிஸ் மகராஜன் அவர்
கள் குழு கொடுத்திருக்கின்ற குறிப்புகள் மிகச் சிறப்பானவை
யாக இருக்கின்றன. அவர்கள் சொல்கிறார்கள் தமிழிலே வழி
பாடு வர வேண்டுமென்று. தமிழிலே வழிபாடு வர வேண்டு
மென்று சொல்வது மட்டுமல்ல, 'ஓம் நமக, நமக' என்று சொல்
வதற்கு, 'ஓம் ஈசனடி போற்றி' 'ஓம் எந்தையடி போற்றி' என்
றெல்லாம் அவர்கள் அழகாக அந்தப் போற்றித் திருஅகவலைப்
போற்றிக் காட்டியிருக்கிறார்கள். அதைத் தமிழிலே சொல்
கின்ற பொழுது, நமது நெஞ்சத்தை ஈர்ப்பதைப் போலே,
உருக்குவதைப் போலே, நெக்கு, நெக்குருக, தனித்த, சுவை,
சுவை சொட்ட, சொட்ட, நாம் இரண்டற கலப்பதைப் போல,
நமக்குப் புரியாத ஒரு மொழியிலே அதைச் செய்ய முடியாது
என்று அழகாகச் சொல்கிறார்கள். அதனையே அப்படி ஏற்றிச்
செய்து விடலாம் நாம். அதைப்போலவே ஆகமப் பள்ளிகளை
கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார். ஓரிடத்திலே 20
பேர்களை எடுக்கிறார்கள்; ஓரிடத்திலே 15 பேர்களை எடுக்
கிறார்கள். மொத்தமாகப் பார்த்தால், 115 பேர்கள் அந்த
ஆகமப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிபதி மகராஜன் அவர்கள்
கொடுத்த ரிப்போர்ட்டுக்கு மேலே என்ன செய்ய வேண்டுமென்று
தெரிந்து கொள்வதற்காக, அதை நடைமுறைப்படுத்துவதற்கு
என்ன வழி என்று தெரிந்து கொள்வதற்காக, செயற் குறிப்பு
கள் கிடைக்க வேண்டுமென்பதற்காக, மரியாதைக்குரிய கிருஷ்ண
சாமி ரெட்டியார் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவைப் போட்
டிருக்கிறார். நான் பணிவோடு கேட்கிறேன், நீதிபதி மகராஜன்





அவர்கள் நீதிபதியாக இருக்கிற காரணத்தாலே, அவர்கள் மிகத்
தெளிவாகச் சொல்கிறார்கள். இரண்டு சட்டத் திருத்தங்களைக்
கொண்டு வாருங்கள். இரண்டு சட்டத் திருத்தங்களைக் கொண்டு
வந்து விட்டால், அர்ச்சகர் நியமனத்தில் உச்ச நீதிமன்றம்
எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்ல முடியாது என்று சட்டத்
திருத்த வாசகத்தையும் போட்டிருக்கிறார். இவ்வளவு தூரத்
திற்கு மிகச் சிறப்பாக தோல் சீவிய மாங்கனியாகக் கையிலே
கொடுத்ததற்குப் பின்னாலே கூட, அதைச் செயல்படுத்துவதிலே
நமக்கு என்ன சிரமம்? அதைச் செயல்படுத்துவதற்குச் செயற்
குறிப்பு தாருங்கள் என்று ஒரு குழு இப்பொழுது போட்டிருப்
பது, கால தாமதத்தை ஏற்படுத்தி விடுமோ என்று நான் கருது
கிறேன்.. ஏனென்றால், 4 வருடங்களுக்கு முன்னாலே, மகராஜன்
ரிப்போர்ட்டை,—அந்த அறிக்கையைப்—பெற்றதற்குப் பின்னா
லேகூட, ஆகமப் பள்ளிகளை அவர் பல இடங்களிலே ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கும்
போது, ஒரு இடத்திலே, பழனியிலே ஏற்பாடு செய்வதற்கு,
நாம் ஆணை பிறப்பித்திருக்கின்றோம் என்று சொல்கின்ற
அளவுக்குத்தான் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பு
இங்கே இருக்கிறது. அதிலே கூட, பாடத் திட்டங்கள் இன்னும்
வகுக்கப்படவில்லை. ஆகமங்கள் 5 ஆண்டுக் காலம் சொல்லிக்
கொடுக்கப்பட வேண்டும், அதைச் செய்யவில்லை, அதற்கு,
தமிழிலே, பாண்டித்தியம் உடையவர்களாக இருக்க வேண்டும்.
அவற்றையெல்லாம் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டதற்குப்
பிறகு, இன்னும் கால தாமதம் செய்யாது, அர்ச்சகர் நியமனம்
உட்பட, ஆகமப் பள்ளிகள் தொடங்குவது உட்பட, தமிழிலே
வழிபாடு உட்பட, உடனடியாக அரசாங்கம் சில திருத்தங்களைக்
கொண்டு வந்து செய்து விடலாம்.

இனி, ஒரு மனக் குறை எனக்கு இருக்கிறது. ஜஸ்டிஸ்
மகராஜன் ரிப்போர்ட் வந்து அவையிலே வைக்கப்பட்டதா?
வைக்கப்பட்டதற்குப் பின்னாலே, ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டி
யார் ரிப்போர்ட் வந்ததாகச் சொல்கிறார்களே, அது வைக்கப்
பட்டதா? அந்த இரண்டையும் அவையிலே வைக்கலாம் அல்லவா?
நான் இன்னும்கூட வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த இரண்
டையும் அவையிலே வைத்துக்கூட நம்முடைய கருத்துப் பரி
மாற்றத்திற்கு—தேவைப்பட்டால், தேவைப்பட்டால் வைத்துக்
கொள்ளுங்கள்—அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுவதாக
இருந்தால்கூட, என்னைப் போன்றவர்களுக்கு அதிலே உடன்
பாடு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் தமிழனை உள்ளே அழைத்து தமிழை
வெளியே நிறுத்துவது தமிழனுக்கு சிறப்பு அல்ல. தமிழை
நாங்கள் வெளியே நிறுத்துவோம், தமிழனை மட்டும் உள்ளே

கொண்டுவருவோம் என்று சொன்னால் இந்தத் தத்துவம் வளராது; அந்த தமிழனுடைய மனமும் வளராது. எனவே

தென்னாடுடைய சிவனே போற்றி !
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

என்று எல்லா மதங்களையும் இணைத்து அழைத்துக்கொண்டு போகிற பக்குவம் உடைய அந்த தமிழன் தன்னைத்தானே திருத்திக்கொள்வதற்கு மட்டுமல்ல, தரணியையே திருத்துவதற்குரிய தத்துவத்தை வைத்திருக்கிறவன். அந்தத் தத்துவத்தை வைத்திருக்கிற தமிழிலே வழிபாடு இல்லை என்ற காரணத்தாலே கோவிலுக்கு வெளியே நின்றுகொண்டிருக்கிறான். அவன் உடல் உள்ளே வந்தாலும் கூட உள்ளம் வெளியே நிற்கிறது. அதனாலே ஏற்படுகிற பிரச்சனைகள் ஏராளம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தன்னை இரண்டற அதிலே கரைத்துக்கொள்ள முடியாத காரணத்தாலே, ஐக்கியப்படுத்திக்கொள்ள முடியாத காரணத்தாலேதான் சலனங்களுக்கு ஆட்படுகிறான் என்று நீதிபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து இதை மனதிலே கொண்டுவந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா காரியங்களையும் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏன் என்று சொன்னால் அர்ச்சகரைப் பொறுத்தவரையில் நீதிபதி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வர்ணாசிரம தர்மம் என்ற கொடுமை தமிழ்நாட்டிலே கிடையாது; இன்று வர்ணாசிரம தர்மத்தோடு அர்ச்சகரை அனுமதிக்கின்றோம் என்று சொல்லுகின்ற பேச்சுக்கே இடம் இல்லை. தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டு வந்திருக்கிற இலக்கியங்களை எல்லாம் எடுத்துக் காட்டி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், சங்க இலக்கியங்களில் எங்கேயும் ‘ சூத்திரன் ’ என்ற சொல்லே கிடையாது என்று. கி.பி. 11-ம் நூற்றாண்டு வரையில் இந்தச் சொல்லே கிடையாது. கி.பி. 11-ம் நூற்றாண்டு வரையில் இல்லாதபோது குலத்தாலே ஒருவன் அர்ச்சகன் ஆகப்போகிறான் என்று சொல்வது என்ன நியாயம் என்றெல்லாம் அவர்கள் வாதிடுகிறார்கள். அவ்வளவு வாதத்திற்குப் பின்னால், அவர்கள் திறமையால் எடுத்து முடிப்புரையைத் தந்த பிறகு, அதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பது என்னைப்போன்றவர்களுடைய பணிவான வேண்டுகோள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களிலே இந்த தமிழ் வழிபாட்டிலே கலந்துகொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற ஆர்வத்தோடு இருப்பவர்கள் என்பது எனக்குத் தெரியும் . ஆனால் இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே அல்ல, இன்று நீங்கள் முடிவு சொல்லுகின்ற நேரத்திலே கூட இந்த ஜாதிம்பேத இல்லாத நிலையில் இறைவனை வணங்குவதற்குரிய தகுதிகளை, மற்றவைகளை படித்திருந்தால், கர்ப்பக்கிரகம்





உள்ளே போகின்ற அளவுக்கு கூட அவர்கள் பயிற்சி பெற்றிருந்தால், ஜாதி வித்தியாசம் இல்லாமல் அவர்களை உள்ளே அனுப்புவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும்; அத்தகைய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிகமாக நேரத்தை எடுத்துக்கொள்வது எப்போதுமே எனக்குப் பிடிக்காது. ஆகவே இன்னும் எந்தத் துறைக்கும் நான் போகாமல் இந்த ஒரு நிலையிலே நின்று, உங்களுக்கு பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒரு செய்தியை நீங்கள் நிறைவேற்றி, தமிழ்நாட்டிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு எல்லாம் பெருமை தேடித் தரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் உணர்ச்சி மிகுந்த சிறந்த கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் சிறந்த கருத்துக்களை வழங்கிக்கொண்டிருக்கிற நேரத்தில் குறுக்கிடக்கூடாது என்று இருந்தேன். இப்போது அந்த விளக்கத்தைத் தெரிவித்துவிடுகிறேன். காரணம் அவர்களுக்குப் பின்னாலும் சில உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவர்களுக்கு பயனுள்ள வகையில் இந்த விளக்கம் இருக்கும். அதைத் தொடர்ந்து இறுதியிலே அரசின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல முடியும்.

தமிழக அரசின் சார்பில் எல்லோருமே அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இயற்றப்பட்டதை மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் எடுத்துத் தெரிவித்தார். அந்தச் சட்டம் செல்லுபடி ஆகாது என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, அது தடுக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் அதற்குமேல் நடவடிக்கை எடுக்க முடியவில்லையா அல்லது நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலையில் அரசு அப்போது இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

நம்முடைய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அமைந்த பிறகு மீண்டும் பரிசீலனை செய்து, அதை நடைமுறைப்படுத்த என்ன வழி என்று கண்டறிந்து சொல்ல மிகச் சிறந்த இன்றைய அறிவுலகத்தைச் சேர்ந்தவரும் மிகச்சிறந்த புலமை பெற்றவரும், பல மொழிகளிலே சிறந்த ஆற்றல் பெற்றவருமான மாண்புமிகு நீதிபதி மகாராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம். அந்தக் குழு தமிழகத்தில் இருக்கிற சமயச்சான்றோர்கள், பொது வாழ்வில் இருக்கிற ஆன்மீகத் துறையைச் சேர்ந்த அறிஞர்கள் ஆகியோரை சந்தித்து, இறுதியாக தன்னுடைய கருத்தை வழங்கியிருக்கிறது.

வழங்கப்பட்ட அந்தக் கருத்தில் அர்ச்சகராகலாம்; தமிழிலே
வழிபாடு நடத்தலாம்; இதில் எந்த விதமான தடையும்
இல்லை; ஆனால் அரசியல் சட்டத்தில் அதாவது இந்தியாவி
னுடைய அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைச் செய்துவிட்
டால் தான் இது நிலைக்கும் என்ற கருத்தை மாண்புமிகு
நீதிபதி திரு. மகராஜன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.
தமிழக அரசு அதற்கான நடவடிக்கை எடுத்து இந்திய அரசுக்
குத் தெரிவித்து இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில்
இந்தத் திருத்தத்தைச் செய்தாக வேண்டுமென்று நாம் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இந்திய
அரசியல் சட்டம் எப்போது திருத்தப்படுகிறது என்று எதிர்
பார்க்காமல், அப்படி அரசியல் சட்டம் திருத்தப்பட்டு அப்படிப்
பட்ட உரிமைகள் வழங்கப்படுமேயானால் அதற்காக எந்தப்
பண்ணைப் பண்படுத்தி வைக்க வேண்டுமோ அதற்கேற்ற ஆகம
விதிகளைத் தெரிந்துகொண்டிருப்பவர்கள்; அர்ச்சகர்களாக இருக்
கக்கூடிய தகுதி பெற்றவர்கள் இந்த நாட்டிலே, மாநிலத்திலே
தோன்ற வேண்டுமே! அதற்காகத்தான் நம்முடைய
அதிகாரத்திற்குட்பட்டு அந்த ஆகம விதிகளைப் பயிற்றுவிக்கிற
பாடசாலைகளை, பயிற்சி சாலைகளைத் தோற்றுவிக்கவேண்டு
மென்கிற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அப்படி அரசு
ஈடுபடுகிறபோது, மாண்புமிகு நீதிபதி திரு. மகாராஜன் அவர்கள்
இப்படிச் செய்யலாம், தமிழில் வழிபாடு நடத்தி எல்லா ஜாதி
யினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஏற்றுக்கொண்டி
கிறாரே தவிர, பாடத் திட்டங்களை அங்கே பயில்கிற மாண
வர்கள் எதைப்படிக்க வேண்டும் என்பதற்கான அந்தத் திட்டங்
களை அவர்கள் தெரிவிக்கவில்லை. அந்தத் திட்டங்களைத்
தெரிந்துகொள்வதற்கு, அதை வகுத்துத் தருவதற்
காகத்தான் அரசியல், ஆன்மீகத் துறைகளிலே மிகச் சிறந்த
சான்றோராக மிகச் சிறந்த உயர்நீதிமன்ற நீதிபதியாக இந்தக்
காலத்தினுடைய எல்லா கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டிருக்கிற
ஒரு மிகச் சிறந் தகல்விமானாக, அறிவுமானாக இருக்கிற திரு.
கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் அந்தக்
குழுவை நியமித்தோம். அவர்கள் அந்தக் கருத்தை அப்
படியே ஏற்றுக்கொண்டு எப்படிப்பட்ட பாடத் திட்டங்களை
வகுப்பது, சொல்லிக்கொடுப்பது என்பதை அவர்கள் நமக்கு
ஒரு குருவினுடைய அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள்.
அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு தான் இப்போது பழனியில்
ஆகம பாடசாலையைத் தொடங்க இருக்கிறோம்.

அரசியல் சட்டம் திருத்தப்பட்ட பிறகு, எந்தவிதமான
தடையும் இல்லாத நிலைமை ஏற்படுகிறபோது அதற்காகத்
தகுதியானவர்கள் நம்முடைய மாநிலத்திலே வரவேண்டும்,
கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் திரு. கிருஷ்ண
சாமி ரெட்டியார் அவர்கள் குழு போடப்பட்டது. அவர்கள்





தெரிவிந்த கருத்துக்களின் மீதுதான் இந்த ஆகம பாடசாலை
தோற்றுவிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். காரணம் இதற்குப் பின்னால் பேசுகிறவர்கள்,
ஆன்மீகத்திலே நம்பிக்கை கொண்டவர்களாகத் தங்களைத்
தெரிவித்துக்கொள்பவர்கள், இந்து சமுதாய மக்களுக்காக
தங்களை ஒப்படைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லி
போராடிக் கொண்டிருப்பவர்கள் இன்றைக்கு சமுதாயத்தில்
அமைதி வர—வன்முறைக் குழப்பங்களால், தீவிரப் பேச்சுக்
களால் இன்றைக்கு மாற்ற முயன்றுகொண்டிருப்பவர்கள் யாரா
வது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது மாண்பு
மிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் தெரிவித்த
இந்தக் கருத்துக்களைச் செயல்படுத்துவதற்கு நியாயமான
அடிப்படையில் நாம் எப்படி நடைமுறைப்படுத்த முடியும்,
அதற்காக என்ன செய்ய முடியும் என்ற ஆக்கபூர்வமான முயற்சி
களைச் செய்வதற்கு இந்த விளக்கம் உதவியாக இருக்கும் என்று
கூறி இந்த அளவுடன் நிறுத்திக்கொள்கிறேன்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வனத்துறை, அறநிலையத்துறை மற்றும்
சுற்றுலாத்துறை ஆகிய துறைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்
பளித்த இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரி
வித்துக்கொண்டு எனது கருத்துக்களைச் சொல்கிறேன்.

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த அரசு வனத்தையும்,
அறநிலையத்துறையையும் பாதுகாத்து அதிலே இருக்கின்ற
சிறப்பான முறைகளை எல்லாம் பாதுகாக்கக்கூடிய அளவில்
செயல்படுகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். குறிப்பாக
1932 ஆம் ஆண்டு முதல் விறகுக்காக என்று மரங்கள் வெட்டப்
படாமல், காடுகள் அழிக்கப்படாமல் இந்த அரசு காப்பதை
நாம் அனைவரும் நன்கு அறிவோம். காடுகளை அழிக்காமல்
காப்பதன் மூலமாகத்தான் இன்று பருவமழை ஓரளவுக்குப்
பெய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கு முன்பிருந்த
அரசுகள் காடுகளை வெட்டி அழித்ததன் காரணமாக பல
ஆண்டுக்காலமாக மழை இல்லாமல் இருந்ததை நாம் நன்கு
அறிவோம். இந்த வனத்துறையின் அறிக்கையிலே வன நிலங்
களை அத்தியாவசிய காரணங்களுக்காக குத்தகைக்கு விடுவதை
யும் முறைப்படுத்தி 1986 ஆம் ஆண்டிலிருந்து வகைவாறான
விலை வீதங்களைக்கொண்டு வந்து அரசினுடைய வனத்துறையி
னுடைய வருமானத்தை அரசு அதிகப்படுத்தி இருக்கிறது.

அதேபோல இந்த அரசு சந்தன மர விற்பனையில் ஏலத்
தின் மூலம் அறிவிப்பு செய்து பல கோடி ரூபாய் லாபம் கிடை
திருப்பதாக அரசு அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்
கிறது. அதேபோல இந்த அரசில்தான் தெற்குப்பட்டி என்னும்
இடத்தில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை

துவங்கப்பட்டு கோடிக்கணக்கில் தமிழக அரசுக்கு வருவாய் கொடுத்துள்ளது. அதேபோல இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தேன் தயாரிக்கக்கூடிய தொழில்களை கொடுத்து, பல வகையில் அந்தக் குடும்பங்களை வனத்துறையின் மூலமாக காப்பாற்றி உள்ளது.

மேலும் வனத்துறையின் மூலமாக பல ஏழை எளிய மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர். சமீபத்தில் கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே சமூகநலக் காடுகள் துவங்கப்பட்டு ஸ்வீடன் நாட்டு உதவியுடன் நடத்தப்பட்டு, இன்று அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் பட்டி தொட்டிகளில் எல்லாம் மரங்கள் வளரக்கூடிய ஒரு நிலை உருவாகி இன்று மரங்கள் எல்லாம் மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கக்கூடிய சூழ்நிலையைக் காண்கிறோம். சமூகநலக் காடுகள் இந்தியாவிலே பல மாநிலங்களிலே செயல்பட்டாலும், தமிழகத்திலேதான் அந்த சமூக நலக் காடுகள் மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று வெளி நாட்டினரே சொல்லக்கூடிய அளவுக்கு, அந்த சமூக நலக்காடுகள் சிறப்பாக வளர்க்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

வனத்துறையின் மூலமாக செலவு செய்யும் பணத்தில் ஏறக்குறைய 50 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரை சமூகநல காடுகளுக்கே ஒதுக்கப்படுவதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்த சமூகநலக்காடுகள் கிராமப்புறங்களிலே பட்டி தொட்டிகளிலே எல்லாம் கூட இருக்கின்ற காரணத்தால், ஆங்காங்கே சிலபல குறைபாடுகளும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் போக்குவதற்காக சமூக நலக் காடு வளர்ப்புத் துறை என்றே தனியாக ஒரு இலாக்காவை அமைத்தால் அது மிகவும் சிறப்பாகச் செயல்படும் என்று மிகப் பணிவோடு என் கருத்தை இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏனென்றால் அது பல ஆண்டுகளுக்குப் பிறகு பெரிய பெரிய லாரிகளில் ஏற்றக்கூடிய அளவிற்கு விறகு கிடைக்கக்கூடிய சூழ்நிலையிலும் மற்றும் பல சிறிய தொழிற்சாலைகளை உருவாக்கக்கூடிய அளவிற்கும் உதவி புரியக் கூடிய காடுகளாகத்தான் இந்த சமூகநலக் காடுகள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன.

சமீப காலத்திலே அந்த சமூக நலக் காடுகள் ஊரக வளர்ச்சித்துறையின் மூலமாக எல்லா இடங்களிலும் வளர்க்கப்படுவதற்காக கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. ஆனால் அந்தக் கன்றுகள் ஒழுங்காக வளர்ந்து வந்ததா என்று நேரிலே பார்த்தால் தெரியும். அவர்கள் விதைகளை நட்டு அவைகள் பாதி நாற்றுக்களாக வந்தபிறகு குறிப்பிட்ட காலத்தில் நடப்படாமல் காலம் கடந்து நடப்படுவதால் அந்த நாற்றுக்கள் பட்டுப்





போகின்றன. அதே போல விதைகளை நடுவதிலும், நடுவதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்குள், அந்த விதைகளும் நாற்றுக்களும் முற்றி, அவைகள் சரியாக வளராமல் போகின்றன.

மேலும் இதில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அந்த சமூகநலக் காடுகள் வளர்ப்புப் பணிகளை வனத்துறையின் மூலமாகவே செய்ய வேண்டும் என்றும், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகச் செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டு, வனத்துறையின் மூலமாகச் செய்தால்தான் அது சரியாக இருக்கும் என்ற என் கருத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் பாபநாசம் செல்லுகின்ற வழியில் ஒரு மலையடிவாரத்தில் ஒரு செக்போஸ்ட் உள்ளது. அந்த செக்போஸ்டைத் தாண்டி உள்ளே போவதற்கே மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. காரணம் அந்த செக்போஸ்டில் இருந்து ஏறக்குறைய 4 பர்லாங் தூரத்தில், அரியன் அருவி என்னும் ஒரு அருவி இருக்கும் இடம் தற்போது சுற்றுலாத்தலமாக மாறியிருக்கிறது. அதோடு அந்த அருவிக்குப் பக்கத்திலே ஒரு ஆலயம் கூட இருக்கிறது. கடந்த ஆண்டிலிருந்து அந்த ஆலயத்தைப் பார்க்கவும், அருவியில் குளிக்கவும், இயற்கை வனப்பை பார்க்கவும் நம் மாநிலத்தின் பல இடங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கான மாணவர்களும், பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வரக்கூடிய ஸ்தலமாக அது வளர்ந்து வருவதால் அந்த செக்போஸ்டைத் தாண்டி போக வேண்டும் என்றால் அந்த வேனுக்கு 10 ரூபாயும், உள்ளே இருக்கும் நபர்களுக்கு தலா 2 ரூபாய் என்ற வீதத்திலும் பல வகைகளில் வசூல் செய்யப்படுகிறது. அது சம்பந்தமாக பலமுறை நான் எடுத்துக் கூறினேன். ஆகவே சுற்றுலாவிற்கு வரக்கூடிய வண்டிகள் அங்கே செல்லும் வகையிலாவது அந்த செக்போஸ்டை மாற்றி அமைத்துத் தர வேண்டும். அங்கே செக்போஸ்ட் வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால் சோதனைச் சாவடி நிலையமாக இருந்து கட்டணம் வசூல் செய்யும் அந்த உரிமையை மட்டும் சிறிது கால நேரம் தள்ளி அமைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-20)

இன்றைக்கு கர்நாடகத்தில் '' டைகர் புராஜக்ட் '' என்ற ஒரு பாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சரணாலயம் சிறப்பாக அமைந்திருக்கிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்ல முடியும். காரணம் தண்ணீர் வசதியே இல்லாத இடத்தில் அந்தச் சரணாலயத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தினமும் அந்தச் சரணாலயத்தில் மிருகங்களுக்குத் தண்ணீர் வழங்க மட்டும் ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுவதாக சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டில் பாபநாசம்—முண்டந்துறையில் புலி சரணாலயம் இருக்கிறது. இந்த

இடத்தில் டைகர் புராஜெக்ட் திட்டத்தை மத்திய அரசின் உதவியோடு கொண்டுவந்தால் நிச்சயமாக திட்டம் சிறப்பாக செயல்பட வாய்ப்பிருக்கும். எந்தக் கோடைகாலத்திலும் கூட தண்ணீர் வற்றாமல் முண்டந்துறைப் பகுதியில் இருப்பதால் அது சிறப்பான சரணாலயமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அங்கே டைகர் புராஜக்ட் திட்டத்தைக் கொண்டு வரலாமென்று அரசுக்கு என்னுடைய ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வனத்துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலைமை இருக்கிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னால் கூட என்னுடைய தொகுதியில் ஒரு அசம்பாவிதம் நடந்தது. ஆகவே வனப் பாதுகாவலர்களை சமூகவிரோதிகளிடமிருந்து பாதுகாக்க அவர்களின் தற்காப்பிற்காக ரிவால்வர் வழங்குவதற்கு அரசு உத்தர விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு "பாரஸ்டர்" பதவியில் இருப்பவர்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் காடுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அரசு மோட்டார் வண்டிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு போலீஸ் துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு 'ரிஸ்க் அலவன்ஸ்' என்ற விபத்து படிகள் வழங்கப்படுகிறது. ஆனால் 24 மணி நேரமும் அதே காக்கி சட்டையைப் போட்டுக்கொண்டு பணியாற்றுகிற வனத்துறை அதிகாரிகளுக்கு இந்தப் படி வழங்கப்படுவதில்லை. ஆகவே மற்றத் துறைகளில் வழங்கப்படுகிற ரிஸ்க் அலவன்ஸை வனத்துறை அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களில் வனத்துறை என்பது பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தலைமை வன அலுவலர் கீழ் செயல்படுகிறது. நம்முடைய துறையில் சிறப்பாக செயல்படும் வனத்துறை மேலும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக சமூக நலக் காடுகளுக்காக வனத்துறை தலைவரை தனியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாபநாசத்தை சுற்றுலாத் தலமாக இந்த ஆண்டு அறிவிக்க வேண்டும். வருடம் முழுவதும் வற்றாத ஜீவநதியாக ஓடுகிற தாமிரபரணி ஆற்றின் கரையில் பாபநாசம் அமைந்திருக்கிறது. மக்களைக் கவரக்கூடிய இடமாக இருப்பதால் இந்த ஆண்டு பாபநாசத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





பாபநாசம் கோவிலில் தெப்பக் குளம் மிகவும் சீர்கெட்டு இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு எந்தவிதமான சொத்தோ வருமானமோ இல்லாத காரணத்தால் அரசு உதவி செய்து அந்தக் குளத்தை சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் முண்டந்துறை மற்றும் களக்காடு சரணாலயங்கள் மிகவும் சிறிய சரணாலயங்களாக இருக்கின்றன. இந்த இரண்டு சரணாலயங்களையும் ஒன்றாகச் சேர்த்து பாபநாசத்திலோ, விக்கிரமசிங்கபுரத்திலோ அவற்றிற்கான நிர்வாக அலுவலகத்தை வைத்து ஒரே சரணாலயமாகச் செய்தால் அது மிகவும் சிறப்புமிக்கதாக அமையுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அம்பாசமுத்திரத்தில் மணிமுத்தாறு பகுதியில் மிகச் சிறந்த அருவி ஒன்று இருக்கிறது. அந்தப் பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87-ஆம் ஆண்டுக்கான இங்கே தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்ற 1959—ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் மற்றும உள்ள பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக, இந்துக்களை, தங்களால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்ற கொள்கையைக் கொண்டு இருக்கிற பேரியக்கத்தின் சார்பாக, இந்துக்களைப் பதுகாப்பதையே தங்களுடைய ஒரே கொள்கை என்று கொண்டு அந்தக் கொள்கையில் மிகத் திறமையாக, தீவிரமாக. எந்தச் சோதனைகள் வந்தாலும், அதை ஏற்றுக்கொள்கிற மனத் திராணியோடு, இருந்து கொண்டு இருக்கிற இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக, ஒருசில கருத்துக்களை நான் சொல்வதற்கு, வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985—86-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்த தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகப் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேசுவதற்கான ஒரு வாய்ப்பு தரப்பட்டு இருந்தது. அந்த மானியக் கோரிக்கையில் நான் பேசுகிறபோது, அரசாங்கமே ஆலயத்தை விட்டு வெளியேறு என்ற வாதத்தை நான் வலியுறுத்தி இருந்தேன். அரசாங்கமே ஆலயத்தைவிட்டு வெளியேறு என்று வாதத்தை நான் வலியுறுத்தியதோடு, 1810-ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்த் திருநாட்டில் இந்த பாரத மாதாவின் பாதமாக இருக்கின்ற இந்த மண்ணில், நடைபெற்ற பல்வேறு அரசியல் சதிகளை

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 ஏப்ரல் 25

மதம் என்ற திரைக்குப் பின்னால் நின்று கொண்டு அரசியல் மூலமாக ஆட்சியைப் பிடித்தவர்கள் விளையாட விட்டு திருவிளையாடல்களை விளையாடவிட்டு நடத்திய சதித் திட்டங்களை எல்லாம் நான் இங்கே பட்டியல் போட்டுக்காட்டி, அரசே ஆலயங்களை விட்டு வெளியேறு என்ற வாதத்தை வலியுறுத்தினேன். அப்படி அரசே ஆலயத்தைவிட்டு வெளியேறு என்று இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக சொல்கிறபோது, இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்பு கொண்டோ, அல்லது ஆலயத்துறை நிர்வாகத்தை கையிலே வைத்துக் கொண்டு இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது வெறுப்பு கொண்டோ, அவர்கள் எல்லாம் இந்துமத சமுதாயத்தினுடைய முதுகெலும்பை உடைப்பதற்காக இந்த ஆலயங்களை எடுத்துவிட்டார்கள் என்று உணர்வு கொண்டு நான் பேசியதாக கருதுவதற்கு தேவையில்லை. இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லோரும், எந்தக் கோணத்திலே பார்த்தாலும் கூட, அந்தக் கோணத்திலே பார்க்க முடியாத அளவிற்கு நான் தனி மனித கொள்கைக்குச் சொந்தக்காரன். ஆகவே கோணத்தில் நான் மாறுபட்டவனாக இருந்தாலும் மானம் இல்லாதவனாக இங்கே நின்று கொண்டு இருக்கவில்லை. வன்முறையாளர்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் எங்களுக்கு எதிராராக வீசப்படுகிறது. வகுப்பு வாதிகள் என்ற குற்றச்சாட்டுக்கள் எங்களுக்கு எதிராக வைக்கப்படுகின்றன. இது மன்றத்திற்கு வெளியேயும், பேசப்படுகிறது. மன்றத்திற்கு உள்ளேயும் பேசப்படுகிறது. அதுதான் எனக்கு வேதனையாக இருந்து கொண்டு இருககிறது. அதுவும் தமிழகத்திலே ஆண்டு கொண்டு இருக்கிற புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே இப்படி எங்களுக்கு ஒரு சோதனை வந்திருக்கிறதே, என்று நினைத்துப் பார்க்கிறபோது, எங்களுடைய நெஞ்சம் புண்ணாகத்தான் போகிறது. ஆகவே நெஞ்சம் புண்ணாகிற அந்த வார்த்தைகளை மன்றத்திற்கு வெளியே சொல்லும்போது எங்களால் தாங்கிக் கொள்ள முடிகிறது. ஏன் என்றால் அங்கே அப்படித்தான் வரும் என்பதை அனுபவரீதியாக நாங்கள் புரிந்துகொண்டவர்கள். ஆனால் புரட்சித் தலைவர் பாதத்தை தொட்டு அவர்களுடைய வழியில் நடத்துகிற, நம்முடைய அரசாங்கமும், அதைச் சேர்ந்தவர்களும், அரசியல் அமைப்பின் காரணமாக அமைந்திருக்கிற, மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்து இருக்கிற இந்த சபையில், இந்துக்களை புண்படுத்துகிற வகையில், பட்டவர்த்தமான வார்த்தைகளைக் கொண்டு, மிகவும் கூரிய முனை கொண்ட ஆயுதம் போன்ற அந்த வார்த்தைகளை இந்த சமுதாயத்தின் மீது வீசக்கூடாது என்ற வேண்டுகோளை நான் எல்லோருக்கும் இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கமே ஆலயத்தை விட்டு வெளியேறு என்ற வாதத்தை நாங்கள் வைப்பதற்கு சில அடிப்படையான நோக்கங்கள், கொள்கைகள் எங்களுக்கு உண்டு. எங்களுடைய வாதத்தில்



1986 ஏப்ரல் 25] [திரு. வை. பாலச்சந்திரன்]

எங்களுடைய திறமையில் நாங்கள் எடுத்து வைக்கிற பொருளில் கருத்து வேறுபாடு இருக்குமானால், கடுமையான வார்த்தைகளைச் சொல்லி, எங்களை கடிந்து கொண்டால் கூட அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்: தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம். எங்களுடைய வாதம் மறுக்கப்படுகிறது என்று நாங்கள் கருதினால், எங்களுடைய நியாயம் மறுக்கப்படுகிறது என்று கருதினால், இழந்த நியாயத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் போராடுவதிலே தவறு என்று ஜனநாயக நாட்டிலே யாருமே சொல்ல முடியாது. ஜனநாயக நாட்டில் ஒருவருடைய நியாயம் மறுக்கப்படுகிறது என்று கருதினால், அப்படிக் கருதுகிறவர்கள் போராடலாம் என்பதுதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படையே, அந்தப் போராட்ட மனப்பான்மையோடு —போராட்டம் என்றாலே, பல கஷ்டங்கள், பிரச்சினைகள் வரும் என்று உணர்ந்திருக்கிற இந்த தமிழ்நாட்டில்— போராட்டம் என்றால் அப்படித்தான் இருக்கும் என்றாலும், இப்படிக் குறை சொல்கிற அந்த மனப்போக்கு இந்த மன்றத்திலேயும் சரி, இந்த மன்றத்திற்கு வெளியிலேயும் சரி, மாற வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக நான் வைப்பதற்கு ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியத் திருநாட்டை பொறுத்தவரையில், இந்தியாவினுடைய ஆலயங்கள் எல்லாம் அரசாங்கத்தின் கையிலே இருக்கின்றன என்று சொல்வது பலருடைய வாதமாக இருந்து கொண்டு இருக்கிறது. இப்படிச் சொல்கிறபோது, ஏதோ பரந்தாமன் பத்தாவது அவதாரத்தை எடுத்து இந்த மண்ணுக்கு வந்து இங்கே இருக்கின்ற அரசாங்கத்தைப் பார்த்து, அரசாங்கமே, அரசாங்கமே, நான் குடியிருக்கிற ஆலயம் சரியாக நடைபெறவில்லை. இந்துக்கள் ஒழுங்காக செய்யவில்லை. தவறு செய்கிறார்கள், நிர்வாகத் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். என்று அரசாங்கத்தைப் பார்த்து சொல்லி, அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை. அதேபோல், இங்கேயிருக்கின்ற இந்துக்கள் எல்லாம் ஒன்று கூடி, ஆட்சியாளர்களைப் பார்த்து, ஆட்சியாளர்களே, ஆட்சியாளர்களே, எங்களுடைய ஆலயங்களை நடத்துகின்றவர்கள் முறைகேடாக நடத்துகிறார்கள். ஆகவே அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. இப்படி ஆலயங்களை நம்முடைய நிர்வாகம் எடுத்துக் கொள்கிறது என்றால், 1947-க்குப் பிறகு வந்த நம்முடைய நாட்டில், நம்மை நாமே ஆள்வதற்காக நாம் அமைத்துக்கொண்ட அரசாங்கம், அல்ல. 1810-ஆம் ஆண்டிலேயிருந்து 3 காலக் கட்டங்களாக அகில இந்தியாவிலே இருந்த ஆலயங்கள் அன்றைக்கு வெள்ளைக்காரன் அரசாங்கம் என்று சொல்லப்பட்ட, கிருத்துவ அரசாங்கத்தாலே எடுக்கப்பட்டது. 1810-ஆம் ஆண்டு. A Regulation for Bengal என்றுசொல்லி, 1817-ஆம் ஆண்டு A Regulation for Madras என்று சொல்லி,

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 ஏப்ரல் 25

(மாலை 5-30)

1827-ஆம் ஆண்டு ''ரெகுலேஷன் பார் பாம்பே'' என்று சொல்லி மூன்று ரெகுலேஷன்களைக் கொண்டு வந்து அதன் அடிப்படையிலேதான் இந்தியாவிலிருந்து எல்லா ஆலையங்களையும் திருக்கோயில்களையும், ஆதீனத்திற்குச் சொந்தமான நிலங்களையும் அன்றைக்கு எடுக்கப்பட்டது என்ற விவரங்கள் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்படவில்லை. ஆலயங்களுக்கு இருக்கிற நகைகளின் எடை எவ்வளவு? அப்படி எடை எவ்வளவு என்று சொல்லமுடியாத அளவிற்கு, திருக்கோயில்களையும், ஆலையங்களையும் அன்றைக்கு இருந்த வெள்ளைக்காரன் 1910 ஆவது ஆண்டிலே எடுத்தான். 1710 ஆவது ஆண்டிலே நம்முடைய ஆலயங்களையும் நம்முடைய ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் மேலும் அதற்குச் சொந்தமான அசைகின்ற; அசையாச் சொத்துக்களையும் சட்டங்களின் மூலமாக எடுத்தான் என்று சொன்னால் அதற்குக் காரணம் ஒரு அரசியல் சதிதான். என்னுடைய வாதம் எல்லாம், வெள்ளைக்காரன் ஆட்சியை, அதை கிருஸ்தவன் ஆட்சி என்று நீங்கள் சொல்லாமல் ஆங்கில ஆட்சி என்று சொல்லபபட்ட அரசை உருவாக்க ஆசைப்பட்டான். அந்த வெள்ளைக்காரன் போர்வையிலே இருந்த கிருஸ்த்தவ அரசு, கிருஸ்த்தவ அரசை இங்கே பரப்பி, கிருஸ்த்தவ ஆதிக்கத்தை இங்கே உருவாக்கி, கிருஸ்த்தவ ஆட்சி உருவாக்கப்பட்டால் அதனுடைய ஆட்சி இங்கே நல்லாட்சியாக இருக்கும் என்று கருதி, அவன் இந்து மதத்தை அழிப்பதற்காக முயன்றான். இங்கே கிருஸ்த்தவ மதத்தை பரப்பி, கிருஸ்த்துவ ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமேயானால் அதற்குத் தடையாக இருப்பது இந்து மதம்தான். ஆகவே இந்து மதத்தை அழித்தால்தான் இங்கே கிருஸ்தவ மதத்தை வளர்க்க முடியும்; கிருஸ்த்தவ மதத்தை வளர்த்தால்தான் அந்த கிருஸ்த்தவ சாம்ராஜ்யத்தை நிலைநாட்ட முடியும் என்று அவன் கருதினான். இந்து மதத்தை அழிபபதற்கு அவன் ஏன் முயன்றான் என்று சொன்னால், அன்றைக்குச் சத்திரங்கள்; இன்றைக்கும் நாம் சத்துணவு போடுவதைப் பற்றி பெருமையாகப் பேசுகிறோம். ஆனால் அன்றைக்கு, சத்திரங்கள் கட்டி, சத்திரத்தின் ஒரு மூலையிலே கஞ்சி வார்த்தார்கள்; சத்திரத்தின் இன்னொரு மூலையிலே வணிகம், கல்வி சொல்லிக்கொடுத்தார்கள். சத்திரத்தின் இன்னொரு மூலையிலே மருத்துவ உதவி நடைபெற்றுக்கொண்டிருக்கும். இப்படி எல்லா உதவிகளையும் இந்து மதத்திற்கு இந்து சமுதாயம் செய்து கொண்டிருந்தது. சத்திரங்கள், சாவடிகளை வைத்துக்கொண்டு. ஆக இந்து சமுதாயம், சேவை, பணி, தொண்டு செய்கிறபோது, கிருஸ்த்தவர்களும், வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் நாங்கள் சேவை செய்கிறோம். நாங்கள் மருத்துவ உதவி தருகிறோம். நாங்கள் பள்ளிக்கூடம் கட்டி படிப்பு தருகிறோம்; கல்லூரி கட்டி உங்களுக்கு படிப்பு, வேலை தருகிறோம் என்று சொல்லி இங்கே



1986 ஏப்ரல் 25] [திரு. வை. பாலச்சந்திரன்]

சேவை, தொண்டு செய்ய வரவேண்டுமென்பதற்காக, இந்துக்கள் சேவை செய்யும் நேரத்தை குறைக்கவேண்டும்; இந்துக்கள் சேவை செய்கிற வாய்ப்பு இல்லாமல் ஆக்கவேண்டும். ஆகவே இந்துக்கள் சேவை செய்வதற்கு வாழ்க்கை வசதி என்கிற அந்த நிதி ஆதாரமும் மூலதனமுமாக இருப்பது ஆலையமும் அறக்கட்டளையும் தான். ஆகவே, அவைகள் இடிக்கப்பட வேண்டுமெனச் சொல்லி 1710 ஆவது ஆண்டிலே அவன் கொண்டு வந்தான். 27-வது ஆண்டிலே அவன் முடிவு எடுத்தான். அதற்குப் பிறகு ஒரு மாபெரும் போராட்டம். இன்று இங்கே சொல்லப்பட்டதுபோல் வன்முறை என்று அன்றைக்கு சொல்லப்பட்ட ஒரு போராட்டம் நடைபெற்று, 1840-வது ஆண்டு மீண்டும் ஆலையங்கள் தரப்பட்டன. இதை நான் கடந்த கூட்டத்திலே சொல்லி, நான் அமைச்சர் அவர்களைப் பார்த்து, அன்றைக்கு வெள்ளைக்காரன் இந்து சமுதாயத்தை பலவீனப்படுத்தி கிருஸ்த்தவ சாம்ராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக, இந்து சமுதாயத்தினுடைய முதுகெலும்பை உடைத்து சேவை செய்கிற அந்த பலத்தை குறைக்க வேண்டுமென்பதற்காக எங்களுடைய ஆலையங்களையும், ஆலையத்தினுடைய நிலங்களையும் எடுத்தார்கள். அப்படி அன்று கிருஸ்த்துவன் ஆட்சி செய்தான்; அந்நியன் செய்தான்; அதை நாமும் செய்யலாமா என்று கேட்டு, தன்னாட்சி குழுவிடம் அந்த ஆலையங்களை அரசுத் துறை கொடுக்க வேண்டுமென்று சொன்னபோது, அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சற்றுக் கோபமாகச் சொன்னார். யாரிடத்திலே கொடுப்பது? 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகலாமா? என்று அவர்கள் கேட்டார்கள். நாங்கள் வேதனை படவில்லை. ஆனால் அன்றைக்குச் சொல்கிறபோது, ராமசாமி ஐயருடைய அறிக்கையை படித்துக்காட்டி மடத்தைச் சார்ந்தவர்கள், மடாதிபதிகள் பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகள், முறைகேடானவர்கள் என்று அவர்கள் வாதித்தார்கள். அப்படியானால், யாரிடத்திலே கொடுப்பது என்று அவர்கள் கேட்டார்கள். தன்னாட்சி குழுவின் கையிலே கொடுக்கவேண்டுமென்பது என்னுடைய வாதம். ஆனால் அந்த வாதத்தை நானே சொல்லாமல், 1810, 1840 ஆவது ஆண்டு அதற்கு முன்னாலே எடுக்கப்பட்ட இந்து ஆலையங்களை எப்படி கிருஸ்த்தவன் திருப்பிக் கொடுத்தானோ, அவன் அப்போது என்ன காரணத்தைச் சொன்னானோ அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வாசித்துக் காட்ட நான் ஆசைப்படுகிறேன்.

" In a letter to the Madras Government under the date 10th August, 1840, the Governor General in Council laid down the general principles to be observed in accomplishing the object of withdrawing the interference of Government and its officers in the administration of native religious institutions and the endowments belonging thereto, viz., that the administration of the affairs and funds of the native

religious institutions should be vested in individuals professing the faith to which the institutions belong, and who may be best qualified to conduct such administration with fidility and regularity, being responsible together with their subordinate officers, to the courts of justice, for any breach of the duties assumed by them which can be made the ground of a civil action."

என்று அன்றைக்குச் சொன்னதை அந்தக் கடிதத்திலிருந்து அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தக் கொள்கையில் இண்டிவிசுவல் என்று இருப்பதை தான் நாங்கள் தன்னிச்சை நிறுவனம் என்று மாற்றி இருக்கிறோமே தவிர அன்றைக்கு இருந்து அந்த வெள்ளைக்காரன் புத்திச்சாலி, பலவான் என்று நினைக்கிற நாம் அவன் சொன்னதை ஏற்று நாம் திருப்பித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளை எல்லாம் நான் சொல்லுகிறபோது ஒரு நியாயத்தின் அடிப்படையில் கேட்கிறேன், நம்முடைய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் Article 14 of the Constitution says Equality before Law. சட்டத்தின் முன் சமத்துவம் என்று சொல்லுகிறோம். நான் ஆலயத்திற்கு போகிறேன், அங்கே இருக்கிற கடவுளை வணங்கவேண்டும் என்றால் அரசினுடைய அனுமதியை வாங்கவேண்டும். அதே நேரத்தில் அடுத்த வீட்டுக்காரர் கிருத்துவர் அவர் சென்று அவர் கோவிலில் வணங்க வேண்டும் என்றால் அங்கே சென்று வணங்கலாம். அவர்களுக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, ஆலயத்தினுடைய குறைபாடுகளை எல்லாம் இங்கே சொன்னார்கள். எங்களுடைய திருமுருகன் ஆலயத்தில் அங்கே அர்ச்சனை செய்கின்ற அர்ச்சகர் காலையிலிருந்து மாலை வரை அங்கே வேலை செய்கிறார், அவருக்கு பல ஆண்டு காலமாக ஊதிய பாக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. அவர் சேவகனைப் போல கூலியைப் போல கூனி, குறுகி போய் இன்றைக்கு அவருடைய முதுகு எலும்பு மாறிப்போயிருக்கிறது. ஆனால் அந்த திருமுருகன் ஆலயத்திற்கு அருகில் இருக்கிற கர்த்தர் ஆலயத்தில் அங்கே அர்ச்சகராக இருக்கிறவர், அவருடைய பெயர் பாதிரி, அந்த அர்ச்சகரைப் பார்த்தால் பள பளவென்ற பகட்டான வாழ்க்கையும், மாருதி கார் என்ன, அதற்கு ஏற்ற வசதி என்ன அந்த நிலையில் அவர் சென்றுக் கொண்டு இருக்கிறார். கிறிஸ்துவர்களுடைய கோவிலில் இருக்கிற பூஜாரிக்கு அந்த வசதி, ஆனால் காளிக்கு பூஜை செய்கின்ற பூசாரிக்கு முதுகு எலும்பு கேள்வி குறியாக மாறுவதுதான் பரிசு என்று சொன்னால் அதற்கும் இதற்கும் வேறுபாடு என்ன? அதற்கும் இதற்கும் வேறுபாடு என்ன என்றால் இவருடைய ஆலயம் இவர்களுடைய சர்ச்சுகள்





அதற்குரிய சொத்துக்கள் அவர்களுடைய கையில் இருப்பதால் அவர்களுடைய ஊழியர்களை அவர்கள் அந்த அளவுக்கு வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் ஆலயம் இல்லை என்றால் அறநிலையத் துறை இல்லை. அங்கே பணியாளர்கள் இல்லை என்றால் அறநிலையத்துறை இல்லை. ஆனால் சட்டத்தை நிறைவேற்றுகிற அதிகாரிகளுக்கு எல்லாம் மாதம் தோறும் சம்பளம் உண்டு, அவர்களுக்கு எல்லாம் மாதம் தோறும் எல்லா சலுகையும் உண்டு, அவர்கள் எல்லாம் அரசு பணியாளர்கள் ஆவார்கள். ஆனால் அவர்களுக்கு கீழே இருப்பவர்கள் அவர்களுக்கு ஆதாரமாக இருப்பவர்கள், எவன் ஒருவன் இல்லை என்றாலும் ஆலயம் இல்லையோ அவனுக்கு 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று ஊதிய பாக்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். 40 ரூபாய், 60 ரூபாய், 70 ரூபாய் என்று 40 சதவீதத்திற்கு உட்பட்ட பகுதியில் அவர்களுக்கு பாக்கியை வைத்துக்கொண்டு அதில் அவர்கள் பிழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் ஆடிப்போய் இருக்கிறார்கள். ஆக இன்றைக்குச் சொல்கிறேன், அதற்கும் இதற்கும் ஈடாக வரவேண்டும் என்பதற்காகத்தான் ஆலயங்களை எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேலும் வெட்கத்தை விட்டு ஒன்றைச் சொல்லுகிறேன். கிறிஸ்துவர்களுடைய சர்ச்சுகள் அவர்களுடைய கையில் இருக்கிறது. இஸ்லாமியர்கள் மசூதிகள் அங்கேயே இருக்கின்றன. இந்து ஆலயங்கள் மட்டும் இங்கே அரசில் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிற காரணம் இந்து ஊழல் செய்கிறான், இந்து நிர்வாக திறமை இல்லாதவனாக இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன், எங்களுடைய ஆலயத்தில் மட்டும் நிர்வாகத் திறமை இல்லாதவர்கள் என்று சொல்லி இன்றைக்கு எங்களுடைய ஆலயங்களில் ஊழல் என்று சொல்லுவதால் இங்கே இருக்கின்ற கிருஸ்துவ சமுதாயம் எல்லோரும் ஊழல் இல்லாதவர்கள் என்று ஆகிவிடுமா? இங்கே இருக்கிற கிருஸ்துவர்கள் எல்லாம் திறமை படைத்தவர்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே இந்து சமுதாயம் ஒட்டுமொத்தமாக களங்கப் படுத்தப்படுகிறது. அந்த களங்கத்தை அப்புறப்படுத்த அரசாங்கமே ஆலயத்தை விட்டுவெளியேறு என்ற கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

ஆலய ஊழியர்களுக்கு கிட்டத்தட்ட 1 லட்சப் ஊழியர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தம் எத்தனைபேர் என்று துல்லியமாக சொல்லப்படவில்லை. ஆனால் ஒரு லட்சம் ஊழியர்கள் ஊதிய வாய்ப்பு இல்லாமல் நடத்துகிற திறமை இந்த அரசுக்கு இல்லாமல் இருக்கிறது. இதை தன்னாட்சி அமைப்பிடம் கொடுத்து இருந்தால்

இன்னும் சிறப்பாக நிர்வாகம் நடத்தியிருக்க முடியும். தன்னாட்சி அமைப்பிடம் கொடுத்து இருந்தால் ஆலயத்தில் அடித் தளத்தில் இருக்கிற ஊழியர்கள் இந்த அளவுக்கு வறுமை கோட்டுக்கு கீழே வந்து கூனி குறுகி போய் சமுதாயத்தின் அடித்தளத்திற்கு வந்து நசிந்து இருக்க மாட்டார்கள். ஆகவே இந்த ஆலய ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையை கடந்த ஆண்டே பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசினார்கள். இந்த ஆண்டும் பேசப்பட்டு இருக்கிறது. ஆலய ஊழியர்களுக்கு பாக்கி இல்லாமல் நிர்வாகத்தை நடத்துவதற்கு நம்முடைய அரசு இன்றைக்கு ஆடிப் போய் இருக்கிறது. எனவே அந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு எங்களுடைய அறநிலைய ஊழியர்களுக்கு பாக்கி இல்லாமல் சம்பளம் கொடுத்து காப்பாற்ற வசதி இல்லை என்று சொல்லி ஆகவே நாங்கள் தோற்று போனோம், நிர்வாகத்தில் நாங்கள் தோற்றுப் போனோம், எங்கள் கடமையை செய்ய முடியாது, ஆகவே ஆதி திராவிட மக்களை அப்புறப்படுத்த முடியாது, குத்தகை வாடகையை வாங்க முடியாது, ஆக தன்னாட்சி அமைப்பை உங்களுக்குத் தருகிறோம், நிர்வாகியுங்கள் என்று இந்த அரசு கொடுக்கவேண்டும் என்று தார்மீக கடமையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாலை 5–40)

அதைப்போலவே கடந்த ஆண்டு பேசுகின்றபோது நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கொள்கைக் குறிப்பிலே ஒன்றை சொல்லிவிட்டு அதற்கு விளக்கத்தையும் பக்சம் 38-ல் திருக்கோவில் நிலங்கள் குத்தகை என்ற தலைப்பில் ஒரு பாரா சொல்லப்பட்டு இருக்கிறது. அதில் நிலங்களையே வருமான வழியாகக் கொண்டிருக்கும் பெரும்பாலான திருக்கோயில்கள், குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாகக் குத்தகை பாக்கி தராத காரணத்தால் தினசரி பூசைகள், சிப்பந்திகளுக்குச் சம்பளம் மற்றும் இதர அலுவலர்களுக்கான செலவுகளைச் சமாளிக்க முடியாமல் இடர்படுவதைக் கருத்தில் கொண்டு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுவது போல, அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்தும் குத்தகை தொகையினைப்பெற வகை செய்யும் பொருட்டு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் சொள் கையைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழக முதல்வர்



அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு அதற்கு விதிவிலக்கு அளித்து, சட்டமுன்வடிவு கொண்டு வர அனுமதி அளித்து இருக்கின்றார்கள். அந்தக் கருத்தையும் இந்தக் கொள்கைக் குறிப்பில் சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு பேசினார்கள். ஆனால் இந்த ஆண்டு அதைப்பற்றி எந்தவிதமான கருத்தும் அதில் சொல்லப்படவில்லை. ஓராண்டுகாலம ஆகிவிட்டது. இதுபற்றிய சட்டமுன்வடிவு வரும் வரும் என்று காத்திருந்து ஏமாந்து போனோம். இந்த ஓராண்டில் சட்டமுன்வடிவு வராததற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பல்வேறு ஆலயங்களில் கோபுரங்கள் கட்டுகிறோம். அங்கேயிருக்கின்ற திருக்குளங்களில் மக்கள் குளிக்க முடியாமல் இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. அவைகளைப் பேர்க்க, ஒரு ஆலய நிர்வாகம் என்றால், ஒரு ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களுடைய உரிமையை பாதுகாக்கின்ற கடமை ஆலய நிர்வாகத்திற்கு உண்டு. ஒரு ஆலயம் என்றால் அந்த ஆலயத்தை நல்ல முறையில் வைத்து அந்த ஆலயத்தினுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய, கடமையும் அந்த நிர்வாகத்திற்கு உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்தல் ஒரு ஆணை, மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் பிறப்பிக்கப்பட்டது. சர்ச்சுகளாக இருந்தாலும், முஸ்லீம் மசூதிகளாக இருந்தாலும், திருக்கோயில்களாக இருந்தாலும், அவைகளில் கட்டப்பட்டிருக்கின்ற ஒலிபெருக்கிக் குழாய்களை அப்புறப்படுத்த வேண்டுமென்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் என்னுடைய மாவட்டத்தில் வன்முறையினர் என்று சொல்லப்படுகின்ற நாங்கள், வழிபடுகின்ற நாங்கள், கிட்டத்தட்ட 40 திருக்கோயில்களில் இருந்து அந்த ஒலிபெருக்கி குழாய்களை அப்புறப்படுத்தி, அந்த ஆணையை மதித்திருக்கிறோம். ஆனால் சாந்த மூர்த்திகள், சத்திய சீலர்கள், அமைதி நாடிகள் என்று எங்களுடைய மாவட்டத்தில் பாராட்டப்படுகிற கிருஸ்துவர்களோ, முஸ்லீம்களோ, ஒரு சேவாலயத்திலோ, ஒரு குழாயைக் கூட அப்புறப்படுத்தவில்லை. நான் கேட்கிறேன், அப்படி கிருஸ்துவருக்கு ஒரு நியாயம், முஸ்லீமிற்கு ஒரு நியாயம், இந்துவிற்கு ஒரு நியாயமா?

கிருஸ்துவர்களும், முஸ்லீம்களும், அரசாங்கச் சட்டத்தை மீறிய போது, அதை ஏற்றுக்கொள்ளாது நம்முடைய அறநிலையத் துறை மட்டும் ஏற்றுக்கொண்டு மாறியது தவறு என்பதை நான் கண்டிக்கிறேன். ஆகவே மீண்டும் அதைப் பொருத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, காலையிலே

பேசிய உறுப்பினர் மதுரை ஆதீனத்தைப் பற்றி பேசுகிற போது அதற்காக நான் வக்காலத்து வாங்கவில்லை. சேராத இடங்களில் சேர்ந்தால், கேட்காத வார்த்தைகளைக் கேட்க வேண்டும் என்பது பழமொழி. ஆனால் அதற்காக நான் வக்காலத்து வாங்கத் தயாராக இல்லை. ஆதீனகர்த்தரை இந்து மைந்தர் என்று பேசினார்கள். அவர் கையில் துப்பாக்கி எடுத்தார் என்று பேசினார்கள். ஆனால் ஏதோ அவையில் நான் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒரு பாதிரியாரைப் பற்றி பேசியபோது அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது, சில பேருடைய மனதை அது புண்படுத்து மென்பதற்காக. ஆனால் அவர் ஒரு ஆதீனத்தைச் சார்ந்த வர் என்ற காரணத்தால், இன்றைக்கு அவர் மட்டும் தான் தவறு செய்கிறாரா? வெள்ளை ஆடையை அணிந்து வந்த அந்தப் பாதிரியார் தவறு செய்யவில்லையா? கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோட்டில் பாலகிருஷ்ணபிள்ளை என்ற ஒருவரை, கயிறு போட்டு கையைக் காலைகட்டி கடலில் போட்டது தவறில்லையா? அதுபற்றி வழக்கு மன்றத்தில் இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசியல் மேடைகளில் மேடைப்பேச்சு பேசிக்கொண்டிருக் கிறார்கள். மேலும் அவர் ஒரு கட்சி நிர்வாகி போன்று கட்சிப் பிரச்சாரம் தான் செய்துகொண்டிருக்கிறார்களே யொழிய, மேலும் அந்த ஆதீனம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமோ, அவ்வாறு நடந்து கொள் கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. வை. பாலச்சந்திரன் : நான் அவர்களுக்காக வக்கா லத்து வாங்கவில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாலச் சந்திரன் பேசினார். அவரிடம் கேள்வி கேட்கிறார். (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : சபையிலே இல்லாத ஒரு ஆதீனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசினார்கள். ஒரு கட்சி சார்பாகப் பேசினார் என்பதற்கு பதில் சொல்வதற்கு அவர் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பாலச்சந்திரன் அவர்கள் பேசியதற்கு உறுப்பினர் பாலுசாமி அவர்கள் விளக்கம் தருகிறார். அவர் பேசட்டும்.





திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் விளக்கம் கொடுக்கட்டும். நான் கேட்பது வேறு விவகாரம். நான் உங்கள் மூலம் கேட்க விரும்புவது, இந்த அவையில் இல்லாத ஆதீனம் அவர்களைப் பற்றி, தன்னிலை விளக்கம் கொடுக்க முடியாத ஒருவரைப் பற்றி, ஒரு கருத்தை உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது—நான் கேட்கிறேன், அவரைப் பற்றி ஒரு குற்றச்சாட்டாக இங்கே சொல்லுகிறபோது, வெளியிலே ஒரு தப்பான அபிப்பிராயம் வந்துவிடக் கூடும்; பத்திரிகைகளிலேயும் செய்தி வரக்கூடும். எனவே, அவர் பதில் சொல்ல முடியாமல் இருக்கின்றபோது, அவர் சார்பாக நான் பதில் சொல்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் ஒருவரைப் பற்றி ''ரெபர்'' பண்ணி பேசியதற்கு, இவர் கிளாரிபி கேஷன் கொடுக்கிறார். எல்லோரும் அதற்கு பதில் சொல்ல முடியாது. சபையில் இல்லாதவரை அவர் ''ரெபர்'' பண்ணி யிருக்கிறார். எனவே, நீங்கள் உட்காருங்கள், ''ரெபர்'' பண்ணி பேசியதற்கு, ''கிளாரிபிகேஷன்'' சொல்கிறார். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : சபையில் இல்லாதவரைப் பற்றி அவர் பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியென் றால், திரு. பாலச்சந்திரன் அவர்கள் பேசியதையும் நீக்கச் சொல்லுகிறீர்களா? அப்படியென்றால், இரண்டு பேர் பேசிய தையும் நீக்க வேண்டும். அது சரியல்ல. அவர் விளக்கம் கொடுக்கிறார். பாலச்சந்திரன் அவர்கள் பேசட்டும்.

திரு. வை. பாலச்சந்திரன் : ஐ ஆம் வெரி சாரி. காலையில் பேசும்போது கேட்டிருக்கவேண்டும். அப்போது நாதியில்லாமல் இருந்தது. ஆனால், இந்து முன்னணியைச் சார்ந்த நான் பேசும் போது, மட்டும் இப்படி கேட்பது சரியா? நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட் கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், வாதாடுகின்ற அந்தப் போக்கை நான் மதிக்கின்றேன். ஆனால். ஒரு முறை இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஜான் வின்சென்ட் அவர்கள் எழுந்து பேசியபோது, 'இது நியாயமா?', இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டாமா? என்று கேட்டவரே இவர்தான். அந்தக் குறிப்புகள் எல்லாம் இன்னும் இருக்கின்றன. இதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

மதுரை ஆதீனத்தைப் பொறுத்தவரை, அவர் இன்றைக்கு மேடையிலே துப்பாக்கியோடு வருபவராக இருக்கலாம். 'ஐ ஆம் நாட் பிளீடிங் பார் ஹிம்'. ஒரு மதத்தைச் சார்ந்த, ஒரு மதத்தைப் பரப்புகிற பெரியவர் அவர்கள் தவறுகளைச் செய்கிறபோது அதைச் சுட்டிக்காட்டியபோது, அது ஒரு சிலருடைய மனதைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, அமைச்சர் அவர்கள் எழுந்து அதை மாற்றினார்கள். ஆனால், எங்களுடைய அடிகளார் தவறு செய்தாரோ, இல்லையோ; தவறு செய்தார் என்ற தோற்றத்திலே நீங்கள் விந்தையாகப் பேசுகிறீர்கள். கையிலே துப்பாக்கியை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்று சொல்லும்போது, அங்கே ஒரு நியாயம், இங்கே ஒரு நியாயமா? சொல்வதிலேகூட. நான் கேட்கிறேன். கொல்லங்கோட்டில் பாலகிருஷ்ண பிள்ளை என்பவர் கொலை செய்யப்பட்டார். இரண்டு பேரில் ஒருவர் சமாதானத்தை போதிக்க வந்த பாதிரியார் கொல்லப்பட்டு, வேறு ஒருவர் கையிலேயும், காலிலேயும் கயிறைக் கட்டி இழுத்துச் சென்றதைப் பார்த்த பிறகுதான், அங்கே துப்பாக்கிச் சூடு ஏற்பட்டது என்பது நியாயம் தெரிந்தவர்களுக்குத் தெரியும். அப்பால் பேசுகிறபோது, மனதைப் புண்படுத்தி விட்டது என்று சொல் கிறார்கள். ஆனால், இந்து முன்னணி நியாயம் கேட்கிறபோது, அதற்கு யாருமே இல்லை என்ற தோற்றத்திலே பேசுகிற போக்கு மாற வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதேபோல், என்னுடைய மாவட்டத்தில் திருவாங்கோட்டில் ஒரு முஸ்லீம் பள்ளி இருக்கிறது. அது பண்டைக் காலத்தில் ஒரு திருக்கோவிலாக இருந்து, அது பின்னர் பள்ளியாக மாற்றப்பட்டிருக்கிறது என்பது அந்த மாவட்டத்திலே உள்ள பெரியவர்கள் சொல்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் ஆராய்ந்து, அது உண்மைதானா என்று தெரிந்து, அது உண்மையாக இருந்தால், அதை இந்துக் கோவிலுக்கு எடுத்துத் தரவேண்டுமென்று வேண்டுகோளாக கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தற்போது திருவாங்கோட்டில் சிரியன் சர்ச் என்பது ஒரு விநாயகர் ஆலயமாக இருந்ததாக பண்டைய கல்வெட்டுக்கள் சொல்லுகின்றன. அந்த கல்வெட்டினுடைய ஒரு பகுதி அங்கே இருந்துகொண்டிருக்கிறது. இலக்கிய ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கே சென்று பார்த்தால், அந்த இலக்கணத்திற்கு உட்பட்டு கட்டப்பட்ட ஆலயத்தின் அந்த கர்ப்பகிரகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அதையும் கூட மீட்டுத் தரவேண்டும். அதனையும் ஆராய்ந்து பார்த்து, உண்மை என்று தெரிந்த பிறகு, அதை மீட்டுத் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

இதேபோல், என்னுடைய கருத்துக்களுக்கு பதில் சொல்ல வேண்டுமென்ற அளவில் சொல்லப்பட்டது. தமிழிலே அர்ச்சனை செய்வதில் எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது.



மாண்புமிகு வணக்கத்திற்குரிய தலைவர், இலக்கியச் செல்வர் அவர்கள் சொன்னதுபோல், தமிழ் உள்ளே செல்லாமல், வெளியே இருக்க வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு இல்லை.

(மாலை 5–50)

ஆண்டவனுக்கு எந்த மொழியும் தெரியும் என்பது எங்களுக்குப் புரியும். இந்த மொழியில்தான் செய்ய வேண்டுமென்ற எண்ணம் நோக்கம் எங்களுக்கு இல்லை. தமிழ் மொழியில் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஆலயத்தினுடைய புனிதம் ஆலயத்தினுடைய பெருமை பாதுகாக்கப்படவேண்டும். இரண்டாவது இந்த சாதியிலே பிறந்தவர்தான் அர்ச்சகராக வரவேண்டுமென்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை. நான் உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே இந்து முன்னணி சொன்னால் பதவி கிடைக்கும் என்று சொல்கிற நிலையில் அங்கே 12 பேர்கள் அர்ச்சகர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். முறைப்படி அர்ச்சனை செய்வதற்கு மந்திரங்கள் தெரிந்தவர்கள் மேட்டுக்குடியினரைத் தவிர்த்து தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள் 12 பேர்கள் இருந்தால் ஒரு மாதத்திற்குள் அவர்களை நீங்கள் தந்தால் மேட்டுக்குடி மக்கள் வாழ்கிற பகுதியில் இருக்கிற ஆலயத்தில் அர்ச்சகர் பதவிகளை தருவதற்கு இந்து முன்னணி தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : துணை சபாநாயகர் அவர்களே, வழிபாடு செய்வதிலே ஆட்சேபணையில்லை. ஆனால் புனிதம் கெட்டுவிடக் கூடாது என்று சொன்னால் தமிழிலே வழிபாடு செய்தால் புனிதம கெட்டுவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் வெளியே தோன்றி விடக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். புனிதம் மட்டுமல்ல தெய்வத் தன்மை வாய்ந்தது தமிழ் என்பதோடு முதலை உண்ட பாலகனை மீட்டுத் தந்தது தமிழ், எலும்புருவாக இருந்த பெண்ணை மீண்டும் பெண்ணாக்கித் தந்தது தமிழ், அடைத்த கதவைத் திறந்தது தமிழ், ஆண்டவனுடைய அவதாரங்களாக வந்தவர்கள் அத்தனை பேர்களும் பாடியது தமிழ் என்று கருதப்படுவதோடு மட்டுமல்லாமல் அந்த ஆண்டவனுக்கே உகந்தது தமிழ் என்று எல்லோரும் போற்றுகிற தமிழ், அந்த ஆண்டவனுக்கு என்றும் உகந்ததாக இருக்கும் தமிழ், பாமரர்க்கும் அது புரிவதால் அந்தத் தத்துவம் அதன்மூலம் பரவும் என்ற காரணத்திற்காக 14 நூற்றாண்டுகள் வரை லத்தீன் மொழியிலே இருந்த கிறித்துவ மடாலயங்கள் போதித்து வந்தவை அதற்குப் பிறகு தாய்மொழியிலே போதிக்கலாம் என்று வந்ததற்குப் பிறகுதான் அந்தம விரிந்து பரந்து பல்கிப் பெருகியது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்வார்கள். எனவே தமிழிலே வழிபாடு செய்வதன் மூலம் தமிழர்கள் அத்தனைபேரும் அந்தத் தத்துவத்தை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு அது விரிவடையும் வளமடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழிலே மட்டும் செய்யவேண்டுமென்பதை இந்து முன்னணிப் பேரியக்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழிலேயும் செய்யலாம். வேறு மொழியிலேயும் செய்யலாம் என்பது எங்களுடைய கொள்கையாக இருக்கிறது. தமிழிலே செய்தால் புனிதம் கெட்டுப் போகும் என்பதை நாங்கள் சொல்லவில்லை. தமிழில் செய்யலாம். சிறப்பாகச் செய்யலாம், செய்யவேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் அதே நேரத்திலே வேறு குளறுபடிகள் நடக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, வேறு மொழியிலே வழிபாடு செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. ஆலயங்களிலே உள்ளே நுழைந்தவுடனே அங்கே தமிழிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கவேண்டும். ஒருவர் விரும்பி வேறு மொழியிலே கேட்டால் அவருக்கு அனுமதி கொடுக்கலாம், ஆனால் நடைபெறுவது தமிழிலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். அது பொதுவான ஒன்றாக இருக்க வேண்டும். இது தமிழ்நாடு. இறைவனும் தமிழ்நாடு உடையவன். முருகனே தமிழன் என்று சொல்கிறார்கள். தமிழே முருகன் என்று சொல்கிறபோது முருகு என்று சொல்கிறபோது அழகு என்ற தமிழ் அங்கேயே இருக்கவேண்டும். விண் ஆண்ட தமிழ், வான் ஆண்ட தமிழ், மண் ஆண்ட தமிழ், எந்நாளும் ஆண்டுகொண்டிருக்கிற தமிழ், ஆலயங்களிலேயும் ஆளவேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வை. பாலச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் இலக்கியச் செல்வர் ஏதோ எங்களுக்குத் தமிழ் மீது பற்று இல்லாதது போலவும், தமிழ்மீது பற்று இல்லாதவர்கள் போலவும் பேசினார்கள். எங்களுக்கும் தமிழ்ப் பற்று உண்டு; எங்களுக்கும் தமிழ் இனிமை புரியும், எங்களுக்கும் தமிழை வெளியே நிறுத்தக் கூடாது, உள்ளே இருக்கச் செய்ய வேண்டுமென்ற ஆசை, தமிழ் அர்ச்சனை மொழியாக மாற வேண்டுமென்ற ஆசை உண்டு. அப்படிப்பட்ட ஆசை இருக்கிற நேரத்திலே பன்னெடுங்காலமாக பலபல கோட்பாடுகளை உடையவர்கள் வேறு மொழியை விரும்பினால் அதிலே அவர்களுக்கு இடையூறு இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கையே தவிர வேறு அல்ல. ஏதோ நாங்கள் தமிழுக்கு விரோதிகள் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சியை மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்று சொல்லி விடைபெறுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே மதுரை ஆதீனம் பற்றிய அந்தப் பகுதியிலிருந்தாலும் இந்தப் பகுதியிலிருந்தாலும் சொல்லிய கருத்து இருக்கிறது.



ஒன்றே ஒன்றை மட்டும் தங்கள் அனுமதியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆன்மீகவாதிகள் அரசியலில், அரசியல் இயக்கங்களில் இருக்கக் கூடாது என்ற கருத்துச் சொல்லப்படுகிறது. ஆனால், '' வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ் சாற்றினிலே பால் கலந்து தேன்கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'' என்று பாடப்பட்ட மாணிக்கவாசகர் மந்திரியாக இருந்திருக்கிறார். போப்பாண்டவர்கூட தாய் மொழியிலேயே பைபிளைப் படிக்க வேண்டும் என்று சொல்லித்தான் அதற்குப் பிறகு இலக்கியத்தைப் படைத்து இருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆக, மதுரை ஆதீனம் இன உணர்வு கொள் தமிழா, மொழி உணர்வு கொள் தமிழா என்று சொல்வதில் தப்பு இலலை.

மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர் :** அது உங்கள் கருத்து.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மதுரை ஆதீனத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் மதுரை ஆதீனத்தை, இந்து மதத்தைப் பரப்ப வேண்டும், கோயில்களை நல்ல முறையில் பாதுசாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆதீனமாக ஆக்கினார்கள். அவருடைய தமிழ் உணர்வை நாங்கள் மதிக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அரசியல் மேடைகளில் வருகிறார்கள். மேலும் அவர் மீது எந்தெந்த குற்றச்சாட்டுகள் இருக்கிறது என்று எனனால் கூற முடியாது. அவ்வாறு இருப்பவர் ஆதீனமாக இருப்பதற்குத் தகுதி உடையவரா என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர் :** அரசியலில் அவர் கலந்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு உறுப்பினர் சொல்கிறார்; கலந்துக் கொள்ளலாம் என்று இன்னொரு உறுப்பினர் சொல்கிறார். இந்த இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு ஐயப்பாடு தோன்றுகிறது. இது சட்டமன்றமா அல்லது நீதிமன்றமா என்ற ஐயப்பாடுதான். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களைக் காலையிலே பார்த்தேன். இராமநாதன் அவர்கள் பேசும்பொழுது நேரத்தை நீட்டித் தாருங்கள் என்று வக்காலத்து பெட்டிஷன் போட்டார்கள்; இன்னொரு பிரச்சினையிலேயும் வக்காலத்து பெட்டிஷன் போடுகிறார்கள். இப்பொழுது மதுரை ஆதீனத்திற்கு வக்காலத்து பெட்டிஷன் போடுகிறார்கள். எனவே இது சட்டமன்றமா அல்லது நீதிமன்றமா என்ற என்னுடைய ஐயப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும்? இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : முடிந்தால் அவர் ஒரு வக்காலத்துப் பெட்டிஷன் கொடுக்கட்டும்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய-அறக்கட்டளைகள், செய்தி, சுற்றுலா, காட்டுவளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் இங்கே பேச ஆசைப்படுகிறேன். இந்த மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் ஆசைப்படுகிறேன்.

அரசியல் சட்ட அமைப்புப்படி நிர்வாகமும் நீதியும் தனித் தனியாக இருக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே இருக்கிறது. ஆனால், இந்து அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய ஆணையாளர் அவர்களிடத்திலே இரண்டும் ஒன்றாகத்தான் இருந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவேதான், அறங்காவலர் குழுவும் இன்னும் கோயில்களுக்கு நியமிக்கப்படவில்லை. உடனடியாக, அரசியலிலே இருக்கின்றவர்கள் இல்லாமல், கோயிலை நல்ல முறையிலே நிர்வாகம் செய்ய வேண்டும். கோயிலை நல்ல நிலையிலே நிர்வகிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தெய்வ பக்தி உள்ளவர்களை, ஒழுக்கம் உள்ளவர்களை, நேர்மை உள்ளவர்களை, அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களை அறங்காவலர் குழு உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலத்தான் மண்டலக் குழு பதவி முடிந்து ஏற்கனவே இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ரீஜனல் கமிட்டி இன்னும் போடப்படவில்லை. ரீஜனல் கமிட்டியைப் போடுவதிலேயும், அரசியலுக்கு அப்பாற்பட்டு, நல்லமுறையிலே செயல்படுகின்றவர்களாகப் பார்த்து அந்த மண்டலக் குழுவிலே உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரிய பெரிய கோயில்களுக்கு இப்பொழுது 'தக்கார்' என்ற ஒரு பொறுப்பிலே ஒரு சிலர் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தக்கார் என்பவர் ஒரு நபர் நிலையிலே இருந்து செயல்படுகின்ற காரணத்தினால், அந்தப் பதவியை வைத்து அவர்கள் இந்தக் கோயிலுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்குப் பல வழிகளிலேயும் இடையூறாக இருக்கின்றார்கள்.



1986 ஏப்ரல் 25] [திரு. எஸ். இராசாராமன்]

(மாலை 6—00)

அதனால்தான் உடனடியாகத் தக்கார்களை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டு, தக்கார் பதவிகளை உடனடியாக எடுத்து விட்டு, அறங்காவலர் குழுக்களை நியமிக்க வேண்டும். தக்கார்கள் போடுகின்ற பொழுது—குறிப்பாக, பழனி, மதுரை, சுவாமிமலை போன்ற கோவில்களிலே, இப்பொழுது தக்கார்களைப் போட்டிருக்கிறார்கள்—எந்த முறையைப் பின்பற்றி தக்கார்கள் இன்றையதினம் செயல்படுகிறார்கள், அரசு நியமித்திருக்கிறது என்பது தெரிய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனிப்பட்ட, பண வசதி படைத்தவர்கள், தனிப்பட்ட அரசு செல்வாக்கு உடையவர்களைத்தான் இன்றையதினம் தமிழக அரசு—அறநிலையத்துறை தக்கார்களாக நியமித்திருக்கிறார்கள். ஆதலால், தக்கார்களை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, உடனடியாக, அறங்காவலர் குழுக்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திருப்பணிக்காக, ரூ. 7 கோடி திட்டம் ஒன்றை, பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தின் மூலமாகவும், அதே போலத்தான் அரசு மானியத்தில் இருந்தும், ஆணையர் பொது நல நிதியிலிருந்தும், உபரி நிதியிலிருந்தும் செயல்படுத்த தமிழக அரசு திட்டம் தீட்டி இருக்கிறது. அதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இருந்தாலுங்கூட இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். குறிப்பாக, கிராமப் பகுதியிலே, ஏறத்தாழ, பல்லாயிரக்கணக்கான சிறப்புமிக்க கோயில்கள் இருக்கின்றன. பழங்காலத்து மன்னர்களால் கட்டப்பட்ட பல கோவில்கள் எல்லாம் இன்றைய தினம் பழுதடைந்த நிலையிலே இருந்துக் கொண்டிருக்கின்றன. அதுபோன்ற தமிழகத்துச் சிறப்புமிக்க கோவில்களை, தமிழகத்து வரலாற்றுச் சிறப்பு மிக்கக் கோவில்களை எல்லாம் உடனடியாகப் புதுப்பிக்க வேண்டும். ரூ. 10 இலட்சம், ரூ. 20 இலட்சம் என்ற அளவில் பல கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கோவில்களுடைய திருப்பணியைச் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. பல கிராமங்களிலே இருக்கிற, பல தமிழகத்து வரலாறுகளை இன்றைய தினம்வரை போற்றிக் காப்பாற்றுகின்ற அரசர்களால் கட்டப்பட்ட, அந்த, சின்ன, சின்ன கோவில்களை, ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம் என்ற அளவிலே திருப்பணி செய்யக் கூடிய அளவிலே இருக்கிற கோவில்களை, உடனடியாகத் திருப்பணி செய்ய வேண்டும். ரூ. 10 இலட்சம், ரூ. 20 இலட்சம் என்று விளம்பரத்திற்காக, ஏதோ, இந்த அறநிலையத் துறை பெரும், பெரும் கோவில்களை எடுத்துச் செய்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, இது போன்ற சின்ன கோவில்களில் உடனடியாக திருப்பணி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் அறநிலையத் துறையைப்பற்றி கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இடையிலே இந்தத் திருப்பணி செய்கின்ற ஒரு விவரத்தை அவர்கள் தவறான தகவலாகத் தந்து கொண்டிருக்கிற காரணத்தினால், அதைத் திருத்தி விடுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ, ரூ. 10 இலட்சம், ரூ. 15 இலட்சம் என்று விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிறது. ஆகவே, கிராமப்புறங்களிலே இருக்கிற தொன்மையான கோவில்களைக் கவனித்து, ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சத்திலே திருப்பணி செய்ய முன் வர வேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். ரூ. 10 இலட்சம், ரூ. 15 இலட்சம் என்று விளம்பரத்திற்காக அறநிலையத் துறை தன்னுடைய சொந்தப் பணத்திலேயிருந்து செய்வதில்லை அல்லது அரசாங்கப் பணத்திலிருந்தும் செய்வதில்லை. ஆங்காங்கே இருக்கிற ஆத்திக நண்பர்கள், பக்தர்கள், ஆலயத்திலே வணங்குகின்றவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, அந்தக் காரியத்திலே ஈடுபடுகிறார்களே தவிர, அவர்கள் எந்த, எந்த ஆலயங்களைப் போற்றி வணங்குகிறார்களோ, அந்த ஆலயங்களுக்குத் திருப்பணி செய்ய அவர்கள் முன் வருகிறார்களே தவிர, அரசாங்கம் விளம்பரத்திற்காகச் செய்யவில்லை.

கிராமங்களில் இருக்கிற தொன்மையான ஆலயங்கள் என்று கூறுகிறார்களே, அந்த ஆலயங்களில் எந்தத் தொன்மையான ஆலயங்கள் உங்கள் பகுதியிலே இருக்கின்றன. அதற்குத் திருப்பணி செய்வதற்காக நீங்கள் என்ன முயற்சி எடுத்தீர்கள்? நான் முன்னாலேயே ஒரு கேள்விக்கு இங்கே பதில் அளிக்கும் போது தெரிவித்தேன். முன் கை நீண்டால்தான் முழங்கை நீளும் என்று. நாமெல்லாம் தத்துவங்கள் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர, இந்த நாட்டிலே ஆன்மீகத்தையோ அறநிலையத்தையோ அல்லது இந்து மதத்தையோ காப்பாற்றுவதற்கு ஒரு முறையான மக்களுக்கு ஏற்ற 'பிராக்டிக்கல்' என்று சொல்வோமே, நடைமுறைக்கு ஏற்ற திட்டத்தை நாம் என்ன மேற்கொண்டிருக்கிறோம்? அந்த முறையிலே மாண்புமிகு இராசாராமன் அவர்கள் எந்த ஆலயத்தைச் சொல்கிறார்கள். எந்த ஆலயத் திருப்பணி செய்ய வேண்டும்? அதிலே நீங்கள் அக்கறை காட்டினீர்கள் என்றால், அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் உதவியாக இருக்கும்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, எந்த எந்த ஆலயங்களுக்குச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வினாவைக் கேட்டிருக்கிறார்கள். எத்தனை ஆலயங்களுக்கு திருப்பணி செய்ய வேண்டுமென்று அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், ஆணையருக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்பதை நான் பட்டியல்போட்டு, ஆதாரத்தோடு எழுத்து மூலமாக கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** அமைச்சர் அவர்கள் உங்களுடைய ''கான்ட்ரிபியூஷன்'' என்ன என்று கேட்கிறார்கள்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, திருப்பணிக்கு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஏதாவது நன்கொடை வழங்க வேண்டுமென்று கேட்டதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, திருப்பணிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி உதவி வழங்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் மற்றவர்களிடம் நன்கொடை வாங்குகின்ற பழக்கத்தைத்தான் அதிகமாக வைத்திருக்கிறார்கள். ஆக, நாம் மற்றவர்களிடம் வாங்குவதுதான் பழக்கமே தவிர, நாம் கொடுக்கிற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. கொடுக்க மனம் இருந்தாலும் அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுடைய தொகுதியில எந்த ஆலயத் திருப்பணிக்கு என்ன முயற்சி எடுத்தீர்கள்? மக்களிடத்திலே இருந்து உதவி பெற என்ன முயற்சி எடுத்தீர்கள்? மக்கள் என்ன தர முன்வந்தார்கள்? யார் முயற்சி எடுத்தார்கள்? திருப்பணி செய்ய வேண்டியது அவசியம். ஆனால் அரசே எல்லா ஆலயங்களுக்கும் திருப்பணி செய்ய முடியாது. அதனால்தான் கேட்கிறேன். உங்களுடைய முயற்சி என்ன? மக்களுடைய முயற்சி என்ன? உங்கள் தொகுதியிலே நீங்கள் திருப்பணி செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி என்ன என்று கேட்கிறேன்.

**திரு. மு. இராமநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொன்னார்கள். அப்போது எல்லா உறுப்பினர்களையும் சேர்த்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வாங்கிப் பழக்கப்பட்டவர்கள் என்று சொன்னார்கள். அது......

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, வாங்கிப் பழக்கப்பட்டவர்கள் என்று சொல்லவில்லை. மற்றவர்களிடமிருந்து நன்கொடை நிதி வாங்கிக்கொள்கிற பழக்கத்தை வைத்திருக்கிறோமே தவிர நன்கொடை நிதி கொடுத்து பழக்கம் இல்லை என்று சொன்னேன்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் வாங்கிப் பழக்கப்பட்டவனும் அல்ல; கொடுத்துப் பழக்கப்பட்டவனும் அல்ல. கோவில்களைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் மிக அதிகமாக வருமானம் வருகின்ற சில கோவில்களுக்கு கார், ஜீப் போன்ற வாகனங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த கார், ஜீப்புகளிலே நிச்சயமாக

அந்த ஆலயத்தின் ஆண்டவன் பவனி வருவதாகத்தெரியவில்லை. ஆகவே, கார், ஜீப் வாங்குவதை அரசு தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டு இருந்தால், குறைபாடு இருந்தால் தெளிவாகச் சொல்ல வேண்டும். எந்த ஆலயத்தில் தேவை இல்லாமல் கார் வாங்கினார்கள், ஜீப் வாங்கினார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். எதையாவது மனதிலே வைத்துக்கொண்டு, பொதுவாகச் சொன்னால் எப்படி பரிகாரம் காணமுடியும்? உங்கள் கவனத்திற்கு வந்திருந்தால் தயவு செய்து குறிப்பிட்டுச் சொல்லுங்கள். ஆலயத்தின் பெயரைச் சொல்லப்போகிறீர்கள், தனிப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்லப்போவதில்லை, சொல்ல வேண்டியதில்லை.

திரு. எஸ். இராசாராமன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பல்வேறு கோவில்களிலே இன்றைய தினம் வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. இல்லை என்று மறுக்க முடியாது. என்னுடைய தொகுதியில் சுவாமிமலை ஆலயத்தில் இப்போது வாகனம் இருக்கிறது. அதிலே ஆலயத்திற்குள் இருக்கிற ஆண்டவன் பவனி வரவில்லை. அங்கு இருக்கிற அதிகாரிகளும் இன்னும் சொல்லப்போனால் அந்தப் பகுதியிலே பொறுப்பிலே இருப்பவர்களும்தான் விரயம் செய்துகொண்டிருக்கிறார்கள் ஆலயத்தின் பணத்தை. ஆண்டவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உண்டியல் பணம் இதுபோன்ற அறங்காவலர்களுக்கோ அல்லது தக்கார்களுக்கோ அல்லது அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கோ செலவிடுவதற்காக காணிக்கையாக அளிக்கப்படவில்லை என்பதை இந்த அரசு உணரவேண்டும் என்பதற்காகத்தான் நான் பொதுவாகச் சொன்னேன்.

(மாலை 6—10)

சுவாமிமலைக் கோயில் மற்றும் இதுபோன்ற கோயில்களில் இன்றையதினம் வாகனங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அவை தேவையில்லை என்ற கருத்தைச் சொல்வதற்காகத்தான் நான் வருகிறேன். அது மட்டுமல்ல. தமிழக அரசைப் பொறுத்தவரையில் பெரியார் வழியிலும், பேரறிஞர் அண்ணா வழியிலும் செல்கிறது. அவர்களைப் பின்பற்றுகிறது. தமிழகத்திலே ஒரு மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள பல கோயில்கள் இருக்கின்றன. அவை எவை என்று குறிப்பிட்டுக் கேட்டால் குறிப்பாக என்னுடைய தொகுதியில் இருக்கிற சுவாமிமலைக் கோயிலில் ஒரு மாதத்தில் அதிகப்படியான வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அதேபோல் சென்னையிலே இருக்கிற கருமாரியம்மன் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் போன்ற மிகப் பிரசித்தி பெற்ற கோயில்களில்



ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய் 20 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. பெரியார் வழியிலும், அண்ணா வழியிலும் செயல்படுகின்ற இந்த அரசு பகுத்தறிவு வழியில் செயலபடுகின்ற இந்த அரசு— திருப்பதி கோயிலிலிருந்து வருகிற வருமானத்தை வைத்து தொழிற்கூடங்கள், கல்லூரிகள் போன்றவற்றை நடத்துகிறார்கள். அதே போல் இந்த அரசும்—வருமானம் அதிகமாக வருகின்ற கோயில்களிலே உள்ள வருமானத்தை வைத்துத் தொழில் கூடங்களையும் கல்லூரிகளையும் ஏற்படுத்த வேண்டும். ஏழை எளிய குழந்தைகள் தங்களுடைய சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். எனவே, அனாதை இல்லம், கருணை இல்லம் போன்றவற்றை ஏற்படுத்தி அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு உதவுகின்ற வகையில் இந்தக் கோயில்கள் எல்லாம் முன்வரவேண்டும். எல்லா ஆலயங்களிலும் இதுபோன்ற இல்லங்களை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பணியாக இருந்தாலும், கோயில்களிலே கிடைக்கின்ற வருமானமாக இருந்தாலும் அவற்றை எல்லாம் தணிக்கை செய்கிறார்கள். அந்தத் தணிக்கையை டிப்பார்ட்மென்ட்தான் செய்துகொண்டிருக்கிறது. ஆனால், அந்த டிபார்ட்மென்ட்டல் ஆடிட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக ஏ.ஜி. போன்றவர்களின் ஆடிட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயில்களின் வருமானங்கள்........ (குறுக்கீடு) கோயில்களின் வருமானங்களை எல்லாம் பெருக்க வேண்டும். குறிப்பாக பிரசித்தி பெற்ற தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதாகக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் அங்கே இருக்கிற அர்ச்சகர்களுக்கு மாத ஊதியம் கூட கொடுக்க முடியாத சூழ்நிலையில் அங்கே அவர்கள் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி கோயில்களுக்கு வருமானம் கிடைக்க வேண்டியது கிடைக்காத அந்த நிலங்களிலிருந்து உடனடியாகக் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுத்து வருமானத்தைப் பெருக்க வேண்டும். சில கோயில்களைப் பொறுத்த வரையில கடைகளைச் கட்டி இருக்கிறார்கள். அந்தக் கடைகளுக்குரிய வாடகை கூட சரியான முறையிலே வரவில்லை. அதையெல்லாம் பெறுவதற்குரிய வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து கோயில்களின் முன்னேற்றத்திற்கு ஆணையாளர் அவர்களும், ஆட்சியாளர்களும் செயல்படவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிலைகள் எல்லாம் இன்றைய தினம் களவு போய்க்கொண்டு இருக்கின்றன. அதைப் பாதுகாக்க மாவட்ட அளவில் விழிப்புக் குழு என்று நியமித்து இருக்கிறீர்கள். ஆனால், அந்தக்

குழு சரியாகச் செயல்படுவதாகத் தெரியவில்லை. உடனடியாக அரசு ஆணையாளரையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் வைத்து அந்த விழிப்புக் குழு நல்ல முறையில் செயல்படுவதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு......(மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. உச்சி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வனத்துறை, சுற்றுலாத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

வனங்களைப் பேணிக்காக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நம்முடைய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு பணிகளை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் எங்களுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளை விட அதிக அளவில் காடுகள் இருக்கின்றன என்பதையும் அந்தக் காடுகள் பேணிக்காக்கப்பட வேண்டும் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. அந்தக் காடுகளைக் காப்பதிலே நிறைய பொருட் செலவு செய்து கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வனத்துறையினர் வனத்தைப் பாதுகாப்பதிலே அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால், அப்படி அதிக அளவில் அக்கறை காட்டியும் கூட சில நேரங்களில் சில மரங்கள் யாருடைய கவனக் குறைவாலோ அல்லது சில விஷமிகளுடைய ஒத்துழைப்பாலோ வெட்டப்படுகின்றன. இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் வனத்துறையினர் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதற்கு நம்முடைய அரசும் நம்முடைய அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தவறு செய்தவர்கள் யார் என்று பார்க்காமல், அவர்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தனியார்களுக்குக் கூட ஒரு ஏக்கர், 2 ஏக்கர், 5 ஏக்கர் என்ற அளவில் ஏராளமான காட்டுப் பகுதிகள் சொந்தமாக இருக்கின்றன. அவர்கள் அங்கே காடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காடுகளில் கற்பூர மரத்தைப் பொறுத்த அளவிலே பத்து ஆண்டுகளுக்குப் பிறகும், சில்வர் ஓக் மரங்களைப் பொறுத்த அளவிலே 50 ஆண்டுகளுக்குப் பிறகும், வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அத்தோடு கட்டிங் பெர்மிட் பெறுவதில் பல சிக்கல்கள் வளர்ந்துக் கொண்டிருப்பதனால், சாதாரண விவசாயி, அந்தக் கட்டிங் பெர்மிட் பெறுவதற்கான தொல்லைகளை தாங்க முடியாமல், அந்த பெர்மிட்டுகளை வாங்காமலேயே மரங்களை வெட்டிக் கொள்ளும் ஒரு மன நிலையை வளர்த்துக் கொண்டு விடு



கிறார். அப்படிப்பட்ட முறைகேடுகளை கையாளுவதால், அந்த மரத்திற்கு உண்மையாக கிடைக்க வேண்டிய விலை அவனுக்குக் கிடைப்பது இல்லை. அது அந்த விவசாயிக்கு சில நேரங்களில் மிகப் பெரிய நட்டத்தைக்கூட ஏற்படுத்தி விடுகிறது. அதனால், மரங்களை வளர்க்க வேண்டும் என்ற எண்ணமே எதிர்காலத்தில் அவர்களுக்கு குறைந்துவிடுமோ என்ற ஒரு அச்ச உணர்வு கூட உருவாகிறது.

ஒரு சாதாரண கிராம விவசாயி, பத்து மரங்களைவெட்டினார் என்றால் நிச்சயமாக 10 மரங்களை உருவாக்குவதற்கான கன்றுகளை நட்டு விட்டுத்தான் வெட்ட எத்தணிப்பார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

சில்வர் ஓக் மரங்களைப் பொறுத்த வரையில் 40, 50 ஆண்டுகளுக்குப் பிறகு, அல்லது தேவைக்கு ஏற்ப, அல்லது அந்த மரம் வளர்ப்பவருடைய வீட்டு வசதிக்கு ஏற்ப, வெட்டுவதற்கு கட்டிங் பெர்மிட்டுகளை வழங்க வேண்டும். அந்தக் கட்டிங் பெர்மிட் வழங்குவதிலே உண்மையிலேயே வீணான காலதாமதம் ஏற்படுகிறது. அந்தக் காலதாமதத்தினால் நியாயமான விலை கிடைக்காமல், குறைந்த விலையே, மரம் வளர்ப்பவர்களுக்குக் கிடைக்கும்படி நேருகிறது. மரம் வளர்ப்பவர்களும் கூட, கட்டிங் பெர்மிட் முறைகளிலே உள்ள சிக்கல்களைக் காட்டி, மிகக் குறைந்த விலைக்கே விற்று விடுகிறார்கள்.

அத்துடன் ஒரு சர்வே நெம்பர் குறிப்பிட்டு அதில் வெட்டுவதற்கு அனுமதி வாங்கிவிட்டு, பல்வேறு சர்வே நம்பர்களின் கீழ் உள்ள மரங்களையும், அந்த ஒரே அனுமதியின் கீழ் சிலர் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் உடனடியாக தடுத்தாக வேண்டும். இதில் ஒரு தோட்டத்தில் உள்ள சில சிக்கல்களைப் பொறுத்த வரையில் அனுமதி பெற்று வெட்டக்கூடிய மரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை ரூ. 100 என்று இருக்கிறது. அப்படி வெட்டப்படுவதற்காக, அந்த 100 ரூபாயைக் கட்டி விட்டால், அந்த விவசாயிக்கு வருமானம் மிகவும் குறைகிறது. ஆகவே, 100 ரூ. டெப்பாசிட் என்று இருப்பதை சற்று குறைக்க வேண்டும் என்று நான் என்னுடைய கோரிக்கையாக விடுக்கின்றேன்.

என்னுடைய நீலகிரிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் வாட்டில் மற்றும் யூக்கலிப்டஸ் போன்ற மரங்களை சவுத் இந்தியா விஸ்கோஸ்-க்கு மூலப் பொருளாக அனுப்பி வருகின்றன. அப்படிப்பட்ட கற்பூர மரங்களை அதிக அளவில் வளர்ப்பதால்தான் அங்கே கடுமையான வறட்சி நிலவுகிறது என்றும், அதற்குக் காரணம் அந்த கற்பூர மரங்கள் தான் அதிக அளவில் தண்ணீரை உறிஞ்சி விடுகின்றன அதனால்தான் அங்கே அப்படி ஒரு, அபாயகரமான சூழ்நிலை உருவாகி கடுமையான வறட்சி ஏற்பட வழி வகுக்கிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் சிலர் சொல்லு

[திரு. கே. உச்சி] [1986 ஏப்ரல் 25

றொர்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் ஒரு காலத்தில் ஆஸ்திரேலியாவிற்குச் சென்றபோது, அங்கே நீர்ப்பிடிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் இந்த கற்பூர மரத்தை நட்டுத்தான், அங்கே கரைகளை பலப்படுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. அத்தோடு இங்கே இருக்கும் கற்பூர இன மரங்கள், அந்த இன வகையைச் சார்ந்தது அல்ல என்றும் சொல்கிறார்கள்.

(மாலை 6-29)

நான் உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உதகை நகரத்திற்கே ஒரு காலத்தில் குடிதண்ணீர் வழங்கி வந்த மார்லிமெண்ட் என்ற ஒரு ஏரி, அதன் இரு கரைகளைச் சுற்றிலும் இந்த கற்பூர மரங்களை நட்டு இருப்பதன் காரணமாக இப்போது அந்த ஏரியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் வற்றி இருக்கிறது. ஆகவே, உதகையின் தண்ணீர்த் தட்டுப்பாட்டிற்கு அது ஒருகாரணம் என்று அங்கேயுள்ள மக்கள் சொல்லுகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களில் எப்போதும் 60 அங்குலம் மழை பெய்யக்கூடிய சூழ்நிலை இருந்தது. இன்று காடுகள் வேகமாக அழிக்கப்படுவதால் 20 அங்குலம் மழை கூட பெய்யாத நிலைமை இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒரு குழுவை நியமித்து அங்கே கற்பூர மரங்களை நடலாமா, அப்படி நடுவதால் தண்ணீரை அந்த மரங்கள் அதிக அளவில் உறிஞ்சக்கூடிய அபாயம் இருக்கிறதா என்பதை ஆராய்ச்சி செய்ய சொல்ல வேண்டும். அந்த ஆராய்ச்சியில் கற்பூர மரங்கள் அதிகமாக தண்ணீரை உறிஞ்சுவது நிரூபிக்கப்பட்டால், நீலகிரி மாவட்டத்தில் தண்ணீர் பிடிப்பு உள்ள பகுதிகளில் கற்பூர மரங்களை நடக்கூடாது என்று அரசாங்கம் தடை விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வன இலாக்காவைப் பொறுத்த வரையில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற அமைப்பில் மிகப் பெரிய அளவில் தேயிலையை வளர்த்து வருகிறோம். 2,400 எக்டேர் பரப்பில் தேயிலை வளர்த்துவரும் இக் கழகத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவந்த 347.70 எக்டேர் பரப்பளவு கொண்ட கோலப்பள்ளி தேயிலைத் தோட்டமும் 1-7-1984 முதல் சிறந்த பராமரிப்பிற்காக சேர்க்கப்பட்டு இயங்கி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் தேயிலையை நல்ல முறையில் வளர்த்து பக்குவப்படுத்தி கழகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. தமிழ் நாடு தேயிலைக் கழகத்தில் மூன்று தேயிலைத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இக்கழகத்தின் தேயிலைத் தோட்டத்தின் முதிர்ச்சியையும் உற்பத்தித் திறனையும் கருதி, இக்கழகம், கூடலூர், தேவாலா,



1986 ஏப்ரல் 25] [திரு. கே. உச்சி]

பாண்டியார் மற்றும் பாடன்துறை தேயிலைத் தோட்டங்களின் தளிர் தேயிலை மகசூலைக் கொண்டு 1.5 மில்லியன் டன்கள் சி.டி.சி. தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட நாலாவது தேயிலை தொழிற்சாலை அமைக்க உத்தேசித்துள்ளது. இத்தொழிற்சாலை அமைக்கும் வேலையில் நிலம் சமப்படுத்துதல் பணி முடிவு பெற்று மற்ற வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்தத் தேயிலைத் தொழிற்சாலையை இந்த ஆண்டே கட்டிக் கொடுக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தேயிலை அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எந்த அளவிற்கு தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோமோ அந்த அளவிற்கு நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கும் வாய்ப்பு இருக்கும்.

அடுத்து தேயிலைத் தோட்டங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் குடும்பங்களை குடியமர்த்தும் பணியில் முதல் கட்ட வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இப்பணியின் இரண்டாவது கட்டப் பணியில் இதுவரை 450 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு 120 குடும்பங்கள் இன்னும் குடியமர்த்தப்படவுள்ளன. மூன்றாவது கட்டப் பணியாக 1985-86-ஆம் ஆண்டில் 380 குடும்பங்களை குடியமர்த்த புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு 2,613 விடுதிகள் கட்ட நிர்ணயிக்கப்பட்ட அளவில் 31-12-1985 வரை 2,451 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி 162 தொழிலாளர் விடுதிகள் கட்டப்படவுள்ளன. இதுவரை 4,880 தொழிலாளர்களும், 358 அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம் மாத்திரமல்ல, அங்கே வனத் தோட்டம் ஏற்படுத்தவும் '' ஹில் ஏரியா டெவலப்மெண்ட் '' என்ற திட்டத்தின் மூலமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தின் நிலையினை மேம்படுத்தவும், நிலப்பயன்பாட்டு முறையை ஒழுங்குபடுத்தவும் அறிவியல் பூர்வமான திட்டங்களின் மூலம் அபிவிருத்திப் பணிகளை செயல்படுத்தவும் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இயற்கைச் சூழல் பாதுகாப்பு, சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக இந்தத் திட்டங்கள் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு புகலிடங்களில் வன விலங்குகளின் வாழ்க்கை முறையினை ஒட்டி அதற்கேற்றபடி மேம்பாட்டுப் பணிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அடுத்து நம்முடைய சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரை
யில் நம்முடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,
பல்வேறு ஆண்டுகாலமாக நமக்கு என்று நல்ல பல திட்டங்களை
செயல்படுத்திக் கொண்டு வருகிற அரசு, உதகை-தொட்ட
பெட்டா வழியாக கம்பிப் பாதை அமைப்பது நீண்டகாலமாக
அறிவித்த நிலையில் உள்ளது. அதை மாற்றி, இந்த ஆண்டி
லாவது செயல்படுத்த வேண்டும். உதகையைப் பொறுத்தவரை
யில், காலையிலேகூட ஒரு கேள்வி நேரத்திலே அமைச்சர் அவர்
கள் சொன்னார்கள், நீலகிரி நீங்கலாக மற்றப் பகுதிகளுக்கு கலர்
டெலிவிசன் பெட்டி கொடுக்கப்பட்டு உள்ளது என்று சொன்
னார்கள். அதற்கு நீலகிரி மாவட்டம் என்ன பாவம் செய்ததோ
தெரியவில்லை. எனவே, அங்கே ஒரு கலர் டி.வி. நிலையம்,
டவர் அமைக்க வேண்டும் என்று கோரி பேசுவதற்கு வாய்ப்பு
அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்
கள் அளித்துள்ள மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில்
நான் சார்ந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்
றக் கழகத்தின் சார்பில் உரையாற்றுவதற்கு முன்னால், மாண்பு
மிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுக்கு என் நன்றி
யைக் காணிக்கையாக்கிக்கொண்டு உரையைத் துவங்குகிறேன்.
ஒவ்வொரு மானியத்தின் மீதும் ஒரு சில கருத்துக்களைக் கூறிக்
கொண்டு விடைபெறலாம் என்று எண்ணுகிறேன்.

முதலிலே சுற்றுலாத்துறை. அகில இந்தியா முழுவதிலும்
தமிழகத்தில்தான் சுற்றுலாத்துறை சிறந்த முறையில் செய
லாற்றி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்
கிறேன். சுற்றுலாத் துறைக்கு என்று தனியாக வாரியம் ஏற்
படுத்தப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.
'பேக்டு டூர்ஸ் என்று அழைக்கப்படும் சிறப்புத் திட்டங்களின் கீழ்
எல்லாச் சுற்றுலா மையங்களுக்கும், சுற்றுலாத் துறையில் இருந்து
தனித் தனியாக பேருந்துகள் விடப்பட்டு, தமிழகத்தைக் காண
வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எல்லா இடங்களையும் காட்டு
வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. தென் மாநிலங்
களிலே குறிப்பாக தமிழகத்தில்தான் சுற்றுலாத் துறைக்குச்
சொந்தமாக பேருந்துகள் அதிக அளவில் உள்ளன.

சுற்றுலாத்துறை, அறநிலையத்துறை, மற்றும் வனத்துறை
ஆகிய மூன்று இலாக்காக்களும் ஒரே அமைச்சரின் கீழ் இயங்கி
வருவது தமிழ்நாட்டின் சிறப்பு அம்சமாகும். அறநிலையத்துறை
யைச் சேர்ந்த ஏராளமான கோயில்கள், சுற்றுலா மையங்களாக
உள்ளன. தமிழகத்தில் உள்ள கோயில்களில் உள்ள சிற்பங்களை
யும், கலை நுணுக்கங்களையும் காண ஏராளமான சுற்றுலாப்
யணிகள் தமிழகத்திற்கு வருகிறார்கள்.



அதே போல் வனத்துறையைச் சேர்ந்த ஏராளமான இடங்
களும் சுற்றுலா மையங்களாக உள்ளன. உதாரணமாக வனப்
பகுதியைச் சேர்ந்த முதுமலைக் காடுகள் தமிழகத்தில் தலை
சிறந்த சுற்றுலா மையமாக விளங்கி வருகிறது. இங்குக் காட்
டில் தன்னிச்சையாக வாழும் மிருகங்களை காண்பதற்கு ஏராள
மான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அந்தப் பயணிகள்
தன்னிச்சையாக சுற்றித்திரியும் மிருகங்களை இயற்கை முறையில்
கண்டு காண்பதற்கு யானைகள் மீது அமர்ந்து கொண்டும், மினி
வேன்கள் என்று அழைக்கப்படும் சிறிய பேருந்துகளிலும் இருந்து
கொண்டே கண்டுகளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதே போல் சுரபுண்ணை மரங்கள் அதிகமாக இருக்கும்
பிச்சாவரம் பகுதி சிறந்த சுற்றுலா மையம் ஆகும். அதேபோல்
ஒகனேக்கல் நீர்வீழ்ச்சியும், அடர்ந்த வளர்த்தியான கானகத்தின்
மத்தியில் தான் உள்ளது. எனது தொகுதியைச் சேர்ந்த வன
பகுதியான மேகமலையை ''கேம் சாங்சுவரியாக '' ஆக்க
மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் முயற்சிகள் எடுத்து
வருகிறார். அதற்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்
களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர்
அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக என்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு '' கேம்
சாங்சுவரியாக'' ஆக்கப்பட்டால் எனது தொகுதியில் உள்ள மேக
மலை எனப்படும் வனப்பகுதி சிறந்த ஒரு சுற்றுலா மையமாக
மாறும். இதற்கு முன்பு மதுரை மாவட்டம் இரண்டாக பிரிப்
பதற்கு முன்பாக மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் ஒரு
சிறந்த கோடை சுற்றுலா வாசஸ்தலமாக இருந்தது. இப்போது
அண்ணா மாவட்டம் என்று இரண்டாகப் பிரிந்ததற்குப் பிறகு,
கொடைக்கானல் அண்ணா மாவட்டத்திற்குச் சென்று விட்டது.
எனவே, இந்த மதுரை மாவட்டத்திற்கு என்று எந்தவிதமான
கோடை வாசஸ்தலமும் கிடையாது. எனவே, இந்த மேகமலையை
சிறந்த சுற்றுலா கோடை வாசஸ்தலமாக ஆக்க வேண்டும் என்று
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்
டுக்கொள்கிறேன்.

ஆகவே, அறநிலையத்துறையும், வனத்துறையும், சுற்று
லாத்துறையும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக
இருக்கின்றன. எனவே, அகில இந்திய அளவில் தமிழகத்தின் சுற்
றுலாத் துறை தலை சிறந்து விளங்குவதற்கு அறநிலையத்துறை,
வனத்துறை, சுற்றுலாத்துறை ஆகிய மூன்று துறைகளும் ஒரே
அமைச்சரின் கீழ் இயங்குவதுதான் முக்கிய காரணம் என்று பெரு
மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சுற்றுலாத் துறையின் இரண்டாவது சிறப்பு அம்சம் தங்கும் விடுதிகள் ஆகும். எல்லாச் சுற்றுலா மையங்களிலும், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத்துறையினரே விடுதிகள் கட்டி உள்ளார்கள். கேரளாவில் ஏராளமான சுற்றுலா மையங்கள் இருந்தும், தேக்கடி, திருவனந்தபுரம் மற்றும் குருவாயூர் ஆகிய மூன்று இடங்களில் மட்டும்தான் சுற்றுலாத்துறைக்குச் சொந்தமான விடுதிகள் உள்ளன. அதே போல கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும், சுற்றுலாத் துறைக்குச் சொந்தமாக விடுதிகள் மிகக் குறைந்த அளவில் உள்ளன.

(மாலை 6–30)

சுற்றுலாத்துறையின் அடுத்த சிறப்பு அம்சம் சுற்றுலாப் பொருட்காட்சி. தமிழகத்தில் மாவட்ட தலைநகரங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு மாலை நேரங்களில் பொழுது போக்குவதற்கு சினிமாவைத் தவிர வேறு எந்தவித வசதியும் கிடையாது. தமிழக சுற்றுலாத்துறை ஒவ்வொரு மாவட்ட தலைநகர்களிலும், வருடந்தோறும் சுற்றுலா பொருட்காட்சிகள் நடத்துகிறார்கள். இது அங்கு வசிக்கும் பொது மக்களுக்கு சிறந்ததொரு பொழுது போக்கு அம்சமாகும். சுற்றுலா பொருட்காட்சிகளை தனியார் வசம் ஒப்படைக்காமல் சுற்றுலாத் துறையினரே ஏற்று நடத்துவதால் ஏராளமான நன்மைகள் உண்டு. சுற்றுலாத் துறையினர் மூலமாக பொருட்காட்சி நடத்தப்படுவதால் மக்களை தீய வழிக்கு அழைத்துச் செல்வதையும், சூதாட்ட விளையாட்டுக்கள் சுற்றுலா பொருட்காட்சிக்குள் நடத்தப்படுவதும், தடுக்கப்படுகிறது. மேலும், தமிழக அரசைச் சேர்ந்த எல்லா துறையினரும் சுற்றுலா பொருட்காட்சிகளில் பங்கு கொள்கிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வரின் சீரிய தலைமையில் தமிழக காவல்துறை இயங்கி வருவதால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை அதிகமாக இல்லை. மேலும், சுற்றுலா மையங்களில் எந்தவித திருட்டு பயமும் கிடையாது. அகில இந்திய அளவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அதைப் போல சுற்றுலா மையங்களுக்கு இரவு பகலாக, இரு நேரங்களிலும் பேருந்துகள் விடப்பட்டுள்ளதால், தமிழகத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கடந்த மாதம் நான் மதுரையிலிருந்து சென்னைக்குப் பேருந்தில் வந்துகொண்டிருந்த போது, என்னுடன் சுமார் 30க்கும் மேற்பட்ட வட இந்திய சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்தார்கள். அவர்கள் தமிழகத்திலுள்ள சுற்றுலா மையங்களைப் பற்றி மிகவும் பெருமை





யாகக் கூறிக் கொண்டார்கள். தமிழக சுற்றுலாத்துறை மிகவும் சிறந்த முறையில் இயங்குவதற்கு, இதைவிட வேறு நற்சான்று இல்லை என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் சுருளி நீர்வீழ்ச்சி என்ற சுற்றுலா மையம் உள்ளது. அடர்ந்த வனங்களுக்கு இடையே மிகவும் அமைதியான இடத்தில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. வருடம் முழுவதும் சுற்றுலா பயணிகள் வந்துபோவதுமாக இருக்கிறார்கள். ஆனால் இங்கு சுற்றுலா பயணிகள் வந்து தங்கிச் செல்வதற்கு எந்தவித விடுதிகளும், வசதிகளும் கிடையாது. எனவே, எனது கம்பம் தொகுதியில் உள்ள சுருளி நீர்வீழ்ச்சியை சிறந்த சுற்றுலா மையமாக ஆக்கவேண்டுமென்றும், சுற்றுலா பயணிகள் தங்கிச் செல்ல வேண்டுமென்பதற்காக சுற்றுலா விடுதி ஒன்றும் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களை எனது தொகுதி மக்களின் சார்பாக அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அறநிலையத்துறை சிறந்த முறையில் இயங்கிக் கொண்டு வருகிறது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும், நகரங்களிலும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னால் தமிழகத்தை ஆண்ட எல்லா குறுநில மன்னர்களும், ராஜாக்களும் மிகவும் நிறைந்த பொருட் செலவில், பரந்த நிலப்பரப்பில் கோயில்களைக் கட்டியுள்ளார்கள். அவற்றில் பல கோயில்கள் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளன. அன்றாட பூஜை செய்வதற்குக்கூட வசதி வாய்ப்புகள் இல்லை. எனவே, இந்த அவலநிலையைப் போக்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பல நல்ல திட்டங்களை தீட்டியுள்ளார்கள். மிகவும் மோசமான நிலையில் உள்ள கோயில்களுக்கு வருடம் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் செலவுக்கென்று ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வழி வகுத்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் இருநூறுக்கு மேற்பட்ட கோயில்கள் தமிழகத்தில் பயன்பெற்று வருகின்றன.

மதுரை மாநகரில் டவுன்ஹால் ரோடு என்று அழைக்கப்படும் மையப் பகுதியில் தெப்பக் குளம் உள்ளது. கடந்த 10 வருடங்களுக்கு முன்பாக இந்த தெப்பக் குளத்தில் தண்ணீர் தேங்கி மாநகரின் மையப்பகுதி சிறந்த புண்ணியஸ்தலமாக நற்பெயர் பெற்று வந்தது. தற்போது தண்ணீர் தேங்காமல் கிடப்பதால் குப்பைக் கூளங்கள் நிரப்பப்பட்டு மிகவும் அசுத்தமான இடமாகவும், பொதுமக்கள் கழிப்பறையாகவும் இயங்கிக் கொண்டு வருகிறது. எனவே, இந்தச் சீர்கேட்டை நீக்கும் வகையில் அந்த இடத்தை வணிக மையமாக மாற்ற அறநிலையத்துறை முயற்சி

செய்தது. அந்த முயற்சியின் அடிப்படையில்தான் அந்த இடத்தை அண்டர் கிரவுண்ட் குளிர் ஊற்றப்பெற்ற வணிக மையமாக ஆக்குவதற்காக கடந்த 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்கள். டெல்லி மாநகரில் உள்ள பாலிக்கா பஜார் என்ற வணிக மையத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த வணிக மையம் அமையவிருக்கின்றது. அகில இந்திய அளவில் தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில்தான் முதன் முறையாக இந்த வணிக மையம் அமைய இருக்கிறது.

நமது நாட்டில் ராஜாக்களின் மானியத்தை ஒழித்து இப்போது ராஜாக்கள் எந்தவொரு அதிகாரமும் செலுத்தமுடியாமல் இருக்கிறார்கள். அதைப்போல அந்தப் பரம்பரை தர்மகர்த்தாக்களும் தங்களுக்குள் தனியாக ராஜ்யம் செலுத்திக் கொண்டு அந்தக் கோயில்களுக்கு வரும் நிதியை தங்கள் சொந்தத்திற்கு பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழிக்கவேண்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரியம்மன் கோயில் தெப்பக் குளத்தில் இப்போது தண்ணீர் இல்லை. எனவே, வேறு வகையில் அதை மாற்ற வேண்டும் என்று சொல்லுகிற நமது அரசினுடைய எண்ணத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியிட்டார்கள். மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்தை தோண்டி அதிலிருந்து எடுத்த மண்ணால் கட்டப்பட்டதுதான் திருமலை நாயக்கர் மகால், எனவே அந்த மகாலை கட்டுவதற்கு அடித்தளமாக இருந்தது. அதன் நடுவில் ஒரு மைய மண்டபம் இருக்கிறது. அங்கே ஒரு தேர் திருவிழா நடந்து கொண்டிருப்பது உண்டு. மதுரை மாநகரில் அந்த மாரியம்மன் தெப்பக் குளத்தை மீண்டும் தண்ணீரால் நிரப்பி தேர் ஓட்டுவதற்காக வைக்கவேண்டும். பக்கத்தில் பலயிடங்கள் இருக்கின்ற இடத்தில் அங்கே குளிரூட்டு வாணிக மையத்தை வைப்பதற்கு கூட அரசு பரிசீலனைச் செய்தால் நல்லது என்பது என்னுடைய எண்ணம்.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் எல்லையில் கிழக்கு மலைத் தொடரில் வரலாற்று சிறப்பு மிக்க கண்ணகி கோட்டம் அமைந்துள்ளது. கிழக்கு மலைத் தொடரில் சுமார் 5,000 அடி உயரத்தில் தேக்கடி வன விலங்கு சரணாலயத்தை அடுத்து உள்ள அருமையான மலைப் பகுதியில் இந்த கண்ணகி கோட்டம் அமைந்துள்ளது. கண்ணகி கோட்டம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. தமிழகத்தில் இருந்து எந்தவிதமான போக்குவரத்து சாலைகள் கிடையாது. தமிழக எல்லையிலிருந்து கேரள மாநில எல்லைக்குள் நுழைந்து கேரளாவைச் சேர்ந்த வனத்துறை சாலைகளின் வழியாகத்தான் சென்று வழிபட முடியும்.



பக்தர்களாக இருந்தாலும் சரி, அரசு துறை தமிழக அதிகாரிகளாக இருந்தாலும் சரி நினைத்த நேரத்தில் அங்கு சென்று அந்த கண்ணகி தெய்வத்தை வழிபட முடியாது. கேரள மாநில வனத்துறை அதிகாரிகளிடம் முன் அனுமதி பெற்றுதான் அங்கு செல்ல முடியும். அவர்கள் அனுமதி தராமல் நாம் அங்கு சென்று தெய்வத்தை வழிபட முடியாது. எனது தொகுதியின் எல்லையில் உள்ள பழியங்குடி என்னுமிடத்தில் இருந்து கண்ணகி கோயிலுக்கு செல்ல தமிழகத்தின் எல்லைக்குள்ளே பாதை அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் லோயர் கேம்ப் என்னும் இடத்திற்கு அருகில் மலையாள பகவதியம்மன் கோயில் உள்ளது. இது மிகவும் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். இந்தக் கோயில் தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இந்தக் கொயிலை அரசு ஏற்று பல நற்பணிகளைச் செய்ய வேண்டுமாய் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இந்த பரம்பரை தர்மகர்த்தாவுக்கு இந்த அறநிலையத்துறை சட்டத்தின் செக்ஷன் 21 பாதுகாப்பாக இருக்கிறது. அந்த சட்டத்தை திருத்தி இந்த பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழிக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் சமூக நலக்காடுகள் நல்ல முறையில் செயல் பெற்று வருகின்றன. ஊரக வளர்ச்சித் துறை ஊக்கத்துடனும் சமூக நல காடுகள் ஏராளமாக உருவாக்கப்பெற்று வருகின்றது. ஆங்காங்கே தரிசாக உள்ள நிலங்களிலும் சாலை ஓரங்களிலும், வாய்க்கால் கரை ஓரங்களிலும் ஏராளமான மரக் கன்றுகள் நடப்படுகின்றன.

தமிழகத்தின் வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் நலனைக் கருதி தமிழக அரசு பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் என்ற சிறந்த ஒரு திட்டத்தை தமிழக அரசு அறிவித்து உள்ளது.

எனது தொகுதியில் உள்ள கோம்பையில் இருந்து ராமக்கல் மெட்டு என்ற மலைப்பகுதிக்கு செல்லும் வழியில் சுமார் 200-க்கு மேற்பட்ட பழங்குடியினர் வசித்து வருகின்றார்கள். ஆனால் இந்தப் பகுதியில் எந்தவிதமான போக்குவரத்து சாலைகளும் கிடையாது. தமிழக நெடுஞ்சாலைத் துறையினர் சீரிய முயற்சியினால் கோம்பையில் இருந்து ராமக்கல் மெட்டுக்கு பாதை அமைக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. ஆனால் இந்த சாலை வனத்துறைக்கு சொந்தமான வனப் பகுதியில் செல்வதால் வனத்துறை அதிகாரிகளின் அனுமதி இல்லாமல்

இந்தத் திட்டம் செயல்படாமல் நின்று கொண்டு வருகின்றது. எனவே, மத்திய அரசிடம் இந்தச் சாலைக்கு அனுமதி பெறுவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக தேயிலை தோட்டக் கழகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. அதேபோல் எனது தொகுதியில் மேகமலை என்ற ஹைவேஸ் மலைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. தேயிலை செடிகள் நன்றாக வளர்வதற்கு ஆரோக்கியமான சூழ்நிலை இருப்பதால் இந்தியாவில் இங்குதான் தேயிலை அதிகமாக உற்பத்தி ஆகிறது. தனியார் கம்பெனிகள் வெளிநாட்டுக்கு அனுப்பி ஏராளமான லாபங்கள் சம்பாதிக்கிறார்கள். இந்தப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களில் தேயிலை பயிர் செய்யப்பட்டால், பொன் விளையும் பூமியாக மாற்றப்படும். எனவே, தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் மூலம் மேகமலை என்ற ஹைவேஸ் பகுதியில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை தேயிலை தோட்டங்களாக மாற்ற ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூர் சந்தன கிடங்கில் பணி புரியும் 100 பேர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாக பணி நிரந்தரப்படுத்தாமல் இருந்து வருகின்றனர். இவர்களை பணி நிரந்தரப்படுத்தி ஆணையிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-40).

சில செய்தித் தாள்களில் தமிழக அரசைப் பற்றியும் தமிழக அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களைப் பற்றியும் தவறான பொய்யான செய்திகளை பிரசுரிக்கிறார்கள். அவர்கள் மீது கோர்ட் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் பல ஆண்டுக் காலம் ஆகிறது. பிரஸ் கௌன்சில் மூலமாக அவர்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தவறு செய்பவர்கள் மீது கடுமையான தண்டனை எடுக்கவேண்டும். கடுமையான தவறுகள் செய்பவர்களுக்கு பத்திரிகை உரிமையை ரத்து செய்யவேண்டுமென்றும், அதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயர் அவர்கள் மதுரையில் புகழ்பெற்ற வண்டியூர் தெப்பக்குளம் என்று அழைக்கப்படுகிற மாரியம்மன் தெப்பக் குளத்தை, அதை



வேறு காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று கூறிய ஒரு கருத்தையொட்டி, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் அதை அப்படிச் செய்யக் கூடாது என்று கூறினார்கள். நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நம்முடைய முன்னோர்கள் ஆலயங்களின் பெயரால் உருவாக்கப்பெற்ற திருக்குளங்களானாலும் சரி அல்லது ஏரிகளானாலும் சரி, அவைகளில் எல்லாம் நீண்டகாலத்திற்கு முன்பே இத்தகைய நீரைத் தேக்கி வைத்தால் தான், இங்கே பூமிக்கு அடியிலே அந்த நீர் சேர்ந்து, வறட்சி ஏற்படுகிற காலத்தில் அங்கு பூமியைத் தோண்டினால் நமக்கு நீரை வழங்குகின்ற அந்த விஞ்ஞானத்தை கண்டுபிடித்து, நமக்கு அந்த வாய்ப்பை வழங்கி இருந்தார்கள். இன்றைக்கு நாம் விஞ்ஞான உலகத்திற்கு முன்னால் வளர்ந்துவிட்டோம் என்று அப்படிப்பட்ட நீர் நிலைகளை எல்லாம் மூடுகின்ற அந்தக் கொடுமையான காரியத்தைச் செய்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் இயற்கையும் நம்மை வதைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் தான் ஆலயங்களின் பெயரால் இருக்கின்ற திருக்குளங்களுக்காக எவ்வளவு செலவானாலும், இன்றைக்கு காப்பாற்ற வேண்டுமென்ற முயற்சியில் புரட்சித் தலைவருடைய அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு நம்முடைய விஞ்ஞான வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வேளாண்மைத் துறையிலே கூட, ஆங்காங்கே கசிவு நீர்க் குட்டைகளை உருவாக்குவதற்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டுக் கொண்டிருக்கிறோம், இருக்கின்ற குளங்களை எல்லாம் தூர்த்துவிட்டு. ஆகவே கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகின்ற கதையாக நம்முடைய வாழ்வு மாறிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் ஆலயங்களினுடைய திருக்குளங்களைப் பராமரிப்பதற்கு ஆலய நிதியிலிருந்து முடியாமல், அறநிலையத்துறை செலவிட்டு வருகிறது. அந்த வண்டியூர் தெப்பக் குளத்திற்கு வைகை ஆற்றின் அடியிலிருந்து தண்ணீரை எடுத்து, அங்கே கொண்டு வந்து சேர்க்கின்ற அந்தத் திட்டம் ரூபாய் 20, 25 இலட்சம் செலவிலே நிறைவேற்றப்பட இருக்கிறது. இப்போது கூட, அங்கே தண்ணீர் விடப்பட்டு, தெப்பத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அகில உலகத்திலிருந்து வருகின்ற பயணிகள் அந்தத் திருக்குளத்தைப் பார்த்து வியந்து பாராட்டுகிறார்கள். ஆகவே, அந்தத் திருக்குளத்தை மூடுகின்ற, அல்லது வேறு காரியத்திற்குப் பயன்படுத்துகின்ற ஒரு எண்ணமே அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சரவர்கள் 1986–87 ஆம் ஆண்டிற்காக கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையினை வரவேற்று, என்னுடைய ஒருசில கருத்துக்களை இப்போது தெரிவிக்கின்றேன்.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1986 ஏப்ரல் 25

முதலில் இந்து அற நிர்வாக ஆட்சித் துறையின் சார்பில் பல்வேறு கோயில்களில் —மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முயற்சியுடன் பல்வேறு திருக்கோயில்களில் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரைக்கும், பல 100 ஆண்டுகளாகத் திருப்பணிகள் செய்ய முடியாத கோயில்களில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முயற்சியினால்தான் அந்தத் திருப்பணிகளைச் செய்து முடித்திருக்கிறார்கள். செய்து முடித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிகள் நடந்திருந்தாலும், அந்தக் கோயில்களை இப்போது பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கோயில்களை ஏதாவது ஒரு திட்டத்தில எடுத்துக்கொண்டு, அந்த கோயில்களை நன்றாகப் பராமரிப்பதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்துக் கோயில்களைப் பொறுத்த வரைக்கும் குத்தகை நிலங்கள் என்று எடுத்துக்கொண்டு, இன்று ஒரு கோயிலிலிருந்தும் குத்தகை வராத நிலையிருக்கிறது. இந்தக் குத்தகை நிலங்களை அரசு விலைக்கு விற்று, அந்தக் கோயில்களுக்கு நிதி உதவியைச் சேர்க்க முனைந்திருக்கிறது. இதை விரைவாகச் செய்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கோயில் ஆபரணங்கள், மூலவர்கள் போன்றவற்றைப் பாதுகாக்க, கமிட்டிகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிட்டியை மற்ற மாவட்டங்களுக்கும் விரைவாகப் போட்டு, மக்களின் கண்களுக்குத் தெரிகின்ற ஆபரணங்களை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அரப்பளீஸ்வரர் திருக்கோயிலுக்கும், நயினாமலை வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கும் குடிதண்ணீர் கொடுக்க ஒரு சிறப்புத் திட்டம் போட்டு அரசு நிதி உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விரைவாக அறங்காவலர்களை நியமித்தால், மக்கள் குழு ஒன்றைப் போட்டால் கோயில்கள் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வழிவகை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மடங்கள் போன்றவைகளை அரசு மேற்கொள்வதற்கு எடுத்துள்ள முயற்சிகளுக்கு மத்திய அரசு அனுமதி தராமல் இருக்கிறது. மத்திய அரசிடம் இருந்து விரைவாக அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 25] [திரு. சீ. சிவப்பிரகாசம்]

சின்கோனா துறை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சின்கோனா துறை மேலும் சிறப்பாகச் செயல்பட கொய்னா பொருள்களுக்கு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட வேண்டும். எனவே கொய்னா பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு மைய அரசு விதித்திருக்கும் தடையை நீக்கி அதை மேலும் சிறப்புள்ள துறையாகச் செயல்படச் செய்வதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் கொல்லிமலையில் இருந்து சேலத்திற்கு அண்ணா போக்குவரத்துக் கழகம் பேருந்து விடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. சுற்றுலா பேருந்துகள் கொல்லிமலையில் விடுவதற்கு ஏற்பாடு செய்து சுற்றுலாப் பயணிகளை கொல்லிமலைப் பகுதிக்கு ஈர்க்கிற வழியில் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இளைஞர் விடுதிகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. விரைவாகப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

அங்கே தொலை நோக்கப் பார்வைக் கருவி ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட தொலை நோக்குக் கருவியை வாங்குவது என்று இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கிறது. நல்ல கருவிகளை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை சுற்றுலா மையம் மக்களைக் கவர்கிற வகையில் 4 கிலோ மீட்டர் தூரம் வரை சாலை போட ஆதித் திராவிட நலத் துறை மூலமாக ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல் ஏறத்தாழ ஒரு வருடமாக அந்த நிதி தேங்கி நிற்கிறது. மத்திய அரசிடம் விரைவாக அனுமதி பெற்று சாலை போட தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சினிமாத் துறையைப் பொறுத்தவரையில் தணிக்கைத்துறை அதிகாரிகள் இல்லாத காரணத்தால் பல படங்கள் வெளிவர முடியாமல பல சிறு பட அதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை இருக்கிறது. விரைவாக அந்த தணிக்கைத் துறை அதிகாரிகளை நியமிக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்தித் துறை மூலமாக இன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பொருட்காட்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. காலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் இந்தப் பொருட்காட்சிக்கு ஒரு வாரியமே அமைக்க திட்டம் உள்ளது என்று

சொன்னார்கள். அதை வரவேற்பதோடு மாவட்டங்களில் தலைநகரங்களுக்கு அடுத்து உள்ள பெரிய நகரங்களிலும் இத்தகைய பொருட்காட்சிகளை நடத்த முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத்துறையைப் பொறுத்த வரையில காட்டுவளம்தான் நாட்டின் வளம் என்பதை உணர்ந்து வனங்களின் வளத்தைப் பெருக்க மைய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும், காடுகளில் மலைவாழ் மக்கள் பலர் சந்தன மரங்களைப் பிடுங்குகிற அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான கூலி கொடுக்கப்பட்டு வந்தாலும், அவர்கள் இத்தகைய வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து இதைத் தடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

சந்தன மரத்தைத் திருடி விற்கிறவர்கள் மீது கோர்ட்டில் வழக்குப் போடப்படுகிறது. அவர்கள் அங்கே 'ஸ்டே' வாங்கி உடனடியாக விடுதலை பெற்று விடுகிறார்கள். இந்த நிலையை மாற்ற அவர்கள் செய்யும் குற்றங்களுக்கு வனத்துறை அதிகாரிகளே அபராதம் விதித்து அரசுக்கு வருவாய் தரும் வகையிலே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத்துறை சிறப்பாகச் செயல்பட மாநில அளவில் தலைவர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல், தேயிலைத் தோட்டக் கழகம், ரப்பர் தோட்டக் கழகம், வனவிலங்குகள் பாதுகாப்புக் கழகம், சோஷியல் பாரஸ்ட்ரி போன்ற பல்வேறு அமைப்புகளுக்கு தனி அந்தஸ்து உள்ள வனத்துறைத் தலைவர்களை நியமித்து அந்தத்துறை மேலும் சிறப்பாகச் செயல்பட வழிசெய்தால் அது நல்ல வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-50)

அடுத்து மலைவாழ் மக்கள் பகுதியிலே பாரஸ்ட் லேபர் என்று சொல்வார்கள். அதை வெட்டுவதற்கு மிகக் குறைந்த கூலியைத்தான் அரசு தருகிறது. அதை மாற்றியமைத்து தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு தினக்கூலியை நல்ல முறையிலே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சோஷியல் பாரஸ்ட்ரி சிறப்பாக செயல்படுத்தப் படுகிறது. ஸ்வீடன் நாட்டு உதவியுடன் சிறப்பாகச் செய்து வருகிறோம். 15 லட்ச ரூபாய் திட்டத்திலே ஏரி குளங்கள் சிறப்பாக அமைக்கப்படுகின்றன. அந்தத் திட்டத்தை மேலும்





சிறப்பாக அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் மேலும் பல பதவிகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதி யாதாரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய 1982 ஆம் ஆண்டு வனத்துறையின் மூலமாக பாரஸ்ட நிலத்திலே ஏலப் பயிரிடுவதற்கு அரசாணை பிறப்பித்தார்கள். ஆனால் இதுவரை செயல்படாத நிலை இருக்கிறது. அதற்காக மாவட்ட அளவிலே குழுவை அமைத்து அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற மலைவாழ் மக்களின் குடும்பங்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. சுப்புராயர் சொன்னது வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் அல்ல. காலேஜ் அவுஸிலிருந்து டவுன் ஹால் ரோடிலே வரும் போது சிறு தெப்பக்குளம் கிழக்குப் பக்கத்திலே காய்கறி மார்க்கட், சுற்றிலும் கடைகள் ஆக இருக்கிற தெப்பக்குளம். ஏற்கெனவே அந்த தெப்பக்குளம் சம்பந்தப்பட்ட வரையில் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதால் அவர்களுக்கும் அறநிலையத் துறைக்கும் ஒரு வழக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்களுக்கு அதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மாரியம்மன் தெப்பக்குளம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதற்கு நான் விளக்கம் அளித்து இருக்கிறேன். திரு. இராமநாதன் சொல்கிற கூடலழகர் ஆலயத்திற்குச் சொந்தமான அந்த தெப்பகுளத்தை அவர்கள் சொல்லி இருந்தால் ஏற்கனவே பயனற்றுப்போய் அதற்கு எந்தப் பக்கத்திலிருந்தும் தண்ணீர் வரமுடியாமல் வேறு தவறான காரியங்களுக்குப் பயன்படுத்துகிற வகையில் பாழ்பட்டுப் போய் இருக்கிற அந்த இடத்திலே ஒன்றரை கோடி ரூபாய் செலவில் மிகச் சிறந்த ஏர்கண்டிஷன் அங்காடி ஒன்று அமைக்க உலகத் தமிழ்ச் சங்க தொடக்கவிழாவிற்கு வந்திருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதிலே எந்தச் சிக்கலும் இல்லை. சம்பந்தப்பட்ட வைணவ சமயச் சான்றோர்களும் ஆலய நிர்வாகிகளும் எல்லோரும் அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதற்கான திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. கே. கல்லன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சின்கோனா, காட்டுவளம், செய்தி சுற்றுலா, அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியதேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகஒரு சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். சின்கோனா துறையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 125 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட துறையாகும். மிக முக்கியமாக மலேரியாவை ஒழிக்கப் பயன்படும் சின்கோனா மருந்தை தயாரிப்பதற்கு ஏற்பட்ட ஒரு துறையாகும். அந்த மருந்து மற்ற சில வியாதிகளையும் குணப்படுத்தும் என்று நிபுணர்கள் சொன்ன அடிப்படையில் அது ஏற்படுத்தப்பட்டது. ஏறக்குறைய 10 ஆயிரம் ஏக்கர் நிலம் அந்தத் துறை தன்னிடத்திலே வைத்துக்கொண்டிருக்கிறது. பல்வேறு தைலங்களை தருகிற செடிகளை வளர்ப்பதிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது. அதிலே நல்ல வருவாய் வருகிறது. ஆனால் நாம் நினைத்த அளவுக்கு வருவாய் இது வரையில் வரவில்லை. தயவுசெய்து அதற்காக ஒரு குழுவை ஏற்படுத்தி அந்த முயற்சியின் மூலம் அந்த வருமானத்தைப் பெருக்கவேண்டும். வாசனைத் திரவியங்களைப் பொறுத்த வரையில் நல்ல கிராக்கி இருக்கிறது. அங்கே கிடைக்கின்ற பொருட்களின் மூலம் வாசனைத் திரவியங்களைச் செய்வதற்காக அங்கே ஒரு பேக்டரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் ஏறக்குறைய 3,000 பேர்கள் நிரந்தர வேலையாட்களாக உள்ளார்கள்; ஏறக்குறைய 1,000 பேர்கள் கேஷுவல் லேபரர்களாக இருக்கிறார்கள். நீங்கள் அவர்களையும் இந்தத் துறையில் எதிர்காலத்தில் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அவர்களின் வீடுகளில் மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது; அவர்களுக்குச் சரியான முறையில் ரேஷன் கொடுக்கப்படவில்லை. தயவு செய்து அதை நீங்கள் கவனித்து அவர்களுக்கு இருக்கின்ற இந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில் நாம்—இந்திய அரசும், தமிழக அரசும்—வேண்டிய அளவிற்கு –33 சதவீதத்தை எட்ட பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டங்களை நல்லவிதமாகச் செயல்முறையில் நடத்தினாலன்றி நிச்சயமாக எதிர்காலத்திலே நமக்குப் பாதிப்பு ஏற்படக் கூடும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 16 விழுக்காடு காடுகள்தான் இருக்கின்றன. காடுகள் அழிவது நிச்சயமாக இன்னும் நிறுத்தப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தயவு செய்து அமைச்சரவர்கள் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.



எங்கள் மாவட்டக் கலெக்டர் இல்லத்தின் எதிரேயும், உயர் அதிகாரிகள் தங்கும் ஆரம்பி ரிசர்வ் பாரஸ்டில் உள்ள ஒரு பகுதியில் டி.எப்.ஓ. வசித்துக்கொண்டு வருகிறார். அந்தக் காட்டைப்பொறுத்த வரையில் ஏறக்குறைய வழி ஓரத்திலே உள்ளதே தவிர, உள்புறம் ஒன்றுமே இல்லாமல் மொட்டை அடிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இதை அமைச்சரவர்கள் என்னுடன் வந்தாலும் நேராகவே நான் காட்டுகிறேன்; இல்லையென்றால் ஏதாவது ஒரு அதிகாரியை அனுப்பினாலும் நிச்சயமாக அவர்கள் அதைப் பார்க்கலாம்.

உதகை முனிசிபாலிட்டிக்கு உட்பட்ட தலையாட்டுமந்து பகுதியில் வன இலாக்காவைச் சேர்ந்த பெரிய பெரிய மரங்கள் வெட்டப்பட்டு, , இலட்சக்கணக்கான மரங்கள் போகின்றன. இதைக் குறித்து மாவட்டக் கலெக்டர் அவர்களுக்கும், டி.எப்.ஓ. அவர்களுக்கும் பலமுறை புகார் செய்தால், புகார் செய்த ஒரு வாரத்திற்கு அது நிச்சயமாக நிறுத்தப்படும்; மீண்டும் அது களவு போய்க்கொண்டே இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் உங்கள் கொள்கைக் குறிப்பின்படி ஏறக்குறைய 25,000 குற்றங்களுக்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டன என்று சொல்லியிருக்கிறீர்கள்; ஏறக்குறைய 106 பணியாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்; 1,531 பணியாளர்கள் மீது குற்றத்தாள் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். இதைப்பார்க்கின்றபொழுது நிச்சயமாக நாம் அழிக்கும் நிலையை போதிய அளவிற்குத் தடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

நீலகிரி மாவட்டத்தில், கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னால் கூடலூரிலிருந்து கேரளாவிற்கும், கர்நாடகத்திற்கும் பெருமளவில் விறகுகள் கடத்தப்பட்டன என்று சொல்லி, அமைச்சரவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்ததன்பேரில் ஏறக்குறைய முழுமையாக அது தடுக்கப்பட்டது. அதே பாணியில் நாம் செய்தால் இப்பொழுது கீழ்கோத்தகிரியிலிருந்தும், மற்றப் பகுதிகளிலேயிருந்தும கடத்தப்படும் பொருள்களை நாம் நிச்சயமாகத் தடுத்து நிறுத்த முடியும் என்று நம்புகிறேன். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி கவுடர் அவர்கள் சொன்னதைப்போல இந்தக் கற்பூர மரங்களை நடுவதில் சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கின்றன. இரண்டு மூன்று முறை இந்த மன்ற கூட்டத் தொடரில் இதைப்பற்றி நாம் பேசியுள்ளோம். இதைப்பற்றி மத்தியிலேயிருந்து வந்த ஆராய்ச்சியாளர், இதனால், பாதிப்பு இருக்கின்றது என்று சொன்னார்கள். போன வருஷம் கேரளாவிலே

ஒரு செமினார் நடக்கின்றபொழுது இந்தியாவிலிருந்து வந்த பல நிபுணர்களும், இதனால் ஓரளவிற்குப் பாதிப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, தயவு செய்து நீலகிரியைப் பொறுத்தவரையில் கற்பூர மரங்களை நட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு சின்கோனாவைப் பொறுத்தவரையில் சில்வர் ஓக்ஸ் ஷெட்யூலில் கொண்டு வந்திருக்கிறார்கள். இது விலை உயர்ந்த மரம் அல்ல. இதை ஷெட்யூலில் வைத்திருக்கிறார்களே தவிர. நீலகிரியில் உள்ள அத்தனை சில்வர் ஓக்ஸ்-ம் கடத்தப்பட்டு வருகிறது ; வெட்டப்பட்டு இருக்கிறது. அந்த கட்டுப்பாட்டை எடுத்தால் விவசாயிகளுக்குத் தக்க விலை கிடைக்கும். தற்போது மூன்றில் ஒரு பாகம் விலை கூட கிடைப்பதில்லை. எனவே, தயவு செய்து அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7—00)

நீலகிரியைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில், அங்கே ஏழை மக்களுக்கு விறகு தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. தயவுசெய்து அவர்களுக்கு விறகு கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு, மற்றும் வன இலாகாவைச் சேர்ந்த தேயிலை சாலைகளுக்கும் தேயிலை தயாரிப்பதற்காக விறகுகளை வழங்குகிறோம். ஆனால், அங்கு டன் ஒன்றுக்கு ரூ. 500, ரூ. 600-க்குக் கொடுக்கிறோம். ஆனால், விஸ்கோசுக்கு நாம் கான்ட்ராக்ட் விட்டிருக்கிறோம். இன்றைய நிலையில், நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் விலை சரிதானா என்று பார்த்து, கட்டுப்படியான விலையில் வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூகக் காடுகளைப் பொறுத்தவரையில், நீலகிரியிலே நல்ல விதமாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், காடுகளை அழிப்பது அதிகமாக இருப்பதால், நாம் சமூகக் காடுகள் திட்டம் மிகவும் மேம்பாடாக இருக்க வேண்டுமென்று செயல்பட்டாலும், அதற்கு ஈடாக இல்லை என்று சொல்லிக் கொண்டு, நாம் அந்தத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளதால் ஒரு மரம் வெட்டுவதற்கு இரண்டு கன்றுகள் நடப்பட வேண்டுமென்று சொல்லியும், எங்கெங்கே காலி நிலம் இருக்கிறதோ, அந்த நிலங்கள் அத்தனையிலும் வார் (war footing) புட்டிங்கில் மரங்கள் நட்டாலொழிய நீலகிரியைக் காபாற்ற முடியாது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். சுற்றுலாவைப் பொறுத்தவரையில், உதகையிலே பல மேம்பாடு



திட்டங்களை நீங்கள் ரூ. 28 கோடியில்செய்வதாக இருக்கிறீர்கள். பல திட்டங்களைச் செய்திருக்கிறோம் மேலும் பல திட்டங்களைச் செய்ய இருக்கிறோம், அதற்கு நன்றி.

உதகையிலே, குதிரைப் பந்தயத்தை அரசு எடுத்துக்கொண்டு, நடத்திக் கொண்டு வருகிறது. இந்த இரண்டு மாதங்கள் மட்டும் அல்ல, இன்டர்வென்யு பெட்டிங் என்று ஏறக்குறைய வருடத்தில் 200 நாட்கள், இன்டர்வென்யு பெட்டிங் நடக்கிறது. அதனால், பெரும்பாலும் ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு அதிகாரிகள், சாதாரண மக்களின் பொருளாதாரம் அதிக அளவில் பாதிக்கப்படுவதால், தயவுசெய்து அந்த இன்டர்வென்யு பெட்டைத் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதகையைப் பொறுத்தவரையில், அது நல்ல சுற்றுலா மையம். ஆகவே, அங்கே ஒரு டி.வி. சென்ட்டர் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு உதகையிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற பொட்டானிக்கல் கார்டனுக்கு அன்னை இந்திரா அவர்கள் பெயரிடுவதாக இந்த மன்றத்தில் அவை முன்னவர் அறிவித்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது, அதிர்ச்சியை மட்டும் தரவில்லை, வருத்தத்தையும் தருகிறது. உடனடியாக அந்தப் பெயர் இடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில், குறிப்பாக, உதகையைப் பொறுத்தவரையில், மலைவாசஸ்தலம். அது தனித் தன்மை வாய்ந்ததாக இருந்தது. இப்பொழுது அந்தத் தன்மை படிப்படியாக மாறிக்கொண்டு வருகிறது. சில இடங்களில், 80 அடி, 100 அடி வெட்டி, வீடுகள் கட்டுகிறார்கள். ஆகவே, அந்தத் தனித் தன்மையை நீங்கள் காப்பாற்ற வேண்டும், அதே நேரத்தில், லைசன்ஸ் வாங்காத நூற்றுக்கணக்கான கடைகள் ஏற்பட்டு, நல்ல கவர்ச்சிகரமான, தோற்றத்தைக் கெடுக்கிறது. தயவுசெய்து அதையும் நீங்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையைப் பொறுத்தவரையில், அங்கு ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. ஏறக்குறைய ரூ. 10 இலட்சம் செலவில் உட்புறத்தில் அதை நாம் செப்பனிட்டிருக்கிறோம். இப்பொழுது ராஜகோபுரம் கட்ட இருக்கிறோம். தயவுசெய்து, நீங்கள் உல்லாச அபிவிருத்திக்கும், கோவில் அபிவிருத்திக்கும் ரூ. 5இலட்சமாவது அரசு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலையில் பேசும்பொழுது மாண்புமிகு ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பத்திரிகையாளர்களைப் பற்றிச் சொன்னார். அவர்களுக்கு அதிகம் பென்ஷன் தொகை தர வேண்டுமென்று கோருவது நியாயமானது. இப்பொழுது ரூ. 250 கொடுக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டும். நான் மாண்புமிகு

அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், , அது ரூ. 500 ஆக இருந்தால் நல்லது. அதே நேரத்திலே, இன்கம் சீலிங் ரூ. 5,000 ஆக்கியுள்ளார்கள். அது மிகக் குறைவாக இருக்கிறது. அந்த சீலிங்கை, ரூ. 12,000 முதல் ரூ. 15,000 வரை ஆக்கினால், அது உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராச்சுவிட்டியை நீங்கள் ரூ. 10,000 ஆக வரம்பு வைத்திருக்கிறீர்கள். தயவுசெய்து, 15 ஆண்டுகள் யார், யார் வேலை செய்து இருந்தாலும், இந்த வரம்பு பயன் படாது. ஆகவே, அதை ரூ. 40,000, ரூ. 50,000 ஆகச் செய்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்திக்கொடுக்க நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, விரைவிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கூட்டுறவு முறையிலே குறைந்த வட்டியில் வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளம்பரத்தைப் பொறுத்தவரையில் தினமணி, எக்ஸ்பிரஸ், இந்து பத்திரிகைகள் போன்ற தரமான பத்திரிகைகளுக்கு, அந்தப் பத்திரிகைகளின் தரத்திற்கு ஏற்ப விளம்பரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று காலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவருடைய குடும்பத்திற்கு ஒருசில நன்மைகளைச் செய்ததாகக் கூறியிருக்கிறார்கள். அதைப்போன்று ஏற்கெனவே அறநிலையத்துறை அமைச்சராக இருந்த திரு. பரமேஸ்வரன் அவர்களுடைய குடும்பத்திற்கும் நன்மை செய்யவில்லை, உள்ஆட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன்ஜி அவர்களுடைய குடும்பத்திற்கும் சில நன்மைகளைச் அரசு செய்திருக்கிறது என்பதை நினைவூட்டி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற செய்தி-சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை, வனத் துறை போன்ற துறைகளுக்காக ஐந்து தலைப்புகளில் 44,02,81,000 ரூபாய் மானியத்தை வழங்க வேண்டுமென்று கூறுகின்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே 17 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு , பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு, தங்களுடைய சிறந்த கருத்துக்களை வழங்கியதற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலையிலும் மாலையிலும் மிகுந்த அக்கறையோடு இங்கே உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்ததற்தாக நான் மீண்டும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

காரணம், இந்தத் துறைகளுடைய முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்துகொண்டு, தங்கள் கருத்துக்களை வழங்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. அப்படி கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்தில் செய்தித்துறை பற்றி இங்கே நம்முடைய உறுப்பினர்கள் அதிகமாக கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை, என்றாலும் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கல்லன் அவர்களும் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னர்கள். நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் நான் இந்த விவாதத்தை நீட்டித்துக்கொண்டு போக விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு பொறுப்பிலே இருக்கிற எங்களுக்கு எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில கருத்துக்களைச் சொல்கின்றபோது அதற்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிடுகிற காரணத்தாலேதான் சில கருத்துக்களை நாங்கள் எடுத்துச் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறோம். அப்படி பதில் சொல்லுகிற நேரத்தில் முன்னால் என்ன நடைபெற்றது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயம் எங்களுக்கு வந்துவிடுகிறது. இதற்கு முன்னாலே நடைபெற்ற செய்திகளை எடுத்துச் சொல்வது தேவையில்லை ; அன்றைக்கு இருந்தவர்கள் தவறாக நடந்துகொண்ட காரணத்தாலேதான் இன்றைக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் ; ஆகவே நீங்களும் அந்தத் தவறை ஏன் பின்பற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் இன்று காலையிலே குறிப்பிட்டார்கள்.

ஆனால் இதிலே ஒரு சங்கடம் என்னவென்றால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாத எதிர்கட்சியிலிருந்து சில கருத்துக்களைச் சொல்லுகிற போது அவர்களுக்கு முன்னாலே இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்ற சான்றிதழை ஆளுகிற கட்சி எடுத்துவைக்க முடியாது. ஆனால் ஆட்சியிலே நீண்ட காலம் இருந்து, சிறந்த சாதனைகளை நாங்கள் செய்திருக்கிறோம் என்று பெருமைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு கட்சியின் சார்பில் உறுப்பினர்கள் பேசுகின்றபோது சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.

(இரவு 7-10)

அப்படி எடுத்து வைத்தால் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் எப்படி இவைகள் எல்லாம் நடந்தன என்று எடுத்து முன்மாதிரியாக வைக்கின்ற ஒரு சூழ்நிலையை இயற்கையாகவே, அவர்களாகவே, உருவாக்கித் தந்துவிடுகிறார்கள் என்பதையும், அது தவிர்க்கப்பட முடியாதது என்பதையும் அருள்கூர்ந்து மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைகளுக்கு விளம்பரம் என்பதைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் பொதுவான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண் டும் ; சமமாக வழங்கவேண்டுமென்ற கருத்து ஒரு நல்ல தத்துவ மாகத் தோன்றுகிற வகையில் எடுத்து வைக்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு ஆளுகிற கட்சியும் பொறுப்பிலே இருக்கிற காலத் திலே எதிர்க்கட்சிகள் இந்தக் குறையைச் சொல்வதும், அதற்கு ஆளுகிற கட்சியின் சார்பிலே பதில் சொல்வதும் நடைமுறை யாகவே இருந்துவருகிற ஒன்றாகும். இதிலே இருந்து யாருமே தப்ப முடியாது. இங்கே கூட அறநிலையத் துறை பற்றிச் சொல்கிறபோது காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜாராமன் அவர்கள் இந்தத் திருப்பணிகள் எல்லாம் விளம்பரத்திற்காகத்தான் நடத்தப்படுகின்றன என்று கூடச் சொன்னார்கள். அப்படி என்றால் அந்தக் காலத்திலிருந்து நடைபெறுகிற திருப்பணிகள் எல்லாம் விளம்பரத்திற்காகத்தான் நடத்தப்பட்டதா அல்லது அப்படி விளம்பரம் பெற முடியும் என்றால் அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏன் செய்யாமல் விட்டு விட்டார்கள் என்று கேட்டால் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கிறேன் அல்லது குறை சொல்கிறேன் என்று பொருள் அல்ல. ஆளுகிற கட்சியிலே இருப்பவர்கள் பேசுகிறபோது கொஞ்சம் எச்சரிக்கையாகப் பேச வேண்டும். அப்படி எச்சரிக்கையாகப் பேசாமல் இப்படிப் பேசுவதன் காரணத்தால் தான் நீங்கள் இருக்கிறபோது இப்படிப்பட்ட காரியங்கள் நடந் திருக்கிறதே, அதற்கு என்ன பதில் அளித்திருக்கிறீர்கள் என்று எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம், கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

இந்த சட்டமன்றப் பேரவையில் 7—3—1973-லும், சட்டமன்ற மேலவையில் 8—3—1973-லும் அன்றைக்குப் பொறுப்பேற்றிருந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்தப் பிரச்சினையை எதிர்க் கட்சியிலே இருந்து எடுத்துச் சொன்னபோது ஒரு பதிலைத் தந்தார்கள். எங்களைப் பற்றிய குற்றச் சாட்டுகள் வருகிற நேரத்தில் நாங்கள் முன்னாள் இருந்த முன்மாதிரிகளை என்ன என்று பார்ப்பது வழக்கம். அதிலே நல்லவற்றை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். நல்லவையல்ல என்றால் அதை நாங்கள் விட்டுவிடுகிறோம். ஆகவே அனுபவம் மிக்க ஒரு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையை நீண்ட காலத்திற்கு முன்பாகவே தொடங்கி, ஆசிரியராக இருந்து, பத்தி ரிகையாலேயே வளர்க்கப்பட்ட ஒரு கட்சியின் மிகச் சிறந்த தலைவராக விளங்குகிற ஒருவர் பத்திரிகைகளைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்களுக்குக் கூட இது மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். முன் னாள் முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு என்ன சொன்னார்கள் என்பதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு அடுத்த விஷயத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.





இன்றைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அன்றைக்கு இந்தப் பிரச்சினையை எழுப்பு கிறார்கள். காரணம் அதற்கு முன்னாலே திரு. கோபால் என்ற உறுப்பினர் இதைப்பற்றிப் பேசி இருக்கிறார்கள். அதை எடுத் துக்காட்டி டாக்டர் ஹண்டே அவர்கள் பேசியதற்குப் பிறகு மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் பதிலளிக்கிறார். திரு. ஹண்டே அவர்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது, அடுத்த பாயின்ட் அது தான், திரு. கோபால் அவர்கள் சொன்னார்கள், குறித்து வைத்திருக்கிறேன், அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இரண்டாண்டு காலத்திற்கு பத்திரிகை விளம்பர செலவுகளுக்கு ரூபாய் 2.18 இலட்சம் என்றும் அது இப்போது அதிகமாகிவிட்டது என்றும் திரு. கோபால் அவர்கள் குறிபிட் டார்கள். முதலிலே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன் அண்ணா அவர்கள் இருந்தபோது எவ்வளவு பொது நிறுவனங்கள் இருந்தன, பொதுத்துறைகள் இருந்தன, அப்போது விளம்பரச் செலவு எவ்வளவு குறைவாக இருந்தது, இன்றைக்கு அது எவ் வளவு அதிகமாகி இருக்கிறது என்று விளம்பரச் செலவு அதிகமான தற்கும் காரணத்தை எடுத்துச் சொல்லிவிட்டு இந்தப் பத்தி ரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதில் பாராபட்சம் காட்டப்படுகி றது என்று எதிர்க்கட்சியின் சார்பிலே சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அவர்களுடைய பேச்சுக்கு, செயலுக்குத் துணையாக சான்றாக அன்றைக்கு இந்தியப் பிரதமராக இருந்த காலம் சென்ற வணக்கத்திற்குரிய அன்னை இந்திராகாந்தி அம்மை யார் அவர்கள் டெல்லியில் செய்தி விளம்பரத்துறை அமைச் சர்கள் மாநாட்டில் பேசிய ஒரு கருத்தை இந்த மன்றத்திற்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் எடுத்துக்காட்ட வில்லை. மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் எடுத்துக் காட்டிய அந்தப் பகுதியை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி புது டெல்லியில் செய்தி விளம்பரத்துறை அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத் துப் பேசும்போது அரசாங்க விளம்பரச் சாதனங்கள் அரசாங் கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புவதற்குத்தான் பயன்படுத் தப்பட முடியுமே தவிர அரசாங்கத்தின் கொள்கைகளைக் கடுமை யாக விமர்சிக்கிறவர்களுக்காக அல்ல என்பதை இந்தியப் பிரதமர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்னும் சொன்னால், மக்கள் ஒரு அரசாங்கத்தை, அதனுடைய கொள்கையை ஏற்று, அதை அமல்நடத்துவதற்காக தேர்ந்தெடுத்திருக்கும்போது, அந்த மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யக் கூடிய அந்த விளம்பரம், அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்கிற முறையில் இருக்க வேண்டும் என்று பிரதமர் அவர்கள் குறிப்பிட்டி ருக்கிறார்கள்'' என்று அவர், பிரதமர் அவர்கள் சொன்ன

கருத்தை, இங்கே அவர்கள் ஏற்றுக் கொண்டு, இந்த அவைக்கு தெரிவிக்கிறார்கள் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுதான் உங்களுடைய பதிலா என்று கேட்டால், அந்த பதிலிலே இருக்கிற ஒரு அடிப்படை உணர்வை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்றாலும், நாங்கள் அந்த அளவிற்கு எதிர்க்கட்சி பத்திரிகையா அல்லது எதிர்க்கின்ற பத்திரிகையா என்பதற்காக பார்த்து விளம்பரங்களைத் தருகிற அந்த முடிவை, அந்த அடிப்படையிலே மேற்கொள்வது இல்லை. ஆனால் சில சூழ்நிலைகளில் ஒரு கருத்தை அரசுக்கு தெரிவிக்கின்ற உணர்வோடு தெரிவிக்கின்ற பத்திரிகைகள் அல்லது அரசினுடைய கருத்தை மறுத்து தெரிவிக்கின்ற பத்திரிகைகள், அல்லது அரசினுடைய கருத்தை மாற்ற வேண்டும் என்று தெரிவிக்கின்ற பத்திரிகைகள், அந்த உணர்வுகளை தெரிவிக்கின்ற அந்த நேரத்தில் அரசு எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை மாற்றி, திரித்து, அலட்சியப்படுத்தி, அவதூறு தெரிவித்து, இழிவு படுத்தி மக்களிடத்திலே தவறான உணர்வுகளை ஏற்படுத்துவதற்காகவே தங்களுடைய பத்திரிகை தொழிலை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிற சிலர், தங்களுடைய சொந்த லாபத்திற்காக தொழில் முறை அடிப்படையில் பத்திரிகை நடத்துகிறபோது, அவர்களுக்கு அப்படி வியாபார உரிமைகள் இருக்கிறது. அப்படி வியாபார உரிமைகள் பெற்று இருக்கிற அந்த வியாபாரிகளுக்கு அரசாங்கப் பணத்திலே விளம்பரத்தை கொடுக்கலாமா என்று நிர்ணயிக்கிற உரிமையும் அரசாங்கத்திற்கே இருக்கிறது, ஆகவே அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு அந்த விளம்பர பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தேவையான நேரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் கொடுத்தால் தான் இந்த நாட்டு மக்களுக்கு அது போய்ச் சேரும் என்று அரசு கருதுகிறபோது, எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுப்போம். அல்லது அதிகமாக விற்பனையாகின்ற பத்திரிகைகளில் ஒன்றிரண்டிற்கு கொடுத்தாலே போதும் என்று எண்ணுகிறபோது, அந்த அளவிலே கொடுப்போம்.

இப்போது நாங்கள் பத்திரிகைகளை ஆரம்பிக்கிறோம் என்று புற்றீசல்கள் போல பல பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. 15 பத்திரிகைகள், 16 பத்திரிகைகள் என்றும், சஞ்சிகைகளும் 100-க் கணக்கில் தோன்றியிருக்கின்றன, என்றால், அவைகளுக்கெல்லாம் அரசாங்கப் பணத்திலே இருந்து வாழ்வு அளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நியாயமும் அல்ல மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையும் அல்ல. பத்திரிகை நடத்துவது என்பது அவர்களுடைய முழு உரிமை. அதை எப்படி நடத்துவது என்பதும் அவர்களுக்கு தோன்றுகின்ற, அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிற உரிமை. அதற்குள்ளே நாம்





தலையிட முடியாது. ஆகவே அந்தப் பத்திரிகைகளுக்கெல்லாம் வாழ்வு அளித்து பணத்தைக் கொடுத்து அவர்களுக்கு தொழிலில் லாபத்தை ஏற்படுத்தி கொடுக்கின்ற கடமை அரசாங்கத்திற்கு இல்லை. ஆக பொது நியதி ஏற்றுக்கொண்டிருக்கிற, சட்டமும் ஏற்றுக் கொண்டிருக்கிற, தர்மமும் ஏற்றுக் கொண்டிருக்கிற, (குறுக்கீடு) இல்லை நாங்கள் உணர்ந்துக் கொண்டிருக்கிற வகையில் சட்டத்தின்படியும் நியாயம். அதைத்தான் முன்னாள் இந்திய பிரதமர் அவர்கள் எடுத்துக் காட்டியது என்று, இந்த மன்றத்திலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே சட்டம் வேறுவிதமாக சொல்லப்படுமேயானால் அல்லது நீதிமன்றம் வேறுவிதமான தீர்ப்பு அளிக்கிறது என்று வருமேயானால், அன்றைக்கு அரசாங்கம் அந்தத் தீர்ப்புக்கு ஏற்பவும் சில முடிவுகளை எடுக்க முடியும். ஆனால் நான் இன்றைக்குச் சட்டம் என்று சொல்லுகிறபோது, நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற தர்மத்தின் அடிப்படையிலே இருக்கிற சட்டத்தைதான் சொல்லுகிறேன்.

(இரவு 7–20)

ஆகவே தங்களுக்கென்ற உரிமையோடு ஒருவர் ஒரு பத்திரிகையை நடத்த முடியும், எந்தப் பிரச்சினையையும் அவதூறாக்கிச் சொல்ல முடியும். எழுத முடியும், மக்களை திசை திருப்ப முடியும் என்றால், புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி கோடான கோடி மக்கள், அவர் நலம் பெற்று வருவார்களா என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர் நன்றாக இருக்கிறார்கள் ; நலம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள் ; இந்த நாட்டை ஆள்வதற்கு மீண்டும் வருவார் என்று, கோடான கோடி மக்களுக்கு நிம்மதியை, நம்பிக்கையை தேடி தருகின்ற அந்த நிழல் படத்தை ஒரு பத்திரிகையிலே வெளியிட்டால், அந்தப் படமே பொய்யாக தயாரிக்கப்பட்ட படம் போல, அது பொய்யான படம் என்று ஒரு பத்திரிகை வெளியிடுகிறது என்றால் அது அவர்களுக்குரிய உரிமை, அவர்களுடைய உணர்வு, அவர்களுடைய மனிதாபிமான திறன் என்று அதை நாம் குறை சொல்ல முடியாது என்றால் அந்தப் பத்திரிகைக்கு இந்த அரசாங்கத்தினுடைய விளம்பரத்தை கொடுத்து, அந்தப் பத்திரிகைமூலமாகத்தான், அரசாங்கத்தின் கொள்கை மக்களிடத்திலே பரப்ப வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள், நான் இதை வாதத்திற்கு எடுத்து வைக்கிறேனே தவிர அப்படிப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் அழித்து ஒழிக்கப்பட வேண்டியவைகளா என்றால் இல்லை. காரணம் பத்திரிகை தொடங்குகிற போது அரசாங்கத்தை நம்பி யாரும் தொடங்குவதில்லை. அவரவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு தான் தொடங்குகிறார்கள். அது ஒரு தொழில். தயவுசெய்து அதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஏதோ மற்றவர்கள் எல்லாம்

சொந்தத் தொழிலுக்குப் பாடுபடுவதைப் போலவும், பத்திரிகை மாத்திரம் இந்த நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பதைப் போலவும் சிலபேர் வாதாடுகிறார்கள் அதல்ல. சிலபேர் தொழிலாக தொடங்குகிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பாணியில், முறையில் செயல்படுத்துகிறார்கள். அதை எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே தான் இந்த அரசு மாத்திரம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. முன்னாலே இருந்த அரசும், புகழ்பெற்ற எழுத்தாளரும், பத்திரிகையாளரும் மிகச்சிறந்த தலைவர் என்று போற்றப்படுகிற முதலமைச்சர் முன்னாள் இந்தியப் பிரதமரைப் பற்றி கருத்துக்களை எப்படி எடுத்துச் சொன்னார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய செய்தித் துறையின் சார்பில் எழுத்தாளர்களுக்கு, நிருபர்களுக்கு, பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் 250 ரூபாய் வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறது. அதிலே சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று பத்திரிகையாளர்கள் சார்பிலே அரசினிடத்தில் சில விவரங்களைத் தந்திருக்கிறார்கள். சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. முதலில் முறையாக இப்படிப்பட்ட திட்டத்தை அமல்படுத்துகிறோம். அதிலே பின்னாலே போகப் போக பத்திரிக்கையாளர்கள் பயன் பெறுகிற வகையிலே இந்தத் திட்டத்தை மாற்றியமைப்பதற்கு எந்தத் தடையும் இருக்காது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு எப்படிப்பட்ட விரிவாக அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு, முறையாக அவர்கள் பரிசீலிப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சுற்றுலாத் துறை. சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் எல்லா உறுப்பினர்களுமே தங்களுடைய பகுதிகளில் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உறுப்பினர்களுடைய தொகுதிகள் அனைத்திலும் இருந்து அல்லது மாவட்டங்களிலிருந்து எல்லாம் நாங்கள் இரண்டு மாவட்ட உலாத்தலங்களை தேர்ந்தெடுத்து அதற்காக திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேலே பல இடங்களை நாம் தேர்ந்தெடுத்துச் செய்வதற்கு நம்மிடத்தில் பண வசதி இல்லை. இருந்தாலும் எந்த அளவிற்கு இன்றைக்கு சுற்றுலாத் துறை மீது மக்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறோம் என்பதும், அதன் காரணமாக மத்திய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் ஒரு கோடிக்கான நம்முடைய திட்டங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்





பதும் நம்முடைய மாநிலத்தினுடைய சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியை அது எடுத்துக்காட்டுகிறது. நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் பேசுகிற போது வெளிநாட்டு இந்தியர்களுக்கு அவர்கள் பங்கு பெறுகிற சுற்றுலாத் திட்டங்களைப் பற்றி சந்தேகம் இருக்கிறது. சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக சீசரின் மனைவி இருக்க வேண்டும் என்பதைப் போல அரசும் இருக்க வேண்டும் அல்லது சுற்றுலாத் துறை இருக்க வேண்டுமென்று இலக்கிய உதாரணத்தோடு பேசினார்கள். சந்தேகம் அல்லது ஐயம், இவைகள் தோன்றுவது சில விளக்கம் பெறுவதற்காக என்றால் அந்த விளக்கத்தை அரசு தர முடியும். அல்லது அதை எந்த இடத்திலும் பெறுவதற்கு உரிமை உண்டு. ஆனால் சந்தேகப்படுவதே நோயாக மாறிவிட்ட ஒரு சூழ்நிலையில் அந்த நோயை தீர்க்க யாராலும் முடியாது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் தன்னைப் பெற்றெடுத்த தாயினுடைய கற்பையே ஒருவன் சந்தேகிக்கிறான். காரணம் சந்தேகப்படுகிறவர்களுக்கு அந்த அளவிற்கு நோய் முற்றிவிடும்; சந்தேகம் என்பதே ஒரு நோய். அவன் தன் பின்னாலே வருகிற நிழலையே சந்தேகப்படுவான். ஆகவே செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும், விளக்கம் பெற வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் விளக்கத்தை நாம் சொல்ல முடியும். அப்படியானால் விளக்கத்தை அந்த உறுப்பினர் கேட்டிருக்க வேண்டும். நீங்கள் அறிவித்திருக்கிறீர்களே, வெளி நாட்டு இந்தியர்களோடு தொடர்பு கொண்டு திட்டத்தை உருவாக்குகிறோம் என்று சொல்கிறீர்களே அந்தத் திட்டம் என்ன என்று கேட்டால் விளக்கம் கிடைக்கும். அதற்குள்ளே ஏதோ இருக்கிறது, மர்மம் இருக்கிறது, அது என்னவென்று தெரியவில்லை. சந்தேகப்படுகிறார்கள். அப்படி சந்தேகப்படுகிற சூழ்நிலைக்கு வந்து விடக் கூடாது என்று மிகுந்த அக்கறையோடு அவர்கள் கேட்டார்கள். நான் சந்தேகப்படுகிறவர்களுக்கு எந்த விளக்கத்தையும் தெரிவிக்கவில்லை. தெளிவு பெற வேண்டும், விளக்கம் பெற வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்குத் தெரிவிக்கிறேன். எந்தத் திட்டமும் அரசு போடுகிற திட்டங்கள் இந்த அவைக்கோ நாட்டு மக்களுக்கோ மறைத்துவிட்டு செய்ய முடியாது. அப்படி செய்கிற உணர்வும் யாருக்கும் இருக்க முடியாது. ஆகவே தெளிவாக ஒரு கொள்கையை தெரிவித்து இருக்கிறோம். அதன் மீது பல திட்டங்களைப் பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே பேசி முடிந்ததற்குப் பிறகு, உங்களிடத்திலே அறிவிக்கப் படப் போகிறது. இன்றைக்கு ஒரே ஒரு திட்டம் தான் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. மாமல்லபுரத்தில் நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகின்ற அந்த விடுதி, நீண்டகாலமாக நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு வருகிறது. காரணம் அதற்குப் போட்ட முதலீட்டுக்கு லாபம் கிடைப்பதில்லை. காரணம் அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை நம்மாலே செய்துதர முடியவில்லை. வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்கள் தங்குகின்ற அந்த 'இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு' என்று சொல்லப்படுகிற

உலக சுற்றுலாப் பயணிகளுடைய தரத்திற்கு நாம் அதை இன்னும் அபிவிருத்தி செய்ய முடியவில்லை. போட்ட முதலுக்கே லாபம் கிடைக்கவில்லை என்று ஏற்படுகிறபோது, இன்னும் அதிலே கொண்டு போய் முதலீடு செய்வதற்கு அரசு விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் முதன் முறையாக அந்தத் திட்டத்திலே வெளிநாட்டு இந்தியர்களை ஈடுபடுத்த அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதிலே தம்முடைய தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 26 சதவீதம் பங்கையும், வெளி நாட்டு இந்தியர்கள் 25 சதவீதம் பங்கையும், பாக்கி 49 சதவீதம் பங்குகள் பொது மக்களிடத்தில் இருந்தும், அதிலேயும் வெளிநாட்டு இந்தியர்கள் முதலீடு செய்யலாம். ஆகவே அப்படிப்பட்ட ஒரு கூட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்கி அதை உலக சுற்றுலாத் தரத்திற்கு உயர்த்துகின்ற திட்டத்தை மாநில அரசும், முதல்வர் அவர்களும், இன்றைக்கு ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்தத் திட்டம் தான் முதலிலே நிறைவேற்றப்பட இருக்கிறது. அதிலே சந்தேகப்படுகின்றவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டே இருக்கட்டும். ஆனால் விளக்கம் பெற வேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்கு இந்த விளக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு மத்திய அரசினிடத்திலே அனுமதி வாங்கினார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மத்திய அரசிடத்திலே அனுமதி மாத்திரம் அல்ல, அவர்களுடைய பாராட்டையும் பெற்றுக் கொண்டு இருக்கிறது தமிழக அரசு, இந்தத் திட்டத்திற்காக என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, அதற்குப் பிறகு வனத்துறையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதிலே ஹேமச்சந்திரன் அவர்கள், அவர்கள் என்றைக்குமே அக்கறைப்படுகின்ற அந்த ரப்பர் தோட்டத் தொழில் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே நோய் வாய்ப்பட்ட ஒரு தொழிலாளியை எடுத்துச் செல்வதற்கு அதிகாரிகள் முன் வரவில்லை என்று அந்தக் குறையை அவர்கள் தெரிவித்த நேரத்தில். உடனடியாக அதை விசாரிக்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பித்து, விசாரித்து, அந்த விசாரணையினுடைய முடிவை அவர்களுக்கும் தெரிவித்தோம். ஆனால் முடிவைத் தெரிவித்ததாக ஒத்துக்கொண்ட மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள், அந்த முடிவிலே என்ன தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்பதை, அவசரத்தின் காரணமாகவோ என்னவோ, பாதியை விட்டு விட்டார்கள். அங்கே அந்த நோயாளியை எடுத்துச் செல்வதற்காக பயன் படுத்துகின்ற அந்த வாகனம் பழுது பட்டு விட்டது, அந்த ஒரு பகுதி உண்மை. ஆனால் அதற்கு அடுத்தபடியாக அந்த வனத்துறை ரேஞ்சர் வைத்துக் கொண்டு இருந்த அந்த வாகனத்தைப் பயன்படுத்தி அவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். கொஞ்சம் தாமதம் ஆனது. அவ்வளவுதான், ஆகவே





அந்தப் பகுதியை அவர்கள் மறந்து விட்டார்கள், அல்லது அவசரத்திலே சொல்ல விட்டு விட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஆனாலும் இலங்கைத் தொழிலாளர்கள், இலங்கையிலிருந்து வந்த தமிழ் மக்கள் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்று அதையும் ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்றுவதற்கு முயலுகின்ற அந்தச் செயலை அருள் கூர்ந்து விட்டுவிட வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு இங்கே வந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல, அங்கேயே இருப்பவர்களுக்கு, அங்கே இருப்பவர்களுக்காக பாடுபடுகிறவர்களுக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி எவ்வளவு உதவிகளைச் செய்து கொண்டு இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தெரிவித்த அந்தக் குறையை உடனடியாக விசாரித்தோம். அதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெரிந்துக் கொண்டோம், அதை உங்களுக்கு தெரிவித்து இருக்கிறோம். ஆகவே எந்த நேரத்திலே தவறுகள் நிகழ்ந்தாலும், அதை உடனடியாக ஏற்று, விசாரிப்பதற்கு, தவறு நிகழ்ந்தால், திருத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சின்கோனா துறையைப் பற்றி ஹேமச்சந்திரன் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்களும் பேசினார்கள். கல்லன் அவர்கள் பேசத் தொடங்கிய உடனேயே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், நம்முடைய யசோதா அம்மையார் அவர்கள், பாருங்கள், எங்களுடைய உறுப்பினர் தான் இந்த சின்கோனா துறையைப் பற்றியே பேசினார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். சின்கோனாவைப் பற்றி மறக்காமல், அதற்கு என்றே இருக்கிற மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது, அம்மையார் அவர்கள் கேட்கவில்லை போல் இருக்கிறது. அதையும் நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரமணி அவர்கள் இங்கே பேசவில்லையானாலும், தனியாக அதற்காகவே வாதாடிக் கொண்டு இருப்பவர். நான் அவர்களிடத்திலே அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் துறை என்பது, ஒரு நீண்ட காலமாக வயதான துறை என்ற காரணத்தாலேயே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டு இருந்த துறையை இன்றைக்கு வாழ வைத்துக் கொண்டு இருக்கிறோம். நாம் தேவையான எல்லா வசதிகளையும் அவர்களுக்கு செய்து விட்டோம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. நான் கூட உங்களைக் கேட்கிறேன். இன்றைக்கு, உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்று நாம் முழக்கமிடுகிறோமே அந்த உலகத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்காக எடுக்கிற முயற்சியில் எல்லா தொழிலாளர்களுக்

(இரவு 7-30)

கும் நாம் தலைமை ஏற்றுக் கொண்டு சங்கம் வைத்துக் கொண்டிருக்கிறோமே, அந்த எல்லாத் தொழிலாளர்களும் ஒரே மாதிரியான சம்பளத்தையா பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலே ஒரு தொழிலாளி மாதம் தொடங்குகிற சம்பளமே ஆயிரமாக இல்லையா ? இன்னொரு தொழிற்சாலையிலே 500 ஆக இல்லையா ? இன்னொரு தொழிற்சாலையிலே 400 ஆக இல்லையா ? இதற்கெல்லாம் நாம் தானே பொறுப்பேற்றுக் கொண்டு, சங்கம் நடத்தி தலைமை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். நீங்கள் எல்லா வருமானத்தையும் ஒன்றாகக் கொண்டு வந்து, ஒரே கூறாக ஒரே இடத்தில் சேருங்கள். நாமெல்லாம், 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்தொகுத் தவற்றுள்ளெல்லாம் தலை' என்று திருவள்ளுவர் சொல்லி இருக்கிறார். ஆகவே என்ன கிடைக்கிறதோ எல்லாவற்றையும் ஒரு சட்டியிலே போட்டு, நாம் ஆளுக்கு கொஞ்சமாகப் பகிர்ந்து கொள்வோம் என்று சொல்ல முடியுமா ? சொன்னால் நடக்குமா? அப்படிச் சொன்னால் நாம் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்க முடியுமா ? அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். நான் வாதத்திற்காக வைக்கிறேனே தவிர யாருடைய மனதையும் புண் படுத்த வேண்டுமென்பதற்காக சொல்லவில்லை.

தேயிலைத் தோட்டக் கழகத்திலே என்ன சம்பளம் தரப்படுகிறது ? நீங்கள் அதையும் பார்க்க வேண்டும். அதைப் போல இந்த சின்கோனாத் துறையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு அரசுநிர்ணயித்து இருக்கிற அந்தச்சம்பளத்தை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை விட கொஞ்சம் அதிகமாகக் கூட கொடுக்கிறோம். ஆனால் அது போதுமா என்றால் போதாது. அவர்களுக்கு இன்னும் அதிகப்படுத்த வேண்டும். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிற துறையை இன்றைக்கு உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே மிக விரைவிலே, அங்கே கூட இன்றைக்கு தொழிலாளர்களுடைய தேவை குறைந்து விட்டது. ஆகவே இந்த நாட்டிலே தேவைப் படுகின்ற டீ, அந்தத் தேயிலை வளர்ச்சிக்கு அந்தப் பகுதியைப் பயன்படுத்த முடியுமா? தேயிலைத் தோட்டமாக மாற்ற முடியுமா? இல்லை என்றால் இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமா என்கிற உணர்வோடு அந்தத் திட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் மேலாக நம்முடைய உறுப்பினர்கள், அவர்களுக்கு போனஸ் கொடுக்க முடியவில்லை சட்டப்படி, ஆகவே, நீங்கள் அரசுத் துறை என்கின்ற காரணத்தினாலே "எக்ஸ்கிரேஷியா" என்கிற கருணைத் தொகை-யாகக் கொடுக்கக் கூடாதா? என்று கேட்கிறார்கள். நான் சட்டியில் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். சட்டியில் இருந்தால் தானே நான் அகப்பையை உள்ளே விட முடியும். ஆகவே சட்டியில் இருக்கிறதா என்று பார்த்து, அகப்பையை விட்டு, அகப்பையிலே





என்ன கிடைக்கிறதோ எடுத்து நான் தர முயற்சிக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தொழிலாளர்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்மைகளைச் செய்யும் ; செய்வார்கள் என்கிற அந்த உணர்வினை நீங்கள் அருள் கூர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு அறநிலையத் துறை. இங்கே விவாதத்திலே கூட அநேகமாக மற்றத் துறைகளை எல்லாம் பின்னுக்குத் தள்ளப் பட்டு, அறநிலையத்துறை விவாதம்தான் முன்னுக்கு வந்து நிற்கிறது. காரணம் அறநிலையத்துறை இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே மற்றவர்களுடைய கண்களிலே பளிச்சென்று படுகிறது. அதனாலேதான் நம்முடைய கன்னியாகுமரியிலிருந்து வந்திருக்கின்ற அருமை நண்பர் மாண்புமிகு பாலச்சந்திரன அவர்கள்கூட துணிந்து, அரசே ஆலயங்களை விட்டு வெளியேறு என்கிற கோஷத்தை எழுப்பினார்கள். இதை ஒரு 7, 8 ஆண்டு காலத்திற்கு முன்னாலே யாராவது வைக்க முடிந்ததா? அல்லது வைக்க வேண்டுமென்கிற உணர்வு வந்ததா? ஆக, இந்த ஆலயங்களைப் பற்றி இவர்களுக்கெல்லாம் கவலை யாவது ஏற்பட்டதா? இன்றைக்கு ஆலயத்து வளாகத்திற்குள்ளே பயிற்சிகள் நடைபெறுகிறது, எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்று மாண்புமிகு ஹேமச்சந்திரன் கேட்கிறார். அவரும் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்து வருகிற உறுப்பினர்தான். ஆனால் அதே மாவட்டத்திலிருந்து வருகின்ற நம்முடைய பாலச்சந்திரன் அவர்கள் மிகுந்த அன்போடு, மிகுந்த உணர்வோடு, புரட்சித் தலைவர் ஆட்சி என்று அவர்கள் உள்ளத்திலே இருந்து வெளிவருகின்ற வார்த்தை என்றே நான் எடுத்துக் கொள்கிறேன். இதை பாராட்டிக் கொண்டே, அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்றார். அரசு ஆலயத்திற்குள்ளே இன்றைக்கு நுழைந்து கொண்டிருக்கவில்லை. ஆலயத்திற்குள்ளே இருப்பவர்கள் அறங்காவலர் குழுவினர் தான். அரசு அதிகாரிகள் அவர்களுக்கு மேலே இருக்கிறார்களே தவிர நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் தான். அரசு அதிகாரிகள், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது கோட்டாட்சித் தலைவரோ, மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியோ அங்கே வந்து அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கவில்லை. நியமிக்கப்பட்ட அறங்காவலர் குழுவினர் தான் அந்த ஆலயங்களுடைய நிருவாகத்தை கவனிக்கிறார்கள். மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்கள், நீண்ட காலத்திற்கு முன்னாலே, வெள்ளைக்காரன் காலத்திலே எடுத்துக் கொண்டார்கள். இன்றைக்கும் அது இருக்க வேண்டுமென்கிற அவசியம் என்ன? ஆகவே, அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்கிறார்கள்

அரசுக்கு ஒன்றும் அவ்வளவு அக்கறை இல்லை ஆலயத்திற்குள் நுழைந்து கொண்டு இருக்க வேண்டும் என்று. இதற்கு முன்னால் இந்த அறநிலையத் துறை விவாதத்தை கூட சட்டமன்றத்தில் கொண்டு வந்து அதை விவாதிக்க வைத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று முன்னால் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் கூட ஒரு முறை பெருமையாகச் சொன்னார்கள். அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருக்கிற காரணத்தால்தான் சட்டமன்றத்தில் விவாதிக்கப் படுகிறது. அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லையானால் இது கேட்பார் அற்ற, நாதி அற்ற யாரும் பார்ப்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலையில் எங்கேயோ ஒதுக்கப்பட்டு இருக்கும் என்பதை அருள் கூர்ந்து தெரிந்து கொள்ளுங்கள். ஏன் மற்றவர்களுக்கு எல்லாம் இல்லை என்று வேறு சில மதங்களைக் குறிப்பிட்டு அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், இஸ்லாமிய மதத்திற்கும் சட்டத்தின்படி கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அவர்களுடைய வக்ஃப் போர்டு என்ற ஒரு நிறுவனமும் அரசால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் கிருத்துவர்கள் நடத்துகின்ற அந்த மற்ற ஆலயங்களில் ஏன் வரவில்லை என்றால் அப்படி வருகின்ற ஒரு சூழ்நிலையை அந்த மக்கள் கேட்டுப் பெற வேண்டுமே தவிர மற்றவர்கள் அதைப்பற்றி கவலைப்படக் கூடாது. அப்படிப்பட்ட உணர்வும் அந்த மக்களிடத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தவறு செய்கிறவர்களை நாம் தட்டிக் கேட்க வேண்டும் என்பதற்காக அரசு அறநிலையத் துறையில் நுழைய வேண்டும் என்று கடந்த ஒரு 50, 60 ஆண்டு வரலாற்றில் பல அனுபவங்களின் மூலம் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் சென்ற முறைகூட விவாதத்தில் குறிப்பிட்டேன், டாக்டர் சர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் நம்முடைய இந்த ஆலயங்களுடைய நிர்வாகத்தைப் பற்றி ஆராய்வதற்காக மத்திய அரசு குழுவாக நியமித்து அவர்கள் நாடு முழுவதும் சுற்றி பல்வேறு கருத்துக்களை திரட்டி தெரிவித்த கருத்துக்களை கூட நான இங்கே படித்துக் காட்டினேன். யார் மீதும் நமக்கு கோபம் இல்லை, யார் மீதும் நமக்கு குற்றம் சாட்ட வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஆனால் இன்றைக்கு அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருக்கிறது என்றால் 85 சதவீதம் அல்லது 90 சதவீதம் இங்கே வாழ்கிற மக்கள் இந்து மக்கள் என்று இருக்கிற காரணத்தாலே மிக பெரும்பான்மையான மக்கள் தொடர்பு கொண்டு இருக்கிற ஒரு சமய நிறுவனம், ஒரு ஆன்மிக துறையோடு தொடர்பு கொண்டு இருக்கிற நிறுவனம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் வருகிறதே தவிர வேறு அல்ல. எப்போதுமே எப்படி கவனிக்கப் படும் என்றால் மலையின் உச்சியில் இருப்பவனைத்தான் மற்றவர்களால் கவனிக்கப்படுவான். எங்கேயோ பள்ளத்தில் விழுந்து கிடப்பவர்களை யாரும் பார்க்க மாட்டார்கள். குகைக்குள்ளே இருப்பவர்களை யாரும் கவனிக்க மாட்டார்கள். பள்ளத்தில் விழுந்து கிடந்த அறநிலையத் துறையை,



இருட்டு குகைக்குள் இருந்த அறநிலையத் துறையை மலையின் சிகரத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கொண்டு வந்ததன் காரணத்தால் தான் இங்கே அருமை நண்பர் மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்கள்கூட ஆலயத்தை விட்டு அரசே வெளியேறு என்ற அந்த கோஷத்தை எழுப்புகின்ற அந்த ஆற்றலை பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்யைச் சார்ந்த திரு. ராஜாராமன் அவர்கள் கூட நீங்கள் விளம்பரத்திற்காகத்தான் இதை எல்லாம் செய்கிறீர்கள் என்று சொல்லுகின்ற உணர்வை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகின்ற போது ஆலயத்திற்கு கார் வாங்குகிறீர்கள், ஜீப் வாங்குகிறீர்கள், ஆண்டவர் அதிலேயா பவனி வருகிறார் என்று கேட்டார். அவர் நாத்திகரா; ஆத்திகரா; என்பதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி யசோதா அம்மையார் அவர்கள் தான் எனக்குத் தெரிவிக்க வேண்டும். இப்படி கேட்டுத் தானே இந்து மதம் இந்த நிலைக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு திரு. பாலச்சந்திரன் அவர்களே, அதை கேட்ட போது அல்லவா உங்களுக்கு கொஞ்சம் உணர்ச்சி வந்து இருக்க வேண்டும். ஆண்டவன் காரில் போகிறார், ஜீப்பில் போகிறார் என்றா அரசு சொன்னது. ஆண்டவனை இப்படி விமர்சிக்கின்ற உணர்வை ஒரு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரே பேசுகிறாரே அவரும் பழுத்த ஆத்திகர் தான். அவர் பேசுகிற போது அந்த உணர்வுகள் இன்றைக்கு இந்த நாட்டிலே மங்கப் பட்டு, மாசுபடுத்தப்பட்டு போனதால் அல்லவா இந்த பிரச்சினையே வந்திருக்கிறது. தாயும் பெண் தான், தங்கையும் பெண் தான், மனைவியும் பெண் தான். ஆனால் அந்த 3 பெண்களையும் நிறுத்தினால் இவள் தாய், இவள் தங்கை, இவள் மனைவி என்று இந்த அறிவூட்டி சொல்லுகின்ற உணர்வு இருக்கிறதே அதை தானே மனிதன் பெற்று இருக்கிறான். அதை மாற்றிவிட்டால் மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வேறு பாடு. என்ன அடையாளம் இருக்கிறது? 3 பேரும் பெண்கள் தானே. பெற்றவள் என்று தெரிகிறது, கூட பிறந்தவள் என்று தெரிகிறது, தனக்கு தாரமாக வந்தவள் என்று தெரிவதே இந்த அறிவை சுட்டிக்காட்டித் தானே. ஆகவே, கோவிலுக்குள் இருக்கின்ற சிலைகள் வணங்குவதற்காக வைக்கப்பட்டு இருக்கிறது என்ற உணர்வு இன்றைக்கு இல்லாமல் செய்த காரணத் தால் தானே கோவிலில் இருக்கின்ற சிலைகளையும் திருடலாம் என்று மிருகமாக மாறிய மனிதன் முயற்சித்துக் கொண்டு இருக் கிறான்.

(இரவு 7–40)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராசாராமன் அவர்கள் ஆண் டவன் எல்லாம் ஜீப்பிலே செல்கிறார்களா, காரிலே செல் கிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு சொன்னதா? அறநிலையத் துறை சொன்னதா? நான் அவரைக் கேட் கிறேன். ஏன் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கார்களே

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 ஏப்ரல் 25

வாங்கப்படவில்லையா ? அன்றைக்கு கார்களே பயன்படுத்தப் படவில்லையா ஆலயத்தின் நிர்வாகத்திற்கு. இன்றைக்கு அந்த ஆலயங்களில் வணங்க வருகின்ற மற்ற பிரமுகர்களுக்கு, மற்றவர்களுக்கு மற்றவர்கள் வசதிக்காக, தேவைக்காக சில வாகனங்கள் வாங்கினால், அந்த வாகனங்கள் துஷ்பிரயோகப்படுத்தப் படுகின்றன என்று சொல்லுங்கள், புரிந்து கொள்ள முடியும், தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சுட்டிக்காட்டுங்கள், குறையிருந்தால், அதைத் திருத்த முடியும். எதையோ மனதில் வைத்துக் கொண்டு, தயவு செய்து, 'அவலை நினைத்து உரலை இடிக்க' நினைக்காதீர்கள். அதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்களுடைய, அரசே ஆலயத்தைவிட்டு வெளியேறு என்ற ஒரு குரலுக்கு, கேட்க விரும்புவது, இங்கே அநேகமாக காங்கிரஸ் கட்சி சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இந்த பரம்பரை அறங்காவலர்களை நீக்குங்கள் என்று இங்கே கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? இதற்கு உங்களுடைய பதில் என்ன ? இன்றைக்கு பரம்பரை அறங்காவலர் என்று யார் யார் இருக்கிறார்கள் ? உங்களுக்கு ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன். யாரையும் குற்றம் சுமத்துவதற்காக அல்ல. மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்கள் மிகுந்த மன வருத்தப்பட்டு எங்களை வன்முறையாளர்கள் என்கிறார்கள், வேறு ஏதோ குற்றம் சாட்டுகிறார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. உங்களுடைய உணர்வை நாங்கள் மதிக்கிறோம். உங்களுடைய பணி எதற்காக இன்றைக்கு இருக்கிறது என்று அருள்கூர்ந்து இந்த நாட்டுக்கு விளக்குங்கள். உங்களுடைய செயல் முறைகளினால் ஏற்படுகின்ற பலனை அருள்கூர்ந்து சொல்லுங்கள். இந்த நாட்டு மக்களை ஒற்றுமைப் படுத்துவதற்கு ஒரு இயக்கமா ? மக்களை பிளவு படுத்துகின்ற ஒரு இயக்கமா ? அருள்கூர்ந்து சொல்லுங்கள். இன்றைக்கு இந்த நாட்டில் மத பேதங்கள், பிளவுகளாக மாறி, அவர்களுக்குள்ளே மோதல்கள் என்று உருவெடுத்து, அவர்கள் ஒருவரையொருவர் வெட்டி சாய்த்துக் கொண்டு ரத்தத்தை சிந்துவதற்கு இன்றைக்கு இயக்கங்கள் வேண்டுமா? அதை அருள்கூர்ந்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

நீங்கள் ஈடுபட்டிருக்கின்ற எந்த இலட்சியத்தையும் நிறைவேற்ற முயலுங்கள். நாங்கள் குறுக்கே நிற்கவில்லை ; அரசும் குறுக்கே நிற்காது ; அற நிலையத்துறையும் குறுக்கே நிற்காது. ஆனால் இன்றைக்கு மிகுந்த வலிவோடு, மிகுந்த செல்வாக்கோடு இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த மாவட்டத்தில், நீங்கள் இன்றைக்கு ஆன்மீகத்திற்காக ஒரு சிறிய துரும்பையாவது எடுத்துப் போட்டீர்களா ?



1986 ஏப்ரல் 25] [திரு. ஆர். எம். வீரப்பன்]

100 ஆண்டுகளாக, இந்தியாவிலேயே மிகுந்த புகழ்பெற்ற ஆலயம், கன்னியாகுமரியிலிருக்கின்ற அந்த தாணுமாலயர், ஆலயம், சுசீந்தரம் ஆலயம், 100 ஆண்டுகளுக்கு முன்னாலே அதற்குக் குட முழுக்கு நடைபெற்றது. திருவிதாங்கூர் மன்னரால் நடத்தப்பட்டது. 100 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த ஆட்சிக் காலத்தில், குட முழுக்கு நடைபெற்றது. அதற்குக் கிடைத்த சிறப்புகள் என்ன ? அதற்கு நீங்கள் செய்த முயற்சிகள் என்ன ? செய்த முயற்சிக்கு என்ன துணை இருந்தீர்கள் ?

நான் சாதாரண கிராமப் பகுதிக்குச் சென்றால்கூட, அங்குள்ள சிறிய கோவிலில் குட முழுக்கு நடைபெற்றால், 10,000 முதல் 50,000 வரையில் மக்கள் வருகின்ற காட்சியைப் பார்க்கிறேன். ஆனால் நீங்கள் இந்து மதத்திற்காகவே படையை நடத்திக் கொண்டிருக்கிற, களத்தை நடத்திக் கொண்டிருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்தில், புகழ்பெற்ற தாணுமாலயர் ஆலயத்தில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசு மிகுந்த முயற்சிகள் எடுத்து, அந்தத் திருப்பணிகளை நடத்தி முடித்து —மாண்புமிகு இராசாராமன் சொன்னது போல் விளம்பரத்திற்கு வேண்டுமானால் அவர்கள் நடத்திக் கொள்ளட்டும் —அதற்காக நடத்தப்படுகின்ற அந்தக் குடமுழுக்கு விழாவில், அங்கே வாழ்கின்ற, நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள் யாருக்காக பாடுபடுகிறீர்கள் என்று சொல்கிறீர்களோ, அந்த மக்கள் காட்டிய அக்கறை என்ன? நீங்கள் யாரையோ வீழ்த்த வேண்டும், அல்லது யாரையோ ஒழிக்க வேண்டும் என்று முயற்சிக்கிறீர்களே அவர்கள் அந்தந்த சமுதாயக் காரியங்களை செய்கிறார்களா ? அதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ? ஏதாவது சமுதாயத்தில் முயற்சிகள் எடுத்தால், அதற்குத் தடையாக இருக்கத்தான் ஆட்கள் இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்காக வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவு திட்டத்திற்கு, அந்தக் குழந்தைகள் வந்து சாப்பிடுகின்ற அளவிற்கு, கட்டிடங்களைக் கட்டித் தந்து, அந்தக் கட்டிடங்களை எல்லாம் ஆலயத்தின் பெயராலே கட்டித் தந்து, வீட்டில் தாயார் அந்தக் குழந்தையை எங்கே போய்விட்டு வந்தாய் என்றால், நான் கற்பகாம்பாள் மதிய உணவுக் கூடத்தில் மதிய உணவு சாப்பிட்டு வருகிறேன் என்று அந்த பாலகன் சொல்லுகின்ற நிலையை உருவாக்கி ஆலய நிதியிலிருந்து 60 இலட்சத்தைத் தந்து, 150 சத்துணவுக் கூடங்களை, நிரந்தர நினைவுச் சின்னங்களை அமைப்பதற்காக அறநிலையத் துறை முயன்றால், வழக்கு மன்றத்திற்குப் போய் நாங்கள் வழக்கைப் போடுவோம் என்று சொல்லுகிற இந்த வளர்ச்சி, இந்த செயல் முறை ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே, சமுதாயத்தினுடைய துன்பங்கள்

ஏழை எளியவர்களுக்குத் தொல்லைகள் எங்கே இருக்கிறதோ, அங்கே எல்லாம் தேடி, ஓடிப் போய் கருணை உள்ளத்தினாலே காரியம் ஆற்றுகிறோம் என்று சொல்கிற பிரிவினர் இன்னொரு பக்கம். யார் பக்கத்திலே மக்கள் போய்ச் சேருவார்கள் ? அருள்கூர்ந்து —நீங்கள் யாருக்காகவோ வாதாடுகிறோம், யாருக்காகவோ போராடுகிறோம் எதையோ நிலைநிறுத்தப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறீர்களே, —நான் கேட்கிறேன். சிறு துரும்பைக் கூட வளர்ச்சிப் பணிகளுக்கு, சமுதாயப் பணிகளுக்கு, ஆலயத்தை நிலைநிறுத்துகிற பணிகளுக்கு, காப்பாற்றுகிற பணிகளுக்கு செய்யாமல், நீங்கள் எப்படி இந்த மதத்தைப் பாதுகாக்கப் போகிறீர்கள் ? ரத்தக் களறியை ஏற்படுத்துவதற்கு வேண்டுமானால் இந்த ஆவேசமும், ஆக்ரோஷமும், இந்த கோபதாபங்களும், அதற்குப் பயன்படுமே தவிர, வேறு எப்படி பயன்பட முடியும்?

இங்கே மதுரையிலே உள்ள ஒரு ஆதீனகர்த்தரைப் பற்றி உரையாடல் வந்தது. விவாதம் வந்தது. மிகுந்த அக்கறையோடு நம்முடைய ரகுமான்கான் அவர்கள் இடையிலே குறுக்கிட்டு, மாணிக்கவாசகருடைய உதாரணத்தையே எடுத்துச்சொன்னார். அவர் ஒன்றை மறந்துவிட்டார். மாணிக்கவாசகர் முதலமைச்சராக இருந்தவர் தான். முதலமைச்சராக இருந்து கொண்டு, அந்த ராஜ போகபாத்தியங்களை அனுபவித்துக் கொண்டு, அந்த மன்னனுடைய ஆதரவை வைத்துக் கொண்டு, அந்தச் செல்வச் செழிப்பிலே அவர் திளைத்துக் கொண்டு, ஆன்மீகப் பணிக்கு வரவில்லை. முதலமைச்சர் பதவியை உதறி எறிந்து விட்டு, தன்னை ஒரு சாதாரணத்தொண்டனாக மாற்றிக் கொண்டு, அவர் ஆன்மீகப் பணிக்கு வந்தார்.

இன்றைக்கு என்ன நடக்கிறது ? (குறுக்கீடு). திருஞானசம்பந்தர் உருவாக்கிய மடம் என்ற பெருமையைப் பேசிக்கொண்டு அந்த மடத்திலே இருக்கின்ற பொருள்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு, எந்த சட்டத்திற்கும் கட்டுப்படாமல் (குறுக்கீடு) பல்வேறு உணர்வுகளை அந்த மத வளர்ச்சிக்காக, அந்த மடத்தினுடைய வளர்ச்சிக்காக, (குறுக்கீடு) There is no point of order அவர் ஏதாவது சந்தேகம் கேட்க வேண்டுமானால், கடைசியில் கேட்கட்டும். (குறுக்கீடு) எந்த சந்தேகமும் இறுதியிலே கேளுங்கள். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) நான் எதற்கும் கவலைப்படவில்லை. எதற்காகவும் பயப்படவில்லை. தயவுசெய்து இறுதியிலே சந்தேகத்தைக் கேளுங்கள்

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர், புரசீஜர் விஷயமாக..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறுதியில் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் "ரிப்ளை" செய்து கொண்டிருக்கும்போது, எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் வரும்?



திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட்டதற்காக வருந்துகிறேன். தயவுசெய்து அவர் தப்பாகக் கருதவேண்டாம். தாங்கள் சொல்கிற தீர்ப்பை ஏற்றுக் கொண்டு அமர்கிறேன். நான் கேட்பது, திரும்பவும் கேட்கிறேன்—அவர் பேசட்டும், தாராளமாகப் பேசட்டும், கடைசியில் கேள்வி கேட்பதற்கு நீங்கள் அனுமதி கொடுங்கள். நான் பொறுத்திருந்தே கேட்கிறேன். ஆனால், பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பிரச்சினைக்கு என்ன காரணம் என்றால் நீங்கள் சொன்னால், நான் ஏற்றுக் கொள்கிறேன். சபையில் இல்லாத ஒருவரைப் பற்றி தாராளமாகப் பேசலாம் என்று நீங்கள் அனுமதி கொடுத்தால் அந்த உரிமை எல்லா உறுப்பினர்களுக்கும் வேண்டும். தீர்ப்புத் தேவை.

(இரவு 7-50)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சபையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசக்கூடாது என்கின்ற அதை வைத்துக் கொண்டே, பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு பொதுமக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கின்ற பல பேர், பொதுமக்களுடைய சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு, பொதுமக்களுடைய சொத்துக்களுக்கு பிரதிநிதியாக, தலைவராக, விளங்கிக் கொண்டு, அவர்கள் நடந்து கொள்கிற முறையை பற்றி பத்திரிக்கைகளிலே வருகிறபோது, மக்கள் பிரதிநிதிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?— சட்டமன்றத்திலே வருகிற காரணத்தினாலே மாத்திரம் மக்கள் பிரதிநிதிகள் அல்ல.— இன்றைக்கு விவாதித்துக் கொண்டிருக்கிற அறநிலையத்துறையின் சார்பிலே பணியாற்றுகின்ற ஒவ்வொருவரும் மக்களுடைய பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்கிற நேரத்தில், அவர்களுடைய செயலைப் பற்றி நான் இங்கே பேசவில்லை : அவலது தனிப்பட்டவர் செயலில் நடைபெறுகிற குற்றங்களை நான் எடுத்துச் சொல்லவில்லை, குற்றச்சாட்டையும் சொல்லவில்லை ஆனால், ஒரு மடத்திற்கு, திருஞான சம்பந்தர் உருவாக்கிய ஒரு மடத்திற்கு, தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒருவர். இங்கே மாணிக்கவாசகரைப் பற்றிச் சுட்டிக்காட்டினீர்கள் அதே மதுரையிலேதான் அதே பாண்டிய மன்னனிடத்திலே தான் அவர் முதலமைச்சராக இருந்து அதையெல்லாம் அனுபவித்துக்கொண்டு அவர் ஆன்மீகத்துக்கு வரவில்லை. அதைத் துறந்துவிட்டு ஆண்டியாக வந்தார். ஆனால் இன்றைக்கு ஆண்டிகள் எல்லாம் மடத்தின் சொத்துக்களை அனுபவித்துக் கொண்டு அரசியலுக்கு வருகிறார்களே அதைத்தான் கேட்கிறேன், அதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அரசியலுக்கு வாருங்கள், எந்தலட்சியத்திற்காகவும் வாதாடுங்கள், எந்தத் தமிழனுக்காகவும் வாதாடுங்கள் இலங்கைத்

தமிழன் மட்டுமல்ல, உலகெங்கும் இருக்கிற எல்லாத் தமிழனுக்காகவும் வாதாடுங்கள், ஆனால் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற அறநிலையத் துறை ஆதிக்கத்திற்கு உட்பட்ட, அதிகாரத்திற்குட்பட்ட திருஞானசம்பந்தருடைய அந்த மடத்தினுடைய பொறுப்புக்களை உதறி எறிந்துவிட்டு வீரனாக மன்றத்திற்கு வரவேண்டும், பொதுமக்களிடத்திலே நிற்கவேண்டும். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த மடத்தினுடைய தலைவர் என்ற முறையில் மடாதிபதி என்கிற பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்திலே அறநிலையத் துறைச் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டுமா வேண்டாமா என்பதை..................

**திரு. அ. ரகுமான்கான் :** குற்றச்சாட்டுப் பேசுகிறார்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்பெசிஃபிக்காச் சொல்லவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கின்றார் என்று..............

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** உண்மையைத் தான் சொல்கிறேன், அதிலே என்ன குற்றச்சாட்டு இருக்கிறது. (குறுக்கீடு) தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்கிறேன். நான் அறநிலையத் துறைபற்றிய மானியக் கோரிக்கைகளை இந்த அவையிலே வைத்திருக்கிறேன். அது இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்ற கோஷமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்குப் பதிலை அளித்துக்கொண்டிருக்கிறபோது, அரசே ஆலயத்தினை விட்டு வெளியேறு, எங்களிடத்திலே கொடுத்து விடு என்று கேட்கிறார்கள், அவரே சொன்னார் யாரிடத்திலே கொடுக்கச் சொல்கிறார் என்று அவர் கேட்டதாகச் சொல்கிறார். இன்றைக்கு அறநிலையத் துறைக்கு உள்பட்ட ஒரு மடம் அதனுடைன அதிபதி அந்தப் பொறுப்புக்களிலிருந்து நழுவுகிறார். கணக்குகளை முறையாகத் தருவதில்லை. அங்கே கணக்கு கேட்கப்போகிற அதிகாரிகளை அவர் ஒழித்து விரட்டுகிறார். அவர் கண்டிக்கிறார், கட்டுப்பட மறுக்கிறார். நான் நடந்துக்கொண்டிருக்கிற செய்திகளைத்தான் இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறேன். இதிலே குற்றச்சாட்டு எங்கே இருக்கிறது. அவர் எந்தக் கருத்தையும் சொல்லட்டும் நான் அதற்குள்ளே நுழைய வில்லை. அவர் எந்தக் கருத்தையும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது, நான் அதையும் மறுக்க வில்லை. ஆனால் அவர் இருக்கிற இடத்திலேயிருந்துகொண்டு எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்ய மறுக்கிறார் என்பது அறநிலையத் துறையின் குற்றச்சாட்டு. அதைத் தவிர நான் எந்தக் குற்றத்தையும் சொல்லவில்லை. நீங்களே சொன்னீர்கள்.





ஏன் மாட்டிக்கொண்டு இப்போது விழிக்கிறீர்கள்? மாணிக்கவாசகரை விவாதத்திற்கு அழைப்பதற்கு உங்களுக்குத் தெரிந்தால் மாணிக்கவாசகர் எப்படிப் போனார் என்று சொல்ல எனக்குத் தெரியாதா. மாணிக்கவாசகர் மாத்திரமா? சேக்கிழார் பெருமானும் முதலமைச்சர்தான். அவர் முதலமைச்சர் பதவியைத் துறந்துவிட்டுத்தான் இந்த நாட்டிற்கு இலக்கியம் படைத்தாரே தவிர முதலமைச்சராக அவர் இருந்து கொண்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு எதையும் செய்யவில்லை.

ஏன்? இங்கே கூட ஏதாவது ஒரு தவறு நடந்து, சரியாகவோ தவறாகவோ அந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினால் நீதி மன்றம் தீர்ப்பு அளித்தால் ஆட்சியை விட்டு வெளியேறு, அரசை விட்டு வெளியேறு, முதலமைச்சரே ராஜிநாமா செய் என்று கேட்கிறோமே. ஆகவே பொதுமக்களோடு தொடர்பு கொண்டிருக்கிற, ஒருவர், பொதுமக்களுடைய பிரதிநிதியாக இருக்கிற ஒருவர் பொதுமக்களுடைய ஆன்மீக வாதிகளுக்கு—இந்து சமய வாதிகளுக்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற சைவ சமயத்தை வளர்க்க வேண்டிய ஒருவர்—அந்த மடத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ஒருவர், இந்தவிதிகளுக்குக் கட்டுப்படாமல் நடந்து கொண்டிருக்கிறார் என்ற தகவலை நான் இந்த மன்றத்திற்கு வைக்கிறேனே தவிர அதிலே என்னதவறு? இங்கே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் பரம்பரை தர்மகர்த்தாக்களை மாற்றுங்கள் என்று சொன்னார்கள். அவரும் பரம்பரை தர்மகர்த்தாதான். மடாதிபதி என்று நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களே என்றுதான் அந்தப் பெயரால் அழைக்கிறேன். நாம் சட்டப்படி அழைக்க வேண்டுமானால் அவர் மடத்தினுடைய பொதுமக்களுடைய சொத்துக்களை துர்விநியோகப் படுத்திக் கொண்டிருக்கிற ஒரு பரம்பரை ஆதினகர்த்தா அல்ல தர்மகர்த்தா. அந்தப் பரம்பரை தர்மகர்த்தா இன்றைக்கு இழைத்துக் கொண்டிருக்கின்ற குற்றங்கள், குறைகள், தவறுகள் என்னென்ன என்பதை எடுத்துச் சொல்வதற்கு இந்த அரசுக்கு, அறநிலையத் துறைக்கு உரிமை இல்லையா? நான் இதை இந்த மன்றத்திலேகூட சொல்லவில்லை என்றால் வேறு எங்கே சென்று சொல்வது ? தெருவிலே நின்றுகொண்டா சொல்ல முடியும் ? நீங்கள்தானே பரம்பரை தர்மகர்த்தாக்களை மாற்றுங்கள் என்று சொல்கிறீர்கள். மாற்றுகின்றபொழுது என்னென்ன சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டாமா?

நான் இன்னொருவரைப் பற்றியும்கூடச் சொல்லப் போகிறேன். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். காரணம், அதிலே அவர்களுக்கு அக்கறை இல்லை. ஆலயங்களுக்கு நன்மை இருக்க வேண்டும்; ஆலயங்கள் வளர வேண்டும்; ஆலயங்கள் செழித்தோங்க வேண்டும் என்பது அவருடைய அக்கறை அல்ல. அவருடைய அக்கறை என்னவென்பது எல்லோருக்குமே தெரியும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 ஏப்ரல் 25

ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் யாருக்காகவோ இவ்வளவு கஷ்டப்பட்டு வக்காலத்து வாங்குகிறார்கள். நான் அவருடைய உணர்வை மதிக்கிறேன். நான் இங்கே யாரையும் குற்றம் சாட்டிச் சொல்லவில்லை. அறநிலையத் துறையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு பரம்பரை தர்மகர்த்தா ஒழுங்கீனமாக நடக்கிறார் என்கின்ற அந்தச் செய்தியை மன்றத்தில் எடுத்து வைக்கிறேன்.

இங்கே நம்முடைய மன்றத்திலே முதலிலே இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர், வழகறிஞர் திரு. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் தொடக்கத்திலேயே அப்படித்தான் தொடங்கினார்கள். இந்த அறநிலையத் துறை என்பது ஊழல் நிறைந்தது. எல்லாத் தவறுகளும் நிகழ்கின்றன என்று, யாரைச் சொல்கிறார்கள் என்று பொறுத்துப் பார்த்தால் இந்தப் பரம்பரை தர்மகர்த்தா என்று ஆரம்பித்தார்கள்.

இன்னொரு செய்தியையும் சொல்ல விரும்புகிறேன். பக்கத்தில் இருக்கின்ற, அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில், பெரியபாளையம், செங்கல்பட்டு மாவட்டம், ஆண்டுக்கு 20 இலட்சம், 30 இலட்சம் வருமானம் வருகிறது என்று சொல்கிறார்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வந்து வணங்குகிறார்கள். பெண்களெல்லாம் போகிறார்கள்; காணிக்கை செலுத்துகிறார்கள். 60 இலட்சம், 50 இலட்சம் என்று சேர்த்து வைத்திருப்பதாகவும், வங்கியிலே போட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால் அதிகாரிகளெல்லாம் சென்றால், அங்கே வருகின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுங்கள் என்று சொன்னால் அந்தப் பரம்பரை தர்மகர்த்தாவாக இருப்பவர் அவர்களை அலட்சியப்படுத்துகிறார்; கேவலப்படுத்துகிறார்; அடிபணிய மறுக்கிறார். அவர்மீது அறநிலையத் துறை எடுத்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று வழக்குமன்றத்திலே மாத்திரம் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ரிட் பெட்டிஷன்களைப்போட்டு ஸ்டே. வாங்கி இருக்கிறார்கள்.

இன்னும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற திருவாவடுதுறை ஆதீனத்தைப்பற்றி இந்த மன்றத்திலே நான் பல ஆண்டுகளாகச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் இன்றைக்கு, எந்தப் பணிக்காக இந்த மடங்கள் அமைக்கப்பட்டனவோ அந்தப் பணியில் ஈடுபடவில்லை. ஆதினகர்த்தா என்ற முறையில் நான் பேசவில்லை.

இன்னொரு பக்கத்தில், பல ஆலயங்களில் உள்ள பரம்பரை தர்மகர்த்தாக்கள் அங்கே ஈ.ஓ வைப் போடுவதைத் தடுத்திருக்கிறார்கள்; ஸ்டே பெட்டிஷன் போட்டு ஸ்டே வாங்கிவிட்டார்கள். எந்தக் கணக்கையும் கேட்க முடியவில்லை; எவ்வளவு



1986 ஏப்ரல் 25] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வசூல் செய்கிறார்கள் என்ற கணக்கும் சரியாக இல்லை. ஆடிட்டிங் ரிப்போர்ட்டிலே, அங்கே நடந்திருக்கின்ற முறைகேடுகள் இவைகளின் மொத்தத் தொகை ஒரு கோடிக்கு மேல் வருகிறது, என்ன விளக்கம் என்று கேட்டால், என்னைக் காரணம் கேட்காதே என்று ஸ்டே வாங்குகிறார்கள்.

பரம்பரை தர்மகர்த்தாக்களை நீக்க வேண்டும் என்று இந்த அவையிலே அத்தனைபேரும் சொல்லுகிறீர்களே, பரம்பரை தர்மகர்த்தாக்கள்—மதுரை ஆதினத்தையும் சேர்த்தே நான் சொல்கிறேன்—அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத்தான் மூன்றாண்டுகளுக்கு முன்னால் இங்கே ஒரு சட்டத் திருத்தத்தையும் நிறைவேற்றினோம். இரண்டு அவைகளிலேயும் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். மத்திய அரசுக்குத் தெரியாமல் அந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றவில்லை. இது பொதுப் பட்டியலில் இருப்பதால் இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று அனுமதியைப் பெற்றுக்கொண்டுதான் நிறைவேற்றினோம். நிறைவேற்றிய பிறகு மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. அதற்கு எந்த விதமான விடிவுகாலமும் வராமல் அங்கேயே இருக்கிறது. இங்கே கூட உறுப்பினர்கள் அதைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பரம்பரை தர்மகர்த்தாக்களை ஒழிக்க வேண்டுமென்று கேட்கிறீர்களே, காரணம், இங்கே அர்ச்சகர்களைப்பற்றிப் பேசுகின்றபொழுது அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொன்னோமே, அதே விதிதான், அதே பிரிவுதான் இவர்களுக்கும் பாதுகாப்பை அளிக்கிறது. ஆகவே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற முயற்சியிலேகூட ஈடுபடாமல், இருக்கின்ற அந்த அதிகாரத்திற்கு உள்ளேயே மாநில அரசு இந்த அதிகாரத்தைப் பெற வேண்டும் என்று சட்டத் திருத்தத்தை அனுப்பினோம். ஆனால் அதற்கு இன்னும் விடிவு கிடைக்கவில்லை. அதனால் கொடுமையாளர்கள் அந்தக் கொடுமைகளை— தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்; விடிவு கிடைக்கவில்லை.

அன்பிற்குரிய நமது மாண்புமிகு கன்னியாகுமரி மாவட்ட உறுப்பினர் அவர்கள் இதிலேயெல்லாம் என்ன அக்கறை காட்டப் போகிறார்கள் என்றுதான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய உணர்வுகளை, உங்களுடைய போக்குகளை அல்லது உங்களுடைய இலட்சியங்களைப் பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை. அதற்கு இது இடமும் அல்ல. ஆனால், அடிப்படையாக ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்து மதம், இந்து மதம் என்று சொல்கிறீர்களே, அந்த இந்து மதத்திற்குள்ளேயே, காப்பாற்ற வேண்டிய ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் இவ்வளவு கொடுமைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்களே இதற்கெல்லாம் விடிவுகாலம் எப்போது எப்படிக் கொண்டு வருவது?

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 ஏப்ரல் 25

(இரவு 8-00)

எல்லாவற்றையும் நாங்கள் தீர்த்துகொள்கிறோம். எங்க
ளிடத்திலே கொடுத்து விடுங்கள் என்று சொன்னால், அதைத்
தான் கேட்கிறேன், டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் எல்
லோரையும் அடையாளம் காட்டியிருக்கிறார், அவர்களுடைய
இலட்சணம் எல்லாம் இப்படியிருக்கிறது. ஆகவே, தயவு
செய்து, அரசே அதிலே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்
என்று. வெள்ளைக்காரனுடைய முடிவு அல்ல; வெள்ளைக்
காரனுக்குப்பிறகு, இந்த நாட்டிலே சுதந்திரம் பெற்ற ஆட்சி
யிலே எடுத்த முடிவுதான். ஆகவே, அருள் கூர்ந்து நீங்கள்.
நமக்கு பிராக்டிக்கலாக நடைமுறைத் திட்டங்கள் தாருங்கள்.
என்றைக்கு வேண்டுமானாலும் அங்கே நிர்வகிப்பவர்கள்,
பொதுமக்களுடைய பிரதிநிதிகள்தான். நாங்கள் அதற்குள்ளே
நுழைய விரும்ப வில்லை. இன்றைக்கும் சொல்கிறேன், எவ்வளவு
சங்கடப்பட்டு கொண்டு, இந்த நாட்டிலே, 40 ஆண்டுகள்,
50 ஆண்டுகள் வேறு அரசியல் காரணங்களுக்காக, எடுக்கப்
பட்ட முயற்சிகளாலே பாதிக்கப்பட்ட இந்தத் துறை, கேட்
பாரற்றுக் கிடந்தது, அலட்சியப்படுத்தப்பட்டு கிடந்தது, கவ
னிப்பாரற்று கிடந்தது, இன்றைக்கு எல்லோருக்கும் கொஞ்
சம் அக்கறை பிறக்கிறது. எங்களை பிட் பெர்சனாகப் போடுங்
கள், எங்களை அறங்காவலராகப் போடுங்கள், நாங்கள்
அங்கே வருகிறோம் என்று எல்லாம் கேட்கின்ற உணர்வு
வளர்க்கப்பட்டிருக்கிறது. இன்னுங்கூட, சொல்லப் போனால்,
நான் பல நேரத்திலே சொல்லியிருக்கிறேன், புரட்சித் தலைவர்
பொறுப்பேற்றுக் கொண்ட பொழுது, சுமார் ரூ. 4 கோடியே
சொச்சம் தான் இங்கே சேமிப்பு நிதியாக இருந்தது. ஆனால்,
இந்த 7 ஆண்டுக்காலத்தில், நீங்கள் எல்லாம், பாராட்டினீர்
களே, அந்த ரூ. 7 கோடி வைப்பு நிதியை இங்கே உருவாக்கிய
தற்குப் பிறகு, இன்றைக்கு இப்பொழுது, சில மாதங்களுக்கு
முன்புவரை நமக்குக் கிடைத்திருக்கிற கணக்கு, 2,523 கோவில்
களில் சேமித்து வைத்திருக்கிற தொகை, ரூ. 27 கோடியே
91 இலட்சத்து 3 ஆயிரத்து 254. (மேசையைத் தட்டும் ஒலி).
அரசு எவ்வளவு பத்திரமாக சேமித்து வைத்திருக்கிறது?
மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்களை, உங்கள் மூலமாகக்
கேட்கிறேன். நீங்கள் எல்லாம் இந்த அரசியலிலே நுழை
யாதிருந்த காலத்திலே எத்தனை கோடி சேர்த்து வைத்தார்
கள்? தயவு செய்து சொல்லுங்கள். வருகிற பணத்தையெல்
லாம் ஆலய நிர்வாகத்திற்குக் கொடுத்து விடுங்கள், அவர்
களை அரசு அலுவலர்களாக மாற்றுங்கள், எல்லாவற்றையும்
அவர்களுக்கு உறுதியாகக் கொடுத்து விடுங்கள் என்று சொன்
னால், எங்கே இருப்பு, கொடுக்க? தயவு செய்து, காட்டுங்கள்.

நாங்கள் ஆலய அலுவலர்களை மறந்துவிடவில்லை. ஆனால்,
அவர்களும் தங்களுடைய பணிகளை மறந்து விடக் கூடாது.
இங்கே, சம்பளத்திற்காக வாதாடுகிற நீங்கள், அவர்கள் பணி
களையும் முறையாகச் செய்ய வேண்டுமென்று கொஞ்சம்



1986 ஏப்ரல் 25] [திரு. ஆர். எம். வீரப்பன்]

புத்தி சொல்லுங்கள். இன்றைக்கு வசூல் செய்யப்படாமல்
இருக்கிற பாக்கிகள் யாராலே என்று கருதுகிறீர்கள்? முடியாதது
வேறு, விளைச்சல் இல்லாமல் கொடுக்க முடியவில்லை. ஆனால்,
முடிந்த இடத்திலே வசூல் செய்யாமல் இருப்பது யாராலே?
இந்த அற நிலையத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் முயற்சி
எடுத்தால் முடியாதா?

மாண்புமிகு திரு. இராசாராமன் அவர்கள் திருப்பணிகளைச்
செய்யுங்கள் என்று உபதேசம் செய்கிறார்கள். நீங்கள் கிராமத்
திலே இருக்கிற கோயில்களுக்குத் திருப்பணி செய்யுங்கள்
என்கிறார். மிகச் சுலபம் உபதேசம் செய்வதற்கு. எங்கே
இருக்கிறது பணம்? தங்கச் சுரங்கமா வெட்டி எடுத்துக் கொண்
டிருக்கிறோம். ஏதோ, சிறுக, சிறுக சேர்த்து, எறும்பு சேர்ப்
பதைப் போல, இந்த ரூ. 27 கோடியைப் பாதுகாத்து வைக்
கிறோம். அது இருப்பதால் அல்லவா, ரூ. 7 கோடி ஒதுக்கி
வைத்து, விளக்கு எரியாத கோவில்களிலே, விளக்கு எரிய
வைக்க முயற்சி எடுக்கிறோம். கோவில்களிலே விளக்கு எரிந்
தால் அல்லவா, அங்கே ஆலயத்திலே அலுவலர்கள் பணியாற்ற
முடியும், அவர்கள் வீட்டிலே விளக்கு எரியும், அடுப்பு எரியும்.
கோவில்களிலே விளக்கு எரியவில்லையானால் ஆலயம் ஏது?
ஆலய நடவடிக்கைகள் ஏது? ஆகவே, முதலிலே கோவில்களிலே
விளக்கை ஏற்றி வைக்கிறோம். அதற்குப் பிறகு ஆலயத்திலே
பணி புரிகின்ற அலுவலர்கள் வீட்டிலே புரட்சித் தலைவர்
விளக்கு ஏற்றி வைப்பார். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்
களுடைய வாழ்க்கைக்கு விளக்கு ஏற்றி வைப்பதைத் தவிர,
வேறு எதுவுமே தெரியாது. அது அற நிலையத் துறையானா
லும் சரி, வேறு எந்தத் துறையானாலும் சரி; ஆலய
அலுவலர்களை, நீங்கள் அரசு அலுவலர்களாக மாற்றி
விடுங்கள் என்றார்கள். அரசு அதைப் பற்றி பரிசீலித்துக்
கொண்டிருக்கிறது. அரசு அலுவலர்களாக மாற்றுவதற்கு
அல்ல. அங்கங்கே பணியாற்றுகின்ற அந்த ஆலய அலுவலர்
களுக்கு ஒரு குறைந்த பட்ச உத்தரவாதம், எவ்வளவு சம்பளம்
கொடுப்பது, ஊதியம் கொடுப்பது, அதைப்பற்றி பரிசீலித்துக்
கொண்டிருக்கிறோம். மிக விரைவிலே, அதற்கென்று ஒரு
குழு நியமித்து எந்த எந்த ஆலயங்களில், எவ்வளவு சம்பளத்தை
உயர்த்த முடியும், எவ்வளவு அகவிலைப்படி உயர்த்தி அளிக்க
முடியும் என்று அவர்களுடைய மனக்குறையை நீக்குகின்ற
வகையில், நாம் இன்றைக்கு அந்த முயற்சியிலே ஈடுபட்டுக்
கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம்
வைத்திருக்கிறது, அறநிலையத் துறை தெரிவித்திருக்கிறது
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆலய அலுவலர்களைக் காப்பாற்றுவதில், புரட்சித் தலைவர்
என்றைக்கும் பின் வாங்கமாட்டார்; யார் காலத்திலேயும்
கவலைப்படாமல் இருந்த ஆலய அலுவலர்களுக்குத்தான், இன்
றைக்கு ரூ. 5 கோடிக்கு ஒரு நிதியை வைத்து, அதிலேயிருந்து
வருகிற வட்டித் தொகையிலே இன்றைக்கு அவர்களுக்குச்
சம்பளத்தை வழங்கியிருக்கிறோம்.

30 இலட்சம் ரூபாயை 300 கிராமச் கோவில்களுக்கு வழங்கியிருக்கிறோம். அதைப்போன்று பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி, அவர்களுடைய சம்பளத்தை மிக விரைவிலே உயர்த்துவதற்கான முயற்சிகளை அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்ற உறுதிமொழியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலய அலுவலர்கள் இறந்தால், உடனடியாக 5,000 ரூபாய் தரப்படுகிறது. அதை 10,000 ரூபாயாக மாற்றுவதற்கான அந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை மாற்றியமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று வனத்துறையின் நிர்வாகத்தை சீரமைப்பதற்காக பல்வேறு திட்டங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. அதைப்போன்று நம்முடைய தேயிலைத் தோட்டக் கழகம், இரப்பர் தோட்டக் கழகம், வனப் விலங்குகள் பாதுகாப்புத் துறை என்ற இந்த மூன்று இடங்களுக்கும் மூன்று தலைமைப் பதவிகளும் சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட்ஸ் என்கின்ற தலைமை வன பாதுகாவலர் பதவி தரத்திற்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பொறுப்பை இரப்பர் தோட்டக் கழகத் தலைவராகவும், தேயிலைத் தோட்டக் கழகத் தலைவராகவும், வனவிலங்குகள் பாதுகாப்புத் துறைக்குத் தலைவராவும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு சென்ற ஆண்டு பல சலுகைகளை வழங்கியிருக்கிறோம். அந்த வியாபாரத்தை ஒட்டி, அதிலே வருகின்ற வருமானத்தை ஒட்டி அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பெற்றது. அதனாலே மிகப் பெரிய வெற்றியை, மிகப் பெரிய பயனை இன்றைக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு அரசு அலுவலர்களுக்குத் தருகின்ற அகவிலைப்படியை அவர்களுக்கும் வழங்குவதற்கும், ஒரு நிலையான ஊதியத்தை அவர்களுக்கும் வழங்குவதற்கும், பல்வேறு தரங்களில் இருக்கிற அந்த ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்கும், ஒரு குழு அமைக்கப்பட்டு, மூன்று மாத காலத்திற்குள் அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்கு உத்தரவிடப்படும் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் யாரையும் குற்றஞ்சாட்டிச் சொல்வதாக இல்லை. இந்த அறநிலையத் துறையினுடைய அதிகாரத்திற்குட்பட்ட பரம்பரை அறங்காவலர் சிலருடைய பெயர்களை இந்த மன்றத்திலே சுட்டிக் காட்டியிருக்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு நீங்கள் இந்த மானியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது மாணிக்கவாசகர் பதவியைத் துறந்து பணியாற்றியதைப் போல நம்முடைய மதுரை ஆதீனமும் பணியாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது போப்பாண்டவர் அவர்கள் வாடிக்கன் சிட்டி ஸ்டேட்ஸ் பிரசிடென்ட். அவர்கள் இங்கே வருகை தந்தபோது பிரசிடெண்ட் ஆஃப் வாடிக்கன் சிட்டி ஸ்டேட்ஸ் என்ற முறையிலேதான் மரியாதை அளிக்கப்பட்டது. ஆனால் மதவாதிகள் அரசியலுக்கு வருகிறபோது, பதவிக்கு வருகிறபோது ஆன்மீக வாதிகளாக மதவாதிகளாக இருக்கக்கூடாது என்றால் போப்பாண்டவர் அவர்களை கேலி செய்வது போலாகும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நாம் இந்து மதத்தைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவ மதத்தைப் பற்றி இஸ்லாமிய தோழர் எடுத்துச்சொல்லி தெரிந்துக்கொள்ளுகின்ற அளவுக்கு நானும் இல்லை, இந்த அவையும் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அரவிந்தரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் மிகப்பெரிய அறிவாளி; ஆன்மீகவாதி; அறிவுலக மேதை. அரவிந்தர் அரசியலில் ஈடுபாடு கொண்டுதான்..........

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அரவிந்தர் எந்த மடத்திற்கும் தலைவர் அல்ல; எந்த சமயத்திற்கும் அவர் தலைவர் அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒரு சமயத் தலைவர், ஆன்மீகவாதி அரசியலில் ஈடுபடலாமா ஈடுபடக் கூடாதா என்பதை நாட்டுமக்கள் முடிவு செய்யட்டும். ஆனால் அவர்மீது ஊழல் குற்றம் இருந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கட்டும். நான் அதற்கு உள்ளே போக விரும்பவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து நான் கேட்க விரும்புவது ஒரு முக்கியமான கேள்வி. சில பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் சில

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 25

காரணங்களைக் குறிப்பிட்டார்கள். நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தினமணி பத்திரிகைக்கு என்ன காரணத்தால் விளம்பரம் கொடுப்பது நிறுத்தப்பட்டது? இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு என்ன காரணத்தால் விளம்பரம் கொடுப்பது நிறுத்தப்பட்டது? பிரஸ் கவுன்சிலில் கம்பிளைன்ட் இருந்தால் அல்லது ஸ்டான்டர்ட் ஆஃப் ஜர்னலிசம் இல்லை என்றால், அந்த தகுதி இல்லாமல் இருந்தால்தான் விளம்பரம் தருவதை மறுக்கலாம். காஷ்மீரம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்திரா அம்மையார், முதலமைச்சர் படம் சம்பந்தமாக ஒரு பத்திரிகையைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பத்திரிகைக்கு மாதா மாதம் 10,000 ரூபாய் விளம்பரம் கொடுக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு, கொடுக்கப்படுவது ஏன் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை)

(இரவு 8-10)

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு விளக்கம் தங்கள் வாயிலாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே விவாதிக்கப்படவேண்டியவர்கள் யார்? இங்கே இருக்கின்ற 234 உறுப்பினர்கள் மட்டும் தங்களுக்குள்ளே விவாதித்துக் கொள்ள வேண்டுமா அல்லது ஒரு குறிப்பிட்ட விவரங்களை அறிந்து கொள்வதற்காக யாராக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட துறை சம்பந்தப்பட்டவர்கள் அல்லது அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லும்போது அந்த விளக்கத்தைத் தருவதும், குறைபாடுகளைத் தருவதும், இந்த அவையிலே எடுத்து வைக்க வேண்டிய கருத்தா அல்லது யாரை வேண்டுமானாலும் பேசக் கூடாது என்று சொல்லி இங்கே இருக்கின்ற 234 பேர்களைப் பற்றி மட்டும் அதாவது ; நம்மை நாமே பேசிக் கொள்ள வேண்டுமா? அவர்கள் அடிக்கடி பேச வேண்டாம். பேச வேண்டாம் என்று சொன்னால் நடைமுறைகளைச் சொல்வது அல்லது குறைபாடுகளைச் சொல்வது எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்க நிதியுதவி பெறக்கூடிய எந்த நிறுவனமாக இருந்தாலும் அல்லது அரசாங்கம் பொறுப்பு ஏற்கக்கூடிய எந்த நிறுவனமானாலும் அது சம்பந்தப்பட்டவர்களைப் பற்றி இங்கே பேசலாம். அவர்கள் அவையிலே இல்லாவிட்டாலும் அவர்களைப் பற்றிப் பேசலாம்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பரம்பரை தர்மகர்த்தாக்கள் தகுதி பற்றிய சட்டத்திருத்தத்தை டெல்லி அரசுக்கு அனுப்பி இருப்பதாகவும் அது மூன்று வருடமாக கிடப்பிலே போடப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அதனை விரைவுபடுத்த சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 25]

திரு. தி. அன்புமுகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சந்தனக் கிடங்கில் 200 பேர் தினக் கூலிகளாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே தகுதி அடிப்படையில் 65 பேர்களை நிரந்தரமாக்கலாம் என்று நிர்வாகம் பரிந்துரைத்து இருக்கிறது. ஆகவே அந்த 65 பேர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா, உரிய வகையில் ஆணையிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத்தலைவர் அவர்களே, சந்தன மரக் கிடங்குகளில் பணியாற்றுகிறவர்கள் முழுமையாக எப்போதுமே வேலை செய்கிற வாய்ப்பைப் பெற்றவர்கள் அல்ல. தேவைப்படுகிற நேரங்களில் தான் அவர்கள் அந்த பணிக்காக அழைக்கப்படுகிறார்கள். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சிலரை எந்த அளவுக்கு முழு நேரமும் பயன்படுத்த முடியுமோ அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கவேண்டும் என்று வனத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரில் வி.ஜி.பி. அதிசய உலகம் அமைந்துள்ளது. இதற்கு சுற்றுலாத்துறை அனுமதி வழங்கியுள்ளதா? அந்த இடம் மின் வாரியத்தின் அனல் மின் நிலையத்திற்காக வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அங்கே அதிசய உலகம் வருகிறதா அல்லது அனல் மின் நிலையம் வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தமிழ்நாட்டிற்குத் தேவையான மிக முக்கியமான அனல் மின் நிலையத்தை உருவாக்கவேண்டுமென்று மின்சாரத்துறை ஒரு திட்டத்தை உருவாக்கி அதற்காக நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே தனியார்கள் இந்தச் சுற்றுலாத்துறை என்கிற பெயரால் தங்களுக்கென்று சில முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அதற்கும் சுற்றுலாத்துறைக்கும் அல்லது அரசுக்கும் சம்பந்தம் இல்லை.

திருமதி. டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி தேவஸ்தானம் ஆந்திர எல்லைக்குள்ளே இருந்தாலும் கூட முன்பெல்லாம் நாம் அரசாங்கத்தின் மூலமாகக் கடிதங்களை எடுத்துச் சென்றால் வி.ஐ.பி. என்று சொல்லி நம்மை தரிசனத்திற்கு அனுப்புவார்கள். தற்போது கடந்த ஒரு மாத காலமாக வி.ஐ.பி.யாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, 100 ரூபாய் செலுத்திவிட்டுத்தான் போகவேண்டும் என்று இருக்கிறது. எனவே, நம்முடைய அறநிலையத்துறையின் மூலம்

தொடர்பு கொண்டு அதை நீக்குவதற்கும், பழைய முறைப்படியே நம்மை அனுமதிப்பதற்கும் ஏற்பாடு செய்கின்ற வகையில் தொடர்பு கொள்ளுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி ஆலயம் ஆந்திர அரசுக்கு உட்பட்டது. ஆகவே நம்முடைய யோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது தெரியாது: இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அந்த நிர்வாக அதிகாரிக்கு அறநிலையத்துறை மூலம் தெரிவிக்க நாம் முயற்சிக்கலாம்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் இந்த அறநிலையத்துறை மானியக் கோரிக்கையிலே கருத்துக்களை எடுத்து வைக்கவில்லை. ஆனால் இது போன்று ஒவ்வொரு மானியத்திலும் கருத்துக்களை எடுத்து வைத்து காலதாமதப்படுத்தி விளம்பரத்திற்காகச் செய்கிறாரா? இதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அவர் என்னுடைய பெயரைச் சொன்னார். அதனால் எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவர் ஒன்றும் தப்பாக சொல்லவில்லை, உட்காருங்கள்.

திரு. பரிதி இளம் வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் அமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக பதில் அளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் என்னுடைய கட்சியை சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்ட கேள்விக்கு மட்டும் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லையே ஏன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் மிகுந்த தந்திரத்தோடு யாருக்காகவோ இங்கே வாதாடுவதை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற உணர்வில் அதற்கு என்னிடத்திலேயிருந்து ஏதாவது ஒரு பதிலை பெற்று அதை வேறு காரியத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். நாங்கள் அவ்வளவு இளிச்சவாயர்கள் அல்ல (கரவொலி).

காரணம் உச்ச நீதிமன்றத்திலே அதன் தொடர்பான ஒரு வழக்கு இருக்கிறது. நான் பொதுவாக ஒரு கருத்தை, எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகவே, பொதுவாகவே முன்னாள்



முதலமைச்சர் அவர்கள் சொன்னதையும், முன்னாள் இந்தியப் பிரதமர் அவர்கள் சொன்னதையும் எடுத்து வைத்தேனே தவிர வேறு தனிப்பட்ட முறையில் எந்தப் பத்திரிகை பற்றியும் எந்த நேரத்திலும் கருத்தை எடுத்து வைக்க வேண்டும் என்று விரும்பவில்லை. ஒரு உதாரணத்திற்காக ஒரு கருத்தை, அதுகூட பெயரைச் சொல்லாமல் குறிப்பிட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒன்றிரண்டு பத்திரிக்கைகளின் பெயர்களைச் சொல்லி, அவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). 10 ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார்கள் என்பதெல்லாம் சுப்ரீம் கோர்ட்டிலே அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. இப்படி முறையீடு செய்துக் கொண்டிருக்கிறார்களே, நீங்களும் அவர்களுக்கு விளம்பரம் கொடுப்பதாக சொல்லியிருக்கிறீர்களே, அப்படியானால் மாதம் ஒரு பத்தாயிரம் ரூபாய்க்கு கொடுத்தால் என்ன தவறு என்று சுப்ரீம் கோர்ட் கேட்டு (குறுக்கீடு) தயவு செய்து கேளுங்கள்—நீதிபதியினுடைய ஆலோசனையை இதில் கேட்டு—நாங்கள் எந்த பத்திரிக்கையையும் வெறுப்பது இல்லை. முறையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்— இறுதி தீர்ப்பு வழங்கும் வரை அந்த 10 ஆயிரம் ரூபாய் அந்த விளம்பரத்திற்காக வழங்குகிறோம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் கேட்கின்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரம் எல்லாம் கொடுத்திருக்கிறோம். அந்த விவரங்கள் கூட இருக்கிறது. (குறுக்கீடு) தினமணி, எக்ஸ்பிரஸ் எல்லாம் இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் நான் சொல்லவிரும்பவில்லை. தனிப்பட்ட எந்தப் பத்திரிகை பற்றியும் நான் எதுவும் சொல்லவும் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : இவ்வளவு விரிவாக பேசிவிட்டு கடைசியில் எனக்கு பதில் அளிக்காத காரணத்தால் நான் அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(திரு. அ. ரகுமான்கான் வெளிநடப்பு செய்தார்.)

திரு. ஜி. கே. ஜே. பாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தருடைய திருமடம் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையின் கீழ்தான் உட்பட்டிருக்கிறது. மடத்தின் ஆதீனக்காரர்கள் தவறு செய்வார்களேயானால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணை இருந்தும் கூட, தவறு செய்கிற ஆதீன மடத் தலைவர்கள் மீது நடவடிக்கையை அரசாங்கம் விரைந்து எடுக்குமா என்பதை அமைச்சர் பெருமான் குறிப்பாக அளிக்க வேண்டும்.

[1986 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அதைத்தான் முன்னாலேயே குறிப்பிட்டேன்.
அந்த ஆதீனத் தலைவர்கள் இரண்டு பொறுப்புகளை வகிக்
கிறார்கள். அந்த மடங்களுக்கு ஆதீனக்கர்த்தர்களாக இருக்
கிறார்கள். அந்த மடத்திற்கு உட்பட்ட ஆலயங்களுக்கு
பரம்பரை தர்மகர்த்தாக்களாகவும் விளங்குகிறார்கள். இன்
றைக்கு திருவாவடுதுறை ஆதீனத்திற்குள்ளே 11 ஆலயங்கள்
உள்ளன என்று பட்டியல்கள் எல்லாம் இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் அவர்களுடைய ஆதீனத்திற்கு
உட்பட்ட ஆலயம் தான் மாணிக்கவாசகர் எழுப்பிய ஆவுடை
யார்கோவில் என்ற அற்புதமான திருக்கோயில். உலகத்திலே
எங்கு தேடினாலும் அந்தச் சிற்பம் போல் கிடைக்காது. இன்றும்
சிற்பக் கலைகளிலே ஈடுபடுகிறவர்கள், ஒப்பந்தம் செய்கிறபோது
ஆவுடையார் கோவிலையும், மற்றும் ஒரு கோவிலையும் குறிப்
பிட்டு, அவைகளை நீக்கி விட்டுத்தான் எந்தக் சிற்பங்களும்
செய்யப்படும் என்று ஒப்பந்தம் போடுவார்கள். காரணம் அங்கு
இருப்பதைப்போல, இன்றைக்கு இருக்கும் சிற்பம் செய்பவர்
களால் செய்யமுடியாது என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

அந்த மாணிக்கவாசகர் எழுப்பிய ஆவுடையார்கோவிலே
முறையாக நடக்கவில்லை. அதனுடைய தேர் ஓடவில்லை. பழுது
பட்டிருக்கிறது. வணக்கத்திற்குரிய காஞ்சி மாமுனிவர், பெரிய
வர் அவர்கள், அவர்களிடம் செல்லுபவர்களிடத்தில் எல்லாம்
அந்த வேண்டுகோளை விடுக்கின்றார்கள், அந்த ஆவுடையார்
கோவிலின் தேரை ஓட்டுங்கள், ஓட்டுங்கள் என்று.

இன்னும் சொல்லப்போனால் அவர்களின் ஆதீனத்திற்கு உட்
பட்டது தான் திருவிடைமருதூர் கோவில். அது ஒரு புகழ்
பெற்ற ஆலயம். அங்கே இருக்கிற தேரும் ஓடவில்லை. அதை
விற்பதற்கும் முயற்சிக்கிறார்கள். அதையும் ஓட்ட வேண்டும்
என்று வணக்கத்திற்குரிய காஞ்சி மாமுனிவர் சொல்லிக் கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு வகைகளிலே ஒன்று, ஆதீனக்
கர்த்தர்கள், இன்னொன்று பரம்பரை அறங்காவலர்கள்.

(இரவு 8—20).

இந்தப் பரம்பரை அறங்காவலர்கள் நாம் அவர்களுக்கு நோட்டீஸ்
அனுப்பினால், இவர்கள் நாங்கள் ஆதீனகர்த்தர்கள், அதன்வழி
யாக பரம்பரை அறங்காவலர்கள். எங்களை கேட்பதற்கு அரசி
யல் சட்டப்படி இடமில்லையென்று வழக்கு மன்றங்களில் ஸ்டே
வாங்கி விடுகிறார்கள். அந்த முறையை மாற்றுவதற்கு அரசுக்கு
இன்னும் வலிவாக சட்டப்படி உரிமை பெறுவதற்கு தான் சட்ட
திருத்தமே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டது.
அந்தச் சட்ட திருத்தத்திற்கு மத்திய அரசினுடைய **ஒப்புதல்**



1986 ஏப்ரல் 25] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கிடைத்தால் இவர்கள் ஆதீனகர்த்தர்கள் என்று அல்ல பரம்
பரை அறங்காவலர்கள் என்று இருப்பதை அந்த நடவடிக்கையின்
மூலம் அப்புறப்படுத்திவிடலாம். எரிகிற அடுப்பை பிடுங்கினால்
கொதிக்கிற உலை தானாகவே அடங்கிவிடும். பணம் கிடைப்
பதற்கு வழி வகுத்துக்கொண்டிருக்கிற ஆலய நிர்வாகத்தை
எடுத்துவிட்டால் அவர்களுடைய ஆட்டபாட்டமெல்லாம் அடங்கி
விடும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதாக ஒரு கருத்தை
இங்கே சொன்னார்கள். அதாவது ஸ்ரீலங்காவிலிருந்து வந்த
தொழிலாளர்களை சில அதிகாரிகள் கொத்தடிமைகளாக நடத்து
கிறார்கள் என்று சொன்னேன். அரசின் கொள்கை அதுவல்ல
என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே நடந்த விஷ
யத்தைப்பற்றி ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
(குறுக்கீடு) அங்கே என்ன நடந்ததென்று என்னை விசாரிக்கவோ
அல்லது அதற்காக ஏற்பாட்டைச் செய்யவோ இல்லை. நான்
அங்கே நேரில் இருந்தவன். நான் அங்கே தகராறு பண்ணி
யதற்குப் பிறகு தான் ரேஞ்ச் ஆபீசர் வந்து வாகனத்தைக்
கொடுக்க முயன்றார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
அந்த நிகழ்ச்சி நடந்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அங்கேயிருந்து, அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் அந்த
வாகனம் தரப்பட்டதென்று இருக்குமானால், அந்த அதிகாரியின்
மீது தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆதிரா
விடர்களுக்கு சமபந்தி போஜனம், திருமணப் பதிவுக் கட்டணச்
சலுகை எல்லா திருக்கோவில்களிலும் அளிக்கப்பட்டு வருகிறது.
நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்
கொள்கிறேன். சில ஆலயங்களில் திருமணப் பதிவுக் கட்டணச்
சலுகை அளிக்க மறுக்கிறார்கள். எல்லா திருக்கோவில்களி
லும் அந்தச் சலுகையளிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை
யெடுப்பார்களா என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
ஆலயங்களில் இந்தத் திருமணங்களுக்காக ஒரு குறைந்தபட்சத்
தொகையை தான் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்று,
அந்தப் பதிவுக் கட்டணம் கூட இல்லாமல் ஆதிதிராவிட மக்கள்
கல்யாணம் செய்துகொள்வார்களானால் அவர்களிடத்தில் கட்ட
ணம் எதையும் வாங்க வேண்டாமென்று அரசு ஆணை பிறப்பிக்கு
மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டு தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 25—சின்கோனா.

திருவாளர்கள் கே. கல்லன், சு. பாலன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாக கருதப்பெற்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 25 சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,88,27,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறை.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,98,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

திருவாளர்கள் ஜெ. ராஜபாபு, மற்றும் சு. பாலன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,07,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,16,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26–4–1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

69. வருவாய்த்துறையின் 13–4–1960 ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. ஏ. 2522/1960 ஆம் எண் அறிவிக்கையில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளை கள் துறையின் 2–12–1985-ம் நாளிட்ட 1082 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

131. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண் 25—சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண். 45—வனத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

134. கோரிக்கை எண். 47—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).



135. கோரிக்கை எண். 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

136. 1986–87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

137. 1986–87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

138. 1986–87 ஆம் ஆண்டிற்கான வனத்துறைப் பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

139. சாலைகளும் பாலங்களும் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

140. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 9–1–1986 முதல் 29–1–1986 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு (ஆங்கிலம்).

141. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பத்தாவது பட்டியல்).

## இணைப்பு I.

(524ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட எண். 566(3527)க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான பிஸ். 2, பிஸ். 5 மற்றும் பிஸ் 6 என்ற மூன்று கலன்களும் சுருக்கு வலை மீன் பிடிப்பதற்கென கட்டப்பட்டவையாகும், சுருக்கு வலை மீன் பிடிப்பதற்கு தகுதியான மீன் வளம் மற்றும் கடல் தன்மைகள் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ளன. எனினும் பரிசோதனை முறையில், சிறிது காலம் இக்கலன்கள் தூத்துக்குடியில் மீனவர் பங்கு முறையில் அமர்த்தப்பட்டு செயல் படுத்தப்பட்டன. தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், இக் கலன்கள் மங்களூருக்கே எடுத்துச் செல்லப்பட்டன. எனவே தூத்துக்குடியில் இக்கலன்களில் பங்கு முறையில் பணியாற்றிய மீனவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிப்பதற்கோ, அல்லது மாற்று வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கான கேள்விக்கு இடமில்லை.

## இணைப்பு II.

(533ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 5 (2971) அதற்கான விடையைக் காண்க.)

| வரிசை எண்ணும், மாவட்டமும். | | 1983–84 நிதியாண்டு. | | 1984–85 நிதியாண்டு. | |
|---|---|---|---|---|---|
| | | எடுப்பு செய்த நில அளவு. | செலவு செய்த தொகை (நஷ்ட ஈடாக வழங்கியது). | எடுப்பு செய்த நில அளவு. | செலவு செய்த தொகை (நஷ்ட ஈடாக வழங்கியது). |
| | | ஏ.செ. | (ரூபாய் இலட்சத்தில்.) | ஏ.செ. | (ரூபாய் இலட்சத்தில்.) |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கற்பட்டு .. | 169.71 | 10.96 | 58.99 | 7.55 |
| 2 | கோவை .. | 5.72 | 17.25 | 8.67 | 10.44 |
| 3 | தருமபுரி .. | 116.87 | 7.44 | 53.47 | 9.06 |
| 4 | கன்னியாகுமரி .. | 6.59 | 1.99 | 8.86 | 2.01 |
| 5 | மதுரை .. | 119.04 | 10.83 | 60.89 | 9.16 |
| 6 | நீலகிரி .. | .. | 1.00 | .. | .. |
| 7 | வட ஆற்காடு .. | 130.46 | 22.56 | 39.84 | 15.02 |
| 8 | பெரியார் .. | 78.10 | 6.42 | 75.15 | 7.14 |
| 9 | புதுக்கோட்டை .. | 32.55 | 1.45 | 56.05 | 2.39 |
| 10 | இராமநாதபுரம் | 134.75 | 10.21 | 8.63 | 3.52 |
| 11 | சேலம் .. | 112.69 | 11.76 | 72.80 | 2.52 |
| 12 | தென் ஆற்காடு .. | 265.05 | 22.91 | 132.92 | 24.68 |
| 13 | தஞ்சை .. | 44.67 | 12.36 | 12.97 | 7.13 |
| 14 | திருச்சி .. | 146.23 | 10.01 | 22.72 | 11.37 |
| 15 | நெல்லை .. | 68.13 | 5.12 | 8.04 | 3.92 |
| 16 | சென்னை .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | 1,430.56 | 152.27 | 615.00 | 115.91 |



## இணைப்பு III.

(563ம் பக்கத்திலுள்ள அடிகுறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண். 12.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1986–87.

1. சமய நிறுவனங்கள் :

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் தற்போதுள்ள மொத்த அற நிலையங்கள் 34,340. அவைகளின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| திருக்கோயில்கள் .. .. .. .. | 32,302 |
| மடங்கள் .. .. .. .. | 56 |
| மடத்துக் கோயில்கள் .. .. .. | 55 |
| குறப்பிட்ட கட்டளைகள் .. .. | 1,721 |
| அறக்கட்டளைகள் .. .. .. .. | 189 |
| சமண சமயக் கோயில்கள் .. .. | 17 |

இந்த அறநிலையங்களில் 26,105 அறநிலையங்கள் மட்டுமே உதவித்தொகை நிர்ணயம் செய்வதற்குரியவை. இவ்வற நிலையங்களின் மொத்த உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 22.88 கோடியாகும். சென்ற ஆண்டில் இத்தொகை ரூ. 21.86 கோடியாக இருந்தது.

2. நிர்வாக அமைப்பு :

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. 1977 ஆம் ஆண்டிற்கு முன்பு வரை இச்சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத்துறைக்கு பொது நிர்வாகத்திற்காக ஆணையாளர் ஒருவரும், அவருக்கு உதவியாக 10 துணை ஆணையர்களும், 34 உதவி ஆணையர்களும், 414 திருக்கோயில் செயல் அலுவலர்களும் பணிபுரிந்து வந்தனர். தற்போது இத்துறையில் பொது நிர்வாகத்திற்காக ஆணையாளர் ஒருவரும், அவருக்கு உதவியாக 18 துணை ஆணையர்களும், 36 உதவி ஆணையர்களும், 475 திருக்கோயில் செயல் அலுவலர்களும் (ஒன்று முதல் நான்கு நிலைகளிலும்) பணி புரிந்து வருகின்றனர். நிர்வாகத்தினை சீரமைக்கும் நோக்கத்துடன் துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் பதவிகள் கூடுதலாக்கப்பட்டுள்ளன. இது தவிர இரண்டு இணை ஆணையர்கள் பதவியும் தற்போது அரசினால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த 18 துணை ஆணையர்களில் 7 துணை ஆணையர்கள் மண்டல அளவில் (territorial) அறநிலையத்துறை நிர்வாகத்தை கவனித்து வருகின்றனர். 7 துணை ஆணையர்கள் திருக்கோயில்களில் செயல் அலுவலர்களாக செயல்பட்டு வருகின்றனர் மேலும் ஒரு துணை ஆணையர் திருமடங்களின் நிர்வாகத்தைக் கண்காணித்து ஆய்வு செய்யும் பணியிலும், மற்றும் ஒருவர் நிலுவையில் உள்ள துறை சம்பந்தமான வழக்குகளை விசாரித்து முடிவு செய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். எஞ்சியுள்ள இரு துணை ஆணையர்கள் ஆணையரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வருகின்றனர்.

36 உதவி ஆணையர்களில் 17 உதவி ஆணையர்கள், மாவட்ட அளவில் அறநிலையத்துறை நிர்வாகத்தை கவனித்து வருகின்றனர். 11 உதவி ஆணையர்கள் திருக்கோயில்களில் செயல் அலுவலர்களாகப் பணியாற்றி வருகின்றனர். திருக்கோயில்களின் திருவாபரணங்களை மதிப்பீடு மற்றும் சரிபார்க்க உதவி ஆணையர் தரத்தில் நகை சரிபார்க்கும் அதிகாரிகளாக எண்மர் பணியாற்றி வருகின்றனர்.

மேற்பார்வை பொறியாளர் ஒருவரின் தலைமையில், கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான தொழில் நுட்ப மற்றும் மாவட்டப் பணியாளர்களும், சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளை தயாரிக்கும் மற்றும் அப்பணிகளையும், இதர கட்டிட வேலைகளையும் மேறபார்வையிட்டும் கவனித்து வருகின்றனர்.

ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் தனி அலுவலர் ஒருவரும், தனி வட்டாட்சியர் நான்கு பேரும் அடங்கிய வருவாய் தனிப்பிரிவு ஒன்று மாவட்டங்களில் உள்ள திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல் அடிப்படைப் பதிவேடுகளைத் தயாரித்தல் ஆகிய பணிகளை செய்து வருகிறது.

தலைமை அலுவலகத்தில் துறையின் அனைத்து வரவு-செலவு கணக்குகளில் ஆணையாளருக்கு உதவும் பொருட்டு 1984 ஆம் ஆண்டு முதல் கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும் அவருக்கு உதவியாக ஏற்கெனவே உள்ள ஒரு உதவிக் கணக்கு அலுவலரும் உள்ளனர்.

அறநிலையத்துறையைச் சேர்ந்த திருக்கோயில்கள், அறநிறுவனங்கள், திருமடங்கள் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணிக்காக, மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த கணக்கு அலுவலர் தரத்திலுள்ள தலைமை தணிக்கை அதிகாரி ஒருவரின் கீழ் அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள், பணியாளர்களுடன் தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.



ஆணையாளர், துணை ஆணையாளர்கள், மற்றும் உதவி ஆணையாளர்கள், தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு சட்டத்தின்படி அமைந்த அலுவலர்களாவர்.

**3. செயல் அலுவலர்கள் :**

தற்போது தமிழ்நாட்டில் 1,801 திருக்கோயில்கள் செயல் அலுவலர்கள் பொறுப்பில் உள்ளன. இக்கோயில்களை 492 செயல் அலுவலர்கள் நிர்வகித்து வருகிறார்கள். இதில் 52 நிலை-1 செயல் அலுவலர்களும், 117 நிலை-2 செயல் அலுவலர்களும் 172 நிலை-3 செயல் அலுவலர்களும், 138 நிலை-4 செயல் அலுவலர்களும் அடங்குவர். நிலை-1-லிருந்து நிலை 4-வரையில் உள்ள செயல் அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 479 ஆகும். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை, அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர் கோயில், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள், சுசீந்திரம் இவைகளில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் உதவி ஆணையாளர் நிலையில் செயல் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். அடியிற்கண்ட 8 திருக்கோயில்களின் நிலை-1 செயல் அலுவலர்கள் பதவிகளும், உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

(1) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மருதமலை, கோயம்புத்தூர்.

(2) அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை.

(3) அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், பன்னாரி, பெரியார் மாவட்டம்.

(4) அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்.

(5) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, செங்கற்பட்டு மாவட்டம்.

(6) அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.

(7) அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

(8) அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

இந்த எட்டு உதவி ஆணையாளர் தரத்திலுள்ள செயல் அலுவலர் பதவிகளில் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி நீங்கலாக ஏனைய 6 திருக்கோயில்களுக்கு தற்போது உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்ணா மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உயர்ந்து வரும் வருமானத்தைக் கருத்திற்கொண்டு, இதன் செயல் அலுவலரின் நிலை 1971 ஆம் ஆண்டு முதல் துணை ஆணையாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. இத்திருக்கோயிலைத் தவிர, கீழ்க்கண்ட 7 திருக்கோயில்களில் உள்ள உதவி ஆணையாளர் நிலை செயல் அலுவலர் பதவிகளும் துணை ஆணையாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டு, அவைகளில் துணை ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் நியமிக்கப் பட்டனர்:—

(1) அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம்.

(3) அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம், திருச்சி.

(4) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

(5) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(6) அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

(7) அருள்மிகு கன்னியாகுமரி தேவஸ்வம், சுசீந்திரம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் தலைமையகத்தில் ஆணையாளருக்கு உதவியாளராக உதவி ஆணையர் தரத்தில் ஒரு கூடுதல் நேர்முக உதவியாளரும்; துணை ஆணையாளர் தரத்தில் ஒரு நேர்முக உதவியாளரும் பணியாற்றி வந்தார்கள். இந்த பாகுபாட்டை நிரவல் செய்யவும். நிர்வாகத்தில் பளுவை உரிய பதவித்தரத்தில் உள்ள அலுவலர்களை கொண்டு செம்மையாக நடத்திச் செல்லவும், தலைமையகத்திலுள்ள உதவி ஆணையர் தரத்திலுள்ள கூடுதல் நேர்முக உதவியாளர் பதவியை





சுசீந்தரம் தேவஸ்வம் நிர்வாகத்திற்கு மாற்றம் செய்து, தேவஸ்வத்தில், துணை ஆணையர் தரத்திலிருந்த செயல் அலுவலர் பதவியை தலைமையகத்தில் கூடுதல் நேர்முக உதவியாளராக மாற்றம் செய்து ஆணையிடப்பட்டு தற்போது துணை ஆணையர் நிலையில் கூடுதல் நேர்முக உதவியாளர் பதவியும், உதவி ஆணையர் நிலையில் சுசீந்திரம் தேவஸ்வம் செயல் அலுவலர் பதவியும் செயல்பட்டு வருகின்றன.

இன்றைய நிலையில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் செயல் அலுவலர்கள் திருக்கோயில்களில் பணி புரிந்து வருகின்றார்கள் :—

| செயல் அலுவலர் நிலை. | எண்ணிக்கை. |
|---|---|
| துணை ஆணையர் நிலை .. .. .. | 7 |
| உதவி ஆணையர் நிலை .. .. .. | 6 |
| நிலை 1 .. .. .. .. .. | 52 |
| நிலை 2 .. .. .... .. .. | 117 |
| நிலை 3 .. ... .. .. .. | 172 |
| நிலை 4 .. .. .. .. .. | 138 |
| மொத்தம் .. | 492 |

4. திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர் நியமனம்.

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாக குறைபாடுகளை களையும் பொருட்டு சட்டத்தின் விதி முறைகளின் படி மேற்படி திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்களை நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை மீது, தருமபுரம், திருவாவடுதுறை மற்றும் குன்றக்குடி ஆகிய திருமடங்களின் ஆதினகர்த்தர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுக்களை தாக்கல் செய்து தடை ஆணை பெற்றிருந்தார்கள்.

அந்த நீதிப்பேராணை மனுக்களின் மீது 5-3-86-ல் ஏற்பட்ட தீர்ப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. தணிக்கை

திருக்கோயில் கணக்குகளின் தணிக்கை திறம்பட இருத்தல் பொருட்டு அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுரைகள் மற்றும் தணிக்கை செய்முறைகள், மேலாய்வு முறைகள் கடைபிடிக்கப்பட்டு ஆலய தணிக்கையில் முன்னேற்றமும் திறனும் தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது. தணிக்கை முடிக்கப்பெற்ற திருக்கோவில்களின் எண்ணிக்கை சென்ற வருடம் 5,057 ஆக இருந்தது, இவ்வருடம் 5,520 ஆக அதிகரித்து உள்ளது.

[1986 ஏப்ரல் 25

தற்சமயம் சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்திலிருந்து ஒரே சீராக 1½ சதவீதம் தணிக்கை கட்டணமாக அறநிலைய சட்டப்பிரிவு 92(2)ன் கீழ் திருக்கோயில்களிடமிருந்து வசூலிக்கப் படுகிறது. இக்கட்டண விகிதம் 1951 ஆண்டு முதல் அமுலில் இருக்கிறது. தணிக்கை பிரிவுக்கு ஆகும் செலவு தணிக்கை கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. இதற்கு காரணம் அரசு ஊழியர்களாகிய தணிக்கைப் பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் அனைத்து அரசு ஊழியர்களைப் போல் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகின்றன. இச் செலவினை சரிக்கட்டும் பொருட்டு தணிக்கைக் கட்டணத்தை சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் ஒரே சீராக 4 சதவீதமாக உயர்த்துவதற்கான சட்ட திருத்தம் மைய அரசின் இசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6. ஆலயப் பணியாளர்கள்.

இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் உட்பட சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணி புரிகின்றனர். இவர்களுடைய சம்பளம் மற்றும் படிகள் திருக்கோயில் வருவாயில் உயர்ந்த பட்சம் 40 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துணை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் நிலையில் உள்ள செயல் அலுவலர்கள் பணி புரியும் திருக்கோயில்கள் பணியாளர்களுக்கு மாநில அரசு பணியாளர்களுக்கு உள்ள அரசு சம்பள விகிதங்கள் போன்று சம்பள விகிதம் மற்றும் இதர படிகள் வழங்கப்படுகின்றன. இதர திருக்கோயில்களில், 40 சதவிகிதத்திற்குட்படுத்தி பணியாளர்கள் சம்பள விகிதம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

ரூ. 10, 000 க்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஈடுசெய் வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் அமுலில் இல்லாத திருக்கோயில்களில் 10 ஆண்டுகள் பணியாற்றிய பணியாளர் பணியிலிருந்து ஓய்வுபெற்றாலோ அல்லது இறந்தாலோ அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டுக்கும் ½மாத சம்பள வீதம் 15 மாத அடிப்படை சம்பளத்துக்கு மிகைப்படாமல் திருக்கோயில் நிதிநிலையைப் பொறுத்து பணிக்கொடை வழங்கப்படுகிறது. திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் 1–7–1982 முதல் அமுலில் இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மாதம் ரூ. 100க்கு கீழ் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் பிரிமியக் கட்டணத் தொகை செலுத்த வேண்டியதில்லை. மற்ற ஊழியர்கள் செலுத்தும் பிரிமியக் கட்டணத் தொகையினின்று இறந்த பணியாளர்கள் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 5,000 ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.



1986 ஏப்ரல் 25]

இத்திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இதுவரை இத்திட்டத்தின் கீழ் 122 திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 5,000 வீதம் கொடுக்க ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு அதிலிருந்து 120 இனங்களுக்கு தொகை வரப்பெற்று பட்டுவாடாவும் செய்யப்பட்டு விட்டது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நீங்கலாக இதர துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில்களில் பணி புரியும் ஆலய பணியாளர்களின் பல்வேறு சம்பள விகிதம் மற்றும் இதரப்படிகளை அந்த ஆலயங்களின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு, அதற்கு ஏற்றாற்போல் சீரமைத்து நிர்ணயம் செய்யப்பட உள்ளது. மேலும் இந்நிறுவனங்களில் பணிபுரியும் (அர்ச்சகர் ஓதுவார் மற்றும் நாதஸ்வர குழு போன்ற உள்துறை பணியாளர்கள் நீங்கலாக) இதர பணியாளர்களை இந்நிறுவனங்களுக்குள்ளாக மாறுதல் செய்வது நிர்வாக நலனுக்கு உகந்ததாகவிருக்கும். ஆதலால் அதற்கான வழிவகைகளும் வகுக்கப்பட உள்ளது. இந்த ஊதிய சீரமைப்பு பணியாளர்கள் மாற்றம் இவைகளை மேற்குறித்த கோயில்களில் முதற்கட்டமாக பரீட்சார்த்தமாக செயல்படுத்திய பின் அதன் நலன்களை பரிசீலித்து பின் கால கட்டத்தில் அவைகளை இதர திருக்கோயில் பணியாளர்களுக்கு படிப்படியாக அமுல்படுத்தப்படும். இதற்காக ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அலுவலர் குழுவின் பரிந்துரைகள் எதிர் நோக்கப்படுகின்றன.

7. விலை மதிப்புள்ள திருவுருவச்சிலைகள் பாதுகாப்பு :

தமிழ்நாட்டிற்குத் தனிப்பெயரும், புகழும், பெருமையும் அளிக்கும் விலைமதிக்க முடியாத கலைப் பொருள்களான சிலைகளைப் பாதுகாக்க இவ்வரசு சிறப்பான நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவைகள் பின் வருமாறு :

315 அறநிலையங்களுக்குச் சொந்தமான 2,028 திருஉலாத் திருமேனிகள் போதிய பாதுகாப்பு வசதியுள்ள பக்கத்து திருக்கோயில்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தொன்மை வாய்ந்த திருவுலாத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத்துறையினரிடம் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை 5,306 அறநிலையங்களுக்குச் சொந்தமான 30,163 திருவுலாத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பதிவு அதிகாரிகளிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன. செப்புத் திருவுலாத்திருமேனிகள் ஒவ்வொன்றும் நான்கு கோணங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டு, புகைப்படம் தொகுப்பு தயாரிக்கப்பட்டு, துறையில் பெறப்பட்டு, பேணப்பட்டு வருகின்றன. இதுவரை 4,601 அறநிலையங்களுக்குச் சொந்தமான திருவுலாத் திருமேனிகளின் புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இடவசதி உள்ள திருக்கோயில்களில் பாதுகாப்பு வசதியுடன் கூடிய சிலை காப்புக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு வசதி இல்லாத திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மேற்படி காப்புக்கூடங்களில் பாதுகாப்பாக வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான நவீன பாதுகாப்பு உள்ள கட்டிடங்களை கீழ்க்கண்ட திருக்கோயில்களில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(1) அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்,
திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

(2) அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மாள்
தேவஸ்தானம், திருநெல்வேலி நகர்.

(3) அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்,
திருவானைக்காவல்.

திருவாரூர் சிலை காப்புக்கூட கட்டிட வேலைகள் மதுரையில் உள்ள தமிழ்நாடு கட்டிட கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடியும் நிலையில் உள்ளது. மற்ற இரண்டு கட்டிடங்களும் இந்த ஆண்டில் துவங்கப்பட உள்ளன. மேற்கண்ட மூன்று பாதுகாப்பு அமைப்புகளும் தமிழக அரசின் நிதி உதவி மூலம் செய்து முடிக்கப்பட உள்ளன.

கிராமப்புறங்களில் உள்ள திருக்கோயில்களிலிருந்து சிலைகள் திருட்டுப்போவதை தடுக்க மாவட்ட வருவாய் அதிகாரியால் விழிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வருகின்றன. இந்த விழிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் பின்வருமாறு :

(1) கிராமத்தில் உள்ள நான்கு பெரியோர்கள்.

(2) நான்கு முன்னாள் இராணுவத்தினர்கள்.

(3) அங்குள்ள காவல்துறை அதிகாரி.

(4) பிர்க்கா வருவாய்த்துறை ஆய்வர்.

(5) அறநிலையத்துறை பிரிவு ஆய்வர்.

இதுகாறும் நியமிக்கப்பட்ட விழிப்பு குழுக்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| (1) புதுக்கோட்டை மாவட்டம் | .. | .. | 100 |
| (2) மதுரை மாவட்டம் .. | .. | .. | 9 |
| (3) தென்னாற்காடு மாவட்டம் | | .. | 440 |
| (4) காமராஜர் மாவட்டம் | .. | .. | 83 |
| (5) திருநெல்வேலி மாவட்டம் | .. | .. | 159 |



சிலை திருட்டை தடுக்க இந்திய குற்றவியல் தடுப்புச் சட்டத்தில போதுமான சட்டத்திருத்தம் மேற்கொள்ள மைய அரசின் இசைவிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஏற்பிற்குப் பிறகு மேல் நடவடிக்கை தொடரும்.

புராதன திருமேனிகள் மற்றும் உலோகச் சிலைகள் களவுகளைத் தவிர்க்க ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு துணை காவல் துறை கண்காணிப்பாளர், 4 இன்ஸ்பெக்டர்கள், 2 சப் இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல் நிலைக் காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு தனி ஸ்குவாட் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

8. ஆலய நிலங்கள் :

இம்மாநிலத்தில் இந்து சமய அறநிலையங்களுக்கு சொந்தமான சுமார் 5.25 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. பசலி 1394 வரை இந்நிலங்களிலிருந்து பெறப்பட வேண்டிய குத்தகை வாடகை பாக்கி சுமார் ரூபாய் 35.25 கோடியாகும். குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற நடவடிக்கைகளிலிருந்து விதிவிலக்கு அளித்து பாதுகாப்பு கொடுக்கும் பல சட்டங்கள் காரணமாக, மேற்படி நிலுவைகளை வசூலிக்க முடியவில்லை. இதனால் கோயில்களின் வருமானம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில கோயில்களில் தினப்படி பூசைகள் செய்வதும் வேலையாட்களின் ஊதியம் கொடுப்பதும் இயலாததாக உள்ளது.

பெரும்பாலான திருக்கோவில்கள், நிலங்களையே வருமான வழியாகக் கொண்டிருக்கின்றன. அந்நிலங்களில் உள்ள குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாக குத்தகை பாக்கிகளை தராத காரணத்தால் தினசரி பூசைகள், சிப்பந்திகள் சம்பளம், மற்றும் இதர இனங்களுக்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் இடர் உண்டாகியுள்ளது. வேளாண்மை நிலங்களில் இயற்கை சீற்றங்களினால் விளைச்சல் அவ்வப்போது பாதிக்கப்படும்போது, பயிரிடும் குத்தகைதாரர்கள் சமய நிறுவனங்களுக்கு குத்தகை தொகையை செலுத்தாமல் இருந்தால் அவர்களைத் நிலத்திலிருந்து வெளியேற்றாமல் பாதுகாக்கும் வகையில் அவ்வப்போது நிவாரணச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்த நிவாரணச் சட்டங்கள் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டன. ஆனால் நீட்டிக்கப்பட்ட காலம் காலாவதி ஆகி விட்டது. இதைத் தொடர்ந்து குத்தகைதாரர்கள் சமய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை வசூலிக்க நீதிமன்றங்கள் வாயிலாகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. தேங்கியுள்ள இந்த குத்தகை நிலுவைகளை வசூலிப்பதற்கு முதற்கட்டமாக திருச்சி, தென் ஆற்காடு கோவை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன இவை

[1986 ஏப்ரல் 25

களைத் தவிர மேலும் ஏழு வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இவைகளில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நான்கு நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

1985 ஆம் வருடத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களில் குறைந்த குத்தகை உள்ள நிலங்களின் குத்தகையை உயர்த்தியதன் மூலம ரூ. 2,80,110.05 மற்றும் 1.441,50 கலம் நெல் கூடுதல் வருவாய் வரப்பெற்றுள்ளது. 1.133,82 ஏக்கர் தரிசு நிலத்தை விவசாயத்திற்கு விடப்பட்டதில் ரூ. 96,228 வருவாய் வரப்பெற்றுள்ளது.

அனுமதியின்றி உடைமையாக்கிய விவசாய நிலம் 160.41 ஏக்கரை திருக்கோயில் சுவாதீனத்திற்கு கொண்டுவந்து குத்தகைக்கு விட்டதால் ரூ. 35,764 கூடுதல் வருவாய் வரப்பெற்றுள்ளது.

9. ஆலய நிலங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை.

தமிழ்நாட்டில் இருக்கும் ஆலயங்களுக்கு பெரும்பான்மையாக விவசாய நிலங்களும் கட்டிடங்களும் மற்றும் விவசாயம் இல்லாத நிலங்களும் சொந்தமாக இருக்கின்றன. விவசாய நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு சாகுபடி செய்யப்படுகின்றன ஒரு சில சிறிய ஆலயங்களில் மட்டுமே நேரடியாக பண்ணைச் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க தனி வருவாய் அலுவலர் நியமனம் செய்யப்பட்டு 1–4–1970 முதல் மாவட்ட வருவாய் அதிகாரியின் பார்வையில் திருக்கோயில் நிலங்கள் குறித்து ஆய்வுப்பணி தொடங்கப்பட்டன. அது முதல் இப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) அலுவலகம், சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தனி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியாளர்களால் கிராமங்களில் தகுந்த ஆய்வுகள் மேற்கொண்டு ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் அந்நிலங்களில் இருந்து பெறப்படும் வருமானம் முதலிய விவரங்கள் சேகரம் செய்து ஆதாரப் பதிவேடுகள் தயாரிக்கப்படுகின்றன

தனி அலுவலர் திருக்கோயில் நிலங்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது 10,275 (பட்டியலில் சேர்க்கப்பட்ட திருகோயில்கள் 328-ம் பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில்கள் 9,947) திருக்கோயில்களுக்கு 4.1 இலட்சம் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் இருந்தது.



1986 ஏப்ரல் 25]

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டபின் மொத்தம் 41,306 இனங்களுக்கு 2,01,343 ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் அறநிலையங்களுக்குச் சொந்தமானவை என கண்டுபிடிக்கப்பட்டது. இக்குறிப்புகள், சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்திற்கு தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இதுவரை 10,526 திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் குறித்து அனைத்து விபரங்கள் சேகரித்து 1–15 பதிவேடுகள் தயாரித்து தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு 1–15 பதிவேடுகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மேற்கண்ட பணிகள் முடிவு பெற்றுள்ளது. 41,306 இனங்கள் குறித்து நாளதுவரை புலனாய்வு செய்ததில் 18,198 இனங்கள் திருக்கோயிலுக்கு சொந்தமாக்கப்பட்டு பாக்கியுள்ள 23,108 இனங்களின் ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேற்குறித்த 18,198 இனங்களின் மாவட்ட வாரியான விவரங்கள் பின்வருமாறு :—

1 முதல் 15 சிறப்புப் பதிவேடுகள் 28—2—1986 முடிய தயார் செய்த மாவட்ட வாரியான பட்டியல்—

| | |
|---|---|
| சென்னை | 1,352 |
| செங்கற்பட்டு | 1,227 |
| வடாற்காடு | 1,015 |
| தென்னாற்காடு | 1,801 |
| திருச்சி | 840 |
| புதுக்கோட்டை | 354 |
| தஞ்சாவூர் | 3,577 |
| மதுரை | 883 |
| இராமநாதபுரம் | 499 |
| திருநெல்வேலி | 1,752 |
| கன்னியாகுமரி | 1,173 |
| நீலகிரி | 26 |
| கோயம்புத்தூர் | 2,079 |
| சேலம் | 604 |
| தர்மபுரி | 270 |
| பெரியார் | 746 |
| மொத்தம் | 18,198 |

10. கட்டிடங்கள், மனைகள் :

சென்ற ஆண்டு கட்டிடங்களின் வாடகையை உயர்வு செய்ததின் விளைவாக ரூ. 8,43,723 கிடைக்கப் பெற்றது. தற்போது உயர்வு செய்யப்பட்ட விகிதத்தின் மூலம் சென்ற ஆண்டை விட இவ்வினத்தில் ரூ. 10,02,745.29 கூடுதலாக கிடைத்துள்ளது. குத்தகையினை புதுப்பிக்கும் போது 50 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டு வாடகை உயர்த்தப்பட்டு உள்ளது.

சென்னை நகரில் சில திருக்கோயில்களுக்கு சொந்தமான நகர்புற நிலங்கள் 99 ஆண்டுகளுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகை தாரர்கள் பல லட்சம் மதிப்புள்ள கட்டிடங்களை கட்டிக் கொண்டு திருக்கோயில்களுக்கு மிகக் குறைந்த வாடகை கொடுப்பதுடன் மேற்படி இடத்தினை உள் வாடகைக்கு விட்டு அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள்.

மேற்படி நிலங்கள் அக்கால நிலவரத்திற்குத் தக்கவாறு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தற்போது காலநிலைக்குத் தக்கவாறு நிலமதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளதால் அதற்கு தக்கவாறு வாடகை உயர்த்தி பெறுவதில் சட்டச்சிக்கல் உள்ளது. அரசு தற்போது நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்து அத்தொகையை முதலீடு செய்தால் கோயிலுக்கு தற்போது கிடைக்கும் வாடகையை விட பல மடங்குத் தொகை கூடுதலாக வர சாத்தியக்கூறு உள்ளதால் அதற்குத் தக்கவாறு சட்டம் இயற்ற அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திருக்கோயில் மற்றும் திருக்குளத் திருப்பணி வேலைகளுக்கு அரசு மான்யம்.

1985–86 ஆம் நிதி ஆண்டிற்கு திருக்கோயில் மற்றும் திருக்குளம் பழுது பார்த்தல் திருப்பணிகட்கு மொத்தம் ரூ. 30,00,000 அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதில் 20 திருக்கோயில்களின் திருப்பணிகட்கு ரூ. 18,00,000-ம், 4 திருக்குளத் திருப்பணிக்கு ரூ. 1,00,000-ம் திருவாரூர் விக்ரகப் பாதுகாப்பு மையம் திருத்திய மதிப்பீட்டின்படி கூடுதல் தொகை ரூ. 2,90,000, திருநெல்வேலி மற்றும் திருவானைக்காவல் விக்ரகப் பாதுகாப்பு கட்டிட மையம் கட்ட ரூ. 5,50,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் மலைப்பாதை அமைப்புக்கென சிறப்பு அரசு மான்யமாக 1985-86-ல் ரூ. 5,00,000 வழங்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் நிதியாண்டில் மேலும் ரூ. 5,00,000 வழங்கப்பட உள்ளது. 1985–86 ஆம் ஆண்டின்



சிறப்பு மான்யம் உட்பட ரூ. 35,00,000–க்கான திருக்கோயில் திருக்குளம் (மற்றும்) விக்ரகப் பாதுகாப்பு மையம் குறித்த பட்டியல் பின்வருமாறு :—

1985–86 ஆம் ஆண்டிற்கான அரசு மான்யப் பட்டியல்.

முதல் கட்ட அரசு மான்யம் ரூ. 15,00,000.

| வரிசை எண். | திருக்கோயில் பெயர், விவரம். | அங்கீகரிக்கப் பட்ட அரசு மான்யம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1 | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் நகர் மற்றும் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. | 3,00,000 |
| 2 | அருள்மிகு காசி விஸ்வநாதசாமி உலகம்மன் திருக்கோயில், தென் காசி, திருநெல்வேலி மாவட்டம்.. | 3,00,000 |
| 3 | அருள்மிகு பிரணவ வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில், காட்டு மன்னார் கோயில் வட்டம், தென்னாற்காடு மாவட்டம் .. .. .. | 1,50,000 |
| 4 | அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில், சுசீந்தரம் ... ... | 1,00,000 |
| 5 | அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில், கூகலூர், கோபி வட்டம், பெரியார் மாவட்டம் .. | 1,00,000 |
| 6 | அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம் நகர் மற்றும் வட்டம் தென் ஆற்காடு மாவட்டம் | 1,00,000 |
| 7 | அருள்மிகு கொண்டத்து காளியம்மன் திருக்கோயில், பாரியூர், கோபி வட்டம், பெரியார் மாவட்டம் ... | 98,500 |
| 8 | அருள்மிகு பொன்னுங்குருத்துடைய அய்யனார் திருக்கோயில், செவலூர் திருமயம் வட்டம், புதுக்கோட்டை. | 75,000 |

| (1) | (2) | (3) ரூ. |
|---|---|---|
| 9 | அருள்மிகு சுந்தர விநாயகர் திருக்கோயில், சான்றோர்குப்பம், ஆம்பூர், வாணியம்பாடி வட்டம், வட ஆற்காடு மாவட்டம் .. .. | 50,000 |
| 10 | அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயில், மைலாப்பூர், சென்னை-4 | 25,000 |
| 11 | அருள்மிகு அரசலீஸ்வரர் திருக்கோயில், ஒழிந்தியார்பட்டு, வானூர் வட்டம், தென் ஆற்காடு மாவட்டம் .. .. .. .. | 23,000 |
| 12 | அருள்மிகு மாரியம்மன் ஆலயம், பட்டுடையாலிருப்பு குந்தனூர், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் (ஆதி திராவிடர் காலனி திருக்கோயில்) .. .. | 20,000 |
| 13 | அருள்மிகு பிள்ளையார், காளியம்மன் கங்கையம்மன் திருக்கோயில்கள், கல்லப்படி, குடியாத்தம் வட்டம், வட ஆற்காடு மாவட்டம் .. .. .. | 18,000 |
| 14 | அருள்மிகு ஆதினமிளகிய ஐயனார் திருக்கோயில், இசகுப்பட்டி புதுக்கோட்டை கோயில்கள், புதுக்கோட்டை நகர் வட்டம் மற்றும் மாவட்டம் .. .. | 17,000 |
| 15 | அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில், ஆண்டார்முள்ளி பள்ளம் கடலூர் வட்டம், தென் ஆற்காடு மாவட்டம் (ஆதி திராவிடர் காலனி திருக்கோயில்) .. | 16,000 |
| 16 | அருள்மிகு சாஸ்கார் திருக்கோயில் கீழ்முட்டுக்காடு குளத்தூர் வட்டம் (இணைப்பு) புதுக்கோட்டை திருக்கோயில்கள், புதுக்கோட்டை வட்டம் மற்றும் மாவட்டம் .. | 7,500 |
| | மொத்தம் .. | 14,00,000 |



### திருக்குளம் திருப்பணி.

| வரிசை எண். | திருக்கோயில் விவரம், பெயர். | அங்கீகரிக்கப்பட்ட அரசு மானியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. |
| 1 | அருள்மிகு தியாகராசசுவாமி திருக்கோயில், திருவாரூர் கமலாலய திருக்குளம் .. | 20,000 |
| 2 | அருள்மிகு மாதவபெருமாள் திருக்கோயில் குளம், மைலாப்பூர், சென்னை-4 .. | 30,000 |
| 3 | அருள்மிகு திருமூலநாதசுவாமி திருக்கோயில் குளம், புழல், சென்னை-66 .. .. | 25,000 |
| 4 | அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயில் குளம், திருப்பன்கூர், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் .. .. | 25,000 |
| | கூடுதல் .. .. | 1,00,000 |
| | மொத்தம் கூடுதல் (முதல் கட்டம்) .. | 15,00,000 |

இரண்டாவது கட்ட அரசு மானியம் ரூ. 15,00,000.

| வரிசை எண். | திருக்கோயில் பெயர் மற்றும் விவரம். | அங்கீகரிக்கப்பட்ட அரசு மானியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | திருநெல்வேலி, திருவானைக்காவல், விக்கிரக பாதுகாப்பு மையக் கட்டிடம் .. .. | 5.50 |
| 2 | திருவாரூர் விக்கிரகப் பாதுகாப்பு மையம் .. | 2.90 |
| 3 | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், நார்த்தமலை, புதுக்கோட்டை திருக்கோயில்கள் .. .. .. .. | 2.00 |

[illegible]

| | | |
|---|---|---|
| 4 | அருள்மிகு கலிவரத அய்யனார் திருக்கோயில், தமராசி, சிவகங்கை, பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம் .. .. | 0.10 |
| 5 | அருள்மிகு கல்யாண ரங்கநாதர் திருக்கோயில் திருநகர், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. .. | 1.00 |
| 6 | அருள்மிகு பதஞ்சலிஸ்வரர் திருக்கோயில், கல்ல நாட்டம்பன்னூர் காட்டு மன்னார்குடி, தென்னாற்காடு மாவட்டம் .. .. | 1.00 |
| 7 | அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக் கோயில், காரைக்குடி நகர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் .. .. | 0.50 |
| 8 | அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம், தென் ஆற்காடு மாவட்டம் .. | 2.00 |
| | மொத்தம் (2-ம் கட்டம்) .. .. | 15,00,000 |

சிறப்பு மான்யம் ரூ. 5,00,000

| வரிசை எண். | திருக்கோயில் பெயர் மற்றும் விவரம். | அங்கீகரிக்கப் பட்ட அரசு மான்யம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1 | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம் (மலைப்பாதை அமைப்புக்கு) ... ... | 5,00,000 |
| | 1985–86-ம் ஆண்டிற்கான மொத்த அரசு மான்யம் .. .. .. .. | 30,00,000 |
| | 1985–86 ஆம் ஆண்டிற்கான சிறப்பு மான்யம் | 5,00,000 |
| | மொத்தம் .. | 35,00,000 |



மாமன்னர் இராஜ இராஜ சோழன் 1,000-வது ஆண்டு முடிசூட்டு விழா நினைவினைப் போற்றும் வகையில் 60 தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டதில் இதுவரை 19 திருக்கோயில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. ஏனைய திருக்கோயில்கள் பலவற்றில் திருப்டணிகள் முடியும் நிலையில் உள்ளது. திருப்பணிகள் முடிந்தவுடன் இத்திருக்கோயில்கட்கு குடமுழுக்குவிழா செய்யப்படும்.

1—1—1985 முதல் 31—12—1985 முடிய உள்ள காலத்தில் 226 திருக்கோயில் திருப்பணிகட்கும் 110 கட்டு மானப்பணிகட்கும் மதிப்பீடுகள், ரூ. 4,22,14,700–க்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் அதே காலத்தில் முந்தைய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட 142 திருப்பணி வேலைகளும் 189 இதர கட்டுமானப் பணிகளும் ரூ. 1,74,44,373 மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேல் உள்ள திருப்பணி வேலைகள் நடைபெறும் திருக்கோயில்கள்.

| வரிசை எண். | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். | தொகை. |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயில், தென்காசி, இராஜ கோபுரம் கட்டுதல் .. .. | 90.00 |
| 2 | அருள்மிகு ரெங்கநாதசாமி திருக் கோயில், ஸ்ரீரங்கம், தெற்கு இராஜகோபுரம் கட்டுதல், வெளி அலங்காரம் வேலைகள், உள்பக்க பூச்சு வேலைகள் தவிர மற்ற வேலைகள் முடிந்துள்ளன .. .. | 121.00 |
| 3 | அருள்மிகு காமாட்சியம்மன் திருக் கோயில், மாங்காடு, இராஜ கோபுரம் கட்டுதல் .. .. | 8.00 |
| 4 | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம், இராஜ கோபுரம் கட்டுதல் .. .. | 17.00 |

| | | |
|---|---|---|
| 5 | அருள்மிகு அமரபாலீஸ்வரர் திருக்கோயில் (இணைப்பு), கொண்டத்து காளியம்மன் திருக்கோயில், பாரியூர், மகாமண்டபம், பிரகார மண்டபம் கட்டுதல் .. .. | 11.25 |
| 6 | அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், சிவன்மலை, பெரியார் மாவட்டம், மலைப்பாதை அமைத்தல் .. .. .. | 7.50 |
| 7 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, கிழக்கு பிரகாரம் விரிவு படுத்துதல் .. | 5.40 |
| 8 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, தெற்கு (வெளிபிரகாரம் அகலப்படுத்து தல்) .. .. .. .. | 7.50 |
| 9 | அருள்மிகு நாராயணப் பெருமாள் (இணைப்பு) கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், பெரியார் மாவட்டம், சுற்றுச்சுவர் மண்டபம் கட்டுதல் .. | 5.00 |
| 10 | அருள் மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், உத்திரகோசமங்கை, சுவாமி சன்னதிக்கு பிரகாரம் கட்டுதல் .. .. .. .. | 9.50 |
| 11 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், ஆறுமுகவிடுதிக்கு மேல் முதல் மாடி கட்டுதல் .. .. .. | 6.30 |
| 12 | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, பழுதுபார்த்தல், புதுப்பித்தல், வடக்கு கோபுரம் .. .. | 7.00 |
| 13 | அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில், துறையூர், பெருமாள்மலை அடிவாரத்திலிருந்து பிரசன்ன வெங்கடாசலபதி மலைக்கோயில் வரை மலைப் பாதை அமைத்தல் .. .. | 5.00 |



| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 14 | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம், இராஜ கோபுரம் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் .. .. .. | | 6.00 |
| 15 | அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை, சுற்றுச்சுவர், சமயலறை கட்டுதல் | | 5.00 |
| 16 | வழிபாட்டு கூடம் கட்டுதல், ஏற்கனவே உள்ள நினைவாலயம் மாற்றி அமைத்து முன்னேற்றம் செய்தல்-மேட்டுக்குப்பம் கிராமம்-கடும்பாடி அஞ்சல் .. .. | | 6.00 |
| 17 | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர், இராஜகோபுரம் பழுதுபார்த்தல் .. | | 157 |
| 18 | அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில் மேலநத்தம், மன்னார்குடி வட்டம், திருப்பணி வேலைகள். .. .. .. | | 5.00 |
| 19 | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர், சிலைகள் பாதுகாப்பு அறை கட்டுதல். | | 12,90 |
| 20 | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, மலைப்பாதை அமைத்தல் .. .. | | 55.00 |
| 21 | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர், தென்னாற்காடு மாவட்டம், இராஜகோபுரம் கட்டுதல் .. .. | | 9.80 |
| 22 | அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், (ஸ்ரீ நடராஜர் திருக்கோயில், சிதம்பரம்), தென்னாற்காடு மாவட்டம், வெளி மதிற்சுவர் பழுது பார்த்தல் .. .. | | 19.20 |

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 23 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி மாவட்டம், ஆர். சி. சி. முன்மண்டபம் கட்டுதல். .. .. .. .. | | 15.00 |
| 24 | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், நார்த்தாமலை, புதுக்கோட்டை மாவட்டம், 5 நிலை இராஜகோபுரம் கட்டுதல் | | 5.25 |
| 25 | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை, கரிய மாணிக்கப் பெருமாள் மண்டபத்தில் கல்யாணசுந்தரர் சன்னதியில் சலவைக்கற்கள் பதித்தல் .. .. | | 5.00 |
| 26 | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி, கலயமுத்தூர் பெண்கள் கலைக் கல்லூரியின் கட்டிடத்தின் மேல் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் முதல் தளம் கட்டுதல் .. .. .. | | 8.00 |
| 27 | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, இடும்பன் மலையில் இடும்பன் மண்டபம் கட்டுதல் .. .. .. .. | | 6.00 |
| 28 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, வெளிப் பிரகாரம் அகலப்படுத்துதல் மற்றும் ஸ்டோர் ரூம் கட்டுதல் .. | | 5.40 |
| 29 | அருள்மிகு கண்ணபிரான் திருக்கோவில், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம், இராஜ கோபுரம், நடுகோபுரம், சொர்க்க வாசல் மற்றும் விமானம் பழுது பார்த்தலும், புதுப்பித்தலும் .. | | 6.05 |
| 30 | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, வடக்கு இராஜகோபுரம், பழுதுபார்த்தலும் புதுப்பித்தலும் .. .. .. | | 7.00 |



## திருவரங்கம் அருள்மிகு ரெங்கநாத சுவாமி திருக்கோயிலின் இராஜகோபுரத் திருப்பணி.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் அச்சுதராயர் என்னும் மன்னர் தமது வெற்றியின் சின்னமாக திருச்சிராப்பள்ளி அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயிலின் தெற்கு வாசலில் ஒரு கோபுரத்தினை எழுப்பத் திட்டமிட்டார். ஆனால், கோபுரத்தின் அடிப்பகுதியான கல்காரம் மட்டிலும் எழுப்பப்பட்டு முடிவுறாமல் மொட்டைக் கோபுரமாக நின்றது. இதனை 13 நிலைகளுடன் 235 அடி உயரம் உள்ள கோபுரமாக தவத்திரு அகோபிலமடத்து ஜீயர் சுவாமி அவர்களால் உபயமாகக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. இதற்கு அரசு அனுமதி அளித்தது.

இக்கோபுரத்தின் கல்காரம் 164 அடி நீளமும், 97 அடி அகலமும் கொண்டதும், சிற்ப வேலைப்பாடு மிக்கதும், தொன்மையும் நேர்த்தியானதுமாகும். 13 நிலைகளுடன் கூடிய இந்த இராஜகோபுர கட்டிடப் பணி துவங்குமுன், பல நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கல்காரத்தின் ஸ்திரத் தன்மையை பொறியாளர்களும், திரு. கணபதி ஸ்தபதியும் அடங்கிய குழுவினால் உறுதி செய்யப்பட்டது. இந்தக் கோபுரத்தின் திருப்பணி முதலில் ரூ. 43,00,000 மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. ஆனால் அதன் தற்போதைய திருத்திய மதிப்பீடு ரூ. 1,21,00,000 (ஒரு கோடியே இருபத்தி ஒன்று இலட்சம்) ஆகும். இந்த திருப்பணி 20—5—1979-இல் துவங்கப்பட்டு தற்போது பதின்மூன்று நிலைகளில் வேலைகள் முடிவுற்றன. பூச்சு வேலைகள் மற்றும் இதர வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த இராஜகோபுரம் கட்டும் மிகப் பெரிய பணிக்காக கர்நாடக மற்றும் ஆந்திர அரசுகளும் நிதி உதவி செய்துள்ளன. தனிப்பட்டோரும் நிதி உதவி செய்துள்ளனர். 13-ஆம் நிலைக்கு தமிழக அரசு ரூ. 7 இலட்சம் நிதி உதவி செய்துள்ளது.

இந்த இராஜகோபுரம் இந்தியாவிலேயே மிகவும் உயரமாக கட்டப்பட்டுள்ள கோபுரம். பல நூற்றாண்டுகள் இருக்க வேண்டிய இக் கோபுரத்தின் கட்டுமானப் பணியின் ஸ்திரத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு அரசு ஒரு உயர் மட்ட வல்லுநர் குழு அமைத்து ஆய்வு செய்ய ஏற்பாடு செய்துள்ளது. அதன் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு சேலம்.

பழமை வாய்ந்த இத்திருக்கோயில் மலை மீது அமைந்துள்ளது. இதற்கு மலைச்சாலை ஒன்று ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, இப்பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப் பணிக்கு சிறப்பு மானியமாக ரூ. 10 இலட்சம் (இரு தவணைகளில் 1985–86 இல் ரூ. 5,00,000 மும், 1986–87 இல் ரூ. 5,00,000 மும் (ஆக மொத்தம் ரூ. 10 இலட்சம்) அளிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டு 1985–86-இல் முதல் தவணையான ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு விட்டது. 1—4—1986-க்குப் பிறகு இரண்டாவது தவணையும் வழங்கப்படும்.

மலைப் பாதை வேலை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயில், தென்காசி.

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் தற்போது உள்ள கல்காரத்தின் மீது இராஜகோபுரம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்கான மதிப்பீடு ரூ. 90 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இராஜகோபுரத் திருப்பணியில் முதல் நிலை கட்டி முடிக்கப்பட்டு இரண்டாம் நிலை வேலை நடைபெற்று வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் ஆடிப்பூரத் தேர்த் திருவிழா.

காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் பெரிய திருத்தேருக்கு ரூபாய் இரண்டு இலட்சத்தில் மராமத்து செய்து 21—7—1985-ஆம் தேதி ஆடிப்பூரத்தன்று தேர்த் திருவிழா நடத்தப்பட்டது. மேலும் இத்திருக்கோயிலின் கோபுரத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





இவ்வரசு தமது நிதியிலிருந்தும், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்தும், வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் உள்ள திருக்கோயில் பணிகளுக்கு மானியம் வழங்கியுள்ளது. அதற்கான விவரம் வருமாறு :—

| வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும் விபரமும். (1) | வழங்கப்பட்ட தொகை. (2) ரூ. | பை. |
|---|---|---|
| அரசு மான்யம். | | |
| 1 அருள்மிகு உத்திர சிதம்பர நடராச மந்திர் டிரஸ்ட், சதாரா (மகாராஷ்டிர மாநிலம்) ராஜகோபுரம் கட்டுமான வேலைகள். | 1,00,000 | 00 |
| 2. அருள்மிகு ஆதி சங்கரர் விமான மண்டபம் திருப்பணி, அலகாபாத், திரிவேணி சங்கமம், உத்திர பிரதேச மாநிலம். | 1,00,000 | 00 |
| 3 அருள்மிகு மத்திய சுவாமிமலை திருக்கோயில் திருமண மண்டபம், போபால். | 1,00,000 | 00 |
| ஆலய உபரிநிதி. | | |
| 4 அருள்மிகு அலகாபாத் ஆதி சங்கரர் விமானம் கட்ட. | | |
| பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம். | 1,00,000 | 00 |
| திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில். | 1,00,000 | 00 |
| 5 அருள்மிகு ஸ்ரீலங்கா திருகேதீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி. | | |
| அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி. | 25,000 | 00 |
| அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோயில் இராமேஸ்வரம். | 25,000 | 00 |
| அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி, திருக்கோயில், பழனி. | 1,00,000 | 00 |
| அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். | 25,000 | 00 |
| அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், பன்னாரி. | 25,000 | 00 |

| (1) வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும் விபரமும்.. | (2) ரூ. | பை. |
|---|---|---|
| 6 மகாராஷ்டிர மாநிலம், செம்பூர் சுப்பிர மணியசுவாமி திருக்கோயில் (அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச் செந்தூர்.) | 25,000 | 00 |
| 7 கலிபோர்னியா சான்பிரான்சிஸ்கோ இந்து கோயிலுக்கு. | | |
| (அருள்மிகு மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.) | 1,06,975 | 00 |
| அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக் கோயில், திருவேற்காடு. | 9,354 | 00 |
| (பூசைக்கு வேண்டிய பொருட்கள், விக்ரகங்கள், உலோக சிலைகள்.) | | |
| 8 அருள்மிகு சதாரா உத்திர சிதம்பரம் நடராஜர் கோயில். | 3,53,000 | 00 |

12. திருமண மண்டபங்கள்.

தற்போது நிலவி வரும் விலைவாசிகளைக் கருத்தில் கொண்டால் பெரும்பாலான மக்களுக்கு திருமணங்களுக்காக சொந்தச் செலவில் பந்தல்கள் மற்றும் இதர செலவுகளை செய்வது இயலாத காரியங்களாகவே உள்ளது. ஆகவே எளிய மக்களுக்கு உதவுவதற்காக திருமண மண்டபங்கள் கட்டுவது சமுதாயப் பணிகளில் ஒன்றாகும். ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் குறைந்த செலவில் திருமணங்களை முடிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படும் இடம் கோயில்களாகவே இருக்கின்றன. அத்தகைய கோயில்கள் பலவும் வருவாய் ஏதுமின்றி உள்ளன. கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதால் அவற்றில் வருமானம் பெருக வழி உள்ளது. ஆகவே, கோயில்கள் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டுவதை இந்த அரசு ஆதரிக்கும். நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியைக் கொண்டு கடனாகப் பெற்று திருமண மண்டபங்கள் கட்ட உதவி செய்யப்படும். இவ்வாறு கட்டப்படும் மண்டபங்கள் கடன் அளிக்கும் திருக்கோயில்களின் பெயரால் வழங்கப்பட்டு அக்கோயிலின் நிலையான சொத்தாக அதன் பதிவேடுகளில் குறிக்கப்படும். இவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தின் ஒரு பகுதி சம்பந்தப்பட்ட திருக்கோயிலின் செலவுகளுக்காக எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு, மீதித் தொகை நிதி வசதி அளித்த திருக்கோயில்களுக்கு கடனை



திருப்பிச் செலுத்தவும் வழிவகை செய்யப்படும். இக்கொள்கையை செயல்படுத்தும் முறையில் முதல் கட்டமாக ஏற்கனவே தொடங்கப்பட்டு நிதி வசதியின்மையால் பாதியில் நின்றிருக்கும் திருமண மண்டபங்களைக் கட்டி முடிக்க அவசியமான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போழுது, ரூ. 135.11 இலட்சம் மதிப்பீட்டில் 36 புதிய திருமண மண்டபங்கள் கட்டுமான வேலை நடைபெற்று வருகின்றன.

13. ஆலயங்கள் சார்பில் வழிபடுவோர்க்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் :

| | |
|---|---|
| ஓய்வு விடுதிகள் .. .. .. | 58 |
| குடில்கள் .. .. .. .. | 231 |
| அறைகள் .. .. .. .. | 951 |
| திருமண மண்டபங்கள் .. .. | 109 |

பல திருக்கோயில்களில் வரும் பக்தர்களுக்கு தங்கும் வசதி, குளிக்கும் வசதி மற்றும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன. போதிய விளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளன. சிறிய பேருந்துகளும் (மினி பஸ்) பல திருக் கோயில்களில் பக்தர்கள் வசதிக்காக விடப்படுகிறது. இழுவை இரயில் வசதியும் (வின்ச்சு) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் உள்ளது. பல திருக்கோயில்களில் மலைப்பாதை வசதியும் செய்யப்பட்டுள்ளன. இவ்விதம் வழிபடுவோர்களுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செயயப்பட்டுள்ளன. வழிபடுபவர்களுக்கு இத்தகைய வசதிகள் தொடர்ந்து செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

14. ஆலயபாதுகாப்பு மற்றும் ஊழியர் நலங்காக்கும் திட்டங்கள்:

(அ) தமிழ்நாடு ஆலய பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம்:

1984 இல் தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத ஆலயங்களில் ஒருகால பூஜை யாவது நடைபெற வழிவகை செய்யும் பொருட்டு ஆலயங்களின் உபரி நிதியைக் கொண்டு ரூ. 5 கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்த அரசு உத்தரவிட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் நிதி வசதியுள்ள ஆலயங்களிலிருந்து உபரி நிதியாக ரூ. 5,06,47,061.63 சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆலய பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்ட சம்பந்தமான செலவுகள் மேற்கண்ட நிலையான வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து செய்யப்பட்டு வருகின்றன. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைத்த வட்டியிலிருந்து 1985 இல் ஒரு கால பூஜை நடத்தக்கூட வசதியற்ற 32 ஆலயங்களுக்கு தினமும்,

ஒரு கால பூஜை நடத்துவதற்காக பிரதி ஆலயத்திற்கும் ரூ. 5,000 வீதம் ரூ. 1,60,000 வழங்கப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதியினின்றும் வங்கிகளில் முதலீடு செய்வதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 55 இலட்சம் வட்டியாகக் கிடைக்கப் பெறுகிறது. ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத நிதிவசதியற்ற திருக்கோயில்களை அனைத்து மாவட்டங்களிலும் தேர்ந்தெடுத்து அங்கு பூஜைகள் மீண்டும் நடைபெற இந்நிதியிலிருந்து தொடர்ந்து நிதியுதவி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது 300 திருக்கோயில்கள் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 15 இலட்சம் நிதி உதவியளிக்கப்படவுள்ளது.

மேலும் சென்ற ஆண்டில் மேற்கண்ட வைப்பு நிதியின் வட்டி வருவாயினின்றும் 31–3–1985 வரையிலான ஆலயப் பணியாளர்களின் நீண்ட கால சம்பள நிலுவைகளைத் தீர்ப்பதற்காக ரூ. 9,01,526.10 அரசு அங்கீகரித்துள்ளது. அவற்றில் முதல் கட்டமாக 145 ஆலயங்களில் பணி புரியும் 827 சிப்பந்திகளுக்கு ரூ. 5,64,856.41 வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் 31–12–1985 வரையான காலத்தில் ஏற்பட்டுள்ள ஆலயப் பணியாளர்களின் சம்பள நிலுவையை எஞ்சிய தொகையினின்றும் பட்டுவாடா செய்யப்பட உள்ளது.

ஆ. தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் நலம் காக்கும் திட்டம்:

1984 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையில் உள்ள திருக்கோயில்களில் பணி புரியும் மிகக் குறைந்த ஊதியம் பெறும் திருக்கோயில் ஊழியர்களின் நலனைக் கருதி அவர்களுக்கு, கடன் உதவி மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு கல்வி, மருத்துவத்திற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தவும், இவ்வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து மேற்படி ஆலய ஊழியர்களுக்கு நிதி உதவி செய்வதற்கும் அரசு உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து தற்பொழுது பழனி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கான நிலையான வைப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிலையான வைப்பு நிதியின் வட்டி வருமானத்திலிருந்து மிகக் குறைந்த ஊதியம் பெறும் ஆலய ஊழியர்களின் சிறார்களுக்கும், குடும்பத்தினருக்கும் கல்வி உதவி, மருத்துவ உதவிக்காக 1985 இல் 20 பேருக்கு ரூ. 2,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெறும் வட்டியைக் கொண்டு தொடர்ந்து இதே போன்று ரூ. 100ம், அதற்குக் கீழ் சம்பளம் பெறும் ஆலய ஊழியர்களின் கல்வி உதவி, மருத்துவ உதவிக்காக இந்நிதியுதவி திட்டத்தின் கீழ் வரப்பெற்றுள்ள மனுக்களை பரிசீலித்து மேலும் 1,000 பேர்களுக்கு ரூ. 1 இலட்சம் கொடுக்கப்படவுள்ளது.





இ. தமிழ்நாடு திருக்கோயில் திருப்பணி நிதியுதவித் திட்டம்:

தமிழகத்தில் உள்ள கிராமப் புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் பல பழுதடைந்து திருப்பணி செய்ய நிதி வசதி இன்றி உள்ளது. இக்கோயில்களை பழுது பார்த்து திருப்பணி செய்வதற்கு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரந்தர வைப்பு நிதியாக வங்கிகளில் மூலதனம் செய்யப்பட்டு அதனின்று கிடைக்கும் வட்டி வருவாயினின்றும் கிராமப்புறக் கோயில்களின் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 1985 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள 85 திருக்கோயில்களுடன் மேலும் 65 கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 150 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 13–3–1986 அன்று நடைபெற்ற விழாவில் ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயனடையத்தக்க ஆலயங்களை கணக்கிட்டு தொடர்ந்து நிதி உதவி அளித்து திருப்பணி செய்ய நடவடிக்கைகள் உள்ளன.

15. சமூக நலப்பணிகள்.

நமது ஆலயங்கள் வெறும் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல் மக்களின் சமூகப் பொருளாதார கலை, கல்வி, கலாச்சாரத் தேவைகளை பூர்த்தி செய்யும் மையங்களாக மாமன்னன் ராஜராஜன் காலந்தொட்டு செயல்பட்டதை வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. அந்த வகையில் சத்துணவுக் கூடங்களை அமைப்பதற்காக திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ரூ. 59,20,000, 1982 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இத்தகைய சத்துணவுக் கூடங்கள் நிர்மாணிக்க ஆலய உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம் செய்ய இந்து சமய அறநிலையச் சட்டம் இடமளித்தாலும், இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில்உள்ளதால் மேற்படி தொகை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது.

16. இந்து ஆதி திராவிடர் பிற்பட்டோர் வகுப்பினைச் சேர்ந்த இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள்.

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழை இந்துக்கள், ஆசிரியர்கள் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் தொகையாக அரசின் கொள்கைக்கிணங்க நிதி வசதி படைத்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது. இந்தத் திட்டம் முதல் முதலாக அங்கீகரிக்கப்பட்ட 15–8–1981 லிருந்து நாளது வரை ரூ. 9,61,280.55 செலவில் 1,245 திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 979 திருமணங்கள் ஆதி திராவிட மண

மக்களுக்கு நடத்திவைக்கப்பட்ட திருமணங்களாகும். இத்தகைய திருமணங்கள் திருக்கோயில்களின் நிதியைக் கொண்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

17. 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 சுதந்திரநாள் அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்.

தமிழகத்தில் இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு எந்த இடையூறும் இல்லை. இந்த நிலைமையை எடுத்துக் காட்டும் வகையிலும், ஆதி திராவிட மக்கள் இந்து சமய நிகழ்ச்சியில் அதிக அளவில் பங்கு கொள்வதற்கான வழிவகைகளை உயர்த்தும் பொருட்டும், சிறப்பு வழிபாடும் மற்றும் பொது விருந்தும் தமிழகம் முழுவதும் 2,806 திருக்கோயில்களில் ரூ. 10.39 இலட்சம் செலவில் 15–8–1985 சுதந்திர தின விழா நாளன்று நடத்தப்பட்டது.

18. பொருட்காட்சி.

மாவட்ட தலைமையிடத்திலும், சென்னையிலும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் அரசு பொருட்காட்சிகளில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கலந்துகொண்டு மிகச் சிறப்பான முறையில் அரங்குகள் அமைக்கப்படுகின்றன. அறநிலையத்துறை சார்பில் அமைக்கப்படும் பொருட்காட்சி அரங்கில், சமயம், தமிழருடைய சமூக வாழ்க்கை, மொழி, கட்டிடக்கலை, கலாச்சாரம் ஆகியவற்றை எவ்வாறு மேம்படுத்தியுள்ளனர் என்பதை சித்தரிக்கும் வகையில் காட்சிப் பொருட்கள் அமைக்கப்படுகின்றன. குறிப்பாக, ஒலி, ஒளி காட்சிகள், சமயப் பெரியோர்கள் எவ்வாறு இறையுணர்வை வளர்க்கும் பொழுதே, தமிழ் மொழியையும், போற்றி சிறப்பித்தார்கள் என்பதை விளக்கும் வகையில் காட்சிகள் அமைக்கப்படுகின்றன.

மேலும், திருக்கோயிலின் இயற்கை சூழல்கள், வனப்புமிகு திருக்குளங்கள், கோபுரங்கள், உலகச் சிறப்பு மிக்க உலோகத் திருமேனிகள் ஆகியவைகளின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு பொருட்காட்சியைக் காண வருபவர்கள், இத் திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்படுகின்றன.

இவ்வாண்டு, சென்னை சுற்றுலாப் பொருட்காட்சியகத்தே இத்துறை நிர்மாணித்துள்ள அரங்கின் வெளிப்புறத்தில், தமிழகத்தில் உள்ள முக்கிய திருக்கோயில்களின் சிற்பம் மற்றும் கலை வளங்களை, தெள்ளென விளக்கியும், இக்கோயில்களைச் சார்ந்து நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை விளக்கியும், 1 மணி நேரத்திற்கு ஒரு படக் காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது.



இந்த ஆண்டு, ஆலயங்களின் தினசரி பூஜை முறைகளில் அதிகாலை முதல் இராக்காலம் வரையில், இசைக்கப்படுகின்ற பண்களை தொகுத்து பொதுமக்கள் அறியும் வண்ணம் அறநிலையத் துறை அரங்கில் கேட்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட இடங்களில் பொருட்காட்சி அரங்குகள் சிறப்பாக அமைத்து அரசின் பரிசுகளையும் பெற்று வந்திருக்கின்றது:—

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசுப் பொருட்காட்சி, சேலம். | 5—8—84 முதல் 16—9—84 | இரண்டாம் பரிசு. |
| 2 | அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி, சென்னை. | 9—1—85 முதல் 29—3—85 | முதல் சிறப்பு பரிசு. |
| 3 | அரசுப் பொருட்காட்சி, கோயம்புத்தூர். | 20—4—85 முதல் 17—5—85 | இரண்டாம் பரிசு. |
| 4 | அரசுப் பொருட்காட்சி, மதுரை. | 28—4—85 முதல் 9—6—85 | இரண்டாம் பரிசு. |
| 5 | கோடை விழா பொருட்காட்சி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். | 12—5—85 | இரண்டாம் பரிசு. |
| 6 | அரசுப் பொருட்காட்சி, சேலம். | 4—8—85 முதல் 26—9—85 | இரண்டாம் பரிசு. |

19. ''திருக்கோயில்''.

திருக்கோயில் இதழ் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 1958 அக்டோபர் மாதம் முதல் கடந்த 27 ஆண்டுகளாக, தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றது. சமய நெறி, பக்தி, ஒழுக்கப் பண்பாடுகள் மக்களிடையில் பரவவும், தமிழ் மொழி, தமிழ்க் கலைகள் தழைத்தோங்கி இனிது வளரவும் அறநிலையத் துறையின் பல்வேறு ஆக்கப் பணிகள், செயல்முறைத் திட்டங்கள் பயன்மிக்க தகவல்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் ''திருக்கோயில்'' இதழ் துவக்கப்பட்டது. பிரதி மாதமும் 4,500 பிரதிகள் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்விதழ் திரு. ந. ரா. முருகவேளின் சீரிய முயற்சியால் பல அரிய சமயக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

அந்தச் சிறப்பை வருங்காலத்திலும் தன்னகத்தே கொண்டு தொடர்ந்து வெளிவர தகுந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

20. அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆற்றிவரும் பணிகள்.

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூக நலம் ஆகியவை பற்றிய கல்வி நிலையங்கள் பல சமய நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் அதிக வருமானம் பெறும் திருக்கோயிலாகும். நாட்டின் பல பாகங்களிலின்றும், பெரும்பான்மையான சேவார்த்திகள் கூடும் திருத்தலமாக விளங்குவது பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். இத்திருக்கோயிலின் சென்ற பசலி ஆண்டு வருமானம் ரூ. 3,33,37,240 ஆகும். இதில் 33 சதவீதம் உண்டியல் மூலம் பெறப்படும் வருவாயாகும். இத்திருக்கோயிலின் பல முதலீட்டுகளில் ரூ. 6 கோடி அளவில் உபரிநிதி சேமிப்பாக உள்ளது. இவை நீங்கலாக கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்திற்காக இத்திருக்கோயில் நிதியினின்று ரூ. 1 கோடி தனி நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும், "தமிழ்நாடு ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி" "தமிழக திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம்" ஆகிய இரு திட்டங்களுமாக இத்திருக்கோயில் நிதியினின்றும், ரூ. 1,68,00,000 அளிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலினின்று சமுதாய நலப் பணிகளாக கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் துவங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன :—

(1) அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் கலைக் கல்லூரி
(2) அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக்கல்லூரி
(3) அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் பாலிடெக்னிக்.
(4) அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் பாலிடெக்னிக்.
(5) அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் பள்ளி.
(6) அருள்மிகு பழனியாண்டவர் தமிழ் போதனாப்பள்ளி.
(7) அருள்மிகு பழனியாண்டவர் செவிடர் ஊமையர்பள்ளி
(8) அன்பு இல்லம்.
(9) பாலர் காப்பகம்.
(10) நாதஸ்வர பள்ளி.
(11) தவில் பள்ளி.
(12) வேதசிவஆகம பாடசாலை.
(13) மருத்துவ மனை.
(14) சித்த வைத்தியசாலை.
(15) நூலகம்.
(16) சிறு குடில்கள் மற்றும் சத்திரங்கள்.





கல்லூரிகளுக்கும், பாலிடெக்னிக்குகளுக்கும் ஒரு பகுதி அரசு மான்யம் கிடைக்கப்பெறுகிறது. ஏனைய பள்ளிகள் அனைத்திற்கும் ஆகும் செலவுகள் திருக்கோயில் நிதியினின்றும் செலவிடப்படுகிறது. உபயதாரர்கள் சிறு குடில்கள் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலில் 44 சிறு குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இக்குடில்கள் கட்டுவதற்காகவும், பாதித் தொகை உபயதாரர்களாலும், மறு பாதி திருக்கோயில் மூலமும் செலவிடப்படுகின்றது.

தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய முக்கிய திருவிழாக்களுக்கு தமிழகத்தின் பல பகுதிகளினின்றும் நடந்தே, முருகனைத் தரிசிக்க பழனிக்கு வரும் யாத்ரீகர்கள் ஆங்காங்கு தங்கி இளைப்பாறுவதற்காக திண்டுக்கல், தாராபுரம், உடுமலைப் பேட்டை ஆகிய ஊர்களுக்கு இடையில் பல தங்கும் மண்டபங்கள் கட்டும் திட்டத்தினை இத்திருக்கோயில் நிர்வாகம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வேண்டிய காலியிடங்களையும், நிதி உதவியினையும் தாராளமாக அளித்து உதவ பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் வையாபுரி கண்மாய் புறம்போக்குப் பகுதியில் உள்ள 12 ஏக்கரா நிலத்தினை, திருமண மண்டபம், சிறு குடில்கள், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் பொது கழிவறைகள் கட்டுவதற்காக அவ்விடத்தின் உரிமையினை திருக்கோயிலுக்குப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் பழனி நகரம் பொலிவுறுவதுடன், குளமும் ஆழப்படுத்தப்படும்.

பன்னிரண்டு அடி உயரமுள்ள கல்லினால்ஆன இடும்பன் சிலை ரூ. 83,000 பொருட் செலவில் வடிக்கப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. பழனி மலைக்கு அருகில் அமைந்துள்ள இடும்பன் மலையில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. மலை மீது செல்வதற்குப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மலையில் கைப்பிடிச் சுவர்கள் மற்றும் மண்டபம் ரூ. 13,60,000 பொருட் செலவில் கட்டும் பணி துவங்கப்பட உள்ளது. இது முற்றிலும் புதிய பணியாகும்.

பழனியின் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் பழனி திருக்கோயிலுடன், நிர்வாகத்தின் பொருட்டு இணைக்கப்பட்டுள்ளன. அத்தகைய 39 சிறிய திருக்கோயில்கள் பழனி திருக்கோயிலின் நிர்வாகத்தின்கீழ் உள்ளன.

ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் இழுவை இரயில்களுடன் மூன்றாவது மின் இழுவை இரயில் ரூ. 40 இலட்சம் பொருட் செலவில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

21. சாதிப் பாகுபாடற்ற ஆகம பயிற்சிப்பள்ளி :

திருக்கோயில் அர்ச்சகராக பயிற்சி பெற விரும்புகிறவர்கட்கு சாதி பாகுபாடின்றி பயிற்சி அளிக்க 1983-ல் கொள்கை அளவில் அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசகர்களின் பரம்பரை உரிமையை நீக்கும்பொருட்டு 1959 ஆம் ஆண்டு 22-வது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின், 55-வது பிரிவு, திருத்தப்பட்டது. அனைவருக்கும் வேலை வாய்ப்பு சமமாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதையும், உச்சநீதி மன்ற தீர்ப்பினையும் கருத்திற் கொண்டு சாதி, இன வேறுபாடின்றி பூசகரையும், இதர உள்துறை பணியாளர்களையும் நியமனம் செய்வது குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனை கூறுமாறு நீதிபதி மகராஜன் தலைமையில் ஒரு வல்லுநர் குழு, அமைக்கப்பட்டது. இந்த வல்லுநர் குழு சனவரி 1982-ல் தனது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்தது.

மேற்படி நீதிபதி மகராஜன் வல்லுநர் குழு பரிந்துரைகளை செயல்படுத்த உரிய வழிமுறைகளை வகுத்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க 14 நபர்கள் கொண்ட குழுவை ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்கள் தலைமையில் அரசு நியமித்தது. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின் தலைமையில் அமைத்த வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அரசு ஏற்றுக் கொண்டு, சாதி வேறுபாடின்றி அர்ச்சகர்கள் பயிற்சி பெறலாம் என்ற உணர்வை வளர்க்கவும், பயிற்சி பெறுகிறவர்களில் தக்கவர்கள் அதற்குரிய ஆலயங்களில் பணிபுரிய வாய்ப்பு பெறவும், எவ்வித பயிற்சியுமின்றி அர்ச்சகர்கள் உள்ள அவல நிலையைப் போக்கவும், ஓர் ஆகமப் பயிற்சி பள்ளியைப் பழனியில் அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோயிலின் சார்பில் நடத்த அனுமதி வழங்கி அரசு ஆணை வழங்கியுள்ளது. மேலும் இப்பள்ளியில் பின்பற்றப்பட உள்ள பாடத் திட்டம், தேர்வுத் திட்டம், கல்வி மற்றும் வயது, தகுதிகள், மாணவர்களுக்கு தர வேண்டிய வசதிகள், பள்ளியில் நியமிக்கப்படும் ஆசிரியர்களின் தகுதிகள் ஆகியவை மீது மேற்படி குழு செய்துள்ள பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக்கொண்டது.

22. ஆலய வழிபாட்டில் விஞ்ஞான அடிப்படை :

தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் சொல்லப்படும் பாக்கள், மந்திரங்கள் மற்றும் வழிபாட்டு விக்கிரகங்களுக்குத் தண்ணீர், எண்ணெய் முதலியவற்றால் செய்யப்படும் அபிஷேகங்கள், அவைகளுக்கு பழங்கள் இலை இவைகளை உபயோகித்தல் ஆகியன அறிவியல் அடிப்படையிலானது என்பது பற்றியும்,



வழிபாட்டின்போது உச்சரிக்கப்படும் '' ஓம் '' என்ற மந்திரமும், அபிஷேகத்தின்போது விக்கிரகங்களிலிருந்து அபிஷேகப் பொருள்களுக்கு ஏற்ப மாறுபடும் மின் அதிர்வுகளும் வழிபடும் பக்தர்கள் உடல் ஆரோக்கியம் பெற உதவுகிறது என்பது பற்றிக் கூறப்படும் கூற்றுகளுக்கு விஞ்ஞான பூர்வமாக ஏதாவது அடிப்படை உள்ளதா எனக் கண்டறிய இயற்பியலும், மின் கருவி இயக்கங்கள் மற்றும் மின் சுற்றுகளிலும் வல்லுநர்களைக் கொண்டு, சென்னை, கிண்டி பொறியியல் கல்லூரி பவர் சிஸ்டம்ஸ் பேராசிரியர் டாக்டர் பா. இளங்கோ அவர்களைத் தலைவராகக் கொண்ட ஏழு பேர்கள் அடங்கிய வல்லுநர் குழு ஒன்றை அரசு 27–10–1984 இல் அமைத்துள்ளது. இந்தக் குழு வழிபாட்டு முறைகளை சோதனைகள் மூலம் பரிசீலிக்க மனோதத்துவ மருத்துவர் மற்றும் ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற வல்லுநர் ஒருவரையும் குழுவில் சேர்த்து, பின் ஆய்வுகளை நடத்தி, கருத்துக்களைத் திரட்டி அறிக்கை அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

23. ஆணையாளரின் பொதுநல நிதி :

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 97ஆம் பிரிவின்படி, இந்து சமய அறக்கட்டளைகள் பொது நலநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்தும் அல்லது வேறு எவரேனும் மனமுவந்து கொடுக்கும் தொகையைக் கொண்டும் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இந்து சமய அறநிலையங்களுக்கும் அல்லது யாதொரு வகை சமய நிறுவனங்களுக்கும் பொதுவாக உள்ள சமய நெறிகளை பரப்பவும் இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 66(1)ல் குறிப்பிட்டுள்ள செயல் நோக்கங்கள் வெற்றிக்காகவும், திருக்கோயிலையும் அதில் உள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் இந்நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையாளரின் பொறுப்பில் உள்ளது.

1985–86 ஆம் நிதி ஆண்டில் ரூ. 2,62,450 தொகை கீழ்க் கண்ட விவரப்படி, மேற்படி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது:—

| | | ரூ. |
|---|---|---|
| 1 | திருப்பணி வேலைகள் .. .. | 1,93,450.00 |
| 2 | தேவாரப் பாடசாலை .. .. | 4,000.00 |
| 3 | திருக்கோயிலைப்பற்றிய செய்திப் படம் தயாரிக்க. | 65,000.00 |

[1986 ஏப்ரல் 25

24. திருமடங்கள் நிர்வாகத்தைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

தமிழ்நாட்டிலுள்ள திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகளைக் களைந்து நிர்வாகத்தினை சீராக்கும் பொருட்டு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் 22 இல் தேவையான சில மாற்றங்கள் செய்வது குறித்து சட்ட மன்றத்திலே 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு கொண்டு வந்து (சட்ட முன் வடிவு எண் 64/81) அது மைய அரசிற்கு அனுப்பப் பட்டு அதன் இசைவு எதிர் நோக்கப்படுகிறது.

25. புதிய திட்டங்கள் :

ஆலயங்களின் நிலை, வழிபாட்டுக்கான வசதிகளை மேம் படுத்தவும், இந்து சமய அறநிலையத்துறை செவ்வனே செயல் படவும் அரசு பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கைகளின் விபரங்கள், கீழ்வரும் பத்திகளில் விரிவா கக் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பணி முன்னேற்றம் பற்றிய ஆய்வு.

அரசின்கீழ் உள்ள பல்வேறு துறைகளின் பணிகளை விரை வாக முடிக்க ஏதுவாக அரசால் அத்துறை சம்பந்தப்பட்ட இனங் களுக்கு ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ் விலக்கிற்கேற்ப அடையப்பெற்ற முன்னேற்றம், ஒவ்வொரு திங்கள் மற்றும் காலாண்டுகளில் அடையப்பெற்ற முன்னேற்றங் கள் துல்லியமாக சீராய்வு செய்யப்பட்டு அவ்வப்போது மதிப் புரைகள் அரசால் வழங்கப்படுகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையைப் பொறுத்த மட்டில், 1985–86 ஆம் ஆண் டிற்கு நிலம் மற்றும் கட்டிடங்களில் இருந்து பெறப்படும் வரு மானங்களை சீரிய முறையில் வசூலித்தல், திருக்கோயில் கணக்கு களை தணிக்கை செய்தல், வங்கிகளில் திருக்கோயில்களின் வைப்பு நிதி அதிகரிக்க கோயில்களை ஆய்வு செய்தல், கும்பாபிஷேகப் வழிபாடுகளை மேம்படுத்துதல் போன்ற இனங்களுக்கு அரசு, இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்விலக்குகளுக்கு எதிராக 28–2–1986 வரை அடையப் பெற்ற முன்னேற்றம் பெரும்பா லான இனங்களில் திருப்திகரமாக உள்ளது. அனைத்து இனங் களிலும் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 30–6–1986-க்குள் அடை யப்பெறும்.

(இ) தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை சரிபார்க்கும் குழு.

நகைகளை சரி பார்த்தல் மற்றும் மறு மதிப்பீடு செய்தல் போன்றவற்றில் தற்போதுள்ள நடைமுறைகளை இன்னும் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்த, பணியிலிருந்து ஓய்வு பெற்ற



1986 ஏப்ரல் 25]

உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலை மையில் தங்கம் மற்றும் வைர நகைகளை சரி பார்ப்பதில் நிபுணர் கள், ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்ட பொறுப்பு வாய்ந்த 4 பிரமுகர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை அரசு நியமித் துள்ளது.

தமிழக திருக்கோயில்களில் நகைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு தேவையானபொழுதும், சந்தேகம் அல்லது புகார் கள் வரும்பொழுதும், சம்பந்தப்பட்ட திருக்கோயிலுக்குச் சென்று ஆய்வு செய்வதும், தங்கம், வெள்ளி, வைரம் மற்றும் இதர மதிப்பு வாய்ந்த கற்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதும் இக்குழுவின் பணிகளாக இருக்கும்.

(உ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

தற்போது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் நேரடி தேர்வு மூலம் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு அவர் கள் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்பு 60 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால், இத்துறையில் உள்ள பணி யாளர்கள் ஆலய சொத்துக்களை நிர்வகித்தல், ஆலய வருமா னத்தைப் பாதுகாத்தல், மற்றும் பெருக்குதல், ஆலய பண்பாடு மற்றும் பாரம்பரியத்தைப் பேணிக் காத்தல், அனைத்துப் பிரிவு மக்களின் உணர்வுகளை மதித்து ஆலய நிர்வாகத்தை நிர்வகிக் கும் பொறுப்பு போன்ற பலதரப்பட்ட பொறுப்புக்களை நிர் வகிக்க வேண்டியுள்ளது. அன்னார் ஏற்க வேண்டிய பொறுப்பு களுக்கு ஏற்ற வகையில் தற்போதுள்ள பயிற்சி போதுமானதாக இல்லையாதலால் மேற்படி பொறுப்புக்களின் பேரில் தக்க பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும். எனவே, இத்துறையில் நேரடியாக நியமனம் பெறும் அலுவலர் மற்றும் ஏற்கெனவே இப்பணியில் உள்ள அலுவலர்கள் ஆகியோர்கள் தத்தம் பணி யினை சீரிய முறையில் மேற்கொள்ள ஏதுவாக பயிற்சித் திட் டத்தை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(எ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வழக்குகளை நடத்த சட்ட அலுவலர்கள் நியமித்தல்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் அறநிலையங்களின் எண்ணிக்கை கூடுதலாகிக்கொண்டே இருப் பதால், அது சம்பந்தப்பட்ட வழக்குகளும் கூடுதலாகிக் கொண்டே இருக்கிறது. பல்வேறு நீதி மன்றங்களில் நிலுவையில் இருந்து வரும் மேற்படி வழக்குகளை துரிதப்படுத்தி முடிப்பதற்கென தனியாக அறநிலையத் துறையில் சட்ட அலுவலர்கள் நியமிப்பது தேவை என்று கருதப்படுகிறது. எனவே, மேற்படி பணிக்காக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் கீழ்க்கண்ட சட்ட

அலுவலர்களும் மற்றும் அதற்கான துணை பணியாளர்களும் நியமனம் செய்வதற்காக 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தொகை ரூ. 0.55 இலட்சம் ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(1) சென்னை, உயர்நீதிமன்றக் கூடுதல் வழக்கறிஞர் பதவி நிலையில் ஒரு பதவி.

(2) அரசு வழக்கறிஞர் பதவி நிலையில் ஒரு பதவி.

(3) நகர் அரசு வழக்கறிஞர் பதவி நிலையில் ஒரு பதவி.

(4) ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவி.

இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்களின் பரிபாலனம் செம்மையான முறையில் நடத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. திருக்கோயில்களின் வருமானங்களை உயர்த்துதல், அக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை பாதுகாத்தல் அவைகளிடத்தேயுள்ள விலைமதிப்பிடமுடியா சிற்பங்கள் உலோகத் திருமேனிகள், இவைகளை சீரிய முறையில் பாதுகாத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், நம் திருக்கோயில்கள் அனைத்தும், சிறந்த கட்டிடக் கலை மற்றும் உலோக வார்ப்பு போன்ற துறைகளில் அடைந்திருந்த நமது முன்னோர்களின் முன்னேற்றத்தை எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளன. இவைகளைப் பாதுகாத்து, ஆலய நெறிமுறைகள் செழித்தோங்கி வழிபாடுகள் செவ்வனே நடைமுறைப்படுத்தப்படுவதை இத்துறையைப் பொறுத்த மட்டில் தமது தலையாய கடமையாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. இனியும் தொடர்ந்து இங்ஙனம் செயல்பட்டு வரும்.

## இணைப்பு IV.

(563ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

சின்கோனாத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு

1986–87-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

கோரிக்கை எண். 25 —சின்கோனா மற்றும் 56 மூலதனச் செலவு

### 1. முன்னுரை :

தமிழ் நாடு அரசின் வணிகத் துறையான சின்கோனாத் துறையின் வயது 125 ஆண்டுகளாகும். இத்துறையானது 1950-ம் ஆண்டு வரை மலேரியாவைக் குணப்படுத்த உதவும் கொய்னாப் பொருட்களை மட்டும் தயாரித்து வந்தது. கொய்னாப் பொருட்களின் தேவை குறைந்ததாலும் அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, மருந்து மற்றும் நறுமனச் செடிகளைப் பயிரிடுவதிலும், இயற்கை நறுமண எண்ணெய்களைத் தயாரிப்பதிலும் தனது நடவடிக்கையை விரிவுப் படுத்திக் கொண்டது. வணிக அடிப்படையில் இத்துறை இயங்கி வந்தாலும், மலைப் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கு முக்கியத்துவத்தை அளித்து வருகிறது.





31—12—1985 தேதியில், இத்துறையில் 2,061 நிரந்தரத் தொழிலாளர்களும் 980 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 3,041 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை மற்றும் அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக் கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையில் கொய்னாப் பொருட்களுக்கான மூலப் பொருட்களும் நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையில் வாசனை எண்ணெய் பொருட்களுக்கான மூலப் பொருட்கள் யாவும் பதனிடப்படுகின்றன. நறுமண பொருட்களுக்கான தைலங்கள் தோட்டங்களில் உள்ள கலங்களில் வடிக்கப்பட்டு, அதன் பிறகு அவ்வாறு வடிக்கப்பட்ட கச்சா எண்ணெய்கள் நடுவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலத் தொழிற்சாலைக்கு சுத்திகரிப்பு செய்து தரக்கட்டுப்பாட்டுடன் விற்பனைக்கு அனுப்புதற்கும் அனுப்பப் படுகின்றன.

1.2. துறையின் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் ஆதி திராவிடர்கள் (Adi–Dravidars—scheduled casets) பின் தங்கிய வகுப்பினர் (Back ward classes) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத்துறை பெருமையடைகிறது. சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப் படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை தடுத்து உயிர் காக்க பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், மற்றொரு பிரிவு, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைல வகைத் தாவரங்களைப் பயிரிடும் பணியை, 1950 ஆம் ஆண்டு முதல் இத்துறை மேற்கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பல திறப்படுத்துவதற்கான முயற்சிகள்

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில இத்துறை, மாணவர்கட்கு இலவசமாக பற்பொடி வழங்கும் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் பற்பொடி தயாரித்து கிராமப் புறக் குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பற்பொடி 30 கிராம் எடையுள்ள பைகளில் நீலகிரி, கோயமுத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி, திருச்சி மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களிலுள்ள கிராமப் புறக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் ஏறக்குறைய பதினெட்டு லட்சம் குழந்தைகள் சுத்தமான பற்பொடியினால் ஒவ்வொரு மாதமும் பயனடைகின்றனர்.

2. தயாரிப்பு :

சின்கோனாப் பொருட்கள்.

2.1. உலக நாடுகளின் தேவைகள், மற்றும் உள்நாட்டுத் தேவைகளுக்கேற்ப கொய்னாப் பொருட்களின் விற்பனை அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது, இப்பொருட்களுக்கான தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும் இப்பொருட்களுக்கான தேவை குறைந்துவிட்டது. ஆனால் 1960-ம் ஆண்டிற்கும் 1970-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பொருட்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்னாப் பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில், நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றி பரவி வருவதால், இந்திய அரசு, 1978 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கொய்னாப் பொருட்களின் வெளி நாட்டு ஏற்றுமதிக்குத் தடை விதித்தது. மாநில அரசு பல முறை வேண்டியதற்கிணங்க 1978–79, 1979–80, 1980–81 1981–82 ஆண்டுகளில் மத்திய அரசு இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய உயிர் காக்கும் மருந்துகள் தடையேதுமின்றி நிலையாகக் கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும் கருதுவதால் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திடீரென்று தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்ட காலமாக நிலவிய அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்தில் அனைத்து நாடுகளிலும் விற்பனை செய்ய இயலாததால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமாகி விட்டது. தற்போது, மத்திய அரசு கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் பேரிலிருந்த தடையை நீக்கி "பொது அனுமதியின்" பேரில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.



2.2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராமில்.) | வருவாய். (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1982–83 | உள் நாட்டு விற்பனை | 507 | 4.61 |
| (உள்ளபடி) | வெளிநாட்டு விற்பனை | .. | .. |
| | மொத்தம் .. | 507 | 4.61 |
| 1983–84 | உள்நாட்டு விற்பனை | 660 | 5.10 |
| (உள்ளபடி) | வெளிநாட்டு விற்பனை | 1,900 | 14.50 |
| | மொத்தம் .. | 2,560 | 19.60 |
| 1984–85 | உள்நாட்டு விற்பனை | 757 | 5.79 |
| (உள்ளபடி) | வெளிநாட்டு விற்பனை | 6,000* | 0.48 |
| | மொத்தம் .. | 6,757 | 6.27 |
| சின்கோ அல்கலாய்டு விற்பனை | | | |
| 985–86 | உள்நாட்டு விற்பனை | 3,174 | 8.84 |
| மதிப்பிடப் பட்டது) | வெளிநாட்டு விற்பனை | 4,300 | 36.69 |
| | மொத்தம் .. | 7,474 | 45.53 |
| 986–87 | உள்நாட்டு விற்பனை | 1,000 | 8.00 |
| மதிப்பிடப் ட்டது) | வெளிநாட்டு விற்பனை | 3,000 | 24.00 |
| | மொத்தம் .. | 4,000 | 32.00 |

31—3—1986 ஆம் நாளன்று இருப்பிலுள்ள கொய்னாப் பொருட்கள், அவற்றின் மதிப்பு ஆகிய விபரங்கள் வருமாறு:—

| வரிசை எண்ணும் கொய்னாப் பொருட்களின் பெயரும். | இருப்பிலுள்ள அளவு. | விலை கிலோ ஒன்றுக்கு. | மொத்த மதிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (கிலோ கிராம்.) | ரூபாய் | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. குனைன் சல்பேட் | 1,325 | 788 | 10.34 |
| 2. குனைன் ஹைட்ரோ குளோரைடு | 81 | 1,088 | 0.88 |
| 3. சின்கோனா பெப்ரிபியூஜ் | 1,527 | 215 | 3.28 |
| 4. குனிடின் சல்பேட் | 2 | .. | 0.03 |
| மொத்தம் .. | 2,935 | | 14.53 |

குறிப்பு.—மொத்த இருப்பிலுள்ள 51.83 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்களில், 1985—86-ல் ரூ. 37.30 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. மீதம் இருப்பிலுள்ள 14.53 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்களை விற்பனை செய்ய தகுந்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் கிலோ சின்கோனாப்பட்டையில் இருந்து 2,500 கிலோ கிராம் குனைன் சல்பேட் மற்றும் 1,500 கிலோ கிராம் சின்கோனா பெப்ரிபியூஜ் ஆகியவைகளைப் பிரித்தெடுக்க ஆனைமலை கொய்னாத் தொழிற்சாலையில் திரும்பவும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய மலேரியா ஒழிப்புத் திட்ட நிறுவனத்திற்கு வினியோகம் செய்ய போதுமான கொய்னாப் பொருட்கள் இருப்பில் இருந்த போதிலும் 1983-84 ஆம் ஆண்டு முதற்கொண்டு அவர்கள் இத்துறையிலிருந்து கொய்னாப் பொருட்கள் ஏதும் வாங்கவில்லை.





2.3. கொய்னாப்பொருட்களின் விற்பனை விலையை மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையை விடக்குறைவாக உள்ளதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு, இந்திய அரசைக் கேட்டுள்ளது. விலையை நிர்ணயிக்கும் பணியானது, தொழில்களின் உற்பத்தியை மதிப்பிடலும் விலையை நிர்ணயித்தலும் செய்யும் குழுவின் ஆய்வில் உள்ளது.

| பொருட்களின் பெயர். | உற்பத்தி விலை 1983-84 | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (விலைகள் கிலோகிராம் ஒன்றிற்கு.) | |
| 1. குனைன் சல்பேட் Quinine Sulphate | 868.76 | 788.00 |
| 2. குனிடின் சல்பேட் Quinidine Sulphate | உற்பத்தி இல்லை. | 1,313.00 |
| 3. குனைன் ஹைட்ரோகுளோரைடு Quinine Hydrochloride | உற்பத்தி இல்லை. | 1,088.00 |
| 4. சின்கோனா பெப்ரிபியூஜ் Cinchona Febrifuge | உற்பத்தி இல்லை. | .. |

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் :

2.4. (அ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை வாயிலாக இத்துறை குறிப்பிடத் தகுந்த வருவாயை ஈட்டி வருகிறது. மேற்குறிப்பிடப்பட்ட வருவாய் சீராக வளர்ந்து வருவதோடு வரும் ஆண்டுகளில் அதிகரிக்கும் எனவும் நம்பப்படுகிறது.

(ஆ) பொதுமக்கள் விரும்புகின்ற சின்பிரஸ், சினோமாஸ் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இத்துறையில் விற்பனை செய்யப்படும் மிக சுத்தமான யூகலிப்டஸ் தைலத்திற்கான தேவையும் அதிகரித்துள்ளது.

(1) மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்து வருகிறது. அதன் விளைவாக ரூ. 31,163 மதிப்புள்ள துறையின் பொருட்கள் தமிழகமெங்குமுள்ள காதிகிராப்ட் விற்பனை நிலையங்களில் 1984-85ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1985-86ம் ஆண்டில் ரூ. 31,712 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. 1986-87ம் ஆண்டும் ரூ. 35,000 மதிப்பிற்கு பொருட்களை காதி இராப்ட் மூலமாக விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1984-85ம் ஆண்டில் ரூ. 66,972 மதிப்புள்ள பொருட்கள் மதுரை, கோவை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்பட்டது. 1985-86ம் ஆண்டில் ரூ. 60,000 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் ஆங்காங்கு இனிமேல் நடைபெறும் கண்காட்சிகளில் இத்துறை பங்கேற்று துறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விளம்பரம் செய்தும், விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்படும்.

(2) 1983-84ம் ஆண்டிலிருந்து மருந்து மற்றும் நறுமணத் தைல விற்பனை மூலம் துறைக்குக் கிடைத்த வருவாயின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| | |
|---|---|
| 1983-84 (உள்ளபடி) .. .. | ரூ. 33.31 இலட்சம். |
| 1984-85 (உள்ளபடி) .. .. | ரூ. 51.54 இலட்சம் |
| 1985-86 (எதிர்பார்க்கப்படுகிறது) | ரூ. 60.63 இலட்சம். |
| 1986-87 (எதிர்பார்க்கப்படுகிறது) | ரூ. 56.15 இலட்சம். |





துறையில் தயாரிக்சப்படும் பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு :

| பொருட்களின் பெயர். (1) | 1983-84 (உள்ளபடி) (2) | 1984-85 (உள்ளபடி). (3) | 1985-86 (திருத்திய மதிப்பீடு) (4) | 1986-87 (திட்ட மதிப்பீடு) (5) |
|---|---|---|---|---|
| | (அளவுகள் கிலோ கிராமில்.) | | | |
| 1. யூகலிப்டஸ் தைலம் சினியோல் அளவு (70 சதவீதத்திற்கு மேல்). | 1,050 | 3,779 | 3,000 | 4,000 |
| 2 யூகலிப்டஸ் தைலம் ஐ.பி. | 1,551 | 5,527 | 6,000 | 6,000 |
| 3 ஜெரேனியம் தைலம். | 2,693 | 2,471 | 3.400 | 3,500 |
| 4 யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம். | 3,388 | 6,340 | 6,000 | 6,000 |
| 5 ஜாவா சிட்ரோனல்லா தைலம். | 4,350 | 6,251 | 10,000 | 10,000 |
| 6 லெமன் கிராஸ் தைலம். | 5 | .. | .. | .. |
| 7 பச்சோலி தைலம் | 1 | 2 | 10 | 10 |
| 8 வின்டர்கிரீன் தைலம் | 8 | 11 | .. | .. |
| 9 சின்னமம் தைலம் | 11 | 1 | .. | .. |
| 10 தொட்டபெட்டா மிஸ்ட். | 11 | 11 | 15 | 15 |
| 11 சினோரமா .. | 9 | 13 | 15 | 15 |
| 12 சினோமாஸ் (25 கிராம்). | 5,000 | 4,560 | 5,000 | 5,000 |
| 13 சின்ஸ்பிரே (லிட்டர்களில்) | 1,650 | 900 | 1,500 | 1,500 |
| 14 சின்பிரஷ் (லிட்டர்களில்). | 44,450 | 55,000 | 1,000,00 | 1,00,000 |

கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகளின் தயாரிப்பு :

2.5. சின்கோனாத் துறையில் பலதறத் திட்டத்தின் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் நடுவட்டம் என்னுமிடத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் கற்பூரத் தைலம் மற்றும் கற்பூர வில்லைகள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளின் உற்பத்தி நிறைவளிக்கும் வகையில் உள்ளது. இதனை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

[1986 ஏப்ரல் 25

| பொருட்களின் பெயர். (1) | 1983-84 (உள்ள படி). (2) | 1984-85 (உள்ள படி). (3) | 1985-86 (திருத்திய மதிப் பீடு). (4) | 1986-87 (திட்ட மதிப் பீடு). (5) |
|---|---|---|---|---|
| கற்பூரத் தைலம் (கிலோ கிராமில்). | 138 | 184 | 250 | 1100 |
| கற்பூர வில்லைகள் (எண்களில்). | 2,01,585 | 2,84,550 | 4,00,000 | 1,00,000 |

2.6. மாநிலத்தின் இந்து சமய அறக்கட்டளை துறையின் கீழ் இயங்கிவரும் திருக்கோவில்களுக்கு இத்துறையில் தயாரிக்கப் படும் கற்பூர வில்லைகள் வினியோகம் செய்யப்படுகிறது. துறையில் தயாரிக்கப்படும் இந்த இயற்கை கற்பூரம் நல்ல தரத்தைச் சேர்ந்ததுடன், மருத்துவத் தயாரிப்பில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

3. மலைத் தோட்டங்கள் :

3.1. பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் அப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 31-12-1985ம் நாளன்றின்படி 2,141.83 ஹெக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,637.38 ஹக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலவகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வை யில் கொண்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு :—

| பயிர்கள். (1) | நீலகிரி. (2) | கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலை. (3) | அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | (நிலப்பரப்பு ஹெக்டேர்களில்). | | | |
| சின்கோனா | 492.12 | 1,649.71 | .. | 2,14.12 |
| மருந்து மற்றும் நறு மணத் தைலப் பயிர்கள் | 978.53 | 418.60 | 240.25 | 1,637.38 |
| மொத்தம் .. | 1,470.65 | 2,068.31 | 240.25 | 31.779.21 |



1986 ஏப்ரல் 25]

**4. மலைத் தோட்டத் திட்டங்கள் :**

4. ஏற்கெனவே கொய்னாப் பொருட்கள் தேக்க நிலையில் இருப்பில் இருந்ததால், 1984–85 ஆம் ஆண்டில் சின்கோனா புதிதாக பயிர் செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டது. எனினும் வேறு வணிக பயிரை சாகுபடி செய்வது பற்றி முடிவு செய்யப்படும். 1984–85 ஆம் ஆண்டில் 101.60 ஹெக்டேர் நிலப்பரப்பில் மருந்து மற்றும் நறுமணத்தைலப் பயிர்கள் புதிதாக சாகுபடி செய்யப்பட்டன. 1985–86-ல் 83.50 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோ னல்லாப் புல் என்னும் நறுமணத் தைலப் புல் நீலகிரி மாவட்டத்தி லுள்ள கூடலூர் தாலுக்காவில் சாகுபடி செய்யும் பணி 1980ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல மேற்கொள்ளப்பட்டது. இது வரை 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் 160 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஜாவா சிட்ரோனல்லா புல் தைலப் பயிர், பயிரிட திட்டமிட்டி ருந்தாலும் தேவையான நிலப்பரப்பு இல்லாமையால், மேற் கொண்டு சாகுபடி செய்யப்படவில்லை.

5. ஆராய்ச்சி :

5.1. அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களையும் ஏனைய மருந்து மற்றும் நறுமண செடிவகைகளை வளர்க்கும் முறைகளை மேம்படுத்துவதில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான தீவிர ஆராய்ச்சிகள் நடத்த, ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் 1976ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சின்கோனா மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்களைப் பயிரிடுதல் குறித்த ஆராய்ச்சிப் பணிகளும் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. குனைனிலிருந்து குனிடின் தயாரிப்பது பற்றி ஆராய்ச்சிப்பணி லக்னோவிலுள்ள மத்திய மருந்தாய்வுக் கூடத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய மருந்தாய்வுக் கூடம் மேற்சொன்ன ஆராய்ச்சிப் பணியை 1–6–1982 முதல் செய்து வருகிறது. அது குறித்த அறிக்கை ஆய்வில் உள்ளது.

6. தொழிலாளர் நலன் ;

6.1. தொழிலாளர்கள் இத்துறையின் உற்பத்திப் பணிகளில் பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக் கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயல்படுவதில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கிடையே நல்லுறவு நிலவு வதற்கும். தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக கவனம்

செலுத்தப்படுகிறது. ஆடவர் மகளிர் ஆகிய இருபால் தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுவதோடு விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு கூலியாக ரூ. 12.65 (ரூபாய் பன்னிரெண்டு மற்றும் பைசா அறுபத்தைந்து மட்டும்) வழங்கப்படுகிறது. 1,281 தரமான தொழிலாளர்கள் குடியிருப்புகள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, புதிய குடியிருப்புகளைக் கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்பட்டு வருகிறது. தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மாநில திட்டப்பணிகளின் கீழ் தொடங்கப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டின் இறுதிவரையில் மொத்தம் 426 தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1976–77 ஆம் ஆண்டு இறுதிவரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 141 | |
| 1977–78 முதல் 1984–85 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 285 | 426 |
| 1985–86 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கும்பணி மேற்கொண்டுள்ள குடியிருப்புகள். | 235 | |
| 1986–87 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட உள்ள குடியிருப்புகள். | 620 | 855 |
| மொத்தம் .. | | 1,281 |

1985–86 ஆம் ஆண்டில் 25 புதிய தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ள ரூ. 9.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 2.20 இலட்சம் செலவில் 256 தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் பணி, பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்கண்ட பணியும் நல்ல முன்னேற்ற நிலையில் உள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் 20 தொழிலாளர்கள் குடியிருப்புகள் கட்ட ரூ. 6.60 இலட்சம், மற்றும் 75 குடியிருப்புகளுக்கு மின்வசதி பொருத்த ரூ. 1.40 இலட்சங்கள் என பகுதி-2 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 426 தரமான தொழிலாளர் குடியிருப்புகளை இத்துறை கட்டி முடித்துள்ளதோடு மேலும் 235 குடியிருப்புகள் கட்டும் பணி செவ்வனே நடைபெற்று வருகின்றன. புதிய தொழிலாளர் குடியிருப்புகளில் மின்வசதி, நீரடிக் கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டு



பழுது பார்க்கும் பணிகள் (Annual Repairs) அல்லாமல் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் (Special Repairs) குடியிருப்புகளிலுள்ள பழுதடைந்த பொருட்களைப் புதுப்பித்தல் போன்ற பணிகளும் காலவாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

6.2. பல்வேறு பிரிவுகளிலுள்ள துறையின் மருந்தகங்கள், மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. நீலகிரியில் கூடலூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் சின்கோனா தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. ஆனைமலை மற்றும் நீலகிரியில் நோயாளிகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்ல நோயாளி ஊர்தியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

6.3. அரசு சின்கோனாத் தோட்டங்களிலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இத்துறையின் தொழிலாளர்களது குழந்தைகளின் உணவளிக்கும் தொகை, இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.50 பைசாவாக இருந்தது ரூ. 1 எனவும், இரண்டு வயதிற்குக்குறைவாக உள்ள குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.30 பைசாவிலிருந்து 0.80 பைசாவிற்கும் உயர்த்தப்பட்டுள்ளது.

6.4. தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்திலேயே தினமும் இலவச தேனீர் வழங்கப்படுகிறது.

6.5. இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலன் சட்டங்களும் அவற்றின் கீழ் வரும் விதிகளும் பொருந்தும். ஆண்டு தோறும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு, பேறுகாலச் சலுகைகள், சம்பளத்துடன் கூடிய நோய்க்கால விடுப்பு, ஓய்வுக்கால நன்கொடை வருங்கால சேமநல நிதியில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு அரசு சந்தாத் தொகை அளித்தல், வெம்மை கம்பளியும் (Sleeping Rug) மற்றும் மழைக்கம்பளியும் (Rain Cumbly) அளித்தல், இலவச வீட்டு வசதி அளித்தல் போன்ற சலுகைகளுக்காக இத்துறை கணிசமான தொகையை செலவு செய்கிறது. மாநில திட்டப் பணிகளிலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களிலும் தொழிலாளர் சட்டப்படி கட்டப்பட வேண்டிய தொழிலாளர் குடியிருப்புகளும் தற்போதுள்ள குடியிருப்புகளை புதுப்பித்தல் மற்றும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1986 ஏப்ரல் 25

7. துறையின் நிதி நிலைமை :

அனைத்து நாடுகள் சந்தைகளில் விலை ஏற்ற இறக்கம், மற்றும் கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. 1983–84ம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித்தொகை ரூ. 106.34 இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 34.77 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 128.63 இலட்சங்கள் செலுத்தப்பட்டபிறகு ரூ. 38.97 இலட்சங்கள் (சென்னை மாநில கணக்கரால் ஆய்வு செய்யப்பட்ட 1984–85 ஆம் ஆண்டின் அமைந்த படிவக்கணக்குகளின்படி) துறைக்கு இழப்பு ஏற்படும். 1985–86ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 145.04 இலட்சங்கள் செலுத்திய பின்னர் ரூ. 35.01 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பாகவும், 1986–87-ம் ஆண்டின் திட்ட மதிப்பின்படி மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 150.00 இலட்சங்கள் செலுத்திய பின்னர் ரூ. 35.02 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1985-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31ம் நாளின்படி, நிலையான சொத்துக்கள் ரூ. 8.87 கோடி பண்டகசாலை இருப்புகள், முடிக்கப்பட்ட பொருட்கள். நடைபெற்று வரும் பணிகள், சில்லரைக் கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 6.39 கோடி உட்பட இத்துறையின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 15.26 கோடியாகும்.

8. இத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் :

(அ) சின்கோனா பெப்ரிமியூஜிலிருந்து குனைன் சல்பேட், குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல், தேயிலை கழிவிலிருந்து 'கபீன்' தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனைகளாகும். குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள கார்டிசான் ஸ்டிராய்டு ஆமோன் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளான ''டயஸ்ஜெனின்'' என்ற பொருளைத் தயாரித்தல், கொசுக்களை விரட்டும் ''சினோமாஸ்'' என்ற களிம்பையும் ''சின்ஸ்ப்ரே'' என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல் ''சினோரமா'', ''தொட்டபெட்டா மிஸ்ட்'' ஆகிய வாசனைத் திரவியங்களைத் தயாரித்தல் போன்றவை உற்பத்தியைப் பலதிறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.

(ஆ) 1982–83 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் பொருட்களை காதி மற்றும் கிராமிய விற்பனை நிலையங்களின் மூலமாகவும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநிலம் எங்குமுள்ள 55 காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் இத்துறையின் பொருட்கள் விற்பனைக்குள்ளன. சென்னையிலும் மற்றுமுள்ள



1986 ஏப்ரல் 25]

மாவட்டங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்கெடுத்து. பொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக இத்துறையின் நடவடிக்கைகள் மேலும் பரவ வழி செய்கிறது.

8.2. (அ) தற்போது கையிருப்பிலுள்ள கொய்னாப் பொருட்களின் அளவைக் கருத்திற்கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னாத் தொழிற்சாலையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சின்கோனாப்பட்டை பதனிடப்படும் பணி 1985–86-ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் செயல்பட உள்ளது.

(ஆ) நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி, திருச்சி மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் உள்ள கிராமியக் குழந்தைகளுக்கு இலவசமாக பற்பொடி வழங்குவதற்காக பற்பொடி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில், ரூ. 39.64 இலட்சங்கள் மதிப்புள்ள பற்பொடி தயாரிக்கப்பட்டு நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

(இ) நடப்பு நிதியாண்டில் பற்பொடி தயாரிக்கப்பட்டு, வினியோகம் செய்வதன் மூலமாக வருவாய் ரூ. 100 இலட்சங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறையில் தயாரித்து வினியோகம் செய்யப்படும் பற்பொடியின் தரம் போற்றப்படும் வகையில் உள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள மேலும் சில மாவட்டங்களுக்கும் பற்பொடி வழங்கும் பணியை இத்துறை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8.3. இத்துறையின் தோட்டப் பணிகளை மாற்றியமைத்தலின் மூலம் வேறு வணிகப் பயிர்களை பயிர் செய்யப் பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

8.4. மேற்கூறிய அபிவிருத்திப் பணிகள் யாவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டப் பணிகளின்கீழ் அமுலாக்கப்பட்டு வருகின்றன:

மாநிலத் திட்டப் பணிகள் :

1. சின்கோனாப் பயிரை முனைப்பு சாகுபடி மற்றும் பதியன் முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகள் வாணிப முறையில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிவகைகளின் வளர்ச்சிக்காக, முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. இத்துறையின் தோட்டப் பிரிவுகளுக்கான அலுவலகக் கட்டிடம் மற்றும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

[1986 ஏப்ரல் 25

5. தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

6. தேயிலைக் கழிவிலிருந்து ''கபீன்'' தயாரித்தல்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (1985–86 ஆம் ஆண்டு முதல் மாநிலத் திட்டத்திற்கு மாற்றப்பட்டது).

இத்திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனல்லா புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டு வரை 80 எக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தேவையான நிலப்பரப்பு இல்லாமையால் இத்திட்டத்தின் கீழ் மேற்கொண்டு 120 எக்டேர் திட்டமிட்டபடி பயிர் செய்ய இயலவில்லை.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

1985–86 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இருந்த சில பயனளிக்கும் திட்டங்கள், மாநிலத் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகள் வருமாறு :—

(1) டயஸ்கோரியா பயிரிடுதல் மற்றும் அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்துவதற்கு தொழிற்சாலை நிறுவுதல் 1985–86 ஆம் ஆண்டில் இது வரை 162 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் சுமார் 27 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்படும். ஸ்டிராய்டு தொழிற்சாலையில் சோதனை அளவில் டயஸ்ஜெனின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 1986–87 ஆம் ஆண்டு முதல் ஒழுங்கான உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) அண்ணா மாவட்டம் கொடைக்கானல், தாலுக்கா மேல் பழனிமலைப் பகுதியிலே உள்ள பேரிஜம் மற்றும் பெருமாள் மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல் மொத்தம் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விவரங்கள் வருமாறு :

1. பெருமாள்மலை 200 ஹெக்டேர்
2. மேல் பழனிக் குன்று 40.25 ஹெக்டேர்.

இத்திட்டத்தின்கீழ் திட்டமிட்டபடி பயிர் செய்யும் வேலைகள் பெருமாள்மலைப் பகுதியில் முடிக்கப்பட்டன. போதுமான நிலப்பரப்பு இல்லாமையால் பேரிஜம் பகுதியில் மேற்கொண்டு பயிரிடும் பணி மேற்கொள்ள இயலவில்லை. ஜெரேனியம் தைலத்தை வடித்தெடுப்பதற்காக, மேற்கண்ட நிலப்பரப்புகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.



1986 ஏப்ரல் 25]

9. திட்டப் பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையின் விவரம் வருமாறு :

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1983-84 (உள்ளபடி). | 45.06 | 3.24 | 26.11 | 74.41 |
| 1984–85 (உள்ளபடி). | 44.71 | 3.14 | 32.97 | 80.82 |
| 1985–86 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 14.77 | 5.82 | 45.25 | 65.84 |
| 1985–86 (திருத்திய மதிப்பீடு). | 45.22 | 6.26 | 11.00 | 62.48 |
| 1986–87 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 49.29 | 6.26 | 2.02 | 57.57 |

10. வரவு-செலவுத் திட்டம் :

| விவரங்கள். (1) | 1984–85 (உள்ள படி). (2) | 1985-86 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). (3) | 1985-86 (திருத்திய மதிப்பீடு). (4) | 1986-87 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| கோரிக்கை எண். 25 சின்கோனா 320 தொழில்கள் : | | | | |
| நெறிமுறைப்படுத்துதல் | 13.02 | 15.60 | 16.49 | 16.59 |
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை). | 75.50 | 68.05 | 73.26 | 73.62 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை, நடுவட்டம்—அரசு கொய்னாத் தொழிற் சாலை, ஆனைமலை). | 37.73 | 31.79 | 59.69 | 66.27 |
| விற்பனை | 2.56 | 2.23 | 2.81 | 2.68 |
| திட்டங்கள் (ஆராய்ச்சித் திட்டங்கள், மாநிலத் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்பவை). | 78.97 | 77.92 | 70.45 | 73.11 |
| வட்டி | 139.73 | 140.00 | 144.00 | 150.00 |
| மொத்தம் 320 தொழில்கள் | 347.51 | 335.59 | 366.70 | 382.27 |
| கோரிக்கை எண். 56 526 மூலதனச்செலவு | | | | |
| கட்டிடங்கள் | 20.86 | 33.22 | 23.00 | 6.22 |
| இயந்திரத் தளவாடங்கள். | .. | 2.00 | 2.00 | 2.00 |
| மொத்தம் 526 மூலதனச்செலவு. | 20.86 | 35.22 | 25.00 | 8.22 |
| பெரு மொத்தம் | 368.37 | 370.81 | 391.70 | 390.49 |



## இணைப்பு V.

(563ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### வனத்துறை.

### 1986–87.

1.1. இயற்கை நமக்களித்துள்ள அரிய பல செல்வங்களுள் காடுகள் முக்கியமானதொன்றாகும். இயற்கை அமைப்பில் காடுகள் அரியதொரு அங்கம் வகிக்கின்றன. மனித சமுதாயத்தின் நல்வாழ்வே இயற்கைச் சூழல் அமைப்பினைப் பேணிப் பாதுகாப்பதைப் பொறுத்து அமைகிறது. வனத் துறையில் மேம்பாட்டுப் பணிகளுக்காக செலவிடப்படும் நிதி ஒதுக்கீட்டில் கணிசமான பகுதி ஏழை மக்களுக்கு, அதிலும் குறிப்பாக, கிராமப்புற மக்களுக்குப் போய்ச் சேருகிறது. எனவே, வனத் துறையில் செயல்படுத்தப்படும் திட்ட மேம்பாட்டுப் பணிகளின் மூலம் வனவள அபிவிருத்திப் பணியும், வறுமை ஒழிப்புப் பணியும் இணைந்து நிறைவேற்றப்படுகின்றன. வன வளத்தினை சரியானபடி நிர்வகிப்பதன் காரணமாக, சுற்றுப்புறச் சூழல் நன்கு காக்கப்படுகிறது; தொழில் துறைகளின் தேவை நிறைவு பெற வாய்ப்பு ஏற்படுகிறது; மனித சமூகத்தின் பல தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகிறது. நமது வனச் செல்வம், பேணிப் பாதுகாக்கப்பட்டு, நமது எதிர்காலத் தலைமுறையினர் என்றும் அனுபவித்து மகிழும் பொருட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

1.2. இயற்கைச் சூழல் அமைப்பினை தொடர்ந்து சமநிலையில் நிலை நிறுத்த வேண்டிய அவசியத்தினை உணர்ந்தும் மக்களின் பல்வேறு தேவைகளையும் அவற்றை அடைய வேண்டிய பல சேவைகளையும் கருத்திற்கொண்டு தமிழக அரசு தெளிவான ஒரு வனப் பாதுகாப்புக் கொள்கையினைக் கடைபிடிப்பதென தீர்மானித்துள்ளது.

1.3. இக்கொள்கையினைத் தொடர்ந்து, வன நிர்வாகம் இலக்கிடப்பட்ட கிராமப்புற மக்களுக்கு சேவை செய்யும் வண்ணம் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகிறது:

(1) இயற்கைச் சூழல் பாதுகாப்பு, மற்றும் இயற்கைச் சூழல் புனரமைப்பு பணிகள் மூலம் இயற்கைச் சூழல் மேம்பாட்டுப் பணிகள் பல செய்து வனச் செல்வத்தை பெருக்குதல்;

(2) தரம் தாழ்ந்த காடுகளை, அதிலும் குறிப்பாக கிராமப்புற எல்லைகளை ஒட்டியுள்ள வனப் பகுதிகளின் உற்பத்தித் திறனை பெருக்கும் வண்ணம் மேம்பாடு செய்து அதில் கிட்டும் பலனை இலக்கிடப்பட்ட கிராமங்கள் அனுபவிக்க வழிவகை செய்தல்;

(3) வன விலங்குப் பாரம்பரியத்தை காத்தல் ;

(4) நிலத்திலிருந்து கூடுதல் விளைச்சல் பெறும் நோக்கோடு வேளாண்மைப் பணியினை மரம் வளர்க்கும் கலையோடு இணைத்தல் ;

(5) வனப் பகுதிகளை ஒட்டியுள்ள கிராமப் புறங்களில் சமூக நலக் காடுகள் திட்டத்தினை செயல்படுத்துவதின் மூலம் பழங்குடி மக்களும் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளவும், கிராமப்புற மக்களும் பயன்பெறும் வண்ணம் வனப் பணிகளை நிறைவேற்றுவதன் வாயிலாக மறைந்து கிடக்கும் வேலை வாய்ப்பினை வெளிக்கொணரல் ;

(6) வனச் செல்வத்தினை பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் பெருக்கி, மலைவாழ் மக்களின் சமூக, பொருளாதார நிலையினை வலுப்படுத்துதல் ;

(7) வணிக ரீதியில் சந்தனம், ரப்பர், தேயிலை போன்ற காடுபடு பொருட்களை நிர்வகித்தல் ;

(8) நீர்பிடிப்புப் பகுதிவாரியாக, அந்தந்த பகுதிகளை முழுமையான அளவு மேம்பாடு செய்ய வன அபிவிருத்திப் பணிகளை குறிப்பாக முனைந்து செயல்படுத்துதல் ;

(9) திட்டமிட்டு செயல்படும் கடத்தல் கும்பல்களையும், வேட்டையாடுவோரையும் முறியடிக்க பாதுகாப்பு பணிகளை நவீன முறைப்படி செய்தல் ;

(10) தொழில் துறைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, நேரடியாகவும், துணை செய்தும் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல் ;

(11) புள்ளி விபரம் சேகரித்தல், பணிகள் கண்காணிப்பு, திட்ட மதிப்பீடு போன்ற வேலைகளைச் செவ்வனே செய்யும் பொருட்டு நிர்வாக அமைப்பை மேம்பாடு செய்தல்.

வனப்பரப்பு :

2. 1984–85 ஆம் ஆண்டில் காடுகளின் மொத்தப் பரப்பு 22,316 சதுர கிலோ மீட்டர். இதில் காப்பு வனம் 18,297 சதுர கிலோ மீட்டர். காப்பு நிலம் 3,405 சதுர கிலோ மீட்டர், பாகுபடுத்தப்படாத காடுகள் 614 சதுர கிலோ மீட்டர்.





வனங்களிலிருந்து கிடைக்கும் வருவாயும், செலவுகளும் :

வருவாய் :

3.1. 1985–86 ஆம் ஆண்டில் காடுகளின் மூலம் எதிர் பார்க்கப்படும் வருவாய் 27.73 கோடி ரூபாய். வருவாயில் மிகுதியான பங்கு சந்தன மரத்திலிருந்தும், வனம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பெறும் மரங்கள் மற்றும் மரப் பட்டைகள் ஆகிய மூலப்பொருள்களிலிருந்தும் கிடைக்கிறது. விபரம் வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (அ) சந்தன மரம் .. .. | 11.83 |
| (ஆ) தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மூலப் பொருட்கள். | 8.73 |
| (இ) காடுபடு சிறு பொருட்கள் .. .. | 0.95 |
| (ஈ) வெட்டு மரங்கள், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம், வனப் பண்ணைத் தோட்டங்கள், இதர இனங்கள். | 6.22 |
| மொத்தம் .. .. | 27.73 |

3.2. 1986–87 ஆம் ஆண்டில் உத்தேச வருவாய் 25.08 கோடி ரூபாய். 1985–86-ல் வனம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு அதிக அளவில் யூகலிப்டஸ் கிராண்டிஸ், யூகலிப்டஸ் குளோபுலஸ் மற்றும் யூகலிப்டஸ் ஹைபிரிட் வழங்கியதால், 1985–86-ல் வருவாய் உயர்ந்துள்ளது. இயற்கைச் சூழலைப் பேணிக் காக்க வேண்டும் என்ற கொள்கைக்கொப்ப, 1986–87-ல் வனச்செயல் திட்டத்தின்படி வெட்டப்பட வேண்டிய யூகலிப்டஸ் குளோபுலஸ் மரங்களனைத்தையும் கூட நாம் வெட்டப் போவதில்லை.

செலவினம் :

3.3. வனத் துறையில் 1984–85 ஆம் ஆண்டில் 30.15 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1935–86 ஆம் ஆண்டில் செலவு 30.27 கோடி ரூபாய்.

3.4. 1986–87 ஆம் ஆண்டில் 32.96 கோடி ரூபாய் செலவு செய்யப்படவுள்ளது. இந்தச் செலவில் பெரும் பகுதி காடுகளை மேம்படுத்தும் பணிகளுக்கென் அவற்றின் உற்பத்தித் திறனை பெருக்கும் நோக்குடன் மூலதனச் செலவாகச் செய்யப்படும்;

மரங்கள், விறகு மரங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவைப் படும் மர வகைகள், இதர அத்தியாவசிய மரப் பொருட்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் காப்புக் காடுகளின் உள்ளேயும் மற்ற வெளி நிலங்களிலும் மிகுந்த அளவில் மரம் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காடுகளிலிருந்து பெறும் வருவாயைக் காட்டிலும் காட்டு வளப் பணிகளுக்கு நாம் கூடுதலாகச் செலவு செய்வதிலிருந்தே வருவாயைக் கருத்திற் கொண்டு காடுகளை அளவுக்கதிகமாக பயன்படுத்திக் கொள்ளா மல் அவற்றைப் பேணி காப்பதில் நாம் கொண்டுள்ள அக்கறை யான கொள்கை தெளிவாகும்.

வனப் பாதுகாப்பு :

4.1. சந்தனம் மற்றும் தடி மரங்கள் கொண்ட வனங்களை பாதுகாக்க 1977–ஆம் ஆண்டிற்கு முன் 7 வனப் பாதுகாப்பு படைகளும், ஒரு சிறப்பு ரோந்து வனப் படையும் இயங்கி வந்தன. 1977–ஆம் ஆண்டிற்கு பிறகு மேலும் சிறப்பாக பாதுகாத்திட, கூடுதலாகப் பல வனப் பாதுகாப்புப் படை கள் உண்டாக்கப்பட்டன. தற்போது 12 வனப்பாது காப்புப் படைகளும், ஒரு சிறப்பு ரோந்து வனப்படையும் மூன்று பறக்கும் வேவு படையும் இயங்கி வருகின்றன. இந்த பாது காப்புப் படைகள் மாநில முழுதும் ஆங்காங்கே அமைக்கப்பட்டு, முக்கியமாக வனக் குற்றங்கள் அதிகம் நடைபெறும் இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த வனப் பாதுகாப்புப் படைகளும், பறக்கும் வேவு படைகளும் 1985–86-ல் (31–1–1986 வரை) 3,236 குற்றங்களைக் கண்டுபிடித்து இணக்கக் கட்டணமாக ரூ. 10,55,039 வசூலித்துள்ளது.

4.2. தற்போது 89 சோதனைச் சாவடிகள் மாநிலம் முழு வதும் முக்கியமான குற்றச் சூழல் மிக்க (Vulnerable places) இடங்களில் உள்ளன.

1985–86-ல் (31–1–1986 வரை) மொத்தம் 25,114 குற்றங் கள் கண்டுபிடிக்கப்பட்டன. இணக்கக் கட்டணமாக 18.20 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. வனக் குற்றம் செய்த 997 பேர் தண்டிக்கப்பட்டனர்.

4.3. வனப் பொருட்களை கடத்துபவர்களை பிடிக்கவும் அவர்களின் மீது வழக்கு தொடரவும் காவல் துறை துணைத் தலைவர் ஒருவரை தலைமையாகக் கொண்ட ஒரு வனப் பிரிவு 1983–84 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. வனக் குற்றங் களை கண்டுபிடிப்பதில் திறமையாக செயல்பட இப்பிரிவு விலை மதிப்புள்ள வனப் பொருட்களை திருடும் குற்றங்கள் மற்றும் நம் மாநிலத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு விலை உயர்ந்த வனப் பொருட்களை கடத்தும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவு 1984 ஜூன் மாதத்தி லிருந்து 1986 ஜனவரி வரை சந்தன மரம், பாம்புத் தோல்



தேக்கு மர குற்றங்கள் ஆகியவை உட்பட 12.15 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 58 குற்றங்களை கண்டுபிடித்துள்ளது.

4.4. சந்தன மரக்காடுகளை பாதுகாக்க கம்பியில்லா தந்தி தொடர்பு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு இதற்கான ஆய்வுகளை "பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்" நிறுவனம் முடித்து, மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. நீலகிரி மாவட் டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த தொலைபேசி தொடர்பு ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டு வருகிறது.

1986–87 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் புழுதிக் குட்டை யிலும், காமராசர் மாவட்டம் ராசபாளையம் சரகத்திலுள்ள அப்பல்ராஜ் ஊரணியிலும் இரண்டு சோதனைச் சாவடிகள் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு ஆகும் செலவு 2 இலட்சம் ரூபாய். இந்த சோதனைச் சாவடிகள் வனப் பகுதி களிலிருந்து தடிமரம், கரி, தேக்கு மற்றும் மதிப்பு வாய்ந்த வனப் பொருட்கள் கள்ளத்தனமாக திருடப்படுவதைத் தடுக்க உதவும்.

4.5. வனத் துறை பணியாளர்கள் தங்கள் உயிரையும் பொருட் படுத்தாது வனப் பொருட்கள் களவு போவதை தடுக்க பாடு படுகின்றனர். கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் 1985–86 ஆம் ஆண்டில் (31–1–1986 வரை) வனப் பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் குறித்தவையாகும்.

1985–86ல் சந்தன மரம் மற்றும் அட்டவணைப் பெருமரக் குற்றங்கள் :

| விபரம். | சந்தனமரக் குற்றம். | அட்டவணைப் பெருமரக் குற்றம். |
|---|---|---|
| குற்றவாளிகளின் எண்ணிக்கை. | 670 | 904 |
| அளவு | 75,599 (கிலோ) | .. |
| மதிப்பு | ரூ. 40,99,240 | ரூ. 3,05,561 |
| கைப்பற்றப்பட்ட ஊர்திகள் | 32 | 11 |

4.6. குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்து வழக்கு தொடரப்படுகிறது. இதில் தவறுகிற பணியாளர் மீது நட வடிக்கையும் எடுக்கப்படுகின்றது.

4.7. 1985–86 ஆம் ஆண்டில் 106 பணியாளர்கள் பல்வேறு தவறுகளுக்காக தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளனர். 1,531 பணியாளர் மீது குற்றத்தாள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திறமையாகப் பணிபுரிந்த பணியாளர்களைப் பாராட்டவும்
அரசு தவறியதில்லை. இந்த ஆண்டில் குற்றவாளிகளைப் பிடிக்க
உதவிய 35 பணியாளர்களுக்கு வெகுமதி தரப்பட்டது.

4.8. வனச் செல்வத்தைக் காப்பாற்றவும், திருட்டு வேட்டை
களைக் கண்டுபிடிக்கவும், தடுக்கவும் அலுவலர்கள் தக்க தரு
ணத்தில் எடுத்த நடவடிக்கைகள் குறித்து சில உதாரணங்கள்
கீழே தரப்பட்டுள்ளன :

(1) அஞ்செட்டி சரகத்தில் சந்தன மரக் கடத்தல் :

ஓசூர், அஞ்செட்டி சரகத்திற்கு அருகில் சந்தன மரங்கள்
ஏற்றப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட ஒரு லாரியை அலுவலர்கள்
துரத்திச் சென்றனர். ஆனால், லாரி சோதனைச் சாவடியை
நொறுக்கித் தள்ளிவிட்டு பறந்தது. ஐவலகிரி ஒதுக்குக் காட்டுக்
கருகில் இந்த லாரியை துரத்திச் சென்று மடக்கும்போது லாரி
ஓட்டுநரும் உடனிருந்தோரும் பயங்கர ஆயுதங்களுடன் பய
முறுத்தினர். ஆயினும் அலுவலர்கள் லாரியில் உடனிருந்த
நபர்களை பிடித்தனர். ஆனால் லாரி ஓட்டுநர் தப்பித்து ஓடி
விட்டார். இந்த லாரியில் 50,000 ரூபாய் பெறுமானமுள்ள
1,389 கிலோ சந்தனக் கட்டைகள் (இதில் 50 சதம் வெள்ளை
மரம்) கள்ளத்தனமாக வைத்திருந்து கண்டு பிடிக்கப்பட்டது.
இதே லாரி இதற்கு முந்தைய கள்ளக் கடத்தல் வழக்கிலும்
சம்பந்தப்பட்டிருந்தது. இந்த கள்ளக் கடத்தல்காரர்களை
பிடிக்க உதவிய உதவி வனப்பாதுகாவலருக்கும், பணியாளர்
களுக்கும் தகுந்த வெகுமதி வழங்கப்பட்டது.

(2) மாசிப்பட்டியில் யானை இறப்பு :

1985 ஆம் ஆண்டு ஜூன் மாத முதல் வாரத்தில் சீகூர் சரகம்
மாசிப்பட்டியருகே இரண்டு ஆண் யானைகள் வேட்டைக்காரர்
களால் சுட்டுக் கொல்லப்பட்டன. தந்தங்கள் வேட்டைக்காரர்
களால் எடுத்துச் செல்லப்பட்டன. யானைகள் இறந்ததற்கான
தடயங்களை மறைக்கும் முயற்சியாக, அதன் பிரேதத்தை
எரித்து எலும்புகளை பூமியில் புதைத்தும் சாம்பலை நதியில்
கரைக்கும் முயற்சியும் செய்யப்பட்டது எனத் தெரிந்தது.
இருப்பினும், தீவிர விசாரணை மற்றும் புலனாய்வினால் மண்டை
ஓடு, எலும்புகள் போன்றவை சேகரிக்கப்பட்டன. மூன்று
வாரங்களுக்குள் இந்த இறப்பு ஏற்பட்டது என பிரேதப் பரி
சோதனை மூலம் தெரிய வந்தது. தடயங்களை மறைக்க
முயற்சித்த 11 துறை பணியாளர்கள் தற்காலிக வேலை நீக்கம்
செய்யப்பட்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்
பட்டது. இக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வேட்டைக்
காரர்கள் வனப் பாதுகாப்புப் படையினரால் 1985 ஜூன்
மாதத்தில் கைது செய்யப்பட்டனர்.





(3) டிசம்பர் 1985-ல் குன்னூர் சரகம் ஹல்லி-மோயார் மற்றும்
கள்ளம்பாளையம் அருகே யானை இறப்பு:

டிசம்பர் 1985-ல் குன்னூர் சரகம் ஹல்லிமோயார் மற்றும்
கள்ளம்பாளையம் அருகே இரண்டு ஆண் யானைகள் வேட்டைக்
காரர்களால் சுடப்பட்டு தந்தங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.
இதில் ஒரு வழக்கமான வேட்டைக்காரர், ஏற்கனவே ஜூன்
1985ல் மாசிப்பட்டியில் இரண்டு யானைகளை கொன்ற குற்றத்
தில் ஈடுபட்டவர். இக்குற்றவாளி பிடிக்கப்பட்டு விசாரித்தபோது
இந்த இரண்டு யானைகளை ஹல்லிமோயார் மற்றும்
கள்ளம்பாளையத்தில் டிசம்பர் 1985ல் கொன்ற குற்றத்தை
ஒப்புக் கொண்டான். மேல் நடவடிக்கை வன விலங்கு பாது
காப்புச் சட்டப்படி மேற் கொள்ளப்பட்டது.

(4) 30—7—1985ல் வள்ளியூர் அருகே யானைத் தந்தம் கடத்தல்:

30—7—1985 ஆம் தேதி நாகர்கோவில் சுங்கத் துறையினர்
ஒரு அரசு அங்கீகாரம் பெற்ற பயணிகள் பேருந்தை தணிக்கை
செய்யும் சமயம் சுமார் 20,000 ரூபாய் மதிப்புள்ள 9.8
கிலோ கிராம் எடையுள்ள 5 ஜோடி யானைத் தந்தங்கள்
கடத்தப்படுவதைக் கண்டு பிடித்தனர். சுங்கத் துறையினர்
இரண்டு குற்றவாளிகளையும் கைப்பற்றப்பட்ட தந்தங்களையும்
வனத்துறையிடம் ஒப்படைத்தனர். குற்றவாளிகள் போலீஸ்
காவலில் வைக்கப்பட்டனர். தீவிர விசாரணை மேற் கொண்ட
தில் திருவனந்தபுரத்தில் உள்ள நான்கு நபர்களும் இந்த தந்தக்
கடத்தலில் ஈடுபட்டதாக தெரியவந்தது. வனத்துறை பணியா
ளர்களைக் கொண்ட ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டு அது
31—7—1985ல் திருவனந்தபுரம் சென்று, திருவனந்தபுரம் வனத்
துறைத் தலைவர் (வ.வி.) மற்றும் போலீஸ் துறை ஆணையாள
ருடன் தொடர்பு கொண்டது. குற்றவாளிகள் நாகர்கோவில்
தலைமை குற்றவியல் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர்.
குற்றவாளிகள் நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். மீத
முள்ள இரண்டு குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்குற்ற வழக்கில் பிற மாநிலக் குற்றவாளிகள் ஈடுபட்டுள்ள
தால் இதனை வனத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு மேலும்
புலன் விசாரணைக்காக மாற்றப்பட்டுள்ளது. வழக்கு விசார
ணையிலுள்ளது.

(5) ராஜபாளையம் காடுகளில் திருட்டு வெட்டுகள் :

ராஜபாளையத்தை சுற்றியுள்ள காடுகளிலிருந்து திருடுபோ
வதை அறிந்து, அவ்விடங்களில் ஒரு முதுநிலை அலுவலர் மூலம்
தணிக்கை செய்யப்பட்டது. அவரது ஆய்வறிக்கையின் பேரில்
36 வனப் பணியாளர் மீது அவர்கள் கடமையிலிருந்து தவறிய
தற்காக குற்றத்தாள் வழங்கப்பட்டு அவர்களில் இருவர் வேலை
நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4.9. திட்டங்களின் கீழும் வனப் பாதுகாப்பு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு 50.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தீ மற்றும் திருட்டு வெட்டுகள் போன்றவைகளிலிருந்து வனங்களை பாதுகாக்கும் முயற்சிகள் திருத்தி அமைக்கப்படும். 1985–86 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் செலவு 1.96 இலட்சம் ரூபாய் சேலம் மண்டலத்தில் திருட்டு வெட்டு மற்றும் கடத்தலை தவிர்க்க அதிரடிப்படை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுளளது. புலன் விசாரணைக்கு உதவ சில ஊக்குவிப்புத் தொகை வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு 3.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

4.10. சந்தன மரம் மற்றும் ஏனைய வனப் பொருட்களின் கடத்தலையும் திருட்டையும் கண்டு பிடிப்பதில் உதவ காவல் துறையின் உதவியுடன் தொலை பேசி தொடர்பு ஏற்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டில் 4.76 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

பாம்புத் தோல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துதல் :

4.11. பாம்புகள் நாட்டின் வேளாண்மை பொருளாதார மேம்பாட்டிற்கு பேருதவி புரிகின்றன. விவசாயி அவருடைய உழும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளபோது பாம்புகள் தான் பயிர்களையும் தானியங்களையும் எலிகளிடமிருந்து பாதுகாக்கின்றன என்பதை பலர் உணர்வதில்லை. இந்த அரிய முக்கியத்துவத்தை கருதியே பாம்புகள் வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ல் ஷெட்யூல் 4-ல் சேர்க்கப்பட்டுள்ளன. பெல்ட்டுகள், செருப்புகள், மற்றும் பைகள் போன்ற அநேக அழகிய பொருட்கள் செய்வதற்கு பாம்புத் தோல்களுக்கு நல்ல தேவை உள்ளது. பாம்புத் தோல்களை ஆதாயமாக வியாபாரம் செய்யும் பொருட்டு பாம்புகள் கள்ளத்தனமாக பலரால் கொல்லப்படுகின்றன. பாம்புகளைத் திருட்டுத்தனமாக கொல்லுதலை தடுப்பதற்காகவும் பாம்புத்தோல் வியாபாரத்தை ஒழுங்கு முறைப்படுத்தவும் அரசு வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972-ன் கீழ் பாம்பு பிடிக்கும் உரிமம், தோல் பதப்படுத்தும் உரிமம், மற்றும் வியாபார உரிமங்களை வழங்கி வந்தது.

வனப்பிரிவு (குற்றப் புலனாய்வுத்துறை) வனவிலங்கு காப்பாளர் சென்னை, மற்றும் உதவி வனப் பாதுகாவலர் வனப் பாதுகாப்புப் படை, சென்னை, ஆகியோர் பாம்புத் தோல் விற்பனையைத் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். வியாபாரிகளின் உரிமங்களும் திடீர் தணிக்கை செய்யப்படுகின்றன. தோல் பதனிடும் சாலை, கிடங்குகள், மற்றும் இரயில் நிலையங்களிலும் தனிக் குழு திடீர் தணிக்கை செய்து சட்டத்திற்குப் புறம்பாக வியாபாரஞ் செய்தலை கண்டுபிடித்து தோல்களைப்



பறிமுதல் செய்தும் குற்றவாளிகளைக் கைது செய்தும் வருகின்றனர். இந்தத் திடீர் தணிக்கைகள் திருட்டு வியாபாரத்தினை கட்டுப்படுத்த பெரிதும் உதவியாயுள்ளன.

1985–86-ஆம் ஆண்டில் (31–1–1986) முடிய 22,070 ரூபாய் மதிப்புள்ள 1,222 தோல்களும் 335 தோல் பொருட்களும் 5 குற்றங்களில் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்திய அரசின் ஆலோசனையின்படி தோல்களைப் பதப்படுத்தி, விற்பனை செய்வதற்கான பறிமுதல் செய்யப்பட்ட பாம்புத் தோல்கள் அனைத்தும் இந்திய அரசு நிறுவனமாகிய பாரத் லெதர் கார்ப்பரேஷனிடம் கொடுக்கப்பட்டு வருகின்றன. பாம்புத் தோல்கள் சட்ட விரோதமாக வியாபாரம செய்யப்படுவதை தீவிரமாக கண்காணித்து பாம்புகள் வகை தொகையின்றி கொல்லப்படுவதை கட்டுப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4.12. வனத்துறையில் சீர்திருத்தங்களும், மேம்பாடுகளும் :

நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்ற பின்பு, வனத்துறையில் நல்ல பல சீர்திருத்தங்களும், மேம்பாட்டுப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

(அ) 1978—79-க்கு முன்னர் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வன மூலப் பொருட்கள் பரப்பளவு கணக்கில் விலை நிச்சயிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்படுவது அறிவியல் பூர்வமானதல்லவென்பதால் 1978—79ஆம் ஆண்டிலிருந்து இந்த முறை மாற்றியமைக்கப்பட்டு வன மூலப் பொருட்கள் தொழில் நிறுவனங்களுக்கு டன் கணக்கில் வழங்கப்பட்டு முறையான வருவாய் அரசிற்கு கிடைக்க வழி செய்யப்பட்டது. இதனால் தனியார் நிறுவனங்களும் அதிக பட்ச ஆதாயம் பெறமுடியவில்லை.

(ஆ) 1981ஆம் ஆண்டிலிருந்து மூலப் பொருட்களை அட்டி கட்டி எடை போடுதல், துறையின் எடை மேடைகளில் எடை போடுதல், தொழில் நிறுவனங்களின் எடை மேடைகளில் எடை போடுதல் என்று மூன்று முறைகளிலும் எடை செய்து இதில் எது அதிகமாக உள்ளதோ அந்த எடைக்கு தொழில் நிறுவனங்களிடமிருந்து தொகை வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது.

(இ) முன்பு வன மூலப் பொருட்கள் தோராயமாக அளவிடப்பட்டன. பார்வையாக மதிப்பீடு செய்யும் முறையும் பழக்கத்தில் இருந்த வந்தது. முதன் முதலில் 1982ல் மாதிரி பிளாட் மூலம் வெட்டி அளவீடு செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. 1983-ல் மேலும் அறிவியல் பூர்வமாக நவீனமுறையான 'வெட்ஜ் பிரிஸம்' (Wedge prism) மற்றும் 'பாயின்ட் சேம்பிளிங்' (Point Sampling) மூலம் அளவீடு செய்யப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டது. இம்முறையைப் பயில அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஈ) இதற்கு முன்னால் எல்லா மர ஏலங்களையும் காயம் செய்வதற்கு முறையான அதிகாரம் அளிக்கப்படவில்லை. 1983ஆம் வருடம் கீழ்க்கண்டபடி விறகுத் தோட்டங்கள் மற்றும் தடி மரங்கள் ஏலத்தினை காயம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | ரூ. 25,000 வரை | கோட்ட வன அலுவலர்கள் மற்றும் வனவிலங்கு காப்பாளர்கள். |
| 2. | ரூ. 25,000 லிருந்து 50,000 வரை. | வனப்பாதுகாவலர்கள் |
| 3. | ரூ. 50,000 லிருந்து 2 லட்சம் வரை. | வனத்துறைத்தலைவர் |
| 4. | ரூ. 2 லட்சத்திற்கு மேல் | அரசு |

தடி மரங்கள் ஏலத்தினை காயம் செய்வதை பொறுத்தவரை காயம் செய்யும் அதிகாரி அவருக்கு அடுத்த உயர்நிலை அதிகாரிகளின் இசைவு பெற்ற பின்னரே காயம் செய்ய வேண்டும்.

மேலும் ஈட்டி மரங்களின் ஏல விற்பனை எவ்வளவு தொகையாக இருப்பினும் அரசுதான் காயம் செய்ய வேண்டும்.

(உ) முன்பு வாய்தா காலங்களை நீடித்து கொடுத்ததின் மூலம், பொதுவாக விலைகள் ஏறிவரும் இக்காலங்களில் ஒப்பந்தக்காரர்கள் அதிகப்படியான பயன்கள் பெற்று வந்தனர். இதை 1983ஆம் ஆண்டிலிருந்து வாய்தா நீட்டிப்பு முறையையே தவிர்த்து அத்தியாவசியமான காரணங்களின் மேல் மட்டும் அரசுக்கு பிரேரணை அனுப்ப ஆணையிடப்பட்டுள்ளது. அப்படியிருப்பினும் அவைகளுக்கு வாய்தா காலம் நீடித்துக் கொடுக்காமல் புதய விலை விகிதத்தில் மரங்கள் வெட்ட கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இணைக்க கட்டணங்கள் விதிப்பதில் மனப்போக்கான முறையில் செயல்படுவதை தவிர்க்க 1983-ஆம ஆண்டில் இவ் விணக்க கட்டணங்கள் பிடி பொருட்களின் தரம், குற்றத்தை பொறுத்து அவற்றின் மதிப்பில் 3 மடங்காக இருத்தல் வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கு முன் பிடிபட்ட ஒரு ஈட்டி மரத்திற்கு குறைந்த அளவில் இணைக்க கட்டணம் வசூலிக்கப்பட்டு அது குற்றவாளிக்கே திரும்ப அளிக்கப்பட்டவை போன்ற சம்பவங்களும் நேர்ந்துள்ளன.

இணக்க கட்டணம் விதிப்பதில் பிடிப்பட்ட பொருள்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பீடு செய்வதை கண்காணிக்க உயர் அதிகாரிகளால் வனப்பாதுகாவலர் மட்டம் வரை மறு தணிக்கை செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.



(எ) 1979-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு திருத்த விதியின் மூலம் சந்தனம் மற்றும் அட்டவணைப் பெருமரங்கள் குறித்த குற்றங்களுக்கு இணக்க கட்டணம் வசூலிப்பதைத் தவிர்த்து அதன்மீது நீதி மன்றங்களில் வழக்கு அவசியம் தொடர வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இக்குற்றங்களை பிடி ஆணையின்றி கைது செய்யப்படத்தக்க குற்றமாக கருதவும் இவைகளை ஜாமீன் மறுக்கப்பட்ட குற்றங்களாக கருதவும் வகை செய்யப்பட்டுள்ளது. ஈட்டி, சில்வர்ஓக் மர வகைகளும் பெருமர அட்டவணையில் ஏற்கனவே உள்ள சந்தன மரம், தேக்கு, எபனிமர வகைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பெருமர குற்றங்களுக்கு தண்டனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(ஏ) 1979-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மற்றொரு திருத்த விதியின் மூலம் தமிழ்நாடு தனியார் காடுகள் பராமரிப்பு விதி முந்தைய குறைந்த பட்ச அளவான 12 எக்டேரிலிருந்து குறைக்கப்பட்டு இரண்டு எக்டேர் அளவுக்கு மேலான காடுகளுக்கும் அமுலாக்கப்பட்டது. மேலும் தனியார் காடுகளிலிருந்து மரம் வெட்டுவதற்கான மனுக்களை ஆராய மாவட்ட ஆட்சியாளரை தலைமையாகக்கொண்ட குழுக்கள் அமைக்க வகை செய்யப்பட்டது.

(ஐ) 1980-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு திருத்தச் சட்டம் மூலம் தனியார் காடுகளில் மரம் வெட்ட அனுமதி கோருவோரிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய காப்புத் தொகை ரூ. 10லிருந்து ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டது.

(ஒ) 1981-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு திருத்த சட்டத்தின் மூலம் ஒதுக்கக் காடுகளில் அல்லது அரசு பராமரிப்பில் இருக்கும் எந்த ஒரு நிலத்திலும் ஆக்கிரமிப்பு செய்தவர்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

(ஓ) 1982-ஆம் ஆண்டு சந்தன மரங்கள் உள்ள பகுதிகளில் பணிபுரியும் வனப் பணியாளர்களுக்கு 50 துப்பாக்கிகள் வழங்கப்பட ஒப்பளிக்கப்பட்டது. அதேபோல் சந்தன மரங்கள் உள்ள இடங்களிலுள்ள 24 வனச்சரகர்களுக்கு ஜீப்புகள் வாங்கவும் ஆணையிடப்பட்டது. மேலும் கடத்தல் குறித்த செய்திகளை விரைவாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ள 30 வனச்சரகங்களுக்கு தொலைபேசி தொடர்பும் கொடுக்கப்பட்டுள்ளது. விரைந்து சென்று பணிபுரிவதற்கு உதவியாக 164 வனச்சரகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்க வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஔ) தொழிற்சாலைகளுக்கு தேவையான கூழ்மரங்களை வெட்டுதலையும் மெதுவாக குறைத்து 1986-87-ஆம் ஆண்டில் வனச் செயல் திட்டத்தின்படி (Working Plan)

ஒதுக்க வேண்டிய அளவும் முழுவதும் ஒதுக்கப்படவில்லை. ஒதுக்க காடுகளில் விறகு மரங்களை வெட்டுவது அறவே நிறுத்தப்பட்டுள்ளது.

1974–75 ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட விறகு மரக்காடுகளின் பரப்பளவு 4,508 எக்டேர் ஆக இருந்ததை 1982–83ஆம் ஆண்டில் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டது. தடி மரங்களை பொறுத்த வரையில் 1976–77-ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட மரங்களின் அளவு 37,665 க.மீ. ஆக இருந்ததை 1983–84ஆம் ஆண்டில் 2,694 க.மீ. ஆக குறைக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட நீர் பாசன அணைகள் கட்டும் பொழுது நீரில் மூழ்கி இழக்க நேரிடும் மரங்களைத் தான் தேர்வு வெட்டுகள் மூலம் வெட்ட வேண்டிய முதிர்ந்த, நோயுற்ற, இறந்த மரங்களையும் மட்டும் வெட்ட அனுமதி வழங்கப்படுகின்றது. காடுகளை பாதுகாக்க இவைகளைத் தவிர மற்ற எந்த வகையிலும் மரங்கள் வெட்டப்படுவதில்லை. விறகுக்காக சமூக நலக்காடுகள் திட்டத்தின் மூலம் ஒதுக்க காடுகளுக்கு வெளியே தோட்டங்கள் எழுப்பப்படுகின்றன.

(.:.)வன நிலங்களை அத்தியாவசிய காரணங்களுக்காக குத்தகைக்கு விடுவதையும் முறைப்படுத்த 1986ஆம் ஆண்டிலிருந்து வகைவாரியான விலை விகிதங்கள் (Graded Rates) கொண்டு வரப்படுகின்றன.

(க) வனத் துறையின் பொறுப்புகள் பெருகிக்கொண்டு வருவதற்கேற்ப அவைகளை சரியாக கண்காணிக்க புதிய உயர் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே கல்வித் தகுதியும் உயர்த்தப்பட்டுள்ளது. வனவர் பதவிக்குண்டான கல்வித் தகுதி பி.யூ.சியிலிருந்து பட்டப்படிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. வனக்காப்பாளர் பதவிக்கு 8ம் வகுப்பு தேர்விலிருந்து குறைந்த பட்ச கல்வித் தகுதியாகவும், வனக்காப்பாளர் பதவியிலிருந்து வனவர் பதவிக்கு பதவி உயர்வுக்காக குறைந்த பட்ச கல்வித் தகுதியிலிருந்து பி.யூ.சியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல்.

5.1. தொழில் வளர்ச்சிக்கு முக்கியம் வாய்ந்த பல்வேறு மூலப்பொருட்கள் தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் வனத்துறையிலிருந்து தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. கற்பூரத் தைல வகைகளான ப்ளுகம், கிராண்டிஸ், கலப்பின வகை ஆகிய மரங்களும் மிலாறுபட்டை மற்றும் பட்டை உரிக்கப்பட்ட மிலாறு மரங்கள், மூங்கில் போன்ற மூலப்பொருட்கள் வனத்துறையிலிருந்து வழங்கப்பட்டு அதனிலிருந்து செயற்கை நூல்வகையான ரயான், காகிதம், தோல் பதனிடும் டானின் போன்றவைகள்





தயாரிக்கப்பட்டு வருகிறது. வனச் செயல் திட்டத்தில் விதிக்கப்பட்டபடியும், காடுகளை அதிக அளவு வெட்டிடாத வகையிலும் இந்த மூலப்பொருட்கள் தொடர்ந்து தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். 1984–85ஆம் ஆண்டில் மூலப்பொருட்கள் விற்பனை செய்ததின் மூலம் கிட்டிய வருவாய் 5.26 கோடி ரூபாயாகும். வழங்கப்பட்ட மூலப் பொருட்களின் அளவு 2.03 லட்சம் டன்.

5.2. நடப்பு ஆண்டான 1985–86-ல் 2.95 லட்சம் டன் மூலப் பொருட்கள் வழங்கப்பட்டு 8.73 கோடி ரூபாய் பெறப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1986–87 ஆம் நிதி ஆண்டில் 1.57 லட்சம் டன் மூலப் பொருட்கள் வழங்குவதன் மூலம் 4.42கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கும் 'யூகலிப்டஸ் குளோபுளஸ்' (புளுகம்) மரங்களின் அளவு சுற்றுப்புற சூழ்நிலையை பேணிக்காக்கும் நோக்கத்துடன் செயல்முறைத் திட்டத்தின்படி வெட்டக்கூடிய அளவுகூட வழங்கப்படவில்லை. வருவாய் குறைவிற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

5.3. தொழிற்சாலைகளில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் மூலப்பொருள்களின் தேவையை ஈடுசெய்யும்பொருட்டு, குறைந்த அளவு பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் மூலப் பொருட்களின் அளவை அதிகரித்து தொழிற்சாலைகளின் நிதி உதவியுடன் கூட்டு முயற்சியில் விஞ்ஞான ரீதியாக மரம் வளர்க்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

சந்தன மரம்.

6.1. சந்தன மரங்கள், இயற்கையான பீடபூமிகளிலும், குறிப்பாக வடாற்காடு, சேலம், தர்மபுரி, பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளிலும், நீலகிரி, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே மூன்றாண்டுகட்கு ஒரு முறை வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டப்படும் சந்தன மரங்கள் கிடங்குகளுக்கு கொண்டுவரப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன.

6.2. (அ) 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சந்தன மரத்தை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்தது. இத்தடை விதிப்பின் காரணமாக தமிழ்நாடு அரசு பொது ஏலத்தில் விடும் சந்தன மரங்களின் விலை பெருமளவு குறைந்தது. இந்தத் தடையை மத்திய அரசு இன்னும் முழுமையாக அகற்றவில்லை. இதனால் சந்தனமரம் விற்பனையில் சராசரியாக கிடைக்கும் வருமானம் கீழ்க்கண்ட அட்டவணையில் பார்க்கும் போது குறைந்து வந்து அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது தெரியவரும்.

[1986 ஏப்ரல் 25

| ஆண்டு. | | விற்பனை செய்யப் பட்ட சந்தன மர அளவு (மெ. டன்.) | கிடைத்த வருமானம். லட்சம். ரூபாய் | சராசரி விலை (டன்னுனுக்கு). ரூபாய். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1977 | .. | 750 | 404.76 | 53,968 |
| 1978 | .. | 948 | 384.11 | 41,000 |
| 1979 | .. | 1166 | 364.21 | 31,235 |
| 1980 | .. | 1547.5 | 286.03 | 18,484 |
| 1981 | .. | 1923.2 | 505.32 | 26,275 |
| 1982 | .. | 1947 | 658.20 | 33,806 |
| 1983 | .. | 1907.5 | 691.55 | 36,254 |
| 1984 | .. | 2000 | 811.44 | 40,572 |

ஜூன் 1985, டிசம்பர் 1985-ல் நடைபெற்ற சந்தன மர விற்பனையில் கிடைத்த வருவாய், விற்ற சந்தன மர அளவு பற்றிய விவரம் :—

| ஆண்டு. | விற்ற அளவு (மெ.டன்.) | வருவாய் (ரூபாய்). | டன்னுக்கு கிடைத்த சராசரி விலை (ரூபாய்). |
|---|---|---|---|
| ஜூன் 1985 .. | 1026 | 6,10,38,405 | 59,492 |
| டிசம்பர் 1985 | 1063 | 7,21,43,450 | 67,852 |

இந்த தடை விதிப்பால் தமிழ்நாடு அரசுக்கு கிடைக்க வேண்டிய (சந்தன மர ஏலம் மூலம்) வருவாயில் குறைவு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பினால் மாநில அரசுக்கு மட்டுமின்றி மத்திய அரசுக்கும் வெளிநாட்டுச் செலாவணி குறைந்துள்ளது.



1986 ஏப்ரல் 25]

(ஆ) 1984ஆம் ஆண்டில் 3¼''×''×¼'' அளவுள்ள சந்தன செதுக்கல்களை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தது. இதனால் இந்த அளவுள்ள செதுக்கல்களை மட்டும்தான் ஏற்றுமதி செய்யமுடியும். 1984ஆம் ஆண்டில் இந்த வகையான சந்தன மரங்களுக்கு ஏலத்தில் கிடைத்த சராசரி விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு 26, 772 ரூபாய் ஆகும். இந்த ஏற்றுமதி கொள்கையினால் வருவாய் குறைவு ஏற்பட்டதால் தமிழ்நாடு சந்தன மர வெட்டுக்களில் கடைப்பிடிக்கும் செதுக்கல்களுக்கான அளவுகளை பின்பற்ற வேண்டும் என மத்திய அரசுக்கு தெரிவித்து மத்திய அரசும் இதை ஒப்புக் கொண்டது. அதன்படி சந்தனத்தூள் செதுக்கல்கள் பவுடர் ஆகியவற்றை ஓ.ஜி.எல். 3 பிரகாரம் ஏற்றுமதி செய்யலாம் எனவும் செதுக்கல்கள் வெவ்வேறான உருவங்களாக இருப்பினும் 200 கிராம் எடைக்கு மேல் இருத்தல் கூடாது என அறிவித்தது. இதனால் 1985 ஜூன் திங்களில் விற்கப்பட்ட செத்துக்கல்களுக்கு சராசரி விலையாக ஒரு மெட்ரிக் டன்னுக்கு 44,694 ரூபாயும் டிசம்பர் 1985 ஏலத்தில் சராசரி விலை 49,517 ரூபாயும் அரசுக்கு கிடைத்தது.

6.3. சந்தன மர ஏற்றுமதிக்கான முழுத் தடையையும் அகற்றினால் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பதால் தடையை நீக்க மத்திய அரசை அணுகினோம். ஆனால் இதற்கு இன்னும் மத்திய அரசு ஒப்புக் கொள்ளவில்லை.

6.4. 1984—85ஆம் ஆண்டில் 2,000 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தன மரங்கள் ஏலம் விடப்பட்டதில் 8.11 கோடி ரூபாய் வருவாய் கிட்டியது. 1985—86ஆம் ஆண்டு 2089.25 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தன மரங்களை ஏலத்தில் விற்றதின் மூலம் 13.32 கோடி ரூபாய் வருவாய் கிட்டியது.

காடுபடு சிறு பொருட்கள்.

7.1. காடுபடு சிறு பொருட்கள் மூலம் 1985—86ஆம் ஆண்டில் 94.90 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சமீப ஆண்டுகளாக தருமபுரி, சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் மிகுந்த பரப்புள்ள புளியந் தோப்புகளில் தீவிர மண்வள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக புளியந் தோப்புகளிலிருந்து கிடைக்கும் வருவாய் பெருமளவு உயருமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

7.2. காடுபடு பொருட்களான புளி, கறிவேப்பிலை, கடுக்காய், பிரம்பு போன்றவற்றை சேகரம் செய்யும் உரிமையை மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை விலையில் குத்தகைக்கு விடப்படுகின்றது. கூட்டுறவு சங்கங்கள் இப் பொருட்களை எடுத்துக் கொள்ள முன்வராவிடில், இவற்றை பொது ஏலம் மூலமாகவோ அல்லது துறையின் மூலமாகவோ

சேகரம் செய்யப்படுகின்றன. காடுபடு சிறு பொருட்கள் வியாபாரம் குறித்து முற்றிலும் ஆராய அரசு ஒரு ஆய்வுக் குழு அமைத்துள்ளது, அக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன.

முந்திரி.

8.1. 41,948 எக்டேர் மொத்தப் பரப்பில் உள்ள முந்திரித் தோட்டங்களில், 18,000 எக்டேர் பரப்பு வனத்துறை பராமரிப்பில் உள்ளது. மீகுதி உள்ள 23,948 எக்டேர் பரப்பு தோட்டங்கள் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திடமுள்ளது.

8.2. துறை வசம் உள்ள பெரும்பாலான தோட்டங்களில் உற்பத்தி பொருளாதார மற்றும் வியாபார நோக்கில் கணிசமாக இல்லை. ஆகையால் சுமார் 12,000 எக்டேர் பரப்பில் விறகு மரத் தோட்டங்கள் எழுப்பினால் வரும்காலத்தில் கிராமப்புற மக்களின் எரிபொருள் தேவைக்கு மிகுந்த உபயோகமாக இருக்குமாவென பரிசீலிக்கப்படுகின்றது.

8.3. இந்த 12,000 எக்டேர் பரப்புகள் கிராமப்புறங்களை சுற்றிலும் ஆங்காங்கே சிதறியுள்ளன. சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலும் அவற்றைச் சுற்றிலும் தனியார் சவுக்குத் தோட்டங்கள் உள்ளன. எரிபொருள் தேவையில் ஒரு பகுதியையே இத்தோட்டங்கள் நிறைவு செய்கின்றன. குறைந்த மகசூலில் உள்ள முந்திரித் தோட்டங்களை விறகு மரத் தோட்டங்களாக மாற்றுவதன் மூலம், குறிப்பாக கிராமப்புறங்களில் நலிந்த பிரிவினருக்குத் தேவையான எரி பொருள் வளத்தை கூடுதலாக்கலாம். இந்த முயற்சி நாளடைவில் காடுகளை அழிவினின்றும் தடுக்கும்.

8.4. 1985–86-ல் 13.50 லட்சம ரூபாய் வருவாய் எதிர்ப்பார்க்படுகின்றது. 31–1–1986 வரை 11.35 லட்ச ரூபாய் வருவாய் கிடைத்தது.

8.5. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 600 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்கள் எழுப்பவும் தீவிர மண்வளப் பாதுகாப்புப் பணியும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8.6. 1985–86-ல் 9.28 லட்ச ரூபாய் செலவில் 700 எக்டேர் பரப்பில் தீவிர மண்வளப் பாதுகாப்பு பணிகள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

8.7. 1986–87-ல் இத்திட்டம் 8.25 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். 925 எக்டேரில் தீவிர மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வதுடன் 50 எக்டேரில் தோட்டங்களும் எழுப்பப்படும்.



தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்.

9.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13–6–1974-ல் இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் துவக்கப்பட்டது. இது வரை ஈட்டிய மூலதனம் 72.06 லட்சம் ரூபாய். மூலதனத் தொகை முழுவதும் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

9.2. இக்கழகத்தின் நிதி ஆண்டு பிரதி வருடம் ஜூலை முதல் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் 30-ந் தேதி முடிவடைகிறது. இக்கழகம் 1984–85 ஆம் ஆண்டு முடிய கணக்குகளை முடித்துள்ளது. இதன் மீது இந்திய அரசு கண்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் அவர்களின் முடிவான கருத்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

9.3. இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 58,943 எக்டேர் தோட்ட பரப்பு உட்பட 73,220 எக்டேர் வனநிலம் குத்தகை அடிப்படையில் உள்ளது. 30–6–1985 முடிய இக்கழகம் 27,305.65 எக்டேர் பரப்பில் யூகலிப்டஸ் ஹைபிரிட் தோட்டங்களும், 2,026.82 எக்டேர் பரப்பில் யூகலிப்டஸ் கமால்டுலென்சிஸ் தோட்டங்களும், 4,545.45 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்களும், 1,153.77 எக்டேர் பரப்பில் சவுக்குத் தோட்டங்களும், 822.10 எக்டேர் பரப்பில் பல்வகைத் தோட்டங்களும் எழுப்பியுள்ளது.

9.4. 1985–86 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, இக்கழகம் 2,237 எக்டேர் பரப்பில் யூகலிப்டஸ் கமால்டுலென்சிஸ் தோட்டங்களும், 56.62 எக்டேர் பரப்பில் சவுக்குத் தோட்டங்களும் 170.26 எக்டேர் பரப்பில் பல்வகைத் தோட்டங்களும் எழுப்ப இலக்கு நிர்ணயித்துள்ளது. 1985 டிசம்பர் மாதம் முடிய அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :

1. யூகலிப்டஸ் கமால்டுலென்சிஸ் தோட்டம் எழுப்புதல்—1,998 எக்டேர்.

2. சவுக்குத் தோட்டங்கள் எழுப்புதல்—55.38 எக்டேர்.

3. பலவகைத் தோட்டங்கள் எழுப்புதல்–137.35 எக்டேர்.

முந்திரித் தோட்டங்களில் தீவிர தோட்டக் கலைப் பணிகள் மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 6,662.17 எக்டேர். இதில் 1985 டிசம்பர் மாதம் முடிய காடு சுத்தம் செய்யும் வேலை 6,554 எக்டேர் பரப்பிலும் வேர் பறிக்கும் வேலை 6,483 எக்டேர் பரப்பிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது தவிர மற்ற தோட்டக் கலைப் பணிகளான உழுதல், காய்ந்த மற்றும் பூச்சி அரித்த மரங்களை அப்புறப்படுத்தும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

9. 5.சந்தனப் பொருட்கள் தொழிற்சாலை :

சந்தன எண்ணை வியாபாரத்தில் லாப நட்டங்களை தீவிரமாக பரிசீலித்து இந்தத் துறை சந்தன எண்ணை வடிக்கும் தொழிலில் முனைந்துள்ளது. தெக்குப்பட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள இந்த தொழிற்சாலை முறையாக துவங்கப்பட்டு, பின்பு, திருச்சி, தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு குத்தகை முறையில் ஒப்படைக்கப்பட்டது. திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கிலிருந்து ஆண்டுதோறும் 400 மெட்ரிக் டன் சந்தனக் கட்டைகள் வழங்கப்பட உள்ளன. சந்தன எண்ணை தயாரிப்பதற்கு (1) மூன்றாம் பிரிவு வேர்கள் (2) ஜஜ்போக்கல் 2-ம் பிரிவு (3) அயில் சில்டா மற்றும் (4) மில்வ சில்டா ஆகிய வகைகள் தகுதி வாய்ந்தனவாகும். இந்த வகையான சந்தனக் கட்டைகள் 400 டன் ஏலத்தில் விற்றால் அரசுக்கு கிடைக்கும் வருமானம் 2.97 கோடி ரூபாயாகும். ஆனால் இந்த 400 டன் சந்தனக் கட்டைகளிலிருந்து சந்தன எண்ணை வடிப்பதின் மூலம் 3.29 கோடி ரூபாய் வருவாய் கிட்டும். இந்த தொழிற்சாலையில் இருந்து கிடைக்கும் சந்தன எண்ணை உலக சந்தைக்கு சென்றுள்ளது. ஒரு கிலோ சந்தன எண்ணை விலை 1,825 ரூபாய். தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 3 டன் எண்ணெயை விற்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

உலக சந்தன எண்ணை சந்தையில் 18.25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 1,000 கிலோ எண்ணை விற்றதன் மூலம் தமிழக வனத் துறை ஒரு சரித்திரத்தை உண்டாக்கியுள்ளது. மேலும் 2,000 கிலோ எண்ணையை, கிலோ 1,800 ரூபாய் வீதம் விற்க பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. இது தவிர, 65 டன் எடையுள்ள சந்தன மர வாசனைத் தூளினை கிலோ 2.70 ரூபாய் வீதம் விற்கப்பட்டது. உலகச் சந்தன எண்ணைச் சந்தையில் இடம் பெற்றுள்ள மற்ற ஒரே மாநிலம் கர்நாடக மாகும்.

1986–87-ல் சந்தன எண்ணை தயாரிப்பு இலக்கு—18 டன்கள்.

டன்னுக்கு 18 லட்ச ரூபாய் என்ற தற்போதைய விலை விகிதப் படி சந்தன எண்ணையின் மதிப்பு—ரூ. 3.24 கோடி.

9.6. வனத்துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் இக்கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள மதுரையிலுள்ள அரக்குத் தொழிற்சாலையில் சாராவி பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் படவார்னிஷ், தின்னர், ஷெல்லாக்கு, ப்ரெஞ்ச் பாலிஷ் முதலிய பொருட்களும் சாராவி பயன்படுத்தப்படாத தேன், முத்திரை அரக்கு முதலிய பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.



இத்தொழிற்சாலையின் 1985–86ம் ஆண்டு மதிப்பிடப்பட்ட விற்பனை 60.00 லட்சம் ரூபாயாகும். குத்தகைத் தொகை செலுத்துமுன் 11.50 லட்சம் ரூபாய் லாபம் எதிர்பார்க்கப்படுகின்றது. (இம் மதிப்பீடு ஏப்ரல் 1986-ல் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது).

9.7. 1986–87 ஆம் ஆண்டிற்கு வனத் தோட்டக் கழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகள் பின் வருமாறு :—

| | |
|---|---|
| 1. யூகலிப்டஸ் கமால்டுலென்சிஸ் தோட்டங்கள் எழுப்புதல். | 2,707 எக்டேர். |
| 2. முந்திரித் தோட்டங்கள் எழுப்புதல் | 91 எக்டேர். |
| 3. சவுக்குத் தோட்டங்கள் எழுப்புதல் | 201 எக்டேர். |
| 4. பல்வகைத் தோட்டங்கள் எழுப்புதல் | 368 எக்டேர். |
| 5. முந்திரித் தோட்டங்களில் அடர்த்தி குறைத்தல். | 603 எக்டேர். |
| 6. தீவிர தோட்டக் கலைப் பணிகள் .. | 6,629 எக் டேர். |
| 7. முந்திரி தோட்டங்களின் எல்லைகளிலும் தோட்டங்களில் நடுவில் அமைக்கப்பட்டுள்ள வரப்புகளிலும் கற்றாழை பயிரிடுதல். | 519 கிலோ மீட்டர். |
| 8. சந்தன மர எண்ணை மற்றும் சந்தன மரச் செதுக்கல்கள் தயாரிப்பதற்கு சந்தன மரத்தை பதனிடுதல். | 400 டன்கள் சந்தன மரம். |
| 9. மதுரை அரக்குத் தொழிற்சாலையில் சாராவி மற்றும் சாராவியற்ற பல வகைப் பொருட்களை உற்பத்தி செய்தல். | 50 லட்சம் பெறுமானமுள்ள பொருட்கள். |
| 10. தெக்குப்பட்டில், சந்தன மரப் பொருட்கள் தொழிற்சாலைக்கு அருகில் சந்தன மரத்தூள் தொழிற்சாலை அமைத்தல். | 14 லட்சம் ருபாய். |

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.

10.1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்டு, கம்பெனி சட்டம் 1956-ன் படி 1975-76 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இக்கழகம் தொழிலாளர்கள் மற்றும் தோட்டங்கள் பராமரிப்பதில் போதிய

அனுபவம் பெற்றுள்ளதால் ஏற்கனவே 2,400 எக்டேர் பரப்பளவில் குத்தகை உரிமை கொண்டதோடு வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 347.70 எக்டேர் பரப்பளவு கொண்ட கோலப்பள்ளி தேயிலைத் தோட்டமும் 1-7-1984 முதல் சிறந்த பராமரிப்புக்காக சேர்க்கப்பட்டு இயங்கி வருகிறது. 1984-85-லிருந்து இக்கழகத்தின் கீழுள்ள தேயிலைத் தோட்டத்திற்கு குத்தகைக் கட்டணம் எக்டேருக்கு 2,000 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

10.2. 1985-86-ல் தேயிலை உறபத்தி :—

| வரிசை எண். (1) | தொழிற்சாலையின் பெயர். (2) | 1985-86 ஆம் ஆண்டிற்கு நிர்ணய இலக்கு (1-7-1985 முதல் 30-6-1986 முடிய) கிலோகிராம் லட்சத்தில். (3) | பதப்படுத்திய தேயிலை உற்பத்தி அளவு (கழிவு தேயிலை உள்பட) 1-7-1985 லிருந்து 31-12-1985 வரை (கிலோவில்). (4) |
|---|---|---|---|
| 1. | சேரன்கோடு தேயிலை தொழிற்சாலை (சி.டி.சி.) | 18.00 | 9,91,166 |
| 2. | சேரான்படி தேயிலைத் தொழிற்சாலை (சி.டி.சி.) | 15.50 | 9,60,702 |
| 3. | டைகர்ஹில் தேயிலை தொழிற்சாலை (ஆர்த்தோடாக்ஸ்). | 8.51 | 3,75,746 |
| | மொத்தம் .. | 42.01 | 23,27,614 |



தளிர் தேயிலை மகசூல் விபரம்;

| வரிசை எண். (1) | கட்டம். (2) | 1985-86ப் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு (1-7-1985 முதல் 30-6-1986 முடிய). (3) | 1-7-85 லிருந்து 31-12-85 வரை மகசூல் அளவு. (4) |
|---|---|---|---|
| | | (கிலோவில்). | |
| 1. | முதல் கட்டம் (பழைய தோட்டம்) | 1,82,80,000 | 88,45,512 |
| 2. | இரண்டாம் கட்டம் (சமீபகால தோட்டம்). | 17,00,000 | 9,97,485 |
| 3. | மூன்றாவது கட்டம் (புதிய தோட்டம்). | 1,20,000 | 1,62,158 |
| | மொத்தம் .. | 2,01,00,000 | 1,00,05,155 |

10.3. 1985-86 ஆம் ஆண்டிற்கு வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளின் விபரம்;—

| (1) | வருமானங்கள் (ரூபாய் லட்சத்தில்). (2) | செலவினங்கள் (ரூபாய் லட்சத்தில்). (3) |
|---|---|---|
| வருவாய் கணக்கில் .. .. | 1,113.45 | 806.63 |
| மூலதனக் கணக்கில் .. | 325.53 | 334.42 |

[1986 ஏப்ரல் 25

10.4. கூடலூரில் 4-வது தேயிலைத் தொழிற்சாலை அமைத்தல்:

இக்கழகத்தின் தேயிலைத் தோட்டத்தின் முதிர்ச்சியையும் உற்பத்தித் திறனையும் கருதி, இக்கழகம் கூடலூர், தேவாலா, பாண்டியார் மற்றும் பாடன்துறை தேயிலைத் தோட்டங்களின் தளிர் தேயிலை மகசூலைக் கொண்டு 1.5 மில்லியன் டன்கள் சி.டி.சி. தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட நாலாவது தேயிலைத் தொழிற்சாலை அமைக்க உத்தேசித்துள் ளது. இத்தொழிற்சாலை அமைக்கும் வேலையில் நிலம் சமப் படுத்துதல் பணி முடிவு பெற்று மற்ற வேலைகள் முன்னேற்றத் தில் உள்ளன.

10.5. 1985 டிசம்பர் வரை 18,620 கிலோ டைகர்ஹில் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து 4.33 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. மேலும், உள்நாட்டில் சி. மற்றும் எப். படிவ விற்பனை மற்றும் இதர விற்பனை மூலம் மொத்தம் 3,74,424 கிலோ தேயிலை விற்று 59,20,000 ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது.

10.6. 1986-87ன் செயற்குறிப்புகள் ;

(1) ஒன்றாவது, இரண்டாவது கட்ட தோட்ட உற்பத்திப் பணி முடிவு பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூன்றாவது கட்டப்பணியில் 1985-86 ஆம் ஆண்டுவரை 312.58 எக்டேர் பரப்பளவில் தோட்ட உற்பத்திப்பணி முடிவு பெற்றுள்ளது. மீதி 32.90 எக்டேர் பரப்பளவில் தோட்ட உற்பத்தி செய்யப் படவுள்ளது.

(2) இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்களை குடியமர்த்து தல் :

இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்களை குடியமர்த்தும் பணியில் முதல் கட்ட வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இப்பணியின் இரண்டாவது கட்டப் பணியில் இதுவரை 450 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு 120 குடும்பங்கள் இன்னும் குடியமர்த்தப்படவுள்ளன. மூன்றாவது கட்டப் பணியாக 1985-86ம் ஆண்டில் 400 எக்டேர் பரப்பளவுக்கு 1:0.76 என்ற விகிதத்தில் (நிலம், தொழிலாளர் விகிதம்) 380 குடும்பங்களை குடியமர்த்த புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

(3) தொழிலாளர் விடுதிகள்;

தொழிலாளர்களுக்கு 2,613 விடுதிகள் கட்ட நிர்ணயிக்கப்பட்ட அளவில் 31—12—1985 வரை (கோலப்பள்ளி தேயிலை தோட்டங்கள் உட்பட) 2,451 விடுதிகள் கட்டி முடிக்கப்பட் டுள்ளன. மீதி 162 தொழிலாளர் விடுதிகள் கட்டப்படவுள்ளன.



1986 ஏப்ரல் 25]

இதுவரை 4,880 தொழிலாளர்களும், 358 அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர்.

(4) 1986-87 ஆம் ஆண்டில் தேயிலை தளிர் மகசூல் எதிர் பார்ப்பு:

முதல் கட்டம் (பழைய தோட்டம்) 1,85,00,000 கிலோ.

இரண்டாம் கட்டம் (சமீபகால தோட்டம்) 18,00,000 கிலோ

மூன்றாம் கட்டம் (புதிய தோட்டம்) 1,50,000 கிலோ.

(5) 1986-87 ஆம் ஆண்டின் பதப்படுத்திய தேயிலை உற்பத்தி யளவு எதிர்பார்ப்பு:

| | |
|---|---|
| சேரன்கோடு தேயிலை தொழிற்சாலை<br>சேரம்பாடி தேயிலை தொழிற்சாலை<br>டைகர்ஹில் தேயிலை தொழிற்சாலை | 49.00 லட்சம் கிலோ பதப்படுத்திய தேயிலை. |

10.7. 1984-85 ஆம் ஆண்டில் குத்தகைத் தொகையாக அரசுக்கு 30.00 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

10.8. 1984—85 முடிவில் முந்தைய கால மொத்த இழப்பினை சரிக்கட்டி, 15.14 லட்சம் ரூபாய் நிகர லாபம் ஈட்டியது. 1985-86;ல் கழகம் 20 லட்சம் ரூபாய் நிகர லாபம் ஈட்டும்.

1984—85-ல் இக்கழகம் குறைந்தபட்ச போனசாக 8.33 விழுக்காடும், கருணைத் தொகையாக ரூ. 50 வீதமும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வழங்கியுள்ளது.

அரசு ரப்பர் கழகம் ;

11.1. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையுள் ளது. தமிழக அரசு வனத்துறையினரால் 1960 முதல் 1980 ஆம் ஆண்டு வரை 4,785.7 எக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட் டங்கள் அமைக்கப்பட்டு 1—10—1984 முதல் தனிக் கழகமாக அரசு ரப்பர் கழகமென தமிழக அரசு பொது நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இத்தோட்டங்களிலிருந்து பெறப் படும் ரப்பர் பால் இக்கழக தொழிற்சாலைகளிலேயே பத படுத்தப்பட்டு 'லேட்டக்ஸ் கான்சன்டிரேட்டர்' என்ற இய திரங்கள் மூலம் கிரேப்பாகவும், கான்சன்டிரேட்டட் லேட்டக்ஸ் ஆகவும் மாற்றப்பட்டு பொது ஏலம் மூலம் விற்கப்படுகிறது.

11.2. இக்கழகத்தில் 1985-86 ஆம் ஆண்டு (ஜனவரி 86வரை) 1,622 டன் ரப்பர் பால் சேகரம் செய்யப்பட்டுள்ளது. இக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட 1-10-84 முதல் ஜனவரி 1986 வரை விற்பனை செய்யப்பட்ட ரப்பரின் அளவும் அதன் மதிப்பும் பின்வருமாறு :—

| விற்பனை செய்யப்பட்ட ரப்பர் பால் (கிலோவில்). | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (1) | (2) |
| 19,62,032 | 4.04 |

1984-85-ல் வரி கட்டிய பின் நிகர லாபம் 1.95 லட்சம் ரூபாய். 1985-86-ல் வரி கட்டிய பின் நிகர லாபம் 2.48 லட்சம் ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது.

ரப்பர் பாலை எடை பார்க்கும் இயந்திரம் ஒன்று 2.60 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

11.3. ரப்பர் தோட்டங்களிலுள்ள ரப்பர் மரக் கன்று களை காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாக்க மருதம்பாறை ரப்பர் தோட்டத்தில் 15 கி.மீ. தொலைவிற்கு 1.05 லட்சம் ரூபாய் செலவில் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், குத்தியார் மற்றும் கல்லார் கோட்டங்களில் இதுபோன்று 15 கி.மீ. தொலைவிற்கு மின்வேலி அமைக்க 1.25 லட்சம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

11.4. இக்கழகத்தில் களப்பணியாளர்கள், பால் வடிப் பாளர்கள் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்கள் உட்பட மொத்தம் 2,532 பேர்கள் பணியிலுள்ளனர். 1985 ஆம் ஆண்டு போனஸ் தொகையாக 14.25 லட்ச ரூபாய் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1985-86-ம் ஆண்டில் தொழிலாளர் நலச் சட்டப்படி தொழிலாளர்களுக்கு 27.82 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

11.5 தொழிலாளர் நலப் பணிகள் :

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| தொழிலாளர் வசதிப் பணிகள் .. .. | 18.11 |
| மருத்துவமனை, பள்ளிகள், குழந்தைகள் பாதுகாப்பு, பொழுதுபோக்கு சங்கங்கள் போன்றவை பராமரிப்பு. .. .. | 1.28 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| அலுவலர் சேம நல நிதி .. .. .. | 8.02 |
| சிருடை மற்றும் குடி நீர் வழங்குதல் போன்ற இதர நலப் பணிகள். | 0.41 |
| | 27.82 |

அரசு ரப்பர் கழகத்தின் மொத்த செலவில் மூன்றில் ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு ஊதியமாகவும், சுமார் 8 சதவீதம் தொழிலாளர் நலப் பணிக்காகவும் செலவு செய்யப்படுகிறது. இலங்கையிலிருந்து குடி பெயர்ந்தோர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் 285 குடும்பங்கள் குத்தியார் ரப்பர் தோட் டங்களில் தக்க வசதிகளுடன் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில 6 ஆரம்ப பள்ளிகள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், கல்லார் மற்றும் மருதம்பாறை ரப்பர் கோட்டங்களில் முறையே ஒவ்வொரு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் 760 குழந்தைகள் கல்வி பயிலுகின்றனர். சத்துணவு திட்டத்தின் கீழ் இக்குழந்தை கள் பயனடைகிறார்கள். சத்துணவு கூடங்கள் ஏற்படுத்த 2 லட்சம் ரூபாய் செலவில் வேலை நடைபெறுகிறது. இதுவரை 983 தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், 1986–87 ஆம் ஆண்டில் 266 தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இக்கழகத்தில் (டிசம்பர் 1985 வரை) சாலைகள், கிணறுகள், உட்பட கட்டிடங்கள் கட்டவும், ரப்பர் தோட்டங்களை பரா மரிக்கவும் 147.13 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. மேலும் 1985–86 ஆம் ஆண்டில் மேற்படி பணிகளுக்காக ரூ. 56.57 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் மேற்கு ரப்பர் மண்டலத்தில் மேலும் அதிகமான ரப்பர் மரங்களிலிருந்து பால் வடிக்கப்படும். ஆதலால் சுமார் 2,500 டன் ரப்பர் பால் 450 லட்சம் ரூபாய் மதிப்பு) நடப்பு ஆண்டில் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

11.6. வனத்துறைத் தலைவரையும் அரசு ரப்பர் கழகத் தின் நிர்வாக இயக்குநரையும் கொண்ட ஒரு தொழில் நுட்பக் குழு, 46 லட்சம் ரூபாய் மதிப்பில் தோட்டம் எழுப்பும் பணி களை மேற்கொள்வதற்கான கருத்துருவை (நாற்றுப் பண்ணை 16 லட்சம் ரூபாய் மற்றும் மீண்டும் தோட்டம் வளர்க்க 30 லட்சம் ரூபாய்) ஆய்ந்து வருகிறது. இத் திட்டத்தை வரும் ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய இருபது அம்ச திட்டம்—மரம் வளர்ப்பு :

12.1. கிராமப்புற ஏழை மக்களையும், நலிந்த பிரிவினரையும் மேம்படுத்துவதற்காக பாரத பிரதமரின் புதிய இருபது அம்ச திட்டத்தை தமிழ்நாடு மிகவும் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றது. 1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு முடிய இத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு மரம் நடும் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது :—

| விவரம். | 1981–82. | 1982–83. | 1983–84. | 1984–85. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. காடுவளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக் கன்றுகள். | 746 லட்சம். | 1161.66 லட்சம். | 1192.46 லட்சம். | 1106.86 லட்சம். |
| 2. சமூகக் காடு வளர்ப்பு (மரம் நடப்பட்ட பரப்பளவு). | 35,434 எக்டேர். | 38,212 எக்டேர். | 28,768 எக்டேர். | 38,249 எக்டேர். |
| 3. வனப்பண்ணைத் திட்டத்தின் கீழ் பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்ட கன்றுகள். | 65.29 லட்சம். | 173.040 லட்சம். | 459.809 லட்சம். | 443.510 லட்சம். |

12.2. 1985–86-க்கு கீழ்க்கண்டவாறு மத்திய அரசால் இலக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1986 வரை எய்திய சாதனை விபரம் கீழே தரப்படுகிறது. மத்திய அரசு நிச்சயித்த இலக்கிற்கும் அதிகமாக நமது மாநிலம் சாதனை எய்தியுள்ளது.





| விவரம். | எண்ணிக்கை. | 1985–86 குறியீடு. | மார்ச் 1986 முடிய முடிக்கப்பட்ட வேலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) சமூகக் காடு வளர்ப்பு (மரம் நடப்பட்ட பரப்பளவு). | 3,000 எக்டேர் | 40 | 29.960 |
| (ஆ) காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக் கன்றுகள். | லட்சத்தில் | 1100 | 1214.491 |
| (இ) வனப்பண்ணைத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு வழங்கும் மரக்கன்றுகள். | லட்சத்தில் | 270 | 531.175 |

குறிப்பு. (ஆ) இனத்தின் கீழ், இனங்கள் (அ) மற்றும் (இ) அடங்கும்.

12.3. 1986–87-ம் ஆண்டில் இந்த திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு இலக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(அ) சமூகக் காடு வளர்ப்பு .. .. 21,268 எக்டேர்.

(ஆ) காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்படும் மரக் கன்றுகள். 940 லட்சம்

(இ) வனப்பண்ணைத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கும் மரக் கன்றுகள். 47.10 மில்லியன்.

மத்திய அரசினால் 1986–87 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட இலக்குகள் தமிழ்நாட்டிற்கு நிச்சயிக்கப்பட்டுள்ளன :—

(அ) காடு வளர்ப்பு .. .. 240 மில்லியன் நாற்றுகள்.

(ஆ) சமூக நலக் காடுகள் .. .. 30,000 எக்டேர்.

(இ) வனப்பண்ணை .. .. 180 மில்லியன் நாற்றுகள்.

தோராயமாக இதில் மூன்றில் இரண்டு பங்கை ஊரக வளர்ச்சித் துறையும், மூன்றில் ஒரு பங்கை வனத்துறையும் செயல்படுத்தும்.

**13.1.** தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

வனத்துறை தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Waste Land Development Programme) 1986–87 ஆம் ஆண்டில் வளர்ச்சி குறைந்த காட்டுப் பகுதிகளில் (Degraded reserve forest) 3,600 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டம் 70.75 லட்சம் ரூபாய் செலவில் செயல் படுத்தப்படும். 1–4–1987 முதல் துவக்கப்படவிருக்கும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்ட காலத்தில், வனத் துறை காப்புக் காட்டிற்கு வெளியே சமுதாயத் தோட்டங் களில் செயல் முறையின் அளவைப் படிப்படியாக குறைத்துக் கொண்டே வந்து, வளர்ச்சி குறைந்த காப்புக்காடு எல்லைக்குள், சமுதாய நிலங்களில் வளர்ச்சிக்குப் பயன்படும் மரங்களை வளர்க் கும் திட்டத்தை மேம்படுத்த உள்ளது. எனவே ஊரக வளர்ச்சித் துறை தான் 1–4–1986 முதல் இருபது அம்ச திட்டம் இனம் 12(எ) மற்றும் தேசிய தரிசு நிலம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செடி நடும் திட்டங்களுக்கு மைய முனைப்பு இலாகாவாக (Nodel Department) செயல்படும். ஊரக வளர்ச்சித் துறை தான், மற்ற சம்பந்தப்பட்ட தலைமைத் துறை அறிக்கைகளைப் பெற்று தொகுத்து மாநில அறிக்கை தயாரிக்க வேண்டும். தமிழ் நாட்டிற்கு 1986–87 ஆம் ஆண்டில் இந்திய அரசு கீழ்க்கண்ட இலக்கு நிர்ணயித்துள்ளது :—

| காடு வளர்ப்பு (எண்ணிக்கை பத்து லட்சத்தில்). | சமூகக் காடுகள் (எக்டேர்- ஆயிரத்தில்). | வனப்பண்ணைத் தோட்டங்கள் (செடிகள் பத்து லட்சத்தில்). |
|---|---|---|
| 240 | 30 | 180 |

காடு வளர்ப்புத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு, இந்த இலக்கு அரசால் கீழ்க்கண்ட இலாக்காக் களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளன:—

| இலாகாவின் பெயர். | மரக்கன்று களின் எண்ணிக்கை (10 லட்சத்தில்). |
|---|---|
| (1) | (2) |
| 1. ஊரக வளர்ச்சி இயக்ககம் .. .. .. | 150 |
| 2. சமூக வனக் காடுகள் பிரிவு-வனத்துறை .. | 89 |
| 3. வனத்துறை—முக்கிய பிரிவு .. .. .. | 5 |
| 4. நெடுஞ்சாலைத் துறை .. .. .. | 10 |
| 5. விவசாயத் துறை .. .. .. | 3 |
| 6. பொதுப் பணித் துறை .. .. .. | 0.5 |
| மொத்தம் .. | 257.5 |





**சமூகக்காடு வளர்ப்பு—**

'சிடா' நிதி உதவியுடன் செயல்படும் திட்டம்.

14.1. 1981 ஆம் ஆண்டிலிருந்து சமூகக்காடு வளர்ப்புத் திட்டம் ஸ்வீடன் நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு நல்ல பல நோக்கங்களைக் கொண்ட திட்ட மாகும். மக்களுக்கு வேண்டிய விறகு மற்றும் தடிமரத் தேவை களைப் பூர்த்தி செய்ய கிராமப்புற மக்களின் ஈடுபாட்டுடன் நில சார்ந்த சொத்துக்களை ஏற்படுத்தவும், கிராமப்புற மக்களுக்கு பெரும் அளவு வேலை வாய்ப்பினை அளிக்கவும் இத்திட்டம் உதவுகிறது.

14.2. இத்திட்டம் 1981-82ல் துவக்கப்பட்டு ஐந்தாண்டு காலத்தில் 45 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட ஒரு திட்டமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டம் மேலும் ஓராண்டு 1986-87 முடிய நீடிக்கப்பட இந்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

14.3. திட்ட காலத்தின் முதல் 4 ஆண்டுகளில் (1981-82 முதல் 1984-85 முடிய) 97,425 எக்டேர் பரப்பில் தொகுதி தோட்டங்களும், 6,605 கி.மீ. தூரத்திற்கு வரிசை தோட்டங் களும், 2,868.67 லட்சம் ரூபாய் செலவில் வளர்க்கப்பட்டுள்ளன. இதைத்தவிர 2,260.31 லட்சம் மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் வளர்ப்பதற்காக இலவசமாகவோ சலுகை விலையிலோ அளிக்கப்பட்டுள்ளது.

14.4. 1985-86 ஆம் ஆண்டில் 941.24 லட்சம் ரூபாய் செலவில் கீழ்க்கண்ட இலக்கில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது

1. தொகுதி தோட்டங்கள் 17,000 எக்டேர்.
2. வரிசை தோட்டங்கள் 610 கி.மீ.
3. மரக்கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு அளித்தல். 287 லட்சம்
4. பொழுதுபோக்கு காடுகள் 24 லட்சம்

14.5. செப்டம்பர் 18--26, 1985-ல் சிடா இடைக்கால ஆய்வு ஒன்று சிடா ஆய்வு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

14.6. 1986-87 ஆம் ஆண்டில் சிடா திட்டம் 1,014.32 லட்சம் ரூபாய் செலவில் கீழ்க்கண்ட இலக்கில் செய்ய உத்தேசிக்கப்பட் டுள்ளது.

1. தொகுதித் தோட்டங்கள் 17,000 எக்டேர்.
2. வரிசை தோட்டங்கள் .. 610 கி.மீ.
3. மரக்கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு அளித்தல் 287 இலட்சம்
4. பொழுதுபோக்கு காடுகள் 24 இலட்சம்.

1986—87 முதல் சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தினை ஊரக வளர்ச்சித் துறையும் அதிக அளவில் செயல்படுத்தவிருப்பதால் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு மற்றும் பஞ்சாயத்து நிலங்களில் மூன்றில் இரண்டு பங்கில் ஊரக வளர்ச்சித்துறையும் ஒரு பங்கில் வனத்துறையும் சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தும்.

14.7 இத்திட்டத்தின் கீழ் 30—6—1985 முடிய 3,008 நபர்கள் கிராம சமூகவன ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (2,798 ஆண்கள், 210 பெண்கள்) கிராம சமூகவன ஊழியர்களுக்கு ஆறு நாட்களுக்கு விரிவாக்க பயிற்சியும், தொழில் நுட்ப பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இதுவரை, 1978 கிராம சமூகவன ஊழியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மக்களிடம் நேரடி யாகவும் விரைவில் தொடர்பு வைத்துக் கொள்ளும் பொருட்டும் 2,793 கிராம சமூகவனவியல் ஊழியர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

14.8. மாநில அரசின் ஊரக விரிவாக்க பயிற்சி மையங்களில் வனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 30—6—1985 முடிய சமூக வனவியல் பிரிவில் 653 வனவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் 597 வனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக வந்துள்ள வனவளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது, வனச் சரகர்களுக்கு கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 15 நாட்களுக்கு விரிவாக்க பயிற்சியும் தொழில் நுட்பப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. முதற்கட்டப் பயிற்சியில் சமூக வனவியல் பிரிவினைச் சார்ந்த 132 சரகர்களுக்கும் டெரிடோரியல், மண்டலத்தைச் சார்ந்த 30 சரகர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக வந்துள்ள 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது.

14.9. 1983, 1984, 1985 ஆகிய மூன்று ஆண்டுகளில் சென்னையில் நடந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் சமூக வனவியல் கிளை பங்கேற்றுள்ளது. இது தவிர மாவட்டத் தலைமை இடங்களாகிய சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடந்த அரசுப் பொருட்காட்சியிலும் மற்றும் குன்னூரில் நடந்த பழக் கண் காட்சியிலும் சமூக வனவியல் கிளை பங்கேற்றுள்ளது. தற்பொழுது குளக்கரைத் தோட்ட சமுதாயக் காடுகள் 10 வருட சுழற்சியில் வெட்டப்படுகின்றன. இம்மாதிரியான காடுகளை விற்று வருவாய் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளுடன் 50 : 50 விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றது. இதுவரை 447 பஞ்சாயத்துகளுக்கு மொத்தம் 84.60 லட்சம் ரூபாய் சமூகக் காடுகள் ஏல விற்பனைத் தொகையில் பங்கீடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. திருவில்லிபுத்தூர், கோவில்பட்டி, சேலம் மதுரை,



ஆகிய இடங்களில் இதற்கென விழா நடை பெற்றது. இத்திட்டத்தில் நீண்டகால இலக்கினை அடைவதற்கு கிராம மக்களின் பங்கேற்பிற்கான இத்திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட காடுகளிலிருந்து பெறப்படும் பயன்களை பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்வதில் பல்வேறு முறைகள் பரிசீலிக்கப்படுகின்றன.

14.10. சமூக வனவியல் திட்டத்தின் அரசினரல்லா நிலையங்களையும், தன் விருப்பார்ந்த நிலையங்களையும் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

14.11. இத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பயிற்சி படிப்பாய்வு பயணம், சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்ப ஆகியவை ஆராயப்படுகின்றன. சமூக வனவியல் பயிற்சிக்கு இரு தொகுதிகளாக அதிகாரிகள் ஆக்ஸ்போர்டு சென்று வந்தனர். இதை போன்று சமூக வனவியல் செயல்பாடு பற்றி பயிற்சிக்காக இரு தொகுதி அதிகாரிகள் பிலிப்பைன்ஸ் சென்று வந்துள்ளனர். ஒரு அதிகாரி பிலிப்பைன்சில் வனவியல் திட்ட சம்பந்தமான பயிற்சியில் பங்கேற்றுள்ளார். இதே போன்று மற்றொரு அதிகாரி எத்தியோப்பியா வனவியல் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளார்.

14.12. இத்திட்டத்தின் மத்திய நிலை அலுவலர்களுக்கு (அதாவது கோட்ட வன அலுவலர்கள், உதவி வனப் பாதுகாவலர்கள்), சமூகக் காடுகள் சம்பந்தமான வேளாண்மைப் பயிற்சி இரண்டு வாரங்களுக்கு போபாலைச் சார்ந்த இந்திய வேளாண்மை பயிற்சி நிலையத்தினரால் 1985—86-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இதில் 21 கோட்ட வன அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. சமூகக் காடுகள் தலைமை அலுவலரும் மற்றொரு அலுவலரும் படிப்பு பயணமாக சிடா திட்டத்தினால் நடத்தப்பட்ட இரண்டு வார காலப் படிப்பு பயணத்திற்கு பிலிப்பைன்ஸ் சென்று வந்துள்ளனர். பங்களா தேசத்திலிருந்து 7 வன அதிகாரிகள் சமூக வனவியல் திட்டம் செயலாக்கத்தை பார்வையிட்டார்கள்.

14.13. சமூகக் காடுகள் திட்டத்தின் பயிற்சி செயல்முறை விளக்கம் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் பற்றி பணியாற்றும் நிலையங்களாக வன ஆராய்ச்சி மையங்கள் சிடா உதவி மேம்பாடு திட்டம் 2-வது கட்ட காலத்தில் நிறுவப்பட இருக்கின்றன. இந்த மையங்கள் விவசாயிகளின் பயிற்சி நிலையங்களாகவும் சமூக வனவியல் பணியாளர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி (In Service Training) அளிக்கும் நிலையமாக இயங்கும். மேலும் இம்மையங்களில் விவசாயிகளுடன் கூட்டங்கள் நடத்துவதற்குத் தேவையான வசதிகளும் செய்துதர ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. 1986—87-ஆம் ஆண்டில் சில மையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

[1986 ஏப்ரல் 25

14.14. தமிழ்நாடு சமூக வனவியல் திட்டம் தேசிய மற்றும் சர்வதேச மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இந்தியாவில் பல மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும், தமிழ்நாடு சமூக வனவியல் திட்டம் செயல்படும் அனுபவத்தைக் கண்டு அறிந்து அவர்களது சொந்த மாநிலங்களில் இங்கு கண் டறிந்த அனுபவங்களை இது மாதிரியான தங்களது திட்டங்களில் செயல்படுத்தப் பயன்படுத்தும் பொருட்டு பல அலுவலர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தருவது ஒரு வழக்கமாகிவிட்டது.

சமூகக் காடு வளப்புத் திட்டம் —2-ஆவது கட்டம் :

14.15. 1–4–1987 முதல் இத்திட்டம் 5 வருடத்திற்கு செயல்பட உள்ளது. இரண்டாவது கட்ட காலத்தில் சமுதாய நிலங்களில் காடு வளர்ப்புத் திட்டம் சீராக குறைத்துக் கொண்டே வரப்படும். ஏற்கெனவே வளர்க்கப்பட்ட காடுகளின் தரத்தை உயர்த்துவதிலும், வளர்ச்சிக் குன்றிய காடுகளின் தரத்தை உயர்த்த சமுதாய நோக்குடன் மரம் வளர்ப்பதற்கு ஆழ்ந்த கவனம் செலுத்தப்படும்.

சிடா உதவி மேம்பாட்டுத் திட்ட இரண்டாவது கட்ட திட்ட செயல் அறிக்கையை தயார் செய்யும் பொறுப்பு பெங்களூரில் உள்ள ஓம் கன்சல்டண்ட் (இந்தியா) தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இந்த திட்ட செயல் அறிக்கையை மேற்படி நிறுவனம் கொடுத்துள்ளது. '' ஓம் கன்சல்டண்ட் '' நிறுவனம் கொடுத்துள்ள திட்ட செயல் அறிக்கையினை சிடா குழுவுடன் ஆலோசனை நடத்தி மத்திய அரசும், மாநில அரசும் ஒப்பளிக்க வேண்டியுள்ளது.

ஊரக விறகு மரத் தோட்ட திட்டம். :

14.16. மத்திய அரசு சார்பு திட்டமான இது ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து செங்கற்பட்டு, திருச்சிராப் பள்ளி, தர்மபுரி மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. கிராமங்களிலுள்ள தரிசு நிலங் களிலும், வளர்ச்சி குறைந்த காடுகளிலும், கடற்கரைப் பகுதி நிலங்களிலும் சாலைகள், கால்வாய்க்கரைகள், குளங்கள், ரயில் வழித் தடங்கள் முதலியவற்றின் அருகாமையிலும் விறகு மரத் தோட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படுகின்றன. கிராமப் புறங்களில் விறகு பற்றாக்குறை ஏற்படுவதால் மாநிலத் திலுள்ள காடுகளின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவதைத் தடுக்க இத் திட்டம் வகை செய்கின்றது. இத்திட்டத்தை நமது மாநிலத்தில் வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் விரிவுபடுத்த மத்திய அரசு சம்மதம் தெரிவித் துள்ளது.



1986 ஏப்ரல் 25]

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தை செயறபடுத்த 400 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985–86-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை 132.32 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தி 3,500 எக்டேர் பரப்பில் தோட்டங்களும் 157.50 கிலோ மீட்டர் தொலைவிற்கு தொடர் தோட்டங்களும் எழுப்பப்பட்டது. பொது மக்கட்கு 150 லட்சம் மரக்கன்றுகள் வளர்த்து வழங்கப்பட்டது.

1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டம் 133.83 இலட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும். 3,500 எக்டேர் பரப்பில் தோட்டங்களும், 157.50 கிலோ மீட்டர் தொலைவிற்கு தொடர் தோட்டங்களும் ஏற்படுத்தப்படும். மேலும் 155 இலட்சம் மரக் கன்றுகள் வளர்த்து பொதுமக்களுக்கு அளிக் கப்படும்.

வளர்ச்சி அடையாத காடுகளை மேம்படுத்தும் திட்டம் :

15.1. பாரத பிரதமர் 5–1–1985 அன்று நாட்டிற்கு ஆற்றிய உரையில் தொடர்ந்து நடந்துவரும் காடு அழிப்பு, உயிரின வாழ்க்கை கேடு, சமுதாய பொருளாதார நெருக்கடி ஆகியவைகளை நேருக்கு நேர் காணும் நிலையை தோற்றுவித் திருக்கிறது என்று கூறியுள்ளார். இந்நிலை உடனே நிறுத்தப் பட வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு இதற்கென பயன்படுத்தப்படாமல் தரிசாக விடப்பட்டுள்ள நிலப்பகுதியில் வருடா வருடம் சராசரி 5 மில்லியன் எக்டேர் பரப்பில் கால்நடைகளுக்கு தேவையான புல், தாவரம் மற்றும் விறகு வகை மரங்களை உற்பத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேசிய தரிசு நில அபிவிருத்தி வாரியம் ஒன்றினை பாரதப் பிரதமர் ஏற்படுத்தியுள்ளார். மக்கள் மூலம் மரம் வளர்ப்பில் தீவிர அக்கறை காட்டவும் அவர்களுடைய வாழ்க்கை மேம் பாட்டை உயர்த்துவதற்காகவும் இந்த அமைப்பினை பாரதப் பிரதமர் உருவாக்கியுள்ளார்.

15.2. இந்நிலையில் உயிரியல் சூழ்நிலை பாதுகாக்கப் படவும் மற்றும் சமுதாய பொருளாதார நெருக்கடியினை தவிர்க்கவும் மக்கள் அதிக அளவில் மரங்கள் வளர்ப்பில் பங்கேற்க முன்வர வேண்டும் என்று பாரதப் பிரதமர் அறை கூவல் விடுத்தது மிகவும் முக்கியமானது ; வரவேற்கத் தக்கது. மேலும், இந்த அழைப்பு புதிய கொள்கைகளை உரு வாக்கவும், புதிய வினைமுறைத் திட்டத்தை (Strategy) வகுக்கவும் மேலும் தகுந்த வழிவகைகளை உண்டு பண்ணவும், வழிகோலுகிறது. ஒவ்வொரு மனிதனும் மரம் வளர்ப்பதை தன்னுடைய தலையாய கடமை என கருதவும், இரண்டாவது பசுமைப் புரட்சியில் வீறு நடை போடச் செய்வதும் தான் இந்த தரிசு நில பசுமைப் புரட்சித் திட்டம்.

15.3. தற்போது, வனத்துறையில் மரங்கள் உள்ளதும், மரங்கள் இல்லாமலும், சிறிது குத்துச் செடிகள் கொண்டதுமாக சுமார் 5 இலட்சம் எக்டேர் சீர்கேடான வன நிலப்பகுதி உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வனப் பகுதியினை நிதி நிலைமைக்கேற்றவாறு வருடத்திற்கு சுமார் 25,000 எக்டேர் வீதம் படிப்படியாக 20 ஆண்டுகளில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமுலாக்குவதற்காக முதல் கட்டமாக 1986–87-ல் இரண்டு அல்லது மூன்று புதிய கோட்டங்களை அண்ணா, தர்மபுரி மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் துவக்கி, 3,600 எக்டேர் வனப் பகுதியில் கீழ்க்கண்ட வனப்பக்குவ பணி முறைகளை கையாள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது:—

| | |
|---|---|
| (அ) நீர்வளத்தை மேம்படுத்தவும் உயிரின சூழ்நிலையை பழைய நிலைக்கு கொண்டு வருதல். | 600 எக்டேர். |
| (ஆ) நில அடிப்படை சொத்து உண்டாக்குதல். | 400 எக்டேர். |
| (இ) கிராமத்திற்கும், காட்டிற்கும் இடைப்பட்ட நிலத்தில் ஏற்படும் பயன்களை சமூகத்திற்கே பகிர்ந்தளித்தல். | 200 எக்டேர். |
| மொத்தம் .. .. | 1,200 எக்டேர் (ஒரு கோட்டத்திற்கு) |

மூன்று கோட்டத்திற்கு 1,200 × 3 = 3,600 எக்டேர்.

15.4. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமே அழிந்துபட்ட உயிரினச் சூழ்நிலையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதுதான். இதனை வனவளப்பியல் முறைகளை கையாண்டோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமவாசிகளையோ பயன்படுத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த அதாவது அன்றாடத் தேவையான விறகு, கால் நடைகளுக்குத் தேவையான புல் மற்றும் பசுந்தாள் உரம் போன்றவற்றை தேடிக்கொள்ள மற்றும் தண்ணீர், சுற்றுப்புற அபிவிருத்தி, அவர்களைச் சுற்றி ஆரோக்கிய சூழ்நிலை ஏற்படுத்துவதுதான் இத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

15.5. மேலே கூறியவாறு அழிந்துபட்ட காடுகளை புதுப்பிப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு எக்டேருக்கு 2,000 செடிகள் வீதம் 21,268 எக்டேர் சமூக வனவியல் பரப்பினை அபிவிருத்தி செய்யவும் சிடா உதவியுடன் செயல்படும் சமூக வனவியல் திட்டத்தின்கீழ் மரம் வளர்ப்பு விரிவாக்கத் திட்டம் மற்றும் மரம் வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்களின் கீழ் 4.71 கோடி கன்றுகள் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





15.6. இத்திட்டம் மேற்கூறிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதோடு சமூக வனவியல் திட்டம் பிற காடு வளர்ப்பு திட்டங்கள் மற்றும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவைகள் மூலம் நடவிருக்கும் மரங்களின் எண்ணிக்கையும் இத்திட்டத்தின் கீழ் தொகுத்துக் காட்டப்படும். ஏனெனில் இத்திட்டங்கள் அனைத்தும் பாரதப் பிரதமரின் குறிக்கோள்களுக்கு இசைய அமைவதால் இத்திட்டங்களின் கீழ் நடப்படவிருக்கும் மரங்களையும் கணக்கில் கொண்டு ஆக மொத்தம் 1986–87-ல் இத்திட்டத்தின்கீழ் 9.4 கோடி மரக்கன்றுகள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா.

16.1 வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை அமைக்கும் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர். இந்த நவீன பூங்காவினை 140 எக்டேர் பரப்பளவில், மூன்று கோடி ரூபாய் செலவில் அமைப்பதென திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் முதல் கட்டத்தினை, 105 இலட்சம் ரூபாய் செலவில் 1979–80-ம் ஆண்டில் துவக்கி, வேலைகள் செய்து முடிக்கப்பெற்றது. விலங்குகளுக்கு ஏற்றவாறு இயற்கைச் சூழல் கொண்ட பரப்பளவு போதுமானதாக இல்லை. மற்றும் வருங்காலத்தில் பூங்காவினை விரிவுபடுத்துதல், ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான இடங்கள் ஆகியவைகளை கருத்தில் கொண்டு, 510 எக்டேர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் இப்பூங்காவினை அமைப்பதென மாற்றம் செய்யப்பட்டது. நமது நாட்டிலேயே, ஏன் தென் கிழக்கு ஆசியாவிலேயே, பெரிய விலங்ககமாக அமையக்கூடிய வகையில் இப்பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. அடுத்துள்ள குன்றுகளில் சஃபாரி (Safari) பூங்காவினை, இந்த விலங்ககத்தில் அமைப்பதெனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயற்கைச் சூழலும், எழிலும், மேடுபள்ளங்கள் கொண்டதாகவும் இந்நிலப் பகுதி எழிலாக அமைந்துள்ளது.

16.2. 1982–83 ஆம் ஆண்டில், வன விலங்குகள், குறிப்பாக நீர்யானை, வரிக்குதிரை, சிறுத்தை, ஆப்பிரிக்கா சிங்கம், யானை, புள்ளிமான் மற்றும் சில பறவையினங்கள், சென்னை மாநகராட்சி விலங்ககத்திலிருந்து இப்புதிய நவீன பூங்காவிற்கு மாற்றப்பட்டுள்ளன. பறவையினங்களும், விலங்கினங்களும் காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டும், மற்றைய விலங்ககங்களிலிருந்து மாற்றுதல் மூலமாகவும், இப்பூங்காவில் சேர்க்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சுமார் 3.15 இலட்சம் ரூபாய் செலவில் அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து, ஒரு ஆண் காண்டாமிருகம் இப் பூங்காவிற்கென வாங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பெண் காண்டாமிருகம் மாற்றுமுறையில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16.3. மலேசியா தேசத்து நேகரா என்ற மிருகக் காட்சியகத்திலிருந்து கீழ்க்கண்ட மிருகங்களை விலங்கு மாற்று முறையில் வாங்கியுள்ளோம்:—

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு வெளி நாட்டிலிருந்து விலங்கு மாற்று முறையில் விலங்குகள் வாங்கிய விவரம்.

| வ. எண். | மலேசியா நாட்டிலிருந்து வாங்கியது. | | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிலிருந்து கொடுத்தது. | |
|---|---|---|---|---|
| 1. | கரடி பூனை | 1 : 1 | குரங்கு | 1 : 1 |
| 2. | நண்டுதின்னும் குரங்கு | 1 : 1 | சரஸ் கொக்கு | 2 |
| 3. | குள்ள முதலை | 2 | மக்கர் முதலை | 1 : 1 |
| 4. | எகிப்திய வாத்து | 1 : 1 | தட்டைத்தலை வாத்து. | 2 |

மேலும் ஒரிசா மாநில நந்தன்கானன் மிருகக் காட்சியகம் மைசூர் மற்றும் டில்லி தேசிய விலங்கு பூங்காவிலிருந்து கருஞ்சிறுத்தை, புலி, கரியால், மகபீப்ஸ் என்ற குரங்கு போன்ற மிருகங்களையும் வாங்கியுள்ளோம்.

16.4. விரிவான மற்றும் இயற்கையான சூழலில் இப்பூங்காவினுள் விலங்கு கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் சில விலங்கினங்கள், குறிப்பாக தாமின் இன மான், புள்ளி மான், கடமான், வெளிமான் மற்றும் சாரஸ் கிரேன் (கொக்கு) தென் அமெரிக்கா பஞ்சவர்ணக்கிளி பறவையினங்கள் இப்பூங்காவிற்கு வந்த பின்னர் தன் இனத்தைப் பெருக்கியுள்ளது. தற்பொழுது 288 மிருகங்கள் (45 வகைகள்) 353 பறவைகள் (69 இனங்கள்) மற்றும் 65 ஊர்வன வகையைச் சேர்ந்த பிராணிகள் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

16.5. இவ்விலங்கினத்தினை, மறைந்த நம் அன்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நினைவாக அவருடைய பெயரில் ''அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா'' என அழைக்கப்பட்டு 24–7–1985 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

16.6. இப்பூங்கா அதிகமாக மக்கள் கூட்டத்தினைக் கவர்ந்து வருகிறது. விடுமுறை நாட்களில் 3,000 முதல் 5,000 மக்களும் ஏனைய நாட்களில் சராசரி 1,000 மக்களும், சிறுவர்களும், குறிப்பாக, பள்ளி வண்டிகளிலும் ஊர்திகளிலும் வந்து இப பூங்காவினை கண்டு களிக்கின்றனர். கடந்த 24–7–1985 முதல் 31–1–1986 வரை இப்பூங்காவினைப் பார்வையிட்டோர்



எண்ணிக்கை சுமார் 3,95,312 ஆகும். குறிப்பாக, 14–1–1986 முதல் 16–1–1986 அன்று வரை உயிரியல் பூங்காவினை காண வந்தோரின் எண்ணிக்கை 53,628 (8,850 குழந்தைகள் உட்பட) ஆகும். இதன் மூலம் கிடைத்த வருவாய் 49,202 ரூபாய்.

16.7. மா மரம், கொய்யா, ஆலமரம், தென்னை போன்ற பழவகை இன மரங்கள் பல இப்பகுதியில வளர்க்கப்பட்டு வருகின்றன. நிழல் மற்றும் அழகு தரும் மர இனங்களும் நடப்பட்டுள்ளன. நடப்பட்ட மரங்களில் பெரும்பான்மையானவைகள் ஊன்றி வளரத் தொடங்கி விட்டன.

16.8. கடந்த ஜனவரி 1986 வரை 448.46 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வரும் 1986–87 ஆம் ஆண்டில் 163.64 இலட்சப் ரூபாய் செலவு செய்வதென வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மேம்பாடு.

17.1. பழங்குடி மக்கள் மேற்கு மலைத் தொடர்ச்சி மற்றும் கிழக்கு மலைத் தொடர்ச்சி ஆகிய பகுதிகளில் மிகுதியாய் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை காடுகளோடு மிகவும் ஒருங்கிணைந்ததாகும். தொடக்கம் முதல் அவர்களின் நலனுக்காக வனத்துறை செயலாற்றி வருகிறது. பழங்குடியினர் வனத்துறையில் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். துறை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டதைத் தவிர வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்காக வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனத்துறை மேற்கொண்டுள்ள பல்வேறு நல நடவடிக்கைகள் பற்றிய விபரம் வருமாறு:—

(1) பயிரிடுவதற்காக 1990 எக்டேர் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(2) பழங்குடியினர் வசிக்கும் வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப்பகுதிகளில் கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(3) வனத்துறையில் அவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர், வனப்பணியாளர், வனக்காப்பாளர், வனக்காவலாளர், யானைப் பாகன்; காவடிகள் போன்ற அரசுப் பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இலவசமாகக் குடியிருப்பு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(4) வட ஆற்காடு மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும் 2 உயர்நிலைப் பள்ளிகளையும் வனத்துறை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் மொத்தம் 2,395 மாணவர்களும், 46 ஆசிரியர்களும் உள்ளனர்.

(5) பழங்குடியினரின் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு, சீருடைகள், புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியன வனத்துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(6) பழங்குடியினரின் பிள்ளைகளுக்காக தங்கும் விடுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் மருத்துவ வசதிகள் டாப்சிலிப், முதுமலை ஆகிய பகுதிகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. டாப்சிலிப்பில் உள்ள மருத்துவமனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர மருத்துவ பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையில் உள்ள மருத்துவமனை மருந்தாளுநர் மற்றும் இதர பணியாளர்கள் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(7) காடுபடு பொருள்கள் பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்களுக்கு 10 சதவீதம் சலுகை வீதத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(8) பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

(9) முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 5 வயது முதல் 15 வயது வரையிலும் பயிலும் 2,395 பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் எல்லாப் பள்ளிகளிலும் சத்துணவு வழங்கப்படுகிறது.

(10) பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியன சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்கு தேவையான சிறிய மரம் மற்றும் வனப் பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங்கப்படுகின்றன.



17.2. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின்படி பழங்குடியினர் வாழும் பகுதிகளில், இத்துறை பின்வரும் பணிகளை நிறைவேற்றி வருகிறது:—

(1) மலைத் தோட்டங்களை வளர்த்தல்—வருடத்திற்கு 1,500 எக்டேர்.

(2) பழங்குடியினரின் பகுதிகளில் சாலை போடுதல்—வருடத்திற்கு 5 முதல் 10 கிலோ மீட்டர் வரை.

(3) பள்ளி கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கு மற்றும் பாதுகாப்பு வனப்பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்—வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளி கட்டிடங்களும்.

17.3. இவற்றைத் தவிர, தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் (வனப்பகுதிகளுக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன் தரும் செடிகளான பழ வகைகள் மற்றும் புல் வகைகள் 500 நாற்றுகள் தங்களுடைய சொந்த நிலங்களில் பயிரிட இலவசமாக கொடுக்கப்படுகின்றன.

17.4. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1980-81 முதல் 1986-87 ஆம் ஆண்டு வரை திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்ட விபரங்கள் கீழே தரப்படுகின்றன :—

| வருடம். | சாதனை. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1980-81 .. .. .. | 18.34 |
| 1981-82 .. .. .. | 33.78 |
| 1982-83 .. .. .. | 33.22 |
| 1983-84 .. .. .. | 49.09 |
| 1984-85 .. .. .. | 46.68 |
| 1985-86 .. .. .. | 52.96 |
| 1986-87 (இலக்கு). .. .. .. | 56.51 |

17.5. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக (1985—90) 200 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.6. 100.00 இலட்சம் ரூபாய் செலவில் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், சந்தன மரத் தோட்டம் எழுப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. 1986-87ஆம் ஆண்டில் 56.06 இலட்சம் ரூபாய் அளவில் ஜவ்வாது மலை, சித்தேரி மலை மற்றும் சேர்வராயன் மலை ஆகிய இடங்களில் (திருப்பத்தூர்—திருவண்ணாமலை, போளூர், தர்மபுரி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி) ஐந்து சந்தனமர தோட்டங்கள் எழுப்பும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

17.7 பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் அவர்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யும் வகையிலும் சிறு காடுபடு பொருள்களான புளி, கருவேப் பிலை, கடுக்காய், பிரம்பு மற்றும் இதர காடுபடு பொருள்களை பழங்குடி உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் லேம்ப் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பு உறுப்பினர்களைக் கொண்டு செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் துறை மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட நியாய விலையிலிருந்து 10 விழுக்காடு குறைந்த சலுகை விலையில் ஒதுக் கீடு செய்யப்பட்டு வருகின்றன. இந்த 10 விழுக்காடு சலுகை யினை 30-6-1986 வரை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

17.8 அரசாணை நிலை எண். 127, வனம் மற்றும் மீன் துறை, நாள் 5—2—1983-ன்படி துறையால் நிர்ணயம் செய்யப் படும் நியாய விலை கடந்த ஆண்டு ஏல விற்பனை விலையைவிட அதிகப்படாமலோ அல்லது கடந்த ஆண்டு வறட்சியினால் பாதிக்கப்பட்டிருந்தால், அண்மை வருடத்தில் ஏல விற்பனையில் மூலம் எட்டிய விலையைவிட அதிகப்படாமலோ இருக்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

17.9. ஆதி திராவிட பழங்குடியினைச் சேர்ந்த இருளர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இருளர்கள் பாம்பு பிடிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் என பெயரிடப்பட்டுள்ள இச்சங்கம் அரசு நிச்சயித்துள்ள உரிமத்தைச் செலுத்தி வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் பாம்புகளை பிடித்து மருந்து தயாரிக்க, நச்சு எடுக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றது. நச்சு எடுக்கப்பட்ட பிறகு இந்த பாம்புகளை இயற்கை சூழலில் விட்டுவிட வேண்டும்.

வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

18.1 தர்மபுரி, ராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் மத்திய அரசு பொறுப் பேற்கும் வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்



படுத்தப்பட்டு வருகின்றது. காடு வளர்ப்பு மேய்ச்சல் நில அபி விருத்தி ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். 1985-86-ஆம் ஆண்டில் இத்திட்டம் 48.90 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கீழ்க்கண்ட வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. காடு வளர்ப்பு | .. .. | 1,110 எக்டேர் பரப்பு. |
| 2. வனப் பண்பாடு | .. .. | 1,845 எக்டேர் பரப்பு. |
| 3. மரக்கன்றுகள் | .. .. | 4 லட்சம் கன்றுகள். |
| 4. நீர்வளக் காப்பு | .. .. | 6 குட்டைகள். |
| 5. தண்ணீர் வசதி | .. .. | 10 இடங்கள். |
| 6. வன விரிவாக்க மையம் | | 1 |

18.2. மேற்குறித்தவை தவிர, சமூக வனத் திட்டங்கள் 3.21 லட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல் படுத்தப்படும். இதில் தண்ணீர் வசதிகள், பாலித்தீன் பைகளில் மரக்கன்றுகள் ஏற்படுத்துதல், விரிவாக்க மைய கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் செய்யப்படும்.

திட்டப்பணிகள் செயல்படுத்துதல் :

19.1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 68 கோடி ரூபாய். ஆறாவது ஐந்தாண்டு திட்டகால வனவள திட்டங்களுக்கான சாதனை 60.53 கோடி ரூபாயாகும். நமது மாநிலத்தின் காட்டுவளம் மிகக் குறைவாகவே உள்ளது. வன வளம் பெருக்க மேம்பாட்டுப் பணிகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. இந்த அவசிய நிலையினையும் கூடிவரும் விலைவாசியினையும் கருத்திற் கொண்டு, ஆறாவது திட்ட கால ஒதுக்கீடு தொகையான 57 கோடி ரூபாயுடன் ஒப்பிடும்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 68 கோடி ரூபாய் மிகக் குறைவேயாகும்.

19.2 ஆறாவது திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, செலவு பல்வேறு வனத்திட்டங்களுக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ஆகிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், தலைப்பும். (1) | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு. (2) | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட சாதனை. (3) | ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு. (4) | 1985-86 செலவு. (5) | 1986-87 வருடத்திற் கான உத்தேச ஒதுக்கீடு. (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. மாநிலத் திட்டங்கள் | 5,700.00 | 6,187.91/ | 7,500.00// | 1,859.54/ | 1,993.87/ |
| 2. மையஅரசு சார்பு திட்டங்கள். | நிதி ஒதுக்கீடு இல்லை. | 1,126.81 | நிதி ஒதுக்கீடு இல்லை. | 213.41 | 234.30 |
| | 5,700.00 | 7,314.72 | 7,500.00 | 2,072.95 | 2,228.17 |

/ இத்தொகை மண்வளப் பாதுகாப்புத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய மாநிலத் திட்டங்கள் உள்ளிட்டது.

// மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான 7 கோடி ரூபாயும் இதில் அடங்கும்.



19.3. 1985-86 ஆம் ஆண்டில் மாநில மற்றும் மைய அரசுத் திட்டங்களின்கீழ் மொத்தம் 36,170 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டமெழுப்பவும், சாலை ஓரங்கள், கால்வாய்க் கரைகள் மற்றும் இருப்புப் பாதை ஓரங்களில் மொத்தம் 1,732 கி. மீ. அளவிற்கு தொடர் தோட்டங்களும், 353 லட்சம் பைக்கன்றுகள் எழுப்பி, பொதுமக்களுக்கு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1986-87-ல் 37,460 எக்டேரில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் தோட்டம் எழுப்பப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு 2,228.17 லட்சம் ரூபாயாகும். வனவியல் நீண்டகாலம் பயன் தரும் ஒரு நெடுநோக்கு திட்டம் கொண்டது. வனத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளை முந்தைய திட்டகாலங்களில் பல திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்ட விரைந்து வளரும் இனங்களான தைல மரங்கள், பட்டைமரங்கள் கருவேல மரங்கள் போன்றவை பயன் தரத் தொடங்கியுள்ளன.

சில முக்கியமான திட்டங்களின் கீழ் 1985-86-ஆம் ஆண்டின் சாதனைகளும், 1986-87-ஆம் ஆண்டின் செயற்குறிப்புகளும்.

வனச் செயல் திட்டங்கள் :

20.1. செயல் திட்டங்கள் வனங்களை நிர்வகிப்பதற்கு அடிப்படையாக அமைகின்றன. செயல் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் தோட்டம் எழுப்புதல், வெட்டுதல் மற்றும் இதரவகையான வனக் கோட்டங்கள் நிர்வாகம் குறித்த வரையறுக்கப்பட்ட செயல் முறைகளைக் கொண்டுள்ளன. இத்திட்டம் வனச்செயல் திட்ட அமைப்பை பயன்படுத்தவும் செயல் திட்டங்கள் தயாரிப்பதை நவீனப்படுத்த அத்தியாவசிய கருவிகள் வாங்கவும் வகை செய்கின்றது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு 10 லட்சம் ரூபாய். 1985-86ஆம் ஆண்டில் இத்திட்டம் 5.62 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. வனச்செயல் திட்ட மண்டலத்தை சீரமைத்து செயல் திட்டங்கள் தயாரித்தல், திருத்தி எழுதுதல் ஆகிய முக்கியமான பணிகளில் முதுநிலை வன அலுவலர் ஒருவர் முழுக் கவனத்தையும் செலுத்தும் வகையில் ஒரு வளர்ச்சி வன மண்டலம் அமைக்கப்பட்டது. ஒரு வனச் செயல் திட்ட கோட்டம் வேலூரில் அமைத்து அதன் மூலம் செயல் திட்டங்கள் எந்தெந்த கோட்டங்களுக்காக தயாரிக்கப்பட வேண்டுமோ அதற்குத் தக்கபடி காலவரம்பு நிர்ணயித்து அவற்றினை கால வரம்புக்குள் தயாரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1986-87-ஆம் ஆண்டில் 7·33 லட்சம் ரூபாய் செலவில் செயல்படும்.

வன ஆராய்ச்சி :

20.2. வனவியலின் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து பரிசோதனைகளின் மூலம் பல்வேறு தட்ப வெப்ப நிலைகளுக்கும் மண்வளத்திற்கும் ஏற்ப பொருத்தமான மர வகைகள் மற்றும் தொழில் நுட்ப உத்திகளை கண்டறிவதும இவ்வாராய்ச்சிப் பிரிவை விரிவு படுத்துவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஏழாவது திட்டத்தில் 100 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டதன் காரணம் தற்போதுள்ள ஆராய்ச்சி பிரிவை பயிற்சி ,ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் (TREE) என்ற ஒரு அமைப்பின் கீழ் ஒருங்கிணைத்து செயலாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சேலம், திருச்சி மற்றும் கோயம்பத்தூர் ஆகிய இடங்களில் தனியாக இயங்கும் ஆராய்ச்சி மையங்கள் துணை வனப் பாதுகாவலரின் தலைமையில் இயங்கவுள்ளன. இவ்வாறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கென கணிசமான அளவு தொகை ஒதுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த 20.79 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

1986-87ஆம் ஆண்டில் 25.13 லட்சம் ரூபாய் இத்திட்டத்தை செயல்டுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி பணிகளைத் தவிர 1986—87-ல் இரண்டு மையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்பத்தூரில் வனப் பயன்பாட்டு மற்றும் விற்பனை மையம் ஒன்றும், வேலூரில் பழங்குடியினர் நல்வாழ்வு திட்ட அமைப்பு மையம் ஒன்றும் இவ்விருமையங்களாகும். வனப் பயன்பாட்டு மற்றும் விற்பனை மையங்களில் பொதுவாக வன விற்பனை பொருட்களின் தரம் மற்றும் அவைகளின் பயனீட்டு வரையறைகளை ஆராயும் பணியும் நடைபெறும். இத்திட்டத்திற்காக தற்போதுள்ள வனப் பயன்பாட்டு கோட்டத்தில் உள்ள பணியாளர்கள் பயன்படுத்தப் படுவார்கள்.

வனங்களின் சூழ்நிலை அமைப்பு என்பதே பழங்குடியினரின் வாழ்வினையும் தன்னுள் அடக்கி பிரிக்கஇயலாத ஒரு அம்சமாகக் கொண்டதாகும். இக்கருத்தினை தெளிவாகச் செயல்படுத்தி உணர்த்த இம்மையம் பெரிதும் உதவும். பழங்குடியினரின் வளர்ச்சி வனச்சூழலை ஒட்டிஅமைவதற்கு வேண்டிய வழிகளையும் வன சூழலோடு அவர்களது வாழ்க்கை அமைந்த ஆதாரங்களை ஆராயவும் இம்மையம் வேண்டிய ஆய்வுகளை நடத்தும்.





20.3 திட்டம் தயாரித்தல், ஆய்வு செய்தல், கண்காணித்தல் மற்றும் புள்ளி விபரம் சேகரித்தலுக்கான அமைப்பு ஏற்படுத்துதல் (FEMAS).

காடுகள் உற்பத்தியின் முக்கிய நோக்கம் வன வள ஆதாரங்களை ஏற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்தலாகும். வன வளர்ச்சியின் அளவானது வளர்ச்சிக்குத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்தல் அப்பகுதிக்குத் தகுந்த திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய பணிகளை எவ்விதம் செயல் ஆக்குகிறோம் என்பதைக் கொண்டே நிர்ணயிக்கப்படும். வனப் பணியாளர்கள் தங்களுடைய பலதரப்பட்ட பணிகளுக்கிடையே இந்த விசேடமான வேலைக்குத் தங்களுடைய முழுக் கவனத்தையும் திருப்ப இயலாதிருக்கிறது. திட்டம் தயாரிப்பதற்கான திறமையும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குமுடைய தனிப்பட்ட அமைப்பு தக்க பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டாலன்றி இத்திட்டமிடும் வேலை சரிவர செய்ய இயலாது. ஆகவே மேற்கண்ட இலக்குகளை அடைவதற்காக ஒரு தனி அமைப்பை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக 40 லட்சம் ரூபாய் செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இரண்டாவது பகுதி திட்டத்தில் ஒரு தனிப் பிரிவு உண்டாக்க திட்டமிடப்பட்டு, அதன் ஆரம்ப கட்டமாக சில பணியாளர்களைக்கொண்ட பிரிவு இயங்கி வருகின்றது. 1985–86 ஆம் ஆண்டில் ''ஃபீமாஸ்'' பிரிவு இயங்கி வருகின்றது. 1985–86 ஆம் ஆண்டில் இதற்கான நிதி 3.20 லட்சம் ரூபாயாகும். 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை 7.34 லட்சம் ரூபாயில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

20.4. கூழ்மரத் தோட்டங்கள் :

மரக் கூழை அடிப்படையாகக் கொண்ட காகிதம், ரேயான் போன்ற தொழில்களுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களை வழங்குவதற்காக விரைவில் வளரும் மர வகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1985–90 இத்திட்டத்தினை செயல்படுத்த 200 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 70.87 லட்சம் ரூபாய் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்புதல், மற்றும் தீவிர பராமரிப்பு வேலைகள் 2,200 எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது.

1986–87ல் 76.45 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படும். 2,325 எக்டேரில் கூழ்மரத் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

**20.5. தேக்கு மற்றும் இதர கடினமரங்கள் (தடிமரத் திட்டம்) :**

நமது மாநிலத்தின் வெட்டு மரத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தகுந்த இடங்களில் தேக்கு, செம்மரம் மற்றும் ஏனைய கடினமர வகைகள் உற்பத்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த 30 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 8.33 லட்சம் ரூபாய் செலவில் 260 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப் படும்.

1986-87 ஆம் ஆண்டில் 8.22 லட்சம் ரூபாய் செலவில் 407 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20.6. மென்மரம் :**

மென்மரம் வளர்க்கும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1985—90) சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். தீப்பெட்டி தயாரிக்கும் தொழில் தமிழ்நாட்டின் முக்கியமான சிறு தொழிலாகும். இத்தொழிலுக்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்கு இம்மாநிலம் ஏனைய மாநிலங்களை நம்பியுள்ளது. ஆகவே எங்கெங்கு இவ்வகை மரங்களை பயிரிட தட்பவெப்ப நிலை சாதகமாக உள்ளதோ அவ்விடங்களில் மென்மரங்களை வளர்க்க கருதப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இத்திட்டம் 10 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் 2.38 லட்சம் ரூபாய் செலவில் 150 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்பட்டது.

1986—87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை 2.58 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. 105 எக்டேர் பரப்பளவில் தோட்டம் எழுப்பப்படவுள்ளது.

**20.7. மிலாறு மரத் தோட்டங்கள் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் மிலாறு மரத் தோட்டங்கள் எழுப்பும் திட்டமும் ஒன்றாகும். தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குவதற்காக நீலகிரியிலும், பழநி மலைத் தொடர் காடுகளிலும் மிலாறு மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தோல் பதனிடுவதற்கு தேவைப்படும் படிகப் பொருட்களை எடுப்பதற்கு மிலாறு மரப் பட்டையும் ரேயான் கூழ் தயாரிப்பதற்கு மிலாறு மரமும் பயன்படுத்தப்படுகின்றன.





ஏழாவது திட்ட காலத்தில் (1985—90) இத்திட்டத்தை செயற்படுத்த 15 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1985—86ல் இத்திட்டத்தின் கீழ் 8.98 லட்சம் ரூபாய் செலவில் 600 எக்டேரில் தோட்டம் எழுப்பவும், 1,700 எக்டேர் தோட்டங்களில் அடர்த்தி குறைத்தல் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

1986—87இல் இத்திட்டம் 17.07 லட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும். 2,000 எக்டேர் பரப்பில் மிலாறு இயற்கை உற்பத்தியும், 1,700 எக்டேரில் அடர்த்தி குறைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**20.8. விறகு மரத் தோட்டங்கள் :**

விறகு மரத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். பெரு நகரங்கள், மற்றும் நகரங்களைச் சார்ந்த பகுதிகளிலும், படுகை நிலங்களிலும் உள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரங்களை வளர்த்து அந்தப் பகுதி மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 300 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

1985—86 ஆம் ஆண்டில் 3,575 எக்டேர் தோட்டங்கள் எழுப்பவும், தோட்டங்கள் பலப்படுத்தல் பணியும் 73.81 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

1986--87 ஆம் ஆண்டில் 49.55 லட்சம் ரூபாய் செலவில் 3,600 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பவும் தோட்டங்கள் பலப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**20.9. சந்தன மரத் தோட்டங்கள் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் சந்தன மரத் தோட்டம் திட்டமும் ஒன்றாகும். சந்தன மர தோட்டத்தை அதிகப்படுத்துதல், தீவிர பராமரிப்பு வேலைகள் மூலம் இயற்கை சந்தன வளர்ச்சியை ஊக்குவித்து தமிழ் நாட்டில் சந்தன மர வளத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு 100 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் 23.54 லட்சம் ரூபாய் செலவில் 60 எக்டேரில் இயற்கை சூழ்நிலை பராமரிப்பு முறையில் தோட்டம் எழுப்பவும், 473 எக்டேரில் புதர்களில் விதைக்கும் பணியும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 29.55 லட்சம் ரூபாய் செலவில் 30 எக்டேர் பரப்பில் சந்தன மரத் தோட்டங்கள் எழுப்புதல் 420 எக்டேரில் மண்வளப் பணி, பிடிபட்ட சந்தன மரங்களை சேமித்து வைக்க நான்கு சிறு கிடங்குகள் கட்டும் பணி முதலியன மேற்கொள்ளப்படும்.

20.10. வளர்ச்சி குன்றிய காடுகளை புதுப்பித்தல் :

வளர்ச்சி குன்றிய காடுகளை மீண்டும் புதுப்பிப்பதற்கான திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களுள் ஒன்றாகும். புதர் காடுகளின் உற்பத்தித் திறனை பெருக்கவும், விறகு மரங்கள், சிறு வெட்டு மரங்கள் ஆகிய வற்றிற்கு அதிகரித்துள்ள தேவையினை நிறைவு செய்யவும், வளர்ச்சி குன்றிய காடுகள் அனைத்திலும் மரங்களை மீண்டும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் 2,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்ப 56.61 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது.

1986-87-ல் 61.58 லட்சம் ரூபாய் செலவில் 2720 எக்டேர் தோட்டங்கள் எழுப்ப இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

20.11. காடுபடு சிறு பொருட்கள் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் காடுபடு சிறு பொருட்கள் மரம் வளர்ப்புப் திட்டமும் ஒன்றாகும்.

புளி, கடுக்காய், சீயக்காய், யூகலிப்டஸ் சிட்ரியோடரா, போன்ற மதிப்புள்ள பொருட்களின் மரங்களை பெருமளவில் வளர்ப்பதன் மூலம் வருவாயைப் பெருக்க வாய்ப்பு உள்ளதால் இத்தகைய காடுபடு சிறு பொருட்கள் வழங்கும் மர வகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏழாவது திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு 100 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் 30.64 லட்சம் ரூபாய் செலவில் 660 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது தர்மபுரி மாவட்டத்தில் 150 எக்டேரில் கத்தாழை பயிரிடுவதும் இதில் அடங்கும்.

1986-87 ஆம் ஆண்டில் 49.99 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தீவிர மண்வளப்பணி 662 எக்டேரில் மேற்கொள்வதுடன், 687 எக்டேர் பரப்பில் காடுபடு சிறு பொருட்கள் தோட்டங்கள் எழுப்பப்படும்



150 எக்டேரிலும் 135 கிலோ மீட்டர் தூரம் எல்லையோரங்களிலும் கத்தாழைத் தோட்டங்கள் எழுப்பும் பணி மேற்கொள்ளப்படும். மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் எழுப்பப்பட்ட கிராம்புத் தோட்டங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படும். 2 எண்ணெய் வித்து பண்ணைகளும் 2 புளிய மரப் பண்ணைகளும் இரண்டு பழ மரப் பண்ணைகளும் அமைக்கப்படும்.

20.12. சாலைகள் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் ''சாலைகள்'' திட்டமும் ஒன்றாகும்.

வன உற்பத்திப் பொருட்களை எளிதாக எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிக்கென காடுகளில் புதிய சாலைகள் அமைக்கவும், ஏற்கனவே இருக்கும் சாலைகளை பழுதுபார்த்து சீர்படச் செய்வதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு 300 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1985-86-ல் இத்திட்டம் 151.41 லட்சம் ரூபாய் செலவில் செயல்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டில் நெடுஞ்சாலைத் துறையினரால் சாலை அமைக்கத் தேவைப்படும் நிதியும் அடங்கும்.

1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டம் 157.99 லட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும். நெடுஞ்சாலைத் துறையினரால் கடம்மலைக்குண்டில் அமைக்கப்படும் சாலையின் நிதி ஒதுக்கீடும் இதில் அடங்கும்.

20.13. வன விளம்பரத் திட்டம் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் '' காடுகள் '' தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்ட திட்டங்களில் வன விளம்பரத் திட்டமும் ஒன்றாகும்.

பொதுமக்களின் தனி வாழ்க்கைக்கு காடுகள் எவ்வாறு பயன்படுகின்றது என்பதையும் வன விலங்குகள், காடுகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் அவசியத்தையும் பொது மக்கள் மனதில் பதிய வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விளம்பரம் மற்றும் பிரச்சாரத்திற்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1985-86-ல் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1.11 லட்சம் ரூபாய் ஆகும். 1986-87-ல் இத்திட்டம் 1.11 லட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும்.

20.14. வனங்களை ஒருங்கிணைத்தல் :

முன்னாள் சமீன் வனப் பகுதிகளை ஆய்வு செய்து 1882 ஆம் வருட தமிழ்நாடு வனச் சட்டத்தின் கீழ் சேமக்காப்பு வனங்களாக அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86ல் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 11.76 லட்சம் ரூபாய் இத்திட்டம் 1986-87ல் 11.96 லட்சம் ரூபாய் செலவில் செயற்படுத்தப்படும்.

20.15. தொழிலாளர் பணியாளர் நலத்திட்டம் :

'' பணியாளர் மற்றும் தொழிலாளர் நலன்கள் '' மர அறுப்பும் மரப் பயன்பாடும் மற்றும் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற திட்டங்களின் கீழ் காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், கம்பளிகள், யானைகளுக்கு சங்கிலி போன்றவைகள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏழாவது திட்டக் காலத்திற்கு 70 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் இத்திட்டங்கள் 16.27 லட்சம் ரூபாய் செலவில் செயல்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் 20.13 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயபடுத்தப்படும்.

20.16. இயற்கை பாதுகாப்பு திட்டம் :

தமிழ் நாட்டிலுள்ள காடுகள் பெரும்பாலானவை பல்வகை வன விலங்குகளை தன்னகத்தே கொண்டது. இப்பகுதிகளை எல்லை வரையறை செய்து 7 வன விலங்கு புகலிடங்களாகவும் ஒரு தேசிய பூங்காவாகவும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனைமலை வன விலங்கு புகலிடத்தை ஒரு தேசீய பூங்காவாக அமைக்கும் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த புகலிடங்கள் மற்றும் தேசீய பூங்காவின் மொத்தப் பரப்பளவு 2,17,774 எக்டேர் தான். இது மாநிலத்திலுள்ள மொத்தக் காப்புக் காடுகளின் 9.89 விழுக்காடாகும்.





மாநிலத்திலுள்ள வன விலங்கு பாதுகாப்பு திட்டங்கள் 1986-87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மாநில திட்டங்களின் கீழும், மத்திய அரசு உதவித் திட்டங்களின் கீழும் தொடர்ந்து செயல்பட இருக்கின்றன. 1985-86 ஆம் வருடத்தில் மொத்தம் 38 லட்சம் ரூபாய் செலவில் வன விலங்கு புகலிடங்களும், பறவை புகலிடங்களும் மற்றும் 9 நீர் பறவை காப்பகங்களும், அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. குளிர் காலங்களில் உள்ளூர் நீர் பறவைகளும் மற்றும் தொலை தூர இடங்களிலிருந்து வரும் பறவைகளும் பாதுகாக்கப்படுகின்றன. இராமநாதபுரம் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்திலும் மேலும் அதிக நீர் பறவை காப்பகங்கள் கண்டறிந்து பராமரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அழிந்து வரும் இனமான கடலாமை இனத்தைப் பாதுகாக்கும் பொருட்டு 1982-83 ஆம் ஆண்டிலிருந்து இயற்கைப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் இந்தியாவிலேயே முதல் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்ட விவரங்கள் :

| வருடம். | சேகரிக்கப் பட்ட முட்டைகளின் எண்ணிக்கை. | செலவுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூ. லட்சம்) |
| 1982-83 .. .. .. | 94,000 | 3.53 |
| 1983-84 .. .. .. | 1,20,836 | 3.48 |
| 1984-85 .. .. .. | 1,80,003 | 6.25 |

1986-87 ஆம் வருடத்தில் இத்திட்டம் செயல்பட 8.60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சிறப்புத் திட்டம் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் முழுவதிலும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பள்ளிக் குழந்தைகளையும் கூடுமான வரையில் ஈடுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அனைத்து மாவட்ட தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் சிறிய மிருகக்காட்சி சாலைகளும், பொழுதுபோக்கு இடங்களும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வடாற்காடு மாவட்டம் அமிர்தியில் ஒரு சிறு மிருகக் காட்சி சாலையும் சலம் அருகே குரும்பப்பட்டியில் ஒரு பொழுது போக்கு டேமும் தொடர்ந்து நல்ல முறையில் பராமரித்து வருகின்றது

சென்னை கிண்டியில் ஒரு நிரந்தர பொருட்காட்சியகம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இயற்கை சூழ்நிலையில் தாவர மற்றும் விலங்கியல் உள்ள பகுதிகளில் உயிரினங்கள் உறைவிடமாக அமைத்து பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதை தவிர, மன்னார் வளைகுடாவில் முக்கியமாக கடலுறை உயிரினப்பூங்கா (Marine National park) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வைகை அணையில் உள்ள வன இயல் பயிற்சிப்பள்ளி பகுதியில் தாவர வகை உணவு உண்ணும் உயிரினங்களுக்கான (He bivore) பூங்கா அமைக்க, மேற்குமலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது மதுரையிலும், சுற்றிலுமுள்ள மக்களுக்கு ஒரு பொழுது போக்கு அம்சமாக அமையும். கேரளாவிலுள்ள தேக்கடி சரணாலயத்தை ஒட்டியுள்ள மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மேகமலை குன்றுகளில் ஒரு வன விலங்கு புகலிடம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. விளம்பரத் திட்டத்தின் கீழ் வன விலங்கு புகலிடங்கள் பற்றிய சிறு வெளியீடுகள், ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகள் அரசினரால் வெளியிடப்பட்டு பொது மக்களுக்கு வன விலங்கு பாதுகாப்பின் அவசியத்தை தெளிவாக்கவும், அதைப் பற்றிப் போதிக்கவும் திட்டமிடப்பட்டுளளது. மாவட்ட தலைமையிடங்களான கோவை, மதுரை மற்றும் உதக மண்டலம் ஆகிய இடங்களில் செயல்படும் வன விலங்கு இளைஞர் அணிக் குழுக்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் உள்ளது.

கோடிக்கரை பகுதியிலுள்ள அரசு நிலங்களை சரிவர உபயோகிப்பதற்கான பரிந்துரைகள் செய்யும் பொருட்டு, ஏற்படுத்தப்பட்ட உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி, கோடிக்கரை வன விலங்கு சரணாலயம் மேம்பாட்டிற்காக மட்டும் ஒரு தனி வன விலங்கு காப்பாளரை நியமிக்க அரசு யோசித்து வருகின்றது.

21. மத்திய உதவி பெறும் வன விலங்கு பாதுகாப்புத் திட்டங்கள்.

தமிழ்நாடு வனத்துறை மத்திய நிதி உதவியுடன் மொத்தம் ஏழு வன விலங்கு புகலிடங்களும், ஒரு தேசிய பூங்காவும் பராமரித்து வருகின்றது. மிருகங்கள் வாழும் இடங்களை பராமரித்தல், மிருகங்களுக்கு தீவனமும் உணவும் போதிய அளவு கிடைத்திட தேவையான உதவிகள் மேற்கொள்ளுதல் மிருகங்களை இடம் மாற்றுதல், குடி தண்ணீர் வசதி அபிவிருத்தி செய்ய குளங்கள், குட்டைகள், தடுப்பு அணைகள், கிணறுகள், போன்றவைகள் அமைத்தலும், செப்பனிடுதலும் போன்ற வேலைகள் மத்திய அரசின் வழிமுறைகளின்படி செய்யப்பட்டு



வருகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் மொத்தம் 58.06 லட்சம் ரூபாய் செலவில் கீழ் காணும் வன விலங்கு புகலிடங்களை மேம்படுத்த திட்டங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண். | வன விலங்கு புகலிடத்தின் பெயர். | 1986–87 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கோடிக்கரை (தஞ்சாவூர்) .. .. | 8.00 |
| 2. | சாத்தனூரில் முதலை வளர்ப்பு திட்டம் (வடாற்காடு மாவட்டம்) | 1.86 |
| 3. | களக்காடு (திருநெல்வேலி) ... ... | 13.00 |
| 4. | முதுமலை (நீலகிரி) .. .. .. | 18.00 |
| 5. | மூக்குர்த்தி '' தார் '' (நீலகிரி) ... | 5.08 |
| 6. | கிண்டி தேசிய பூங்கா (சென்னை) .. | 12.00 |
| 7. | முண்டந்துறை .. .. .. .. | 0.01 |
| 8. | ஆனைமலை .. .. .. .. | 0.01 |
| 9. | வன விலங்குகள் கண்காட்சி .. .. | 0.10 |
| | மொத்தம் .. .. | 58.06 |

22. வைகை நீர்பிடிப்பு பகுதிகளிலும் மேட்டூர் ஸ்டான்லி நீர்பிடிப்பு பகுதிகளிலும் மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள்.

வைகை நீர்த்தேக்கம் மற்றும் மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பை குறைப்பதே இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டங்களின் கீழ் காப்புக் காடுகள் மற்றும் காப்பு நிலங்களில் பொதுப்பணித்துறை நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் மேட்டூர் மற்றும் வைகை அணையில் நீர் மூழ்கும்

பகுதிகளிலும் காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வரும் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கென்று மரக் கன்றுகள் அதன் அடக்க விலைக்கே விற்பனை செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மண் வளப் பாதுகாப்பு திட்டங்களை மேற்கொள்வதற்கென்றே 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட காலத்தில் காடு வளர்ப்பிற்கென இலக்கு 18,000 எக்டேர் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மரம் நடும் பணி தவிர, பொறியியல் பணிகளும் மண் அரிப்பு தடுப்புகள் (கல்லி ப்ளகிங்), சம உயர மண் அரிப்பு தடுப்புகள், (கான்டூர் பன்டிங்) சம உயர மண் அரிப்பு தடுப்பு குழிகள் (கான்ட்டூர் ட்ரென்ச்சஸ்) தடுப்பு அணை, நீர்க்கசிவு குட்டைகள் மேற்கொள்ளப்படும்.

1985–86 ஆம் வருடத்தில் மேற்கூறிய இரு மண் வளப் பாதுகாப்பு திட்டங்களின் கீழும் 81.65 லட்சம் ரூபாய் செலவில் 2,250 எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு பணிகளும் மண் வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

1986–87 ஆம் வருடத்தில் மேற்கூறிய இரு நீர்த்தேக்க நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும், 81.52 இலட்சம் ரூபாய் செலவில் 2,650 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ள வும் மண் வளப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

23. இத்திட்டம் நமது நாட்டில் வட மாநிலங்களான இமாசல பிரதேசம், உத்தரபிரதேசம், பஞ்சாப், பீகார், மேற்கு வங்காளம் போன்றவற்றுள் வேகத்துடன் செயல் படுத்தப்பட்டுவரும் ஒரு திட்டமாகும். தென் மாநிலங்களில் தமிழகம் மட்டுமே இத்திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது என்பது பெருமைக்குரியதொன்றாகும்.

நீலகிரி மாவட்டத்தின் நிலையினை மேம்படுத்தவும், நிலப் பயன்பாட்டு முறையை ஒழுங்குபடுத்தவும் அறிவியல் பூர்வமான திட்டங்களின் மூலம் அபிவிருத்தி பணிகளை செயல்படுத்தும் திட்டங்களுள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன :

(1) இயற்கைச் சூழல் பாதுகாப்பு
(2) இயற்கைச் சூழல் சீரமைப்பு.
(3) இயற்கைச் சூழல் மேம்பாடு.





நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்வளம் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, புகலிடங்களில் வன விலங்குகளின் வாழ்க்கை முறையினை ஒட்டி அதற்கேற்றபடி மேம்பாட்டுப் பணிகள், வன நிலங்களை கையகப்படுத்துதலைத் தடுத்தல், சுற்றுச் சூழல் சீர்கேடு, தீ ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பை அதிகரித்தல் போன்ற பல பணிகள் 1986–87-ல் மேற் கொள்ளப்படவிருக்கின்றன. தரங்குன்றிய பசுந்தழைக் காடுகள் மற்றும் சுமாரான பசுந்தழைக் காடுகள் ஆகியவற்றில் மீண்டும் பசுமையை ஏற்படுத்தி மரங்கள் வளர்த்து இயற்கை அழகினை உண்டு பண்ண தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஈட்டி மற்றும் அத்துடன் சேர்ந்த மற்ற சில வகை மரங்கள் காணப்படும் பகுதிகளில் அவற்றிற்கென தனிப் புகலிடம் அமைக்கத் தனியே ஒரு புதிய திட்டம் செயல்படவுள்ளது. புகலிடங்களில் வனவிலங்குகள் வாழ்க்கை முறைக்கு ஏற்ப மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுகையில் புகலிடங்களின் எல்லையில் வசிக்கும் மக்களின் நல வாழ்வுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சூரியசக்தி வேலி அமைப்பது, வெளிப் புறங்களில் மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்குவது, இயற்கைச் சூழல் இன்னல்கள் பாதுகாப்பு உதவிக்கென நிதி ஏற்படுத்துதல், போன்ற பல சீரிய திட்டங்கள் தனிக்கவனத்துடன் தீட்டப் பட்டுள்ளன.

இரகசிய தகவல்கள் சேகரிக்கும்பொருட்டு மலைவாழ் மக்கள் அடங்கிய காப்புப் படை அமைத்து மலைசாதியின ருக்கு வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட உள்ளன. இயற்கைச் சூழல் உணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தவும் வன விலங்கு புகலிடங்கள் பற்றிய அனுபவம் பெறவும் வாய்ப்பு ஏற்படுத்த இத்திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. சுருங்கக் கூறின் இது ஒட்டுமொத்த இயற்கைச் சூழல் அமைப்பை சிறப்பாகவும் சீராகவும் பாதுகாக்க உதவும் ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும்.

1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மதிப்பு 37.60 லட்சம் ரூபாயாகும்.

1986–87 ஆம் ஆண்டிற்கான கருத்துரு பின்வருமாறு :—

1. தொடர் திட்டங்கள் . உதகை மான்கள் பூங்கா வேலைகள்

2. தீவிரத் திட்டங்கள்.

(1) சிறிய நீர் பிடிப்புப் பகுதிகளில் தரங்குன்றிய மலைச் சரிவுகளில் மீண்டும் காடு வளர்த்தல 500 எக்டேர்.

(2) மண் ஈரம், பாதுகாப்பு, பொறியியல் வேலைகள், தடுப்பு அணை.

(3) அழிவுபட்டு வரும் மர இன வகை உள்ள சோலைக் காடுகளின் இயற்கைச் சூழல் பாதுகாப்புக்கென கம்பி வலை வேலி அமைத்தல்.

(4) கூடலூர் மற்றும் நீலகிரியின் கிழக்குப் பகுதிகளில் கையகப்படுத்தக் கூடிய பகுதிகளில் இயற்கைச் சூழல் பாதுகாப்பு.

(5) மாநிலங்களுக்கு இடையே எல்லைகளிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அடர்ந்த காடுகளிலும் இதர பிரச்சினைக்குட்பட்ட பகுதிகளை சுற்றிலும் கற்றாழை வேலி அமைத்தல் மற்றும் காடுகளை அழிக்கும் தீயிலிருந்து இயற்கைச் சூழல் பாதுகாப்புப் பணிகள்.

(6) இயற்கை அழகுப் பகுதிகளில் துப்புரவுப் பணிகள்.

(7) யானை போன்ற பெரிய பாலூட்டி வன விலங்குகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்தல்.

(8) இயற்கைச் சூழல் உணர்வையும், கல்வியையும் வழங்குதல்.

3. புதிய திட்டங்கள்.

(1) ஈட்டி மரம், வேங்கை, கரிமருது, மூங்கில் ஆகியவற்றைப் பாதுகாக்க புகலிடம் அமைத்தல்,

(2) சேமிப்புப் பகுதி—தனியார் நிலங்களில் மரக் கன்றுகள் வளர்த்து நடுதல்.

(3) மிதமான பசுமைக் காடுகளில் மர வளர்ப்பு சீரமைப்பு.

(4) கிராமப் புற கால்நடைகளுக்கென புகலிடங்களுக்கு வெளியே மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்துதல்.

(5) தீவன வகை மரப் பண்ணையும், சூபாபுல் பண்ணையும்.

(6) இயற்கை சூழல் அமைப்பினால் ஏற்படும் அழிவுகளுக்கு இழப்பீடு வழங்குதல்.

(7) இயற்கைச் சூழல் பாதுகாப்பு மலைவாழ் மக்கள் குழுவினை அமைத்தலும், செய்தித் தொடர்பு சாதனங்கள் நிறுவுதலும்.



மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

மேற்கு மண்டலத்தில் கத்தாழைத் தோட்டங்கள் :

24. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் கத்தாழை பயிரிடும் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1984–85) மத்திய அரசு திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றாகும்.

1984–85 ஆம் ஆண்டில் 11.08 இலட்ச ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் தனியாக ஒரு தோட்டம் நிறுவி முன்னோடி வேலைகள், கோட்டத்திற்கு வாகனங்கள் வாங்குதல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டன.

1985–86 ஆம் ஆண்டில் 200 எக்டேர் பரப்பில் கத்தாழை தோட்டங்கள் எழுப்பவும், நாற்றங்கால் வளர்க்கவும், 9.96 இலட்ச ரூபாய் செலவில் திட்டம் செயல் படுத்தப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் 16.51 இலட்ச ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படும்.

வருசநாடு பகுதியில் மண் வளப் பாதுகாப்பு :

25. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டங்களில் புதியதாக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். தேனியை தலைமையிடமாகக் கொண்ட புதிய கோட்டம் ஒன்று 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தீவிர மண் வளப் பாதுகாப்புப் பணியாக காடுகள் வளர்த்தலும் (contour trenches gully control) போன்ற பணிகளும், ஆற்றங் கரைகளை பலப்படுத்துதலும், வைகை ஆற்றிலுள்ள வருசநாடு பள்ளத்தாக்கில் மூன்று நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வேளாண்மைக் காடுகள் உற்பத்தி செய்வதும் ஆகிய பணிகளின் மூலம் மண் அரிப்பினைக் குறைத்து அப்பகுதியின் ஈரத் தன்மையை மேம்படுத்தி மண் இழப்பை தடுத்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் 1984–85 ஆம் ஆண்டில் 400 எக்டேர் பரப்பில் முன்னோடி வேலைகள் செய்யவும், இதர மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளவும், புதிய கோட்டத்திற்கு வாகனங்கள் வாங்கவும் மொத்தம் 11.99 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் 400 எக்டேர் பரப்பில் தோட்டமெழுப்பவும் 300 எக்டேர் பரப்பில் முன்னோடி வேலைகள் செய்யவும், இதர மண் வளப் பணிகள் மேற்கொள்ளவும் செலவு தொகை 15.6 இலட்ச ரூபாயாகும்.

[1986 ஏப்ரல் 25

1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டப் 25.89 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

1985–86 ஆம் ஆண்டில் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களின் மதிப்பு 78.65 இலட்சம் ரூபாயாகும்.

1986–87-ல் இத்திட்டங்கள் 86.80 இலட்சம் ரூபாய் அளவில் செயல்படுத்தப்படும்.

வரவு-செலவு திட்டம்.

26. வனத்துறையின் வரவு - செலவு விவரம் வருமாறு :

| கணக்கின் தலைப்பு. (1) | கணக்குகள் 1984–85 (2) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1985–86 (3) | செலவு 1985–86 (4) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1986–87 (5) |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை — 45 | | | | |
| | | (ரூபாய் | இலட்சத்தில்) | |
| 1. 259 பொதுப் பணிகள். | 0.29 | 0.30 | 0.93 | 0.40 |
| 2. 288 சமூக பாது காப்பும் நலனும். | 18.91 | 7.55 | 6.71 | 8.30 |
| 3. 307 மண்வள நீர் வள பாதுகாப்பு. | 23.77 | 24.92 | 27.39 | 29.00 |
| 4. 308 பகுதி மேம் பாடு. | 14.94 | 17.65 | 15.54 | 16.66 |
| 5. 313 காட்டுவளம் | 1,200.00 | 1,184.02 | 1,286.15 | 1,334.14 |
| 6. 320 சந்தன எண் ணெய் தொழிற் சாலை. | 0.73 | .. | .. | .. |
| 7. 268 பலவகைப் பொதுப்பணிகள். | ... | .. | .. | 110.00 |
| | 1,258.74 | 1,234.44 | 1,336.72 | 1,498.50 |



1986 ஏப்ரல் 25]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை 56— | | | | |
| 1. 488 சமூக பாது காப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | 45.87 | 0.01 | 0.01 | 0.01 |
| 2. 506 சிறுபாசனம் மண்வளப்பாது காப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச்செலவு. | 96.60 | 105.29 | 89.92 | 67.87 |
| 3. 513 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 1582.63 | 1590.23 | 1,600.70 | 1,730.02 |
| 4. 526 சந்தன எண் ணெய் தொழிற் சாலை நிறுவுதல் குறித்த மூலதனச் செலவு. | 31.00 | 0.01 | .. | ... |
| | 1756.10 | 1,695.54 | 1690.63 | 1,797.90 |
| மொத்த மானிய கோரிக்கை;45. | 1,258.74 | 1,234.44 | 1,336.72 | 1,498.50 |
| மொத்த மானிய கோரிக்கை-56. | 1,756.10 | 1,695.54 | 1,690.63 | 1,797.90 |
| | 3,014.84 | 2,929.98 | 3,027.35 | 3,296.40 |

கோரிக்கை 45:

இனம் 4:

1985-86 திட்ட மதிப்பீட்டின் ஒதுக்கீடு ரூ. 17.65 லட்சத்தில் "308 A. பகுதி மேம்பாடு— AC 'மலைப்பகுதி மேம்பாடு" தலைப்பில் புதிய உப தலைப்பான " K P காட்டுவளம் குறித்த புதிய திட்டங்களுக்காக ஒட்டுமொத்த நிதியொதுக்கம்" என்பதின் கீழ் அரசால் அனுமதித்த ஒட்டுமொத்த நிதியொதுக்கம் ரூ.2.61 லட்சமும் சேர்ந்துள்ளது. ஒப்பளிப்பு அடிப்படையில் சரியான தலைப்பின் கீழ் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமாதலால் இந்த ஒட்டுமொத்த நிதியொதுக்கம் ரூ 2.61 லட்சம் 1985-86 திருத்த மதிப்பீட்டிலும், 1985-86 இறுதி திருத்த மதிப்பீட்டிலும் சரண் செய்யப்பட்டது.

கோரிக்கை 56:

இனம் 2:

1985-86 திருத்த மதிப்பீட்டின் குறைக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 89.92 லட்சம் அனுமதித்ததற்கான முக்கிய காரணம் ::506 AC ன் கீழ் JE , மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை அமைப்பு உள்ளிட்ட காடு வளர்ப்புத் திட்டம்," என்ற தலைப்பில் 1985-86 திட்ட மதிப்பீட்டில் ரூ. 37.43 லட்சமாக இருந்ததை பனியாளரமைப்பும் சேர்ந்த மத்திய திட்டங்கள் தொடர்வதற்கு இந்திய அரசு ரூ. 32.00 லட்சம் மட்டுமே அனுமதித்ததால் 1985-86 திருத்த மதிப்பீட்டில் ரூ. 22.06 லட்சம் ஒதுக்கீடு செய்ததேயாகும்.

முடிவுரை.

27. வனவளம் குறைவாக இருப்பினும் அவை, உன்னிப்பான கவனத்துடன் அறிவியல் பூர்வமான ஆழ்ந்த சிந்தனையுடன் பேணிக் காக்கப்பட்டு வருகிறது. இப்பணி திட்டமிடப்படும் போதும், நடைமுறைப்படுத்தப்படும்போதும், பொருளாதார ரீதியில் நலிந்தோர்க்கும், தாழ்த்தப்பட்ட பகுதி மக்களுக்கும் வேலையில்லாத பல லட்சக்கணக்கான மக்களுக்கும் பிழைக்க ஒரு வழி நல்க வேண்டும் என்ற நல்ல நோக்கோடு ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க கூட்டுறவு இயக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு உழைக்கும் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெறும் பயனை முழுமையாக அனுபவிக்கும் வசதி செய்து தரப்படுகிறது. மக்களின் அன்றாடத் தேவைப் பொருட்களை உற்பத்தி செய்யும்



தொழிற் துறைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் வழங்கப்பட தக்க கவனம் செலுத்தப்படுகிறது. தமிழ் நாடு பலவித வன விலங்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது ; இந்த அரிய செல்வத்தைப் பேணிக் காப்பதில் நாம் என்றும் சோடை போனதில்லை. அதே சமயம், வனச் செல்வத்தினை அழிக்க முற்படும் எவ்வித அழிவுச் சக்திகளையும் எதிர்த்து நின்று முறியடிக்க நம்மை நாம் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும் தவறுவதில்லை.

## இணைப்பு-VI

(563-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 47.

### செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்து கொள்கைக் குறிப்பு.

வளர்ந்து வரும் நம் சமுதாயத்தில், சமூகக் கல்வியும் மக்களின் பங்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அரசின் ஆக்கப்பணியின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைந்துள்ளன. செய்தி மக்கள் தொடர்புத் துறை இச்சீரிய பொறுப்பினை ஏற்று செவ்வனே செயலாற்ற வேண்டியுள்ளது. இப்பணி தொடர்பாக, அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்து விளக்குவது மட்டுமன்றி மக்களாட்சியின் அடித்தளத்தையும் சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய நெறிமுறைகளையும் வலுப்படுத்துவதும் இத்துறையின் செயல்பாடாகும். மக்கள் தொடர்பு முறைகளை மேற்கொண்டு செய்தி மக்கள் தொடர்புத் துறை செயலாற்றி வருகிறது.

வானொலி, தொலைக்காட்சி மற்றும் மின் அணுவியல் போன்ற நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதுடன் தமிழகத்தின் பல்வேறு பகுதியிலுள்ள பழங்கலை கலைஞர்களின் ஆற்றலையும் பயன்படுத்தி அரசின் திட்டங்களை இத்துறை மக்களுக்கு எடுத்துரைத்து வருகிறது.

செய்தித் துறையின் செயல்பாடுகளில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி மக்களுக்குச் செய்திகளைத் தெரிவித்தும், கலைகள் மூலம் களிப்பூட்டியும், அறிவூட்டியும் அரசு நிறைவேற்றி வருகிற திட்டங்களுக்கு மக்களின் தொடர்ந்த ஒத்துழைப்பைப் பெறுவதிலும் இத்துறை வெற்றிகரமாகப் பணியாற்றி வருகிறது.

விளம்பரம் :

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் நலனிற்காக அரசு மேற்கொள்ளும் திட்டங்களையும், கொள்கைகளையும் எடுத்துரைக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இத்துறை விளம்பரங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறது. அரசின் அனைத்துத் துறைகள், பொதுத் துறைகள், அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் வெளியிட இத்துறை துணைபுரிகிறது.

பத்திரிகைத் தொடர்பு :

இத்துறை அரசின் சார்பில் பத்திரிகைத் தொடர்பை நிர்வகிப்பதுடன் அரசின் தொடர்புள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைச் செய்திகளையும் புகைப்படங்களையும் பத்திரிகைகளுக்கு அளித்து வருகிறது. மேலும் செய்தி நிருபர்கள் கூட்டங்களையும் அவ்வப்போது ஏற்பாடு செய்கிறது.

தலைமைச் செயலரும், பிறதுறைச் செயலர்களும் அரசின் பல்வேறு ஆக்கப்பணிகளையும், திட்டங்களின் முன்னேற்றங்களையும் வாரந்தோறும் நடத்தப்படுகின்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கின்றனர். மேலும் அமைச்சர்களும் பிற முக்கிய பிரமுகர்களும் பத்திரிகையாளர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு அனைத்தும் வெளிநாட்டுத் தலைவர்களும் பிற பெருமக்களும் வருகை தந்தபோது நிகழ்ச்சிகளின் தேவைக்கும் வேகத்திற்கும் ஏற்ப விரைந்து செயல்பட்டுள்ளன.

மாவட்டங்களிலுள்ள செய்தி மக்கள் தொடர்புஅலுவலர்களும் பத்திரிகைத் தொடர்பு அலுவலர்களாக செயற்படுகின்றனர். வளர்ச்சிப்பணிகளை நேரில் பார்வையிடுவதற்காக பணி நடக்கும் இடங்களுக்குப் பத்திரிகையாளர்களை மாவட்ட அலுவலர்கள் அழைத்துச் செல்கிறார்கள். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் இயங்குகிற விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு செயலாளர்களாக இத்துறையின் மாவட்ட அலுவலர்கள் இயங்கிவருகின்றனர்,

அரசின் திட்டங்கள் செயற்படுவதைப் பார்வையிட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும், வெளிநாட்டுத் தொலைக்காட்சி, வானொலிக் குழுவினரையும் பிறமாநிலங்களிலிருந்து வரும் பத்திரிகையாளர்களையும் இத்துறைஅழைத்துச்சென்று துணைபுரிந்துள்ளது. 1986 ஜனவரி மாதம் சென்னையில் நடந்த சிறிய-நடுத்தரப் பத்திரிகையாளர்கள் இரண்டு நாள் மாநாடு வெற்றிகரமாக நடந்தேற இத்துறை எல்லா வகையிலும் உதவிபுரிந்தது.



பத்திரிகையாளர்கள் எந்த இடத்துக்கும் சென்று தொல்லையின்றி எளிதாகச் செய்தி சேகரிக்க உதவும் வகையில் அரசு அங்கீகாரம் வழங்கும் முறை சென்னை நகரிலும் மாவட்டத் தலைநகர்களிலும் செயற்பட்டு வருகிறது. இவ்வாறு அங்கீகாரம்பெற்ற பத்திரிகையாளர்கள் சென்னை நகரில் மட்டும் 185 பேர் உள்ளனர்.

வானொலியில் மாதம் இருமுறை ஒலிபரப்பாகும் வகையில் 'வளரும் தமிழகம்' என்ற நிகழ்ச்சியினை இத்துறை ஏற்பாடு செய்து அமைச்சர்கள் அரசுச் செயலாளர்கள் ஆகியோர் அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்றத் துணைபுரிந்து வருகிறது. தொலைக்காட்சியும், வானொலியும் அரசின் திட்டங்கள் குறித்து அவ்வப்போது நிகழச்சிகளை ஒளிபரப்பவும், ஒலிபரப்பவும் ஏற்பாடுகளை இத்துறை செய்துள்ளது. தமிழ்நாட்டில் அச்சிடப்படும் புத்தகங்கள் அனைத்தும் இத்துறையினால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

அனைத்துச் செய்தித்தாள்கள் பத்திரிகைகளை மேற்கோள் பிரிவு நிர்வகித்து வருகிறது. முக்கியச் செய்திக் குறிப்புகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோருக்கு நாள்தோறும் அளித்து வருகிறது.

பலநோக்கு விளம்பரப் பணிகள் :

சென்னையில் ஒவ்வொரு மாதமும் பல நோக்கு விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இந்திய அரசின் சார்பில் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில் இருபது அம்சத்திட்டத்தின் கீழ் ஆற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றி ஆய்வு செய்யப்படுகிறது, இக்கூட்டந்தின் பரிந்துரைகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏழை எளிய மக்களும் கிராமப்புறமக்களும் அரசின் திடடங்களை எளிதில் கற்றுக்கொள்ளும் வண்ணம் கிராமியக் கலைகள் உட்பட பல்வேறு செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூலம் இத்துறை பல்வேறு விளம்பரப் பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் செயற்படுத்தி வருகிறது.

புகைப்படப் பிரிவு விரிவாக்கப் பணிகள் ;

இத்துறையின் புகைப்படப் பிரிவு நவீன புகைப்படச் சாதனங்களைப் பெற்று இயங்கி வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் இப்புகைப்படப் பிரிவுகள் அமைக்கும் வகையில் புகைப்படப் பணிகளை விரிவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986—67 ஆம் ஆண்டில் மூன்று மாவட்டத் தலைநகர்களில் புகைப்படப் பிரிவு அமைக்கப்படும்.

செய்தி நிலையங்கள் :

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மூன்று இடங்களில் இயங்கி வரும் செய்தி நிலையங்களில் பொதுமக்கள் பெரிதும் பயன்படுத்திவரும் நூலகம், படிப்பகம் ஆகியவை உள்ளன. மேலும் செய்திப்படங்களைத் திரையிட்டு மக்களுக்குத் தகவல்களைத் தந்து வருகின்றன. பல்வேறு துறைகள் பற்றியும் இங்கே தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ரூபாய் 1.92 இலட்சம் செலவில் செய்தி நிலையங்களைத் திறக்க அரசு முடிவெடுத்துள்ளது.

கள விளம்பரம் :

மக்களின் சமூகக் கல்வியை மேம்படுத்தவும் அரசின் அனைத்து நலப்பணிகளிலும் மக்கள் பங்குகொண்டு ஒத்துழைப்பை நல்கவும் ஏற்றவகையில் கள விளம்பர பணிகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

இத்துறையைச் சார்ந்த மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அதிகாரிகளின்கீழ் 71 திரைப்படப் பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் சராசரி மாதந்தோறும் 20 திரைப்படக் காட்சிகள் நடத்தித் தொலை தூரத்தில் உள்ள கிராம மக்களும் அரசின் திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றனர். மேலும் பெருமளவுக் கிராமங்களுக்கு உதவும் வகையில் காண் ஒலிக் கருவிகளைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலமும் பொதுக் கூட்டங்கள், சிறிய பொருட்காட்சிகள் மூலமும் சிறுசேமிப்பு, குடும்பநலம், ஏழ்மை ஒழிப்பு பற்றியும், குடிப் பழக்கத்தின் தீமைகள், தீண்டாமையினால் வரும் தீங்குகள் பற்றியும் மக்களுக்கு இத்துறை எடுத்துரைத்து வருகிறது.

காட்சி விளம்பரச் சாதனம் என்ற வகையில் பொருட்காட்சி நிலையானதோர் இடத்தை பிடித்திருக்கிறது. சென்னை அகில இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் இந்த ஆண்டும் மாவட்ட அரங்குகள் இடம் பெற்று மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிகள், மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்கள், வாழ்க்கை முறை, கலைகள் ஆகியவற்றை விளக்கிக் காட்டியிருக்கின்றன.

செய்தியறிவிப்பு நுட்பவியல் நவீனமாக்கப்படுதல் :

செய்தியறிவிப்புத் தொழில் நுட்பவியலில் பெருமளவு நவீனக் கருவிகளைப் பயன்படுத்த இத்துறை திட்டமிட்டு நவீனப் படுத்தும் பணியையும் தொடங்கியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இதற்குரிய செலவு நவீனக் கருவிகள் வாங்க அனுமதிக்கப்பட்ட ரூ. 4.75 லட்சத்தில் இருபது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், பேச்சுப் பதிவு வசதியுடன் கூடிய வானொலிப் பெட்டிகள்



இருபதும், வீடியோ கேசட் ரிகார்டர்கள் இருபதும், 100 வீடியோ கேசட்டுகளும், 720 ஆடியோ கேசட்டுகளும் வாங்கப்பட்டு மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மற்றும் வீடியோப் படம் எடுப்பதற்காக எடுத்துச் செல்லக்கூடிய வீடியோ பதிவுக் கருவியுடன் கூடிய வீடியோப் புகைப்படக் கருவி வாங்கப்பட்டு தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு அரசு நிகழ்ச்சிகளைப் படமெடுக்க வழங்கப்பட்டுள்ளது.

பழைய செய்தித் தாள்களையும், பத்திரிகைகளையும், வார, மாத இதழ்களையும் பத்திரிகைச் செய்தித் தொகுப்புகளையும், நிரந்தரமாக, வைத்துக் காப்பதற்காக ரூ. 10 லட்சம் செலவில் 'மேற்கோள்' பிரிவிற்கென கம்ப்யூட்டர் மூலமான மைக்ரோ பிலிம் யூனிட் ஒன்றை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருமளவுப் பதிவேடுகளும் பிற இதழ்களும் 'மைக்ரோ பிலிம்' செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படமுடியும். 'கம்ப்யூட்டர் ரெட்ரீவல்' முறையைப் பயன்படுத்தி மைக்ரோ பிலிம் மூலம் குறுகிய காலத்தில் தேவைப்படும் செய்தியைச் சேகரிக்கலாம்.

வானொலி நிலையங்கள் :

வட ஆற்காடு, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் வானொலி நிலையங்கள் அமைக்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மத்திய அரசு ஏழாவது திட்டத்தில் உதகமண்டலம், கொடைக்கானல், தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதியதாக வானொலி நிலையங்களை அமைக்கவும், திருச்சி, சென்னை வானொலி நிலையங்களின் ஒலிபரப்புச் சக்தியை அதிகப்படுத்தவும் வகை செய்துள்ளது. நம் மாநிலத்தில் மேற்சொன்ன பணிகளுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சி நிலையங்கள் :

1984–85 ஆம் ஆண்டில் குறைந்த சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் வேலூர், ஏர்க்காடு, கோயம்புத்தூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலும், சமீபத்தில் நெய்வேலியிலும் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. கொடைக்கானலில் அமைக்கப்பட்டு ஒரு கிலோ வாட் சக்தியுடன் செயல்பட்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் 1985 ஆம் ஆண்டில் முழுமையாக 10 கிலோ வாட் சக்தியுள்ள தொலைக் காட்சி ஒளிபரப்பாகச் செயற்படுகிறது. இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டு விரைவில் பணியைத் தொடங்க இந்த அரசு எல்லா உதவிகளையும் ஒத்துழைப்பையும் அளித்துள்ளது.

மேலும் இவ்வரசு தொலைக்காட்சியில் வண்ணத்தில் ஒளி பரப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைத்துத் தர வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. கொடைக்கானல் மற்றும் குறைந்த சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களில் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் தயாரிக்கப்படும்

நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய 'மைக்ரோ அலை' இணைப்பு வசதிகளைச் செய்து தருமாறு மத்திய அரசின் தகவல் தொடர்புத்துறையிடம் கேட்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று, குறைந்த சக்தித் தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்களைத் தர்மபுரி, நாகர்கோவில், கடலூர் ஆகிய இடங்களிலும், உயர்சக்தி தொலைக் காட்சி நிலையம் ஒன்றை இராமேசுவரத்திலும் அமைக்கவும், ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட இரண்டாவது அலை வசதியை சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துக்கு அளிக்கவும் தக்க திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு இணைத்துள்ளது.

மக்கள் தகவல் தொடர்புப் பயிற்சி ஆய்வு நிறுவனம் :

ஏழாவது திட்டக் காலத்தில், மக்கள் தொடர்புப் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான பாடத் திட்டம் முதலியவை உட்படத் திட்ட அறிக்கை தயாரிக்கும் தொடக்கப் பணிக்காக 1986–87 ஆம் ஆண்டுக்கு ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

விழாக்கள் :

வரலாற்று நிகழ்ச்சிகள், தலைவர்களின் தியாகங்கள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கவும், தெளிவூட்டவும் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களையும், நினைவுநாள் நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்துகிறது. புகழ்மிக்க சீர்திருத்தச் செம்மல் சர். தியாகராயரின் 134-வது பிறந்த நாள் விழா இவ்வாண்டு கொண்டாடப்பட்டது. மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் முதல் ஆண்டு நிறைவு நினைவு சென்னையில் நடத்தப்பட்டது. அண்ணா மாவட்டத் தொடக்கத்துடன் அண்ணா பிறந்தநாள் மிகச்சிறப்புடன் நடத்தப்பட்டது. புதுடில்லியில் குடியரசு தின அணி வகுப்பில் தர்மபுரி மாவட்டத்தின் கிராமிய நடனமான சேவை நடனம் இடம் பெற்றது. சென்னையில் குடியரசு தின அணிவகுப்பில் எழில்மிக்க அலங்கார ஊர்திகளும் கிராமிய நடன நிகழ்ச்சிகளும் செய்தித் துறையின் சார்பில் இடம் பெற்றன. 1986 ஜூலை திங்களில் புகழ்பெற்ற சமூகப் பணியாளர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது.

கலைவாணர் அரங்கம் :

சென்னையில் அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம் குளிர்சாதன வசதி கொண்ட அரங்கமாகும். அரசு நிகழ்ச்சிகள், தனியார் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. தனியார்களுக்குக் கட்டணத்தின் பேரில்



ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசுத் துறைகளுக்குச் சலுகை விகிதத்தில் வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1985 ஏப்ரல் முதல் 1986 மார்ச்சு 31 வரை இந்த அரங்கத்தின் மூலம் ரூ. 4.19 லட்சம் அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளது. கலைவாணர் அரங்கில் மின்வசதி தொடர்ந்து கிடைப்பதற்கு 'மின் உற்பத்தி இயந்திரம்' நிறுவப்பட்டுள்ளது. மேலும் நவீன ஒலி வசதிக்கான நவீனக் கருவிகள் ரூபாய் 2.44 லட்சம் செலவில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணா கலையரங்கம், வேலூர் :

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. தினமும் திரைப்படக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன. இவ்வரங்கத்தின் மூலம் 1985–86 ஆம் ஆண்டில் 31–3–1986 வரை ரூ. 2.56 லட்சம் நிகர வருமானம் அரசுக்குக் கிடைத்துள்ளது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் செய்தி நிலையங்களையும் இணைத்து கலையரங்குகள் கட்டுவதற்கு அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது.

பொருட்காட்சி :

பொருட்காட்சி மக்களுக்குப் பொழுது போக்கும் சாதனமாக மட்டுமன்றி அறிவூட்டும் கல்விச் சாதனமாகவும் அமைந்துள்ளது. இத்துறை 1978 ஆம் ஆண்டு முதல் 30 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. இவற்றில் நுழைவுச் சீட்டு, அரங்க வாடகை, மின் கட்டணம் ஆகியவை மூலம் இதுவரை மொத்தம் ரூ. 405.49 லட்சம் இத்துறை ஈட்டியுள்ளது. இதில் பொறியியல் பணிகள், மின்சாரம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு ரூ. 197.07 லட்சம் செலவாகியது. இதில் கலந்து கொண்ட பல்வேறு அரசுத் துறைகளும், அரசு நிறுவனங்களும் ரூ. 94.12 லட்சம் செலவு செய்துள்ளன. இவை நீங்கலாக அரசுக்கு, நிகர வருமானம் ரூ. 114.30 லட்சம் கிடைத்துள்ளது. நாட்டிலேயே பொருட்காட்சி நடத்தி வருவாய் ஈட்டும் ஒரே துறை தமிழகத்தின் செய்தித் துறைதான்.

நினைவகங்கள் :

செய்தி மக்கள் தொடர்புத் துறை, 1. வள்ளுவர் கோட்டம், 2. அண்ணா சதுக்கம், 3. காமராசர் இல்லம், 4. இராஜாஜி நினைவகம், 5. சென்னை கிண்டியிலுள்ள காமராசர் நினைவாலயம், 6. கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம், 7. எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மண்டபம், 8. ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், 9. விருதுநகரிலுள்ள காமராசர் நினைவகம், 10. ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணா நினைவகம், 11. தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவகம், 12. தருமபுரி மாவட்டம் தொரப்பள்ளியில் உள்ள இராஜாஜி நினைவகம், 13. காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா நினைவகம் ஆகிய அனைத்தையும் பராமரித்து வருகிறது.

அண்ணா சதுக்கத்தில் அண்ணாவின் பெருமையை அறிந்து கொள்ள நூலகமும் அவரது நூல்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையமும் கொண்ட நூலகக் கட்டடம் உருவாக்கப்பட்டு 11—12—1985-ல் மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கப்பட்டது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை மேம்படுத்த ரூ. 11லட்சம் செலவில் கோட்டத்திற்கு எழில் சேர்க்கும் பணிகள், பார்வையாளர்களுக்குப் புதிய வசதிகள், அங்காடி வளாகம், சிற்றுண்டியகம், சுற்றுலாப் பேருந்துகள் நிற்க நிழலகம், தோரணவாயிலின் தோற்றப் பொலிவினை அதிகரிக்க சுற்றுச் சுவர்—பூங்கா அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் நிறைவேறி வருகின்றன.

கிண்டி இராஜாஜி நினைவகத்தில் இராஜாஜி அருங்காட்சியகத்திற்காக ரூ. 3 லட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டு, அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

மீனம்பாக்கம் விமானநிலையத்திலிருந்து சென்னைவரும் சாலையில் கத்திப்பாரா சந்திப்பில் ரூ. 11.25 லட்சம் செலவில் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவிற்குச் சிலை நிறுவி சீரிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

நாகர்கோவிலில் செய்குத் தம்பி பாவலருக்கு ரூ. 4.10 லட்சம் செலவில் நினைவகம் கட்டும் பணி முடிந்துள்ளது.

கன்னியாகுமரியில் காந்தி மண்டபத்தை மேம்படுத்தும் திட்டமும் ஆய்வில் உள்ளது.

குற்றாலத்தில் ரசிகமணி டி. கே. சி. வாழ்ந்த இல்லம், திருச்சியில் வ.வே. சுப்பிரமணியம் வாழ்ந்த இல்லம், திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம், நாகர்கோவிலில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை அரசு ஏற்று நினைவகங்களாகப் பராமரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசனுக்கு மணி மண்டபம் அமைப்பதற்கான விரிவான திட்டமும் மதிப்பீடுகளும் ஆய்வில் உள்ளன. திருப்பூரில் திருப்பூர்க் குமரனுக்கு ரூ. 5 லட்சம் செலவில் நினைவுச் சின்னம் அமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இப்பணிக்காக ஏற்கெனவே 1985—86-ல் ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் :

வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவு வளாகம் அமைப்பதற்காகக் கேரள அரசு 0.2896 ஹெக்டேர் நிலம் நன்கொடையாக வழங்கியுள்ளது. நினைவகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா



3—11—1985 அன்று வைக்கத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் நிலத்தினைப் பெற்றுக் கொண்டார். இந்நினைவு வளாகத்தில் தந்தை பெரியார் சிலை, நூலகம், சிறுவர் பூங்காவுடன் கூடிய தோட்டம், பொழுது போக்கு மைதானம் ஆகியவை இடம் பெறும்.

பத்து அடி உயரமுள்ள பாரதி சிலையை நிறுவப் புதுடில்லியில் தக்க இடத்தை இந்திய அரசு வழங்கியுள்ளது. சிலை செய்து முடிக்கப்பட்டு நிறுவிடத் தயார் நிலையில் உள்ளது. மத்திய பொதுப்பணித் துறை சிலைக்கான அடிப்பீடம் கட்டும் பணியை முடித்துள்ளது. இச்சிலை விரைவில் திறக்கப்படும்.

தமிழரசு :

தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் 'தமிழரசு' ஏடு மூலம் அரசின் கொள்கைகளும், திட்டங்களும், சாதனைகளும் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. மாதம் இருமுறை வெளிவரும் தமிழ் இதழ் சராசரி 46,000 பிரதிகளும், மாதம் ஒரு முறை வெளிவரும் ஆங்கில இதழ் 4,000 பிரதிகளும் விற்பனையாகின்றன. இவ்விதழ் தனியார், முகவர்கள், மாவட்டங்களிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் மூலம் விற்பனையாகின்றன. சந்தாதாரர்களுக்கும் நேரடியாக அனுப்பப்பட்டு விற்பனையாகின்றன.

1986-ல் தமிழரசு பொங்கல் மலர் வண்ணப் பொலிவுடன் வெளியிடப்பட்டது. இருநூறு பக்கங்கள் கொண்ட இம்மலர் 50,000 பிரதிகள் அச்சிடப்பட்டது. இப்படிப்பட்ட முயற்சி முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள், தமிழகத்தின் புகழ்மிக்க கற்றறிவாளர்கள் இம்மலரில் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதி புதிய பொலிவினை இதழுக்கு அளித்தனர்.

வெளியீட்டுப் பிரிவு :

தமிழரசின் சிறப்பு வெளியீட்டுப் பிரிவு சிறிய சிறப்பு வெளியீடுகளையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டு அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்குகிறது. இப்பிரிவு 1985-ல் ''மக்கள் தந்த மகத்தான வெற்றி'', ''வளம் பெருக்கி நலம் பயக்கும் நிதிநிலை அறிக்கை'', 'திராவிடச் சமுதாயச் சிற்பி சர். பி. தியாகராயர்', ''சுற்றுப்புறச் சூழ்நிலைக் கட்டுப்பாடு'' 'கல்வி சிறந்த தமிழ்நாடு', 'வெற்றிப் பாதையில் வேளாண்மை' எனும் பல சிறப்பு வெளியீடுகளை ஆக்கித் தந்துள்ளது, பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையிலும் வல்லுநர் குழுவின் பரிந்துரையிலும் பெரியார் புரட்சி மொழிகள் என்ற புத்தகம் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்படுவதற்கு

பெரியார் வாழ்க்கை வரலாறு வெளியிடப்படுவதற்கும் ரூ.1,61,200 ஒதுக்கப்பட்டுள்ளது. 3—11—1985-ல் வைக்கத்தில் நிகழ்ந்த பெரியார் நினைவகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் 'பெரியார் புரட்சி மொழிகள்' ஆங்கில நூலும், தமிழ் நூலும் (மறு பதிப்பு) வெளியிடப்பட்டன. பெரியார் வாழ்க்கை வரலாறு (தமிழ்) வெளியிடும் பணி நடந்தேறி வருகிறது.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி, அவரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள் அடங்கியவற்றை மூன்று பகுதிகளாக வெளியிடும் பணியைத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இதற்கென ரூ. 3.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் தொகுதி விரைவில் வெளியாகவிருக்கிறது.

தமிழரசு அச்சகம் :

தமிழரசு அச்சகத்தில் 'தமிழரசு' தமிழ், ஆங்கில இதழ்கள் அச்சிடப்படுகின்றன. இவ்வச்சகத்தில் அச்சிடப்படும் ஏனைய ஏடுகள்;

1. திட்டம் (மாத இதழ்—மத்திய அரசு வெளியீடு).
2. உழைப்பவர் உலகம் (மாத இதழ்—தொழிலாளர் துறை வெளியீடு).
3. திருக்கோயில் (மாத இதழ்—இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு).
4. தமிழகக் கல்வி (காலாண்டு இதழ்—கல்வித் துறை வெளியீடு).
5. தமிழர் விளையாட்டு மடல் (மாதம் ஒரு முறை—விளையாட்டுப் பயிற்சித் துறை).

இங்கு அரசின் சாதனைகளை விளக்கும் சிறிய வெளியீடுகளும், அரசு நிகழ்ச்சிகளுக்குரிய அழைப்பிதழ்களும் அச்சிடப்படுகின்றன. 'மோனோ' பிரிவின் பணியை விரைவுபடுத்துவதற்காக ரூ. 45,000 செலவில் மின்தட்டச்சுப் பொறி ஒன்றை 1986–87-ல் வாங்கி நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்:

திரைப்படத் தயாரிப்பு, தொலைக்காட்சி மற்றும் இவை தொடர்பான படங்கள் ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து, தேர்வுகள் நடத்தி தேர்வில் வெற்றி பெற்ற மாண





வர்களுக்கு 'டிப்ளமாக்கள்' வழங்கப்படுகின்றன. திரைப்படத் தொழிலில் காணும் சீரிய சிறப்பு அம்சங்களை அறிந்து பாராட்டும் வகையில் மக்களுக்கு அறிவுறுத்தலும் திரைப்படங்கள் குறித்து ஆய்வுகள் நடத்திட வாய்ப்பளித்தலும் இப்பயிற்சி நிறுவனத்தின் நோக்கமாகும்.

சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பயிற்சிப் பிரிவுகள் உள்ளன :—

| பயிற்சி. | காலவரையறை. | ஒவ்வோராண்டும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இயக்குதல், திரைக்கதை எழுதுதல். | 3 ஆண்டுகள் | 10 |
| 2. திரைப்படப் பதிவு | 3 ஆண்டுகள் | 15 |
| 3. ஒளிப்பதிவு ஒலிப் பொறியியல். | 3 ஆண்டுகள் | 10 |
| 4. படச் சுருள் கழுவுதல் | 3 ஆண்டுகள் | 10 |
| 5. படத் தொகுப்பு | 2 ஆண்டுகள் | 10 |
| 6. நடிப்பு (சான்றிதழ் பெறும் பயிற்சி) | 1 ஆண்டு | 20 (மாணவர்கள் 10 பேர், மாணவிகள் 10 பேர்.) |

159 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் தற்போது பயில்கின்றனர்.

இந்தியாவிலேயே இந்த பயிற்சி நிறுவனத்தில்தான் படச் சுருள்கள் கழுவுதல் பயிற்சியும் நடிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

திரைப்படமெடுக்கும் அரங்குகளும், இந்த நிறுவனத்திலுள்ள கருவிகளும் தனிப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு வாடகை முறையில் அளிக்கப்படுகின்றன. வருவாய் கிடைப்பதுடன் இந்த ஏற்பாட்டின்படி அனுபவம் மிக்க தொழில் நுட்பக் கலைஞர்கள் திரைப்படத் தயாரிப்பில் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை

இங்குப் பயிலும் மாணவர்கள் நேரில் கண்டறிவதற்கும் அவர்களுடன் இணைந்து பணி செய்வதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்நிறுவனத்திலிருந்து பயிற்சி முடித்துச் சென்ற மாணவர்கள் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் குறிப்பாகத் தொலைக்காட்சி நிலையங்களிலும், திரைப்படத் தொழிலிலும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். பழைய மாணவர்கள் பலர் திரைப்படத் தொழிலில் ஏற்கனவே சிறப்படைந்துள்ளனர்.

1986–87 ஆம் ஆண்டில் பல்வேறு இடங்களுக்கும் எளிதாக எடுத்துச் செல்லத் தக்க வீடியோ படப்பிடிப்புக் கருவியும், செய்தி சேகரிக்க மின்னணுக் கருவியும் ரூ. 5.20 லட்சம் செலவில் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான விடுதியினை விரிவாக்க இரண்டாம் கட்டமாக 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் முக்கிய நோக்கம், திரைப் படங்கள் மூலம் மக்களுக்குத் தகவல் அறிவிப்பதும் அறிவூட்டுவதும் ஆகும். இப்பிரிவு மாதம் இருமுறை அரசின் சாதனைகள், குடும்ப நலம், அவ்வப்போது நடைபெறுகிற விழாக்கள் ஆகியவற்றைத் திரைப்படமாக்கி வழங்குகிறது. அரசின் பல்வேறு துறைகளுக்குரிய திரைப்படங்களையும் இப்பிரிவு தயாரிக்கிறது. 35 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு இந்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் விநியோகிக்கப்படுகின்றன. செய்திப் படங்களும், கருத்து விளக்கப் படங்களும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப் புறங்களில் மக்களுக்குத் திரையிடும் பொருட்டு மாவட்ட விளம்பரப் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இது வரை தயாரான 301 செய்திப் படங்களில் 20 படங்கள் 1985–86-ல் தயாரிக்கப்பட்டன. இது வரை 75 கருத்து விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாதம் இரு முறை தயாரிக்கப்படும் 35 மி.மீ. செய்திப் படம் ஒவ்வொன்றும் 141 பிரதிகள் எடுக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இவற்றில் 138 பிரதிகள் இந்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் வெளியிடப்படுகின்றன. ஆறு மாதக் காலத்தில் இவை எல்லா திரையரங்குகளில் காட்டப்படுகின்றன.

திரைப்படங்களுக்கு உதவித் தொகை அளித்தலும், சிறந்த திரைப்படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குதலும் :

மதுவிலக்கு, சாதி முறையைப் போக்குதல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் முதலிய சிறப்பான சொள்கைகளைப் பரப்பிடும் வகையில் சமூக பொரு



ளாதாரக் கோட்பாட்டு அடிப்படையில் தயாரிக்கப்படும் சிறந்த தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், சிறந்த தமிழ்ப் படங்களுக்கு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரியில் திரைப்பட உதவித் தொகைத் திட்டம் செயலாக்கப்பட்டது. இத் திட்டத்தின் படி தரமான திரைப்படங்களிலிருந்து மிக கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபாய் வீதம் நிதி உதவியினை அரசு அளிக்கிறது. 1978–79 ஆம் நிதி ஆண்டு முதல் மிகச் சிறந்த கலை நுட்பமும் உயர்ந்த தொழில் நுட்பத் திறனும் கொண்ட தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கிடும் வகையில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

ஜவகர்லால் நேருவின் நினைவாக, சிறந்த குழந்தைகள் திரைப்படங்கள் மூன்றுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பணமும் முதல் பரிசாகவும் மற்ற இரண்டு படங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் :

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப் பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பல பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளித் திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவியளிப்பது இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டுவதற்கும் நிலையான திரையரங்குகளாக மாற்றவும் இக்கழகம் இதுவரை கடன் அனுமதித்துள்ளது.

இக்கழகத்தின் நிதி ஆதாரம், செலுத்திய மூலதனம் ரூ. 35 லட்சம் ஆகும். தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டதும், அரசின் நீண்ட காலக் கடன் ரூ. 15 இலட்சம் அடங்கியதும் ஆகும். ஒரு திரையரங்கிற்கு ரூ. 1.20 லட்சம் அதிக அளவு கடன் தொகை வழங்கப்படுகிறது. இத் தொகை 60 சமமான மாதத் தவணைகளில் ஆண்டுக்கு 17 சதவீத வட்டியுடன் திருப்பி வசூலிக்கப்படுகிறது. மொத்தம் ரூ. 92.03 லட்சம் 80 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது வரை 78 பகுதி நிலைத் திரையரங்குகள் இயங்கத் துவங்கியுள்ளன.

தனியாருக்கு இதுவரை கடன் வழங்கி வந்துள்ள இக்கழகம், ஏர்க்காடு நகரியத்தில் ரூ. 2.80 லட்சம் செலவில் ஒரு திரை யரங்கைக் கட்டியுள்ளது. அதில் 1–10–1984 முதல் திரைப் படம் காட்டப்பட்டு வருகிறது. எளிய தவணை முறையில் ஏர்க்காடு நகரியத்திடமிருந்து 17 சதவீத வட்டியுடன் தொகை வசூலிக்கப்படுகிறது.

கடன் பெற்ற 80 பேரில் 36 பேர் தங்கள் கடன் தொகை முழுவதையும் செலுத்தி விட்டனர். இக்கழகம 17 பேர் மீது சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்து ரூ. 54.03 லட்சம் அள விற்கு வரவேண்டியுள்ள அசல், வட்டித் தொகையை வசூலிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. கடன் பெற்ற வர்கள் 17 சதவீத வட்டியுடன் 60 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். திருப்பிச் செலுத்தத் தவறி னால் 19 சதவீதக் கூட்டு வட்டி வசூலிக்கப்படுகிறது. பல காரணங்களைால் பலர் கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை. ரூ. 107.04 லட்சம் கடன் தொகை வரவேண்டியுள்ளது. வர வேண்டிய அசல் தொகையில் 19 சதவீத வட்டியை மட்டுமே வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் 1–3–1986 முதல் ஆறு மாதத்திற்குச் செயல்படுத்தப்படும். 1–3–1986-ல் உள்ளபடியுள்ள நிலுவை அசல் தொகை மீது தனி வட்டி வசூலிக்கப்படும். நடப்பு மாதத் தவணைகள் செலுத்தவுப பாக்கித் தொகையை மொத்தமாகச் செலுத்தவும் முன் வரு வோருக்கு ஆறு மாதம் காலவரை அளிக்கப்படும். நடப்பு மாதத் தவணைகளைச் செலுத்த உறுதியளிப்பவர்களுக்கு 3 மாதக் கால வரம்பு அளிக்கப்படும். ஆறு மாதக் காலத்திற்குள் தங்கள் கடன் தொகைகளைச் செலுத்தி இத்திட்டத்தைப் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டமும், 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளும்:**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு, குறிப்பாக மத்திய தர மக்களுக்கும் பொழுது போக்கு ஆதாரமாகத் திரைப்படத் தொழில் அமைவதுடன் ஊராட்சிகள், நகராட்சிகள், அரசாங்கம் ஆகியவற்றுக்கு வருவாய் தரும் ஆதாரமாகவும் உள்ளது. திரையரங்குகளை அதிகரிக்கவும் திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்திடவும் விதிகளும் விதி முறைகளும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இம்மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களிலும், மாநகரங்களிலும் நல்ல வசதியான திரையரங்குகள் பெருமளவில் கட்டப்பட்டுள்ளன. மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் எளிதில் தீப்பிடிக்கும் கூரைகளை நீக்கி, தீப்பிடிக்காத மேற்பகுதிகளை அமைத்திடவும், பிற பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றிடவும் ஏற்ற வகையில் டூரிங் திரையரங்குகள் கட்டுவதற்கான முன் நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. இக் கொள்கையின் விளை



வாக டூரிங் திரையரங்குகள் கட்டும் செலவு வெகுவாக உயர்ந் துள்ளது. திரையரங்குகளின் உரிமையாளர்களின் பொதுவான கோரிக்கையைக் கவனமுடன் ஆய்ந்து, அவர்களின் உரிமங்களின் கால அளவு 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் திரைப்படம் பார்க்கச் செல்லும் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளும் பாதுகாப்பும் இருத்தல் வேண்டும் என்று கண் டிப்புடன் அரசு அறிவித்துள்ளது. திரையரங்குகளில் கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகள் விற்பதைத் தவிர்க்க, உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட் டுள்ளன. நுழைவுச் சீட்டுகள் விற்பனையில் திரையரங்கு உரிமையாளர்களும் கள்ளச் சந்தை விற்பனைக்கு உடந்தையாக இருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணிக்கப் பட்டுள்ளனர்.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) சட்டத்திலோ அல்லது 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளிலோ இது சம்பந் தமாகத் தண்டனை அளிப்பு விதிமுறையை ஏற்படுத்தும் கருத் துரு அரசின் ஆய்வில் உள்ளது.

இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாகிய தமிழை பேசும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்திலுள்ள திரைப்பட அரங்குகள், ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு மேற் படாத கால அளவிற்காவது தமிழ்த் திரைப்படங்களைத் திரை யிட வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஆபாசத் திரைப்பட விளம்பரங்கள் அதாவது சுவரொட்டி கள், பேனர்கள் முதலியவற்றைத் தடுத்திடும் பொருட்டு திரைப் பட விளம்பரச் சாதனங்களைத் தணிக்கை செய்யச் சட்டமியற்ற வும், போக்குவரத்திற்குத் தடையும், ஊறும் ஏற்படுத்தும் வகை யில் சாலைப்புறங்களில் விளம்பரங்கள் செய்வதை முறைப்படுத்த அல்லது தடுக்க மற்றொரு மசோதா கொண்டு வரவும் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) சட்டத்திற்கு விரிவான திருத்தம் கொண்டுவர மசோதா ஒன்றை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் உள்ள விதிகளும் விதிமுறைகளும் மேலும் எளிமையாக்கப்படும்.

திரைப்பட அரங்குகளின் உரிமதாரர்கள், திரையரங்குகளில் படம் பார்ப்பவர்களைக் காப்புறுதி செய்வதற்கான திட்டம் அரசால் ஏற்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் குளிர்சாதன வசதி அளிக்கப்படாதது திரைப்படம் பார்ப்பவர்களின் உடல் நலத்தைப் பாதிப்பதுடன் உரிமம் பெற்றவர்களின் ஏமாற்று நடவடிக்கையும் ஆகும். உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் திடீர்ச் சோதனை நடத்தி அங்கு குளிர்சாதன வசதி உரிய முறையில் ஏற்படுத்தப் பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அவ்வாறு இல்லையெனில் அத்தகைய திரையரங்குகளின் உரிமதாரர்கள் மீது கடும் நட வடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 31—12—1985-ல் உள்ளவாறு தமிழ்நாட்டின் 2,243 திரையரங்கு கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,155 திரை யரங்குகள் நிரந்தரமானவை.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ ரிக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம்.

வீடியோ ஒழுங்கீனமாகப் பயன்படுத்துவதைத் தடுக்க தமிழக அரசு, தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதி 1984-ஐ இயற்றியது. உரிமம் இல்லாமல் வீடியோ நூலகம் நடத்துபவர்களுக்கு நாலாவது பிரிவின்படி கடுமையான தண் டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தையும் அதன் கீழ் உள்ள விதிகளையும் முழுமையாகச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை காவல் துறை ஆணை யருக்கும் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன.

## இணைப்பு VII.

(563ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க).

சுற்றுலாத் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

உலகில் பல்வேறு நாட்டு மக்களிடம் ஒற்றுமை வளரவும், அமைதி நிலவவும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அன்பு நெறி மலரவும், மாற்றாரை மதித்து நட்பு கொண்டு, நல்லெண் ணத்தை வளர்க்கவும், குறிப்பாகவும், சிறப்பாகவும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த குறிக்கோள், எங்கும் நிலவிடவும் 'சுற்றுலா' ஒன்றே சிறந்த வழியாகும்.

உலகில், அன்னியச் செலாவணி ஈட்டித்தருகின்ற தொழில் களுள் சுற்றுலாவும் ஒரு பெருந்தொழிலாகும். நம்நாட்டில் நிலவும் நிறைந்த வசதிகளைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாவிற்கு ஒரு தொழில் ரீதியான அந்தஸ்தினை வழங்கக் கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.



தென்னகத்தின் சாளரமாக விளங்கும் தமிழ்நாடு, வரலாற் றுச் சிறப்பும், பண்பாட்டும் பாரம்பரியமும் கொண்டது. பு மிக்க சுற்றுலாத் தலங்கள் பல இங்கு உண்டு. கலை நலமும், அருட் சிறப்பும் கொண்ட கோயில்களும், பழங்காலச் சின்னங் களும், பல நூற்றாண்டுகளாக நிமிர்ந்து நிற்கின்றன. நீண்ட அழகிய கடற்கரைகளும் இங்கு உண்டு. எழிலார்ந்த மலைவா சத்தலங்கள் இங்கு உண்டு. கண்டு களிப்பதற்கு ஏற்ற வனவிலங்கு கள் மற்றும் பறவைகள் சரணாலயங்களும், பல அழகிய அருவி களும் இங்கு உண்டு. புகழ் மிக்க, தொன்மையான நுண்கலைச் செல்வங்களும், கைவினைத் திறன்களும் உண்டு.

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவை யான அடிப்படை வசதிகளைத் தரும் வகையில் சுற்றுலா வளர்ச்சிப் பணிக்கான கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களின் மூலம் கிடைக்கும் பலனை முழுவதும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்களை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து படிப்படியாகச் செயல்படுத்திட அரசு முனைந்துள்ளது.

1985-ம் ஆண்டு தமிழகத்தில் உள்நாட்டுப் சுற்றுலாப் பயணம் 1984-ஐ விட 30.4 சதவீதம் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. 1985-ல் இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள வெளி நாட்டுப் பயணிகள் 8,36,908 என்றும், இது கடந்த ஆண்டை விட 0.2 சதவீதம் அதிகரித்துள்ளது எனவும், புள்ளி விவரம் கூறுகிறது. இவர்களில் தமிழ்நாட்டிற்கு 29.3 சதவீதம் வருகை தந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இந்த வருகை 1984-ம் ஆண்டைவிட 2.2 சதவீதம் 1985-ல் அதிகரித்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகம் நோக்கி அதிக அளவில் சுற்று லாப் பயணிகள் வருவதால் அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை இம்மாநிலத்தில் தர வேண்டியுள்ளது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகள் அதிக அளவில் நம் மாநிலம் வந்து கொண்டிருக்கும் நிலைமைக்கேற்ப சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற அரசு முயற்சி எடுத்து வரு கின்றது.

1. அனைத்து நாட்டு, மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாச் சிறப்பிடங்களில் அடிப்படை வசதிகளைப் பெருக்கு வது.

2. உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாச் சிறப் பிடங்களில் வசதிகளைப் பெருக்கி, அப்பகுதி மக்களுக்குச் சுற்றுலா நோக்கில் வாய்ப்பினையும், ஊக்கத்தையும் அளித்திட, பரவ லாக வளப்படுத்துதல்,

3. சுற்றுலா வளர்ச்சி, விளம்பரம் மற்றும் தகவல் தொடர்புகளில் புதிய விஞ்ஞான நோக்கில் அணுகுமுறை கையாளுதல்.

4. குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிக்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்குத் தேவையான உதவி அளித்தல்.

5. இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென அடிப்படை ஆதாரங்களை நிர்மாணிப்பதில், தனியார் துறையினரும், மற்றும் வெளிநாடு வாழ் இந்தியரும் பெரிதும் பங்கு கொள்ள ஊக்கமளித்தல்.

சுற்றுலாவினைத் தொழிலாக அறிவித்தல்:—

1984-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெற்ற, திட்டக் குழுவின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில், கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:—

" இந்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான வளங்கள் பெருமளவில் உள்ளன. சுற்றுலாவிற்கு ஒரு " தொழிலுக்கு உரிய அந்தஸ்து " தரப்பட வேண்டும். சுற்றுலா வளர்ச்சியில் தனியார் துறை முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகளைப் பெருக்குவதில் குறிப்பாக பொதுத்துறை முதலீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். "

இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் சுற்றுலா மற்றும் அத்துடன் இணைந்த பிற செயல்களுக்கும், " தொழிலுக்கு உரிய அந்தஸ்தை " வழங்கிட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. அரசு எடுத்த இந்த முடிவின் பயனால், தொழில் துறையில் வழங்கப்படும் சலுகைகள், ஊக்குவிப்புகள், மற்ற பயன்கள் சுற்றுலாவிற்கும், சுற்றுலா சார்ந்த பிற செயல்களுக்கும் கிடைத்திடும், வாய்ப்பு உள்ளது. அரசின் சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் கலந்தாலோசித்து இது குறித்த விவரங்களை சுற்றுலாத்துறை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து நாட்டு சுற்றுலா வளாகங்கள் :

மாமல்லபுரம் கடற்கரையில் உள்ள, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா வளாகத்தை, அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம், அனைத்து நாட்டுத்தரத்திற்கு ஏற்ப வசதிகளைப் பெருக்கி உயர்த்தப்பட உள்ளது. சென்னையிலிருந்து மாமல்லபுரம்



செல்லும் வழியில் உள்ள முத்துக்காட்டிலும், திருவிடந்தையிலும் உலக அளவில் உள்ள சிறந்த சுற்றுலா மையங்களில் ஒன்றாக அமைந்திடும் வகையில், புதிய அனைத்து நாட்டு சுற்றுலா ஓய்விடங்கள் ஏற்படுத்திட திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சென்னையில், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் தமிழ்ப் பண்பாட்டின் பல கூறுகளைச் சித்தரிக்கும் வண்ணம் ''சர்வதேச சுற்றுலா மையம் '' அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை, பிராட்வேயில் உள்ள சட்டக் கல்லூரி பழைய விடுதி இருக்கும் இடத்தில், குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகள் தேவையை ஈடு செய்ய, புதிய ஓட்டல் வளாகம் ஒன்று அமைத்திட திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சென்னை வேப்பேரியில் கண்ணப்பர் திடல் அருகிலுள்ள இடத்தில் நட்சத்திர ஓட்டல் ஒன்று கட்டப்படும். அதன் அருகிலுள்ள பழைய மிருகக் காட்சி சாலை அமைந்த இடம் ''மனமகிழ் பூங்காவாக'' மேம்படுத்தப்படும். இது ஓட்டல் வளாகத்தின் ஒரு பகுதியாக அமையும். இத்தகைய பொழுதுபோக்கு வசதிகளால் வடசென்னையில் வாழும் மக்கள் பெரிதும் பயன் பெறுவார்கள். சுற்றுலாத் துறையின் தீவிர பரிசிலனையில் உள்ள இத்திட்டங்கள், வெளிநாடு வாழ் இந்தியர்களுடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ளன. இவற்றிற்கான திட்டமதிப்பீடு சுமார் ரூ. 40 கோடியாகும். இத்திட்டங்கள் நிறைவுபெறும்போது, இன்னும் அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழகம் நோக்கி வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுலாவும், நிதி ஒதுக்கீடும் :—

ஒரு மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சி நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் ஒரு பங்காக அமைகிறது. எனவே மத்திய அரசே, மாநிலங்களின் அளவிலும் ஈடுபாடு கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். மாநில அரசுகள் தங்கள் நிதி நிலைமைக்கு ஏற்ப சுற்றுலா வளர்ச்சிக்கு ஓரளவுதான் நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். சுற்றுலா, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கவும், பெரிதும் உதவுகிறது என்ற உண்மையை உணர்ந்து, மத்திய அரசே பெருமளவில் மாநில அரசுகளுக்கு திட்ட ஒதுக்கீட்டில் நிதி உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். முதலீடுகள் அதிகமின்றி, குறைந்த முயற்சியில் அதிக பயனைத் தந்து வருடம் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் சுற்றுலாத் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கோரி வருகின்றது. மேலும் சுற்றுலாவை ''ஒரு தொழிலாக'' அறிவித்ததற்கிணங்க, அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். வளர்ந்து வரும் சுற்றுலா, நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்துப் பலப்படுத்துவதுடன், அதிக அளவில் வேலை

வாய்ப்பை உருவாக்கிடவும், பெருக்கிடவும் வழிவகை செய்கிறது. இச்சூழ்நிலையில், சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு கோருவதும், முன்னுரிமை தர வேண்டுவதும் தகுதியுள்ளதும், நியாயமானதுமாகும்.

சுற்றுலா குறித்த திட்டங்கள் நிறைவு பெற அடிப்படை ஆதாரமாக உள்நாட்டுச் சுற்றுலா வளர்ச்சி அமைந்துள்ளது என்பதில் அரசு உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. குறிப்பாக மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய சுற்றுலாத் தலங்களின் மேம்பாட்டிற்கென மொத்தம் ரூ. 78.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா வல்லுநர்களின் துணை கொண்டு பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இப்பெருந் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில பணிகள், மாநில அரசின் சக்திக்கேற்ப செலவு செய்து, அரசின் பல துறைகள் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனினும், பெருந்திட்டங்களில் உள்ள பணிகளை ஏற்றுச் செயல்படுத்த போதுமான அளவு நிதி உதவி வழங்கிட மத்திய அரசு முன்வரவேண்டுமென்று கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகக் கோரி வந்துள்ளோம். ஆனால் இந்த ஆண்டு தான் மத்திய அரசு, கன்னியாகுமரியில் கடற்கரைக் குடில்கள் கட்டுவதற்கும், காஞ்சிபுரத்தில் தங்குமிடம் அமைப்பதற்கும், இராமேசுவரத்தில் சுற்றுலா வரவேற்பு மையம் ஏற்படுத்துவதற்கும், மாமல்லபுரத்தில் நிலச் சீரமைப்பு செய்வதற்கும், சம்மதித்து, மற்றும் சில சில்லறை இனங்களையும் ஏற்றுக் கொண்டு ரூ. 170 இலட்சம் நிதி உதவி வழங்கிட ஒத்துக் கொண்டுள்ளது. கிடைத்துள்ளது மிகக் குறைவாக இருந்தாலும், மாநில அரசு மகிழ்ச்சியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது. பெருந்திட்டங்களைச் செயல்படுத்த, நாம் பல ஆண்டுகளாகக் கோரி வந்ததற்கிணங்க மத்திய அரசு நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறோம்.

மத்திய அரசின் உதவியோடு நிறைவேற்றப்படவுள்ள பிற திட்டங்களில், சென்னை இந்திரா நகரில் இயங்கிவரும் 'இளைஞர் விடுதியைப்' போல் நெல்லையிலும், மதுரையிலும் ''இளைஞர் விடுதிகள்'' மத்திய அரசினால் இவ்வாண்டு கட்டப்படவுள்ளன. மாநில அரசு இதற்குத் தேவையான நில ஒதுக்கீடு செய்து இவ்விடுதிகளை ஏற்று நடத்தும். இந்திய அரசு சுற்றுலாத் துறையின் அங்கீகாரம் பெற்ற ''பாரதிய யாத்ரி அவாஸ் விகாஸ் சமிதி'' என்னும் நிறுவனத்தின் மூலம் தமிழ்நாட்டில் தஞ்சை மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் 'யாத்திரிகா' என்னும் தங்கும் விடுதிகள் கட்ட மத்திய அரசு முன் வந்துள்ளது. இங்கு, குறைந்த வாடகையில் பயணிகள் தங்குவதற்கான இட வசதிகள் செய்து தரப்படும்.



மாமல்லபுரம் :

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அண்மையில் அளித்த அறிவுரைக்கேற்ப, தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தின் தொன்மைச் சிறப்பைப் போற்றிப் பாதுகாக்கும் பொருட்டு, உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, ''நிலச் சீரமைப்புச் செயல்முறைத் திட்டம்'' தயாரிக்கப்பட்டு வருகிறது. மாமல்லபுரம் பெருந்திட்டத்திலிருந்து ஏற்கனவே சுமார் ரூ. 75.00 இலட்சம் செலவில் ஓய்வு விடுதி, முகாமிடம், குடில்கள், இளைஞர் விடுதி, உணவு விடுதி, நீச்சல் குளம் முதலிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. உயர்மட்டக் குழுவின் ஆலோசனைப்படி புதிய முயற்சிகள் பல மேற்கொள்ளப்படும்.

திறந்த வெளி அரும் பொருட்காட்சியகம் :

மாமல்லபுரத்தில் ரூ. 68.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திறந்த வெளி அரும் பொருட் காட்சியகம் ஒன்றை அமைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது. இதில், முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளும், தமிழ் இலக்கியக் காட்சிகளும், சிற்பங்களாகச் செதுக்கி வைக்கப்படும். கடற்கரை அருகில் அமைக்கப்படவுள்ள, 25 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பூங்காவில், இக் காட்சியகம் அமைக்கப்படும். இது சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்குவதற்குரிய இடமாக மட்டுமின்றி கல்வி நிலையமாக, பண்டை தமிழர் வரலாற்று ஏடுகளைக் காட்சி வடிவமாகக் கண்டு களிக்கக் கூடிய கலைக் கூடமாக அமையும். இக் காட்சியகத்தில் இடம் பெறும் வெவ்வேறு சிற்பப் பொருள்களின் காலம் :—

(அ) சங்க காலம் (கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை).

(ஆ) பழங்காப்பியக் காலம் (கி.பி. 4, 5 ஆம் நூற்றாண்டுகள்).

(இ) முற்காலப் பல்லவர் காலம் முதல் பிற்கால சோழர் காலம் வரை (கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை).

(ஈ) பிற்கால பிரபந்த காலம் (கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை).

(உ) நாயக்கர் காலம் (கி.பி. 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகள்).

(ஊ) 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகள்.

அரும் பொருட்காட்சியகம் அமைக்கப்பெறும் இடத்தின் பரப்பு, நடைபாதை முதலியவற்றிற்குத் தேவைப்படும் நிலம், சிற்பங்களின் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு 40 முதல் 50 சிற்பங்கள் இக்காட்சியகத்தில் வைக்கப்படும். இந்த அரும் பொருட்காட்சியகத்திற்காக சிற்பங்கள் செதுக்கும் பணியினை மாமல்லபுரத்திலுள்ள அரசினர் கட்டிட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஏற்று செய்து வருகிறது.

மேலும் மாமல்லபுரத்தில் தொன்மைச் சிறப்பு மிக்க சின்னங்கள் இருக்கும் இடங்களை, இரவிலும் கண்டு மகிழும் வண்ணம் ஒளி விளக்குகள் அமைத்திட, இந்திய அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறை அண்மையில் கொள்கை அளவில் சம்மதித்து உள்ளது. இந்திய அரசு வழங்கும் நிதி உதவியுடன் இத்திட்டத்தை நிறைவேற்றிட இத் துறை கருதியுள்ளது.

இராமேசுவரம் :

இராமேசுவரம் பெருந்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் சுமார் ரூ. 75.00 இலட்சம் செலவில், இளைஞர் இல்லம், உணவு விடுதி, துயிலகக் கூடம், குடில்கள், குடிநீர் வசதி, குளியல் அறை முதலிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1985–86-ல் இராமேசுவரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு அருகிலுள்ள கடற்கரையை அழகுபடுத்தவும், சுகாதார வசதிகள் செய்யவும் ரூ. 3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1986–87-ல் ரூ. 3.00 இலட்சம் செலவில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்யும் பணியை எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இராமேசுவரத்திற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள் நன்மைக்காக ரூ. 20.00 இலட்சம் செலவில் சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்றினை நிறுவ இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

கன்னியாகுமரி :

கன்னியாகுமரி பெருந் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் சுமார் ரூ. 35.00 இலட்சம் செலவில் துயிலகக் கூடம், ஓய்வு விடுதி, ஊர்திகள் நிறுத்துமிடம் அமைத்தல் முதலிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில், சுற்றுலாப் பயணிகளுக்கென குடிநீர் வசதி செய்யும் பொருட்டு ரூ. 3.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. விரைவில் இப்பணி எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. 1986–87-ல் "சறுக்கு விளையாட்டு தளம்" ( Roller Skating Rink ) அமைக்கும் பணியை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில், எட்டு கடற்கரைக் குடில்களைக் கட்டுவதற்காக இந்திய அரசு ரூ. 13.36 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.



உதகமண்டலம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கிய அறிவுரைக்கேற்ப "உதகமண்டலம்—முதுமலை" சுற்றுலா மேம்பாட்டிற்கென சுற்றுலா வல்லுநர்கள் துணை கொண்டு ரூ. 28.00 கோடி மதிப்பீட்டில் பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, பல பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது வரை ரூ. 50.00 இலட்சம் செலவில், படகு இல்லம், துயிலகக் கூடம், உல்லாச இரயில், முதுமலையில் இளைஞர் இல்லம், தொட்டபெட்டாவில் தொலை நோக்கியகம் முதலிய பணிகள் முடிவுற்றன. மேலும் ரூ. 40.00 இலட்சம் செலவில் தொட்டபெட்டா, டால்பின்ஸ் நோஸ், கல்லட்டி அருவி, லாம்ஸ்ராக், கொடநாடு, முதலிய காட்சி முனைப் பகுதிகளை அழகுப்படுத்தி வசதிகள் செய்யவும், உதகமண்டலம் ஏரியின் சுற்றுப்புறச் சூழலை மேம்பாடு செய்யவும், குன்னூர்—கோத்தகிரி ஆகிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டவும், பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர, தொட்டபெட்டா—உதகமண்டலம் இணைக்கும் கம்பி வழிப்பாதை அமைப்பது குறித்து, தனியார் நிறுவனங்களிடம் இருந்து கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கும் வகையில் இத் திட்டம் நிறைவேறிட ஆய்வு செய்து பரிந்துரை வழங்கிட உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

உதகை ஏரியில் "மிதக்கும் உணவகம்" அமைத்திட 1985—86-ஆம் ஆண்டில் ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. "அலங்கார நடை பாதையின்" சிறிய உருவமைப்பு தயாரிக்க ரூ. 50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. சுற்றுபுறச் சூழல் நிலை கெடாவண்ணம் இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளதால், இவற்றை நிறைவேற்றுவது ஒரு தனிக்குழுவின் பொறுப்பில் கவனமாக கண்காணிக்கப்படுகிறது. மேலும், 1986–87-ஆம் ஆண்டில், உதகமண்டலத்தில் உள்ள சறுக்கு விளையாட்டுத் தளத்தை ரூ. 1.00 இலட்சம் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் உள்ள ஏரி, சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரக் கூடியது. தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்க, மத்திய திட்டக் குழு ரூ. 17.00 இலட்சம் மதிப்பீட்டிலான "ஏரியின் மாசுக் கட்டுப்பாடு திட்டத்திற்கு" ஒப்புதல் வழங்கியுள்ளது. 1985–86-ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இத் திட்டம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த உள்ளூர் பகுதிகளை மேம்படுத்துதல் மாவட்ட உலாத்தலங்கள் :

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உள்நாட்டு மக்கள் உணரும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் தான் "மாவட்ட உலாத்தலங்கள்"—உருவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மாநில போக்குவரத்துக் கழகங்கள்

வழங்கும் நிதியுதவியோடு, இத் துறையும் இணைந்து, இத்திட்டத்தை நிறைவேற்றுகிறது. சித்தனவாசல், பவானிகூடுதுறை கங்கைகொண்ட சோழபுரம், திருமூர்த்தி மலை, பாபநாசம் கொல்லி மலை, ஏலகிரி மலை, கல்லணை, பிளவக்கல் ஆகிய இடங்களை மாவட்ட உலாத்தலங்களாக மேம்படுத்தும் பொருட்டு ரூ. 18.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பல மையங்களை மாவட்ட உலாத் தலங்களாக மேம்படுத்தும் பொருட்டு 1985–86-ல் ரூ. 8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறே 1986-87-ல் ரூ. 8.00 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மாநிலத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் பங்காக இதுகாறும் ரூ. 15,50,000 வழங்கியுள்ளன.

மற்ற மையங்கள் :

சென்னை:—சென்னை நகரில் வாழும் மக்கள் வசதிக்கெனவும், சுற்றுலா பயணிகள் பொழுது போக்கிற்காகவும், "மனமகிழ் பூங்காக்கள்", சிறுவர் விளையாட்டு மையங்கள் ஆகியவை அமைத்து சுற்றுலாத் துறை பொறுப்பேற்று நடத்தும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. இதற்கென தகுந்த இடங்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி: — திருச்சிராப்பள்ளிக்கு வருகைதரும் குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகள் நன்மைக்காக இங்கு ரூ. 10.00 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருச்சி மலைக்கோட்டையில் ஒளி விளக்குகள் அமைக்கும் திட்டம் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட உள்ளது. மத்திய அரசு முதல் கட்டமாக இவ்வாண்டு ரூ. 4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மதுரை:—மதுரையில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மன்னர் திருமலைமகாலில் "ஒளி—ஒலிக் காட்சி" தினந்தோறும் நடந்து வருகிறது. தமிழர்களின் வரலாற்றை நினைவு கூறத் தக்க இந்த ஒளி-ஒலிக் காட்சி கண்டு மகிழும் பொழுதுபோக்காக மட்டுமன்றி, வரலாற்றை அறிய ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. கடந்த ஆண்டு சுமார் 1,15,000 நபர்கள் இந்த ஒளி—ஒலிக் காட்சியினை கண்டு களித்துள்ளனர்.

குற்றாலம் :—மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குற்றாலத்தில் ரூ. 7.97 இலட்சம் செலவில் துயிலகக்கூடம் ஒன்று கட்டும் பணி குற்றாலம் நகரியத் திடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேறிவருகிறது. மேலும்



குற்றாலத்தில் ரூ. 5.50 இலட்சம் செலவில் உணவு விடுதிகட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு ரூ. 5.44 இலட்சம் நிதியுதவி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

ஒகேனக்கல் :—ஒகனேக்கல்லில் காவிரியின் குறுக்கே தொங்கு பாலம் அமைக்கும் பணி ரூ. 7.50 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிவடையும் தருவாயிலிருக்கிறது.

கொடைக்கானல்.—1986-87-ஆம் ஆண்டில் கொடைக் கானலிலுள்ள " கோக்கர்ஸ் வாக்" என்னுமிடத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கென அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் அருகிலுள்ள 'வெள்ளி அருவி' என்னுமிடத்தில் சிற்றுண்டி விடுதி, கழிவறை, உடைமாற்றும் அறைகள் கட்டவும், குளியல் துறையில் கைப்பிடிகள் அமைக்கவும் ரூ. 2.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணி தொடங்கப் பட்டுள்ளது.

பிச்சாவரம்:—பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகத்தில் துயிலகக் கூடம், குடில்கள், படகுத் துறை, சிற்றுண்டி விடுதி, படகுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக ரூ. 17.23 இலட்சம் செலவில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இங்கு மேலும், அடிப்படை வசதிகளை உருவாக்க ரூ. 12.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கியுள்ளன.

பூம்புகார்:—கடற்கரையோரம் அமைக்கப்பட்டுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகம், சுற்றுலாத் துறையின் பராமரிப்பில் உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதி, பருவ காலத்தில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு வருகிறது. பூம்புகார் வளாகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு முழுமையான வழி முறைகளைக் கண்டு ஆராய்ந்து, ஆலோசனை வழங்கிட வல்லுநர் குழுவினை அரசு அமைத்தது. "வளாகத்தைச் சுற்றி மட்டும் தடுப்புச் சுவர் கட்டுவது பலனளிக்காது. அந்தப் பகுதி முழுவதையும் பாதுகாத்திட, நீண்டதொரு பாதுகாப்புச் சுவர் ஏற்படுத்திட வேண்டும்" என்ற இக்குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுள்ளது. அதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த செலவுத் தொகையை மத்திய அரசு ஏற்க முன் வரவேண்டும் என அரசு விரும்புகிறது.

கட்டபொம்மன் நினைவுக் கோட்டை:—பாஞ்சாலங் குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை இத் துறையின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. ரூ. 2.00 இலட்சம் செலவில் கட்டபொம்மன் வரலாற்றுச் சாதனைகளை சித்திரங்களில் வடித்து, கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது,

சுற்றுலா தகவல் தருதல் மற்றும் விளம்பரம்.

சுற்றுலா வளர்ந்தோங்க சீரான விளம்பர நடவடிக்கைகள் முக்கியமான இடம் பெறுகின்றன. தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவேற்றிட திட்டங்கள் தீட்டுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுலாச் சிறப்பிடங்களில் உள்ள வசதி வாய்ப்புக்கள் பற்றி விளம்பரம் மூலம் பயணிகள் அறியும் வண்ணம் தெரிவிப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

சுற்றுலாத் தல விளக்கக் கையேடுகள், எழில்மிகு வண்ணச் சுவரொட்டிகள், பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல், சுற்றுலாப் பயணிகள் விரும்பும் வண்ணப்பட அஞ்சல் அட்டைகள் தயாரித்தல் முதலிய வழக்கமான பணிகள் செய்வதுடன் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் இட வசதி, பயண வசதி, போக்குவரத்து வசதி, உணவு வசதி முதலிய பயணிகளுக்குத் தேவையான தகவல்கள் அடங்கிய 'வீடியோ நாடாக்கள்' தயாரிக்கப்பட்டு வெளி மாநிலங்களிலும் வெளிநாட்டிலும் வழங்கிட சுற்றுலாத் துறை துரித நடவடிக்கை எடுக்கும்.

சுற்றுலா சார்ந்த புள்ளி இயல்.

சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் காலங்களில், சாலை வழியாக வரும் பயணம் பற்றி ஆய்வு செய்யப்படும். அதன் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும். இம்மாநிலத்தில், ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறைவேற்றப்படும் சுற்றுலாத் திட்டங்களால் ஏற்படும் வேலைவாய்ப்புப் பற்றி ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டில் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் தற்போது இருக்கும் இடவசதி பற்றியும், இனி தேவையான இடவசதி பற்றியும், ஆய்வு செய்து, தேவைக்கேற்ப ஓட்டல்கள் கட்ட வேண்டுவது பற்றி பரிந்துரை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

விருந்தோம்பல்.

இந்தியாவின் பிற மாநிலங்களிலும் மற்றும் வெளிநாட்டிலும் உள்ள பிரபல எழுத்தாளர்களும், பயணக் கட்டுரை எழுதுபவர்களும், தமிழகத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா மையங்களுக்குச் சென்றுவர, விருந்தோம்பல் திட்டம், சுற்றுலாத் துறையின் மூலம் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 25,000 வரை இதற்கென ஒப்பளிப்பு செய்யப்படும். இத்திட்டத்தின் பயனால் மற்ற மொழிகளில் வெளியாகும் புத்தகங்களிலும் ஏனைய வெளியீடுகளிலும் தமிழ் நாடு சுற்றுலா மையங்கள் பற்றிய விரிவான தகவல்கள் அம்மொழி பேசுவோர்க்குக் கிடைத்திட வாய்ப்பு ஏற்படுகிற.



ஓட்டல்களின் தரம் பிரித்தல்:

இந்திய அரசு சுற்றுலாத் துறை, ஓட்டல்களைத் தரம் பிரித்து, "ஒன்று மற்றும் இரண்டு நட்சத்திர அந்தஸ்தினை" வழங்கிடும் உரிமையை மாநில அரசு சுற்றுலாத் துறைக்குத் தந்துள்ளது. இப்பணியினை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு, ஓட்டல்கள் தரம் பிரித்து ஆய்வு செய்யும் குழுவினை அமைத்துள்ளது. ஓட்டல்கள், சுற்றுலாவை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே தனியாகவும், மத்திய அரசு சுற்றுலாத் துறையோடு இணைந்தும், தகுந்த ஓட்டல் கட்டும் திட்டங்களுக்கு, குறைந்த வட்டியில் நிதி நிறுவனங்கள் மூலம் நிதி உதவி பெற்றுத்தர இத்துறை பரிந்துரை செய்கிறது.

இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணியர் விடுதிகளை ஏற்றுக் கொள்ளுதல்:

தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பயணியர் விடுதிகளை வாங்கிட, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி:

தமிழகத்தின் சுற்றுலா மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் சென்னையில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. பிற மாநிலங்களும், மத்திய அரசுத்துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கின்றன. கடந்த 13-ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பொருட்காட்சி, ஆண்டுதோறும் பல இலட்சக்கணக்கான மக்களை ஈர்ப்பதோடு, அகில இந்திய அளவில் டெல்லியில் நடைபெறும் பொருட்காட்சிக்கு அடுத்ததாக, ஆனால், அதிக நாட்கள் நடப்பதாக அமைந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆண்டு பல நாட்கள் மழை இருந்தும் மிகவும் வெற்றிகரமாக பொருட்காட்சி நடந்து சுமார் ரூ. 27.00 இலட்சம் நிகர வருமானம் ஈட்டி புதிய சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

நிரந்தரப் பொருட்காட்சி வளாகம் :

சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி வளாகம் ஏற்படுத்திட இத்துறை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைக் கலந்து இதற்கான பெருந்திட்டமும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு சரியான இடத்தை தேர்ந்தெடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புனல் விளையாட்டுக்கள் :

புனல் விளையாட்டுக்களை வளர்ப்பதும், சுற்றுலா வளர்ச்சியின் ஒரு பகுதி என்ற கருத்தில் உல்லாசப் படகு சவாரி செய்தல், தோணிகள் ஓட்டி விளையாடுதல், காற்றழுத்தப் படகு ஓட்டுதல் முதலியன முக்கியத்துவம் பெறுகின்றன. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையில், முட்டுக்காடு கழிமுகப்பகுதியில் உள்ள நீர்ப்பரப்பில் புனல் விளையாட்டிற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தர இத்துறை முயற்சிகள் மேற்கொண்டு, அந்த அழகிய பகுதியை சுற்றுலாவுக்கு அறிமுகம் செய்துவைப்பதில் வெற்றிகண்டது. அப்பகுதி நீர்ப்பரப்பு, புனல் விளையாட்டிற்கு மிக ஏற்ற இடம். முதற்கட்டமாக முட்டுக்காட்டில் படகுத் துறை கட்டப்பட்டு காற்றழுத்தப்படகு 1984-ல் அறிமுகப் படுத்தப்பட்டது. விளையாட்டுத்துறை இயக்குநரக ஒத்துழைப்போடு பலருக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. இளைஞரிடமும் சுற்றுலாப் பயணிகளிடமும் இவ்விளையாட்டைப் பிரபலப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதிக நடவடிக்கைகள் எடுத்துள்ளது. முட்டுக்காட்டில் 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், அகில இந்திய படகுப் போட்டி இந்திய அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. இத்தகைய படகுப் போட்டிகள் நடத்துவதற்கு இந்த இடம் பொருத்தமாக அமைந்திருப்பதால் இதனை அடுத்து, ஆசிய அளவிலும், மற்றும் அகில உலக அளவிலும் போட்டிகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கெனத் தேவையான அடிப்படை வசதிகள் அமைத்திட, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, முட்டுக்காடு மேம்பாட்டிற்கென ரூ. 10.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நிறுவ இருக்கும், "தேசிய புனல் விளையாட்டுப் பயிற்சி நிறுவனத்தை" முட்டுக்காட்டில் நிறுவிடவேண்டும் என மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பழவேற்காடு கழிமுகப் பகுதியில் படகுத்துறை அமைத்திடவும், படகுகள் வாங்கிடவும் ரூ. 3.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உதகை ஏரியில் கூடுதல் படகுகள் விட ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாக, கடலூரில் படகுக் குழாம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளைஞர் சுற்றுலா:

இளைஞர்களும், மாணவர்களும், தனியாகவும், குழுக்களாகவும் சுற்றுலாத் தலங்களைக் கண்டுகளித்திட, குறைந்த வாடகையில் நிறைந்த வசதிகள் கொண்ட பல 'இளைஞர் இல்லங்கள்' கட்டப்பட்டுள்ளன. இவை, ஒகேனக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்டபம், இராமேஸ்வரம், பிச்சாவரம், உதகமண்டலம், ஏற்காடு, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ளன. இளைஞர் சுற்றுலா வளர இத்தகைய இல்லங்கள் பெருமளவில் பயனளிக்கின்றன.



மலை வளம் காணல் :

'அருவி ஒலிக்கும் மஞ்சு சூழ் சோலை மலை' கண்டு களித்திட இக்காலத்தில் இளைஞர்கள் முன் வருகிறார்கள். மலைவளம் கண்டு இன்புற நீலகிரி, கொடை-பழநிமலை, பாபநாசம் குற்றாலம் முதலிய மலைப்பகுதிகளில் "இந்திய இளைஞர் இல்ல அமைப்புடன்" இணைந்து, பல சுற்றுலாக்கள் நடத்தப் பெற்றன. பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியர் பங்கேற்று மகிழ்ந்தனர்; மகிழ்கின்றனர். இச்சுற்றுலாவை வளர்க்கவும், இதற்கான பயண வழித்தடங்களில் தேவையான வசதிகள் ஏற்படுத்திடவும், பயணத்திற்குத் தேவையான பொருள்கள் வாங்கிடவும், முகாம்கள் அமைத்திடவும் சுற்றுலாத்துறை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. நீலகிரியில் முகாம் அமைத்திட, அரசு ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் தேவையான சாதனங்கள் வாங்கிட ரூ. 4.66 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளது. இனி வருங்காலத்தில் குறிப்பாக இத்தகைய சுற்றுலாவிற்கு இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும்.

இளைஞர் விழாக்கள் :

பிற மாநில இளைஞர்கள் கலந்துகொள்ளும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, இளைஞர் சுற்றுலாவில் முன்னணியில் இருக்கும் விதத்தில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 1985 டிசம்பரில் "அகில இந்திய இளைஞர் சுற்றுலா விழா" மாமல்லபுரத்தில் மத்திய அரசு சுற்றுலாத் துறையோடு இணைந்து கொண்டாடப்பட்டது. 1986-ல் இன்னும் அதிக அளவில் இளைஞர் சுற்றுலா வளர முயற்சி எடுக்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:

சுற்றுலா வளர்ச்சிக்கு, தமிழக அரசு இருவழிகளில் உதவுகிறது. ஒன்று, சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை பல துறைகள் மூலம் மேற்கொள்வது, மற்றொன்று, முக்கியமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு, அடிப்படை வசதிகளை செய்து தருவது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற சுற்றுலாத்துறை அதற்குப் பங்கு மூலதனமும், கடன் உதவியும் வழங்குவதுடன், பல திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினையும் ஒப்படைத்து வந்துள்ளது.

[1986 ஏப்ரல் 25

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுப்பதிலும், உல்லாசப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணங்கள் நடத்துவதிலும் இக்கழகம் ஆரம்பத்தில் கவனம் செலுத்தி வந்தது. ஆண்டுகள் பலவாக இக்கழகம் விரைந்து முன்னேறி இதன் பணி, இன்று பல்கிப் பெருகியிருக்கிறது. தமிழ்நாட்டைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இந்தக் கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்குமிட வசதிகளையும், பாராட்டியுள்ளனர். இக்கழகத்தின் ஆண்டு வரவு-செலவு இப்போது சுமார் ரூபாய் ஐந்து கோடிக்கு உயர்ந்துள்ளது.

போக்குவரத்து வசதி :

இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| குளுமை வசதி கொண்ட பேருந்துகள் | .. | 3 |
| சொகுசுப் பேருந்துகள் | .. | 15 |
| சிறு பேருந்துகள் | .. | 3 |
| குளுமை வசதி கொண்ட அயல்நாட்டுக்கார்கள் | | 5 |
| சுற்றுலா வாடகைக் கார்கள் | .. | 3 |

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏழு நாட்கள் தென்னிந்திய சுற்றுலா, ஏழு நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா, அன்றாட திருப்பதி சுற்றுலா ; அன்றாட காஞ்சிபுரம்—திருக்கழுக்குன்றம்—மாமல்லபுரம் சுற்றுலா ; அன்றாட சென்னை நகர சுற்றுலா; திருவேற்காடு—மாங்காடு—மேல்மருவத்தூர் சுற்றுலா ; ஆறுபடை வீடுகள் சுற்றுலா போன்ற பலவகை சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளிடையே இச் சுற்றுலாக்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

நினைவுப் பொருள் பகுதி :

சுற்றுலாப் பயணிகட்குப் பொருத்தமான சிறு நினைவுப் பரிசுகள், வண்ணப் படங்கள், அஞ்சல் பட அட்டைகள், சுற்றுலா தழுவிய ஓவியங்கள் இவற்றினைத் தொடர்ந்து இப்பகுதி தயாரித்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளியிடும் அஞ்சல் பட அட்டைகளும், தமிழ்நாடு சுற்றுலா வரைபடமும் சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகின்றன.



1986 ஏப்ரல் 25]

ஓட்டல் வசதி :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் " ஓட்டல்
தமிழ்நாடு " என்ற பெயரில் நடத்தும் ஓட்டல்கள்:—
நட்சத்திர ஓட்டல்கள்: கோயம்புத்தூர், மதுரை. ஓட்டல்
கள்: சிதம்பரம், மதுரை, கன்னியாகுமரி, ஒகேனகல்
இராமேஸ்வரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருச்செந்
தூர்; திறந்தவெளி உணவகம்; சென்னை; பயணவழி இல்லங்
கள்; இராணிப்பேட்டை, உளுந்தூர்பேட்டை, கிருஷ்ணகிரி;
குறிஞ்சி நகர் இல்லங்கள்; உதகமண்டலம், கொடைக்கானல்,
ஏற்காடு; கடற்கரை ஓய்வு வளாகங்கள்: மாமல்லபுரம், கன்னி
யாகுமரி; படகு இல்லங்கள; உதகமண்டலம், ஏற்காடு, முட்
டுக்காடு, பிச்சாவரம்; தொலை நோக்காடி இல்லங்கள்:
கொடைக்கானல், உதகமண்டலம், ஏற்காடு : இளைஞர்;
இல்லங்கள்: ஒகேனக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்ட
பம், இராமேஸ்வரம், பிச்சாவரம், உதகமண்டலம், ஏற்காடு,
கொடைக்கானல்; முகாமிடம் : மாமல்லபுரம்.

சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு :

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற
விவாதத்தின் போது இம்மாமன்றத்தில் தெரிவித்த கருத்திற்
கிணங்க 1—7—1985 முதல், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழக ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்
பயனாக, குறைந்த அளவு ஒருவருக்கு ரூ. 50-ம், அதிக அளவு
ரூ. 100-ம் கூடுதலாகக் கிடைக்கும் வகையில் ஊதிய விகிதங்
கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஊதிய உயர்வால்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு நிதியாண்டு ஒன்
றிற்கு ரூ. 5.50 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

ஊதிய உயர்வு மட்டுமின்றி புதுமையான ஊக்குவிப்புத்
திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலாபத்தை மட்
டும் அடிப்படையாகக் கொண்டு ஊக்க போனஸ் அளிப்பது
என்பதை மாற்றி அமைத்து, மொத்த விற்பனையின் பேரிலேயே
ஊக்க போனஸ் அளிக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.
இந்த முறையினால் நிதியாண்டு ஒன்றிற்கு ரூ. 1.00 இலட்சம்
கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. நேரடியாக, உடனடியாக
கிடைக்கும் இந்த ஊக்குவிப்புத் தொகை அனைவரும் வரவேற்
பதாகவும் அமைந்தது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் பிரிவிலும்,
போக்குவரத்து பிரிவிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு,
அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஊதியத்தை விட அதிக
ஊதியம்தான் வழங்கப்படுகிறது என்பதும், முன்னேற்றத்துக்கு
தக்கபடி ஊழியர்களின் வருவாய் உயரும் என்பதும், சுற்றுலா
வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருக்கும் விருந்தோம்பல்,

உபசரிப்பு ஆகிய பணியில் அன்பும் கவனமும் காட்டி, அதனால் ஊழியர்கள் தாமும் அதிக பலனடைய வழி ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத் திட்டங்கள் :—

1. புதிய உணவு விடுதிகள் கட்டுதல்.

2. ஓட்டல்களில் தங்கும் வசதியை அதிகரித்தல்.

3. புதிய போக்குவரத்துப் பிரிவுகள் ஆரம்பித்தல், புதிய உலாக்கள்.

4. வண்ண வீடியோ வசதிகொண்ட புதிய பேருந்துகள்.

5. சுற்றுலா பயணிகளின் வசதிக்காக பயண ஏஜென்சி தொடங்குதல்.

6. பம்பாய் மற்றும் புது டில்லியில் பயணச் சீட்டு விற்பனை அலுவலகங்கள் ஆரம்பித்தல்.

7. புதிய மடிப்பேடுகள், வண்ண புத்தகங்கள் தயாரித்தல், வழிகாட்டிகளின் சேவையின் தரத்தை உயர்த்துதல்.

8. தமிழ் இலக்கிய வரலாற்றுச் சிறப்புக்களை சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துக்காட்ட புதிய முயற்சிகள்.

9. ''யோகா'' ''தியானம்'' போன்ற புதிய பயிற்சிகளை ஓட்டல்களில் தங்குவோர்க்கு அறிமுகம் செய்து வைத்தல்.

10. அனைத்து ஊழியர்களுக்கு நவீன பயிற்சித் திட்டங்கள்.

தமிழ்நாட்டில், மக்களிடையே சுற்றுலா உணர்வு பெரிதும் வளர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அரசு, சுற்றுலா வளர்ச்சிக்குப் பெருமளவு ஊக்கமளித்து வருகிறது. சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் இத்தலங்களைக் கண்டு களிப்பதற்கு வழிவகைகள் செய்கிறது. சுற்றுலாத் தலங்களில் வாழும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு இம்முயற்சிகள் பெரிதும் உதவுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையை எந்த விதத்திலும் பாதிக்காமலும், இயற்கை எழிலைப் பாதுகாக்கும் வகையிலும் சுற்றுலாத்துறை, தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

136479